# பகுதி II

# பகுதி II

## இலங்கை மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்


| | பக்கம் |
|---|---|
| 1. கணக்குகளும் நிதியும் | 1 |
| 2. வங்கி மேற்பார்வை | 57 |
| 3. வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையம் | 61 |
| 4. தொடர்பூட்டல் | 61 |
| 5. நாணயம் | 63 |
| 6. உள்நாட்டுத் தொழிற்பாடுகள் | 65 |
| 7. பொருளாதார ஆராய்ச்சி | 68 |
| 8. ஊழியர் சேம நிதியம் | 71 |
| 9. செலாவணிக் கட்டுப்பாடு | 76 |
| 10. வசதிகள் முகாமைத்துவத் திணைக்களம் | 78 |
| 11. நிதி | 78 |
| 12. நிதியியல் உளவறிதல் பிரிவு | 80 |
| 13. நிதியியல் துறை ஆராய்ச்சித் திணைக்களம் | 81 |
| 14. ஆளுநர் செயலகம் | 82 |
| 15. மனித வளங்கள் முகாமைத்துவம் | 82 |
| 16. தகவல் தொழில்நுட்பம் | 88 |
| 17. உள்ளகக் கணக்காய்வு | 90 |
| 18. பன்னாட்டுத் தொழிற்பாடுகள் | 91 |
| 19. கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு | 93 |
| 20. கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்பு | 95 |
| 21. பொதுப்படுகடன் | 95 |
| 22. பிரதேச அபிவிருத்தி | 98 |
| 23. பிரதேச அலுவலகங்கள் கண்காணிப்பு | 101 |
| 24. செயலகம் | 102 |
| 25. பாதுகாப்புப் பணிகள் | 103 |
| 26. அலுவலர் பணிகள் முகாமைத்துவம் | 104 |
| 27. புள்ளிவிபரவியல் | 104 |
| 28. வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வை | 107 |

1. கணக்குகளும் நிதியும்

# இலங்கை மத்திய வங்கி

### முகாமைத்துவக் கூற்று

### 2014 திசெம்பர் 31இல் முடிவடைந்த காலப்பகுதிக்குரியது

### இலங்கை மத்திய வங்கியின் குறிக்கோள்களுடன் தொடர்பான பொறுப்புடைமையும் நிதிச் செயலாற்றமும்

இலங்கை மத்திய வங்கியானது இலங்கையின் நாணய, நிதி மற்றும் கொடுப்பனவு முறைமையின் நிர்வாகம், கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டிற்கு பொறுப்பான நிறுவனமாக நாணய விதிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டது. இச் சட்டத்திற்கிணங்க, வங்கியானது பிரதானமான குறிக்கோள்களான பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டையும் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டையும் பேணுகின்ற பொறுப்பை ஏற்றுள்ளது.

ஆதலால், மத்திய வங்கி மற்றும் அதன் தொழிற்பாடுகளின் வெற்றிகரத் தன்மைக்கான பொறுப்பபுடைமையின் அடிப்படையானது அதன் பிரதான குறிக்கோள்களை அடையப் பெறுவதை முன்னிட்டான அதன் கொள்கைகள் மற்றும் தொழிற்பாடுகள் நற்பயன் தொடர்பாகவேயன்றி அதன் இலாபகரத்தன்மை தொடர்பில் அத்தியாவசியமானதாயிராது. இக் குறித்துரைக்கப்பட்ட குறிக்கோள்கள் ஏனைய தனியார் மற்றும் அரச நிறுவனங்களிலிருந்து மத்திய வங்கியை பிரித்துக் காட்டுகின்ற சிறப்புத் தன்மையைக் கொண்ட அடிப்படைப் பண்புகளாக உள்ளன. இதற்கிணங்க மத்திய வங்கிக்கு வட்டி வீதத்திலும் செலாவணி வீதத்திலும் செல்வாக்குச் செலுத்தக்கூடிய அதன் நாணயக் கொள்கைச் செயற்பாடுகளினூடாக அதற்கே உரியதான இலாபத்தை உருவாக்கிக் கொள்ளும் சிறப்புமிக்க ஆற்றல் அதற்குள்ள போது, இலாபகரத் தன்மையுடன் தொடர்புடைய அணுகுமுறைகள் கடைப்பிடிக்கப்படும் பட்சத்தில் அதன் பெறுபேறாக பிரதானமான குறிக்கோள்களை விட்டுக் கொடுத்து இலாபத்தைப் பின்தொடர்ந்து செல்ல வேண்டிய நிலை உருவாகும். ஆதலால் தற்காலிகமானதாக அல்லது புலமை வாய்ந்ததாக மட்டும் இருந்தாலன்றி மத்திய வங்கியின் குறிக்கோள்களான பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டையும் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டையும் பேணுதல் சிறப்புமிக்கதாகவும் தனியே இலாபத்தைப் பெறும் குறிக்கோள்களிலிருந்து விலகியதாக இருத்தலும் அவசியமாகின்றது.

இப் பின்னணியில், மத்திய வங்கியின் நிதிக் கூற்றுக்களில் அதன் நாணயக் கொள்கைத் தொழிற்பாடுகள், செலாவணி வீத முகாமைத்துவம், நாணயங்களை வெளியிடல் ஆகியவற்றை அமுலாக்குகின்ற போது உருவாகின்ற இலாபம் மற்றும்/ அல்லது நட்டம் உணர் பெறுமதியில் பதிவு செய்யப்படுவதால், இக் கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்டுள்ள நிதிச் செயலாற்றுகையானது இச் சூழலமைவிற்கிணங்க வரைவிலக்கணம் அளிக்கப்படுதலும் புரிந்து கொள்ளப்படுதலும் அவசியமாகும்.

வங்கியானது, நாணய விதிச் சட்டத்தின் 42 மற்றும் 43ஆம் பிரிவுகளின் கீழ் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வெளிவாரிக் கணக்காய்வுக்கு உள்ளாக்கப்படுகின்றது. இதற்கமைய பன்னாட்டு நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்கியொழுகுதலை உறுதி செய்யும் பொருட்டு பன்னாட்டு கணக்காய்வு நியமங்களின் கீழ் கணக்காய்வை மேற்கொள்வதற்கு எர்னஸ்ற் அன்ட் யங் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் சேவையை கணக்காய்வாளர் தலைமை அதிபதி பெற்றுள்ளார். உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் நடைமுறை மீளாய்வுகள் ஆகிய இரண்டிலும் மேற்கொள்ளப்படும் இக் கணக்காய்வுகள் நிதி அறிக்கையிடலுடன் தொடர்புடையதாகும்.

මගේ අංකය / எனது இல. / My No: எப்பீ/கே/சீபீஎஸ்எல்/1/14/1

ඔබේ අංකය / உமது இல / Your No.:

දිනය / திகதி / Date: 2015 ஏப்ரல் 15

கௌரவ நிதி அமைச்சர்

## இலங்கை மத்திய வங்கியின் (இ.ம.வங்கி) 2014 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது நாணய சட்ட அதிகாரச்சட்டத்தின் (அத்தியாயம் 422) 42(2) ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

இலங்கை மத்திய வங்கியின் ("வங்கி") 2014 திசெம்பர் 31இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று, அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான வருமானக்கூற்று, விபரமான ஏனைய வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள்1971இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் நாணய சட்ட அதிகாரச்சட்டத்தின் (அத்தியாயம் 422) 42(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இக்கணக்காய்வை மேற்கொள்கையில், சர்வதேச நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கமைய பரீட்சிப்பதற்கு பொதுச் சேவையிலுள்ள பட்டய கணக்காளர் நிறுவனமொன்றின் உதவி பெறப்பட்டது.

### நிதிக்கூற்றுக்களுக்கான நாணயச் சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை சர்வதேச நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பவற்றிற்கு நாணயச்சபை ("சபை") பொறுப்பாகவுள்ளது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக, முறையான கணக்கீட்டுக் கொள்கைகளை தெரிவு செய்து பிரயோகித்தல் மற்றும் அச்சூழ்நிலைகளிற்கு காரணமாகவிருக்கின்ற கணக்கீட்டு மதிப்பீடுகளைச் செய்தல் என்பன ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலிற்கு அவசியமானதென வடிவமைத்தல், அமுலாக்கல் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை இப்பொறுப்பு உள்ளடக்குகின்றது.

### கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் வங்கியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில் கொள்ளவில்லை. சபையால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவு பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### அபிப்பிராயம்

வங்கியின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றலினையும் அதன் காசுப்பாய்ச்சலினையும் சர்வதேச நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

ஒப்பம்: டபிள்யூ.பி.சீ.விக்ரமரத்ன
பதில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி

## இலங்கை மத்திய வங்கி
**நிதியியல் நிலைமைக் கூற்று**
**2014 திசெம்பர் 31இல் உள்ளவாறானது**

| | குறிப்பு | 2014 ரூ.000 | 2013 ரூ.000 |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | |
| காசு நிலுவையும் காசுக்குச் சமமானவையும் | | **487,070,771** | 425,676,763 |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் | 5 | **61,495,307** | 94,137,368 |
| விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள முதலீடுகள் | 5 | **408,189,500** | 357,531,750 |
| பெறுதி நிதியியல் கருவிகள் | 6 | **1,580,237** | 5,670,258 |
| ப.நா. நிதியத்துடன் தொடர்பான சொத்துக்கள் | 7 | **79,816,029** | 85,400,764 |
| ஏனைய பெறத்தக்கவைகள் | | **7,105,914** | 591 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | **1,045,257,758** | 968,417,494 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | |
| இலங்கை அரச பிணையங்கள் | 8 | **124,443,452** | 15,853,513 |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் | 9 | **143,897,971** | 109,167,071 |
| வங்கிகளுக்கான கடன்கள் | 10 | **1,489,372** | 1,375,396 |
| ஏனைய பெறத்தக்கவை | | **1,912,071** | 1,829,712 |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களில் செய்யப்பட்ட பங்குரிமை முதலீடுகள் | 11 | **41,095** | 41,095 |
| ஏனைய சொத்துக்கள் | 12 | **8,107,914** | 7,326,533 |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | **279,891,875** | 135,593,320 |
| **மொத்த நிதியியல் சொத்துக்கள்** | | **1,325,149,633** | 1,104,010,814 |
| **வெளிநாட்டு நாணய நிதியல்லாச் சொத்துக்கள்** | | | |
| தங்கம் | 13 | **100,190,635** | 95,601,221 |
| **உள்நாட்டு நாணய நிதியல்லாச் சொத்துக்கள்** | | | |
| இருப்புக்கள் | 14 | **3,620,480** | 3,103,281 |
| ஏனைய பெறத்தக்கவைகள் மற்றும் முற்கொடுப்பனவுகள் | | **27,446,864** | 29,027,698 |
| சொத்து, பொறிகள் மற்றும் கருவிகள் | 15 | **14,686,696** | 14,228,915 |
| அருவச் சொத்துக்கள் | 16 | **306,084** | 35,598 |
| **மொத்த நிதியல்லாச் சொத்துக்கள்** | | **146,250,759** | 141,996,713 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **1,471,400,392** | 1,246,007,527 |
| **பொறுப்புக்களும் உரிமை மூலதனமும்** | | | |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | 17 | **11,678,483** | 21,504,196 |
| பெறுதி நிதியியல் கருவிகள் | 6 | **19,207,822** | 16,183,282 |
| ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம் | 18 | **57,230,304** | 37,301,553 |
| ப.நா.நிதியம் | 19 | **308,011,133** | 422,032,012 |
| ஏனையவை | 20 | **72,146,159** | 47,221,119 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | **468,273,901** | 544,242,162 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | |
| வங்கிகள், நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | 21 | **161,009,323** | 148,809,893 |
| அரச, அரச முயற்சிகளிலுள்ள வைப்புக்கள் | 22 | **311,950** | 416,230 |
| மீள் கொள்வனவின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | 23 | **328,252,000** | 84,601,000 |
| ஊழியர்கள் நன்மைகள் திட்டத்திலுள்ள மீதிகள் | 24 | **2,209,782** | 2,419,087 |
| ஏனைய செலுத்தத்தக்கவை | 25 | **8,939,293** | 5,659,718 |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | **500,722,348** | 241,905,928 |
| **மொத்த நிதியியல் பொறுப்புக்கள்** | | **968,996,249** | 786,148,090 |
| **ஏனைய பொறுப்புக்கள்** | | | |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | 26 | **416,895,362** | 339,770,981 |
| பிற்போடப்பட்ட கொடைகள் | 27 | **515** | 1,449 |
| ஓய்வூதியம் மற்றும் ஏனைய தொழிலுக்குப் பின்னரான நன்மைகள் திட்டங்கள் | 43 | **3,599,035** | 4,936,339 |
| பல்வகைப் பொறுப்புக்களும் ஒன்றுசேர்ந்தவையும் | 28 | **197,380** | 243,455 |
| மொத்த ஏனைய பொறுப்புக்கள் | | **420,692,292** | 344,952,224 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **1,389,688,541** | 1,131,100,314 |
| **உரிமை மூலதனம்** | | | |
| மூலதன நிதியம் | | **50,000,000** | 35,000,000 |
| ஒதுக்குகள் | | **31,711,851** | 79,907,213 |
| **மொத்த உரிமை மூலதனம்** | | **81,711,851** | 114,907,213 |
| **மொத்த பொறுப்புக்கள் மற்றும் உரிமை மூலதனம்** | | **1,471,400,392** | 1,246,007,527 |

நாணயச் சபையின் சார்பில் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும் முதன்மைக் கணக்காளரும் 2015 மார்ச்சு 17ஆம் திகதியில் வெளியிடுவதற்காக இந்நிதியியல் கூற்றுக்களை அங்கீகரித்துள்ளனர்.

லக்ஷ்மன் அருஜுன மகேந்திரன் - ஆளுநர்

பி.வி. லக்ஷ்மன் நந்தசிறி - பதில் முதன்மைக் கணக்காளர்

(பகுதி *II* - 7) தொடக்கம் (பகுதி *II* - 56)ஆம் பக்கம் வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் நிதிக் கூற்றுக்களின் முக்கிய ஒரு பகுதியாகும்.

## இலங்கை மத்திய வங்கி

**வருமானக் கூற்று**

**2014 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது**

| | குறிப்பு | 2014 ரூபா 000 | 2013 ரூபா 000 |
|---|---|---|---|
| **தொழிற்பாட்டு வருமானம்** | | | |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான வருமானம்** | | | |
| வட்டி வருமானம் | 31 | **22,221,503** | 18,505,656 |
| தேறல் செய்யப்படாத விலை மீள் மதிப்பீடுகளிலிருந்தான இலாபம்/ (நட்டம்) | | **(7,966,791)** | (27,892,406) |
| தேறல் செய்யப்பட்ட விலை மாற்றங்களிலிருந்தான இலாபம் | | **12,626,457** | 13,389,159 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான மொத்த வருமானம்** | | **26,881,169** | 4,002,409 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் மீதான செலவுகள்** | | | |
| வட்டிச் செலவு | 32 | **(3,103,257)** | (4,447,401) |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் மீதான மொத்தச் செலவு** | | **(3,103,257)** | (4,447,401) |
| தேறிய வெளிநாட்டுச் செலாவணி மீள் மதிப்பீட்டு இலாபம்/ (நட்டம்) | | **(32,266,690)** | (26,758,639) |
| **வெளிநாட்டு நாணய முதலீட்டு வருமானம்/ (நட்டம்)** | | **(8,488,778)** | (27,203,631) |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான வருமானம்** | | | |
| வட்டி வருமானம் | 31 | **4,616,684** | 14,450,134 |
| வட்டிச் செலவு | 32 | **(17,748,037)** | (2,979,850) |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான மொத்த வருமானம் / (செலவு)** | | **(13,131,353)** | 11,470,284 |
| ஏனைய வருமானம் | 33 | **1,367,666** | 2,919,260 |
| **மொத்த தேறிய தொழிற்பாட்டு வருமானம்/ (செலவு)** | | **(20,252,465)** | (12,814,087) |
| **தொழிற்பாட்டுச் செலவுகள்** | | | |
| ஆளணிச் செலவுகள் | 34 | | |
| - சம்பளங்களும் கூலிகளும் | | **(3,256,096)** | (3,138,445) |
| - கட்டாய பகிர்ந்தளிப்புத் திட்டச் செலவுகள் | | **(457,274)** | (447,626) |
| - தொழிலுக்குப் பின்னரான நன்மைகள் திட்டச் செலவிற்கான மேலதிகப் பங்களிப்பு | | **(1,289,040)** | (1,988,525) |
| | | **(5,002,410)** | (5,574,596) |
| பெறுமானத் தேய்வும் கடன் பதிவழிப்பும் | | **(396,811)** | (365,644) |
| இருப்புக்கான செலவு | | **(1,829,350)** | (1,476,937) |
| மெதுவாக நகரும் நாணய இருப்புக்களிற்கான ஏற்பாடுகள் | | **-** | (20,000) |
| நிர்வாகம் மற்றும் ஏனைய செலவுகள் | 35 | **(4,050,858)** | (1,997,048) |
| **மொத்தத் தொழிற்பாட்டுச் செலவுகள்** | | **(11,279,429)** | (9,434,225) |
| **வருமான வரிக்கு முந்திய இலாபம்/ (நட்டம்)** | | **(31,531,894)** | (22,248,312) |
| பிடித்துவைத்தல் வரி | 36 | **(777,496)** | (2,016,217) |
| **இவ்வாண்டிற்கான தேறிய இலாபம்/ (நட்டம்)** | | **(32,309,390)** | (24,264,529) |

7 தொடக்கம் 56ஆம் பக்கம் வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் முழு நிதிக் கூற்றுக்களின் முக்கிய ஒரு பகுதியாகும்.

## இலங்கை மத்திய வங்கி

**அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக் கூற்று**

**2014 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது**

| | 2014 ரூபா 000 | 2013 ரூபா 000 |
|---|---|---|
| ஆண்டுக்கான தேறிய இலாபம்/ (நட்டம்) | **(32,309,390)** | (24,264,529) |
| **ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்** | | |
| விற்பனைக்குள்ள பிணையங்களுக்கான தேறிய சந்தைப் பெறுமதி இலாபம்/ (நட்டம்) | **9,229,796** | (13,904,065) |
| சொத்து, பொறி மற்றும் கருவிகளின் இளைப்பாற்றலின் போது மீள்மதிப்பீட்டு இலாபத்தை மாற்றல் | **-** | (40) |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொழிலுக்குப் பின்னைய நன்மைகள் திட்டத்தின் செலவு | **1,487,603** | (592,417) |
| மொத்த அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்/ (நட்டம்) | **(21,591,991)** | (38,761,051) |

7 தொடக்கம் 56ஆம் பக்கம் வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் முழு நிதிக் கூற்றுக்களின் முக்கிய ஒரு பகுதியாகும்.

## இலங்கை மத்திய வங்கி

### உரிமை மூலதன மாற்றக் கூற்று

### 2014 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

| | பங்களிக்கப் பட்ட மூலதனம் ரூபா 000 | மூலதனமாக ஒதுக்கப்பட்ட ஒதுக்குகள் ரூபா 000 | மீள் மதிப்பீட்டு ஒதுக்கங்கள் ரூபா 000 | ஏனைய ஒதுக்கங்கள் (குறிப்பு 29) ரூபா 000 | திரட்டிய இலாபங்கள் ரூபா 000 | மொத்தம் ரூபா 000 |
|---|---|---|---|---|---|---|
| **2013 சனவரி 1இல் உள்ளவாறு** | 15,000 | 34,985,000 | 5,986,642 | 116,180,695 | 25,296,615 | 182,463,952 |
| தேறிய இலாபம் / (நட்டம்) | - | - | - | - | (24,264,529) | (24,264,529) |
| அதேநேர மொத்தத் தீர்ப்பனவின் கடன் கரைப்பு நிதியத்திற்கான மாற்றல் | - | - | - | 191,428 | (191,428) | - |
| பொது ஒதுக்கிற்கான மாற்றல் | - | - | - | 126,315 | (126,315) | - |
| பணிக்கொடை நிதிய மற்றும் மருத்துவ நிதியத்திற்கான மாற்றல் | - | - | - | 595,490 | (523,602) | 71,888 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொழிலுக்குப் பின்னைய நன்மைகள் திட்டத்தின் செலவு | - | - | - | - | (592,417) | (592,417) |
| தேறிய வெளிநாட்டு நாணயமாற்று மீள் மதிப்பீட்டு இழப்பின் மாற்றல் | - | | | (26,758,632) | 26,758,632 | - |
| இலங்கை மத்திய வங்கி விசேட ஒதுக்கிற்கான மாற்றல் | - | - | - | 91,317 | (91,317) | - |
| மருத்துவ நன்மைகள் திட்டம் மற்றும் பணிக்கொடை ஒதுக்கிலிருந்து நிதியங்களை தொடர்பான பொறுப்புக்களுக்கு மாற்றல் | - | - | - | (1,511,789) | - | (1,511,789) |
| நிலையான சொத்துக்களின் இளைப்பாற்றலின் போது மீள்மதிப்பீட்டு இலாபத்தை மாற்றல் | - | - | (40) | 40 | - | - |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம் | - | - | - | (13,904,065) | - | (13,904,065) |
| இ.ம.வங்கி ஊழியர் மற்றும் ஓய்வூதியக்காரர் அனர்த்த நிவாரண நிதியத்திற்கான மாற்றல் | - | - | - | - | (122) | (122) |
| பிடித்துவைக்கப்பட்ட வருவாய்களுக்கு சந்தை மீள்மதிப்பீட்டு ஒதுக்கின் தேறிய மாற்றல் | - | - | - | (6,703,951) | 6,703,951 | - |
| மீதி இலாபத்தினை அரசிற்கு மாற்றல் - 2012 | - | - | - | - | (2,355,705) | (2,355,705) |
| இடைக்கால இலாபத்தினை அரசிற்கு மாற்றல் - 2013 | - | - | - | - | (25,000,000) | (25,000,000) |
| **2014 சனவரி 1இல் உள்ளவாறு** | **15,000** | **34,985,000** | **5,986,602** | **68,306,848** | **5,613,763** | **114,907,213** |
| தேறிய இலாபம்/ (நட்டம்) | - | - | - | - | **(32,309,390)** | **(32,309,390)** |
| அதேநேர மொத்தத் தீர்ப்பனவின் கடன் கரைப்பு நிதியத்திற்கான மாற்றல் | - | - | - | **212,124** | **(212,124)** | - |
| பொது ஒதுக்கிற்கான மாற்றல் | - | - | - | **1,511,182** | **(1,511,182)** | - |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொழிலுக்குப் பின்னைய நன்மைகள் திட்டத்தின் செலவு | - | - | - | - | **1,487,603** | **1,487,603** |
| தேறிய வெளிநாட்டு நாணயமாற்று மீள்மதிப்பீட்டு இழப்பின் மாற்றல் | - | - | - | **(32,266,690)** | **32,266,690** | - |
| இலங்கை மத்திய வங்கி விசேட ஒதுக்கிற்கான மாற்றல் | - | - | - | - | **(103,198)** | **(103,198)** |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம் | - | - | - | **9,229,796** | - | **9,229,796** |
| அடகு முற்பணம் தொடர்பான கொடுகடன் உத்தரவாதத் திட்டத்திற்கு நிதியத்தை மாற்றல் | - | - | - | **(500,000)** | **500,000** | - |
| பழைய செய்திப் பத்திரிகைகள், பயன்படுத்திய முத்திரைகள் என்பவற்றின் விற்பனை மற்றும் நூலகத்தினால் சேகரிக்கப்பட்ட அபராதங்களின் மாற்றல் | - | - | - | - | **(173)** | **(173)** |
| மத்திய வங்கியின் மூலதனத்தை மேம்படுத்துவதற்காக பொது ஒதுக்கிலிருந்தான நிதிய மாற்றல்கள் | - | **15,000,000** | - | **(15,000,000)** | - | - |
| இ.ம.வங்கியின் மூலதன மேம்படுத்தல் | **49,985,000.00** | **(49,985,000)** | - | - | - | - |
| மீதி இலாபத்தினை அரசிற்கு மாற்றுதல் - 2013 | - | - | - | - | **(3,000,000)** | **(3,000,000)** |
| இடைக்கால இலாபத்தினை அரசிற்கு மாற்றுதல் - 2014 | - | - | - | - | **(8,500,000)** | **(8,500,000)** |
| **2014 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | **50,000,000** | **-** | **5,986,602** | **31,493,260** | **(5,768,011)** | **81,711,851** |

7 தொடக்கம் 56ஆம் பக்கம் வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் முழு நிதிக் கூற்றுக்களின் முக்கிய ஒரு பகுதியாகும்.

# இலங்கை மத்திய வங்கி
**காசுப்பாய்ச்சல் கூற்று**
**2014 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது**

| | குறிப்பு | 2014 ரூபா 000 | 2013 ரூபா 000 |
|---|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்கள்** | | | |
| **பெறுகைகள்:** | | | |
| பெறப்பட்ட வட்டி - வெளிநாட்டு நாணயம் | | **25,984,366** | 21,656,589 |
| பெறப்பட்ட வட்டி - உள்நாட்டு நாணயம் - மற்றையவை | | **530,779** | 513,044 |
| திரவ முகாமைத்துவமும் வர்த்தக வருமானமும் | | **12,626,457** | 13,389,159 |
| தேறல் செய்யப்பட்ட செலாவணி இலாபம்/(நட்டம்) | | **(553,996)** | (13,638,407) |
| பெறப்பட்ட ஏனைய வருமானம் | | **1,360,447** | 1,175,609 |
| | | **39,948,053** | 23,095,994 |
| **பகிர்ந்தளிப்புக்கள்:** | | | |
| செலுத்தப்பட்ட வட்டி - வெளிநாட்டு நாணயம் | | **3,406,299** | 4,681,100 |
| செலுத்தப்பட்ட வட்டி - உள்நாட்டு நாணயம் | | **15,828,575** | 2,827,328 |
| ஊழியர்களுக்கான கொடுப்பனவு | | **4,729,643** | 3,947,528 |
| வழங்குநர்களுக்கான கொடுப்பனவு | | **5,601,065** | 29,596,753 |
| செலுத்தப்பட்ட வரி | | **929,097** | 2,016,217 |
| | | **30,494,679** | 43,068,926 |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான/ (பயன்படுத்தப்பட்ட) தேறிய காசுப்பாய்ச்சல்** | 37 | **9,453,374** | (19,972,932) |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | | |
| **பெறுகைகள்:** | | | |
| ஏனைய உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலான தேறிய (அதிகரிப்பு)/குறைவு | | **(790,741)** | (858,623) |
| ஏனைய நிறுவனங்களுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்களிலிருந்தான முதல் தொகை அறவீடுகள் | | **1,490,027** | 1,448,949 |
| சொத்து, பொறி, கருவிகளின் விற்பனை | | **940** | 2,268 |
| மீள விற்பதற்கான உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் தேறிய அதிகரிப்பு/(குறைவு) | | **243,651,000** | 77,586,000 |
| | | **244,351,226** | 78,178,594 |
| **பகிர்ந்தளிப்புக்கள்:** | | | |
| வெளிநாட்டு நாணயப் பிணையங்களிலான தேறிய அதிகரிப்பு/(குறைவு) | | **31,566,311** | (101,781,795) |
| ஏனைய வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலான தேறிய அதிகரிப்பு/(குறைவு) | | **(746,122)** | 1,407,072 |
| ஏனைய வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்களிலான தேறிய அதிகரிப்பு/(குறைவு) | | **(26,570,161)** | (1,510,810) |
| ஏனைய உள்நாட்டு வைப்புக்கள் மற்றும் கொடுபடத்தக்கவையிலான தேறிய அதிகரிப்பு/(குறைவு) | | **(375)** | (722) |
| கொடைகள் தவிர்ந்த சொத்து, பொறிகள் மற்றும் கருவிகளின் கொள்வனவுகள் | | **1,128,310** | 694,982 |
| தங்க இருப்பிலான தேறிய அதிகரிப்பு/(குறைவு) | | **1,348,440** | 55,585,071 |
| ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களும் முற்பணங்களும் | | **1,604,003** | 980,109 |
| | | **8,330,406** | (44,626,093) |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான/ (பயன்படுத்தப்பட்ட) தேறிய காசுப் பாய்ச்சல்** | | **236,020,820** | 122,804,687 |
| **நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | | |
| **பெறுகைகள்:** | | | |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயங்களை வெளியிடுதல் | | **(431,825,813)** | (237,929,416) |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயங்களை மீளப்பெறல் | | **508,950,194** | 259,640,254 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயங்களின் தேறிய வழங்கல் | | **77,124,381** | 21,710,838 |
| **பகிர்ந்தளிப்புக்கள்:** | | | |
| அரச கொடுக்கல்வாங்கல் தொடர்பில் சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் தேறிய வெளியிடுதல்/ (மீளப்பெறல்) | 38 | **139,339,459** | (175,136,711) |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுடனான கொடுக்கல்வாங்கல் தொடர்பில் சுற்றோட்ட நாணயத்தின் தேறிய வெளியிடுதல்/ (மீளப்பெறல்) | 39 | **(12,199,430)** | 17,284,956 |
| சுற்றோட்ட நாணயத்தின் தேறிய வெளியிடுதல்/ (மீளப்பெறல்) | | **127,140,029** | (157,851,755) |
| **சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் தேறிய அதிகரிப்பு/ (குறைவு)** | | **(50,015,648)** | 179,562,593 |
| **பகிர்ந்தளிப்புக்கள்:** | | | |
| வெளிநாட்டு நாணய தவணைப் பொறுப்புக்களின் மீள் கொடுப்பனவு | | **93,842,868** | 59,020,350 |
| ஏனைய நிதியங்களுக்கான கொடுப்பனவுகள் | | **173** | 122 |
| திரட்டிய நிதியத்திற்கான இலாப மாற்றல் | | **11,500,000** | 26,350,000 |
| | | **105,343,041** | 85,370,472 |
| **நிதியியல் நடவடிக்கையிலிருந்தான/ (பயன்படுத்தப்பட்ட) தேறிய காசுப்பாய்ச்சல்** | | **(155,358,689)** | 94,192,121 |
| **காசு மற்றும் காசுக்குச் சமமானவற்றில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு/ (குறைவு)** | | **90,115,505** | 197,023,876 |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவற்றின் மீதான செலாவணி வீதத் தாக்கம் | | **(28,721,497)** | (6,625,246) |
| ஆண்டின் தொடக்கத்தில் உள்ளவாறு காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | | **425,676,763** | 235,278,133 |
| **திசெம்பர் 31இல் உள்ளவாறு காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்** | 40 | **487,070,771** | 425,676,763 |

7 தொடக்கம் 56ஆம் பக்கம் வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் முழு நிதிக் கூற்றுக்களின் முக்கிய ஒரு பகுதியாகும்.

## இலங்கை மத்திய வங்கி

### 2014 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களின் விளக்கக் குறிப்புகள்

### 1. அறிக்கையிடும் நிறுவனம் மற்றும் நியதிச் சட்டத் தளம்

திருத்தப்பட்டவாறான இலங்கையின் 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க இலங்கை நாணய விதிச் சட்டத்தினால் நிறுவப்பட்ட இலங்கை மத்திய வங்கி (வங்கி அல்லது இ.ம.வங்கி) இலங்கையின் நிருவாகம், மேற்பார்வை மற்றும் நாணய ஒழுங்குவிதிகள், நிதியியல் மற்றும் கொடுப்பனவு முறைமைகள் என்பனவற்றிற்குப் பொறுப்பான அதிகாரசபையாக இருக்கின்றது. இலங்கை மத்திய வங்கியானது இலங்கை சனநாயக சோசலிச் குடியரசிற்குள் நிரந்தரமாக நிறுவப்பட்டுள்ளதோடு இல.30 சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01இல் அமைந்துள்ளது.

மேற்படி நிதிக்கூற்றுக்களை வெளியிடுவதற்கு ஆளுநராலும் முதன்மைக் கணக்காளராலும் 2015 மாச்சு 17ஆம் திகதி நாணயச் சபையின் சார்பில் அதிகாரமளிக்கப்பட்டது.

### 2. கணக்கீட்டுக் கொள்கைகள்

#### 2.1 தயாரிப்பிற்கான அடிப்படை

இந்நிதிக்கூற்றுக்கள், கீழே குறித்துரைக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளினால் அடையாளம் காணப்பட்டவாறு, காணி, கட்டடம், தங்கம் மற்றும் ஒரு சில நிதிச் சொத்துக்கள் தவிர்ந்த ஏனையவை நியாயமான பெறுமதியில் அளவிடப்பட்டு வரலாற்றுச் செலவின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

#### 2.1.1 அறிக்கையிடல் படிவம்

வங்கியானது நிதிச் சொத்துக்களையும் நிதிப் பொறுப்புக்களையும் அவற்றுடன் இணைந்த வருமானத்தையும் செலவினத்தையும் வெளிநாட்டு நாணய மற்றும் உள்நாட்டு நாணய நடவடிக்கைகளிடையே வேறுபடுத்தி வெளிப்படுத்துகிறது. நிதி நிலைமை பற்றிய கூற்றில் சொத்துக்களும் பொறுப்புக்களும் குறிப்பிட்ட வகைகளின் திரவத்தன்மை ஒழுங்கு வரிசையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இவ்வறிக்கையிடும் அணுகுமுறை குறிப்பு 4இல் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ளவாறு, வங்கியின் நடவடிக்கைகளை பொருத்தமான முறையில் அறிக்கையிடுவதாக வங்கி கருதுகின்றது.

#### 2.1.2 இணக்கக் கூற்று

2014 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் இந் நிதிக்கூற்றுக்கள் பன்னாட்டு நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்கத் தயாரிக்கப்பட்டுள்ளன. நாணய விதிச் சட்டத்திற்கு அமையத் தயாரிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் நாயகத்தினால் கணக்காய்வு செய்யப்பட்டு சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டுள்ளவாறு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. ப.நி.அ. நியமங்களின் ஒரு சில தேவைப்பாடுகளின் காரணமாக, வகைப்படுத்தல் மற்றும் அதனுடன் தொடர்புடையதான எண்தொகைகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களை விட இந் நிதிக்கூற்றுக்களில் வித்தியாசமானதாக அமையலாம்.

#### 2.1.3 சமர்ப்பித்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட நாணயம்

வேறு விதமாக கூறப்பட்டிருந்தாலொழிய அனைத்துத் தொகைகளும் இலங்கை ரூபாவின் ஆயிரத்திற்கு கிட்டிய தொகையில் தரப்பட்டுள்ளன.

#### 2.2 முக்கியமான கணக்கியல் தீர்ப்புகளும் மதிப்பீடுகளும்

வங்கியின் நிதியியல் கூற்றுக்களின் தயாரிப்பு, வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பனவற்றின் அறிவிக்கப்பட்ட தொகைகளின் மீதும் இணைந்த வெளிப்படுத்துகைகள் அதேபோன்று எதிர்பாராத பொறுப்புக்களின் மீதும் தாக்கத்தினை ஏற்படுத்தும் தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் கருதுகோள்களை மேற்கொள்வதனைத் தேவைப்படுத்துகிறது. சொத்துக்களின் தற்போதைய தொகைக்கு பொருண்மிய சீராக்கத்தினை தேவைப்படுத்தும் பெறுபேறுகளை அல்லது எதிர்காலத்தில் ஏற்படும் பொறுப்புக்களில் பெறுபேறுகளை விளைவிக்கக்கூடும்.

#### 2.2.1 விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள முதலீடுகளின் பெறுமதி இழப்பு

சந்தைப் பெறுமதியானது அதன் கிரயத்திற்கு கீழே கணிசமானளவு அல்லது நீண்ட காலப் போக்கில் வீழ்ச்சியடையும் போது வங்கியானது, விற்பனைக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள முதலீடுகளின் பெறுமதி இழப்புகளை நிர்ணயிக்கிறது. குறிப்பிடத்தக்க அல்லது நீண்ட காலப் போக்கு எது என்பதை நிர்ணயிப்பதற்கு திறனாய்வுகள் அவசியமாகின்றன.

#### 2.2.2 ஓய்வூதியமும் தொழில்நிலைக்குப் பின்னரான ஏனைய நலத் திட்டங்களும்

குறித்துரைக்கப்பட்ட நலத் திட்டங்களின் செலவு ஆயுட்கால மதிப்பீட்டைப் பயன்படுத்தித் தீர்மானிக்கப்படுகின்றது. ஆயுட்கால மதிப்பீடானது, கழிவு வீதங்கள், எதிர்கால இழப்பீட்டுக் கொடுப்பனவுகளின் அதிகரிப்பு, இறப்பு வீதங்கள் மற்றும் எதிர்கால ஓய்வூதிய அதிகரிப்புகள் ஆகியவற்றின் கருதுகோள்களின் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றது. இத் திட்டங்களின் நீண்டகால இயல்பின் காரணமாக மேற்படி மதிப்பீடுகள் கணிசமான அளவு நிச்சமற்ற நிலைமைக்கு உட்படுகின்றன. பயன்படுத்தப்பட்ட கருதுகோள்கள் குறிப்பு 43இல் தரப்பட்டுள்ளன.

#### 2.2.3 நிதியியல் சாதனங்களின் சந்தைப் பெறுமதி

நிதியியல் நிலைமைக் கூற்றில் பதிவு செய்யப்படும் நிதியியல் சொத்துக்கள் மற்றும் நிதியியல் பொறுப்புக்களின் சந்தைப் பெறுமதிகள் செயற்படும் சந்தைகளிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட முடியாவிடின் அவை கணித ரீதியான மாதிரிகளை உள்ளடக்கும் வேறுபட்ட மதிப்பீட்டு முறைகளைப் பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகின்றன. இம்மாதிரிகளுக்கான உள்ளீடுகள் சாத்தியமான இடங்களில் அவதானிக்கக்கூடிய சந்தைத் தரவுகளிலிருந்து பெற்றுக் கொள்ளப்படுகின்றன. ஆனால் இத்தரவுகள் கிடைக்கத்தக்கதாக இல்லாதவிடத்து, சந்தைப் பெறுமதிகளைக் கணிப்பதற்கு திறனாய்வான முடிவு தேவைப்படுகின்றது. திறனாய்வான முடிவு, திரவத்தன்மையைக் கவனத்திலெடுத்தல் மற்றும் நீண்ட கால பெறுதிகளுக்கான தளம்பல்கள் போன்ற மாதிரி உள்ளீடுகளை உள்ளடக்கியிருக்கும்.

#### 2.3 விடுக்கப்பட்டும் இன்னமும் நடைமுறைப்படுத்தப்படாத நியமங்கள்

விடுக்கப்பட்டும் வங்கியின் நிதியியல் கூற்றுக்களின் வழங்கல் திகதி வரை நடைமுறைக்கிடப்படாத நியமங்கள் மற்றும் விளக்கங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. இவை நடைமுறைக்குவரும் பொழுது, ஏற்புடைத்தானவிடத்து வங்கி இந்நியமங்களை பின்பற்ற எண்ணுகிறது.

#### 2.3.1 பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9 நிதியியல் சாதனங்கள்

2014 யூலையில் பன்னாட்டு கணக்கீட்டு நியமச் சபையானது நிதியியல் சாதனங்களினது செயற்றிட்டத்தின் அனைத்துக் கட்டங்களையும் பிரதிபலிக்கின்ற பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9 நிதியியல் சாதனங்களின் இறுதிப் பதிப்பினை வெளியிட்டதுடன், பன்னாட்டு நிதியியல் நியமம் 39 நிதியியல் சாதனங்கள் நீக்கப்படுகிறது. நியமமானது, வகைப்படுத்தல் மற்றும் அளவீடு, பெறுமதியிழப்பு மற்றும் பாதுகாப்புக் கணக்கீடு என்பனவற்றிற்கான புதிய தேவைப்பாடுகளை அறிமுகப்படுத்துகிறது. பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9 அனுமதிக்கப்பட்ட உரிய நேரத்திற்கு முன்னர் பிரயோகத்துடன் 2018 சனவரி 1 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ தொடங்குகின்ற வருடாந்தக் காலப்பகுதிக்கு நடைமுறைப்படுத்தப்படும். பின்னோக்கிய பிரயோகங்கள் தேவைப்படுத்தப்படுகின்ற போதும், ஒப்பீட்டு அடிப்படையிலான தகவல்கள் கட்டாயமானவையல்ல. ஆரம்பப் பிரயோகத் திகதி 2015 பெப்புருவரிக்கு முன்னதாக இருப்பின் பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9 இன் முன்னைய பதிப்பினை (2009, 2010 மற்றும் 2013) உரிய நேரத்திற்கு முன்னர் பிரயோகித்தல் அனுமதிக்கப்படும். பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9 இனைப் பின்பற்றுவது வங்கியின் நிதியியல் சொத்துக்களை வகைப்படுத்தல் மற்றும் அறவிடலின் மீது தாக்கமொன்றினைக் கொண்டிருக்குமெனினும் வங்கியின் நிதியியல் பொறுப்புக்களின் வகைப்படுத்தல் மற்றும் அளவீட்டில் தாக்கமெதனையும் கொண்டிருக்காது.

#### 2.3.2 பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 14 ஒழுங்குமுறைப்படுத்தல் பிற்போடப்பட்ட கணக்குகள்

பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 14, பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமங்களை முதன் முதலில் பின்பற்றுவது வரை ஒழுங்குமுறைப்படுத்தல் பிற்போடப்பட்ட கணக்கு நிலுவைகளுக்காக அதன் ஏற்கனவேயுள்ள பெரும்பாலான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தொடர்ந்தும் பிரயோகிப்பதற்கான தர விதிகளுக்கு உட்பட்ட நடவடிக்கைகளைக் கொண்டுள்ள நிறுவனமொன்றின் தேர்விற்குரிய நியமங்களை அனுமதிக்கின்றது. பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 14இனை பின்பற்றுகின்ற நிறுவனங்கள் நிதியியல் நிலைமைக் கூற்றின் மீது தனிப்பட்டதொரு விடயமாக ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட பிற்போடப்பட்ட கணக்காகக் காட்டுதல் வேண்டும் என்பதுடன் இக்கணக்கு நிலுவைகளின் அசைவுகளை இலாபம் அல்லது நட்ட கூற்றுக்களிலும் மற்றைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்திலும் தனிப்பட்டதொரு விடயமாகக் காட்டுதல் வேண்டும். இதன் தன்மை தொடர்பான அதனுடன் தொடர்பான இடர்நேர்வுகளையும் நிறுவனத்தின் தர ஒழுங்குவிதிகளையும் அத்துடன் இதன் நிதியியல் கூற்றுக்கள் மீதான அத்தர ஒழுங்குவிதியின் தாக்கமும் வெளிப்படுத்தப்பட வேண்டுமென நியமம் தேவைப்படுத்துகின்றது. பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 14, 2016 சனவரி 1ஆம் நாளன்றோ அல்லது அதற்குப் பின்னரோ தொடங்குகின்ற ஆண்டில் நடைமுறையிலிருக்கும். இக்கணக்கீட்டு நியமத்தைப் பின்பற்றுவது, வங்கியின் மீது தாக்கமெதனையும் கொண்டிருக்காதென எதிர்பார்க்கப்படுகின்றது.

#### 2.3.3 பன்னாட்டு கணக்கீட்டு நியமம் 19இன் கட்டாய நன்மைத் திட்டங்களுக்கான திருத்தங்கள்: ஊழியர் பங்களிப்புக்கள்

பன்னாட்டு கணக்கீட்டு நியமம் 19, கட்டாய நன்மைகள் திட்டங்களுக்கான கணக்கீடுகளை மேற்கொள்ளும் போது ஊழியர்களிடமிருந்து அல்லது மூன்றாம் தரப்பினரிடமிருந்தான பங்களிப்புக்களையும் பரிசீலனையில் கொள்ளுமாறு நிறுவனமொன்றினைக் கேட்டுக் கொள்கிறது. பங்களிப்புக்கள் பணிகளுடன் இணைக்கப்படுமிடத்து எதிர்மறையானதொரு நன்மையாக அவை பணிகள் காலத்துடன் சேர்க்கப்படுதல் வேண்டும். இத்திருத்தங்கள், பங்களிப்புத் தொகைகள் பணியாற்றிய ஆண்டுகளினது எண்ணிக்கையில் தங்கியிருக்காதிருக்குமாயின் நிறுவனமானது அத்தகைய பங்களிப்புக்களை பணியாற்றும் காலப்பகுதிக்கு ஒதுக்குவதற்குப் பதிலாக, பங்களிப்புக்களை ஆற்றப்பட்ட பணியிலுள்ள காலப்பகுதியின் பணிச் செலவில் ஏற்பட்ட குறைப்பாக அங்கீகரிக்கப்படுவதற்கு நிறுவனமொன்று அனுமதிக்கப்படுகிறது. இத்திருத்தமானது 2014 யூலை 1ஆம் நாளன்றோ அல்லது அதற்குப் பின்னரோ ஆரம்பிக்கின்ற ஆண்டு காலப்பகுதிக்கு நடைமுறைக்குவரும்.

#### 2.3.4 பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 15 வாடிக்கையாளருடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருமானம்

பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 15, 2014 மேயில் விடுக்கப்பட்டுதுடன் புதிய ஐந்து - படிமுறை மாதிரிகளையும் உருவாக்கியுள்ளதுடன் இது வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்து தோன்றுகின்ற வருமானத்திற்கு பிரயோகிக்கத்தக்கதாக இருக்கும். பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 15இன் கீழ், வருமானமானது நிறுவனமொன்று வாடிக்கையாளருக்குப் பொருட்களையும் பணிகளையும் மாற்றல் செய்வதற்கான பரிவர்த்தனையில் உரித்துடையதாக இருக்குமென எதிர்பார்க்கப்படும் நிறுவனமொன்றின் பரிசீலனையினைப் பிரதிபலிக்கின்ற தொகையினை அங்கீகரிக்கின்றது. பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 15இல் உள்ள கோட்பாடுகள் வருமானத்தினை அளவிடவும் அங்கீகரிக்கின்றதுமான மிகுந்த அமைப்பியல் வாய்ந்த அணுகுமுறையொன்றினை வழங்குகிறது. புதிய வருமான நியமம் அனைத்து நிறுவனங்களுக்கும் ஏற்புடைத்தானதாக இருப்பதுடன் பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமத்தின் கீழ் தற்போதைய அனைத்து வருமான அங்கீகரிப்புத் தேவைப்பாடுகளும் நீக்கப்படும். ஒன்றில் முழுமையான அல்லது திருத்தப்பட்ட பின்னோக்கிய விண்ணப்பம் உரிய நேரத்திற்கு முன்னர் பின்பற்றுவதற்கான அனுமதியுடன் 2017 சனவரி 1 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ தொடங்குகின்ற ஆண்டு காலப்பகுதிக்கு தேவைப்படுத்தப்படுகின்றன. இவை நடைமுறைக்குவரும் பொழுது வங்கி இந்நியமங்களைப் பின்பற்றும். விபரமான மீளாய்வுகள் நிறைவடையாமல் இருக்கும் பொழுது நிதியியல் தாக்கங்கள் நியாயமான மதிப்பீடுகளாக இருக்கமாட்டாது. இந்நிதியியல் கூற்றுக்களின் வெளியீட்டுத் திகதியில் உள்ளவாறு நிதியியல் தாக்கத்தினை நியாயமான முறையில் மதிப்பிடமுடியாது.

### 3. முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம்

#### 3.1 வெளிநாட்டு நாணய மாற்றுவீதங்கள்

வங்கியின் நடைமுறை மற்றும் சமர்ப்பண நாணயம் இலங்கை ரூபாவாகும். வெளிநாட்டு நாணயங்களிலான கொடுக்கல்வாங்கல்கள், அவை இடம்பெற்ற நாளுக்கு ஏற்புடையதான நடைமுறை நாணயத்திலேயே பதிவு செய்யப்பட்டன. வெளிநாட்டு நாணயங்களில் குறித்துரைக்கப்பட்ட நிதிச் சொத்துக்களும் பொறுப்புக்களும் நிதி நிலைமை பற்றிய கூற்றின் திகதியில் ஏற்புடையதாகவிருந்த செலாவணி வீதத்திற்கேற்ப இலங்கை ரூபாவுக்கு மாற்றப்பட்டன. அனைத்து வேறுபாடுகளும் வருமானக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இம் மாற்றங்களுக்குப் பயன்படுத்தப்பட்ட முக்கிய நாணயங்களுக்கான இலங்கை ரூபா செலாவணி வீதங்கள் பின்வருமாறு:

| நாணயம் | 2014 ரூபா | 2013 ரூபா |
|---|---|---|
| 1 அவுஸ்திரேலிய டொலர் | **107.3616** | 116.6709 |
| 1 கனேடிய டொலர் | **113.0558** | 122.7324 |
| 1 யூரோ | **159.2568** | 180.4522 |
| 1 யப்பானிய யென் | **1.0962** | 1.2459 |
| 1 சிறப்பு எடுப்பனவு உரிமை (சி.எ.உ) | **189.864** | 201.3550 |
| 1 ஸ்டேர்லிங் பவுண் | **204.1803** | 215.5790 |
| 1 ஐக்கிய அமெரிக்க டொலர் | **131.0486** | 130.7530 |
| 1 சீன யுவான் (கரைகடந்த) | **21.0483** | 21.5800 |

நிதியல்லாத விடயங்கள் ஆரம்பக் கொடுக்கல்வாங்கல் நடைபெற்ற திகதியன்று உள்ளவாறான செலாவணி வீதத்தைப் பயன்படுத்தி, வெளிநாட்டுச் செலாவணியின் வரலாற்றுச் செலவின் அடிப்படையில் அளவிடப்பட்டுள்ளது.

#### 3.2 சந்தைப் பெறுமதி அளவுகள்

வங்கி ஒவ்வொரு ஐந்தொகைத் திகதியிலும் வெளிநாட்டுப் பிணையங்கள், பெறுதிகள் போன்ற நிதியியல் சாதனங்களையும் காணி, கட்டடம் போன்ற நிதியல்லாச் சொத்துக்களையும் சந்தைப் பெறுமதியில் அளவிடுகின்றது. அத்துடன், பதிவழிப்புச் செலவில் அளவிடப்பட்ட நிதியியல் சாதனங்களின் சந்தைப் பெறுமதி குறிப்பு 44இல் வெளிப்படுத்தப்பட்டன.

சந்தைப் பெறுமதி என்பது அளவிடுகின்ற திகதியில் சொத்தொன்றினை விற்பது தொடர்பில் பெறப்படுகின்ற அல்லது சந்தைப் பங்கேற்பாளர்களுக்கேயான கொடுக்கல்வாங்கல்களின் பொருட்டு பொறுப்பொன்றினை மாற்றல் செய்வதற்கான கொடுப்பனவு எனப் பொருள்படும். சந்தைப் பெறுமதி அளவீடு சொத்துக்களை விற்றல் அல்லது பொறுப்புக்களை மாற்றல் செய்தல் தொடர்பாக பின்வரும் இடமொன்றில் இடம்பெறும் கொடுக்கல்வாங்கல்களின் ஊகங்களை அடிப்படையாகக் கொண்டதாகும்.

- சொத்து அல்லது பொறுப்பிற்கான முதன்மைச் சந்தை, அல்லது
- முதன்மைச் சந்தை இல்லாத போது சொத்து அல்லது பொறுப்பிற்கு மிக அநுகூலம் நிறைந்த சந்தை

முதன்மை அல்லது மிக அநுகூலம் நிறைந்த சந்தை வங்கியினால் அணுகப்படக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

சொத்தொன்றின் அல்லது பொறுப்பொன்றின் சந்தைப் பெறுமதியானது சந்தைப் பங்கேற்பாளர்கள் பொருளாதாரத்தில் கொண்டுள்ள சிறந்த ஈடுபாடுகளில் அவர்களது ஊகங்களில் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களை விலையிடும் பொழுது பயன்படுத்தப்படுகிறது. நிதியல்லாச் சொத்தொன்றின் சந்தைப் பெறுமதி சொத்தினை மிக உயர்ந்த விதத்தில் சிறந்த முறையில் பயன்படுத்துவதன் மூலம் அல்லது சொத்தினை மிக உயர்ந்த விதத்தில் சிறந்த முறையில்

பயன்படுத்தக்கூடிய இன்னொரு சந்தைப் பங்கேற்பாளருக்கு விற்பதன் மூலம் பொருளாதார நன்மைகளை உருவாக்கக்கூடிய சந்தைப் பங்கேற்பாளர்களின் இயலாற்றலைக் கணக்கில் கொண்டு அளவிடப்படுகிறது.

வங்கி சூழ்நிலைக்குப் பொருத்தமான மதிப்பீட்டு நுணுக்கங்களைப் பயன்படுத்துவதுடன் இதற்காகத் தொடர்பான அவதானிக்கத்தக்க உள்ளீடுகளை உச்சப்படுத்துகின்றதும் அவதானிக்கப்பட முடியாத உள்ளீடுகளை மிகக் குறைப்பதுமான சந்தைப் பெறுமதிகளை அளவிடுவதற்குப் போதுமான தரவுகள் கிடைக்கத்தக்கதாகவுள்ளன.

நிதியியல் கூற்றுக்களில் அளவிடப்பட்ட அல்லது வெளிப்படுத்தப்பட்ட சந்தைப் பெறுமதிகளுக்கான அனைத்துச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சந்தைப் பெறுமதிகளின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டு பொதுவாக சந்தைப் பெறுமதியின் அளவிடலுக்குப் போதுமானதாக விளங்கும் குறைந்த மட்டத்தின் அடிப்படையில் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளன.

மட்டம் 1 - ஒரே மாதிரியான சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களுக்கான செயற்படுகின்ற சந்தையில் விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட(சீராக்கப்படாத) சந்தை விலைகள்

மட்டம் 2 - பெறுமதியிடல் நுணுக்கங்களுக்கான சந்தைப் பெறுமதியினை அளவிடுவதற்கு குறிப்பிடத்தக்கதாக விளங்கும் குறைந்தமட்ட உள்ளீடு நேரடியாகவோ மறைமுகமாகவோ அவதானிக்கப்படுதல்

மட்டம் 3 - பெறுமதியிடல் நுணுக்கங்களுக்கான சந்தைப் பெறுமதியினை அளவிடுவதற்குக் குறிப்பிடத்தக்கதாக விளங்கும் குறைந்தமட்ட உள்ளீடு அவதானிக்கப்பட முடியாதவை.

மீண்டெழும் அடிப்படையில் நிதியியல் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுக்காக வங்கியானது ஒவ்வொரு அறிக்கையிடும் காலப்பகுதியின் முடிவிலும் மாற்றல்கள் வகைகளின் மீள்மதிப்பீட்டின் மூலம் (பொதுவாக சந்தைப் பெறுமதி அளவீட்டிற்கு குறிப்பிடத்தக்கதாக விளங்கும் குறைந்தமட்ட உள்ளீடுகளின் அடிப்படையில்) ஒழுங்கமைப்பிலுள்ள மட்டங்களுக்கிடையில் நிகழ்ந்திருக்கின்றன.

### 3.3 நிதிச் சொத்துக்களும் பொறுப்புக்களும்

வங்கியானது, நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களையும் அத்துடன், இணைந்த வருமானம் மற்றும் செலவுகளையும், வெளிநாட்டு நாணய மற்றும் உள்நாட்டு நாணய நடவடிக்கைகளை வேறுபடுத்திக் காட்டுவதன் மூலமே சமர்ப்பிக்கின்றது. வெளிநாட்டு நாணய நடவடிக்கைகள் முக்கியமாக வங்கியின் வெளிநாட்டு ஒதுக்குகளின் முகாமைத்துவத் தொழிற்பாட்டிலிருந்தே உருவாகின்றன. உள்நாட்டு நாணய நடவடிக்கைகள் முக்கியமாக நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தல், ரூபா நாணயங்களின் வெளியீடு மற்றும் வங்கித்தொழில் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களைப் பிரதிபலிக்கின்றன.

இந் நடவடிக்கைகளைத் தனித்தனியாக விளக்குவதன் மூலம் வங்கியின் நிதி நிலைமை, நிதிச் செயலாற்றுகை மற்றும் இடர்நேர்வுத் தோற்றப்பாட்டினை சிறந்த முறையில் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நாணயங்களின் நடவடிக்கைகளை இணைந்து அறிக்கையிடுதல் நிதிக் கூற்றுக்களின் தகவல் பெறுமதியை நலிவுறச் செய்யுமென வங்கி கருதுகின்றது.

அனைத்து முதலீடுகளும் ஆரம்பத்தில் செலவு நியதிகளில் இனங்காணப்பட்டதுடன் இச் செலவு முதலீட்டுடன் இணைந்த கொள்வனவுக் கட்டணங்கள் உட்பட செலுத்தப்பட்ட நியாயமான பெறுமதியினையும் உள்ளடக்கியுள்ளது. ஆரம்ப இனங்காணலின் பின்பு, தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட அளவீட்டுத் தளங்கள் கீழே விபரிக்கப்படுகின்றன. நிதிச் சொத்துக்களின் அனைத்து கிரமமான வரியிலான கொள்வனவுகள் மற்றும் விற்பனைகள் முறையே வர்த்தகம் நடைபெற்ற திகதியைக் கொண்டு இனங்காணப்படுகின்றன. கிரமமான வரியிலான கொள்வனவுகள் மற்றும் விற்பனைகள் என்பன பொதுவான ஒழுங்குவிதிகளில் அல்லது சந்தையின் மரபுவரி முறைகளினால் நிறுவப்பட்ட கால வரையறையினுள் சொத்துக்களின் விநியோகத்தைத் தேவைப்படுத்தும் நிதிச் சொத்துக்களின் கொள்வனவுகள் அல்லது விற்பனைகளாகும்.

#### 3.3.1 இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சந்தைப் பெறுமதியில் பிணையங்கள்

வர்த்தகப்படுத்தக் கூடிய நிதிச் சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ள "பிணையங்கள் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சந்தைப் பெறுமதியிலான பிணையங்கள்" வகையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. பின்னர் மேற்படி பிணையங்கள் விலைக்குறிப்பீடு செய்யப்பட்டு சந்தை விலைகளில் பெறுமதியிடப்படுகின்றன. சந்தைப் பெறுமதியிலான மாற்றங்கள் நிதி நிலைமை பற்றிய கூற்றில் வர்த்தகப்படுத்தக்கூடிய பிணையங்கள் பெறுமதியில் அதிகரிப்பொன்றாகவோ அல்லது வீழ்ச்சியொன்றாகவோ காட்டப்படுகின்ற அதேநேரம் இதன் மூலம் எழும் இலாபங்களும், நட்டங்களும் வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

பிணையம் வங்கிக்குச் சொந்தமாக இருக்குமிடத்து இலாபம் அல்லது நட்டம் விலை மீள் பெறுமதியிடலிலிருந்து பெறப்படாத இலாபமாக / (நட்டமாக) அறிக்கையிடப்படும். இலாபமோ அல்லது நட்டமோ பெறப்படுமிடத்து (பிணையத்தினை விற்பதன் மூலம்) அது விலை மாற்றங்களிலிருந்து பெறப்பட்ட இலாபமாக / (நட்டமாக) அறிக்கையிடப்படும்.

#### 3.3.2 வெளிநாட்டு நாணயத்திலான விற்பனைக்குள்ள முதலீட்டுப் பிணையங்கள்

வெளிநாட்டு நாணயத்திலான விற்பனைக்குள்ள முதலீட்டுப் பிணையங்கள் விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட சந்தை விலைகளில் மதிப்பீடு செய்யப்படுகின்றன. சந்தைப் பெறுமதியிலான மாற்றங்கள் நிதி நிலைமை பற்றிய கூற்றில் ஒதுக்குகளின் கீழ் பிணையங்களின் விற்பனைக்காகவுள்ள பெறுமதியின் அதிகரிப்பொன்றாகவோ அல்லது வீழ்ச்சியொன்றாகவோ அடையாளங் காணப்படும்.

வெளிநாட்டு நாணயத்திலான விற்பனைக்குள்ள முதலீட்டுப் பிணையங்களின் சந்தைப் பெறுமதியில் ஏற்பட்ட மாற்றங்களிலிருந்து எழும் இலாபமும் நட்டமும் முதலீடுகள் விற்கப்படும் வரை அல்லது சேகரிக்கப்படும் வரை அல்லது வேறு விதமாக இதனை அகற்றும் வரை அல்லது முதலீட்டினை இல்லாதொழிப்பது என தீர்மானிக்கப்படும் வரை நிதி நிலைமை பற்றிய கூற்றில் மூலதனப் பங்கின் (ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்) ஏனைய ஒதுக்குகளின் கீழ் காட்டப்பட்டுள்ள தனியொரு கூறாக இனங்காணப்படுகிறது. அவ்வாறான சந்தர்ப்பத்தில் முன்னைய மூலதனப் பங்காக அறிவிக்கப்பட்ட ஒன்று சேர்ந்த இலாபம் அல்லது நட்டம் மூலதனப் பங்காக வருமானக் கூற்றில் உள்ளடக்கப்படும்.

#### 3.3.3 நிதிப் பெறுதிக் கருவிகள்

வங்கி, பெறுதிகளான குறுக்கு நாணய பரஸ்பர பரிமாற்றல், முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணி ஒப்பந்தங்கள், வட்டி வீத பரஸ்பர பரிமாற்றல் என்பவற்றை இடர்நேர்வு முகாமைத்துவ நோக்கங்களுக்காக பயன்படுத்துகின்றதேயொழிய ஊக நோக்கங்களுக்காக அல்ல. அத்தகைய நிதிப் பெறுதிக் கருவிகள் நியாயமான பெறுமதியில் குறிப்பிடப்படுவதுடன், நியாயப் பெறுமதி நேர்க்கணியமாக இருக்குமிடத்தில் சொத்தாகவும், எதிர்க்கணியமாக இருக்குமிடத்தில் பொறுப்பாகவும் கொண்டு செல்லப்படும். நிதிப்பெறுதிக் கருவிகளின் நியாயப் பெறுமதியில் ஏற்படுகின்ற மாற்றங்கள் தேறல் செய்யப்படாத விலை மதிப்பீட்டிலிருந்தான இலாபத்தில் (நட்டத்தில்) உள்ளடக்கப்படுகின்றன.

#### 3.3.4 "1 நாள்" வேறுபாடு

கொடுக்கல்வாங்கல் விலையானது அதே சாதனத்தின் இன்னொரு அவதானிக்கக்கூடிய நடைமுறைச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்களின் சந்தைப் பெறுமதியிலிருந்து அல்லது அவதானிக்கக்கூடிய சந்தைகளிலிருந்தான திகதியை மட்டும் கொண்டிருக்கும் மாறிகளை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீட்டு முறைகளிலிருந்து வேறுபடுமாயின், வங்கியானது உடனடியாக கொடுக்கல்வாங்கல் விலைக்கும் சந்தைப் பெறுமதிக்கும் இடையிலான வேறுபாட்டை (ஒரு நாள் வேறுபாடு) தேறாத விலை மீள்மதிப்பீடுகள்" இலிருந்தான 'இலாபம்/ (நட்டம்) ஆக இனங்காணும்' அவதானிக்க முடியாத தரவுகளைப் பயன்படுத்தி சந்தைப் பெறுமதியானது தீர்மானிக்கப்படும் சந்தர்ப்பங்களில், கொடுக்கல்வாங்கல் விலைக்கும் மாதிரிப் பெறுமதிக்குமிடையிலான வேறுபாடு, உள்ளீடுகள்

அவதானிக்கக்கூடியதாக மாறும் போது, அல்லது சாதனத்தின் பதிவு நீக்கப்படும் போது மட்டுமே வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

**3.3.5 பன்னாட்டு நாணய நிதியத்துடன் (ப.நா.நி.) தொடர்புடைய நிலுவைகள்**

வங்கியானது இலங்கை அரசின் முகவராக செயற்படுவதனை காட்டிலும் அதன் சொந்த உரிமையுடன் பன்னாட்டு நாணய நிதியத்துடன் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்றது. அந்த அடிப்படையில், ப.நா. நிதியத்துடனான வங்கியின் அனைத்து கொடுக்கல்வாங்கல்களும் இந் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ப.நா. நிதியத்துடனான அனுமதிப் பங்கு ஒரு சொத்தாக வங்கியினால் பதிவு செய்யப்படுவதுடன் அனுமதிப் பங்கிற்காக ப.நா. நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய தொகை வங்கியின் பொறுப்பாகப் பதிவு செய்யப்படுகிறது. ப.நா. நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் ஒன்று சேர்ந்த ஒதுக்குகள் பொறுப்பாகக் கணிக்கப்படுகின்றன. ப.நா. நிதியத்தினால் வெளியிடப்பட்டவாறு நிதி நிலைமை பற்றிய கூற்றின் திகதியிலுள்ள செலாவணி வீதத்தினைப் பிரயோகித்து பன்னாட்டு நாணய நிதியச் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் மீள்பெறுமதியிடலிலிருந்து எழும் செலாவணி இலாபங்களும் நட்டங்களும் வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளன.

ப.நா. நிதியத்துடனான நிலுவைகள் தொடர்பான ஏனைய அனைத்துக் கட்டணங்களும் வட்டியும் வருமானக் கூற்றில் உடனடியாகப் பதிவு செய்யப்படுகின்றன.

**3.3.6 காசும் காசுக்குச் சமமானவைகளும்**

காசும் காசுக்குச் சமமானவைகளும் வெளிநாட்டு வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களிலுள்ள காசு மற்றும் குறுங்கால வைப்புக்களையும் உள்ளடக்கியுள்ளன.

உள்நாட்டு நாணயங்களினது நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, இலங்கை மத்திய வங்கி குறிப்பிட்டதொரு வருமானத்தினை உருவாக்குவதுடன் செலவுகளையும் ஏற்கின்ற போதிலும் இவை காசின் நகர்வுடன் தொடர்புபட்டவையல்ல. இந் நடவடிக்கைகள் குறிப்பிட்ட சொத்துக்களையும் பொறுப்புக்களையும் தோற்றுவிப்பதுடன், முக்கியமாக இலங்கை அரசாங்கத்துடனான கொடுக்கல்வாங்கல்களையும் உள்நாட்டு வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுடனான கொடுக்கல்வாங்கல்களையும் உள்ளடக்குகின்றன. அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் ஏலத்தில் கோரப்படாத பகுதியின் கொள்வனவு உட்பட அரசாங்கத்துடனான கொடுக்கல்வாங்கல்கள் நிதிக் கொள்கைப் பொறிமுறையாக வங்கியினால் பிரயோகிக்கப்படுகிறது. அத்தகைய கொள்வனவுகள், விற்பனைகள் மற்றும் அவற்றின் மீதான வட்டி என்பன இலங்கை மத்திய வங்கியின் பதிவுகளில் தனியே ஏட்டுப் பதிவுகளாகப் பிரதிபலிக்கப்படுகின்றன. இவை இந் நிதிக்கூற்றில் 37, 38 ஆம் இலக்கக் குறிப்புகளில் தனித்தனியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

தனி அதிகாரம் கொண்ட சட்டபூர்வமான நிறுவனமாக விளங்கும் இலங்கை மத்திய வங்கியானது நாணய விதிச் சட்டத்திற்கிணங்க பொதுமக்களுக்கான நாணயத்தினை வழங்குகின்றது. மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட நாணயம் உடமையாளரின் பெயரில் மத்திய வங்கியின் மீதான கோரலாக இருப்பதனைப் பிரதிபலிக்கிறது. இது மத்திய வங்கியின் பொறுப்பொன்றாக இருக்கின்ற அதேநேரம் உடமையாளரின் கையிலுள்ள காசாகவும் இருக்கின்றது. சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் அசைவு, காசுப்பாய்ச்சல் கூற்றுக்களை சமர்ப்பித்தல் மத்திய வங்கிகளிடையே காணப்படும் தற்போதைய தொழிற்துறை நடைமுறைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் நிதியிடல் நடவடிக்கைகளில் ஒரு பகுதியாக உள்ளடக்கப்படுகின்றது.

இலங்கை மத்திய வங்கி காசு/கொடுப்பனவுக் கட்டளைகள் ஊடாக நாணயத் தாள்கள் மற்றும் குத்திகள் அல்லது மத்திய வங்கியின் பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் என்பன வடிவில், பெறப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகளுக்காக வழங்குநர்கள் மற்றும் ஊழியர்கள் என்போரை உள்ளடக்கிய பல்வேறுபட்ட பணம் கொடுபட வேண்டியோருக்கு காசு பகிர்ந்தளிக்கிறது. இது ஒன்றில் சுற்றோட்டத்திலுள்ள நாணயப் பொறுப்புடன் அல்லது வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களினால் வைத்திருக்கப்படும் வைப்புக்களுடன் சேர்க்கப்படுகின்றது. இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு நோக்கங்களுக்கான நாணயப் பயன்பாட்டின் அத்தகைய வடிவங்கள் இலங்கை மத்திய வங்கியின் காசு வெளிப்பாய்ச்சலில் ஒரு பகுதியை உருவாக்குகிறது.

காசுப்பாய்ச்சல் கூற்று நோக்கத்திற்காக, காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள் மேலே வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு, காசு/வெளிநின்ற கொடுப்பனவுக் கட்டளைகள் நீங்கலான, காசு மற்றும் காசிற்குச் சமமானவற்றை உள்ளடக்கியுள்ளன.

**3.3.7 மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்கள்**

மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் நிதி நிலைமை பற்றிய கூற்றில் சொத்துக்களாகத் தொடர்ந்தும் பதிவு செய்யப்படுகின்றன. மீள்கொள்வனவு செய்வதற்கான கடப்பாடு (மீள்கொள்வனவு செய்வதற்கான உடன்படிக்கையின் கீழ் விற்கப்பட்ட பிணையங்கள்) பொறுப்பொன்றாகக் காட்டப்பட்டுள்ளது. மீள்கொள்வனவுகள் கொடுக்கல்வாங்கல்களில் விற்பனை விலைக்கும் மீள்கொள்வனவு விலைக்குமிடையேயான வேறுபாடும் நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களில் கொள்வனவு விலைக்கும் விற்பனை விலைக்குமிடையேயான வேறுபாடும் முறையே செலவினத்தையும் வருமானத்தையும் பிரதிபலிப்பதுடன் இது வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் வைத்திருக்கப்படும் பிணையங்கள் (மீள்விற்பனை செய்வதற்கான உடன்படிக்கைகளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள்) நிதி நிலைமை பற்றிய கூற்றில் ஒரு சொத்தாகப் பதிவு செய்யப்படுகின்றன. மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு ஆகிய இரண்டும், ஒன்று சேர்ந்த வருமானம் அல்லது செலவினம் ஏதுமிருப்பின் அவற்றை உள்ளடக்கி கொடுக்கல்வாங்கல் பெறுமதியில் பதிவு செய்யப்படுகின்றன.

**3.3.8 துணைநில் வைப்பு வசதி**

2014 பெப்புருவரி 1ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் துணைநில் வைப்பு வசதியானது (முன்னர் துணைநில் மீள்கொள்வனவு வசதி) பிணை ஒதுக்கங்கள் இல்லாத "தூய வைப்புக்கள்" ஆக மாற்றப்பட்டன. எனவே, பங்கேற்கின்ற நிறுவனங்கள் அவற்றின் மிகையான நிதியங்களை தூய வைப்புக்களாக துணைநில் வைப்பு வசதி வீதத்தில் நாளாந்த அடிப்படையில் முதலிடலாம்.

துணைநில் கடன் வழங்கல் வசதியின் நடைமுறைகள் (முன்னர் துணைநில் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதி) துணைநில் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதியினை ஒத்ததாகவே காணப்படுகின்றது.

**3.3.9 இலங்கை மத்திய வங்கிப் பிணையங்கள்**

வங்கியானது அதன் நாணயக் கொள்கைத் தொழிற்பாடுகளின் கீழ் சந்தையிலுள்ள மேலதிகத் திரவத் தன்மையை உள்ளீர்த்துக் கொள்ளும் பொருட்டு காலத்திற்குக் காலம் இ.ம.வ. பிணையங்களை வழங்குகின்றது.

வழங்கப்படும் பிணையங்கள் பொறுப்புகளாகப் பதிவு செய்யப்படுகின்றன. வழங்கப்பட்ட விலைக்கும் முகப்புப் பெறுமதிக்குமிடையிலான வித்தியாசம் வருமானக் கூற்றில் செலவாகப் பதிவு செய்யப்படுகின்றது.

**3.3.10 இலங்கை அரச பிணையங்கள்**

வங்கியின் முதலீட்டுப்பட்டியல் இலங்கை அரசிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்களை உள்ளடக்குகின்றது. இவை இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட கடன்களையும் பிரதிநிதித்துவப்படுத்துவதனால் நிதி நிலைமை பற்றிய கூற்றில் இச் சொத்துப்பட்டியல் கடன் தீர்ப்பனவுக் கிரயச் செலவில் பதியப்படுகிறது.

**3.3.11 அரசிற்கான முற்பணங்கள்**

1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் திருத்தப்பட்டவாறான பிரிவு 89இன் கீழ் இலங்கை அரசிற்கு வழங்கப்பட்ட நேரடி தற்காலிக முற்பணங்களை அரசிற்கான கடன்கள் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

**3.3.12 ஏனைய நிறுவனங்களுக்கான கடன்கள்**

ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் வழங்கப்பட்ட ஆரம்பத் தொகையிலிருந்து அறவிடமுடியாத தொகை ஏதுமிருந்தால் அதைக் கழித்த பின்பு இனங்காணப்பட்டு, பேணப்படுகின்றது. வரவேண்டிய எல்லாத்

தொகையையும் சேகரிப்பதற்கு வங்கியினால் முடியாத தன்மைக்கு போதிய சான்று காணப்படுமிடத்து ஐயக்கடன் (பெறமுடியாத கடன்கள்) ஏற்பாடுகள் செய்யப்பட்டன. கொடுப்பனவுத் தொகையானது புத்தகத்திலுள்ள தொகைக்கும் மதிப்பிடப்பட்ட மீளப் பெறப்படத்தக்க தொகைக்குமிடையிலான வேறுபாடாகும். அறவிடமுடியாக் கடன்கள் அடையாளம் காணப்படும் போது பதிவழிக்கப்படுகின்றன.

**3.3.13 பிணையங்களின் கடன்பாடுகளும் பிணையங்களின் கடன் வழங்குதலும்**

வங்கி அதன் நாணயக் கொள்கை தொழிற்பாடுகளுக்காக காலத்திற்குக் காலம் முக்கிய நிறுவன ரீதியான முதலீட்டாளர்களிடமிருந்து அரச பிணையங்களைக் கடன்படுகிறது. இவ்வாறு கடன்பட்ட பிணையங்கள் சந்தையில் காணப்படும் மிகையான திரவத்தன்மையினை ஈர்ப்பதற்காக மீள்கொள்வனவு தொழிற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

பிணையங்களின் கடன்பாடுகள் என்பது வங்கியிடமிருந்து அப் பிணையங்களை திருப்புவது, இணங்கப்பட்ட கட்டணத்தினை செலுத்துவது, வழங்கலின் போது ஏதேனும் தவறு இடம் பெறும் சந்தர்ப்பத்தில் சந்தை வீதங்களில் இழப்பீட்டினைச் செலுத்துவது (வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் முதனிலைச் சந்தை பங்கேற்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்ட சந்தை வீதங்கள்) என்பனவற்றிற்காக வங்கியிடமிருந்து பெறப்படும் பொதுவான உத்தரவாதமெனப்படும்.

கடன்பட்ட பிணையங்கள் மற்றும் குறிப்பிட்ட நேரத்தில் மீள்கொள்வனவு தொழிற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படாத பிணையங்களினதும் சந்தைப் பெறுமதி எதிர்பாராத பொறுப்புக்களாக பதிவு செய்யப்படுகின்றன. தரகு ஒன்று சேர்ந்த அடிப்படையில் செலவிடப்படுகின்றது.

கடன் வழங்கும் கொடுக்கல்வாங்கல்களின் கீழ் இணைத்தரப்பினருக்கான பிணையங்களின் மாற்றல், சொத்தாண்மையின் இடர்நேர்வும் வெகுமதியும் மாற்றம் செய்யப்பட்டால் மட்டுமே நிதிக்கூற்றில் பிரதிபலிக்கப்படும்.

**3.3.14 பணியாளர்களுக்கான கடன்கள்**

வங்கியின் பணியாளர்கள் சலுகை வட்டி வீதத்தின் கீழ் கடன் வசதிகளைப் பெறுவதற்கு உரித்துடையவர்களாவர். மேற்படி கடன்கள் ப.க.நி. 39இன் பிரகாரம் கழிவிடப்பட்ட காசுப்பாய்ச்சலைப் பயன்படுத்தி நியாயமாகப் பெறுமதியிடப்பட்டுள்ளன.

**கழிவு வீதம்** - மேற்படி வீதமானது இ.ம.வ. யின் (பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தினால்) ஐ.அ.டொலர்-வர்த்தக வட்டி வீதத்துடன் வங்கியின் கணக்காய்வுக் குழுவினால் இணங்கப்பட்டவாறு 1 சதவீத இடர்நேர்வுத் தவணைத் தொகையையும் சேர்த்து நீண்டகாலப் பணவீக்க இலக்கின் அடிப்படையில் கணிப்பிடப்பட்டு கழிவு வீதமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதோடு, கடன் காலத்தைப் பொறுத்து இது வேறுபடுகின்றது.

ஆண்டின் இறுதிக்கும் ஆண்டின் ஆரம்பத்திற்கும் இடையிலுள்ள பணியார்களுக்கான கடன்களின் தற்போதைய பெறுமதியின் வித்தியாசமானது, சலுகை வீதத்தில் மேற்படி கடன் வழங்கப்படுவதால் வங்கி ஏற்க நேரிடுகின்ற செலவைப் பதிவதற்காக வருடாந்தம் கடன்தீர் நிதியாக தீர்க்கப்படும் என்பதோடு, சந்தை வீதத்தில் இக் கடன் வழங்கப்பட்டிருப்பின் வங்கியினால் ஈட்ட முடியுமாயிருக்கும் வருமானத்தைப் பதிவு செய்யும் பொருட்டு, அதற்குச் சமமான தொகை ஏனைய வருமானத்தில் பதியப்படும்.

**சந்தைப் பெறுமதியைக் கணிப்பிடுவதற்காகப் பயன்படுத்தப்படும் கருதுகோள்கள்**

- பணியாளர்களுக்கான கடன்கள் 2008 ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்பட்டதாகக் கருதுதல்.
- பணியாளர்களுக்கான கடன்கள் வழங்கப்பட்ட திகதியாக சனவரி 01 ஆம் திகதியைக் கருதுதல்.
- மேற்படி கடன்களில் எவ்விதத் திருத்தமும் அல்லது முன்கூட்டிய தீர்ப்பனவு எதுவும் செய்யப்படவில்லை எனக் கருதுதல்.

மத்திய வங்கி கடன் முகாமைத்துவ முறைமையினை இலகுபடுத்தும் நோக்குடன் கணனிக்கான கடன்களையும் வகை 'பீ' இன் கீழான இரண்டு கடன்களையும் ரூ.300,000 கொண்ட மொத்தக் கடன் வரையறையுடன் மீள்கொடுப்பனவுக் காலத்தினை பத்தாண்டுகளாக்கியதன் மூலம் கடன்பாட்டாளருக்கு தனியொரு கடனாக மாற்றியது. மேலும், இவ்வகையின் கீழ் புதிய கடனுடன் சேர்த்து வெளிநின்ற கடன் நிலுவை புதிய கடன் எப்பொழுது வழங்கப்பட்டதோ அதிலிருந்து மீளஅட்டவணைப்படுத்தப்படும்.

**3.3.15 நிதிச் சொத்துக்களின் பெறுமதி இழக்கக்கூடிய தன்மை**

ஒவ்வொரு நிதி நிலைமை கூற்றுத் திகதியிலும் ஒரு நிதிச் சொத்துப் பெறுமதி இழக்கக்கூடியதா என வங்கி மதிப்பிடுகிறது.

**3.3.16 கடன்தீர் கிரயத்திலுள்ள சொத்துக்களின் அளவு**

கடன் மீதான நட்டத்தின் தேய்வடையக்கூடிய தன்மை மற்றும் கடன்தீர் நிதிக் கிரயத்தின் பெறுகைகள் எடுத்துச் செல்லப்படுதல் ஏற்பட்டு, ஒரு புற உண்மைச்சான்று இருக்குமானால் அந்த நட்டத் தொகையானது சொத்துக்கள் எடுத்துச் செல்லும் தொகைக்கும் மதிப்பீடு செய்யப்பட்ட நிதிச் சொத்துக்களின் அசல் தாக்குமிகு வட்டி வீதத்தில் கழிவு கொடுக்கப்பட்டுள்ளது. எதிர்கால காசுப்பாய்ச்சலின் தற்கால பெறுமதிக்கும் (ஏற்படாத எதிர்காலக் கடன் நட்டங்கள் உள்ளடக்கப்படவில்லை) இடைப்பட்ட வித்தியாசமாக அளவிடப்படுகிறது. (பயனுறு வட்டி வீதம் ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்பட்டளவில் கணிக்கப்பட்டுள்ளது). சொத்தின் எடுத்துச் செல்லும் தொகையானது ஒன்றில் நேரடியாகவோ அன்றேல் படிகளின் கணக்கை உபயோகிப்பதன் ஊடாகவோ குறைக்கப்படும் வருமானக் கூற்றிலே நட்டத் தொகை இனங்காணப்படும்.

தனிப்பட்ட முறையில் முக்கியத்துவம் வாய்ந்த நிதிச்சொத்துகளுக்காக தனிப்பட்ட முறையிலுள்ள முடக்கத்தின் புறவுண்மைச் சான்றுகளாக, தனிப்பட்ட முறையில் முக்கியத்துவம் பெறாத நிதிச் சொத்துக்களுக்காக தனிப்பட்ட முறையில் அல்லது கூட்டாக உள்ள முடக்கத்தின் புறவுண்மைச் சான்றுகளா என முதலில் வங்கி மதிப்பிடுகிறது. முக்கியமானதோ இல்லையோ, தனிப்பட்ட முறையில் மதிப்பீடு செய்யப்பட்ட ஒரு நிதிச் சொத்துக்கு முடக்கம் இருப்பதற்கான புறவுண்மைச் சான்றுகள் இல்லையென அது தீர்மானிக்குமிடத்து, அச்சொத்தானது ஒத்த கொடுகடன் இடர்நேர்வுக் குண அம்சங்களைக் கொண்ட நிதிச் சொத்துக்களின் குழுவில் உள்ளடக்கப்படுகிறது. அத்துடன் நிதிச் சொத்துக்களின் குழுவானது முடக்கத்துக்கு உள்ளானது என கூட்டாக மதிப்பிடப்படுகிறது. முடக்கத்திற்காக தனிப்பட்ட முறையில் மதிப்பிடப்பட்ட சொத்துக்களானவை அவைகளுக்கு முடக்க இழப்பு இருப்பின் அல்லது இனங்காணப்பட்டவையாகத் தொடர்ந்து இருப்பின் முடக்கத்தின் கூட்டு மதிப்பீட்டிற்குள் உள்ளடக்கப்படமாட்டாது.

தொடர்ந்து வந்த ஒரு காலப்பகுதியில் முடக்க இழப்பின் தொகை வீழ்ச்சி அடைந்தால் அந்த வீழ்ச்சியை புறவுண்மை ரீதியாக முடக்கம் இனங்காணப்பட்டதன் பின்பாக கடந்த ஒரு நிகழ்வுடன் தொடர்புபடுத்த முடியும். முன்னதாக இனங்காணப்பட்ட முடக்க இழப்பும் நீக்கப்படும். அதைத் தொடர்ந்து வந்த முடக்க இழப்பின் நீக்குதலும் சொத்தின் எடுத்துச் செல்லும் பெறுமதி, அதனுடைய கடன்தீர் நிதிக் கிரயத்தை அந்த நீக்குதல் திகதியில் விஞ்சிவிடாது இருக்கும் அளவிற்கு வருமானக் கூற்றிலே இனங்காணப்படுகின்றது.

**3.3.17 விற்பனைக்குள்ள முதலீடுகளின் பெறுமதி இழப்பு**

விற்பனைக்குத் தயாராகவுள்ள ஒரு சொத்து முடக்கப்படுமாக இருந்தால் அதனுடைய கிரயத்திற்கும் (எந்தவொரு முதன்மைக் கொடுப்பனவும் கடன்தீர் நிதியும் நீங்கலாக) அதன் தற்போதைய நியாயப் பெறுமதிக்குமிடையிலான வித்தியாசத்தை உள்ளடக்கிய தொகையானது, இலாபத்திலோ நட்டத்திலோ முன்னதாக இனங்காணப்பட்ட எந்தவொரு முடக்க இழப்பையும் கழித்து, உரிமை மூலதனப் பெறுமதியிலிருந்து வருமானக் கூற்றிற்கு மாற்றப்படுகிறது. விற்பனைக்குத் தயாராகவுள்ளதாக வகைப்படுத்தப்பட்ட உரிமை மூலதனக் கருவிகள் சம்பந்தமான நீக்குதல்கள் இலாபத்தில் இனங்காணப்படுவதில்லை. கடன் கருவிகளின் மீதான முடக்க நட்டங்களின் நீக்குதலானது இலாபம் அல்லது நட்டத்தினூடாக நீக்கப்படுகிறது. அந்தக் கருவியின் நியாயப் பெறுமதியில் அதிகரிப்பு ஏற்படுவதானது புறவுண்மை ரீதியாக இலாபம் அல்லது நட்டத்தில் முடக்க நட்டம் இனங்காணப்பட்ட பின்பாக இடம்பெறும் நிகழ்வோடு தொடர்புடையதாக இருக்க முடியும்.

### 3.3.18 வெளிநாட்டு நாணய நியமத்திலான பொறுப்புக்கள்

வெளிநாட்டு நாணய நியதியிலான பொறுப்புக்கள், கடன் தீர்ப்பனவுக் கிரயச் செலவில் பதிவு செய்யப்படுகின்றன. இப் பொறுப்புக்களின் பெறுமதியில் ஏற்படுகின்ற மாற்றங்கள் நிதி நிலைமை பற்றிய கூற்றின் நியதிப் பொறுப்புக்களின் பெறுமதியின் அதிகரிப்பொன்றாகவோ அல்லது வீழ்ச்சியொன்றாகவோ இனங்காணப்படுகிறது. வெளிநாட்டு நாணய நியதியிலான பொறுப்புக்களின் பெறுமதியில் ஏற்படுகின்ற மாற்றத்தின் விளைவாகத் தோன்றும் வருமானமும் நட்டமும் உடனடியாகவே வருமானக் கூற்றில் செலவுகளாக இனங்காணப்படுகின்றது.

பொறுப்பு இன்னமும் செலுத்தப்பட வேண்டியிருக்குமிடத்து இலாபமோ அல்லது நட்டமோ விலை தேறல் செய்யப்படாத மீள்பெறுமதியிடலிலிருந்தான (நட்டமாக)/ இலாபமாகப் பதிவு செய்யப்படும். இலாபமோ அல்லது நட்டமோ பெறப்பட்டிருக்குமிடத்து (பொறுப்பின் மீள்கொடுப்பனவின் ஊடாக) அது விலை மாற்றங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட (நட்டங்களாக)/ இலாபமாக பதிவு செய்யப்படுகிறது.

### 3.3.19 நிதியியல் உத்தரவாதங்கள்

நிதிப் பிணைகள் ஏனைய செலுத்தப்படத்தக்க நியாயப் பெறுமதியின் கீழ் நிதிக்கூற்றுக்களில் நியாயப் பெறுமதியில் இனங்காணப்பட்டுள்ளது. ஆரம்ப இனங்காணலின் பின்னர் ஒவ்வொரு பிணையின் கீழான வங்கியின் பொறுப்பும், பிணையின் விளைவாக எழுகின்ற நிதிக் கடப்பாடுகள் எவையேனும் இருப்பின் அவற்றைத் தீர்ப்பதற்குத் தேவையான செலவினங்களின் மிகச் சிறந்த மதிப்பீட்டின் மீதே அளவிடப்படுகின்றன.

### 3.3.20 ஏனைய நிதிச் சொத்துக்களும் பொறுப்புக்களும்

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நாணயத் தாள்கள், காசு வைப்புக்கள் மற்றும் குறுங்கால முற்பணங்கள் என்பன வர்த்தகம் செய்யப்படும் நாளில் இனங்காணப்படுகின்றன.

### 3.4 ஏனைய சொத்துக்களும் பொறுப்புக்களும்

### 3.4.1 தங்கம்

பன்னாட்டு ஒதுக்கத்தின் உள்ளடக்கத்தினைக் குறித்துரைக்கின்றதான நாணய விதிச் சட்டத்தின் 67(1) ஆம் பிரிவு மேற்படி ஒதுக்கத்தின் ஒரு பகுதியாக இ.ம.வ. தங்கத்தை வைத்திருக்கலாம் எனக் குறிப்பிடுகின்றது. ஆதலால், 2014 திசெம்பர் 31ஆம் திகதியன்று உள்ளவாறு வங்கியானது அதன் பன்னாட்டு ஒதுக்குகளின் ஒரு பகுதியாக ரூ.116.99 பில்லியனை (ஒதுக்கப்பட்டது ரூ.100.19 பில்லியன் மற்றும் ஒதுக்கப்படாதது ரூ.16.80 பில்லியன்) தங்கத்தில் வைத்திருந்தது. மேற்படி தங்கமானது பன்னாட்டு ஒதுக்குகளின் ஒரு பகுதியாக இருந்தமையால் பொதுவான வர்த்தக நடவடிக்கைகளின் போது ஒரு வர்த்தகப் பண்டமாகப் பயன்படுத்தப்படவில்லை என்பதோடு, தங்கமானது நியாயமான பெறுமதியில் மதிப்பிடப்பட்டு இலாபங்கள் அல்லது நட்டங்கள் வருமானக் கூற்றுகளுக்கு மாற்றப்பட்டன. இலாப ஒதுக்கீடுகளுக்கு முன்னர் தங்கத்திலிருந்தான தீர்க்கப்படாத இலாபங்கள் அல்லது நட்டங்கள் தொடர்புபட்ட ஒதுக்குக் கணக்குகளுக்கு மாற்றப்பட்டன.

### 3.4.2 இருப்புக்கள்

இருப்புக்கள் கிரயச் செலவு மற்றும் விற்றுப் பெறக்கூடிய பெறுமதி இவற்றில் குறைவான பெறுமதியில் வைத்திருக்கப்படுகின்றன. கிரயச் செலவானது நிறையேற்றப்பட்ட சராசரி அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றது. மெதுவாக அசையும் இருப்புகளுக்கு ஏற்பாடு மேற்கொள்ளப்படுகின்றது.

### 3.4.3 ஆதனங்களும் பொறிகளும் உபகரணங்களும்

ஆதனம், பொறி, உபகரணம், நாளாந்தப் பராமரிப்புச் செலவுகளைத் தவிர்த்து பெறுமானத் தேய்வு ஏற்பாடு மற்றும் பெறுமதி முடக்கத்தை ஒன்றுசேர்த்துக் கழித்துக் கிரயத்தில் கூறப்பட்டுள்ளது. இனங்காணல் விடயத்தை பூர்த்தி செய்வதற்காக இந்த ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பகுதிகளை மாற்றீடு செய்யும் போது ஏற்படும் செலவீனங்களையும் இந்தக் கிரயம் உள்ளடக்கியிருக்கிறது. காணியும் கட்டடங்களும் கட்டடம் மீதான பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டு மீள்பெறுமதியிடல் திகதியை தொடர்ந்தான முடக்கம் அறவிடப்பட்டு நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்டுள்ளது.

சொந்தக் காணி நீங்கலாக, பின்வரும் மதிப்பிடப்பட்ட பயன்மிக்க இருப்புக்காலம் தொடர்பில், தேய்மானம் நேர்கோட்டு முறையில் கணிக்கப்பட்டிருக்கிறது.

| சொத்தின் வகை | பயனுள்ள இருப்புக் காலம் |
|---|---|
| சொந்தக் காணியின் மீதான கட்டடங்கள் | 50 வருடங்களுக்கு மேல் |
| குத்தகைக் காணிகள் மீதான கட்டடங்கள் | குத்தகைக் காலத்திற்கு மேல் |
| பொறியும் பொறியின் முக்கிய பகுதிகளும் | 20 வருடங்கள் |
| தளபாடங்கள் மற்றும் கருவிகள் | 10 வருடங்கள் |
| உந்து ஊர்திகள் | 5 வருடங்கள் |
| 2014இலிருந்து பெறப்பட்ட உந்து ஊர்திகள் | 10 வருடங்கள் |
| கணனி வன்பொருள் | 4 வருடங்கள் |
| ஏனையவை | 3 வருடங்கள் |

நிகழ்வுகள் அல்லது சூழ்நிலை மாற்றங்கள் சுட்டிக்காட்டும் பொழுது பொறிகளினதும் உபகரணங்களினதும் எடுத்துச் செல்லும் பெறுமதிகள் முடக்கத்திற்காக மீளாய்வு செய்யப்படுகின்றன. கிரயத்தின் ஆரம்ப இனங்காணலைத் தொடர்ந்து, காணி மற்றும் கட்டடங்கள் மீள்மதிப்பிடப்பட்ட தொகையில் எடுத்துச் செல்லப்படுகின்றன. இது மீள் மதிப்பீடு செய்யப்பட்ட திகதியில் நியாயப் பெறுமதியாக உள்ள பொழுது, கட்டடங்கள் மீதான பின் தொடர்ந்து வந்த ஒன்று சேர்க்கப்பட்ட பெறுமானத் தேய்வுகளும், பின்தொடர்ந்து வந்த ஒன்று சேர்க்கப்பட்ட முடக்க நட்டங்களும் கழிக்கப்பட்டு இருக்கும்.

வங்கியின் காணி மற்றும் கட்டிடம் என்பனவற்றை மீள்மதிப்பிடுவதற்கான கொள்கை யாதெனில் குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகளுக்கொரு தடவை அல்லது குறிப்பிடத்தக்க பெறுமதிச் சீராக்கம் தேவையென தெரியவரும் பொழுது ஏதேனும் குறுகிய காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதாகும்.

எந்த மீள்மதிப்பீடு மிகையும் நிதி நிலைமை பற்றிய கூற்றின் நிகரச் சொத்துப் பிரிவில் உள்ளடக்கப்பட்டு, மீள்மதிப்பீட்டு ஒதுக்கில் செலவு வைக்கப்படுகிறது. வருமானக்கூற்றிலே முன்னதாக இனங்காணப்பட்ட அதே சொத்தின் மீள்மதிப்பீட்டு வீழ்ச்சியானது, மறுதலையாகாத அளவில், இருக்கும் போது அந்த அதிகரிப்பானது வருமானக்கூற்றிலே இனங்காணப்படுகிறது. அதே சொத்தின் மீதான நேரடியாக குறைநிரப்பும், ஒரு முந்திய தொகையின் பற்றாக்குறையானது மீள்மதிப்பீட்டு ஒதுக்கின் மிகைக்கு எதிராக நேரடியாக மிகை நிரப்புவது தவிர்ந்த நிலைமைகளில், ஒரு மீள்மதிப்பீட்டுப் பற்றாக்குறை வருமானக்கூற்றிலே இனங்காணப்படுகிறது. அகற்றும் நிலையில், குறிப்பிட்ட விற்கப்படுகின்ற சொத்தோடு தொடர்புடைய எந்த மீள்மதிப்பீட்டு மிகையும், தக்கவைத்துக் கொள்ளும் வருவாய்களுக்கு மாற்றப்படுகின்றது. ஒரு ஆதனம், பொறி மற்றும் உபகரணம், அகற்றுகையின் போது அல்லது அதன் பாவனை அல்லது அகற்றுகையின் மூலம் எதிர்கால பொருளாதார நன்மைகளை வழங்காது என எதிர்பார்க்கப்படும் போது அதன் இனங்காணல் முடிவடைகிறது.

அச்சொத்தின் இனங்காணல் முடிவடைவதன் மூலம் உருவாகின்ற ஏதாவது இலாபம் அல்லது நட்டம் (தேறிய அகற்றுகை நடைமுறைக்கும் சொத்தின் எடுத்துச் செல்லும் தொகைக்கும் இடையிலான வித்தியாசமாகக் கணிக்கப்பட்டது) சொத்து இனங்காணப்படல் முடிவடைந்த வருடத்தின் வருமானக்கூற்றில் உள்ளடக்கப்படுகிறது. மிகுதியாகவுள்ள சொத்தின் பெறுமானங்கள், பயனுள்ள இருப்புக் காலங்கள் மற்றும் முறைகள் மீள்பார்வை செய்யப்படுவதுடன் பொருத்தமாய் இருப்பின் கிரமமாகத் தக்கவாறு அமைத்துக் கொள்ளப்படுகிறது.

### 3.4.4 அருவச் சொத்துக்கள்

கணனி வன்பொருள்களில் முழுமையாக உள்ளடங்காதுள்ள கணனி மென்பொருட்கள் அருவச் சொத்துக்களாகக் காட்டப்பட்டு கிரயச்

செலவில் இனங்காணப்பட்டுள்ளன. ஆரம்ப இனங்காணலைத் தொடர்ந்து 4 வருட காலப் பயனுள்ள ஆயுட்கால அடிப்படையில் திரண்ட கடன்தீர் நிதி எவையேனும் இருப்பின் கழிக்கப்பட்டு கிரயச் செலவில் முன்னெடுத்துச் செல்லப்படுகிறது.

### 3.4.5 பெறக்கூடியவை

பெறக்கூடியவை புலப்படத்தக்க சான்றுகளின் அடிப்படையில், ஐயக்கடனுக்கான ஏற்பாட்டினைச் செய்த பின்னர் எதிர்பார்க்கப்படும் பெறப்படத்தக்க பெறுமதியில் முன்கொண்டு செல்லப்படுகிறது.

### 3.4.6 நானாவிதச் சொத்துக்கள்

ஏனைய நானாவிதச் சொத்துக்கள் எதிர்பார்க்கப்பட்ட பெறத்தக்க பெறுமதியில் மேற்கொள்ளப்பட்டன.

### 3.4.7 நிதிசாராச் சொத்துக்களின் பெறுமதியிழப்பு

சூழ்நிலைகளின் நிகழ்வுகள் அல்லது மாற்றங்கள் முன்கொண்டு செல்லும் பெறுமதியில் முடக்கத்தை உண்டுபண்ணலாம் என்பதைக் காட்டுகின்றனவா என்பதையும் நிதிசாரா சொத்துக்கள் முடக்கப்படலாம் என்பதற்கான அறிகுறிகள் உள்ளதா என்பதையும் அறிக்கை செய்யும் ஒவ்வொரு திகதியிலும் வங்கி மதிப்பிடுகின்றது. அத்தகைய அறிகுறிகள் காணப்படின், சொத்துக்களின் மீளப் பெறக்கூடிய தொகையின் மதிப்பீடொன்றை வங்கி மேற்கொள்ளும். மீளப்பெறக்கூடிய பெறுமதியை விட முன்கொண்டு செல்லப்படும் பெறுமதி உயர்வாகக் காணப்படும் போது ஒரு சொத்து தேய்வடைந்ததாகக் கருதப்படுவதுடன் அதன் மீளப்பெறக்கூடிய தொகைக்கு குறைத்தெழுதப்படும்.

### 3.4.8 ஏற்பாடுகள்

கடந்த கால நிகழ்வொன்றின் விளைவாக, வங்கி தற்போதைய கடப்பாடொன்றினை (சட்ட ரீதியான அல்லது அமைப்பு ரீதியான) கொண்டிருக்குமிடத்து மற்றும் அக் கடப்பாட்டைத் தீர்ப்பதற்காக பொருளாதார நன்மைகளை உள்ளடக்கியிருக்கும் வளங்களின் வெளிப்பாய்ச்சல் தேவைப்படுவதுடன், இக் கடப்பாட்டுத் தொகையை நம்பத் தகுந்த மதிப்பீடொன்று மூலம் அறிய முடியுமாயின் ஏற்பாடுகள் இனங்காணப்படுகின்றன. ஏற்பாடொன்று மீளளிக்கப்படும் என வங்கி எதிர்பார்க்குமிடத்து அந்த மீளளிப்பு இறுதியில் நிச்சயமாக ஏற்படும் வேளையில் மட்டும் தனியான சொத்தாக மீளளித்தல் இனங்காணப்படுகிறது.

### 3.4.9 சுற்றோட்டத்திலுள்ள நாணயம்

இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட நாணயம் அதனை வைத்திருப்பவரின் சார்பாக வங்கி மீதான கோரலைக் கொண்டிருப்பதனைக் காட்டுகின்றது. சுற்றோட்டத்திலுள்ள நாணயத்துக்கான பொறுப்பு நிதி நிலைமை பற்றிய கூற்றில் முகப்புப் பெறுமதியில் பதியப்பட்டுள்ளது.

### 3.4.10 ஓய்வூதியம் மற்றும் தொழில்நிலைக்குப் பிந்திய ஏனைய நலத்திட்டங்கள்

வங்கியால் கையாளப்படும் ஊழியர் நிலைக்குப் பிந்திய ஓய்வூதியம் மற்றும் ஏனைய நலத்திட்டங்கள் குறிப்பு 43இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

### 3.4.11 நிர்ணயிக்கப்பட்ட நன்மைத் திட்டங்கள்

ஓய்வூதியம், விதவைகள் மற்றும் அநாதைகளுக்கான ஓய்வூதியம், விதுரர் மற்றும் அநாதைகளுக்கான ஓய்வூதியம், இளைப்பாற்றுப் பணிக்கொடை மற்றும் வேலைக் காலத்திற்குப் பிந்திய மருத்துவ நலன்கள் போன்ற குறித்துரைக்கப்பட்ட நலத்திட்டங்களை வங்கி செயற்படுத்துகின்றது. முதல் மூன்று திட்டங்களையும் பொறுத்தவரையில் வங்கியும் தகுதியுள்ள பயனாளியும் பிறிதாக நிர்வகிக்கப்படும் நிதியங்களுக்குப் பங்களிப்பினைச் செய்கின்றனர். எறிவு செய்யப்பட்ட அலகுக் கொடுகடன் ஆயுட்கால மதிப்பீட்டு முறையை உபயோகித்து, ஒவ்வொரு திட்டத்திற்கும் குறித்துரைக்கப்பட்ட திட்டங்களின் கீழ் நன்மை வழங்கும் செலவு நிர்ணயிக்கப்படுகின்றது. ஆயுட்கால மதிப்பீடானது மூன்று வருடங்களுக்கு ஒரு தடவை மேற்கொள்ளப்படுகிறது.

### 3.4.12 நிர்ணயிக்கப்பட்ட உதவுதொகைத் திட்டங்கள்

ஊழியர்கள், ஏற்புடைய நியதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க ஊழியர் சேம நிதியப் பங்களிப்புக்களுக்கும் ஊழியர் நம்பிக்கை நிதியப் பங்களிப்புக்களுக்கும் தகுதியுடையவர்களாவர். வங்கியானது ஊழியர்களின் மொத்தச் சம்பளத்தில் ஊழியர் சேம நிதியத்திற்கு 24 சதவீதத்தினையும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு 3 சதவீதத்தினையும் பங்களிப்புச் செய்கிறது. இவை தனித்தனியாக நிருவகிக்கப்பட்டு வரும் நிர்ணயிக்கப்பட்ட உதவுதொகைத் திட்டங்களாகும்.

### 3.4.13 கொடைகள்

கொடைகள் (பெறப்படும் அத்துடன் அவற்றுடன் இணைந்த நிபந்தனைகள் ஏதுமிருப்பின் இணங்கி ஒழுகப்படும் என்பதற்காக உறுதிப்பாடு இருக்குமிடத்து) அவற்றின் நியாயமான பெறுமதியில் இனங்காணப்பட்டு, மூலதனத்தின் கீழ் காட்டப்படும். கொடைகள் செலவு விடயங்களுடன் தொடர்பானதாக இருக்கும் பொழுது, ஒழுங்குமுறையானதொரு அடிப்படையில் இழப்பீடு செய்வதற்கெனக் கருதப்பட்ட செலவினங்களுக்கு அவற்றை ஈடுசெய்வதற்குத் தேவையான காலப்பகுதிக்கு வருமானக் கணக்குக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளது. கொடைகள் சொத்தொன்றுடன் தொடர்பானதாக இருக்குமிடத்து, நியாயப் பெறுமதி பிற்போடப்பட்ட அரச கொடைக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு ஏற்புடைய சொத்தின் எதிர்பார்க்கப்படும் பயன்பாட்டுக் காலம் வரை, ஏற்புடைய சொத்தின் தேய்மானக் கொள்கையுடன் இசைந்த விதத்தில் ஒழுங்குமுறையான அடிப்படையில் வருமானக்கூற்றுக்கு விடுவிக்கப்படும்.

### 3.4.14 ஆளணிச் செலவுகள்

ஆளணிச் செலவுகள் அனைத்து அலுவலர் நன்மைகளினதும் முழுச் செலவினையும் உள்ளடக்குகின்றது. சம்பளங்கள் தொடர்பான செலவுகள் மற்றும் ஆண்டின் இறுதியில் ஒன்று சேரும் விடுவிப்புக்கள் என்பன மற்றைய உள்ளூர் கொடுபடத்தக்கனவற்றுள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 3.4.15 தொழிற்படு குத்தகைகள்

வங்கி, குத்தகைதாரராக இருக்குமிடத்து தொழிற்படு குத்தகைகள் மீது செலுத்தத்தக்க வாடகைகள் குத்தகைக்கு எடுக்கப்பட்ட சொத்துக்களிலிருந்து பெறப்படும் எதிர்பார்க்கப்பட்ட நன்மைகளுடன் இசைந்து செல்லும் அடிப்படையில் குத்தகையின் தவணையைக் கருத்திற் கொண்டு வருமானக் கூற்றில் இனங்காணப்படுகிறது.

### 3.4.16 வரி விதிப்பு

வங்கியின் வருமானமானது, திருத்தப்பட்டவாறான 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 118ஆம் பிரிவின் கீழ் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

மேலும், வங்கியானது 2013ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க பொருளாதார பணிகள் விதிப்புச் (திருத்தப்பட்ட) சட்டத்தின்படி, பொருளாதாரப் பணிகள் விதிப்பு விலக்களிக்கப்பட்டதுடன், 2013ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க பெறுமதிசேர் வரி (திருத்தப்பட்ட) சட்டத்தின்படி நிதியியல் பணிகள் வழங்கல்கள் மீது பெறுமதிசேர் வரியானது விலக்களிக்கப்பட்டது.

### 3.4.17 வருமானங்களும் செலவினங்களும்

வங்கிக்குப் பொருளாதார நன்மைகள் பெரும்பாலும் கொண்டு வரக்கூடியதாகவும் அவ் வருமானத்தினை நம்பகமான முறையில் அளவிடக்கூடியதாகும் உள்ள போது வருமானமானது இனங்காணப்படுகின்றது. மேற்கொள்ளப்பட்ட செலவிற்கும் வருமானத்தின் குறித்துரைக்கப்பட்ட விடயங்களின் வருவாய்க்குமிடையிலான நேரடி இணைப்பொன்றின் அடிப்படையில் வருமானக்கூற்றில் செலவுகள் இனங்காணப்பட்டுள்ளன. வியாபாரத்தைக் கொண்டு நடத்துவது தொடர்பாகவும் ஆதனம், பொறி, உபகரணங்களை வினைத்திறனுள்ள விதத்தில் பேணுவதற்காகவும் மேற்கொள்ளப்பட்ட அனைத்து செலவினங்களும் ஆண்டிற்கான இலாபத்தினைக் கணிக்கும் போது வருமானத்தில் கழிக்கப்படுகின்றன.

வருமானத்தையும் செலவினத்தையும் இனங்காண்பதற்கு முன்னர் பின்வரும் குறித்துரைக்கப்பட்ட பிரமாணங்கள் நிறைவேற்றப்பட வேண்டும்:

#### 3.4.17.1 வட்டி

சேகரித்தல் ஐயத்திற்கிடமில்லாதவிடத்து உண்மைக் கொள்வனவு விலையை அடிப்படையாகக் கொண்ட பயன்தரு விளைவு முறையைப்

பயன்படுத்தி ஒன்று சேர்ந்த அடிப்படையின் மீது அனைத்து வட்டி உழைக்கும் கருவிகளுக்குமான வட்டி வருமானமும் செலவினங்களும் வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளது. வட்டி வருமானமானது, நிலையான முதலீடு மற்றும் வர்த்தகம் செய்யப்படுகின்ற பிணையங்கள் என்பன மீதான வட்டி வருவாய்களையும் கொடுபட வேண்டிய கழிவுகளையும் திறைசேரி உண்டியல் மற்றும் ஏனைய கழிவிடப்பட்ட கருவிகளின் வட்டங்களையும் உள்ளடக்குகிறது. கடன்களின் சேகரிப்பு ஐயத்திற்கிடமாகும் பொழுது வட்டி வருமானம் இடைநிறுத்தப்படுகிறது. அத்தகைய வருமானம் பெறப்படும் வரை வட்டி வருமானத்திலிருந்து நீக்கப்படுகிறது.

#### 3.4.17.2 பங்கிலாபங்கள்

பங்குடமையாளர்கள் கொடுப்பனவைப் பெறுவதற்கான உரிமை நிறுவப்படும்போது பங்கிலாப வருமானம் இனங்காணப்படுகிறது.

#### 3.4.17.3 பல்தரப்பட்டவை

பல்தரப்பட்ட வருமானமும் செலவினங்களும் ஒன்று திரண்ட அடிப்படையில் இனங்காணப்படுகின்றன.

ஆதனம், பொறி, உபகரணங்களின் விற்பனை மீதான வருமானத் தன்மையின் தேறிய இலாபங்களும், நட்டங்களும் விற்பனை மூலம் பெற்ற பெறுகைகளிலிருந்து சொத்து கொண்டுள்ள பெறுமதியையும் அது சார்ந்த விற்பனைச் செலவுகளையும் கழித்த பின்பு வருமானக்கூற்றில் காட்டப்பட்டுள்ளன.

முக்கிய வருமானத்தை உருவாக்குகின்ற நடவடிக்கைகள் என்பனவற்றிலிருந்து எழும் இலாபங்களும், நட்டங்களும் மற்றும் குறிப்பிடத்தக்களவில் இல்லாத கொடுக்கல்வாங்கல் தொகுதியிலிருந்து எழும் நட்டங்களும் தேறிய அடிப்படையில் திரட்டப்பட்டு அறிக்கையிடப்பட்டு வெளிப்படுத்தப்படுகிறது.

#### 3.4.18 எதிர்பாரா பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள்

படுகடன்களின் அனைத்து உத்தரவாதங்கள், முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் ஏனைய கடப்பாடுகள் நிதி நிலைமை பற்றிய கூற்றுக்கு வெளிவாரியான விடயங்களாக இனங்காணப்பட்டு எதிர்பாராத பொறுப்புக்கள் மற்றும் மூலதனக் கடப்பாடுகளாகிய உரிய தலைப்புகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன. தேவைப்படுமிடத்து அவ்வாறான தொகைகள் மிகச் சிறந்த மதிப்பீடுகளில் அளவிடப்படுகின்றது.

## 4. நடவடிக்கைகளின் தன்மையும் அளவும்

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க திருத்தப்பட்ட நாணய விதிச் சட்டத்தின் கீழ் எடுக்கப்படும் அல்லது பின்பற்றுவதற்கு அங்கீகாரமளிக்கப்படும் கொள்கைகளை அல்லது நடவடிக்கைகளை நிர்ணயிப்பதற்கு மேலதிகமாக, மத்திய வங்கியின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் தொழிற்பாடுகள் என்பன ஒப்படைக்கப்பட்டதுடன் பொதுவாக வங்கியின் முகாமை, தொழிற்பாடுகள் மற்றும் நிர்வாகம் என்பவற்றிற்கும் பொறுப்பாக இருக்கும். வங்கி, இலங்கையின் நாணய, நிதி மற்றும் கொடுப்பனவு முறை என்பவற்றின் நிர்வாகம், மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் என்பவற்றுக்கு முக்கிய பொறுப்பாக இருப்பதுடன், அரசாங்கத்தின் இறை முகவராண்மையாகவும் தொழிற்படுகிறது. வங்கியின் நடவடிக்கைகள் முக்கியமாகப் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கும்:

- நாணய மற்றும் செலாவணி வீதக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துதல்
- நாணய வெளியீடு
- நிதி முறையில் சுதந்திரமான போட்டியையும் உறுதிப்பாட்டையும் ஏற்படுத்துதல்
- வரைவிலக்கணப்படுத்தப்பட்ட நிதி நிறுவனங்களுக்கு உரிமம் வழங்கலும் மேற்பார்வையிடலும்
- வங்கிகளுக்கிடையிலான தீர்ப்பனவு முறையினை ஒழுங்கு செய்தலும், முகாமைப்படுத்தலும், மற்றும் கொடுப்பனவு முறையின் சுமூகமான தொழிற்பாட்டினை மேம்படுத்துதலும்
- பல்வேறுபட்ட வசதிகளின் கீழ் அரசாங்கம், வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்குக் கடன்களையும் முற்பணங்களையும் வழங்குதல்
- அரசுடனும் அரசின் சார்பில் தொழிற்படுகின்ற முகவர்களுடனும் குறித்துரைக்கப்பட்ட ஒழுங்குகளின் கீழ் அரசின் வைப்பாளராகத் தொழிற்படும்.

இலங்கையின் உற்பத்தியாக்க மூலவளங்களின் அபிவிருத்தியினை ஊக்குவித்து மேம்படுத்துகின்ற நோக்கத்துடனும் அதன் பொருளாதாரம், விலை மற்றும் நிதியியல் முறை உறுதிப்பாடு ஆகிய குறிக்கோள்களை எய்தும் நோக்கத்துடனும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை வெளிநாட்டு நாணய மற்றும் உள்நாட்டு நாணய நடவடிக்கைகள் என பரந்தளவில் வகைப்படுத்திக்கொள்ள முடியும். மேற்படி நடவடிக்கைகளின் பெறுபேறுகள் வருனாக்கூற்றில் தொழிற்பாட்டு நடவடிக்கைகளாக உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 4.1 வெளிநாட்டு நாணய நடவடிக்கைகள்

வெளிநாட்டு நாணயத் தொழிற்பாடுகள் முக்கியமாக, மத்திய வங்கியின் வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவத் தொழிற்பாடுகளின் கீழான இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டு நாணயச் சொத்துக்களை வைத்திருப்பதன் மூலமாக ஏற்படுகின்றது. வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவ சொத்துப்பட்டியல் வெளிநாட்டுச் செலாவணி தலையீட்டு நோக்கங்களுக்காக வைத்திருக்கப்படும் வெளிநாட்டு நாணயங்களையும் வர்த்தக நோக்கங்களுக்காக வைத்திருக்கப்பட்ட ஏனைய வெளிநாட்டு நாணயச் சொத்துக்களையும் உள்ளடக்குகிறது.

வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள் பல்வேறு நாணயங்களில் வைத்திருக்கப்படுகின்றன. முக்கியமான நாணய இனங்களாக ஐக்கிய அமெரிக்க டொலர், அவுஸ்திரேலிய டொலர், யூரோ, ஸ்டேர்லிங் பவுண் யப்பானிய யென் மற்றும் நியூசிலாந்து டொலர் என்பன காணப்பட்டன. இவ் வெளிநாட்டு நாணயச் சொத்துக்களில் வைத்திருக்கப்பட்ட நிதிக் கருவிகள், முக்கியமாக வேறு நாடுகளினது பிணையங்கள், நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களின் கீழ் வைத்திருக்கப்படும் பிணையங்கள் அல்லது ஏனைய மத்திய வங்கிகள், வர்த்தக வங்கிகள் மற்றும் கட்டுக்காப்பு நிறுவனங்களுடன் வைத்திருக்கப்படும் நிலுவைகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன.

இலங்கை மத்திய வங்கி காலத்திற்குக் காலம் உள்நாட்டுச் சந்தைத் தொழிற்பாடுகளிலிருந்து எழும் வெளிநாட்டு நாணயச் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் கூட வைத்திருக்கின்றது.

### 4.2 உள்நாட்டு நாணய நடவடிக்கைகள்

உள்நாட்டு நாணய நடவடிக்கைகள் பின்வருமாறு தோன்றுகின்றன.

(i) திரவத்தன்மை முகாமைத்துவத் தொழிற்பாடுகள்: திரவத்தன்மை முகாமைத்துவமானது வங்கித்தொழில் முறைக்கு நிதியங்களை முற்பணமாக வழங்குதல் மூலம் அல்லது வங்கித்தொழில் துறையிலிருந்து நிதியங்களை மீளப் பெறல் மூலம் அரசுக்கான நாளாந்த தேறிய பாய்ச்சல்களையும் அல்லது அரசிடமிருந்து தேறிய நாளாந்தப் பாய்ச்சல்களையும் இலங்கை மத்திய வங்கி நாளாந்தம் எதிரீடு செய்வதுடன் பெருமளவிற்கு தொடர்புடையதாகவுள்ளது. இத் தொழிற்பாடுகளில் பெரும்பாலானவை நாளாந்த திறந்த சந்தைத் தொழிற்பாடுகளூடாக மேற்கொள்ளப்படுகின்றன.

(ii) சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் பொறுப்பிற்கு உதவுவதற்கான இலங்கை அரசாங்கத்தின் பிணையங்களை உள்ளடக்கியதாக முதலீட்டுப் பட்டியலொன்று வைத்திருக்கப்படுகின்றது. வர்த்தக நோக்கத்திற்கன்றி நாணயத் தொழிற்பாடுகளுக்காக இம் முதலீடுகளை வைத்திருப்பதே வங்கியின் கொள்கையாகும்.

### 4.3 நம்பிக்கை மற்றும் கட்டுக்காப்பு நடவடிக்கைகள்

கட்டுக்காப்பு மற்றும் நிர்வாக ஒழுங்குமுறைகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் நிர்வகிக்கப்பட்ட தொகை, அவை வங்கியின்

நிதிக்கூற்றுக்களின் ஆக்கக் கூறுகளில் ஒரு பகுதியாக அமையாததால் இந் நிதிக்கூற்றில் உள்ளடக்கப்படவில்லை.

## 5. வெளிநாட்டுப் பிணையங்களிலான முதலீடுகள்

| | 2014 ரூபா 000 | 2013 ரூபா 000 |
|---|---|---|
| இலாபம் அல்லது நட்டத்தினூடான சந்தைப் பெறுமதியிலான பிணையங்கள் | **61,495,307** | 94,137,368 |
| விற்பனைக்குள்ள முதலீடுகள் | **408,189,500** | 357,531,750 |
| **மொத்த நிதியியல் சொத்துக்கள்** | **469,684,807** | 451,669,118 |

## 6. பெறுதி நிதியியல் சாதனங்கள்

(அ) கீழேயுள்ள அட்டவணை, சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களாக அவற்றின் பெயரளவுத் தொகையுடன் சேர்த்து பதிவு செய்யப்பட்டுள்ள பெறுதி நிதியியல் சாதனங்களின் சந்தைப் பெறுமதியினைத் தருகின்றது. மொத்தமாகப் பதிவு செய்யப்பட்ட பெயரளவுத் தொகை, பெறுதித் தொகை, சொத்துக்கள் தொடர்பான வீதங்களை அல்லது சுட்டெண்ணினை சுட்டுகின்றதாக இருந்ததுடன் பெறுதிகளின் பெறுமதிகளில் ஏற்படும் மாற்றங்களை அளவிடுமொன்றாகவும் காணப்பட்டது. பெயரளவுத் தொகை ஆண்டின் இறுதியில் வெளிநின்ற கொடுக்கல்வாங்கல்களின் அளவினை எடுத்துக்காட்டியதுடன் இது சந்தை இடர்நேர்வுகளையோ அல்லது கொடுகடன் இடர்நேர்வுகளையோ எடுத்துக்காட்டவில்லை.

| | 2014 | | | 2013 | | |
|---|---|---|---|---|---|---|
| | சொத்துக்கள் | பொறுப்புக்கள் | பெயரளவு தொகை | சொத்துக்கள் | பொறுப்புக்கள் | பெயரளவு தொகை |
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| நாணய பரஸ்பர பரிமாற்றல்கள் | **1,579,560** | **2,758,093** | **285,044,665** | 5,670,258 | 4,703,881 | 360,929,041 |
| முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணி | **630** | - | **425,908** | - | 451 | 180,452 |
| உள்ளடக்கப்பட்ட பெறுதிகள் - நாணயத் தெரிவுகள் | - | **16,449,303** | **159,213,437** | - | 11,478,950 | 119,808,712 |
| வட்டி வீத பரஸ்பர பரிமாற்றல்கள் | **47** | **427** | **1,310,486** | - | - | - |
| மொத்தம் | **1,580,237** | **19,207,822** | **445,994,496** | 5,670,258 | 16,183,282 | 480,918,205 |

ஆ) குறுக்கு நாணய பரஸ்பர பரிமாற்றங்கள், நாணயத் தெரிவுகள் முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணி ஒப்பந்தங்கள் மற்றும் வட்டிவீத பரஸ்பர பரிமாற்றல்கள் போன்றவற்றை உள்ளடக்கிய மேற்படி பெறுதிகள், பன்னாட்டு ஒதுக்குகளை பேணுவதற்கான நியதித் தேவை நோக்கங்களை வசதிப்படுத்துவதற்காக வங்கிகளால் பேணப்படும் பன்னாட்டு ஒதுக்குகளின் குறிப்பிட்ட இடர்நேர்வுகளை முகாமை செய்யும் நோக்கத்திற்காக பயன்படுத்தப்படுகின்றனவேயல்லாமல் இத்தகைய பெறுதிகளின் திறந்த நிலைமையில் வர்த்தகப்படுத்தல் மற்றும் வைத்திருத்தலின் மூலம் இலாபம் உழைப்பதற்கான ஊக வணிகம் சார்ந்த நோக்கத்திற்கானவையல்ல. பெறுதிகள் சந்தைப் பெறுமதியில் பதிவு செய்யப்படுவதுடன், சந்தைப் பெறுமதியானது நேர்க்கணியமாக காணப்படும் போது சொத்துக்களாகவும் எதிர்க்கணியமாகக் காணப்படும் போது பொறுப்புக்களாகவும் பதியப்படுகிறது.

இ) பெறுதிகள் அவற்றின் ஆரம்பத்தில் மாற்றல்களேதுமற்ற அல்லது சிறியளவிலான மாற்றல்களுடனான பரிசீலனையுடன் வாக்குறுதிகளின் பரஸ்பர பரிவர்த்தனைகளில் அடிக்கடி ஈடுபடுகின்றன. எனினும், இச்சாதனங்கள், இலாபம் உழைப்பதற்கான இடர்நேர்வுகள் மற்றும் பெறுதிகளின் ஊக வணிகம் சார்ந்த பட்டியல்களுக்கான உயர்ந்த தன்மையான ஒதுக்குகளுடன் உயர்ந்தளவில் தொடர்புபடுகின்றன. இந்த நிலைமையில், சொத்துக்களின் பெறுமதி அல்லது வீதங்கள் அல்லது பெறுதி ஒப்பந்தங்களை அடிப்படையாகக் கொண்ட சுட்டெண் என்பவற்றில் காணப்படும் ஒப்பீட்டு ரீதியான சிறிய நகர்வுகளிலும் கூட, வங்கியின் இலாபங்களின் மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடும். திறந்த நிலையை மூடுவதற்கு பரிவர்த்தனை நிலையம் ஒன்று இல்லாத சந்தர்ப்பங்களில் தடையற்ற சந்தையிலான பெறுதிகள் இடர்நேர்வுகளைக் கொண்டிருக்கலாம்.

(ஈ) அத்தகைய பெறுதிகளிலிருந்தான எதிர்பார்க்கப்பட்ட பயன்களை உறுதி செய்வதற்கு பன்னாட்டு ஒதுக்குகளிலுள்ள வங்கியின் சந்தை இடர்நேர்வுகளின் பொதுவான முகாமைத்துவத்தின் ஒரு பகுதியாக வங்கி வெளிப்படுத்துகை மிக நெருக்கமாக கண்காணிக்கப்பட்டது. மேலும் தகவல்கள் குறிப்பு 42இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

(உ) வங்கியின் பெறுதிகள் சொத்துப்பட்டியலின் ஒரு குறிப்பிடத்தக்க பகுதியானது பன்னாட்டு ஒதுக்குகளை உறுதி செய்கின்ற ஒரு உபாயமொன்றாக நாணய பரஸ்பர பரிமாற்றங்களைக் கொண்டுள்ளது. பரஸ்பர பரிமாற்றல்கள் என்பது வட்டி வீதம், வெளிநாட்டு நாணய வீதம் அல்லது பங்குரிமை மூலதனச் சுட்டெண் போன்றொரு குறித்துரைக்கப்பட்ட அடிப்படையான சுட்டெண்களின் அசைவுகளுடன் தொடர்பான விதத்தில் குறித்துரைக்கப்பட்ட பெயரளவு தொகைகளின் அடிப்படையில் குறிப்பிடப்பட்ட காலப்பகுதியில் கொடுப்பனவுகளினை பரிமாற்றிக் கொள்வதற்கான இருதரப்பினர்களுக்கிடையிலான ஒப்பந்த ரீதியிலான உடன்படிக்கைகளாகும். நாணய பரஸ்பர பரிமாற்றல்களில், வங்கியானது குறிப்பிட்ட தொகையை ஒரு நாணய வடிவில் வழங்கி குறிப்பிட்ட தொகையை இன்னொரு நாணய வடிவில் பெறும்.

(ஊ) வட்டி வீத பரஸ்பர பரிமாற்றமொன்றில், ஒவ்வொரு இணைத்தரப்பும் குறிப்பிட்ட நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட ஒன்றில் நிலையான அல்லது மிதக்கவிடுகின்ற வீதத்தில் வட்டி வீதத்தினை பரிவர்த்தனை செய்ய இணங்குகின்றது. வட்டியானது நிலையான அல்லது மிதக்கவிடப்படுகின்ற வீதத்தினால் பெயரளவு முதல் தொகையினை பெருக்குவதன் அடிப்படையில் பொருத்தமான நாட்களை கணக்கிடும் மாற்றல் முறையினால் வழங்கப்படும் ஒன்றுசேர்க்கப்படும் காரணியின் மீது ஒன்றுசேர்க்கப்படுகிறது.

வட்டி வீத பரஸ்பர பரிமாற்றலில் வங்கியானது இணைத்தரப்பினருக்கு நிலையான வீதத்தில் (பரஸ்பர பரிமாற்றல் வீதம்) கொடுப்பனவுகளைச் செய்கின்ற வேளையில், தொடர்பான வீதமொன்றிற்கு சுட்டெண்படுத்தப்பட்ட (3 மாத இலண்டன் வங்கிகளுக்கிடையிலான வழங்கல் வீதம் + இலாபம்) மிதக்கும் வீதத்தில் பெறுகிறது.

## 7. ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள்

| | 2014 ரூபா 000 | 2013 ரூபா 000 |
|---|---|---|
| சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் உடமைகள் | **1,199,895** | 2,032,177 |
| ப.நா.நிதிய அனுமதிப் பங்கு | **78,489,778** | 83,240,157 |
| ப.நா.நிதியத்துடனான வைப்புக்கள் | **126,356** | 128,430 |
| **மொத்த ப.நா.நி தொடர்பான சொத்துக்கள்** | **79,816,029** | 85,400,764 |

### (அ) சிறப்பு எடுப்பனவு உரிமை உடமைகள்

சிறப்பு எடுப்பனவு உரிமைகளைக் (சிஎஉ) கொண்டிருத்தலென்பது, ப.நா.நி. அங்கத்தவர்களுக்கு எவ்விதத் தடைகளுமின்றிப் பயன்படுத்தக்

கூடியதாயுள்ள நாணய வகைகளுக்கான நிலையான உரிமையாகும். அதாவது சிஎஉ வைத்திருப்பவர்களால் இந் நாணயங்களுக்காக சிஎஉ வைப் பரிமாறிக் கொள்ள முடியும். இவ்வங்கத்தவர்கள் இந் நாணயங்களுக்காக சிஎஉ வைத்திருப்பதற்கும் ஏற்றுக் கொள்வதற்கும் கடப்பாடுடையவர்களாதலாலும் அத்துடன் சிஎஉ முறைமையின் நெறிப்படுத்தல்களுக்கு ஏற்புடையதான நானாவிதப் பொறுப்புகளுக்கு மதிப்பளிப்பதற்கு கடப்பாடுடையவர்களாதலாலும் ஒதுக்குச் சொத்தாக சிஎஉ முக்கியத்துவம் வாய்ந்ததாயுள்ளது. தடையின்றிப் பயன்படுத்தக்கூடியதான நாணயத்தின் மீது சிஎஉ இற்குள்ள உரிமைக்கு இரண்டு விதத்தில் மதிப்பளிப்பதை ப.நா.நி. உறுதி செய்கின்றது. அதாவது, பலவீனமான வெளிநாட்டு நிலைமைகளிலுள்ள அங்கத்தவர்களிடமிருந்து சிஎஉ வைக் கொள்வனவு செய்வதற்குப் பலம் வாய்ந்த வெளிநாட்டு நிலைமையிலுள்ள அங்கத்தவர்களைப் பெயரிடுவதன் மூலமும் மற்றும் முகாமைக்குட்படுத்தப்பட்ட சந்தையினுள் அங்கத்தவர்களிடையே தாமாக முன்வந்து பரிமாற்றிக் கொள்வதன் மூலமுமாகும். மேற்குறிப்பிடப்பட்ட நாணயங்களில் நிதி நிலைமை பற்றிய கூற்றுக்கு ஏற்புடையதான தினத்தில் வங்கி வைத்திருந்த மொத்தத் தொகை மேலே காட்டப்பட்டுள்ளது.

**(ஆ) ப.நா. நிதிய அனுமதிப் பங்கு**

ப.நா. நிதியத்தின் அடிப்படை மூலம் அனுமதிப் பங்காகும் (மூலதன உதவுதொகை). ப.நா.நி. வளங்கள் அதன் அங்கத்துவ நாடுகளிலிருந்து கிடைக்கின்றன. பரந்தளவில் நாட்டின் ஒப்பீட்டு ரீதியான பொருளாதார நிலைமையைக் கருத்தில் கொண்டு ஒவ்வொரு நாட்டினதும் அனுமதிப் பங்கு தீர்மானிக்கப்படுகின்றது. ப.நா. நிதியத்தில் இணைகின்ற சந்தர்ப்பத்தில் ஒரு நாடு அதற்குரிய அனுமதிப் பங்குத் தொகையில் நூற்றுக்கு 25 வீதத்தினை பரவலாக ஏற்றுக்கொள்ளப்படுகின்ற வெளிநாட்டு நாணயத்தின் மூலம் அல்லது சிஎஉ யில் செலுத்துதல் வேண்டுமென்பதோடு, எஞ்சிய 75 வீதத்தினையும் தம் நாட்டுப் பணத்தின் மூலம் செலுத்துதல் வேண்டும். வங்கியொன்றின் ப.நா. நிதியத்துடனான அதன் கொடுக்கல்வாங்கல்கள், ப.நா.நிதியத்தின் உறுப்புரையின்படி, அரசாங்கத்தின் சார்பில் அதன் சொந்தக் கணக்கின் மீது இடம்பெறுவதனால் ப.நா.நிதியத்தின் அனுமதிப் பங்கு வங்கியின் சொத்துக்களைப் பிரதிபலிக்கிறது. ப.நா. நிதியத்தின் அனுமதிப் பங்கு தொடர்பில் செலுத்தப்பட வேண்டிய தொகை குறிப்பு 19இல் அனுமதிப் பங்கு பொறுப்பு என்ற தலையங்கத்தின் கீழ் காட்டப்படுகிறது. உறுப்பினரொருவரின் அனுமதிப் பங்கு பின்வருவன உட்பட ப.நா. நிதியத்துடனான நாட்டின் நிதியியல் மற்றும் நிறுவன ரீதியான தொடர்புகளை நிர்ணயிக்கின்றது.

(i) **சந்தாக்கள்**: ப.நா. நிதியத்திற்கான அங்கத்தவரின் பங்களிப்பானது அங்கத்தவரின் அனுமதிப் பங்குக்குச் சமமாகும். அதன் மூலம் அங்கத்தவர் ப.நா. நிதியத்திற்கு வழங்குவதற்கு கடப்பாடுடைய கூடியபட்ச நிதி வளங்களின் தொகை தீர்மானிக்கப்படுகிறது. அங்கத்தவர் பங்களிப்பை முழுமையாகச் செலுத்துதல் வேண்டும். 25 சதவீதத்தினை ப.நா.நிதியம் தீர்மானிக்கின்ற ஒதுக்குச் சொத்துக்களிலிருந்தும் (சிஎஉ அல்லது பயன்படுத்தக்கூடிய நாணயங்களில்) எஞ்சிய தொகையை அங்கத்தவரின் நாணயத்தின் மூலமும் செலுத்துதல் வேண்டும்.

(ii) **வாக்களிக்கும் உரிமை:** ப.நா.நி. தீர்மானங்களின் போது அங்கத்தவரின் வாக்களிக்கும் உரிமையானது அனுமதிப் பங்கின் மூலம் தீர்மானிக்கப்படுகிறது. ஒவ்வொரு ப.நா.நி. அங்கத்தவரும் அடிப்படை வாக்குகளுக்கும் அனுமதிப் பங்கின் ஒவ்வொரு சிஎஉ 100,000 க்கு ஒரு மேலதிக வாக்கு வீதமும் உரித்துடையவராவர். 2008ம் ஆண்டு சீர்திருத்தமானது மொத்த வாக்குகளின் 5.502 சதவீதத்தில் அடிப்படை வாக்குகளின் எண்ணிக்கையினை நிர்ணயித்துள்ளது.

(iii) **நிதியிடலை பெறுவதற்கான வசதி:** அங்கத்தவரால் பெற்றுக்கொள்ளக் கூடிய நிதி வசதிகளுக்கு (வசதியின் எல்லை) அங்கத்தவருடைய அனுமதிப் பங்கு அடிப்படையாய் அமைகிறது. துணைநில் ஒழுங்குவிதிகள் மற்றும் விஸ்தரிக்கப்பட்ட திட்டங்களுக்கேற்ப அங்கத்தவரால் நடைமுறை ரீதியில் வருடாந்த அனுமதிப் பங்கின் 200 சதவீதமும் திரண்ட ரீதியில் 600 சதவீதம் வரையிலும் கடன் பெறலாம். அசாதாரணமான சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்ளும் பொருட்டு இவ் வசதி இதை விட அதிகரிக்கலாம்.

(iv) **சிஎஉ ஒதுக்கல்:** அங்கத்தவருடைய அனுமதிப் பங்குகளின் விகிதாசாரப்படி இவர்களுக்கான சிஎஉ ஒதுக்குத் தொகை தீர்மானிக்கப்படுகிறது.

**(இ) ப.நா. நிதியத்துடனான வைப்புக்கள் - பாரிய அளவிற்குக் கடன்பட்ட வறிய நாடுகளுக்கான வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி நம்பிக்கை நிதிய வைப்பு**

பன்னாட்டு நாணய நிதியத்தில் நிர்வகிக்கப்படும் விசேட எதிர்பாரா நிகழ்வுக் கணக்கு (எ.நி. கணக்கு) இற்குப் பிந்திய கணக்கில் இலங்கையின் வைப்பிலிருந்து சிஎஉ 788,783 மில்லியனை மாற்றுவதன் மூலம் 2000 ஏப்பிறல் 21ஆம் திகதி இலங்கை அரசாங்கத்திற்கும் பன்னாட்டு நாணய நிதியத்திற்குமிடையில் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் கீழ் பாரிய அளவிற்குக் கடன்பட்ட வறிய நாடுகளுக்கான வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி நம்பிக்கைப் பொறுப்பு வைப்பு மேற்கொள்ளப்பட்டது. எ.நி. கணக்கை முடிவுறுத்துவதற்கு பன்னாட்டு நாணய நிதியத்தினால் தீர்மானிக்கப்பட்ட போது, இலங்கைக்கெதிராக எ.நி. கணக்கில் வைக்கப்பட்டிருந்த மீதியை மாற்றுவதன் மூலம் பன்னாட்டு நாணய நிதியத்தின் வழிகாட்டலின் கீழ் இந்தக் கணக்கு உருவாக்கப்பட்டது. எ.நி. கணக்கிற்குப் பிந்திய கணக்கிலுள்ள மீதிகளை முழுமையான நன்கொடையாக அல்லது பாரிய அளவிற்குக் கடன்பட்ட வறிய நாடுகளுக்கான வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி கடனுக்கு மானியம் வழங்கும் ஒரு வழியாக பாரிய அளவிற்குக் கடன்பட்ட வறிய நாடுகளுக்கான வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி நம்பிக்கைப் பொறுப்புக்கு வழங்குவதற்கு கவனத்தில் கொள்ளுமாறு அந்தக் கணக்கில் மீதிகளைக் கொண்டிருந்த நாடுகளை பன்னாட்டு நாணய நிதியம் கேட்டுக் கொண்டது. அதற்கிணங்க இலங்கை அரசாங்கம், எ.நி. கணக்கிற்குப் பிந்திய கணக்கிலுள்ள நிதிகளை முழுமையான நன்கொடையாகவன்றி 2018 வரையிலான வட்டியில்லா வைப்பாக பாரிய அளவிற்குக் கடன்பட்ட வறிய நாடுகளுக்கான வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி நம்பிக்கைப் பொறுப்புக் கணக்குக்கு மாற்றுவதற்கு இணங்கியது.

## 8. இலங்கை அரச பிணையங்கள்

குறுங்கால அரச பிணையங்களின் பட்டியலானது நாணய விதிச் சட்டத்தின் 90(2) பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கிக்கு வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின்படி பேணப்பட்டது.

## 9. அரசுக்கான தற்காலிக முற்பணங்கள்

இவை அங்கீகரிக்கப்பட்ட நிதியிடல் செலவினம் திரட்டப்பட்ட நிதியத்திலிருந்து பெறப்பட வேண்டியிருக்கும் என்ற நிபந்தனைக்குட்பட்டு நாணய விதிச் சட்டத்தின் 89ஆவது பிரிவின் கீழ் இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட முற்பணங்களைக் காட்டுகிறது.

## 10. வங்கிகளுக்கான கடன்கள்

இக்கடன்களானது நாணய விதிச் சட்டத்தின் பாகம் V பகுதி III 'ஏ' இற்கிணங்க, உற்பத்தித்திறன் தேவைகளுக்காக வழங்கப்பட்டுள்ளது.

| | 2014 ரூபா 000 | 2013 ரூபா 000 |
|---|---|---|
| நடுத்தர மற்றும் நீண்டகால கொடுகடன் திட்டம் | | |
| - தொடர்புபட்ட தரப்பினர்கள் | **35,243** | 37,377 |
| - ஏனையவர்கள் | **486** | 546 |
| சுசகன சுனாமி கடன் திட்டம் கட்டம் I மற்றும் II | | |
| - தொடர்புபட்ட தரப்பினர்கள் | **48,725** | 104,576 |
| - ஏனையவர்கள் | **5,545** | 17,794 |
| மாகாண அபிவிருத்திக் கொடுகடன் திட்டம் - தொடர்புபட்ட தரப்பினர்கள் | **598,273** | 1,242,405 |
| சௌபாக்யா கடன் திட்டம் | | |
| - தொடர்புபட்ட தரப்பினர்கள் | **117,056** | - |
| - ஏனையவர்கள் | **199,241** | - |
| கிழக்கில் பொருளாதார நடவடிக்கைகள் | | |
| - தொடர்புபட்ட தரப்பினர்கள் | **212,798** | - |
| - ஏனையவர்கள் | **199,478** | - |
| வடக்கு மற்றும் கிழக்கில் பாதிக்கப்பட்ட வீடுகளின் திருத்தல் | | |
| - ஏனையவை | **42,250** | - |
| வடக்கின் எழுச்சிக் கடன் திட்டம் (மீள்நிதியிடல் கட்டம் II) | | |
| - தொடர்புபட்ட தரப்பினர்கள் | **41,761** | - |
| - ஏனையவர்கள் | **15,818** | - |
| **கழிக்குக:** | | |
| ஐயத்திற்குரிய பெறத்தக்கவைகளுக்கான ஏற்பாடு | **(27,302)** | (27,302) |
| **தேறிய பெறத்தக்கவை** | **1,489,372** | 1,375,396 |

**ஐயத்திற்குரிய கடன்களுக்கான ஏற்பாட்டிலுள்ள அசைவு**

| | 2014 ரூபா 000 | 2013 ரூபா 000 |
|---|---|---|
| ஆண்டின் ஆரம்பத்தில் | **27,302** | 27,302 |
| ஐயக்கடன்களின் பதிவழிப்பு | - | - |
| **திசெம்பர் 31இல் உள்ளவாறு** | **27,302** | 27,302 |

## 11. நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான பங்குரிமை முதலீடுகள்

நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 105 "ஏ" ற்கு அமைய, இம்முதலீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் நாணயச் சபையின் கருத்துப்படி வங்கித்தொழில் மற்றும் நிதித் துறையில் மனிதவள மூலவளங்களையும் தொழில்நுட்ப அபிவிருத்தியையும் முன்னேற்றுவதற்கும் மேம்படுத்துவதற்கும் அல்லது இலங்கையில் தொழிற்படுகின்ற வர்த்தக வங்கிகளுக்கிடையே கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவினை வசதிப்படுத்துவதற்குமாக ஏதாவது கம்பனி நிறுவப்படுமிடத்து அக்கம்பனிகளிலிருந்து பங்குகளைக் கொள்வனவு செய்து வைத்திருப்பதற்கு இச்சட்டம் வலுவளிக்கிறது.

(i) முதலீட்டு நிலைமை

| கம்பனி | வியாபாரத்தின் தன்மை | கொண்டிருக்கும் உடமை % 2014 | 2013 |
|---|---|---|---|
| லங்கா கிளியர் (பிறைவேட்) லிமிடெட் | தன்னியக்கத் தீர்ப்பனவு | **19.66** | 19.66 |
| பிட்ச் றேட்டிங்ஸ் லங்கா லிமிடெட் | கொடுகடன் தரமிடல் | **10** | 10 |
| வரையறுக்கப்பட்ட லங்கா நிதிச் சேவைகள் பணியகம் | தன்னியக்க நிதிய மாற்றல் | **7.5** | 7.5 |
| வரையறுக்கப்பட்ட இலங்கை கொடுகடன் தகவல் பணியகம் | கொடுகடன் தகவல் வழங்கல் ஏற்பாடு | **19.3** | 19.3 |

(ii) முதலீடுகளின் கொண்டு செல்லும் பெறுமதி

| | 2014 ரூபா 000 | 2013 ரூபா 000 |
|---|---|---|
| வரையறுக்கப்பட்ட இலங்கை கொடுகடன் தகவல் பணியகம் | **5,845** | 5,845 |
| லங்கா கிளியர் (பிறைவேட்) லிமிடெட் | **29,500** | 29,500 |
| பிட்ச் றேட்டிங்ஸ் லங்கா லிமிடெட் | **3,500** | 3,500 |
| வரையறுக்கப்பட்ட லங்கா நிதிச் சேவைகள் பணியகம் | **2,250** | 2,250 |
| **மொத்த முதலீடுகள்** | **41,095** | 41,095 |

## 12. ஏனைய சொத்துக்கள்

| | 2014 ரூபா 000 | 2013 ரூபா 000 |
|---|---|---|
| உள்ளக நிதியங்களின் முதலீடு | **3,430,085** | 2,917,545 |
| தீர்ப்பனவுச் செலவில் அலுவலர் கடன்கள் | **3,648,436** | 3,442,454 |
| தீர்ப்பனவுச் செலவில் தொகுதிக் கடன்களில் முதலீடு | **9,328** | 8,237 |
| | **7,087,850** | 6,368,236 |
| நிதியியலல்லாத சொத்துக்கள் | | |
| அலுவலர் கடன் தொடர்பான பிற்போடப்பட்ட சொத்து | **1,020,064** | 958,297 |
| | **8,107,914** | 7,326,533 |

தொகுதிக் கடன்களில் செய்யப்பட்ட முதலீடுகள், மோர்கன்ரைல் கிறடிட் லிமிடெட்டினால் 1998 காலப்பகுதியில் பெறப்பட்ட மீள்நிதியிடல் கடன்களின் பகுதித் தீர்ப்பனவாக வங்கியினால் பெறப்பட்ட தொகுதிக் கடன்களை பிரதிபலிக்கிறது. இது 2011இல் பதிவழிக்கப்பட்டது. கம்பனி இப்பொழுது ஒடுக்கிவிடும் செயற்பாடுகள் நிலையில் இருக்கின்றது.

வங்கியினால் இலங்கை சேமிப்பு வங்கியின் ரூ.10,839,500 மொத்தப் பெறுமதி கொண்ட தொகுதிக் கடன்கள் பெறப்பட்டதுடன் அது தீர்ப்பனவுச் செலவில் குறிப்பிடப்படுகிறது. தொகுதிக் கடன்களானது 10 ஆண்டுகள் மீட்கப்படாதவையாகவும், கீழ்நிலைப்படுத்தப்பட்டவையாகவும் மற்றும் மீட்கப்படாதவையாகவும் இருப்பதுடன் ஆண்டொன்றிற்கு 5 சதவீத வட்டி அல்லது ஓராண்டு திறைசேரி உண்டியல் விளைவு வீதம் இதில் எது குறைவானதோ அத்தொகை வருடாந்தம் ஒன்றுசேர்ந்து வைக்கப்படும்.

## 13. தங்கம்

நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 67(1) மற்றும் பிரிவு 67(2) இன்படி, தங்கம் வங்கியின் பன்னாட்டு ஒதுக்குகளின் ஒரு பகுதியாக வைத்திருக்கப்படுகிறது. நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 67(2) இன்படி, நாணயச் சபை, மத்திய வங்கியால் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இலகுவாக தங்கமாக மாற்றக்கூடிய குறைந்ததொரு அணு ஒதுக்காவது தங்க வடிவிலோ அல்லது நாணய வடிவிலா வைத்திருப்பதற்கு முயல வேண்டும்.

## 14. இருப்புக்கள்

| | 2014 ரூபா 000 | 2013 ரூபா 000 |
|---|---|---|
| சுற்றோட்டத்திலுள்ள நாணயத் தாள்கள் | **1,675,897** | 2,035,994 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயக் குத்திகள் | **1,553,451** | 732,232 |
| வழங்குனரிடமிருந்தான இடையிலுள்ள நாணயக் குத்திகள் | **165,110** | 109,233 |
| வழங்குனரிடமிருந்தான இடையிலுள்ள நாணயத் தாள்கள் | **231,380** | 233,897 |
| | **3,625,838** | 3,111,356 |
| **கழிக்குக:** மெதுவாக அசையும் இருப்புக்களுக்கான ஏற்பாடு | **(45,000)** | (45,000) |
| | **3,580,838** | 3,066,356 |
| எழுதுகருவிகளும் சில்லறை பொருட்பட்டியல்களும் | **39,331** | 36,776 |
| மருந்துவ நிலைய இருப்புக்கள் | **311** | 149 |
| **கிரயச் செலவு மற்றும் பெறத்தக்க தேறிய பெறுமதி இவற்றில் குறைவான பெறுமதியில் மொத்த இருப்புக்கள்** | **3,620,480** | 3,103,281 |

## 15. ஆதனங்கள், பொறிகள் மற்றும் கருவிகள்

| | | | | | | ஏனையவை | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | காணியும் கட்டடமும் | இயந்திரங்கள், இயந்திரப் பொறிகள் | தளபாடங்களும் கருவிகளும் | உந்து ஊர்திகள் | கணனி | வாசிப்புப் பொருட்கள் | நடைபெற்று வரும் கட்டுமானம் | 2014 மொத்தம் | 2013 மொத்தம் |
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| சனவரி 1ஆம் நாள் உள்ளவாறு | 12,332,480 | 1,165,522 | 795,390 | 400,719 | 797,525 | 50,404 | 1,159,869 | 16,701,909 | 16,045,151 |
| மேலதிக சேர்ப்பனவுகள் | 875,173 | 72,432 | 28,565 | 99,125 | 49,059 | 1,488 | 945,783 | 2,074,884 | 692,196 |
| நீக்கப்பட்டவை/ மாற்றல்கள் | - | - | (15,926) | (45,369) | (52,870) | - | (1,236,605) | (1,354,029) | (35,438) |
| திசெம்பர் 31இல் உள்ளவாறு | 13,207,653 | 1,237,954 | 808,029 | 454,475 | 793,714 | 51,892 | 869,047 | 17,422,764 | 16,701,909 |

| தேய்மானம் | | | | | | ஏனையவை | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | காணியும் கட்டடமும் | இயந்திரங்கள், இயந்திரப் பொறிகள் | தளபாடங்களும் கருவிகளும் | உந்து ஊர்திகள் | கணனி | வாசிப்புப் பொருட்கள் | நடைபெற்று வரும் கட்டுமானம் | 2014 மொத்தம் | 2013 மொத்தம் |
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| சனவரி 1ஆம் நாள் உள்ளவாறு | 298,701 | 594,656 | 568,506 | 289,801 | 690,312 | 31,018 | - | 2,472,994 | 2,132,074 |
| ஆண்டிற்கான தேய்மானம் | 178,687 | 60,775 | 39,940 | 46,037 | 50,797 | 1,550 | - | 377,786 | 355,216 |
| மீள்வகைப்படுத்தல் | - | - | - | (1,452) | - | - | - | (1,452) | |
| அகற்றல் | - | - | (15,065) | (45,369) | (52,826) | - | - | (113,260) | (14,296) |
| திசெம்பர் 31இல் உள்ளவாறு | 477,388 | 655,431 | 593,381 | 289,017 | 688,283 | 32,568 | - | 2,736,068 | 2,472,994 |
| தேறிய ஏட்டுப் பெறுமதி | 12,730,265 | 582,523 | 214,648 | 165,458 | 105,431 | 19,324 | 869,047 | 14,686,696 | 14,228,915 |

காணிகள் கட்டடங்களுக்கான ஏட்டுப் பெறுமதி நியாயப் பெறுமதியில் குறிப்பிடப்படுகின்றது. மிக அண்மைக்கால சுயாதீனமான மதிப்பீடு திரு. பி.பீ. கலுகலகெதர (பட்டயம் பெற்ற மதிப்பீட்டாளர்) அவர்களால் 2012 மாச்சு 31இல் மேற்கொள்ளப்பட்டதோடு, அது 2012 ஏப்பிறல் 30இல் உள்ளவாறாக குறிப்பிடப்பட்டுள்ளது.

காணி, கட்டடங்களின் உள்ளடக்கம் பின்வருமாறு

| | ஏட்டுப் பெறுமதி 2014 ரூபா 000 | ஏட்டுப் பெறுமதி 2013 ரூபா 000 |
|---|---|---|
| சொந்த உரிமைக் காணி | 5,643,100 | 5,243,100 |
| சொந்த உரிமைக் காணிகளிலுள்ள கட்டடங்கள் | 7,002,418 | 6,705,474 |
| குத்தகைக் காணிகளிலுள்ள கட்டடங்கள் | 84,748 | 85,205 |
| | 12,730,266 | 12,033,779 |

மீளப் பெறுமதியிடப்பட்ட காணிகள் மற்றும் கட்டடங்களின் தேய்மானங்கள் கழிக்கப்பட்ட கிரயச் செலவு எடுத்துச் செல்லல் பெறுமதியாக நிதிக் கூற்றுக்களால் புகுத்தப்பட்டிருப்பின் இது ரூ.10,011,913 மில்லியனாகும் (2013 - ரூ.9,305.235 மில்லியன்).

மேலும், வங்கியானது 2014 திசெம்பர் 18இல் ரூ.122.2 மில்லியன் பெறுமதியான சொத்தொன்றை பிரேசிலில் கொள்வனவு செய்தது.

## 16. அருவச் சொத்துக்கள்

| | 2014 ரூபா 000 | 2013 ரூபா 000 |
|---|---|---|
| **கணனி மென்பொருட்கள்:** | | |
| **கிரயச் செலவு:** | | |
| சனவரி 1இல் உள்ளவாறு | 638,020 | 614,997 |
| மேலதிக சேர்ப்பனவு | 290,657 | 23,023 |
| அகற்றல்கள் | (1,655) | - |
| திசெம்பர் 31இல் உள்ளவாறு | 927,022 | 638,020 |
| **பெறுமானத் தேய்வு மற்றும் பெறுமதி இழப்பு** | | |
| சனவரி 1இல் உள்ளவாறு | 602,422 | 590,844 |
| ஆண்டுக்கான பெறுமானத் தேய்வுக் கட்டணம் | 20,136 | 11,578 |
| அகற்றல்கள் | (1,620) | - |
| **திசெம்பர் 31இல் உள்ளவாறு** | 620,938 | 602,422 |
| **தேறிய ஏட்டுப் பெறுமதி** | | |
| சனவரி 1இல் உள்ளவாறு | 35,598 | 24,153 |
| திசெம்பர் 31இல் உள்ளவாறு | 306,084 | 35,598 |

## 17. வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள்

| | 2014 ரூபா 000 | 2013 ரூபா 000 |
|---|---|---|
| வெளிநாட்டு வங்கிகளுக்குச் செலுத்த வேண்டியவை | **11,365,076** | 20,863,380 |
| ஏனைய வெளிநாட்டு நிதியியல் நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டியவை | **313,407** | 640,816 |
| | **11,678,483** | 21,504,196 |

## 18. ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம்

ஆசிய தீர்ப்பனவு ஒன்றியமானது, 1974ஆம் ஆண்டில் பங்குபற்றும் நாடுகளின் மத்திய வங்கிகளுக்கிடையே கொடுப்பனவுகளைத் தீர்ப்பனவு செய்கின்ற நிறுவனமாக, ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்தின் பொருளாதார மற்றும் சமூக அலுவல்கள் ஆணைக் குழுவின் அனுசரணையின் கீழ் நிறுவப்பட்டது. இலங்கை ஒரு பங்குபற்றும் நாடாகும். பங்களாதேஸ், ஈரான் இஸ்லாமிய குடியரசு, நேபாளம், பாக்கித்தான், இந்தியா, பூட்டான், மியன்மார் மற்றும் மாலைதீவு ஆகியன ஏனைய பங்குபற்றும் நாடுகளாகும். இது பங்குபற்றும் நாடுகளுக்கிடையே நடைமுறைப் பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல்களைப் பல்தரப்பு அடிப்படையில் தீர்த்து வைப்பதற்கான தீர்ப்பனவு வசதியொன்றாகும். ஒவ்வொரு மாத இறுதியிலுமுள்ள தேறிய நிலையை இரண்டு மாத கடன் கால கட்டத்தின் பின்னர் தீர்த்து வைத்தல் அல்லது பெற்றுக்கொள்ளல் நடைபெறுகிறது. தேறிய கடன்படுநர்களால் 0.03 சதவீதத்திற்கும் 0.07 சதவீதத்திற்குமிடையிலான வட்டி அமெரிக்க டொலரிலும், (2013இல் 0.05 சதவீதம் மற்றும் 0.17 சதவீதம்) 0.00 சதவீதத்திற்கும் 0.12 சதவீதத்திற்குமிடையிலான வட்டி யூரோவிலும் (2013இல் 0.00 சதவீதம் மற்றும் 0.00 சதவீதம்) இவ் வசதிக்காகச் செலுத்தப்படுவதுடன், இது தீர்த்து வைக்கும் நாட்களுக்கிடையே தேறிய கடன்படுநர்களின் நாளாந்த மொத்த மீதிகளுக்கு மாற்றப்படுகிறது. மேற்படி மீதிகளின் மூலம் குறிப்பிட்ட நிதி நிலைமை பற்றிய கூற்றுத் திகதியில் ஆசிய தீர்ப்பனவுக் ஒன்றியத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய தொகை காட்டப்படுகிறது.

## 19. பன்னாட்டு நாணய நிதியம்

| | 2014 ரூபா 000 | 2013 ரூபா 000 |
|---|---|---|
| வட்டியுடனான கடன்கள் - நடைமுறையல்லாதவை | **94,841,815** | 173,416,994 |
| வட்டியுடனான கடன்கள் - நடைமுறை | **68,678,555** | 95,379,347 |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் ஒதுக்கு | **75,083,657** | 79,627,890 |
| ப.நா. நிதியத்துக்குச் செலுத்த வேண்டிய ஏனைய தொகை | **47,039,094** | 48,517,078 |
| அனுமதிப் பங்குப் பொறுப்பு | **22,368,012** | 25,090,703 |
| | **213,169,318** | 248,615,018 |
| ப.நா.நி. தொடர்பான மொத்தப் பொறுப்புகள் | **308,011,133** | 422,032,012 |

(அ) 2014இல் இது ப.நா.நிதியத்திடமிருந்து பெற்ற துணைநில் ஒழுங்கை கொண்டிருந்தது.

(ஆ) **துணைநில் ஒழுங்குகளானது** கடன்பெறும் நாடுகளின் பேரண்டப் பொருளாதார முகாமைத்துவத்தின் மீதான குறிப்பிட்ட நிலைமைகள் தொடர்பாக, பன்னாட்டு நாணய நிதியத்தால் வழங்கப்படுகின்ற சென்மதி நிலுவைக்கு உதவும் நிதியியல் வசதியாகும். ப.நா. நிதியம் சென்மதி நிலுவைக்கு உதவியாக இலங்கைக்கு 2009 யூலையில் சிஎஉ 1.65 பில்லியனுக்கு (ஐ.அ.டொலர் 2.6 பில்லியன்) ஒப்புதலளித்தது. துணைநில் ஒழுங்குகள் 2012 யூலையில் இறுதித் தொகுதியை பெற்றுக்கொண்டதுடன், 2012இல் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டது. இக்கடன் வசதி 5 ஆண்டுகளுக்குள் மீளச் செலுத்தப்பட வேண்டியதுடன் மீள்கொள்வனவுகள் 2012 ஒத்தோபரில் தொடங்கப்பட்டன. துணைநில் ஒழுங்குவசதிகளின் வட்டி வீதம், சேவைக் கட்டணம் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட இலாபம் ஆகிய இரண்டு கூறுகளை உள்ளடக்கியதாகும். சேவைக் கட்டணம் சிஎஉ வட்டி வீதத்தினை அடிப்படையாகக் கொண்டு வாராந்தம் கணிக்கப்படுகிறது. நிர்ணயிக்கப்பட்ட இலாபம் ப.நா. நிதியத்துடனான அனுமதிப் பங்கில் 300 சதம் வரையிலான வெளிநின்ற கடன் தொகையில் ஆண்டிற்கு ஒரு சதவீதமாக இருக்கும். வெளிநின்ற கடன் தொகை அனுமதிப்பங்கான 300 சதவீதத்தினை விஞ்சும் பொழுது 300 சதவீதத்தினை விஞ்சிய வெளிநின்ற தொகை மீது ஆண்டிற்கு 2 சதவீதமான மேலதிகக் கட்டணம் விதிக்கப்படும். முதலாவது மீள்கொடுப்பனவான சிஎஉ 25.8 மில்லியன், 2012 ஒத்தோபர் 25ஆம் நாளன்று செலுத்தப்பட்டது. 2013ஆம் ஆண்டுக் காலப்பகுதியில், சிஎஉ 292.83 மில்லியனான மொத்த மீள்கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டதுடன், 2014 திசெம்பர் 31இல் உள்ளவாறான வெளிநின்ற மீதி சிஎஉ 861.25 மில்லியனாக விளங்கியது.

12 மாத காலப்பகுதிக்கு முன்பும் பின்பும் அதன் பின்னர் தீர்ப்பதற்கு எதிர்பார்க்கப்படும் வட்டியுடன் கூடிய கடன் தொகைகள் பின்வருமாறு:

| | செல்லுபடியாகும் வட்டி வீதம் % | முதிர்ச்சி | 2014 ரூபா 000 | 2013 ரூபா 000 |
|---|---|---|---|---|
| நடைமுறை | | | | |
| து.நி.ஒ | 1.05 | | **68,678,555** | 95,379,347 |
| | | | **68,678,555** | 95,379,347 |
| நடைமுறையற்ற | | | | |
| து.நி.ஒ | 1.05 | 2017 | **94,841,815** | 173,416,994 |
| | | | **94,841,815** | 173,416,994 |
| வட்டி உழைக்கும் மொத்தக் கடன்கள் | | | **163,520,370** | 268,796,341 |

(இ) **சிறப்பு எடுப்பனவு உரிமை (சிஎஉ)** என்பது கைவசமுள்ள ஒதுக்கச் சொத்துக்களுக்கு குறைநிரப்பாக நீண்டகால உலகத் தேவைப்பாடுகளை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு ப.நா. நிதியத்தால் நிறுவப்பட்டுள்ள ஒதுக்குச் சொத்தாகும். அங்கத்துவ நாடுகளுக்கு அவற்றின் ப.நா.நி. அனுமதிப் பங்கின் பிரகாரம் சிஎஉ ஒதுக்கப்படுகின்றது. ப.நா. நிதியத்தின் சிஎஉ திணைக்களத்தில் (ப.நா. நிதியத்தினுள் அமைந்துள்ள கணக்குப் பிரிவு) பங்குபற்றுகின்ற நாடுகளுக்கு மாத்திரம் சிஎஉ ஒதுக்கலாம். ப.நா. நிதியத்திற்கு உரித்தாயுள்ள தங்கம், வெளிநாட்டுச் செலாவணி மற்றும் ஒதுக்குகளின் நிலைமைகளுக்குக் குறைநிரப்பாக ப.நா. நிதியத்தால் சிஎஉ உருவாக்கப்பட்டது. வங்கியினால் இலங்கை அரச சார்பாக கைச்சாத்திடப்பட்டுள்ள உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு சில நிபந்தனைகளின் பிரகாரம் ப.நா. நிதியத்தால் அங்கத்தவர்களுக்கு அவர்களுடைய அனுமதிப் பங்குத் தொகைக்கேற்ப சிஎஉ ஒதுக்கப்படலாம். ப.நா. நிதியத்தால் சிஎஉ ஒதுக்கப்படுவதன் மூலம் ஒவ்வொரு அங்கத்தவருக்கும் கிரயச் செலவற்ற சொத்தொன்று உருவாவதுடன், அதற்காக வட்டி உழைக்கப்படுவதோ அல்லது செலுத்தப்படுவதோ கிடையாது. சிஎஉவை இரத்துச் செய்வதற்குக் கூட உடன்படிக்கையின் நிபந்தனைகள் மூலம் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள போதிலும் இற்றைவரை இவ்வேற்பாடுகள் செயற்படுத்தப்படவில்லை. சிஎஉ ஒதுக்குதல்கள் அதிகரிக்கப்படுவதன் மூலம் 7 ஆவது குறிப்பில் காட்டப்பட்டுள்ளவாறு சிஎஉ வைத்திருத்தல் அதிகரிக்கிறது. அதன் தேறிய ஒதுக்குதலுக்குச் சமமான தொகையையும் அது சிஎஉ திணைக்களத்தின் தொழிற்பாடுகளில் பங்குபற்றியதன் காரணமாக ப.நா. நிதியம் சிஎஉ திணைக்களத்தை முடிவுறுத்துகின்ற அல்லது ஒழிக்கின்ற போது செலுத்த வேண்டியதாயுள்ள ஏனைய ஏதேனும் தொகைகள் இருப்பின் அவற்றையும் ப.நா. நிதியத்திற்குச் செலுத்துவதற்கு அங்கத்தவர்கள் கடப்பாடுடையவர்களாயிருப்பர்.

(ஈ) ப.நா. நிதியத்திற்குச் செலுத்தப்படத்தக்க ஏனைய தொகைகள்

தொழிற்பாட்டு மற்றும் நிர்வாகக் கொடுக்கல்வாங்கல்கள் சார்பாக வங்கியானது ப.நா. நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய தொகைகள் இதன் மூலம் காட்டப்படுகிறது.

(உ) அனுமதிப் பங்குப் பொறுப்புக்கள்

7ஆம் இலக்கக் குறிப்பில் விளக்கப்பட்டுள்ளவாறான ப.நா. நிதிய அனுமதிப் பங்கிற்காகச் செலுத்தப்பட்ட தொகை அனுமதிப் பங்குப் பொறுப்புக்கள் தலைப்பின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

20. ஏனையவை

| | 2014 ரூபா 000 | 2013 ரூபா 000 |
|---|---|---|
| இஸ்ரோ உடன்படிக்கையின் கீழ் சீன அபிவிருத்தி வங்கிக்குச் செலுத்த வேண்டிய தொகை (அ) | **8,017,222** | 29,052,050 |
| ஐரோப்பிய முதலீட்டு வங்கி/ டிஎவ்சிசி உலகக் கடன் II (ஆ) | - | 36,264 |
| மொரககந்த அபிவிருத்திச் செயற்றிட்டக் கடன் (இ) | **14,046,678** | 15,657,844 |
| திறைசேரி துணைச் செயலாளர் (தி.து.செ.) சீன அபிவிருத்தி வங்கி (ஐ.அ.டொ.) - வறுமைக் குறைப்பு மற்றும் வளர்ச்சி III (ஈ) | **34,106,960** | - |
| தி.து.செ. சிறப்பு டொலர் க/கு சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி | **1,222,595** | - |
| திறைசேரி துணைச் செயலாளர் (தி.து.செ.) சீன அபிவிருத்தி வங்கி (ஐ.அ.டொ.) - வறுமைக் குறைப்பு மற்றும் வளர்ச்சி III - கட்டம் II (உ) | **13,104,860** | - |
| ஏனைய வெளிநாட்டுப் பொறுப்புக்கள் | **1,647,843** | 2,474,961 |
| | **72,146,159** | 47,221,119 |

(அ) இஸ்ரோ உடன்படிக்கையின் கீழ் சீன அபிவிருத்தி வங்கிக் கூட்டுத்தாபனத்திற்கு வரவேண்டிய தொகை

சீன அபிவிருத்தி வங்கிக் கூட்டுத்தாபனத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்குமிடையில் வசதி உடன்படிக்கையொன்று ஐ.அ.டொலர் 500 மில்லியன்களாக 2011 மாச்சு 31ஆம் நாளன்று கையெழுத்தானது. இவ்வுடன்படிக்கையின் நிதியானது முதன்மை வீதிகளின் அபிவிருத்திக்கும் புனரமைப்பிற்கும் பயன்படுத்தப்படுகிறது. (வசதி உடன்படிக்கையின்படி இஸ்ரோ முகவராக, இக்கடன்களை வைப்புச் செய்யும் ஒரே நோக்கத்திற்கான இலங்கை மத்திய வங்கியில் இஸ்ரோ கணக்கொன்று திறக்கப்பட்டது.) இக்கணக்கானது இவ்வுடன்படிக்கையினைத் தொடரும் விதத்தில் கடன் வழங்குநராலும் (சீன அபிவிருத்தி வங்கி) கடன்பெறுநராலும் (இலங்கை அரசாங்கம்) கூட்டாகத் தொழிற்படுத்தப்படும்.

இஸ்ரோ நிதியத்தின் முதற்றொகுதியான ஐ.அ.டொலர் 326 மில்லியன் 2011 யூன் 29ஆம் திகதி பெறப்பட்டதுடன் இரண்டாவது தொகுதியான ஐ.அ.டொலர் 174 மி ல்லியன் 2011 ஒத்தோபர் 28ஆம் நாள் பெறப்பட்டது.

இஸ்ரோ கணக்கிற்கு அனுப்பிய ஒப்புதல் அறிவித்தலொன்றின் மூலம் பகிர்ந்தளிப்புக் கோரிக்கையில் குறித்துரைக்கப்பட்ட கணக்கிற்கு இஸ்ரோ நிதியத்தினை வழங்குமாறு கடன் வழங்குநர் இஸ்ரோ முகவருக்கு அறிவுறுத்தினார்.

சீன அபிவிருத்தி வங்கியிடமிருந்து ஒப்புதல் அறிவித்தல் கிடைக்கப்பெற்ற பின்னர் ஐ.அ.டொலர் 1.768 மில்லியன் கொண்ட தொகை முதலாவது பகிர்ந்தளிப்பாக 2011 ஒத்தோபர் 18ஆம் நாள் மேற்கொள்ளப்பட்டது.

சீன அபிவிருத்தி வங்கியின் வேண்டுகோளுக்கிணங்க, 2011 மற்றும் 2012 காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 157.5 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டதுடன், இஸ்ரோ கணக்கின் நிலுவையானது ஐ.அ.டொலர் 340.7 மில்லியனாக 2012இன் முடிவில் காணப்பட்டது.

2013 மற்றும் 2014 காலப்பகுதியில் முறையே ஐ.அ.டொலர் 118.52 மில்லியன் மற்றும் 161.013 மில்லியனைப் பகிர்ந்தளிக்கப்பட்டது. 2014 திசெம்பர் 31இல் நிலுவையாக ஐ.அ.டொலர் 61.177 மில்லியன் காணப்படுகிறது.

(ஆ) ஐரோப்பிய முதலீட்டு வங்கி/ டிஎவ்சிசி குளோபல் கடன் II

யூரோ 50 மில்லியன் கடன் உடன்படிக்கையின்படி, நுண்பாக நிதியிடல் நோக்கங்களுக்காக ஐரோப்பிய முதலீட்டு வங்கியிலிருந்து 50 மில்லியன் கடன் பெறப்பட்டது. எனினும், இக்கடனின் பிற்பகுதி ஐ.அ.டொலரில் பெறப்பட்டது. திறைசேரி தொழிற்பாட்டுத் திணைக்களத்தின் கோரிக்கையின்படி, ஐ.மு.வ. / டிஎவ்சிசி குளோபல் கடன் - 2இன் கீழ் டிஎவ்சிசி வங்கிக்கு நிதியினை வழிப்படுத்துவதற்காக இலங்கை மத்திய வங்கியின் பொதுப்பேரேட்டுக் கணக்கு இலக்கம் 45014இல் சிறப்பு டொலர் கணக்கினை மத்திய வங்கி திறந்தது. 2012 பெப்புருவரி 3ஆம் நாளன்று ஐரோப்பிய முதலீட்டு வங்கியிலிருந்து ஐ.அ.டொலர் 12.7 மில்லியன் பெறப்பட்டது. இரண்டாவது தவணைப் பணமாக 2012 யூன் 01ஆம் நாளன்று ஐ.அ.டொலர் 19.2 மில்லியன் பெறப்பட்டது. முதலாவது பகிர்ந்தளிப்பான ஐ.அ.டொலர் 4.002 மில்லியன் 2012 மாச்சு 01ஆம் நாள் மேற்கொள்ளப்பட்டது. மேலும், ஐ.அ.டொலர் 6.573 மில்லியன் மற்றும் 2.142 மில்லியன் கொண்ட பகிர்ந்தளிப்புக்கள் முறையே 2012 மே 3ஆம் நாளன்றும் 2012 ஓகத்து 14ஆம் நாளன்றும் மேற்கொள்ளப்பட்டது. திறைசேரி தொழிற்பாட்டுத் திணைக்களத்தின் கோரிக்கையின்படி ஐ.அ.டொலர் 12.343 மற்றும் 6.171 மில்லியன் கொண்ட தொகைகள் இலங்கை மத்திய வங்கியினால் பகிர்ந்தளிக்கப்பட்டன. ஐ.அ.டொலர் 0.473 மில்லியன் கொண்ட இன்னொரு கடன் தொகை 2012 நவெம்பர் 19ஆம் நாள் பகிர்ந்தளிக்கப்பட்டது. 2013 திசெம்பர் 31ஆம் நாளன்று உள்ளவாறான எஞ்சிய மீதி ஐ.அ.டொலர் 0.277 மில்லியன், 2014 ஒத்தோபர் 16ஆம் நாளன்று திறைசேரி துணைச் செயலாளர் கணக்கு இலக்கம் 50516 இற்கு மாற்றல் செய்யப்பட்டது.

(இ) மொரககந்த அபிவிருத்திச் செயற்றிட்டக் கடன்கள்

இலங்கை உடன்படிக்கை சீன அபிவிருத்தி வங்கிக்கும் (கடன் வழங்குநர்) நிதி திட்டமிடல் அமைச்சிற்கும் (கடன் பெறுநர்) இலங்கை மத்திய வங்கிக்குமிடையில் (வங்கியாளர்) கையெழுத்தானது. இக்கடன் உடன்படிக்கையின் நோக்கம், மொறககந்தையிலுள்ள நீர்மின் வலு நிலையத்தின் கட்டுமானத்திற்கு நிதியிடுவதற்கு வசதியளிப்பதேயாகும். இலங்கை மத்திய வங்கி இவ்வுடன்படிக்கையின் வங்கியாளராக வங்கியின் பொதுப் பேரேட்டில் "நிதி திட்டமிடல் அமைச்சு - சீன அபிவிருத்தி வங்கி மொரககந்த அபிவிருத்தி செயற்றிட்டக் கணக்கொன்றினை" வெளிவாரி மூலவளங்கள் திணைக்களத்தின் கோரிக்கையின்படி திறப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தது. நீர்ப்பாசன மற்றும் நீர் மூலவள முகாமைத்துவ அமைச்சினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கிணங்க, அத்தகைய பணம் வரவு வைக்கப்பட்டுள்ள கணக்குகளின் தொழிற்படுத்துநராக மத்திய வங்கி விளங்கியது. 2012 யூன் 29ஆம் நாளன்று ஐ.அ.டொலர் 214.2 மில்லியன் கொண்ட தொகை சீன அபிவிருத்தி வங்கியிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் ஐ.அ.டொலர் 64.337 மில்லியன் கொண்ட முதலாவது பகிர்ந்தளிப்பு 2013 ஓகத்து 24ஆம் நாளன்று மேற்கொள்ளப்பட்டது. 2014ஆம் ஆண்டுப் பகுதியில் ஐ.அ.டொலர் 30.1 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டது.

2014ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 12.564 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டதுடன் 2014 திசெம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறு எஞ்சிய மீதி ஐ.அ.டொலர் 107.186 மில்லியனாகக் காணப்பட்டது.

(ஈ) முன்னுரிமை வீதிச் செயற்றிட்டம் III இன் கீழ் சீன அபிவிருத்தி வங்கியிலிருந்து வரவேண்டிய தொகை

இவ்வசதி உடன்படிக்கையானது சீன அபிவிருத்தி வங்கிக்கும் (கடன் வழங்குநராக) இலங்கை அரசாங்கத்திற்குமிடையில் (கடன்பாட்டாளராக) 2014 மாச்சு 11ஆம் நாளன்று ஐ.அ.டொலர் 300 மில்லியனுக்காக கையெழுத்தானது. இக்கடனின் நோக்கம் யாதெனில் முன்னுரிமை வீதிச் செயற்றிட்டம் III - கட்டம் I இன் மேம்பாட்டிற்கும் புனரமைப்பு வேலைகளுக்கும் ஏற்படும் செலவிற்கு நிதியிடுவதேயாகும். வசதி உடன்படிக்கையின்படி, வங்கியானது இலங்கை அரசாங்கத்திற்கான வங்கியாளராக நியமிக்கப்பட்டிருக்கிறது. இதன்படி, கடன் தொகையினை வைப்புச் செய்வதற்கும் அவ்வாறு பெறப்பட்ட பணத்தினை வீதி

அபிவிருத்திக்கு பகிர்ந்தளிப்பதற்குமான ஒரே நோக்கத்திற்காக அதன் பேரேட்டில் கணக்கொன்று திறக்கப்பட்டது. மேற்குறிப்பிட்ட கணக்கிற்கு 2014 மாச்சு 28ஆம் நாளன்று ஐ.அ.டொலர் 300 மில்லியன் பெறப்பட்டது. 2014இல் ஆண்டுப் பகுதியில் ஐ.அ.டொலர் 39.738 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டதுடன் 2014 திசெம்பர் 31இல் எஞ்சிய மீதி ஐ.அ.டொலர் 260.262 மில்லியன் காணப்பட்டது.

**(உ) முன்னுரிமை வீதிச் செயற்றிட்டம் III கட்டம் II**

இவ்வுடன்படிக்கையின் கட்டம் II 2014 நவெம்பர் 24ஆம் நாளன்று ஐ.அ.டொலர் 100 மில்லியன் பெறப்பட்டது.

**(ஊ) இலங்கை சிறிய நடுத்தர தொழில்முயற்சிகளும் பசுமை வலு உலகளாவிய கடன் திட்டமும்**

இது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஐரோப்பிய முதலீட்டு வங்கிக்குமிடையில் 2013 நவெம்பர் 13ஆம் நாள் இடம்பெற்ற நிதியியல் ஒப்பந்தமாகும். வசதி உடன்படிக்கை என்ற ரீதியில் இலங்கை அரசாங்கத்தின் வங்கியாளராக வங்கி நியமிக்கப்பட்டிருக்கிறது. இதன்படி, கடன் தொகையினை வைப்புச் செய்வதற்கும் அவ்வாறு பெறப்பட்ட பணத்தினை செயற்றிட்டத்திற்குப் பகிர்ந்தளிப்பதற்குமான ஒரே நோக்கத்திற்காக அதன் பேரேட்டில் கணக்கொன்று திறக்கப்பட்டது. 2014 ஒத்தோபர் 6ஆம் திகதியன்று மேற்குறிப்பிட்ட கணக்கிற்கு ஐ.அ.டொலர் 21.125 மில்லியன் பெறப்பட்டது. 2014ஆம் ஆண்டுப் பகுதியில் ஐ.அ.டொலர் 11.795 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டதுடன் 2014 திசெம்பர் 31ஆம் திகதி எஞ்சியுள்ள நிலுவை ஐ.அ.டொலர் 9.329 மில்லியன் காணப்பட்டது.

## 21. வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள்

இவை நாணய விதிச் சட்டத்தின் 93ஆம் பிரிவின் கீழ் நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டினை பூர்த்தி செய்யும் நோக்கத்திற்காக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் பேணப்படும் வைப்புக்களாக இருப்பதுடன் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், அரச பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்கள், ஊழியர் சேம நிதியம் ஆகிய அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமைகளின் பங்கேற்பாளர்களால் நாணய விதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வங்கிகளினால் தொழிற்படுத்தப்படும் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் கீழான கொடுப்பனவுகளை கௌரவிப்பதற்காக பேணப்படும் வைப்புக்களாகவும் காணப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ், அரசாங்கத்தினால் முழுமையாக பிணையிடப்பட்ட வட்டியற்ற ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி, தீர்ப்பனவு முறைமையின் சுமூகமான தொழிற்பாட்டிற்கு வசதியளிப்பதற்காக ஒரு நாளுக்குள்ளேயான கொடுப்பனவுக் கடப்பாடுகளை பூர்த்தி செய்வதற்காக பங்கேற்பாளர்களுக்குக் கிடைக்கச் செய்யப்படுகிறது. இவ்வைப்புக்கள் தொடர்பான தரப்பினர் மற்றும் (அதாவது அரசிற்குச் சொந்தமான வங்கிகள் மற்றும் நிறுவனங்கள்) ஏனையோரின் வைப்புக்கள் போன்ற கணக்கீட்டு வெளிப்படுத்துகைத் தேவைப்பாட்டு நோக்கங்களுக்காக வகைப்படுத்தப்பட்டு தொடர்பான நியதி ஒதுக்கு வீதங்களில் பேணப்பட்டு வருகின்றதேயன்றி அவ்வரச நிறுவனங்களுடனான வங்கியின் குறித்துரைக்கப்பட்ட வியாபாரத் தொடர்புகளுக்காகவல்ல.

| | 2014 ரூபா 000 | 2013 ரூபா 000 |
|---|---|---|
| **வங்கிகளின் வைப்புக்கள்** | | |
| - தொடர்புடைய தரப்பினர் | **84,976,155** | 77,899,164 |
| - ஏனையோர் | **76,028,176** | 70,906,573 |
| | **161,004,331** | 148,805,737 |
| **நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள்** | | |
| - தொடர்புடைய தரப்பினர் | **167** | 202 |
| - ஏனையோர் | **4,825** | 3,954 |
| | **4,992** | 4,156 |
| **வங்கிகள் மற்றும் ஏனைய நிதியியல் நிறுவனங்களின் மொத்த வைப்புக்கள்** | **161,009,323** | 148,809,893 |

## 22. அரச மற்றும் அரச நிறுவனங்களின் வைப்புக்கள்

| | 2014 ரூபா 000 | 2013 ரூபா 000 |
|---|---|---|
| அரச வைப்புக்கள் | **166,583** | 27,766 |
| அரச முகவராண்மைகளும் நிதியங்களும் | **145,367** | 388,464 |
| | **311,950** | 416,230 |

வங்கி, அரச மற்றும் அல்லது அரச முகவர்களின் அல்லது நிறுவனங்களின் வைப்புக்களுக்கான அலுவல்சார் வைப்பாளராக இருப்பதனால் நாணய விதிச் சட்டத்தின் 106 (1)ஆம் பிரிவின் நியதிகளில் இவ்வைப்புக்கள் பேணப்படுகின்றன.

## 23. மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள்

| | 2014 ரூபா 000 | 2013 ரூபா 000 |
|---|---|---|
| அரச பிணையங்கள் | **321,220,000** | 84,601,000 |
| துணைநில் வைப்பு வசதிகள் (குறிப்பு 3.3.8) | **7,032,000** | - |
| | **328,252,000** | 84,601,000 |

நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்தலின் ஒரு பகுதியாக, நாணய விதிச் சட்டத்தின் பிரிவுகள் 90 மற்றும் 91 இன் கீழ் மீள்கொள்வனவு உடன்படிக்கைகளானவை, பணச்சந்தையின் திரவத்தன்மையை ஒழுங்குபடுத்தும் பொருட்டு திறந்த சந்தை நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்படுகின்றன. இம் மீள்கொள்வனவு உடன்படிக்கைகளானவை காலத்திற்குக் காலம் வங்கியால் தீர்மானிக்கப்படுகின்ற திரவத்தன்மை முகாமைத்துவக் கொள்கைகளுக்கு அமைவாக ஓரிரவு அல்லது தவணை முறையில் அரச பிணையங்களில் ஈடுபடுத்தப்படுகின்றன.

## 24. ஊழியர் நன்மைத் திட்டங்களிலுள்ள நிலுவைகள்

வங்கியானது பொதுவான அலுவல்களின் ஒரு பகுதியாக அதன் ஊழியர் நன்மைத் திட்டங்களின் வங்கியாளர் என்ற ரீதியில் செயற்படுகின்றது. வங்கியின் தனியாக நிருவகிக்கப்படுகின்ற ஊழியர் நன்மைத் திட்டங்களில் வரவு வைக்கப்பட்டுள்ள தொகைகள் பின்வருமாறு:

| | 2014 ரூபா 000 | 2013 ரூபா 000 |
|---|---|---|
| இ.ம.வ சேம நிதியம் | **7,431** | 429,932 |
| இ.ம.வ ஓய்வூதியத் திட்டம் | **635,387** | 600,119 |
| விதவைகள்/விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் | **155,559** | 1,440 |
| பணிக் கொடைகளின் கீழ் செலுத்தப்பட வேண்டியவை | **117,463** | 90,398 |
| மருத்துவ நலத் திட்டங்களின் கீழ் செலுத்தப்பட வேண்டியவை | **1,293,943** | 1,297,198 |
| மொத்தம் | **2,209,782** | 2,419,087 |

## 25. ஏனைய கொடுபடத்தக்கவை

| | 2014 ரூபா 000 | 2013 ரூபா 000 |
|---|---|---|
| கொடுபடத்தக்க உள்நாட்டு வட்டி | **2,120,819** | 161,223 |
| ஏற்பாடுகளும் விதிப்புக்களும் | **805,295** | 610,465 |
| பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் வைப்புக்கள் | **2,688,215** | 1,880,078 |
| பெறப்பட்ட கைவிடப்பட்ட சொத்துக்களுக்கெதிரான பொறுப்பு | **2,655,909** | 2,335,466 |
| ஏனைய கொடுபடத்தக்கவை | **669,056** | 672,485 |
| மொத்தம் | **8,939,293** | 5,659,717 |

கொடுபடத்தக்கவை 2009ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் கைவிடப்பட்ட சொத்துக்களை அடையாளம் காணல், அறிக்கையிடல், மாற்றல் செய்தல் மற்றும் பேணுதல் தொடர்பான சட்டத்தின் கீழ் உரிமம் பெற்ற வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட கைவிடப்பட்ட சொத்துக்கள் தொடர்பானவையாக இருந்தன. கைவிடப்பட்ட சொத்துக்கள் மீது ஏதேனும் மேலதிகக் கோரல்கள் காணப்படும் சந்தர்ப்பத்தில் வங்கிகள் அவ்வாறு சேகரிக்கப்பட்ட வைப்புக்களை வட்டியுடன் செலுத்துவதற்குப் பொறுப்புடையனவாகும். எனவே, சேகரிக்கப்பட்ட மொத்த வைப்புக்கள் நிறையேற்றப்பட்ட சராசரி திறைசேரி உண்டியல் வீதங்களில் கணிக்கப்பட்ட வட்டி வீதங்களுடன் சேர்த்து வங்கிகளின் பொறுப்பாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

## 26. சுற்றோட்டத்திலுள்ள நாணயம்

இலங்கையின் நாணயத்தை வெளியிடும் தனி அதிகாரம் வாய்ந்த நிறுவனமென்ற ரீதியில் மத்திய வங்கியானது தொடர்ச்சியாக சட்டத்தின் பிரகாரம் செல்லுபடியாகும் நாணயத்தை வெளியிடுகின்றது. வங்கியினால் வெளியிடப்பட்டு நிதி நிலைமைகள் பற்றிய கூற்றுத் திகதியன்று சுற்றோட்டத்தில் உள்ளவாறான நாணயத் தரவுகள் பின்வருமாறு:

| | 2014<br>ரூபா 000 | 2013<br>ரூபா 000 |
|---|---|---|
| **இனக் குத்திகள்** | | |
| சதம் 1 | **3,631** | 3,631 |
| சதம் 2 | **5,703** | 5,702 |
| சதம் 5 | **23,247** | 23,245 |
| சதம் 10 | **39,208** | 39,211 |
| சதம் 25 | **120,558** | 120,566 |
| சதம் 50 | **185,564** | 185,798 |
| ரூபா 1 | **734,733** | 714,252 |
| ரூபா 2 | **1,048,861** | 1,013,765 |
| ரூபா 5 | **3,130,691** | 3,035,467 |
| ரூபா 10 | **2,252,507** | 1,672,674 |
| ஞாபகார்த்த நாணயக் குத்திகள் | **577,523** | 574,663 |
| | **8,122,226** | 7,388,974 |

| | 2014<br>ரூபா 000 | 2013<br>ரூபா 000 |
|---|---|---|
| **தாள்கள்** | | |
| ரூபா 1 | **4,981** | 4,981 |
| ரூபா 2 | **26,697** | 26,698 |
| ரூபா 5 | **37,194** | 37,198 |
| ரூபா 10 | **1,519,817** | 1,638,800 |
| ரூபா 20 | **4,121,289** | 3,725,554 |
| ரூபா 50 | **4,273,372** | 4,041,101 |
| ரூபா 100 | **17,029,514** | 15,332,034 |
| ரூபா 200 | **132,526** | 138,465 |
| ரூபா 500 | **28,205,681** | 23,668,137 |
| ரூபா 1000 | **127,258,019** | 105,385,676 |
| ரூபா 2000 | **67,438,978** | 87,798,698 |
| ரூபா 5000 | **158,725,070** | 90,584,665 |
| | **408,773,136** | 332,382,007 |
| சுற்றோட்டத்திலுள்ள மொத்த நாணயங்கள் | **416,895,362** | 339,770,981 |

## 27. பிற்போடப்பட்ட கொடைகள்

| | 2014<br>ரூபா 000 | 2013<br>ரூபா 000 |
|---|---|---|
| சனவரி 1 இல் உள்ளவாறு | **1,449** | 2,389 |
| இவ்வாண்டின் கடன் தீர்ப்பனவு | **(934)** | (940) |
| **திசெம்பர் 31இல் உள்ளவாறு** | **515** | 1,449 |

பிற்போடப்பட்ட வருமானம் அத்தகைய சொத்துக்களின் தேய்மானத்துடன் பொருந்தத்தக்க விதத்தில் இக் காலப்பகுதியில் தீர்ப்பனவு செய்யப்பட்டன. இது, எந்தவித மாற்றுமில்லாது வங்கியால் பெற்றுக்கொள்ளப்பட்ட சொத்துக்களை உள்ளடக்குகின்றது. சொத்துக்களின் சந்தைப் பெறுமதி பிற்போடப்பட்ட கொடைக் கணக்கொன்றில் செலவு வைக்கப்படுவதுடன், தொடர்பான சொத்துக்களின் தேய்மானக் கொள்கைகளின்படி அச்சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் முழுவதற்குமுரிய ஏனைய வருமானமாகக் கொள்ளப்படுகிறது.

## 28 பல்வகைப் பொறுப்புக்களும் அட்டுறுக்களும்

பல்வகைப் பொறுப்புக்களும் அட்டுறுக்களும் கொடுப்பனவு செய்யத்தக்க கணக்குகளிலுள்ள கொடுபடத்தக்க மீதிகள், ஒப்பந்த ரீதியான பிடித்துவைத்தல்கள், மீட்கத்தக்க விலைக்கோரல் வைப்புக்களாக எடுக்கப்பட்ட வைப்புக்கள் மற்றும் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் கொடுப்பனவு செய்யப்படத்தக்க தண்டங்கள் என்பனவற்றை உள்ளடக்குகிறது.

## 29. பங்குரிமை மூலதனம்

### (அ) பங்குரிமை மூலதன விடயத்தின் தன்மை

**(i) மூலதன நிதியம்**

**பங்களிப்பு மூலதனம்** - நாணய விதிச் சட்டத்தின் 6ஆவது வாசகத்தின் பிரகாரம் மூலதனக் கணக்கு வங்கியின் மூலதனத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறது. 2014ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் (திருத்தப்பட்டது) 6ஆம் பிரிவின்படி, வங்கியின் மூலதனம் ரூ.50 பில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டது. இதன்படி, வங்கி, 2014 செத்தெம்பரில் நிதி அமைச்சரின் சம்மதத்துடன் அதன் ஒதுக்கங்களை மூலதனமாக்கியதன் மூலம் மூலதனத்தினை ரூ.50 பில்லியனுக்கு அதிகரித்தது.

(ii) **மூலதனமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ஒதுக்குகள்**

நாணயச் சபையின் தீர்மானம் எம்பீ/எவ்/22/12/2008 இன் பிரகாரம் 2008ஆம் ஆண்டில் பொது ஒதுக்கங்களிலிருந்து ரூ.24,985 மில்லியன் மாற்றப்பட்டதன் மூலம் இவ்வொதுக்கு உருவாக்கப்பட்டுள்ளது. 2012 மாச்சில் எம்பீ/எவ்/5/17/2012 இலக்க நாணயச் சபையின் தீர்மானத்தின்படி பொது ஒதுக்கிலிருந்து ரூ.10 பில்லியன் கொண்ட தொகை மாற்றல் செய்யப்பட்டுள்ளது. 2014ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் (திருத்தப்பட்டது) 6ஆம் பிரிவின்படி கணக்கிலுள்ள மீதி மூலதனத்தினை அதிகரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டது.

### (ஆ) நிலையான சொத்து மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்

ப.நா.க.நி 16 இன் படி இவ்வொதுக்கானது ஆதனம், பொறி மற்றும் கருவிகளின் மீள்மதிப்பீட்டு மிகையை உள்ளடக்கியுள்ளது.

### (இ) ஏனைய ஒதுக்கங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளன:

(i) **பன்னாட்டு மீள் மதிப்பீட்டு ஒதுக்கம்** - மீள் மதிப்பீடு செய்யப்பட்டதன் மூலம் உருவாகிய பன்னாட்டு ஒதுக்கம் என்பது, நாணய விதிச் சட்டத்தின் 41ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவப்பட்டுள்ளதொரு ஒதுக்கமாகும். இதன் பிரகாரம், தங்கம் மற்றும் வெளிநாட்டு நாணயங்களின் மூலம் மத்திய வங்கியின் தேறிய சொத்துக்களும் பொறுப்புக்களும் மீளக் கணிப்பிடப்படுவதன் ஊடாக உருவாகின்ற உண்மையிலேயே ஈட்டப்படாத இலாபம் அல்லது நட்டம் வங்கியின் தேறிய இலாபத்தைக் கணிப்பதற்காக கவனத்திற் கொள்ளப்படலாகாதென்பதுடன், அதற்குப் பதிலாக இவ்விலாபம் அல்லது நட்டம் மீள்மதிப்பீட்டு பன்னாட்டு ஒதுக்கத்திற்கு மாற்றப்படுதல் வேண்டும்.

(ii) **சந்தை மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் -**

வெளிநாட்டு நிதியியல் சொத்துக்களின் சந்தையின் படியான விலைகளின் மோசமான தாக்கத்திற்கு வழிவகுக்கின்ற பன்னாட்டுச் சந்தைகளின் தளம்பல்களின் ஏதேனும் மோசமான தாக்கத்தினை ஈடுசெய்யும் பொருட்டு வெளிநாட்டுச் சொத்துக்களின் சந்தைப்

பெறுமதியிலிருந்து கிடைக்கும் விலைப் பெறுமதி இலாபங்களை மாற்றல் செய்வதற்காக 2003 சனவரி 30ஆம் நாளன்று நாணயச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின்படி சந்தை மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் ஏற்படுத்தப்பட்டது. நாணயச் சபையானது இந்த ஒதுக்கினை இலங்கை மத்திய வங்கியின் மொத்த வெளிநாட்டு ஒதுக்கில் உயர்ந்தபட்சம் 10 சதவீதத்திற்கு உயர்த்துவதற்கு தீர்மானித்தது.

(iii) **மற்றைய ஒதுக்குகள்**

பொது ஒதுக்கு, கட்டட ஒதுக்கு மற்றும் கொடுகடன் உத்தரவாத ஒதுக்கு என்பவற்றை உள்ளடக்குகிறது. பொது ஒதுக்கு, நாணயச் சபையினால் பிடித்துவைக்கப்பட்டிருக்கும் வருவாய்களிலிருந்து வேறாக வைத்திருக்கப்படும் தொகையினை உள்ளடக்குகின்றது.

(iv) **விற்பனைக்குள்ள பிணையங்கள் மீதான தேறிய சந்தைப் பெறுமதி /(நட்டம்)** - 2014 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான விற்பனைக்குள்ள பிணையங்களை மீள மதிப்பிடப்பட்டதன் மூலம் உருவாகிய தேறல் செய்யப்படாத இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஒதுக்கப்படாத தங்கக் கணக்குகள் இவ்வொதுக்கத்திற்கு மாற்றப்பட்டது.

(v) **அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறை கடன்கரைப்பு நிதியம்** - அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறையைப் பயன்படுத்துவதில் பங்குபற்றுகின்றவர்களிடமிருந்து சேகரிக்கப்படுகின்ற கட்டணங்களைக் கொண்டு இந் நிதியம் உருவாக்கப்பட்டுள்ளது. இந் நிதியமானது திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளில் முதலீடு செய்வதற்கு மாத்திரம் மட்டுப்பட்டதாயிருக்கும்.

(vi) **ஓய்வூதிய நிதிய ஒதுக்கம்** - வெளியக இடர்நேர்வுகளின் காரணமாக வங்கியின் வருமானம் ஈட்டும் ஆற்றலில் ஏற்படும் வடுக்களால் ஓய்வூதிய நிதியத்தில் ஏதேனும் குறைபாடுகள் உருவாகுமாயின் அதனை ஈடுசெய்யும் பொருட்டு 2007ஆம் ஆண்டின் வருமானத்திலிருந்து மேலதிகமாக ரூ. 3 பில்லியன் மாற்றப்பட்டதன் மூலம் இவ்வொதுக்கம் உருவாக்கப்பட்டுள்ளது. 2011 இலாபத்திலிருந்து இவ்வொதுக்கத்திற்கு இன்னொரு ரூ.1 பில்லியன் மாற்றல் செய்யப்பட்டது.

(vii) **தொழில்நுட்ப மேம்பாட்டு ஒதுக்கம்** - குறிப்பாக தொழில்நுட்ப மேம்பாட்டுத் தேவைப்பாடுகள், நவீனமயமாக்கல் அல்லது இ.ம.வங்கியினால் தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்ற பொதுப்பேரேடு, அ.நே.மொ. தீர்ப்பனவு முறை, திறைசேரி முகாமைத்துவ முறைமை அல்லது பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறை ஆகிய தகவல் தொழில்நுட்ப முறைமையைத் தரமுயர்த்துதல் ஆகியவற்றுக்காகப் பயன்படுத்தும் பொருட்டு இவ்வொதுக்கம் 2007 ஆம் ஆண்டின் வருமானத்திலிருந்து உருவாக்கப்பட்டது.

(viii) **மாகாண அபிவிருத்தி கொடுகடன் திட்டம்** - 2010ஆம் ஆண்டுப் பகுதியில் வங்கி இலாபத்திலிருந்து உருவாக்கிய நிதியத்தின் மூலம் அபிவிருத்தி நோக்கங்களுக்காக மாகாணங்களுக்கு ரூ.2.9 பில்லியன் கொண்ட நடுத்தர கால மற்றும் நீண்ட கால மீள்நிதியிடல் இலங்கை வங்கியூடாகவும் மக்கள் வங்கியூடாகவும் வழங்கப்பட்டன.

(ix) **சிறப்புக் கொடுகடன் உத்தரவாதத் திட்டம்** - இவ்வொதுக்கானது நடுத்தர மற்றும் நீண்ட கால கொடுகடன் நிதியத்திலிருந்து ரூ.2,000 மில்லியனை மாற்றல் செய்ததன் மூலம் 2014இல் ஏற்படுத்தப்பட்டது. இதில் ரூ.1,000 மில்லியன் வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்படும் சௌபாக்கியா கடன் திட்டம் வடக்கின் எழுச்சிக் கடன் திட்டம் (கட்டம் II) கிழக்கில் பொருளாதார நடவடிக்கைகளை மீளத் தொடங்குதல் (கட்டம் II) மற்றும் வடக்கு, கிழக்கில் சேதமடைந்த வீடுகளைத் திருத்தல் என்பனவற்றின் மீளமைத்தலுக்கு ஆதரவளிப்பதற்காக ஒதுக்கப்பட்டது. மற்றைய ரூ.1,000 மில்லியன் வர்த்தக வங்கிகளின் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான கடன் வழங்கலுக்கு உதவியளிப்பதற்கான சிறப்புக் கொடுகடன் உத்தரவாதத்திட்டத்தினை நடைமுறைக்கிடுவதற்காக ஒதுக்கப்பட்டது.

ஏனைய ஒதுக்கங்களிலான அசைவுகள் பின்வருமாறு:

| | நடுத்தர கால, நீண்ட கால கொடுகடன் ஒதுக்கம் | சந்தை மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | ஏனைய ஒதுக்கம் | சிறப்புக் கொடுகடன் உத்தரவாதத் திட்ட ஒதுக்கம் | அ.நே. மொ. தீ. கடன் கரைப்பு நிதியம் | பன்னாட்டு மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | விற்பனைக்குள்ள பிணையங்களின் தேறிய சந்தைப் பெறுமதி/ (நட்டம்) | ஓய்வூதிய நிதிய ஒதுக்கம் | தொழில் நுட்ப மேம்பாட்டு ஒதுக்கம் | மாகாண அபிவிருத்திக் கொடுகடன் திட்ட நிதியம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| 2013 சனவரி 01இல் உள்ளவாறு | **11,425,000** | **4,650,806** | **9,978,738** | - | **864,026** | **40,834,545** | **(7,346,267)** | **4,000,000** | **1,000,000** | **2,900,000** | **68,306,848** |
| அ.மொ.தீ. முறை வருமானத்தை அ.மொ.தீ. நிதியத்திற்கு மாற்றல் | - | - | - | - | **212,124** | - | - | - | - | - | **212,124** |
| இலாபத்தை பொது ஒதுக்கிற்கு மாற்றல் | - | - | **1,511,182** | - | - | - | - | - | - | - | **1,511,182** |
| நிதியங்களை பொது ஒதுக்கிற்கு மாற்றதல் | **(6,000,000)** | - | **6,000,000** | - | - | - | - | - | - | - | - |
| நிதியத்தை அடகு முற்பணம் தொடர்பான கொடுகடன் உத்தரவாதத் திட்டத்திற்கு மாற்றல் | **(500,000)** | - | - | - | - | - | - | - | - | - | **(500,000)** |
| மூலதனமாகக் கணிக்கப்பட்ட ஒதுக்கிற்கு நிதியத்தை மாற்றல் | - | - | **(15,000,000)** | - | - | - | - | - | - | - | **(15,000,000)** |
| தேறிய வெளிநாட்டுச் செலாவணி மீள்மதிப்பீட்டு இழப்பை மாற்றல் | - | - | - | - | - | **(32,266,690)** | - | - | - | - | **(32,266,690)** |
| விற்பனைக்குள்ள பிணையங்கள் மற்றும் தங்கத்தின் மீதான தேறிய சந்தைப் பெறுமதி நட்டம் | - | - | - | - | - | - | **9,229,796** | - | - | - | **9,229,796** |
| சிறப்புக் கொடுகடன் உத்தரவாதத் திட்டத்திற்கு நிதியங்களின் மாற்றல் | **(2,000,000)** | - | - | **2,000,000** | - | - | - | - | - | - | - |
| **2014 திசெம்பர் 31இல் உள்ளவாறான** | **2,925,000** | **4,650,806** | **2,489,920** | **2,000,000** | **1,076,150** | **8,567,855** | **1,883,529** | **4,000,000** | **1,000,000** | **2,900,000** | **31,493,260** |

### 30. தேறிய இலாபத்தை மாற்றல் செய்தல்

1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் (திருத்தப்பட்டவாறான) 39 (சீ) வாசகத்தின் பிரகாரம், இச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ள இலாபத்தை, நாணய விதிச் சட்டத்தின் 38ஆம் வாசகத்தின் பிரகாரம் தேவைக்கேற்ப ஒதுக்கங்களுக்கு ஒதுக்கீடு செய்ததன் பின்னர் அரசுக்குச் செலுத்தியது. வெளிவாரிக் கணக்காய்வாளரின் காலாண்டு இலாபச் சான்றுபடுத்தலின்படி, அரசாங்கத்தின் இலாபம் இக்காலப்பகுதியில் 2013 தொடர்பில் ரூ.3 பில்லியனும் 2014 தொடர்பில் ரூ.8.5 பில்லியனும் கொண்ட இலாபமும் அரசாங்கத்திற்கு மாற்றல் செய்யப்பட்டன.

### 31. நிதிச் சொத்துக்களிலிருந்தான வட்டி வருமானம்

| | 2014 ரூபா 000 | 2013 ரூபா 000 |
|---|---|---|
| **வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்களிலிருந்தான வட்டி வருமானம்** | | |
| காசு மற்றும் குறுங்கால வைப்புக்கள் | **3,209,460** | 2,048,673 |
| நிதியியல் சொத்துக்கள் | **6,853,354** | 9,639,675 |
| பெறுதிகள் | **12,158,689** | 6,817,308 |
| **வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக் களிலிருந்தான மொத்த வட்டி வருமானம்** | **22,221,503** | 18,505,656 |
| **உள்நாட்டு நாணய நிதிச் சொத்துக் களிலிருந்தான வட்டி வருமானம்** | | |
| இலங்கை அரச பிணையங்கள் | **4,085,660** | 13,897,078 |
| ஏனைய கடன்களும் முற்பணங்களும் | **531,024** | 553,056 |
| **உள்நாட்டு நாணய நிதிச் சொத்துக் களிலிருந்தான மொத்த தேறிய வட்டி வருமானம்** | **4,616,684** | 14,450,134 |
| **நிதிச் சொத்துக்களிலிருந்தான மொத்த வட்டி வருமானம்** | **26,838,187** | 32,955,790 |

### 32. நிதிப் பொறுப்புக்கள் மீதான வட்டிச் செலவு

| | 2014 ரூபா 000 | 2013 ரூபா 000 |
|---|---|---|
| **வெளிநாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள் மீதான வட்டிச் செலவு** | | |
| ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்துக்குச் செலுத்தப்பட வேண்டிய தொகை | **13,854** | 18,220 |
| பன்னாட்டு நாணய நிதியம் தொடர்பான பொறுப்புக்கள் | **2,546,454** | 4,298,227 |
| பெறுதிகள் | **525,898** | 113,672 |
| ஏனைய வெளிநாட்டு செலுத்த வேண்டியவை | **17,051** | 17,282 |
| **வெளிநாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள் மீதான மொத்த வட்டிச் செலவினம்** | **3,103,257** | 4,447,401 |
| **உள்நாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள் மீதான வட்டிச் செலவு** | | |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | **15,919,782** | 2,741,166 |
| துணைநில் வைப்பு வசதி | **1,198,254** | - |
| முறிக் கடன்பாடுகள் | **467,432** | 20,853 |
| கைவிடப்பட்ட ஆதனம் | **162,568** | 217,831 |
| **உள்நாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள் மீதான மொத்த வட்டிச் செலவு** | **17,748,037** | 2,979,850 |
| **நிதிப் பொறுப்புக்கள் மீதான மொத்த வட்டிச் செலவு** | **20,851,293** | 7,427,251 |

சந்தையில் காணப்பட்ட மிகையான திரவத்தன்மையை ஈர்த்துக்கொள்ளும் நடவடிக்கையின் பொருட்டு, பணநிரம்பலைக் கட்டுப்படுத்தும் செலவாக ரூ.5,831.435 மில்லியன் தேறிய செலவு/(இலாபம்) வங்கியால் உறப்பட்டது. பண நிரம்பலைக் கட்டுப்படுத்துவதற்கான செலவானது கீழே காட்டப்பட்டுள்ளவாறு மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள், முறிகளின் கடன்பாடு மற்றும் துணைநில் வசதி ஆகியவற்றின் மீதான வட்டிச் செலவுகளிலிருந்து, இலங்கை அரச பிணையங்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள மீள் கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் வட்டி வருமானம் மற்றும் வெளிநாட்டு நிதியியல் சொத்துக்களிலிருந்தான வட்டி வருமானத்தில் உள்ளடக்கப்பட்டவாறான ஐ.அ.டொலர்/இல. ரூபா பெறுதிகளின் இலாபம் என்பவற்றைக் கழிப்பதன் மூலம் பெறப்பட்ட தேறிய தொகையை உள்ளடக்கிறது.

| | 2014 ரூபா 000 | 2013 ரூபா 000 |
|---|---|---|
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் மீது ஏற்பட்ட வட்டிச் செலவு | **15,919,782** | 2,741,167 |
| முறிக் கடன்பாட்டின் மீது செலுத்தப்பட்ட கட்டணம் | **467,432** | 20,853 |
| துணைநில் வைப்பு வசதி மீதான வட்டிச் செலவினம் | **1,198,254** | - |
| கழி: | | |
| மீள்விற்பனை செய்வதற்கான உடன்படிக்கையின் கீழ் பிணையங்களின் கொள்வனவு மீது உழைக்கப்பட்ட வட்டி வருமானம் | **(3,438)** | (244,788) |
| ஐ.அ.டொலர்/இல.ரூபா பெறுதிகள் இலாபம் | **(11,750,595)** | (6,736,250) |
| | **5,831,435** | (4,219,018) |

### 33. ஏனைய வருமானம்

| | 2014 ரூபா 000 | 2013 ரூபா 000 |
|---|---|---|
| பங்கிலாப வருமானம் - தொடர்புபட்ட நபர்கள் | **22,014** | 14,811 |
| - ஏனையோர் | **1,055** | 525 |
| ஆதனங்கள் பொறிகள் மற்றும் கருவிகளின் அகற்றல் மீதான இலாபம் | **21,884** | (731) |
| பிற்போடப்பட்ட கொடைகளின் கடன் தீர்ப்பனவு | **934** | 940 |
| தொழிலுக்குப் பின்னரான நன்மைகள் திட்டச் செலவின் மீள்பெறுகை | **-** | 1,736,376 |
| பல்வகை வருமானம் | **1,321,779** | 1,167,339 |
| **மொத்த ஏனைய வருமானம்** | **1,367,666** | 2,919,260 |

பல்வகை வருமானமானது வரையறுக்கப்பட்ட இலங்கைச் சேமிப்பு வங்கியின் தொகுதிக் கடன் மீதான ரூ.1.091 மில்லியன் (2013-0.964 மில்லியன்) கொண்ட பதிவழிப்பு இலாபத்தையும் எஞ்சிய நான்காண்டு காலப்பகுதியில் ப.நா. நிதியத்துடனான சிஎஉ 788,783 கொண்ட வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதிப்படுத்தலின் பதிவழிப்பு இலாபமான ரூ.5.350 மில்லியனையும் (2013 - 5.372 மில்லியன்) உள்ளடக்குகிறது. (குறிப்பு 07)

## 34. ஆளணிச் செலவுகள்

| | 2014 ரூபா 000 | 2013 ரூபா 000 |
|---|---|---|
| ஊழியர் சேம நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் போன்றவை உள்ளடங்கலான கூலிகளும் சம்பளங்களும் | **3,256,096** | 3,138,445 |
| குறித்துரைக்கப்பட்ட பங்களிப்புத் திட்டச் செலவுகள் | **457,274** | 447,626 |
| தொழில் நிலைக்குப் பிந்திய குறித்துரைக்கப்பட்ட நன்மைத் திட்டங்களின் செலவு | **1,289,040** | 1,988,525 |
| **மொத்த ஆளணிச் செலவுகள்** | **5,002,410** | 5,574,596 |

## 35. நிர்வாகம் மற்றும் ஏனைய செலவுகள்

| | 2014 ரூபா 000 | 2013 ரூபா 000 |
|---|---|---|
| திருத்தங்களும் பேணல்களும் | **734,555** | 692,701 |
| ரொயிட்டர், புலூம்பேர்க் மற்றும் சுவப்ற்றிற்கான தொழிற்பாட்டுச் செலவினங்கள் | **129,918** | 115,981 |
| பயணம் | **133,778** | 109,846 |
| வாடகைச் செலவுகள் | **5,126** | 5,309 |
| அச்சிடல் | **37,113** | 30,740 |
| கணக்காய்வுக் கட்டணம் | **7,568** | 7,822 |
| நாணயச் சபை உறுப்பினர்களுக்கான ஊதியங்கள் | **954** | 1,020 |
| இ.ம.வ சேம நிதியம் மீதான வட்டி உதவுதொகை | **63** | 433,842 |
| விளம்பரச் செலவு | **149,676** | 247,749 |
| ஆலோசனை, தொடர்பூட்டல், மதியுரை மற்றும் தொழில்சார் நிபுணத்துவக் கட்டணங்கள் | **2,050,619** | 16,816 |
| அடகுபிடித்தல் முற்பணங்கள் மீதான கொடுகடன் உத்தரவாதத் திட்டம் | **500,000** | - |
| பல்வகைச் செலவினம் | **301,488** | 335,222 |
| **மொத்த ஏனைய தொழிற்பாட்டுச் செலவுகள்** | **4,050,858** | 1,997,048 |

## 36. பிடித்துவைத்தல் வரி

2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க உள்நாட்டரசிறை (திருத்தச்) சட்டத்தின் பிரிவு 7b (xvi) இன் படி இலங்கை மத்திய வருமான வரி செலுத்தப் பொறுப்புடையதல்ல என்பதுடன் வங்கியால் செலுத்தப்படும் பிடித்துவைத்தல் வரி உள்நாட்டரசிறைத் திணைக்களத்திற்கு வங்கி செலுத்தும் இறுதி வரியாகவும் கருதப்படுகிறது. 2013இலிருந்து மத்திய வங்கி பொருளாதாரப் பணிகள் கட்டணத்தைச் செலுத்தப் பொறுப்புடையதல்ல.

2007ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் சட்டத்தின் (திருத்தப்பட்ட) ஏற்பாடுகளின் பிரகாரம் பங்கிலாபம் அல்லது வட்டி செலுத்தப்படுகின்ற போது அல்லது வரவு வைக்கப்படுகின்ற போது 10 சதவீதம் பிடித்து வைத்தல் வரிக்கு உட்பட்டதாயிருக்கும். அரச பிணையங்களின் வட்டி வருமானத்தின் மீது பிடித்து வைத்தல் வரியானது, அண்மிய முதனிலை ஏலத்தின் எடையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதத்தில் முதிர்ச்சித் திகதிக்குச் சீர்செய்யப்பட்ட அடிப்படையில் தீர்க்கப்படுகிறது.

அத்தகைய பிடித்துவைத்தல் வரி தொடர்பில் ரூ.777.496 மில்லியன் (2013இல் ரூ.1,986.217 மில்லியன்) செலவிடப்பட்டதுடன் செலுத்தத்தக்க வட்டி வருமானம் ரூ.4,085.66 மில்லியனாக (2013இல் ரூ.13,897.078 மில்லியன்) காணப்பட்டதுடன் பங்கிலாப வருமானம் ரூ.23,069 மில்லியனாக (2013இல் ரூ.15.336 மில்லியன்) விளங்கியது.

## 37. தொழிற்பாட்டு இலாபங்களை தொழிற்பாட்டு காசுப் பாய்ச்சலுடன் மீள் இணக்கப்படுத்தல்

| | 2014 ரூபா 000 | 2013 ரூபா 000 |
|---|---|---|
| தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து அறிவிக்கப்பட்ட தேறிய இலாபம்/ (நட்டம்) | **(32,309,390)** | (24,264,529) |
| **கூட்டுக /(கழிக்குக) காசல்லா விடயங்கள்** | | |
| தேய்மானம் மற்றும் பதிவழிப்பு | **396,811** | 365,644 |
| பெறப்பட்ட வட்டி - உள்நாட்டு நாணயம் - முதலீட்டுச் சொத்துப்பட்டியல் | **(4,085,660)** | (13,897,078) |
| மொத்தத் தேறாத வெளிநாட்டுச் செலாவணி (இலாபம்)/நட்டம் | **21,166,521** | 13,120,232 |
| நிலையான சொத்து விற்பனை மீதான இலாபம் | **(1,091)** | (964) |
| ஏனைய ஏற்பாடுகள் | **1,633,532** | (25,754,497) |
| பிற்போடப்பட்ட கொடைகள் | **(934)** | (940) |
| மெதுவாக நகரும் இருப்புக்களிற்கான ஏற்பாடுகள் | **-** | 20,000 |
| வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி நம்பிக்கை நிதிய வைப்பின் பதிவழிப்பு | **(5,351)** | (5,371) |
| ஏனைய வருமானங்களுக்கு விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியம், விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதிய நிதிய நன்மை பொறுப்புக்களின் ஏனைய வருமானங்களை மாற்றிப் பதிதல் | **-** | (1,736,376) |
| ஓய்வூதிய நலன் பொறுப்பிற்கான மேலதிக ஏற்பாடுகள் | **-** | 932,447 |
| நிலையான வருமானப் பிணையங்களின் பதிவழிப்புச் செலவினம் | **3,233,923** | - |
| ஒன்றுசேர்ந்த பதிவழிப்பு | **157** | - |
| **கூட்டுக (கழிக்குக) ஏனைய தொழிற்படு மூலதன விடயங்களின் அசைவு** | | |
| இருப்புக்களின் (அதிகரிப்பு)/குறைவு | **(517,198)** | (181,089) |
| பெறத்தக்க வட்டியின் (அதிகரிப்பு) /குறைவு | **528,694** | 3,110,920 |
| பல்வகைப் பொறுப்புக்களின் அதிகரிப்பு/ (குறைவு) | **(620,067)** | 378,945 |
| கொடுபடத்தக்க வட்டியில் அதிகரிப்பு/ (குறைவு) | **1,616,420** | (81,176) |
| ஏனைய பெறத்தக்கவற்றின் அதிகரிப்பு/ (குறைவு) | **(95,958)** | 128,494 |
| **கூட்டுக (கழிக்குக) முதலீடு மற்றும் நிதியிடல் நடவடிக்கைகள்** | | |
| தேறிய பெறப்படாத சந்தைப் பெறுமதி மாற்றங்கள் | **18,512,965** | 27,892,406 |
| தொழிற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல் | **9,453,374** | (19,972,932) |

## 38. அரச கொடுக்கல் வாங்கல்களின் மீதான சுற்றோட்ட நாணயத்தின் வெளியீடு/(மீளப்பெறல்)

| | 2014 ரூபா 000 | 2013 ரூபா 000 |
|---|---|---|
| இலங்கை அரச பிணையங்களின் கொள்வனவு | **107,185,340** | (154,163,065) |
| பெறப்பட்ட வட்டி - உள்நாட்டு நாணயம் - இலங்கை அரச பிணையங்கள் | **(2,681,061)** | (19,132,272) |
| இலங்கை அரசுக்கான முற்பணங்களின் அதிகரிப்பு/(குறைவு) | **34,730,900** | (2,124,771) |
| அரச, அரச நிறுவனங்களுடனான நிலுவைகளின் (அதிகரிப்பு)/குறைவு | **104,280** | 283,397 |
| | **139,339,459** | (175,136,711) |

## 39. வங்கி மற்றும் நிதியியல் நிறுவனங்களின் கொடுக்கல்வாங்கல்கள் மீதான சுற்றோட்ட நாணயத்தின் தேறிய வெளியீடு/(மீளப்பெறல்)

| | 2014 ரூபா 000 | 2013 ரூபா 000 |
|---|---|---|
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்களிலான (அதிகரிப்பு)/குறைவு | **(12,199,430)** | 17,284,956 |
| | **(12,199,430)** | 17,284,956 |

## 40. இறுதியிலுள்ள காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்

| | 2014 ரூபா 000 | 2013 ரூபா 000 |
|---|---|---|
| **வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள்** | | |
| வெளிநாட்டு வங்கிகளுடனான காசு நிலுவைகள் | **487,070,771** | 425,676,763 |
| | **487,070,771** | 425,676,763 |

## 41. நிதியிடலின் திரட்சி

ஆண்டின் இறுதியில் வங்கியின் முக்கியமான நிதியிடலின் திரட்சியானது பின்வருமாறு:

**2013 திசெம்பர் 31இல் உள்ளவாறான ஒப்பீட்டுத் தொகைகள் பின்வருமாறு:**

| 2014 திசெம்பர் 31இல் உள்ளவாறு | மொத்தம் ரூ.000 | இலங்கை அரசு ரூ.000 | இலங்கை பொதுமக்கள் ரூ.000 | இலங்கை வர்த்தக வங்கிகள் ரூ.000 | பல்தேசிய நிதியியல் நிறுவனங்கள் ரூ.000 | ஏனையவை ரூ.000 |
|---|---|---|---|---|---|---|
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | **11,678,483** | **-** | **-** | **-** | **305,160** | **11,373,323** |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | **19,207,822** | **-** | **-** | **19,180,954** | **-** | **26,868** |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம் | **57,230,304** | **-** | **-** | **-** | **-** | **57,230,304** |
| ப.நா.நிதியம் | **308,011,133** | **-** | **-** | **-** | **308,011,133** | **-** |
| ஏனையவை | **72,146,159** | **22,063,900** | **-** | **805,214** | **837,539** | **48,439,506** |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | **468,273,901** | **22,063,900** | **-** | **19,986,168** | **309,153,832** | **117,070,001** |
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | **161,009,323** | **-** | **-** | **161,004,331** | **-** | **4,992** |
| அரச, அரச நிறுவனங்களின் வைப்புக்கள் | **311,950** | **311,832** | **118** | **-** | **-** | **-** |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | **328,252,000** | **-** | **-** | **328,252,000** | **-** | **-** |
| ஊழியர் நலத் திட்டங்களின் நிலுவைகள் | **2,209,782** | **-** | **-** | **-** | **-** | **2,209,782** |
| ஏனைய செலுத்தத்தக்கவை | **8,939,293** | **26,190** | **-** | **182,000** | **-** | **8,731,103** |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள்** | **500,722,348** | **338,022** | **118** | **489,438,331** | **-** | **10,945,877** |
| **மொத்த நிதியியல் பொறுப்புக்கள்** | **968,996,249** | **22,401,922** | **118** | **509,424,499** | **309,153,832** | **128,015,878** |
| **ஏனைய பொறுப்புக்கள்** | | | | | | |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | **416,895,362** | **-** | **416,895,362** | **-** | **-** | **-** |
| பிற்போடப்பட்ட கொடைகள் | **515** | **-** | **-** | **-** | **-** | **515** |
| ஓய்வூதியம் மற்றும் ஏனைய தொழிலுக்குப் பின்னரான நன்மைகள் திட்டங்கள் | **3,599,035** | **-** | **-** | **-** | **-** | **3,599,035** |
| நானாவித பொறுப்புக்கள் மற்றும் அட்டுறுக்கள் | **197,380** | **37,928** | **-** | **-** | **-** | **159,452** |
| **மொத்த ஏனைய பொறுப்புக்கள்** | **420,692,292** | **37,928** | **416,895,362** | **-** | **-** | **3,759,002** |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | **1,389,688,541** | **22,439,850** | **416,895,480** | **509,424,499** | **309,153,832** | **131,774,880** |

**2013 திசெம்பர் 31இல் உள்ளவாறான ஒப்பீட்டுத் தொகைகள் பின்வருமாறு:**

| 2013 திசெம்பர் 31இல் உள்ளவாறான | மொத்தம் ரூ.000 | இலங்கை அரசு ரூ.000 | இலங்கை பொதுமக்கள் ரூ.000 | இலங்கை வர்த்தக வங்கிகள் ரூ.000 | பல்தேசிய நிதியியல் நிறுவனங்கள் ரூ.000 | ஏனையவை ரூ.000 |
|---|---|---|---|---|---|---|
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | 21,504,196 | - | - | - | 693,218 | 20,810,978 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 16,183,282 | - | - | 15,003,873 | - | 1,179,409 |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம் | 37,301,553 | - | - | - | - | 37,301,553 |
| ப.நா.நிதியம் | 422,032,012 | - | - | - | 422,032,012 | - |
| ஏனையவை | 47,221,119 | 44,709,894 | - | 1,784,046 | 685,825 | 41,354 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | 544,242,162 | 44,709,894 | - | 16,787,919 | 423,411,055 | 59,333,294 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | 148,809,893 | - | - | 148,805,736 | - | 4,157 |
| அரச, அரச நிறுவனங்களின் வைப்புக்கள் | 416,230 | 416,176 | 54 | - | - | - |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | 84,601,000 | - | - | 84,601,000 | - | - |
| ஊழியர் நலத் திட்டங்களின் நிலுவைகள் | 2,419,087 | - | - | - | - | 2,419,087 |
| ஏனைய செலுத்தத்தக்கவை | 5,659,719 | 24,834 | - | 182,000 | - | 5,452,885 |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | 241,905,929 | 441,010 | 54 | 233,588,736 | - | 7,876,129 |
| **மொத்த நிதியியல் பொறுப்புக்கள்** | 786,148,091 | 45,150,904 | 54 | 250,376,655 | 423,411,055 | 67,209,423 |
| **ஏனைய பொறுப்புக்கள்** | | | | | | |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | 339,770,981 | - | 339,770,981 | - | - | - |
| பிற்போடப்பட்ட கொடைகள் | 1,449 | - | - | - | - | 1,449 |
| ஓய்வூதியம் மற்றும் ஏனைய தொழிலுக்குப் பின்னரான நன்மைகள் திட்டங்கள் | 4,936,339 | - | - | - | - | 4,936,339 |
| நானாவித பொறுப்புக்கள் மற்றும் அட்டுறுக்கள் | 243,455 | 22,602 | - | - | - | 220,853 |
| **மொத்த ஏனைய பொறுப்புக்கள்** | 344,952,224 | 22,602 | 339,770,981 | - | - | 5,158,641 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | 1,131,100,315 | 45,173,506 | 339,771,035 | 250,376,655 | 423,411,055 | 72,368,064 |

## 42. கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவம்

இலங்கை மத்திய வங்கி நாணயச் சபையுடன் சேர்ந்து இரண்டு சட்ட நியதி குறிக்கோள்களை, அதாவது, பொருளாதாரம் மற்றும் விலை உறுதிப்பாடு மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு என்பனவற்றைக் கொண்டிருந்ததுடன், அதன் குறிக்கோள்களை எய்தும் விதத்தில் பொருளாதார மற்றும் நிதியியல் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கேற்ற விதத்தில் பரந்தளவான சட்ட அதிகாரங்களையும் கொண்டிருந்தது. ஆகவே, பணத்தினை அச்சிடல், வட்டி வீதங்கள் செலாவணி வீதம் மற்றும் கொடுகடன் என்பனவற்றின் மீது செல்வாக்குச் செலுத்துதல் என்பன மூலம் நிதிச் சொத்துக்களை கையகப்படுத்திக் கொள்ளக்கூடிய விதத்தில் கொள்கைகளை உருவாக்கக்கூடிய அதிகாரத்தினை வங்கி கொண்டுள்ளமையினால் வங்கியின் இடர்நேர்வு முகாமைத்துவம் அல்லது செயலாற்றத்தின் காத்திரமான தன்மையினை அது ஈட்டும் இலாபத்தின் அளவின் மூலம் அளவிடமுடியாது. ஆகவே, இலாபமோ அல்லது நட்டமோ வங்கியினது நடவடிக்கைகளிலிருந்து நிதியியல் வெளிப்பாட்டில் சமமானதொன்றாகவே கருதப்படுவதுடன் அதன் தொழிற்பாடுகளும் கொள்கைகளும் இலாபத்தை நோக்கியனவாக இருக்கவில்லை. எனினும், வங்கி அதன் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் பொழுது நற்பெயர் சார்ந்த இடர்நேர்வுகள், நிதியியல் இடர்நேர்வுகள் மற்றும் தொழிற்பாட்டு இடர்நேர்வுகள் என்பனவற்றை எதிர்நோக்குகிறது. இடர்நேர்விற்கு உட்படக்கூடிய தன்மையினை மதிப்பிடவும் கண்காணிக்கவும் முகாமைப்படுத்தவும் வலுவானதும் காத்திரமானதுமான இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாட்டு முறைமைகளும் நடைமுறைக்கிடப்பட வேண்டுமென வங்கி எதிர்பார்க்கிறது.

இறுதியில் இடர்களை அடையாளம் கண்டு கட்டுப்படுத்துவதில் நாணயச் சபை பொறுப்பு வாய்ந்ததாகும். பயனுறுதியான முகாமைத்துவமும் இடர் கட்டுப்பாடும் இடம்பெறுவதை உறுதிப்படுத்துவதற்காக இந்தப் பணியை பல குழுக்களுக்கும் அலகுகளுக்கும்/திணைக்களங்களுக்கும் சபை அளித்துள்ளது.

ஆளுநரின் தலைமையிலான, உயர்மட்ட இடர்முகாமைத்துவக் குழு அனைத்துப் பிரதி ஆளுநர்களையும் உதவி ஆளுநர்களையும் இடர்முகாமைத்துவத் தொழிற்பாட்டுடன் சம்பந்தப்பட்ட பிரதான திணைக்களங்களின் தலைவர்களையும் கொண்டுள்ளது. இடர் உபாயத்திட்டத்தை வகுத்தல் மற்றும் கோட்பாடுகள், சட்டகங்கள், கொள்கைகள் மற்றும் எல்லைகளை நடைமுறைப்படுத்தும் ஒட்டுமொத்தப் பொறுப்பை குழு கொண்டுள்ளது. ஏற்படக்கூடிய இடர்களை அடையாளம் கண்டு அத்தகைய இடர்களைக் குறைப்பதற்குத் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நுட்பங்கள் இருப்பதை உறுதிப்படுத்துவதற்கு அது பொறுப்பாகவுள்ளது. எல்லா அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளும் இருப்பதுடன் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை, பத்திரமற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமை, பொதுப் பேரேட்டு முறைமை மற்றும் திறைசேரி முகாமைத்துவ முறைமை போன்ற வங்கியினால் பயன்படுத்தப்படும் தன்னியக்க முறைமைகள் தொடர்பான இடர்கள் கட்டுப்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்கும் குழு நாடுகின்றது.

மதிப்புச் சார்ந்த இடர்நேர்வு முக்கியமாக வங்கியின் கொள்கைகளை மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் பொருளாதாரத்திற்கு அல்லது பொதுமக்களுக்குப் போதுமான நன்மைகளை ஏற்படுத்தாத வங்கியின் அத்தகையக் கொள்கை வகுப்புத் தொழிற்பாடுகளிலிருந்தே தோன்றுகின்றது. எடுத்துக்காட்டாக, இம்மதிப்புச் சார்ந்த இடர்நேர்வு, உயர் பணவீக்கம் அல்லது இதன் ஒழுங்குவிதிகளின் கீழ் நிதியியல் நிறுவனங்கள் முறிவடையும் நேரங்களில் உயர்வாகக் காணப்படுகின்றன. கொள்கைகள் காத்திரமான முறையில் நடைமுறைப்படுத்தப்படுவதனையும் அத்தகைய கொள்கைகள் போதுமானளவிற்கு தொடர்பூட்டப்படுவதனையும் உறுதிப்படுத்துவதற்காக வங்கியானது மனித மற்றும் ஏனைய மூலவளங்களை பொருளாதாரம் மற்றும் நிதியியல் கொள்கைகளுக்குப் பொறுப்பான திணைக்களங்களுக்கு வழங்கியது.

மத்திய வங்கி உள்ளாகக் கூடிய பிரதான நிதி இடர்நேர்வுகளாக கடன் இடர்நேர்வு, வெளிநாட்டு நாணயமாற்று இடர்நேர்வு மற்றும் வட்டி வீத இடர்நேர்வு ஆகியவை விளங்குகின்றன. இந்த இடர்களின் கணிசமான ஒரு விகிதம் வங்கியின் வெளிநாட்டு ஒதுக்க முகாமைத்துவத்திலிருந்து எழுபவையாகும். வங்கியின் பன்னாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம் வெளிநாட்டுச் சொத்துக்கள் பட்டியலை முகாமைத்துவம் செய்கின்றது. பன்னாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களத்தின் நடுநிலை அலுவலகம் வங்கியின் வெளிநாட்டுச் சொத்துக்கள் பட்டியலுடன் தொடர்புடைய நிதி இடர்நேர்வின் கண்காணிப்புக்கும் முகாமைத்துவத்திற்கும் பொறுப்பாவார்.

நாணயச் சபையினால் நியமிக்கப்படும் வெளிநாட்டு ஒதுக்க முகாமைத்துவக் குழு வெளிநாட்டு ஒதுக்க முகாமைத்துவத் தொழிற்பாடு பயனுறுதியாகவும் வினைத் திறனுடனும் மேற்கொள்ளப்படுவதை உறுதிப் படுத்துவதற்குரிய பொறுப்பு மிக்கதாகும். இடர் முகாமைத்துவம் தொடர்பானவை அடங்கலாக எல்லாக் கொள்கை நடவடிக்கைகளும் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு பின்பற்றுவதற்காக நாணயச் சபைக்கு விதந்துரைக்கப்படுகின்றன. இடர் குறைப்புக் கொள்கைகளை உள்ளடக்கிய விரிவான வழிகாட்டல்களின் தொகுதி ஒதுக்க முகாமைத்துவத் தொழிற்பாட்டில் ஈடுபட்டுள்ள வணிகர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

முதலீடுகளினதும் எதிர்த்தரப்புகளினதும் கடன் வீதங்களை அடிப்படையாகக் கொண்ட வெளிநாட்டுச் சொத்துக்கள் பட்டியலின் கடன் இடர் முகாமைத்துவம் செய்வதற்கு எதிர்தரப்பு கடன் இடர் முகாமைத்துவ முறைமையொன்று பன்னாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களத்தினால் பயன்படுத்தப்படுகின்றது. வட்டி வீதத்தின் அசைவுகளுக்கு வங்கியின் வெளிநாட்டுச் சொத்துக்கள் பட்டியலின் படுநிலை பற்றிய வட்டி வீத இடர், பட்டியலின் காலப்பகுதியின் பொருத்தமான சீர்செய்தல்கள் ஊடாக முகாமைத்துவம் செய்யப்படுகின்றது. வெளிநாட்டுச் செலாவணி இடர் அல்லது செலாவணி வீதத்தில் தளம்பல்களின் விளைவாக உருவாகின்ற மூலதன இழப்புகள் பிரதானமாக முதலீட்டு நாணயங்களின் பல்வகைத் தன்மையூடாக முகாமைத்துவம் செய்யப்படுகின்றது. பயனுறுதியான வெளிநாட்டுச் செலாவணி தலையீட்டின் ஆற்றலைப் பேணுவதற்காக திரவத்தன்மை இடரைக் குறைக்கும் வெளிநாட்டு ஒதுக்கங்களை முகாமைத்துவம் செய்தல் பிரதான அக்கறையாகும். கடன்கள், வட்டி வீதம், வெளிநாட்டு நாணயம், திரவத்தன்மை இடர்கள் முறையே பிரிவுகள் 42.1,42.2,42.3, மற்றும் 42.4 ஆகிய பிரிவுகளில் வரையறுத்துக் கூறப்பட்டுள்ளன.

உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் இடர் முகாமைத்துவ நடவடிக்கைகள் வருடாந்தம் வங்கியின் உள்ளக கணக்காய்வுத் திணைக்களத்தினால் கணக்காய்வு செய்யப்படுகின்றன. நடவடிக்கை முறைகளின் போதுமானளவு, நடவடிக்கை முறைகளுக்கு வங்கிகள் இணங்கியொழுகுதல் ஆகியவற்றை இது பரிசீலிக்கின்றது. எல்லாத் திணைக்களங்களும் காலத்திற்குக் காலம் உள்ளகக் கணக்காய்வு மீளாய்வுக்கு உள்ளாகின்றன. உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம் நேரடியாக ஆளுநருக்கு அறிக்கை செய்வதுடன் அதன் கண்டுபிடிப்புகளையும் விதப்புரைகளையும் கணக்காய்வுக் குழுவுக்கு அறிக்கை செய்கின்றது.

நாணயச் சபை அங்கத்தவரின் தலைமையிலான கணக்காய்வுக் குழு, உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் கணக்காய்வு முன்னேற்பாடுகளையும் அதேபோன்று உள்ளகக் கணக்காய்வாளர்களையும் மேற்பார்வை செய்கின்றது. குழு உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடுகளை மீளாய்வு செய்வதோடு வெளிவாரிக் கணக்காய்வுக்கான நேரடிப் பிரவேசத்தையும் கொண்டுள்ளது. பொதுமக்களுக்கு துல்லியமானதும் பொருத்தமானதும் நேரம் தவறாததுமான தகவல்களை வழங்கும் பொருட்டு பன்னாட்டு ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிதி அறிக்கையிடல் முறைமைக்கேற்ப முகாமை செய்யும் பொருட்டு நாணயச் சபைக்கு அறிவுரை வழங்குதலும் உதவுதலும் கணக்காய்வுக் குழுவின் முதன்மையான தொழிற்பாடாகவுள்ளது. குழு அதன் செயற்பாடுகளை கிரமமான அடிப்படையில் நாணயச் சபைக்கு அறிக்கையிடும்.

நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 42 மற்றும் 43இன் கீழ் வங்கி கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்விற்கு உட்படுதல் வேண்டும். அதன் காரணமாக கணக்காய்வாளர் நாயகம் பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமங்களுக்கிணங்கி ஒழுகுவதை உறுதிப்படுத்துவதற்காக பன்னாட்டு கணக்கீட்டு நியமங்களின் கீழ் கணக்காய்வினை மேற்கொள்வதற்காக பட்டயக் கணக்காளரான ஏனஸ்ட் அன்ட் யங் நிறுவனத்தின் பணியினைப் பெற்றுக் கொண்டிருக்கின்றார்.

### 42.1 கொடுகடன் இடர்நேர்வு

(அ) வங்கியின் ஆண்டின் இறுதியிலுள்ளவாறான குறிப்பிடத்தக்க கொடுகடன் இடர்நேர்வுகளுக்குள்ளாகும் தன்மையின் திரட்சி

புவியியல் பிரதேசங்களுக்கேற்ப (நாணயக் கூறுக்குரிய நாட்டை அடிப்படையாகக் கொண்டு) பின்வருமாறு:

| புவியியல் பிரதேசங்களுக்கேற்ப கொடுகடன் இடர்நேர்வுகளுக்குள்ளாகும் தன்மையின் திரட்சி | 2014 ரூபா 000 | 2013 ரூபா 000 |
|---|---|---|
| இலங்கை | **281,434,233** | 141,256,806 |
| ஐக்கிய அமெரிக்கா | **247,455,622** | 213,281,074 |
| யப்பான் | **82,055,393** | 78,023,705 |
| பிரித்தானியா | **164,344,228** | 139,059,208 |
| ஐரோப்பா | **93,737,444** | 117,118,354 |
| பல்தேசிய நிதியியல் நிறுவனங்கள் | **222,580,690** | 196,757,857 |
| ஏனையவை | **233,542,023** | 218,513,810 |
| **மொத்த நிதியியல் சொத்துக்கள்** | **1,325,149,633** | 1,104,010,814 |

**(ஆ) கொடுகடன் இடர்நேர்வுகளுக்குள்ளாகும் தன்மையின் திரட்சி**

வங்கியின் ஆண்டு இறுதியில் குறிப்பிடத்தக்க கொடுகடன் இடர்நேர்வுகளுக்குள்ளாகும் தன்மையின் திரட்சி நிறுவனங்களுக்கேற்ப வருமாறு:

| | 2014 ரூபா 000 | 2013 ரூபா 000 |
|---|---|---|
| அரசு | **769,681,320** | 639,329,786 |
| பல்தேசிய நிதியியல் நிறுவனங்கள் | **222,580,690** | 196,757,857 |
| வெளிநாட்டு வங்கிகளும் நிதியியல் நிறுவனங்களும் | **324,625,536** | 255,318,467 |
| இலங்கை வங்கிகளும் நிதியியல் நிறுவனங்களும் | **3,041,059** | 7,731,366 |
| ஏனையவை | **5,221,028** | 4,873,338 |
| **மொத்த நிதியியல் சொத்துக்கள்** | **1,325,149,633** | 1,104,010,814 |

**(இ) கொடுகடன் தரமிடல் மூலம் கொடுகடன் இடர்நேர்வுகளுக்குள்ளாகும் தன்மை**

பின்வரும் அட்டவணை ஸ்டான்டர்ட் அன்ட் புவர்ஸ் மற்றும் பிச் றேட்டிங்ஸ் கொடுகடன் தரமிடல்களின் அடிப்படையில் குறிப்பிட்ட நிதிச் சொத்துக்களின் அல்லது வெளியீடுகளின் கொடுகடன் தரமிடல்களை காட்டுகின்றது. ஸ்டான்டர்ட் அன்ட் புவர்ஸ் தரமிடல்களுக்கும் பிச் றேட்டிங்ஸ் தரமிடல்களுக்கும் ஏற்ப AAA குறியீடுகள் அதியுயர் கொடுகடன் தரத்தினைக் கொண்ட தரமிடுதல்களையும் மிகக் குறைந்த கொடுகடன் இடர்நேர்வு எதிர்பார்ப்பினையும் காட்டுகின்றது. நிதிக் கடப்பாடுகளை உரிய நேரத்தில் கொடுப்பனவு செய்யக்கூடிய சிறப்பான பலம் பொருந்திய நிலை உள்ளதென்பதை இது காட்டுகிறது. AA குறியீட்டின் மூலம் உயர் தரமிடுதல் காட்டப்படுவதோடு மிகக் குறைந்த கொடுகடன் இடர்நேர்வு எதிர்பார்ப்பினைக் காட்டுகின்றது. A குறியீட்டின் மூலம் உயர் மத்திய தரம் காட்டப்படுவதோடு குறைந்த கொடுகடன் இடர்நேர்வு எதிர்பார்ப்பினைக் காட்டுகிறது. BBB குறியீட்டின் மூலம் கீழ்மட்ட முதலீட்டுத் தரமிடுதலும் கொடுகடன் இடர்நேர்வு தொடர்பில் நடைமுறையில் குறைந்த எதிர்பார்ப்பு உள்ளதென்பதும் காட்டப்படுவதோடு, பாதுகாப்பு அளவீடுகளின் தேவையை வலியுறுத்துகிறது. AAA குறியீட்டுக்குக் குறைவான தரங்களை பிரதானமான வகைகளுக்கு இடையிலுள்ள நிலைகளைக் காட்டும் பொருட்டு + அல்லது - அடையாளத்தின் மூலம் வகைப்படுத்திக் காட்டலாம். NR குறியீட்டின் மூலம் நிறுவனம், ஸ்டான்டர்ட் அன்ட் புவர்ஸ் மற்றும் பிச் றேட்டிங்ஸ் தரமிடலுக்கு உள்ளாக்கப்படவில்லையென்பது காட்டப்பட்டுள்ளது.

| **கொடுகடன் தரமிடல் மூலம் கொடுகடன் இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை** | கொடுகடன் தரமிடல் | 2014 ரூபா 000 | % | 2013 ரூபா 000 | % |
|---|---|---|---|---|---|
| காசு மற்றும் காசுக்குச் சமமானவை | | | | | |
| பெடரல் ரிசேர்வ் வங்கி - ஐ.அமெரிக்கா/ரிசர்வ் வங்கி - அவுஸ்திரேலியா/ பன்னாட்டுத் தீர்ப்பனவுக்கான வங்கி/ யப்பான் வங்கி/ டியூச் புண்டெஸ் வங்கி/ இங்கிலாந்து வங்கி/ சுவேரிஸ் ரிக்ஸ் வங்கி/ கனடா வங்கி/ நியூசிலாந்து றிசேர்வ் வங்கி | | **209,580,134** | **15.82%** | 226,880,575 | 20.55% |
| | AA | **-** | **0.00%** | - | 0.00% |
| | AA- | **81,692,163** | **6.16%** | 118,832,685 | 10.76% |
| | A+ | **162,072,232** | **12.23%** | 79,727,931 | 7.22% |
| | A | **33,555,560** | **2.53%** | 95,905 | 0.01% |
| | BBB+ | **-** | **0.00%** | 31,729 | 0.00% |
| | BBB | **28,002** | **0.00%** | - | 0.00% |
| | NR | **142,680** | **0.01%** | 107,938 | 0.01% |
| | | **487,070,771** | **36.76%** | 425,676,763 | 38.56% |
| வெளிநாட்டு நாணய விற்பனை/ விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள பிணையங்கள் | | | | | |
| பெடரல் ரிசேர்வ் வங்கி - ஐ.அமெரிக்கா/ரிசர்வ் வங்கி - அவுஸ்திரேலியா/ பன்னாட்டுத் தீர்ப்பனவுக்கான வங்கி/ யப்பான் வங்கி/ டியூச் புண்டெஸ் வங்கி/ இங்கிலாந்து வங்கி/ சுவேரிஸ் ரிக்ஸ் வங்கி/ கனடா வங்கி/ நியூசிலாந்து றிசேர்வ் வங்கி | | **10,855,885** | **0.82%** | 235,865 | 0.02% |
| | AAA | **170,800,992** | **12.89%** | 164,474,689 | 14.90% |
| | AA+ | **160,197,811** | **12.09%** | 171,570,378 | 15.54% |
| | AA | **3,537,900** | **0.27%** | - | 0.00% |
| | AA- | **15,507,080** | **1.17%** | 20,121,914 | 1.82% |
| | A+ | **24,255,977** | **1.83%** | 17,281,309 | 1.57% |
| | A | **1,051,456** | **0.08%** | 3,624,296 | 0.33% |
| | A- | **739,460** | **0.06%** | 3,692,426 | 0.33% |
| | BBB+ | **-** | **0.00%** | 1,233,964 | 0.11% |
| | BBB- | **2,455,004** | **0.19%** | - | - |
| | NR | **63,486,285** | **4.79%** | 49,461,563 | 4.48% |
| | | **452,887,850** | **34.18%** | 431,696,404 | 39.10% |

| | கொடுகடன் தரமிடல் | 2014 ரூபா 000 | % | 2013 ரூபா 000 | % |
|---|---|---|---|---|---|
| இலாப நட்டங்களினூடான சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் | AA- | **16,796,957** | **1.27%** | 19,972,714 | 1.81% |
| | | **16,796,957** | **1.27%** | 19,972,714 | 1.81% |
| **பெறுதி நிதியியல் சாதனங்கள்** | | | | | |
| பெடரல் ரிசேர்வ் வங்கி - ஐ.அமெரிக்கா/ ரிசேர்வ் வங்கி - அவுஸ்திரேலியா/ பன்னாட்டுத் தீர்ப்பனவிற்கான வங்கி/ யப்பான் வங்கி/ டியூச் புண்டெஸ் வங்கி/ இங்கிலாந்து வங்கி/ சுவீடிஷ் ரிக்ஸ் வங்கி/ கனடா வங்கி/ நியூசிலாந்து ரிசேர்வ் வங்கி | | **-** | **0.00%** | 0 | 0.00% |
| | AA- | **37,832** | **0.00%** | 6,773 | 0.00% |
| | A+ | **1,616** | **0.00%** | - | 0.00% |
| | A- | **47** | **0.00%** | - | 0.00% |
| உள்நாட்டு ரீதியாக தரமிடப்பட்டவை | AAA | **268,877** | **0.02%** | 3,103,634 | 0.28% |
| | AA+ | **461** | **0.00%** | 260,648 | 0.02% |
| | AA | **802,792** | **0.06%** | 866,706 | 0.08% |
| | AA- | **301,005** | **0.02%** | 1,029,765 | 0.09% |
| | A- | **167,607** | **0.01%** | 325,982 | 0.03% |
| | BBB | **-** | **0.00%** | 76,750 | 0.01% |
| | | **1,580,237** | **0.12%** | 5,670,258 | 0.51% |
| ப.நா.நி. தொடர்புடைய சொத்துக்கள் | AAA | **79,816,029** | **6.02%** | 85,400,764 | 7.74% |
| | | **79,816,029** | **6.02%** | 85,400,764 | 7.74% |
| ஏனைய பெறத்தக்கவைகள் | AAA | **364** | **0.00%** | 590 | 0.00% |
| | AA- | **426** | **0.00%** | - | 0.00% |
| | A+ | **2,153,902** | **0.16%** | - | 0.00% |
| | A | **2,238,138** | **0.17%** | - | 0.00% |
| | A- | **2,713,084** | **0.20%** | - | 0.00% |
| | B+ | **-** | **0.00%** | 1 | 0.00% |
| | | **7,105,914** | **0.54%** | 591 | 0.00% |
| மொத்த வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்கள் | | **1,045,257,758** | **78.88%** | 968,417,494 | 87.72% |
| **உள்நாட்டு நாணய நிதிச் சொத்துக்கள்** | | | | | |
| இலங்கை அரச பிணையங்கள் | B+ | **124,443,452** | **9.39%** | 15,853,513 | 1.44% |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் | B+ | **143,897,971** | **10.86%** | 109,167,071 | 9.89% |
| வங்கிகளுக்கான கடன்கள் | AA+ | **980,578** | **0.07%** | 1,350,298 | 0.12% |
| | AA | **8,611** | **0.00%** | - | 0.00% |
| | AA- | **79,003** | **0.01%** | 17,795 | 0.00% |
| | A- | **41,988** | **0.00%** | 6,213 | 0.00% |
| | BBB+ | **222,340** | **0.02%** | - | 0.00% |
| | BBB | **4,675** | **0.00%** | - | 0.00% |
| | BB+ | **108,788** | **0.01%** | - | 0.00% |
| | NR | **43,390** | **0.00%** | 1,090 | 0.00% |
| ஏனைய பெறத்தக்கவைகள் | B+ | **1,400,637** | **0.11%** | 1,398,221 | 0.13% |
| | NR | **511,434** | **0.04%** | 431,491 | 0.04% |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான உரிமை முதலீடுகள் | NR | **41,095** | **0.00%** | 41,095 | 0.00% |
| தொகுதிக் கடன்கள் - விற்பனைக்குக் கிடைக்கத்தக்கவை | NR | **9,328** | **0.00%** | - | 0.00% |
| ஏனைய சொத்துக்கள் | B+ | **3,430,085** | **0.26%** | 7,318,296 | 0.66% |
| | NR | **4,668,500** | **0.35%** | 8,237 | 0.00% |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | **279,891,875** | **21.12%** | 135,593,320 | 12.28% |
| **மொத்த நிதியியல் சொத்துக்கள்** | | **1,325,149,633** | **100.00%** | 1,104,010,814 | 100.00% |

42.1 கொடுகடன் இடர்நேர்வு (தொடர்ச்சி)

(ஈ) பிரதானமான கொடுகடன் வகைப்படுத்தலின்படி

| | கொடுகடன் தரமிடல் | 2014 ரூபா 000 | % | 2013 ரூபா 000 | % |
|---|---|---|---|---|---|
| **வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்களின் சாராம்சம்** | | | | | |
| ஐக்கிய அமெரிக்காவின் பெடரல் ரிசேர்வ் வங்கி, அவுஸ்திரேலியாவின் ரிசேர்வ் வங்கி/ பன்னாட்டு தீர்ப்பனவுக்கான வங்கி/ யப்பான் வங்கி/ டியூச் புண்டெஸ் வங்கி/ இங்கிலாந்து வங்கி/ சுவீடிஷ் ரிக்ஸ் வங்கி/ கனடா வங்கி/ நியூசிலாந்து ரிசேர்வ் வங்கி | | **220,436,019** | **16.63%** | 227,116,440 | 20.57% |
| ப.நா. நிதியம் தொடர்பான சொத்துக்கள் | | **79,816,393** | **6.02%** | 85,401,354 | 7.74% |
| | AAA | **170,800,992** | **12.89%** | 164,474,689 | 14.90% |
| | AA+/- | **277,770,169** | **20.96%** | 330,504,464 | 29.94% |
| | A+/- | **223,830,250** | **16.89%** | 104,421,867 | 9.46% |
| | BBB+/- | **2,483,006** | **0.19%** | 1,265,693 | 0.11% |
| | BB+/- | | **0.00%** | - | 0.00% |
| | B+/- | **-** | **0.00%** | 1 | 0.00% |
| | NR | **63,628,965** | **4.80%** | 49,569,501 | 4.49% |
| உள்நாட்டு ரீதியாக தரமிடப்பட்டவை | AAA | **268,877** | **0.02%** | 3,103,634 | 0.28% |
| | AA+ | **461** | **0.00%** | 260,648 | 0.02% |
| | AA | **802,792** | **0.06%** | 866,706 | 0.08% |
| | AA- | **301,005** | **0.02%** | 1,029,765 | 0.09% |
| | A- | **167,607** | **0.01%** | 325,982 | 0.03% |
| | BBB | **-** | **0.00%** | 76,750 | 0.00% |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | **1,040,306,536** | **78.50%** | 968,417,494 | 87.72% |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | |
| | AA+ | **980,578** | **0.07%** | 1,350,298 | 0.12% |
| | AA- | **79,003** | **0.01%** | 17,795 | 0.00% |
| | AA | **8,611** | **0.00%** | - | 0.00% |
| | A- | **41,988** | **0.00%** | 6,213 | 0.00% |
| | BBB+ | **222,340** | **0.02%** | - | 0.00% |
| | BBB | **4,675** | **0.00%** | - | 0.00% |
| | BB+ | **108,788** | **0.01%** | - | 0.00% |
| | B+ | **273,172,145** | **20.61%** | 133,737,101 | 12.11% |
| | NR | **5,273,747** | **0.40%** | 481,913 | 0.04% |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதிச் சொத்துக்கள்** | | **279,891,875** | **21.12%** | 135,593,320 | 12.28% |
| **மொத்த நிதிச் சொத்துக்கள்** | | **1,320,198,411** | **100.00%** | 1,104,010,814 | 100.00% |

42.2 வட்டி வீத இடர்நேர்வு

(அ) வெளிநாட்டு நாணய வட்டி வீதக் கூருணர்திறன்

**வட்டி வீத இடர்நேர்வு என்பது வட்டி வீதங்களில் ஏற்படும் மாற்றங்களிலிருந்து எழுகின்ற இழப்புக்களின் இடர்நேர்வாகும்.**

நிலையான வருமானப் பிணையங்கள் பட்டியலின் வட்டி வீத கூருணர்திறனானது, வட்டி வீதம் 10 அடிப்படைப்புள்ளிகளினால் அதிகரிப்பதன் காரணமாக உருவாகக் கூடிய இழப்புக்களின் அடிப்படையில் அளவிடப்படுவதோடு, கீழே தரப்பட்டுள்ள நிலையான வருமானப் பிணையங்கள் பட்டியல் கூறுகளைப் பயன்படுத்தி வங்கியானது இடர்நேர்வுக் கூருணர்திறனை அளவிடுகின்றது.

| பட்டியல் பிரிவு | நிகழக்கூடிய இழப்பு (ஐ.அ.டொ. மில்.) | |
|---|---|---|
| | 2014 | 2013 |
| வர்த்தகம் மற்றும் விற்பனைக்குள்ளவை | **12.76** | 14.80 |

பின்வரும் உபாய முறைகளைப் பயன்படுத்தி பன்னாட்டு தொழிற்பாட்டுத் திணைக்களத்தின் மத்திய அலுவலகம் வெளிநாட்டுச் சொத்துக்கள் பட்டியலின் வட்டி வீத இடர்நேர்வினை முகாமை செய்கின்றது.

(i) வெளிநாட்டுச் சொத்துப்பட்டியல் மீதான வட்டி வீத மாற்றங்களின் தாக்கத்தினை வட்டி வீத கூருணர்திறன் அளவிடுகின்ற அதேவேளை, வட்டி வீதத்தினையும் அதேநேரம் முதலீட்டுக் காலவரையறையையும் கவனத்திலெடுக்கின்றதான மாற்றப்பட்ட காலவரையறையை வட்டி வீத இடர்நேர்வினை அளவிடுவதற்காக வங்கி பயன்படுத்துகின்றது. மாற்றப்பட்ட காலவரையானது வழங்கப்பட்டுள்ள வட்டி வீதத்திலான மாற்றத்திற்கான (விளைவு) பிணையங்களின் விலையிலான மாற்றத்தை அளவிடுகின்றது. உயர்ந்தளவு மாற்றப்பட்ட காலவரையறையானது உயர்ந்தளவு இடர்நேர்வினைக் குறிக்கின்றது. ஆதலால் வங்கியானது நிதிச் சந்தையிலான அபிவிருத்தி, பட்டியலின் பண்புகள் மற்றும் வங்கியின் இடர்நேர்வு விருப்பினைக் கவனத்திற் கொண்டு காலத்திற்குக் காலம் பொருத்தமான மாற்றப்பட்ட காலவரையறையை விதிக்கின்றது. உயர்ந்தபட்ச எல்லையுடன் ஒப்பிட்டுப் பார்க்கப்படுகின்ற வெளிநாட்டுச் சொத்துக்கள் பட்டியலின் மாற்றப்பட்ட காலவரையறை பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

மாற்றப்பட்ட காலவரையறை

| முதலீட்டுப் பிரிவு | மாற்றப்பட்ட காலவரையறை | |
|---|---|---|
| | 2014 | 2013 |
| மூலதனச் சந்தை (நிலையான வருமானப் பிணையங்கள்) | **3.76** | 4.64 |

(ii) மாற்றப்பட்ட காலவரையானது விலையிலான அதிகளவு மாற்றத்தினைக் கணிப்பிடாததால், வெளிநாட்டு ஒதுக்குப் பட்டியலின் வட்டி வீத இடர்நேர்வு முகாமைத்துவத்தின் பொருட்டு புறக்குவிவான அளவீடொன்று பயன்படுத்தப்படுகின்றது. காலவரையறையை குறிக்கும் நேர்கோட்டிலிருந்து முறி விலை விளைவு வளையியின் வேறுபாட்டினை புறக்குவிவு அளவிடுகின்றது. முறி விலையின் மாற்றத்திற்கான சராசரிக்

காலவரையறையின் மேம்பாட்டினை இது அனுமதிக்கின்றது. புறக்குவிவு என்பது விளைவு மாற்றத்திற்கான காலப்பகுதி மாற்றமாகும். இது மாற்றப்பட்ட காலப்பகுதிக்கான ஊகத் தவறுகளை அளவிடுகின்றது. மறுசொல்லில் விளக்குவதாயின் இது, இதன் பிணைய விலைகளினால் வகுக்கப்பட்ட விளைவு தொடர்பான பிணைய விலைகளின் இரண்டாவது பெறுதியாகும்.

**கூறாக்கப்பட்ட நிலையான வருமானப் பிணையங்கள் பட்டியலின் புறக்குவிவு**

| பட்டியல் பிரிவு | இடர்நேர்வேற்புப் பெறுமதி (ஐ.அ.டொ. மில்.) | |
|---|---|---|
| | 2014 | 2013 |
| வர்த்தகம் மற்றும் விற்பனைக்குள்ளவை | **0.22** | 0.34 |

(iii) **இடர்நேர்வேற்புப் பெறுமதி**

இடர்நேர்வேற்புப் பெறுமதியானது நிதியியல் சந்தை அசைவுகளிலிருந்தான சாதாரண சந்தை நிலைமைகளின் கீழ் சொத்துப்பட்டியலின் கீழ் நோக்கிய இடர்நேர்வை தனி இலக்கத்தில் சுருக்குகின்றது. எனவே, இடர்நேர்வேற்புப் பெறுமதியானது, இலக்கிடப்பட்ட அசைவு மீதான உயர்ந்தபட்ச இழப்பாக இருப்பதனால், உண்மையான இழப்பு அதிகமாக இருப்பதற்குரிய முற்குறிப்பிடப்பட்ட நிகழ்தகவு குறைவாகும். இடர்நேர்வேற்புப் பெறுமதியானது, இடர்நேர்வுகள் மற்றும் நிலைமைகளுக்கிடையில் கூட்டக்கூடிய, பணத்தின் நியதிகளிலான ஒரு இலக்கத்தை எமக்குத் தருகின்றது. வங்கியானது 99 சதவீத நம்பக இடைவெளியில் 10 நாட்களுக்கான இடர்நேர்வேற்புப் பெறுமதியைக் கணிப்பதற்கு முறைமையைப் பயன்படுத்துகின்றது. இடர்நேர்வுப் பெறுமதியினை மதிப்பிடுவதற்கான வரலாற்று முறைமை சில சமயங்களில் வரலாற்று உருவகப்படுத்தல் உருவமைப்பாகக் குறிப்பிடப்படுகின்றது. வரலாற்று முறையினைப் பயன்படுத்தி 5 சதவீத நாளாந்த இடர்நேர்வுப் பெறுமதியினைக் கணிப்பதற்கான ஒரு உதாரணமாக கடந்த நாளாந்த வருவாய்கள், உயர்விலிருந்து தாழ்ந்தநிலைவரையில் வருவாய்களைத் தரப்படுத்தல் மற்றும் வருவாய்களில் ஆகக் குறைந்த 5 சதவீதத்தினை அடையாளம் காணல் என்பன கணிக்கப்படுகின்றன. வருவாய்களின் இம்மிகக் குறைந்த 5 சதவீத உயர்ந்த தொகை என்பது 1-நாள் 5 சதவீத இடர்நேர்வுப் பெறுமதியாகும்.

| பட்டியல் பிரிவு | இடர்நேர்வேற்புப் பெறுமதி (ஐ.அ.டொ. மில்.) | |
|---|---|---|
| | 2014 | 2013 |
| வர்த்தகம் மற்றும் விற்பனைக்குள்ளவை | **116.13** | 47.98 |

(iv) **வர்த்தகப்படுத்தல் மற்றும் திறந்த நிலைமை வரையறைகள்**

தனிப்பட்ட வணிகர்களுக்காக "வணிகப்படுத்தல் அதிகாரி" என்ற முறை மூலம் வங்கியானது ஒரு நாளுக்குள்ளேயான மற்றும் ஓரிரவு நிலை வரையறை மீது குறிப்பிட்ட வணிக வரையறைகளை வழங்கியுள்ளது.

**(ஆ) உள்நாட்டு நாணய வட்டி வீத கூருணர்திறன்**

உள்நாட்டுத் திறைசேரி உண்டியல்கள் இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கப்படும் கடன்களைக் குறிப்பதால் அவை இ.ம. வங்கியின் நிதி நிலைமை பற்றிய கூற்றில் கடன்தீர் செலவில் பதிவு செய்யப்படுகின்றன. வட்டி வருமானமொன்றை ஈட்டும் நோக்கத்துடன் வங்கி திறைசேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்யாததால் இந்தப் பட்டியல் ஒரு முதலீட்டுப்பட்டியல் அல்ல. பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டைப் பேணுதல் என்னும் அதன் மையக் கருப்பொருட்கள் தொடர்பாக நாணயத் தொழிற்பாட்டுக் கொள்கைகளை மேற்கொள்கையில் திரவத்தன்மையை உள்நாட்டுச் சந்தையில் ஏற்படுத்துவதற்காக அல்லது திரவத்தன்மையை உள்நாட்டுச் சந்தையிலிருந்து உள்ளீர்ப்பதற்காக வங்கி திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்கின்றது அல்லது விற்பனை செய்கின்றது. ஆதலால், வங்கியின் பட்டியலிலுள்ள திறைசேரி உண்டியல்கள் அதன் நாணயச் கொள்கைத் தொழிற்பாடுகளினால் நிர்ணயிக்கப்படுகின்றன. அத்துடன், பணச் சந்தையில் மீள்கொள்வனவு வீதம் மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதம் ஆகியவை வங்கியின் நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் போது அதனால் நிர்ணயிக்கப்படும் கொள்கை வீதங்களாகும். மேலும், சந்தையிலிருந்து ரூபாய் திரவத்தன்மையை ஏற்படுத்துவதில் அல்லது திரவத்தன்மையை உள்ளீர்ப்பதில் வங்கியின் நடவடிக்கைகள் பொதுவான ரூபாய் சந்தை வட்டி வீதங்களில் கணிசமான தாக்கத்தைக் கொண்டுள்ளன. இதன்படி, வங்கியின் திறைசேரி உண்டியல்களின் பட்டியலில் இருந்தும் அவ்வாறே வட்டி வீதங்களின் மாற்றங்களிலிருந்தும் எழுகின்ற திறைசேரி உண்டியல் பட்டியலிலிருந்து ஈட்டப்படும் வட்டி வருமானத்தின் மாற்றங்கள் வங்கியின் நாணயக் கொள்கை நடவடிக்கைகளின் விளைவாக உருவாவதேயன்றி முதலீட்டுத் தீர்மானங்கள் காரணமாக அல்ல. எனவே, வங்கியானது உள்நாட்டு நாணயச் சொத்துக்களிலிருந்து உருவாகின்ற வட்டி வீதக் கூருணர்திறனைக் கவனத்திற் கொள்வதில்லை.

42.2 வட்டி வீத இடர்நேர்வு (தொடர்ச்சி)

(இ) சொத்துக்களும் பொறுப்புக்களும் பின்வரும் கால கட்டத்தினுள் முதிர்ச்சியடையும் அல்லது மீள் விலையிடப்படும்

| வெளிநாட்டு நாணய வட்டி வீத கூருணர்திறன் வீச்சிடை | நிறை யேற்றிய சராசரி வட்டி வீதம் % | 2014 மொத்தம் ரூ.000 | 6 மாதமும் அதற்குக் குறைவான ரூ.000 | 6 - 12 மாதங்கள் ரூ.000 | 1 - 2 ஆண்டுகள் ரூ.000 | 2 - 5 ஆண்டுகள் ரூ.000 | 5 ஆண்டுகளுக்கு மேல் ரூ.000 |
|---|---|---|---|---|---|---|---|
| வட்டி கூருணர்திறன் வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் | | | | | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 0.85 | 487,070,771 | 487,070,771 | - | - | - | - |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் மற்றும் விற்பனைக்குள்ள முதலீடுகள் | 1.53 | 452,887,850 | 75,510,725 | 18,112,850 | 68,712,816 | 175,644,118 | 114,907,341 |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | 0.04 | 10,285,892 | 10,285,892 | - | - | - | - |
| மொத்த வட்டி கூருணர்திறன் வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் | | 950,244,513 | 572,867,388 | 18,112,850 | 68,712,816 | 175,644,118 | 114,907,341 |
| வட்டிக்கு கூருணரற்ற வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் | | | | | | | |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | | 69,530,137 | - | - | - | 126,356 | 69,403,781 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | | 1,580,237 | 1,498,615 | 81,575 | 47 | - | - |
| ஏனைய பெறத்தக்கவை | | 7,105,914 | 7,105,914 | - | - | - | - |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் | | 16,796,957 | 16,796,957 | - | - | - | - |
| மொத்த வட்டி கூருணரற்ற வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்கள் | | 95,013,245 | 25,401,486 | 81,575 | 47 | 126,356 | 69,403,781 |
| மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் | | 1,045,257,758 | 598,268,874 | 18,194,425 | 68,712,863 | 175,770,474 | 184,311,122 |
| வட்டி கூருணர்திறன் வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் | | | | | | | |
| ப.நா.நி. | 0.00 | 163,520,370 | 32,704,074 | 35,974,481 | 62,137,741 | 32,704,074 | - |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம் | 0.05 | 57,230,304 | 57,230,304 | - | - | - | - |
| மொத்த வட்டி கூருணர்திறன் வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் | | 220,750,674 | 89,934,378 | 35,974,481 | 62,137,741 | 32,704,074 | - |
| வட்டி கூருணரற்ற வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் | | | | | | | |
| வங்கிகளும், ஏனைய நிதியியல் நிறுவனங்களும் | | 11,678,483 | 11,678,483 | - | - | - | - |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | | 19,207,822 | 1,329,279 | 1,520,530 | 3,981,616 | 10,594,288 | 1,782,109 |
| ப.நா.நிதியம் | | 144,490,763 | - | - | - | - | 144,490,763 |
| வெளிநாட்டு நாணயத்திலான வர்த்தக வங்கிகளின் மூலதனம் | | 805,215 | - | - | - | - | 805,215 |
| ஏனைய வெளிநாட்டு பொறுப்புக்கள் | | 71,340,944 | 71,340,944 | - | - | - | - |
| மொத்த வட்டி கூருணரற்ற வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் | | 247,523,227 | 84,348,706 | 1,520,530 | 3,981,616 | 10,594,288 | 147,078,087 |
| மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் | | 468,273,901 | 174,283,084 | 37,495,011 | 66,119,357 | 43,298,362 | 147,078,087 |
| வெளிநாட்டு நாணய வட்டி வீத கூருணர்திறன் வீச்சிடை | | 729,493,839 | 482,933,010 | (17,861,631) | 6,575,075 | 142,940,044 | 114,907,341 |

42.2 வட்டி வீத இடர்நேர்வு (தொடர்ச்சி)

| வட்டி கூருணர்திறன் உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் | நிறை யேற்றிய சராசரி வட்டி வீதம் % | 2014 மொத்தம் ரூ.000 | 6 மாதமும் அதற்குக் குறைவான ரூ.000 | 6 - 12 மாதங்கள் ரூ.000 | 1 - 2 ஆண்டுகள் ரூ.000 | 2 - 5 ஆண்டுகள் ரூ.000 | 5 ஆண்டுகளுக்கு மேல் ரூ.000 |
|---|---|---|---|---|---|---|---|
| இலங்கை அரச பிணையங்கள் | 5.69 | 121,793,452 | 121,793,452 | - | - | - | - |
| திறைசேரி உண்டியல் மற்றும் முறி நேர்மாற்று மீள்கொள்வனவு | 8.00 | 2,650,000 | 2,650,000 | - | - | - | - |
| வங்கிகளுக்கான கடன்கள் | 7.83 | 1,489,372 | 397,073 | 273,406 | 300,351 | 518,542 | - |
| ஏனைய சொத்துக்கள் - அலுவலர் கடன்கள் | 3.62 | 4,668,501 | 173,804 | 176,791 | 362,695 | 1,163,133 | 2,792,078 |
| - ஏனையவை | 7.72 | 3,439,413 | 911,543 | 425,961 | 733,009 | 1,213,403 | 155,497 |
| **மொத்த வட்டி கூருணர்திறன் உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | 134,040,738 | 125,925,872 | 876,158 | 1,396,055 | 2,895,078 | 2,947,575 |
| **வட்டி கூருணரற்ற உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | | | |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் | | 143,897,971 | 143,897,971 | - | - | - | - |
| ஏனைய பெறத்தக்கவை | | 1,912,071 | 1,912,071 | - | - | - | - |
| உரிமை மூலதன பிணையங்களிலான முதலீடுகள் - விற்பனைக்குள்ளவை | | 41,095 | - | - | - | - | 41,095 |
| **மொத்த வட்டி கூருணரற்ற உள்நாட்டு நாணய சொத்துக்கள்** | | 145,851,137 | 145,810,042 | - | - | - | 41,095 |
| **மொத்த உள்நாட்டு நாணயச் சொத்துக்கள்** | | 279,891,875 | 271,735,914 | 876,158 | 1,396,055 | 2,895,078 | 2,988,670 |
| **வட்டி கூருணர்திறன் உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | | |
| மீள் கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | 6.02 | 321,220,000 | 321,220,000 | - | - | - | - |
| துணைநில் வைப்பு வசதி | 5.00 | 7,032,000 | 7,032,000 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணர்திறன் உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | 328,252,000 | 328,252,000 | - | - | - | - |
| **வட்டி கூருணரற்ற உள்நாட்டு நாணயப் பொறுப்புக்கள்** | | | | | | | |
| வங்கிகள், நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | | 161,009,323 | 161,009,323 | - | - | - | - |
| அரச, அரச நிறுவனங்களின் வைப்புக்கள் | | 311,950 | 311,950 | - | - | - | - |
| ஊழியர் நலத் திட்டங்களின் நிலுவைகள் | | 2,209,782 | 2,209,782 | - | - | - | - |
| ஏனைய செலுத்த வேண்டியவை | | 8,939,293 | 8,939,293 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணரற்ற உள்நாட்டு நாணயப் பொறுப்புக்கள்** | | 172,470,348 | 172,470,348 | - | - | - | - |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | 500,722,348 | 500,722,348 | - | - | - | - |
| **உள்நாட்டு நாணய வட்டி வீத கூருணர்திறன் வீச்சிடை** | | (194,211,262) | (202,326,128) | 876,158 | 1,396,055 | 2,895,078 | 2,947,575 |

**42.2 வட்டி வீத இடர்நேர்வு (தொடர்ச்சி)**

**(இ) சொத்துக்களும் பொறுப்புக்களும் பின்வரும் கால கட்டத்தினுள் முதிர்ச்சியடையும் அல்லது மீள்விலையிடப்படும்.**

2013 திசெம்பர் 31இல் உள்ளவாறு ஒப்பீட்டுத் தரவுகள் பின்வருமாறு:

| வெளிநாட்டு நாணய வட்டி வீத கூருணர்திறன் வீச்சிடை | நிறை யேற்றிய சராசரி வட்டி வீதம் % | 2013 மொத்தம் ரூ.000 | 6 மாதமும் அதற்குக் குறைவான ரூ.000 | 6 - 12 மாதங்கள் ரூ.000 | 1 - 2 ஆண்டுகள் ரூ.000 | 2 - 5 ஆண்டுகள் ரூ.000 | 5 ஆண்டுகளுக்கு மேல் ரூ.000 |
|---|---|---|---|---|---|---|---|
| **வட்டி கூருணர்திறன் வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 0.76 | 425,676,763 | 425,676,763 | - | - | - | - |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் மற்றும் விற்பனைக்குள்ள முதலீடுகள் | 2.19 | 431,696,404 | 12,292,861 | 23,856,111 | 63,591,175 | 121,712,081 | 210,244,176 |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | 0.12 | 11,668,079 | 11,668,079 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணர்திறன் வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | 869,041,246 | 449,637,703 | 23,856,111 | 63,591,175 | 121,712,081 | 210,244,176 |
| **வட்டி கூருணரற்ற வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | | | |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | | 73,732,685 | - | - | - | 128,430 | 73,604,255 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | | 5,670,258 | 5,670,258 | - | - | - | - |
| பெறத்தக்கவை | | 591 | 591 | - | - | - | - |
| இலாபம் அல்லது நட்டத்தினூடான சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் | | 19,972,714 | 19,972,714 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணரற்ற வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | 99,376,248 | 25,643,563 | - | - | 128,430 | 73,604,255 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | 968,417,494 | 475,281,266 | 23,856,111 | 63,591,175 | 121,840,511 | 283,848,431 |
| **வட்டி கூருணர்திறன் வெளிநாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள்** | | | | | | | |
| ப.நா.நி. | 0.00 | 268,796,339 | 45,088,418 | 50,290,928 | 72,835,137 | 100,581,856 | - |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம் | 0.07 | 37,301,553 | 37,301,553 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணர்திறன் வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | 306,097,892 | 82,389,971 | 50,290,928 | 72,835,137 | 100,581,856 | - |
| **வட்டி கூருணரற்ற வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | | |
| வங்கிகளும், ஏனைய நிதியியல் நிறுவனங்களும் | | 21,504,196 | 21,504,196 | - | - | - | - |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | | 16,183,282 | 16,183,282 | - | - | - | - |
| ப.நா.நி. | | 153,235,673 | - | - | - | - | 153,235,673 |
| வெளிநாட்டு நாணயத்திலான வர்த்தக வங்கி மூலதனம் | | 1,784,046 | - | - | - | - | 1,784,046 |
| ஏனைய வெளிநாட்டு பொறுப்புக்கள் | | 45,437,073 | 45,437,073 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணரற்ற வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | 238,144,270 | 83,124,551 | - | - | - | 155,019,719 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | 544,242,162 | 165,514,522 | 50,290,928 | 72,835,137 | 100,581,856 | 155,019,719 |
| **வெளிநாட்டு நாணய வட்டி வீத கூருணர்திறன் வீச்சிடை** | | 562,943,354 | 367,247,732 | (26,434,817) | (9,243,962) | 21,130,225 | 210,244,176 |

42.2 வட்டி வீத இடர்நேர்வு (தொடர்ச்சி)

**(இ) சொத்துக்களும் பொறுப்புக்களும் பின்வரும் கால கட்டத்தினுள் முதிர்ச்சியடையும் அல்லது மீள்விலையிடப்படும்.**

2013 திசெம்பர் 31இல் உள்ளவாறு ஒப்பீட்டுத் தரவுகள் பின்வருமாறு:

| **வட்டி கூருணர்திறன் உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | நிறை யேற்றிய சராசரி வட்டி வீதம் % | 2013 மொத்தம் ரூ.000 | 6 மாதமும் அதற்குக் குறைவான ரூ.000 | 6 - 12 மாதங்கள் ரூ.000 | 1 - 2 ஆண்டுகள் ரூ.000 | 2 - 5 ஆண்டுகள் ரூ.000 | 5 ஆண்டுகளுக்கு மேல் ரூ.000 |
|---|---|---|---|---|---|---|---|
| இலங்கை அரச பிணையங்கள் | 9.36 | 2,923,513 | 2,923,513 | - | - | - | - |
| திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள் - நேர்மாற்று மீள்கொள்வனவு | 8.50 | 12,930,000 | 12,930,000 | - | - | - | - |
| வங்கிகளுக்கான கடன்கள் | 7.52 | 1,375,396 | 378,840 | 361,206 | 513,530 | 121,820 | - |
| ஏனைய சொத்துக்கள் - அலுவலர் கடன் | 4.18 | 4,400,751 | 45,406 | 46,435 | 96,054 | 315,483 | 3,897,373 |
| - ஏனையவை | 7.65 | 2,925,782 | 1,097,655 | 71,460 | 653,421 | 1,103,246 | - |
| **மொத்த வட்டி கூருணர்திறன் உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | 24,555,442 | 17,375,414 | 479,101 | 1,263,005 | 1,540,549 | 3,897,373 |
| **வட்டி கூருணரற்ற உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | | | |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் | | 109,167,071 | 109,167,071 | - | - | - | - |
| ஏனைய பெறத்தக்கவை | | 1,829,712 | 1,829,712 | - | - | - | - |
| உரிமை மூலதன பிணையங்களிலான முதலீடுகள் - விற்பனைக்குள்ளவை | | 41,095 | - | - | - | - | 41,095 |
| **மொத்த வட்டி கூருணரற்ற உள்நாட்டு நாணய சொத்துக்கள்** | | 111,037,878 | 110,996,783 | - | - | - | 41,095 |
| **மொத்த உள்நாட்டு நாணயச் சொத்துக்கள்** | | 135,593,320 | 128,372,197 | 479,101 | 1,263,005 | 1,540,549 | 3,938,468 |
| **வட்டி கூருணர்திறன் உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | | |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | 7.25 | 84,601,000 | 84,601,000 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணர்திறன் உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | 84,601,000 | 84,601,000 | - | - | - | - |
| **வட்டி கூருணரற்ற உள்நாட்டு நாணயப் பொறுப்புக்கள்** | | | | | | | |
| வங்கிகள், நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | | 148,809,893 | 148,809,893 | - | - | - | - |
| அரச, அரச நிறுவனங்களின் வைப்புக்கள் | | 416,230 | 416,230 | - | - | - | - |
| ஊழியர் நலத் திட்டங்களின் நிலுவைகள் | | 2,419,087 | 2,419,087 | - | - | - | - |
| ஏனைய செலுத்தப்பட வேண்டியவை | | 5,659,718 | 5,659,718 | - | - | - | - |
| **மொத்த வட்டி கூருணரற்ற உள்நாட்டு நாணயப் பொறுப்புக்கள்** | | 157,304,928 | 157,304,928 | - | - | - | - |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | 241,905,928 | 241,905,928 | - | - | - | - |
| **உள்நாட்டு நாணய வட்டி வீத கூருணர்திறன் வீச்சிடை** | | (60,045,558) | (67,225,586) | 479,101 | 1,263,005 | 1,540,549 | 3,897,373 |

### 42.3 வெளிநாட்டு நாணய இடர்நேர்வு

வங்கியின் வெளிநாட்டு ஒதுக்கங்களின் முகாமைத்துவத் தொழிற்பாடுகளின் கீழ் வைத்திருக்கப்படுகின்ற வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள் மூலமாக வெளிநாட்டு நாணய நடவடிக்கைகள் பிரதானமாக உருவாகின்றன. வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மாற்றங்கள் உருவாகக்கூடிய போக்கின் காரணமாக வங்கியானது செலாவணி இடர்நேர்வுக்கு உள்ளாவதற்கான வாய்ப்பு உள்ளது. நாணயச் சபையினாலும் வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவக் குழுவினாலும் வங்கியின் பன்னாட்டு ஒதுக்கங்களில் பல்வேறு நாணய வகைகளும் வைத்திருக்கப்பட வேண்டிய வீதத் தொகைகள் தீர்மானிக்கப்பட்டுள்ளன. நாணயங்களை ஒதுக்கீடு செய்தல் தொடர்பான தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுகின்ற போது அரச கடன்களை மீளச் செலுத்துவதன் தேவைப்பாடு தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்படுகின்றது. இதற்கிணங்க வங்கியானது பிரதானமான நாணய வகைகள் பலவற்றை, அதாவது ஐக்கிய அமெரிக்கா டொலர், ஸ்டேர்லிங் பவுண், அவுஸ்திரேலிய டொலர், யப்பான் யென், யூரோ மற்றும் நியூசிலாந்து டொலர் ஆகியவற்றை வைத்திருக்கின்றது. வெளிநாட்டு நாணயங்களின் நிலைமைகள் வரையறுக்கப்பட்ட எல்லைகளை அடைகின்ற போது கண்காணிப்புக்கு உள்ளாக்கப்படுகிறது.

**வெளிநாட்டு நாணயங்களுக்கான தேறிய இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை**

2014 திசெம்பர் 31இல் உள்ளவாறு முக்கிய நாணயங்களுக்கான இலங்கை மத்திய வங்கியின் தேறிய இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை பின்வருமாறு:

| 2014 திசெம்பர் 31இல் உள்ளவாறு | நாணயம் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஐ. அமெரிக்க டொலர் | யூரோ | யப்பானிய யென் | ஸ்ரேலிங் பவுண் | சிஎஉ | அவுஸ்தி ரேலிய டொலர் | ஏனைய நாணயங்கள் | அனைத்து நாணய வகைகளின் மொத்தம் |
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| **வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்கள்** | | | | | | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | (313,660,985) | (21,842,412) | 7,381,899 | 56,016,904 | - | 112,362,714 | 646,812,651 | 487,070,771 |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் மற்றும் விற்பனைக்குள்ள முதலீடுகள் | 227,526,935 | 53,915,502 | 23,868,150 | 44,810,723 | - | 60,990,957 | 58,572,540 | 469,684,807 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 47 | - | 37,832 | - | - | - | 1,542,358 | 1,580,237 |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | - | - | - | - | 79,816,029 | - | - | 79,816,029 |
| ஏனைய பெறத்தக்கவை | 426 | - | 558,018 | 6,547,106 | 364 | - | - | 7,105,914 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | (86,133,577) | 32,073,090 | 31,845,899 | 107,374,733 | 79,816,393 | 173,353,671 | 706,927,549 | 1,045,257,758 |
| விகிதம் | -8% | 3% | 3% | 10% | 8% | 17% | 68% | 100% |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | 310,860 | 2,455 | - | 2,239,371 | - | 9,125,797 | - | 11,678,483 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 26,868 | - | - | - | - | - | 19,180,954 | 19,207,822 |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம் | 57,016,104 | 214,200 | - | - | - | - | - | 57,230,304 |
| ப.நா. நிதியம் | - | - | - | - | 308,011,133 | - | - | 308,011,133 |
| ஏனையவை | 71,303,530 | - | - | - | - | - | 842,629 | 72,146,159 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | 128,657,362 | 216,655 | - | 2,239,371 | 308,011,133 | 9,125,797 | 20,023,583 | 468,273,901 |
| விகிதம் | 27.47% | 0.05% | 0.00% | 0.48% | 65.78% | 1.95% | 4.28% | 100% |
| **தேறிய வெளிநாட்டு நாணய இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை** | (214,790,939) | 31,856,435 | 31,845,899 | 105,135,362 | (228,194,740) | 164,227,874 | 686,903,966 | 576,983,857 |

காசும் காசிற்குச் சமமானவைகளும் வேறுபட்ட நாணயங்களின் வாங்கல் மற்றும் விற்றலுடன் தொடர்புபட்ட வெளிநாட்டு கொடுக்கல்வாங்கல்களை உள்ளடக்கியிருந்ததுடன் இவற்றின் வர்த்தகத் திகதிகள் நடப்பு நிதியாண்டில் இடம்பெற்றதுடன் பெறுமதித் திகதி அடுத்த நிதியாண்டாக இருக்கும். அக்கொடுக்கல்வாங்கல்கள் பின்வருமாறு இருக்கும்

| | இலங்கை ரூபா | ஐ. அமெரிக்க டொலர் | யூரோ | ஸ்ரேலிங் பவுண் | யப்பானிய யென் | அவுஸ்தி ரேலிய டொலர் |
|---|---|---|---|---|---|---|
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| **2014 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | | | | | | |
| கொள்வனவு | 315,836,566 | (18,113,664) | 7,961,856 | (62,622) | 5,274,559 | (6,351,590) |
| விற்பனை | (24,459,676) | (304,517,720) | 5,375,438 | 19,321,868 | 4,875,603 | 29,416 |
| வெளிநாட்டுச் செலாவணி முன்னோக்கிய | (1,667) | - | - | - | - | - |
| ஒப்பந்தக் கணக்கு - பிரிவிற்கு அணித்தாக முன்னோக்கி ஒப்பந்தக் கணக்கு | (297,639) | - | - | - | - | - |
| **2013 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | | | | | | |
| கொள்வனவு | 314,641,828 | 55,095,905 | - | - | - | - |
| விற்பனை | (2,411,633) | (312,230,195) | (25,277,612) | (29,818,293) | - | - |

42.3 வெளிநாட்டு நாணய இடர்நேர்வு (தொடர்ச்சி)

2013 திசெம்பர் 31இல் உள்ளவாறு முக்கிய நாணயங்களுக்கான இலங்கை மத்திய வங்கியின் தேறிய இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை பின்வருமாறு

நாணய இன வகைகள்

| 2013 திசெம்பர் 31இல் உள்ளவாறு | ஐ. அமெரிக்க டொலர் ரூ.000 | யூரோ ரூ.000 | யப்பானிய யென் ரூ.000 | ஸ்ரேலிங் பவுண் ரூ.000 | சிஎஉ ரூ.000 | அவுஸ்திரேலிய டொலர் ரூ.000 | ஏனைய நாணயங்கள் ரூ.000 | அனைத்து நாணய வகைகளின் மொத்தம் ரூ.000 |
|---|---|---|---|---|---|---|---|---|
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | (55,000,132) | (1,747,078) | 56,010,411 | (16,772,840) | - | 123,785,851 | 319,400,551 | 425,676,763 |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் மற்றும் விற்பனைக்குள்ள முதலீடுகள் | 180,357,566 | 70,242,132 | 25,488,744 | 75,000,363 | - | 77,770,996 | 22,809,317 | 451,669,118 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 6,773 | - | - | - | - | - | 5,663,485 | 5,670,258 |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | - | - | - | - | 85,400,764 | - | - | 85,400,764 |
| ஏனைய வெளிநாட்டுப் பெறத்தக்கவை | - | - | 1 | - | 590 | - | - | 591 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | 125,364,207 | 68,495,054 | 81,499,156 | 58,227,523 | 85,401,354 | 201,556,847 | 347,873,353 | 968,417,494 |
| விகிதம் | 13% | 7% | 8% | 6% | 9% | 21% | 36% | 100% |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | 29,115 | 9,051,040 | 2,478,696 | 2,397 | 608,315 | 9,334,633 | - | 21,504,196 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 1,179,409 | - | - | - | - | - | 15,003,873 | 16,183,282 |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம் | 37,156,289 | 145,264 | - | - | - | - | - | 37,301,553 |
| ப.நா.நிதியம் | - | - | - | - | 422,032,012 | - | - | 422,032,012 |
| ஏனையவை | 46,530,204 | - | - | - | - | - | 690,915 | 47,221,119 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | 84,895,017 | 9,196,304 | 2,478,696 | 2,397 | 422,640,327 | 9,334,633 | 15,694,788 | 544,242,162 |
| விகிதம் | 16% | 2% | 0% | 0% | 78% | 2% | 2% | 100% |
| **தேறிய வெளிநாட்டு நாணய இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை** | 40,469,190 | 59,298,750 | 79,020,460 | 58,225,126 | (337,238,973) | 192,222,214 | 332,178,565 | 424,175,332 |

42.4. நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கழிவுறப்படாத காசுப்பாய்ச்சல்களின் ஒப்பந்த முதிர்ச்சிகள்

| | 6 மாதங் களுக்குக் குறை வானவை ரூ.000 | 6 மாதங்கள் - 1 ஆண்டுகள் ரூ.000 | 1-2 ஆண்டுகள் ரூ.000 | 2-5 ஆண்டுகள் ரூ.000 | 5 ஆண்டு களுக்கு மேல் ரூ.000 | மொத்தம் ரூ.000 |
|---|---|---|---|---|---|---|
| 2014 திசெம்பர் 31இல் உள்ளவாறு | | | | | | |
| வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் | | | | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 487,070,771 | - | - | - | - | 487,070,771 |
| இலாபம் அல்லது நட்டத்தினூடான சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் | 61,745,564 | - | - | - | - | 61,745,564 |
| விற்பனைக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள முதலீடுகள் | 36,824,108 | 21,440,653 | 74,839,842 | 186,893,880 | 112,714,585 | 432,713,068 |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | 10,285,892 | - | - | 126,356 | 69,403,781 | 79,816,029 |
| ஏனைய பெறத்தக்கவை | 789 | - | - | - | - | 789 |
| மொத்த கழிவுறப்படாத வெளிநாட்டு நிதியியல் சொத்துக்கள் | 595,927,124 | 21,440,653 | 74,839,842 | 187,020,236 | 182,118,366 | 1,061,346,221 |
| உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் | | | | | | |
| இலங்கை அரச பிணையங்கள் | 126,146,447 | - | - | - | - | 126,146,447 |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் | 143,897,971 | - | - | - | - | 143,897,971 |
| வங்கிகளுக்கான கடன்கள் | 397,073 | 343,377 | 337,628 | 545,564 | 1,404 | 1,625,046 |
| ஏனைய பெறத்தக்கவை | 1,912,071 | - | - | - | - | 1,912,071 |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான உரிமை மூலதன முதலீடுகள் | - | - | - | - | 41,095 | 41,095 |
| ஏனைய சொத்துக்கள் | 1,260,219 | 736,309 | 1,319,793 | 2,505,689 | 2,964,554 | 8,786,564 |
| மொத்த கழிவுறப்படாத உள்நாட்டு நிதியியல் சொத்துக்கள் | 273,613,781 | 1,079,686 | 1,657,421 | 3,051,253 | 3,007,053 | 282,409,194 |
| மொத்த கழிவுறப்படாத நிதியியல் சொத்துக்கள் | 869,540,905 | 22,520,339 | 76,497,263 | 190,071,489 | 185,125,419 | 1,343,755,415 |
| வெளிநாட்டு நிதியியல் பொறுப்புக்கள் | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | 4,973,823 | 673,045 | 726,957 | 260,896 | 374,477 | 7,009,198 |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம் | 57,230,304 | - | - | - | - | 57,230,304 |
| ப.நா.நிதியம் | 32,704,074 | 35,974,481 | 62,137,740 | 32,704,074 | 144,490,763 | 308,011,132 |
| ஏனையவை | 71,340,944 | - | - | - | 805,214 | 72,146,158 |
| மொத்த கழிவுறப்படாத வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் | 166,249,145 | 36,647,526 | 62,864,697 | 32,964,970 | 145,670,454 | 444,396,792 |
| உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | 416,630,260 | - | - | - | - | 416,630,260 |
| அரச, அரச நிறுவனங்களின் வைப்புக்கள் | 311,950 | - | - | - | - | 311,950 |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | 331,665,172 | - | - | - | - | 331,665,172 |
| ஊழியர் நலத் திட்டங்களின் நிலுவைகள் | 2,209,782 | - | - | - | - | 2,209,782 |
| ஏனைய செலுத்தத்தக்கவை | 8,939,293 | - | - | - | - | 8,939,293 |
| மொத்த கழிவுறப்படாத உள்நாட்டு நிதியியல் பொறுப்புக்கள் | 759,756,457 | - | - | - | - | 759,756,457 |
| மொத்த கழிவுறப்படாத நிதியியல் பொறுப்புக்கள் | 926,005,602 | 36,647,526 | 62,864,697 | 32,964,970 | 145,670,454 | 1,204,153,249 |
| தேறிய கழிவுறப்படாத நிதியியல் சொத்துக்கள்/ (பொறுப்புக்கள்) | (56,464,697) | (14,127,187) | 13,632,566 | 157,106,519 | 39,454,965 | 139,602,166 |

| | 6 மாதங் களுக்குக் குறை வானவை ரூ.000 | 6 மாதங்கள் - 1 ஆண்டுகள் ரூ.000 | 1-2 ஆண்டுகள் ரூ.000 |
|---|---|---|---|
| 2014 திசெம்பர் 31இல் உள்ளவாறு | | | |
| பெறுதி நிதியியல் சொத்துக்கள் | 212,727,267 | 91,893,999 | 731 |
| பெறுதி நிதியியல் பொறுப்புக்கள் | 210,190,966 | 90,813,211 | |

**வெளிநாட்டு நாணய மாற்று வீதங்கள்**

வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுடன் தொடர்புடைய அனைத்து எதிர்கால காசுப்பாய்ச்சல்களும், நிதியியல் நிலைமைக் கூற்று தயாரிக்கப்படும் திகதியிலுள்ள செலாவணி வீதத்தை பயன்படுத்தி அறிக்கையிடும் நாணயத்திற்கு மாற்றப்பட்டன.

## 42.4. நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கழிவுறப்படாத காசுப்பாய்ச்சல்களின் ஒப்பந்த முதிர்ச்சிகள் (தொடர்ச்சி)

2013 திசெம்பர் 31இல் உள்ளவாறான நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கழிவுறப்படாத காசுப்பாய்ச்சல்களின் ஒப்பந்த முதிர்ச்சிகள்

| | 6 மாதங் களுக்குக் குறை வானவை ரூ.000 | 6 மாதங்கள் - 1 ஆண்டுகள் ரூ.000 | 1-2 ஆண்டுகள் ரூ.000 | 2-5 ஆண்டுகள் ரூ.000 | 5 ஆண்டு களுக்கு மேல் ரூ.000 | மொத்தம் ரூ.000 |
|---|---|---|---|---|---|---|
| **2013 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | | | | | | |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 425,676,763 | - | - | - | - | 425,676,763 |
| இலாபம் அல்லது நட்டத்தினூடான சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் | 104,105,563 | - | - | - | - | 104,105,563 |
| விற்பனைக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள முதலீடுகள் | 12,929,296 | 20,413,029 | 67,917,803 | 136,130,521 | 161,748,684 | 399,139,333 |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | 11,668,079 | - | - | 128,430 | 73,604,255 | 85,400,764 |
| ஏனைய பெறத்தக்கவை | 591 | - | - | - | - | 591 |
| **மொத்த கழிவுறப்படாத வெளிநாட்டு நிதியியல் சொத்துக்கள்** | 554,380,292 | 20,413,029 | 67,917,803 | 136,258,951 | 235,352,939 | 1,014,323,014 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | | |
| இலங்கை அரச பிணையங்கள் | 15,985,640 | - | - | - | - | 15,985,640 |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் | 109,167,071 | - | - | - | - | 109,167,071 |
| வங்கிகளுக்கான கடன்கள் | 429,931 | 399,568 | 552,877 | 144,913 | - | 1,527,289 |
| ஏனைய பெறத்தக்கவை | 1,829,712 | - | - | - | - | 1,829,712 |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான உரிமை மூலதன முதலீடுகள் | - | - | - | - | 41,095 | 41,095 |
| ஏனைய சொத்துக்கள் | 1,245,605 | 184,760 | 884,027 | 1,578,449 | 3,910,923 | 7,803,764 |
| **மொத்த கழிவுறப்படாத உள்நாட்டு நிதியியல் சொத்துக்கள்** | 128,657,959 | 584,328 | 1,436,904 | 1,723,362 | 3,952,018 | 136,354,571 |
| **மொத்த கழிவுறப்படாத நிதியியல் சொத்துக்கள்** | 683,038,251 | 20,997,357 | 69,354,707 | 137,982,313 | 239,304,957 | 1,150,677,585 |
| **வெளிநாட்டு நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | 23,181,098 | 1,281,220 | 1,806,400 | 1,249,856 | 1,038,652 | 28,557,225 |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம் | 37,301,553 | - | - | - | - | 37,301,553 |
| ப.நா.நிதியம் | 45,088,418 | 50,290,928 | 72,835,137 | 100,581,856 | 153,235,672 | 422,032,012 |
| ஏனையவை | - | - | - | - | 1,784,046 | 1,784,046 |
| **மொத்த கழிவுறப்படாத வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | 105,571,069 | 51,572,148 | 74,641,537 | 101,831,712 | 156,058,369 | 489,674,836 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | 148,809,893 | - | - | - | - | 148,809,893 |
| அரச, அரச நிறுவனங்களின் வைப்புக்கள் | 416,230 | - | - | - | - | 416,230 |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | 84,601,000 | - | - | - | - | 84,601,000 |
| ஊழியர் நலத் திட்டங்களின் நிலுவைகள் | 2,419,087 | - | - | - | - | 2,419,087 |
| ஏனைய செலுத்தத்தக்கவை | 5,659,719 | - | - | - | - | 5,659,719 |
| **மொத்த கழிவுறப்படாத உள்நாட்டு நிதியியல் பொறுப்புக்கள்** | 241,905,929 | - | - | - | - | 241,905,929 |
| **மொத்த கழிவுறப்படாத நிதியியல் பொறுப்புக்கள்** | 347,476,998 | 51,572,148 | 74,641,537 | 101,831,712 | 156,058,369 | 731,580,765 |
| **தேறிய கழிவுறப்படாத நிதியியல் சொத்துக்கள்/ (பொறுப்புக்கள்)** | 335,561,253 | (30,574,791) | (5,286,830) | 36,150,601 | 83,246,588 | 419,096,820 |

| | 6 மாதங் களுக்குக் குறை வானவை ரூ.000 | 6 மாதங்கள் - 1 ஆண்டுகள் ரூ.000 |
|---|---|---|
| **2013 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | | |
| பெறுதி நிதியியல் சொத்துக்கள் | 272,936,121 | 96,790,456 |
| பெறுதி நிதியியல் பொறுப்புக்கள் | 270,565,621 | 92,955,576 |

### 42.5 திரவத்தன்மை இடர்நேர்வு

நிதியியல் சாதனங்களுக்கான கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான நிதியங்களைக் குறுகிய கால அறிவித்தலின் மீது பெற்றுக் கொள்கின்ற போது நிறுவனமொன்று முகம் கொடுக்கின்ற இடர்ப்பாடு திரவத்தன்மை இடர்நேர்வாகும். நிறுவனம் தனது நிதிச் சொத்துக்களை விரைவாக, சந்தைப் பெறுமதியைவிட மிகக் குறைந்த விலைக்கு விற்பனை செய்ய வேண்டி நேரிடுவதும் திரவத்தன்மை இடர்நேர்வொன்றாகும்.

(அ) வங்கியின் வெளிநாட்டு நாணயச் சொத்துக்களின் உள்ளமைப்பைத் தீர்மானிக்கின்ற போது முக்கியமாக திரவத்தன்மை தொடர்பாகவே கவனம் செலுத்தப்படுகிறது. தேவையான சந்தர்ப்பங்களில் தலையீடு செய்கின்ற போது மற்றும் அரச கடன்கள் மற்றும் ப.நா. நி. கடன்களை மீளச் செலுத்துதல் போன்ற கடப்பாடுகளைத் தீர்ப்பதற்காக வெளிநாட்டு ஒதுக்கங்களை ஒழிக்கின்ற போது இது ஒரு உள்ளார்ந்த தேவைப்பாடாகும். நிதியங்களை விரைவாக அடைவதை உறுதி செய்து கொள்ளும் நோக்கத்துடன் வங்கியானது பின்வரும் அளவீடுகளை மேற்கொள்கிறது.

- வைத்திருக்கப்பட்ட பிணையங்களின் திரவத்தன்மை இயல்புகளை அடிப்படையாகக் கொண்ட திரவச் சொத்து வீதங்கள்.
- ஒரு இணைத்தரப்பினருடன் ஒரு நாணயத்தில் வைத்திருக்கப்படக்கூடிய ஒதுக்குகளின் உச்சமட்ட விகிதத்தின் மீதான வரையறை

(ஆ) உள்நாட்டு நாணய நடவடிக்கைகளின் போது, குறிப்பாக திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் போது உருவாகின்ற திரவத்தன்மை இடர்நேர்வு மட்டத்தைக் குறைக்கும் பொருட்டு இலங்கை மத்திய வங்கியானது, திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் போன்ற சந்தைப்படுத்தக்கூடிய அதிக திரவத்தன்மையுடனான கருவிகளை மேலதிகப் பிணையங்களாகப் பயன்படுத்துகிறது. வங்கியானது, மீள்கொள்வனவு/நேர்மாற்று மீள்கொள்வனவு, மத்திய வங்கிப் பிணையங்கள் மற்றும் ஐ.அ.டொலர்/ரூபா பரஸ்பர பரிமாற்றல்கள் போன்ற நிதிக் கருவிகளைப் பயன்படுத்தி முறைமையினுள் நிதியங்களை உட்செலுத்துவதன் மூலம் அல்லது அதிலிருந்து மீளப் பெறுவதன் மூலம் வங்கி முறைமையின் நாளாந்த திரவத்தன்மை நிலையைக் கட்டுப்படுத்துகிறது.

## 43. ஓய்வூதியமும் தொழில்நிலைக்குப் பின்னரான ஏனைய நன்மைகள் திட்டங்களும்

அனைத்து ஊழியர்களும் உள்ளடங்கக் கூடியவாறான குறித்துரைக்கப்பட்ட ஐந்து நலவுரிமைத் திட்டங்கள் வங்கியினால் தொழிற்படுத்தப்படுகின்றன. ஊழியர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் 1998 சனவரி 01ஆந் திகதிக்கு முன்னர் வங்கியில் சேர்ந்த ஊழியர்கள், 10 வருட பணிக் காலத்தைப் பூர்த்தி செய்ததன் பின்னர் இதற்குத் தகுதி பெறுகின்றனர். ஊழியர் ஓய்வூதியத் திட்டமானது பங்களிப்பில்லாத ஓய்வூதியத் திட்டமாக இருப்பதுடன் இதன் நன்மைக் கிரயச் செலவுகளை முழுமையாகவே வங்கி ஏற்கின்றது. ஆண் ஊழியர்களுக்கான விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டமும் பெண் ஊழியர்களுக்கான விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டமும் 1998 சனவரி 01ஆம் திகதிக்கு முன்னர் வங்கியில் பணிக்குச் சேர்ந்த ஊழியர்களுக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ளது. இத் திட்டத்திற்குத் தகுதி பெற்ற 1994 ஓகத்து 01இற்கு முன்னர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட ஊழியர்கள் மாதாந்த அடிப்படைச் சம்பளத்தில் 5 சதவீதத் தொகையொன்றைப் பங்களிப்புச் செய்வதுடன் 1994 ஓகத்து 01 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டவர்கள் மாதாந்த அடிப்படைச் சம்பளத்தில் 10 சதவீதத்தினை பங்களிப்புச் செய்வர்.

வங்கியில் ஐந்து ஆண்டு கால பணியைப் பூர்த்தி செய்தவர்களான, ஊழியர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவைப் பெறத் தகுதி பெறாத ஊழியர்களுக்காக பணிக் கொடை நன்மைகள் வங்கியினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இப்பொறுப்புபைப் பூர்த்தி செய்வதற்காக காப்புறுதி மதிப்பீட்டைப் பயன்படுத்தி கணிப்பீடு செய்யப்பட்ட, அதற்குச் சமமானதொரு தொகை நிதி நிலைமைகள் பற்றிய கூற்றில் முன்கொண்டு செல்லப்படுகின்றது.

தொழில்நிலைக்குப் பிந்திய மருத்துவ நலத் திட்டத்தின் கீழ், ஓய்வு பெற்ற ஊழியர்களால் அவர்கள் பெயரில் அல்லது அவர்களது துணைவர் பெயரில் மற்றும் ஊழியர்களது விதவைகள்/விதுரர்களாலும் ஏற்கப்படுகின்ற ஒரு சில மருத்துவச் செலவுகள் மீளளிக்கப்படுகின்றன.

ஊழியர் ஓய்வூதியத் திட்டம், விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம், விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம், பணிக் கொடைகள் திட்டம் மற்றும் மருத்துவ நலத் திட்டம் என்பனவற்றின் குறித்துரைக்கப்பட்ட நன்மைகளைப் பகிர்ந்தளித்தல் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய நடைமுறைப் பணிச் செலவுகள் தொடர்பான காப்புறுதி மதிப்பீட்டைச் செய்வதற்காக சுயாதீனமான காப்புறுதி மதிப்பீட்டாளரான கே.ஏ.பண்டிற், ஆலோசகர் மற்றும் காப்புறுதி மதிப்பீட்டாளர் (மும்பாய்) ஆண்டுக் காலத்தில் பணியின் பொருட்டு வங்கியினால் அமர்த்தப்பட்டார்.

ஊழியர் ஓய்வூதியத் திட்டம், விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத்திட்டம் மற்றும் விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத்திட்டம் என்பனவற்றின் நிதியங்கள் தனித்தனியாக முகாமைப்படுத்தப்படுவதுடன் தனித்தனியாக ஏடுகளும் பேணப்படுகின்றன. எனினும், பணிக்கொடைத் திட்டமும் மருத்துவ நன்மைகள் திட்டமும் வங்கியின் கணக்கேடுகளிலிருந்து வேறாக்கப்படவில்லை. மேலும் முதலீடுகளும் முதலீட்டு வருமானமும் வங்கி ஏடுகளில் இந்நிதியத்திற்காக தனித்தனியாக பதிவு செய்யப்படுகின்றதுடன், முதலீடுகளிலிருந்து உழைக்கப்பட்ட வருமானம் இந்நிதியத்திற்கு மாற்றல் செய்யப்படுவதுடன் பங்கிடப்படாமல் மீள முதலிடப்படுகின்றன.

அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியில் திட்டச் சொத்துக்களின் மொத்தச் சந்தைப் பெறுமதி ரூ.32,323.711 மில்லியனாக (2013 - ரூ.28,575.636 மில்லியன்) அமைந்து ரூ.35,922.746 மில்லியன் (2013 - 33,511.975 மில்லியன்) கொண்ட தற்போதைய அனைத்து நன்மைகள் கடப்பாடுகளினதும் மொத்தத்திலும் பார்க்க குறைவாகக் காணப்பட்டதன் மூலம் ரூ.3,599.035 மில்லியன் (2013 - ரூ.4,936.339 மில்லியன்) கொண்ட பற்றாக்குறை தோன்றியது.

43.1 ஓய்வூதியமும் தொழில்நிலைக்குப் பின்னரான ஏனைய நன்மைகள் திட்டங்களும் (தொடர்ச்சி)

| 2014 நன்மைப் பொறுப்புக்கள் / (சொத்துக்கள்) | ஊழியர் ஓய்வூதியத் திட்டம் ரூ.000 | விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் ரூ.000 | விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் ரூ.000 | பணிக் கொடைத் திட்டம் ரூ.000 | மருத்துவ நலன்கள் திட்டம் ரூ.000 | மொத்தம் 2014 ரூ.000 |
|---|---|---|---|---|---|---|
| நன்மைக் கடப்பாட்டின் நடைமுறைப் பெறுமதி | **28,883,317** | **4,179,572** | **725,176** | **230,186** | **1,904,495** | **35,922,746** |
| திட்டச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதி | **(24,273,554)** | **(5,054,224)** | **(1,594,306)** | **(132,733)** | **(1,268,894)** | **(32,323,711)** |
| **நன்மைப் பொறுப்பு/ (சொத்து) நடைமுறையல்லாதவை** | **4,609,763** | **(874,652)** | **(869,130)** | **97,453** | **635,601** | **3,599,035** |
| **நன்மைப் பொறுப்பு/ (சொத்து)களிலான அசைவு** | | | | | | |
| 2014 சனவரி 01இல் உள்ளவாறு | **5,508,804** | **(492,159)** | **(734,320)** | **78,253** | **575,761** | **4,936,339** |
| நன்மைகளுக்கான செலவு | **1,163,340** | **(49,216)** | **(73,432)** | **35,846** | **125,700** | **1,202,238** |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொகை | **(1,105,279)** | **(310,474)** | **(52,502)** | **3,064** | **(22,412)** | **(1,487,603)** |
| செலுத்தப்பட்ட பங்களிப்பு | **(957,102)** | **(22,803)** | **(8,876)** | **(19,710)** | **(43,448)** | **(1,051,939)** |
| **2014 திசெம்பர் 31இல் உள்ளவாறான நடைமுறையல்லாதவை** | **4,609,763** | **(874,652)** | **(869,130)** | **97,453** | **635,601** | **3,599,035** |
| **நன்மைகளுக்கான செலவுகள்** | | | | | | |
| நன்மைக் கடப்பாடுகளின் மீது வட்டிச் செலவினம் | **550,881** | **(49,216)** | **(73,432)** | **7,825** | **57,576** | **493,634** |
| தேறிய நடைமுறைப் பணிச் செலவினங்கள் | **612,459** | **-** | **-** | **28,021** | **68,124** | **708,604** |
| **தேறிய நன்மைகளுக்கான செலவுகள்** | **1,163,340** | **(49,216)** | **(73,432)** | **35,846** | **125,700** | **1,202,238** |
| **திட்டமிடப்பட்ட சொத்துக்கள் மீதான உண்மையான வருமானம்** | **3,269,674** | **773,111** | **205,286** | **10,476** | **175,870** | **4,434,417** |
| **சராசரி நிலுவையின் சதவீதமாக திட்டமிடப்பட்ட சொத்தின் உண்மையான வருவாய்** | **14.32%** | **16.18%** | **13.74%** | **8.78%** | **14.31%** | **14.56%** |
| **செலுத்தப்பட்ட நன்மைகள் மீது ஈட்டிய மிகை வட்டி** | **1,934,458** | **526,475** | **191,404** | **7,236** | **36,563** | **2,696,136** |
| **திட்டச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதியிலான மாற்றங்கள்** | | | | | | |
| ஆண்டின் ஆரம்பத்தில் திட்டச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதி | **21,381,994** | **4,504,946** | **1,394,026** | **105,787** | **1,188,883** | **28,575,636** |
| திட்டச் சொத்துக்களின் உண்மை வருவாய் | **3,269,674** | **773,111** | **205,286** | **10,476** | **175,870** | **4,434,417** |
| பெறப்பட்ட பங்களிப்புக்கள் | **957,102** | **22,803** | **8,876** | **19,710** | **43,448** | **1,051,939** |
| செலுத்தப்பட்ட நன்மைகள் | **(1,335,216)** | **(246,636)** | **(13,882)** | **(3,240)** | **(139,307)** | **(1,738,281)** |
| **ஆண்டின் இறுதியில் திட்டச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதி** | **24,273,554** | **5,054,224** | **1,594,306** | **132,733** | **1,268,894** | **32,323,711** |
| **2013** | | | | | | |
| **நன்மைப் பொறுப்புக்கள்/(சொத்து)** | | | | | | |
| நன்மைகள் கடப்பாட்டின் தற்போதைய பெறுமதி | 26,890,798 | 4,012,787 | 659,706 | 184,040 | 1,764,644 | 33,511,975 |
| திட்டச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதி | (21,381,994) | (4,504,946) | (1,394,026) | (105,787) | (1,188,883) | (28,575,636) |
| **நன்மைப் பொறுப்புக்கள்/(சொத்துக்கள்) நடைமுறையல்லாதவை** | 5,508,804 | (492,159) | (734,320) | 78,253 | 575,761 | 4,936,339 |
| **நன்மைப் பெறுப்புக்களின்/(சொத்துகளின்) அசைவு** | | | | | | |
| 2013 சனவரி 01இல் | 4,576,066 | (650,436) | (646,013) | 70,224 | 482,847 | 3,832,688 |
| நன்மைகளுக்கான செலவு | 919,024 | (65,044) | (64,601) | 33,325 | 106,613 | 929,317 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொகை | 335,057 | 247,277 | (14,080) | (5,586) | 29,749 | 592,417 |
| செலுத்தப்பட்ட பங்களிப்பு | (321,343) | (23,956) | (9,626) | (19,710) | (43,448) | (418,083) |
| **2013 திசெம்பர் 31இல் நடைமுறையல்லாதவை** | 5,508,804 | (492,159) | (734,320) | 78,253 | 575,761 | 4,936,339 |

43.1 ஓய்வூதியமும் தொழில்நிலைக்குப் பின்னரான ஏனைய நன்மைகள் திட்டங்களும் (தொடர்ச்சி)

| 2013<br>நன்மைகளுக்கான செலவு | ஊழியர் ஓய்வூதியத் திட்டம்<br>ரூ.000 | விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்<br>ரூ.000 | விதுரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்<br>ரூ.000 | பணிக் கொடைத் திட்டம்<br>ரூ.000 | மருத்துவ நலன்கள் திட்டம்<br>ரூ.000 | மொத்தம் 2013<br>ரூ.000 |
|---|---|---|---|---|---|---|
| நன்மைக் கடப்பாடுகள் மீதான வட்டிச் செலவு | 457,606 | (65,044) | (64,601) | 7,022 | 48,285 | 383,268 |
| தேறிய நடைமுறைப் பணிச் செலவு | 461,418 | - | - | 26,303 | 58,328 | 546,049 |
| **தேறிய நன்மைச் செலவினம்** | 919,024 | (65,044) | (64,601) | 33,325 | 106,613 | 929,317 |
| **திட்டமிடப்பட்ட சொத்துக்கள் மீதான உண்மையான வருமானம்** | 2,677,443 | 610,533 | 187,353 | 11,693 | 170,945 | 3,657,967 |
| சராசரி நிலுவையின் சதவீதமாக திட்டமிடப்பட்ட சொத்தின் உண்மையான வருவாய் | 13.06% | 14.19% | 14.39% | 12.90% | 14.92% | 13.38% |
| **செலுத்தப்பட்ட நன்மைகள் மீது ஈட்டிய மிகை வட்டி** | 1,425,146 | 382,691 | 174,056 | 10,599 | 42,645 | 2,035,137 |
| **ப.க.நி. 19 இற்கிணங்க அடுத்த ஆண்டிற்கான எதிர்பார்க்கப்பட்ட வருவாய்கள்** | 2,138,199 | 450,495 | 139,403 | 10,579 | 118,888 | 2,857,564 |
| **அடுத்த ஆண்டு எதிர்பார்க்கப்படும் கொடுப்பனவு** | 1,223,134 | 249,140 | 25,319 | 7,303 | 135,485 | 1,640,381 |
| **திட்டச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதியிலான மாற்றங்கள்** | | | | | | |
| ஆண்டின் ஆரம்பத்தில் திட்டச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதி | 19,635,505 | 4,098,299 | 1,210,344 | 75,478 | 1,102,790 | 26,122,416 |
| திட்டச் சொத்துக்களின் உண்மை வருவாய் | 2,677,443 | 610,533 | 187,353 | 11,693 | 170,945 | 3,657,967 |
| பெறப்பட்ட பங்களிப்புக்கள் | 321,343 | 23,956 | 9,626 | 19,710 | 43,448 | 418,083 |
| செலுத்தப்பட்ட நன்மைகள் | (1,252,297) | (227,842) | (13,297) | (1,094) | (128,300) | (1,622,830) |
| **ஆண்டின் இறுதியில் திட்டச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதி** | 21,381,994 | 4,504,946 | 1,394,026 | 105,787 | 1,188,883 | 28,575,636 |

அனைத்துத் திட்டங்களுக்குமான ஊழியர் நன்மைகளின் கடப்பாடுகளைத் தீர்மானிக்கின்ற போது பயன்படுத்தப்பட்ட முக்கியமான எடுகோள்கள் பின்வருமாறு காட்டப்படுகின்றன:

| | 2014 | 2013 |
|---|---|---|
| கழிவு வீதம் | **10.00%** | 10.00% |
| சொத்துக்களின் மீதான எதிர்பார்க்கப்பட்ட திரும்பல் வீதம் | **10.00%** | 10.00% |
| எதிர்காலச் சம்பள அதிகரிப்பு | **8.50%** | 8.50% |
| எதிர்கால ஓய்வூதிய அதிகரிப்பு | **7.50%** | 7.50% |
| எஞ்சியுள்ள சராசரி பணி ஆண்டுகள் | | |
| இ.ம. வங்கி ஓய்வூதியம் | **27 ஆண்டுகள்** | 27 ஆண்டுகள் |
| விதவை அனாதை ஓய்வூதியத் திட்டம் | **27 ஆண்டுகள்** | 27 ஆண்டுகள் |
| விதுரர் அநாதை ஓய்வூதியத் திட்டம் | **27 ஆண்டுகள்** | 27 ஆண்டுகள் |
| பணிக் கொடைத் திட்டம் | **21 ஆண்டுகள்** | 21 ஆண்டுகள் |
| இ.ம. வங்கி மருத்துவ நலத் திட்டம் | **31 ஆண்டுகள்** | 31 ஆண்டுகள் |
| ஓய்வுபெறும் வயது | **60 ஆண்டுகள்** | 60 ஆண்டுகள் |

## 44. சந்தைப் பெறுமதி வெளிப்படுத்தல்கள்

### (அ) நிதியியல் சாதனங்களின் சந்தைப் பெறுமதி

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் சந்தைப் பெறுமதி என்பது புரிந்துணர்வும் விருப்பமுமுள்ள தரப்பினர்களிடையே நடைபெறுகின்ற சுதந்திரமான கொடுக்கல்வாங்கலின் போது, சொத்தொன்றைப் பரிமாறிக் கொள்வதற்கு அல்லது பொறுப்பொன்றைத் தீர்த்து வைப்பதற்கு ஏற்புடையதான பணத் தொகையாகும். விற்பனை செய்பவருக்கு எதிராக விலை அசைவொன்று ஏற்படாத விதத்தில் குறிப்பிடத்தக்கதொரு கொடுக்கல்வாங்கலை உள்ளீர்த்துக் கொள்ள முடியுமானவாறு ஒழுங்கமையப் பெற்றதும் திரவத் தன்மையுடன் கூடியதுமான சந்தையில் நிதியியல் சாதனமொன்று விற்பனை செய்யப்படுகின்ற போது குறிப்பிடப்பட்ட நியாயப் பெறுமதி சந்தைப் பெறுமதியாகும்.

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் சந்தைப் பெறுமதியினை மதிப்பீட்டு தொழில் நுணுக்கத்தின்படி தீர்மானிப்பதற்கும் வெளிப்படுத்துவதற்குமாக வங்கி பின்வரும் படிமுறையினைப் பயன்படுத்துகிறது.

மட்டம் 1: ஒத்த தன்மையான சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களுக்காக தீவிரமான சந்தைகளில் விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட (சீராக்கப்படாத) விலைகள்.

மட்டம் 2: பதிவு செய்யப்பட்ட சந்தைப் பெறுமதி மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தினை கொண்டுள்ள அனைத்து உள்ளீடுகளுக்குமான ஏனைய தொழில் நுணுக்கங்கள் ஒன்றில் நேரடியாக அல்லது மறைமுகமாக அவதானிக்கப்படுகின்றன.

மட்டம் 3: பதிவு செய்யப்பட்ட சந்தைப் பெறுமதி மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தினைக் கொண்டுள்ள உள்ளீடுகளைப் பயன்படுத்தும் தொழில் நுணுக்கம் அவதானிக்கத்தக்க சந்தைத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை.

பின்வரும் அட்டவணை சந்தைப் பெறுமதிப் படிமுறையில் பதிவு செய்யப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் பகுப்பாய்வொன்றினைத் தருகின்றது.

| | மட்டம் 1 ரூ.000 | மட்டம் 2 ரூ.000 | மட்டம் 3 ரூ.000 | மொத்தம் ரூ.000 |
|---|---|---|---|---|
| **2014 திசெம்பர் 31** | | | | |
| **நிதியியல் சொத்துக்கள்** | | | | |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் | 61,495,307 | - | - | 61,495,307 |
| விற்பனைக்கு கிடைக்கக்கூடிய முதலீடுகள் | 408,189,500 | - | - | 408,189,500 |
| பெறுதிகள் | - | 1,580,237 | - | 1,580,237 |
| | 469,684,807 | 1,580,237 | - | 471,265,044 |
| **வெளிநாட்டு நாணயம் நிதியல்லாச் சொத்துக்கள்** | | | | |
| தங்கம் | 100,190,635 | | | 100,190,635 |
| | 100,190,635 | - | - | 100,190,635 |
| **ஏனைய நிதியல்லாச் சொத்துக்கள்** | | | | |
| காணி | - | - | 5,833,100 | 5,833,100 |
| கட்டடம் | | | 7,814,883 | 7,814,883 |
| | - | - | 13,647,983 | 13,647,983 |
| **நிதியியல் பொறுப்புக்கள்** | | | | |
| உள்ளடக்கப்பட்ட பெறுதிகள் - நாணயத் தேர்வுகள் | - | - | 16,350,511 | 16,350,511 |
| பெறுதிகள் | | 2,758,520 | - | 2,758,520 |
| | - | 2,758,520 | 16,350,511 | 19,109,031 |

| | மட்டம் 1 ரூ.000 | மட்டம் 2 ரூ.000 | மட்டம் 3 ரூ.000 | மொத்தம் ரூ.000 |
|---|---|---|---|---|
| **2013 திசெம்பர் 31** | | | | |
| **நிதியியல் சொத்துக்கள்** | | | | |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் | 94,137,368 | - | - | 94,137,368 |
| விற்பனைக்கு கிடைக்கக்கூடிய முதலீடுகள் | 357,531,750 | - | - | 357,531,750 |
| பெறுதிகள் | - | 5,670,258 | - | 5,670,258 |
| | 451,669,118 | 5,670,258 | - | 457,339,376 |
| **வெளிநாட்டு நாணயம் நிதியல்லாச் சொத்துக்கள்** | | | | |
| தங்கம் | 95,601,221 | - | - | 95,601,221 |
| | 95,601,221 | - | - | 95,601,221 |
| **ஏனைய நிதியல்லாச் சொத்துக்கள்** | | | | |
| காணி | - | - | 5,433,100 | 5,433,100 |
| கட்டடம் | - | - | 7,707,380 | 7,707,380 |
| | - | - | 13,140,480 | 13,140,480 |
| **நிதியியல் பொறுப்புக்கள்** | | | | |
| உள்ளடக்கப்பட்ட பெறுதிகள் - நாணயத் தேர்வுகள் | - | - | 10,162,977 | 10,162,977 |
| பெறுதிகள் | - | 6,020,305 | - | 6,020,305 |
| | - | 6,020,305 | 10,162,977 | 16,183,282 |

**காணி மற்றும் கட்டடம்**

**மதிப்பிடப்படும் முறை**

தலைமை அலுவலகக் கட்டடத்தின் உயர்ந்த வர்த்தகத் தன்மையினைப் பரிசீலனையில் கொண்டு தலைமை அலுவலகத்தினை மதிப்பீடு செய்வதற்கு கழிவிடப்பட்ட காசுப்பாய்ச்சல் முறை பயன்படுத்தப்பட்டது. மற்றைய கட்டடங்கள் குறிப்பிட்ட மேம்பாடுகளுக்குப் பதிலாக நடைமுறைச் செலவுகளைக் கணிப்பதன் மூலமும் தேய்மானத்திற்காக கிட்டத்தட்ட ஏற்படும் தொகையினைக் கழிப்பதன் மூலமும் மதிப்பிடப்படுகிறது.

தற்போதைய சந்தைப் பெறுமதியைப் பெறுவதன் மூலம் காணி மதிப்பிடப்படுகிறது.

**மதிப்பிடலுக்குப் பயன்படுத்தப்பட்ட எடுகோள்கள்**

காணி மற்றும் கட்டடத்தின் உணர்திறன் பகுப்பாய்விற்குப் பயன்படுத்தப்பட்ட முதன்மை எடுகோள்கள் கீழே காட்டப்படுகின்றன:

| | |
|---|---|
| கழிவிடல் வீதம் | 6.5% |
| வாடகை அதிகரிப்பு | 5% |
| வெளிச்செல்லல் | 45% |

44. நிதியியல் சாதனங்கள் (தொடர்ச்சி)

**தலைமை அலுவலக காணி மற்றும் கட்டடத்திற்கான உணர்திறன் பகுப்பாய்வு**

| கழிவிடல் வீதம் | வாடகை அதிகரிப்பு | வெளிச் செல்லல் | காணி ரூ.000 | கட்டடம் ரூ.000 |
|---|---|---|---|---|
| 5% | 5% | 45% | 3,548,316 | 6,386,765 |
| 6% | 5% | 45% | 2,906,605 | 5,231,722 |
| 7% | 5% | 45% | 2,453,546 | 4,416,242 |
| 7% | 4% | 45% | 2,297,649 | 4,135,637 |
| 6% | 4% | 45% | 2,714,813 | 4,886,508 |
| 6% | 5% | 45% | 2,906,605 | 5,231,722 |
| 6% | 6% | 45% | 3,112,269 | 5,601,906 |
| 6% | 5% | 40% | 3,170,842 | 5,707,333 |
| 6% | 5% | 45% | 2,906,605 | 5,231,722 |
| 6% | 5% | 50% | 2,642,368 | 4,756,111 |

**கூட்டுறுதிச் சொத்துக்கள் - நியூயோர்க்**

**மதிப்பீட்டு முறை**

சுயாதீனமான மதிப்பிட்டாளர் விற்பனை ஒப்பீட்டு அணுகுமுறையினை விதந்துரைத்திருக்கின்றார். இது பதிலீட்டுக் கோட்பாட்டின் அடிப்படையில் சொத்துக்களை மதிப்பிடுகிறது. அதாவது இம்மதிப்பீட்டினை சந்தைப் பங்கேற்பாளர் இதேபோன்ற சொத்திற்கான கையேற்பாளராக செலுத்துதல் வேண்டும்.

**விற்பனை ஒப்பீட்டு அணுகுமுறை**

2014 திசெம்பர் 2014 இல் உள்ளவாறானது

| | |
|---|---|
| அளவு (வாடகைக்கு விடத்தக்க சதுர அடி) | 12,726 |
| | ஐ.அ.டொலர் |
| பிரயோகிக்கப்பட்ட சதுர அடிக்கான அலகுப் பெறுமதி | 550 |
| சொத்தின் சந்தைப் பெறுமதி | 6,999,300 |
| **சொத்தின் சந்தைப் பெறுமதி (ஏறத்தாழ)** | **7,000,000** |

**விற்பனை ஒப்பிட்டு அணுகுமுறையில் பயன்படுத்தப்பட்ட பிரமாணங்கள் தொடர்பான உணர்திறன் பகுப்பாய்வு - நியூயோர்க் சொத்து**

| பிரமாணம் | விபரணம் | பிரணமாத்தில் மாற்றம் | சீராக்கம் | கூட்டுப் பெறுமதியிலான தாக்கம் (ஐ.அ.டொலர்) |
|---|---|---|---|---|
| நிதியிடல் | கொடுக்கல்வாங்கல்களுக்கான காசு நிதியிடல் கழிவிடல் என்பது கொள்வனவு விலை எதிர் கடன்/ ஈடு வைக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் மீது பொதுவாகப் பெறப்படுவதாகும். | காசுக் கொள்வனவு | 5% கொண்ட கீழ் நோக்கிய சீராக்கம் | -350,000 |
| | | கடன் கொள்வனவு | 5% கொண்ட மேல் நோக்கிய சீராக்கம் | 350,000 |
| சந்தை நிலைமைகள் | உண்மைச் சொத்துச் சந்தை நிலைமைகளைக் குறிக்கிறது. உதாரணமாக சந்தை நிலைமைகள் 2013இன் நிலைமைகளுடன் ஒப்பிடுகையில் 2014இல் சாதகமாக உள்ளன. | சாதகமான நிலைமைகள் | 5-10% கொண்ட கீழ் நோக்கிய சீராக்கம் | -350,000 இலிருந்து -700,000 |
| | | சாதகமற்ற நிலைமைகள் | 5-10% கொண்ட மேல் நோக்கிய சீராக்கம் | +350,000 இலிருந்து +700,000 |
| அளவு | பாரிய அலகுகளின் பொருளியல் சிக்கனம் ஒப்பீட்டு அடிப்படையில் சிறிய அலகுகளுடன் ஒப்பிடுகையில் கூடுதலாக இருப்பதனால் அவை பொதுவாக கழிவுடன் விற்பனை செய்யப்படுகின்றன | பாரிய சொத்துக்கள் | 5% கொண்ட கீழ் நோக்கிய சீராக்கம் | -350,000 |
| | | சிறிய சொத்துக்கள் | 5% கொண்ட மேல் நோக்கிய சீராக்கம் | 350,000 |
| தரை உயரம் | பொதுவாக தரைமட்ட உயர அதிகரிப்பு, கூட்டுறுதித் தொகுதி அலகின் விலையை உயர்த்தும் | அதிகரிக்கின்ற தரை மட்டம் | தரையொன்றிற்கு 1% கொண்ட மேல் நோக்கிய சீராக்கம் | -70,000 |
| | | குறைவடைகின்ற தரை மட்டம் | தரையொன்றிற்கு 1% கொண்ட மேல் நோக்கிய சீராக்கம் | 70,000 |

**உள்ளடக்கப்பட்ட பெறுதிகள் - நாணயத் தேர்வுகள்**

உள்ளடக்கப்பட்ட பெறுதிச் சாதனங்களின் சந்தைப் பெறுமதி பிளாக் ஸ்கூல்ஸ்சின் மாதிரியைப் பயன்படுத்திக் கணிக்கப்பட்டது.

| | மட்டம் 3 தேர்வுகள் ரூ.000 | மொத்தம் ரூ.000 |
|---|---|---|
| தொடக்க மீதி | 10,162,977 | 10,162,977 |
| பெறுதிப் பொறுப்புக்கள் | 6,187,534 | 6,187,534 |
| முடிவு மீதி | 16,350,511 | 16,350,511 |
| வருவாய்களில் உள்ளடக்கப்பட்ட மொத்தத் தேறல் செய்யப்படாத இலாபங்கள் | 1,239,699 | 1,239,699 |

**பயன்படுத்தப்பட்ட குறிப்பிடத்தக்களவிற்கு அவதானிக்கப்படாத உள்ளீடு**

| | |
|---|---|
| கழிவிடல் வீதம் | 10% |
| தளம்பல் | 5% |

| உணர்திறன் பகுப்பாய்வு | கழிவிடல் வீதம் 9% ரூ.000 | கழிவிடல் வீதம் 11% ரூ.000 | தளம்பல்கள் 4% ரூ.000 | தளம்பல்கள் 6% ரூ.000 |
|---|---|---|---|---|
| உள்ளடக்கப்பட்ட பெறுதிகள் - நாணயத் தேர்வுகள் | 17,338,572 | 15,540,084 | 14,849,574 | 17,696,309 |

| **உள்ளடக்கப்பட்ட தேர்வுகளிலுள்ள பிற்போடப்பட்ட சொத்து** | **2014 ரூ.000** | **2013 ரூ.000** |
|---|---|---|
| சனவரி 1இல் உள்ளவாறு நிலுவை | (27,578,100) | - |
| தீர்ப்பனவுக் கட்டணம் | 8,635,798 | - |
| தீர்க்கப்பட வேண்டிய கட்டணம் | (6,890,540) | (27,578,100) |
| திசெம்பர் 31இல் உள்ளவாறு நிலுவை | (25,832,841) | (27,578,100) |

(ஆ) மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகள்

உடன்படிக்கைகளின் குறுகிய கால இயல்பின் காரணமாக மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுகளின் அறிக்கையிடப்பட்ட பெறுமதி சந்தைப் பெறுமதியை அண்மித்ததாக இருக்கும் எனக் கருதப்படுகிறது. 2014 திசெம்பர் 31இல் மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட இலங்கை அரச பிணையங்களின் ஏட்டுப் பெறுமதி ரூ.321,220 மில்லியனாக இருந்ததுடன் (2013 - ரூ.84,601 மில்லியன்) துணைநில் வைப்பு வசதி ரூ.7,032 மில்லியனாக (2013 - ரூ. இல்லை) காணப்பட்டது. மீள்கொள்வனவிற்கான உடன்படிக்கையின் கீழ் மத்திய வங்கிப் பிணையங்கள் எதுவும் விற்கப்படவில்லை (2013இல் ஒன்றுமில்லை). மீள் விற்பனைக்கான உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட இலங்கை அரச பிணையங்களின் ஏட்டுப் பெறுமதி 2014 திசெம்பர் 31இல் ரூ.2,650 மில்லியனாக இருந்தது (2013 - ரூ.129.30 மில்லியன்).

(இ) சுற்றோட்டத்திலுள்ள நாணயம்

சுற்றோட்டத்திலுள்ள நாணயங்களின் சந்தைப் பெறுமதியானது, நிதிக் கூற்றில் அறிக்கையிடப்பட்டுள்ளவாறு அவற்றின் முகப்புப் பெறுமதியாகக் கருதப்படுகிறது.

(ஈ) வைப்புக்கள்

கோரப்படுகின்ற போது செலுத்தப்பட வேண்டுமாதலால் வைப்புக்களின் ஏட்டுப் பெறுமதியானது சந்தைப் பெறுமதியை அண்மித்ததாக இருக்குமெனக் கருதப்படுகிறது.

(உ) சந்தைப் பெறுமதி மற்றும் சந்தைப் பெறுமதி படிநிலைகளை நிர்ணயித்தல்

வங்கியின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கொண்டு செல்லும் பெறுமதிகளும் சந்தைப் பெறுமதிகளும் வகையின்படியான ஒப்பீட்டுடன் கீழே தரப்பட்டுள்ளன:

| சந்தைப் பெறுமதி | எடுத்துச் செல்லப்படும் தொகை | | சந்தைப் பெறுமதி | |
|---|---|---|---|---|
| | 2014<br>ரூ.000 | 2013<br>ரூ.000 | 2014<br>ரூ.000 | 2013<br>ரூ.000 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | **487,070,771** | 425,676,763 | **487,070,771** | 425,676,763 |
| வெளிநாட்டு நாணய வர்த்தகம்/ விற்பனைக்கான பிணையங்கள் | **469,684,807** | 451,669,118 | **469,684,807** | 451,669,118 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | **1,580,237** | 5,670,258 | **1,580,237** | 5,670,258 |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | **79,816,029** | 85,400,764 | **79,816,029** | 85,400,764 |
| ஏனைய பெறத்தக்கவை | **7,105,914** | 591 | **7,105,914** | 591 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | **1,045,257,758** | 968,417,494 | **1,045,257,758** | 968,417,494 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | |
| இலங்கை அரச பிணையங்கள் | **124,443,452** | 15,853,513 | **124,072,219** | 15,810,695 |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் | **143,897,971** | 109,167,071 | **143,897,971** | 109,167,071 |
| வங்கிகளுக்கான கடன்கள் | **1,489,372** | 1,375,396 | **1,398,678** | 1,215,303 |
| ஏனைய பெறத்தக்கவை | **1,912,071** | 1,829,712 | **1,912,071** | 1,829,712 |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களின் பங்குரிமை மூலதனம் | **41,095** | 41,095 | **41,095** | 41,095 |
| ஏனைய சொத்துக்கள் | **8,107,914** | 6,443,534 | **5,712,113** | 4,845,310 |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | **279,891,874** | 134,710,321 | **277,034,146** | 132,909,186 |
| **மொத்த நிதியியல் சொத்துக்கள்** | **1,325,149,632** | 1,103,127,815 | **1,322,291,904** | 1,101,326,680 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல்லாச் சொத்துக்கள்** | | | | |
| ஒதுக்கப்பட்ட தங்கம் | **100,190,635** | 95,601,221 | **100,190,635** | 95,601,221 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல்லாச் சொத்துக்கள்** | **100,190,635** | 95,601,221 | **100,190,635** | 95,601,221 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | **11,678,483** | 21,504,196 | **11,678,483** | 21,504,196 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | **19,207,822** | 16,183,282 | **19,207,822** | 16,183,282 |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம் | **57,230,304** | 37,301,553 | **57,230,304** | 37,301,553 |
| ப.நா.நிதியம் | **308,011,133** | 422,032,012 | **308,011,133** | 422,032,012 |
| ஏனையவை | **72,146,159** | 47,221,119 | **72,146,159** | 47,221,119 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | **468,273,901** | 544,242,162 | **468,273,901** | 544,242,162 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | |
| வர்த்தக வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | **161,009,323** | 148,809,893 | **161,009,323** | 148,809,893 |
| அரச, அரச நிறுவனங்களின் வைப்புக்கள் | **311,950** | 416,230 | **311,950** | 416,230 |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | **328,252,000** | 84,601,000 | **328,252,000** | 84,601,000 |
| ஊழியர் நலத் திட்டங்களுடனான நிலுவைகள் | **2,209,782** | 2,419,087 | **2,209,782** | 2,419,087 |
| ஏனைய செலுத்தத்தக்கவை | **8,939,293** | 5,659,718 | **8,939,293** | 5,659,718 |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | **500,722,348** | 241,905,928 | **500,722,348** | 241,905,928 |
| **மொத்த நிதியியல் பொறுப்புக்கள்** | **968,996,249** | 786,148,090 | **968,996,249** | 786,148,090 |

## 45. ஒப்பீட்டு ரீதியான தகவல்கள்

| அ) முன்னர் அறிக்கையிடப்பட்டவாறு | 2013 ரூ.000 |
|---|---|
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | |
| ஏனைய சொத்துக்கள் | 6,443,534 |
| **உள்நாட்டு நாணய நிதியியல்லாச் சொத்துக்கள்** | |
| ஏனைய பெறத்தக்கவையும் முற்கொடுப்பனவுகளும் | 29,910,697 |

| தற்போதைய சமர்ப்பிப்பு: | 2014 ரூ.000 | 2013 ரூ.000 |
|---|---|---|
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | |
| ஏனைய சொத்துக்கள் | **8,107,914** | 7,326,533 |
| **உள்நாட்டு நாணய நிதியியல்லாச் சொத்துக்கள்** | | |
| ஏனைய பெறத்தக்கவையும் முற்கொடுப்பனவுகளும் | **27,446,864** | 29,027,698 |

2013இல் ஏனைய பெறத்தக்கவை மற்றும் முற்கொடுப்பனவுகளில் உள்ளடக்கப்பட்டிருந்த அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் முதலீட்டினது ரூ.882.999 மில்லியன் கொண்ட வருமானம் அதிலிருந்து நீக்கப்பட்டதுடன், 2014இல் சிறந்த சமர்ப்பியலுக்காக ஏனைய சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டது.

## 46 தொடர்புடைய தரப்பினர்கள்

### 46.1 அரச மற்றும் அரசினால் கட்டுப்படுத்தப்படுகின்ற நிறுவனங்களுடனான கொடுக்கல்வாங்கல்கள்

மத்திய வங்கியின் வழமையான வியாபாரத்தின் போது தொடர்புடைய தரப்பினர்களோடு கொடுக்கல்வாங்கலில் ஈடுபடுகின்றது. தொடர்புடைய தரப்பினரால் இலங்கை அரசாங்கம் (அரசு: வங்கியின் உரிமையாளர் என்ற ரீதியில்), பல்வேறு அரச திணைக்களங்கள், அரசின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட நிறுவனங்கள் என்பன உள்ளடங்குகின்றன. பன்னாட்டு கணக்கீட்டு நியமங்கள் 24 - திருத்தப்பட்ட தொடர்புடைய தரப்பினரின் வெளிப்படுத்தல்களுக்கமைய வங்கியினால் அரசுடனும் அரசின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட நிறுவனங்களுடனும் மேற்கொள்ளப்பட்ட தனித்தனியாக முக்கியத்துவம் வாய்ந்ததும் தனித்தனியாக முக்கியத்துவமில்லாத ஏனைய ஒன்றுசேர்ந்த கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் ஏற்பாடுகளின் விபரங்கள் பின்வருமாறு:

| கொடுக்கல்வாங்கலின் இயல்பு | 2014 ரூ.000 | 2013 ரூ.000 |
|---|---|---|
| **கொடுக்கல்வாங்கல்கள்:** | | |
| மத்திய வங்கியினால் வைத்திருக்கப்படுகின்ற இலங்கை அரச பிணையங்கள் (அ) | **121,793,452** | 2,923,513 |
| அரச பிணையங்களின் உடனடி விற்பனை | - | 61,099,000 |
| மீள்கொள்வனவு/விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு/விற்பனை செய்யப்பட்ட இ.ம.வ. மற்றும் அரச பிணையங்கள் | **3,723,185,303** | 2,605,097,956 |
| திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டில் நாணயத் தாள்களை அச்சிடுவதற்கான செலவினம் (ஈ) | **851,816** | 954,259 |
| திசெம்பர் 31இல் உள்ளவாறான இ.ம. வங்கியினால் வழங்கப்பட்ட உத்தரவாதங்கள் (குறிப்பு 47.2) | **2,577,998** | 2,561,264 |
| 2013 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான பொருட்கள், பணிகள் மற்றும் வரிகளுக்கான கொடுப்பனவுகள்(உ) | **603,729** | 405,650 |
| இவ்வாண்டில் அரசிற்கு செலுத்தப்பட்ட மிகை (குறிப்பு 30) | **8,500,000** | 25,000,000 |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் (குறிப்பு 9) | **143,897,971** | 109,167,071 |
| குறிப்பிட்ட நோக்கங்களுக்காக வைத்திருக்கப்பட்ட அரச பிணையங்கள் | **1,380,689** | 1,219,657 |
| ஆண்டினுள் மொத்த வெளிநாட்டு செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் (எ) | | |
| விற்பனை | **54,983,877** | 43,991,178 |
| கொள்வனவு | **102,063,864** | 40,884,447 |
| ஐ.அ.டொலர்/ இல. ரூபா பெறுதிகள் | **484,476,757** | 277,458,818 |
| மீள்நிதியிடல் (ஓ) | **10,943,022** | 6,492,418 |
| லங்கா கிளியர் மற்றும் கொடுகடன் தகவல் பணியத்திலிருந்து பெற்ற பங்கிலாப வருமானம் | **22,014** | 14,811 |
| லங்கா கிளியர் (பிறைவேட்) லிமிடெட்டிற்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் | **567** | 643 |
| ஆலோசனை, தொடர்பூட்டல், மதியுரை மற்றும் தொழில்சார் நிபுணத்துவக் கட்டணங்கள் (ஏ) | **1,396,223** | - |
| **நிலுவைகள்:** | | |
| சுசகன கட்டம் 1 மற்றும் 2 இன் கீழ் வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் மாகாண அபிவிருத்திக் கொடுகடன் திட்டம், சௌபாக்கிய கடன் திட்டம், வடக்கின் எழுச்சிக் கடன் திட்டம் (கட்டம் II), கிழக்கில் பொருளாதார நடவடிக்கைகளை மீள ஆரம்பித்தல் (கட்டம் II) மற்றும் வடக்கு மற்றும் கிழக்கில் சேதமடைந்த வீடுகளைத் திருத்துதல் | **877,513** | 1,242,405 |
| அ.நே.மொ.தீ. நிலுவைகள் - வங்கிகள் நிதியியல் நிறுவனங்களுடன் | **84,976,155** | 77,899,164 |
| இலங்கை வங்கி இலண்டனுடனான நொஸ்ரோ கணக்கு நிலுவைகள் | **137,486** | 106,922 |
| திறைசேரி மற்றும் ஏனைய அமைச்சுக்களிடமிருந்து பெறத்தக்கவை | **1,399,832** | 1,394,987 |
| பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திலிருந்து பெறத்தக்கவை (ஔ) | **283,114** | 333,114 |
| நிதி திட்டமிடல் அமைச்சிற்கு கொடுபடத்தக்கவை (குறிப்பு 20) | **8,017,222** | 29,052,050 |
| அரச மற்றும் அரச முயற்சிகளுடனான நடைமுறைக் கணக்கு நிலுவைகள் திசெம்பர் 31இல் உள்ளவாறு | **30,023** | 172,571 |
| லங்கா கிளியரிலான முதலீடுகள் | **29,500** | 29,500 |
| கொடுகடன் தகவல் பணியகத்திலான முதலீடுகள் | **5,845** | 5,845 |
| ஏனைய கொடுக்கல்வாங்கல்களும் நிலுவைகளும் (க) | **950,931** | 1,076,631 |

அ) உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களமானது வங்கியின் நிதிக் கொள்கையை அமுல்படுத்தும் நேரடித் தொழிற்பாட்டை, பிரதானமாக 1949ஆம் ஆண்டு 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் (திருத்தப்பட்டவாறானது) 90 - 92ஆம் பிரிவின் படியாக, திறந்த சந்தை நடவடிக்கைகளினூடாக செயற்படுத்துவதுடன் நாணய விதிச் சட்டத்தின் 93 - 98 பிரிவுகளின் படியான நிதி ஒதுக்குத் தேவைப்பாடுகளையும் அமுல்படுத்துவதோடு, அரசாங்கம் பங்குடமைகளைக் கொண்டுள்ள வணிக நிறுவனங்களினதும் வேறும் சில நிதி நிறுவனங்களினதும், அரச நிறுவனங்களினதும் வங்கியாகவும் தொழிற்படுகிறது. 2014 திசெம்பர் 31ஆம் திகதியன்று இந்தத் தொழிற்பாட்டின் நிமித்தமாக எழும் திரண்ட நிலுவைகள், குறிப்பு 21 மற்றும் 22இல் தரப்பட்டுள்ளன. அரச பிணையங்களிலிருந்து உழைக்கப்பட்ட வட்டி குறிப்பு 31 இல் தரப்பட்டுள்ளது.

ஆ) நாணய விதிச் சட்டத்தின் 28 - 33 பிரிவுகளினால் அதிகாரம் அளிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வைத் திணைக்களமானது இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபையால் உரிமம் வழங்கப்பட்ட வங்கிகள் மீதான மேற்பார்வைத் தொழிற்பாட்டினையும் ஒழுங்குபடுத்தலையும் மேற்கொண்டு வருகிறது. 2014 திசெம்பர் 31இல் உள்ளவாறு இலங்கை அரசாங்கத்தினால் நிதியிடப்பட்ட அல்லது குறிப்பிடத்தக்க செல்வாக்கைக் கொண்ட 3 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் 7 உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் இந்தத் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் வந்தன.

இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லாத நிதி நிறுவனங்களை மேற்பார்வை செய்யும் திணைக்களமானது வங்கியல்லாத நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் தொழிற்பாட்டையும் ஒழுங்குபடுத்துகையையும் மேற்கொண்டு வருகிறது. இதற்கிணங்க, அரச கட்டுப்பாட்டிலுள்ள தொடர்புடைய நிறுவனங்கள் அல்லது நிதியிடப்பட்ட வங்கிகள் வங்கியல்லா நிதி நிறுவனங்கள் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழுள்ளன.

இ) நாணய விதிச் சட்டத்தின் 113ஆம் பிரிவின் பிரகாரம் நிதிச் சபையும் இலங்கை மத்திய வங்கியும் பொதுப்படுகடன் முகாமைத்துவத் தொழிற்பாட்டினை ஆற்ற அதிகாரம் பெற்றுள்ளன. இதற்கிணங்க, அரசாங்கத்தின் முகவர் என்ற வகையில் பொதுப்படுகடன் திணைக்களமானது, வரவு செலவுத்திட்ட தேவைப்பாடுகளை பூர்த்தி செய்து கொள்வதற்காக உள்நாட்டுச் சந்தைக்குப் பிணையங்களை வழங்குவதோடு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன் பணிகளையும் மேற்கொள்கின்றது. பொதுப்படுகடன் திணைக்களமானது பொதுப்படுகடன் முகாமைத்துவம் மற்றும் படுகடன் சந்தை அபிவிருத்தி என்பவற்றைக் கையாளுகின்றது. அரசாங்கத்தினுடைய நிதித் தேவைகளை உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையிலும் அதனுடைய பணம் செலுத்துதல் கடப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கும் அரசாங்கப் படுகடனை இது முகாமைத்துவம் செய்கிறது.

ஈ) நாணய விதிச் சட்டத்தின் 49ஆம் பிரிவின்படி இலங்கையில் நாணய விநியோகத்தை மேற்கொள்ளும் அதிகாரத்தையும் ஏக உரிமையையும் வங்கி கொண்டுள்ளது. இதற்கிணங்க இ.ம. வங்கியின் நாணயத் திணைக்களம் இலங்கையிலே சட்ட ரீதியான நாணயத்தை விநியோகிக்கும் ஒரே அதிகாரத்துவம் உடையதாகத் தொழிற்படுகின்றது. நாணயத் தாள்களை அச்சிடுதலானது, 40 சதவீதப் பங்குகளை அரசாங்கம் சொந்தமாகக் கொண்டுள்ள டிலாறூ லங்கா கரன்சி அன்ட் செக்குரிட்டி பிறின்ட் (பிறைவேட்) லிமிடெட் எனும் நிறுவனத்தால் மேற்கொள்ளப்படுகிறது.

உ) வங்கியானது நாளாந்த தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் போது அரச நிறுவனங்கள் அல்லது அரசாங்கத்தின் குறிப்பிடத்தக்களவு செல்வாக்கு அல்லது கட்டுப்பாடுள்ள நிறுவனங்களுடன் பல்வேறுபட்ட பண்டங்கள் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகிறது.

ஊ) மத்திய வங்கியானது, குறிப்பு 48இல் விளக்கப்பட்டுள்ளவாறு, பொதுவாக நம்பிக்கைப் பொறுப்பாளராகவும் பிற காப்பாளர் தகுதிகளிலும் கடமை புரிவதனால் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை அரசாங்கம், நம்பிக்கைப் பெறுப்புக்கள், ஓய்வூதிய நலத் திட்டங்கள் மற்றும் பிற நிறுவனங்களின் சார்பில் வைத்திருக்க அல்லது வழங்க முன் வருகின்றது.

எ) வங்கியின் பன்னாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம் உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் அபிவிருத்தியையும் வர்த்தக வங்கிகளின் ஓரிரவுக்கான தேறிய வெளிநாட்டுச் செலாவணி திறந்த நிலையினையும் கண்காணிக்கின்றது. உள்நாட்டின் வெளிநாட்டுச் சந்தைச் செலாவணி அபிவிருத்தியைக் கண்காணிக்கின்ற போது வங்கியானது சந்தையின் இரு புறத்திலுமிருந்தும் இலங்கை ரூபாவின் செலாவணி வீதத்தின் மிகை மாற்றமுறும் தன்மையினை மிதமான நிலைக்குக் கொண்டு வருகின்றது. அத்தகைய கண்காணிப்பு நடவடிக்கையின் பெறுபேறுகளாக வெளிநாட்டுச் செலாவணியின் கொள்வனவு மற்றும் விற்பனைத் தொகைகள் விளங்குகின்றன.

ஏ) இத்தொகையானது இலங்கை அரசினால் நடாத்தப்பட்ட தொடர்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக வங்கியால் உறப்பட்ட செலவுகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. இச்செலவுகள் நிர்வாக மற்றும் ஏனைய செலவுகளின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன (குறிப்பு 35).

ஐ) வங்கியானது எவ்விதக் கட்டணங்களையும் அறவிடாது, அரச கட்டுப்பாட்டிலுள்ள வங்கியொன்றின் காப்பாளர் நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறது.

ஒ) வங்கியானது கொடுகடன் உத்தரவாதங்கள் வழங்கப்பட்டுள்ள இ.ம. வங்கியினால் நிதியிடப்பட்ட கருத்திட்டங்களுக்கு ரூ.12,620.079 மில்லியன் (2013இல் ரூ.6,492.418 மில்லியன்) தொகை மற்றும் அரசினால் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்களுக்கு ரூ.6,089.136 மில்லியன் (2013இல் ரூ.3,359.77 மில்லியன்) தொகை என்றவாறு மீள்நிதியிடல் கடன்களை வழங்குகின்றது.

ஓ) வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரினால் விடுக்கப்பட்ட சுற்றறிக்கையின்படி, வேளாண்மைக்கான 10 சதவீதமான குறைந்தபட்ச முற்பண வரையறையினைப் பேணாத வங்கிகள், வங்கியின் பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்படும் மீள் நிதியிடல் நிதியத்திற்கு அப்பற்றாக்குறையாகவுள்ள தொகையினை செலுத்துதல் வேண்டும். 2014 திசெம்பர் 31இல் உள்ளவாறு மீள்நிதியிடல் திட்டத்தின் கீழ் மக்கள் வங்கி (184.24 மில்லியன்), இலங்கை வங்கி (38.275 மில்லியன்), பிரதேச அபிவிருத்தி வங்கி (122.32 மில்லியன்) மற்றும் லங்காபுத்திர அபிவிருத்தி வங்கியிடமிருந்து (22.94 மில்லியன்) ரூ. 367.776 மில்லியன் கடன்கள் வெளிநின்றன. இதன் மூலம் ரூ.77.89 மில்லியன்களை பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் வட்டியாகப் பெற்றுக் கொண்டது.

ஔ) மாண்புமிகு சட்டமா அதிபரின் வேண்டுகோள் மற்றும் விதந்துரைப்புக்கிணங்க இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சார்பில் ஆஜரான வெளிநாட்டுச் சட்ட அறிஞர்களின் சட்டக் கட்டணத்தினை அரச மற்றும் அரச முகவராண்மைகளின் முகவர் என்ற ரீதியில் மற்றும் தேசிய நலனைக் கருத்தில் கொண்டும் இ.ம. வங்கி செலுத்தியது. ரூ.283.114 மில்லியன் தொகை கொண்ட இக்கொடுப்பனவுகள் (2013இல் ரூ.133.144 மில்லியன்) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திலிருந்து பெறக் கூடியதாக இருக்குமென கருதப்படுகிறது. (2015 சனவரியில் வங்கியால் ரூ. 279.968 மில்லியன் இது தொடர்பில் பெற்றுக்கொள்ளப்பட்டது.)

மேலும் இவ்வாண்டுப் பகுதியில் இலங்கை மத்திய வங்கி, இலங்கை சனநாயக சோசலிச் குடியரசிற்கெதிராக டியூச்

வங்கி ஏ.ஜி. இனால் தொடுக்கப்பட்ட காப்பீட்டுக் கணக்கின் நீதி விசாரணையின் பொருட்டு ஆஜரான வெளிநாட்டுச் சட்ட அறிஞர்களுக்கான சட்டக் கட்டணமாக ரூ.14.028 மில்லியனைச் (2013இல் ரூ.25.099 மில்லியன்) செலுத்தியது (குறிப்பு 35).

க) ஏனைய கொடுக்கல்வாங்கல்களும் மீதிகளும் தனிப்பட்டவர்கள், அரசாங்கம் மற்றும் அரசாங்கத் திணைக்களங்களுடன் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்களையும் மீதிகளையும் உள்ளடக்குகிறது. இக்கொடுக்கல்வாங்கல்களின் தன்மைகளாக இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட உத்தரவாதங்களான ரூ.63.234 மில்லியன் (2013 - ரூ.177.627 மில்லியன்) இலங்கை அரசாங்கத்தின் ரூ.6.31 மில்லியனையும் (2013இல் 19.484 மில்லியன்) செலாவணிக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக சேகரிக்கப்பட்ட ரூ.37.928 மில்லியன் (2013 - ரூ.22.602 மில்லியன்) குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக வைத்திருக்கப்பட்ட அரச பிணையங்கள் இல்லை (2013 - ரூ.83.531 மில்லியன்), தேசிய சேமிப்பு வங்கியின் நிதி முகாமைத்துவ அதேநேர மொத்தத் தீர்ப்பனவான ரூ.0.167 மில்லியன் (2013 - ரூ.0.203 மில்லியன்) சுசகன 1 மற்றும் 2 இன் கீழ் வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் மாகாண அபிவிருத்திக் கொடுகடன் திட்டம், சௌபாக்கியா கடன் திட்டம், வடக்கின் எழுச்சிக் கடன் திட்டம் (கட்டம் II), கிழக்குப் பொருளாதார நடவடிக்கைகளை மீளத் தொடங்குதல் (கட்டம் II) மற்றும் வடக்கு கிழக்கில் சேதமடைந்த வீடுகளைத் திருத்துதல் ரூ.325.946 மில்லியன் (2013 - ரூ.142.499 மில்லியன்). 2014 திசெம்பர் 31ஆம் நாள் முடிவடைந்த ஆண்டுப் பகுதியில் பொருட்கள், பணிகள் மற்றும் வரிகள் ரூ.186.976 மில்லியன் (2013 - ரூ.316.460 மில்லியன்), அரச, அரச முயற்சிகளின் நடைமுறைக் கணக்கு நிலுவைகள் ரூ.281.927 மில்லியன் (2013 - ரூ.243.659 மில்லியன் கைவிடப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக (ரூ.33.914 மில்லியன் (2013 - ரூ.45.468) வெளிநாட்டு சட்டச் செலவுகள் ரூ.14.028 மில்லியன் (2013 - ரூ.25.099 மில்லியன்) தொகை என்பன காணப்படுகின்றன.

ங) 2011ஆம் ஆண்டுப்பகுதியில் நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 9இன் படி வங்கி நியூயோர்க்கில் சொத்தொன்றினைக் கொள்வனவு செய்து அதனை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு 2012 யூன் 01 தொடக்கம் மூன்றாண்டு காலப்பகுதிக்கு ஐ.அ.டொலர் 68,000 மாதாந்த வாடகைக்கு கையளித்தது. 2014இன் 4 மாத காலப்பகுதிக்கு ஒன்றுசேர்ந்த பெறத்தக்க வாடகை (செத்தெம்பர் - திசெம்பர்) ரூ.28 மில்லியனாக காணப்பட்டது.

ச) நகர அபிவிருத்தி அதிகாரசபையிலிருந்து பெறத்தக்க ரூ.88 மில்லியனையும் பல்வகைச் சொத்துக்கள் உள்ளடக்குகின்றன. இத்தொகை இலங்கை மத்திய வங்கியினால் ஊர்திகள் தரிப்பிடமாகப் பயன்படுத்தப்படும் ரான்ஸ்வேர்க் சதுக்கம் - கொழும்பு 01 இல் உள்ள குத்தகை உடமைச் சொத்தினைப் பிரதிபலிக்கிறது. இந்நிலக் குத்தகைக் காலம் முடிவடைவதற்கு முன்பே குத்தகையாளரினால் பொறுப்பேற்கப்பட்டதுடன் எஞ்சிய குத்தகைக் காலப்பகுதிக்கு ஏற்புடைத்தான ஆரம்ப கொடுப்பனவிலிருந்து பெறப்பட்ட ரூ.88 மில்லியன் நகர அபிவிருத்தி அதிகாரசபையிலிருந்து பெறத்தக்கவையென எதிவு செய்யப்பட்டுள்ளன.

ஞ) இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையும் வனவிலங்குகள் பாதுகாப்புத் திணைக்களமும் இரண்டு தரப்பினரினதும் நன்மைக்காக சோமாவதியில் பரிசோதனை பங்களாவொன்றையும் வனவிலங்குகள் பாதுகாப்பு அலுவலகமொன்றினையும் ஒருவர் மற்றொருவரின் ஒத்துழைப்புடன் நிருமாணித்து, நிறுவிப் பேணுவதற்காக 2008 நவெம்பர் 20ஆம் நாளன்று புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றினைச் செய்து கொண்டன. வங்கியினால் பயன்படுத்தப்பட்ட பரிசோதனை பங்களாவின் செலவு, சொத்து, பொறி மற்றும் கருவியின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் புரிந்துணர்வு காலப்பகுதியில் (30 ஆண்டுகளில்) தேய்வடைந்தது. மேலும், புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் உறுப்புரை 3இன்படி, இலங்கை மத்திய வங்கி வனவிலங்கு பாதுகாப்பு அலுவலகத்தின் உரிமையினை கட்டுமானத்தின் பின் வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களத்திற்கு கையளிக்க உடன்பட்டது. வனவிலங்கு பாதுகாப்பு அலுவலகத்தினை நிருமாணிப்பதற்கு இலங்கை மத்திய வங்கிக்கு ஏற்பட்ட செலவான ரூ.6.2 மில்லியன் வங்கியினால் பயன்படுத்தப்பட்ட பரிசோதனை பங்களாவினைப் பயன்படுத்துவதற்கான உரிமையாக அடையாளம் காணப்பட்டிருப்பதுடன் நானாவிதச் சொத்துக்களின் கீழ் பதிவு செய்யப்பட்டு புரிந்துணர்வு காலப்பகுதியில் பதிவழிப்பு செய்யப்பட்டது.

**46.2 பிரதம முகாமைத்துவ ஆளணியினருடனான கொடுக்கல்வாங்கல்கள்**

ஆளுநர், துணை ஆளுநர்கள், உதவி ஆளுநர்கள் மற்றும் முகாமைத்துவக் கணக்காய்வுப் பணிப்பாளர் (அவ்வாறான அங்கத்தவர்கள் ஏதேனுமொரு வங்கி நிறுவனத்தில் பணிப்பாளராக, அலுவலராக, ஊழியராக அல்லது பங்குரிமையாளராயிருத்தலை நாணய விதிச் சட்டம் வரையறுக்கின்றது) உள்ளடங்கலாக நாணயச் சபையின் அங்கத்தவர்கள் வங்கியின் முக்கிய முகாமைத்துவ ஆளணியினராவர். பிரதம முகாமைத்துவ ஆளணியினருடனான கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு:

**46.3 பிரதம முகாமைத்துவ ஆளணியினருக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவு**

| | 2014<br>ரூ.000 | 2013<br>ரூ.000 |
|---|---|---|
| குறுகிய கால ஊழியர் நலன்கள் | **67,816** | 57,534 |

மேற்படி பணிக் கொடைகளுக்கு மேலதிகமாக பிரதம முகாமைத்துவ ஆளணியினருக்கு அவர்களுடான தொழில் ஒப்பந்தங்களுக்கமைய கம்பனியினால் காசல்லாத நன்மைகளும் வழங்கப்படுகின்றன.

**46.4 பிரதம முகாமைத்துவ ஆளணியினருடனான ஏனைய கொடுக்கல்வாங்கல்கள்**

| | 2014<br>ரூ.000 | 2013<br>ரூ.000 |
|---|---|---|
| பிரதம முகாமைத்துவ ஆளணியினருக்கான கடன்கள் | **47,310** | 32,076 |

அனைத்துக் கடன்களும் போதிய பாதுகாப்பினைக் கொண்டிருப்பதுடன் கடன் வகை மற்றும் மாதாந்த மீளச் செலுத்துகையைப் பொறுத்து 2 சதவீதம் தொடக்கம் 12 சதவீதம் வரையிலான வட்டி வீத வீச்சிடையையும் கொண்டுள்ளன.

**46.5 தொழில் நிலைக்குப் பிந்திய நலவுரிமைத் திட்டங்களுடனான கொடுக்கல்வாங்கல்கள்**

| | 2014<br>ரூ.000 | 2013<br>ரூ.000 |
|---|---|---|
| செலுத்தப்பட்ட மற்றும் செலுத்தப்பட வேண்டிய பங்களிப்புக்கள் | **39,925** | 49,776 |

குறிப்பு 43இல் தரப்பட்டுள்ளவாறு ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்விற்குப் பின்னரான திட்டங்களுக்கு வங்கி பல்வேறு தொகைகளைப் பங்களிப்புச் செய்ததுடன் ஊழியர் சேம நிதியத்திற்கு ரூ.406.489 மில்லியனைச் (2013இல் ரூ.426.580 மில்லியன்) செலுத்தியது. வழமையான வியாபார காலப்பகுதியில் வங்கியானது அதன் தொழில்நிலைக்குப் பின்னய திட்டங்களுக்கு வங்கித்தொழில் மற்றும் நிதியியல் பணிகளை வழங்கியது. அத்தகைய திட்டங்களுடனான மீதிகளின் தொகை குறிப்பு 24இல் தரப்பட்டுள்ளது.

## 47. எதிர்பாராப் பொறுப்புக்களும் மூலதனக் கடப்பாடுகளும்

### 47.1 நிதி உத்தரவாத ஒப்பந்தங்கள்

வங்கியானது அரசாங்கத்தின் அல்லது அதன் முகவராண்மைகளினதும் நிறுவனங்களினதும் முகவராகச் செயற்பட்டு, பொதுத் திறைசேரியினால் இ.ம. வங்கிக்கு வழங்கப்பட்டுள்ள பதில் உத்தரவாதங்களைப் பயன்படுத்தி பல்வேறு தரப்பினர்களுக்கும் உத்தரவாதங்களை வழங்குகின்றது. 2014 திசெம்பர் 31இல் உள்ளவாறு அத்தகைய தீர்க்கப்படாத பிணைகள் எதுவும் இருக்கவில்லை.

### 47.2 கொடுகடன் உத்தரவாதங்கள்

பங்கேற்பு நிதி நிறுவனங்களுக்கு வழங்கப்படுகின்ற வெளிவாரியான கடன் தொகைகளின் மூலம் சிறிய மற்றும் மத்தியதர தொழில் முயற்சிகளுக்கு நிதியிடல், இத் தொழில் முயற்சிகளுக்கு வழங்கப்படுகின்ற கடன்களுக்கான உத்தரவாதப் பத்திரங்களை வெளியிடல், உத்தரவாதப் பத்திர தவணைப் பணங்களைச் சேகரித்தல், கடன் உத்தரவாதப் பத்திர நிதியத்தின் நிர்வாகம் மற்றும் செலுத்தத் தவறுதல்கள் நடைபெறாதென்பதை உறுதி செய்தல், கடன் நிதியம் உரிய விதத்தில் பயன்படுத்தப்படுகின்றதென்பதை உறுதி செய்வதற்காக கடன் வழங்கியதன் பின்னர் கடன் விசாரணைகளை நடத்துதல் ஆகிய மூலம் வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களமானது மீள்நிதியிடல் கடன் வசதித் தொழிற்பாடுகளில் ஈடுபடுகின்றது. ஆண்டினுள் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் தொடர்ந்து மீள்நிதியிடல் கடன் வசதிகள் வழங்கப்பட்டனவென்பதோடு, இத் திட்டத்தின் கீழ் கடன் வழங்குகின்ற பங்கேற்புக் கடன் நிறுவனங்களில் உருவாகின்ற நட்டங்கள் தொடர்பாக வங்கியானது கடன் உத்தரவாதப் பத்திரங்களை ஏற்பாடு செய்தது. இது கடன்பெறுநர்களின் செலுத்தத் தவறுதல்களுக்கான ஒரு உத்தரவாதப்பத்திரமல்லவென்பதோடு நட்டங்களுக்காக மட்டுமேயாகும். அதாவது, பங்கேற்புக் கடன் நிறுவனங்களின் மூலம் கடன்களை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதன் பின்னர் உருவாகின்ற நட்டங்களுக்காக மாத்திரம் உரிமைகள் கோரப்படுதல் வேண்டும். இவ் ஏற்பாடுகளின் கீழ் எழக்கூடிய எதிர்பாராப் பொறுப்புக்களுக்கான தொகைகள் பின்வருமாறு:

**உள்நாட்டு வர்த்தக வங்கிகள் - கடன் உத்தரவாதங்கள் தொடர்பானது:**

| | உத்தர வாத மளிக்கப் பட்ட நாணயம் | வெளிநின்ற உத்தரவாதங்களின் தொகை | |
|---|---|---|---|
| | | **2014 ரூ.000** | 2013 ரூ.000 |
| **தொடர்புடைய தரப்பினர்கள்** | ரூபா | | |
| - வங்கி நிதியிட்டுள்ள செயற்றிட்டங்கள் | | **63,234** | 177,627 |
| - அரசாங்கம் நிதியிட்டுள்ள செயற்றிட்டங்கள் | | **2,584,808** | 2,580,748 |
| **ஏனையோர்** | ரூபா | | |
| - வங்கி நிதியிட்டுள்ள செயற்றிட்டங்கள் | | **52,503** | 135,803 |
| - அரசாங்கம் நிதியிட்டுள்ள செயற்றிட்டங்கள் | | **1,999,483** | 690,295 |
| **மொத்தக் கடன் உத்தரவாதங்கள்** | | **4,700,028** | 3,584,473 |

### 47.3 நம்பகமான செயற்பாடுகள்

நாணய விதிச் சட்ட ஏற்பாடுகளின் கீழ் வங்கியானது நம்பகமான செயற்பாடுகளை மேற்கொள்கின்றது. இவ் வகையான இயலுமையில் செயற்படுவதானது பல்வேறு தரப்பினரது சார்பாக நிதியங்களை வைத்திருக்க அல்லது இடம்பெறச் செய்கின்றது. ஆனாலும் அச் செயற்பாடுகளின் நிமித்தமாக எழும் எந்தப் பொறுப்பையும் வங்கி எதிர்பார்க்கவில்லை.

### 47.4 சட்ட ரீதியான உரிமைக் கோரல்கள்

சட்ட உரிமையுடன் ரூ.53.274 மில்லியன் கோரல் சம்மந்தப்பட்ட ஈடுபாடுடையோரின் நிறுவனங்களால் தாக்கல் செய்யப்பட்ட மூன்று வழக்குகளில் வங்கியொரு எதிர்த்தரப்பாகவுள்ளது. வங்கியினால் இவ்வழக்கு எதிர்த்து வாதாடப்படுவதுடன் நிதிக் கூற்றுக்களில் எவ்வித ஒதுக்குகளும் மேற்கொள்ளப்படவில்லை.

வங்கி 03 வழக்குகளின் வழக்காளியாக இருந்ததுடன் சட்ட ரீதியாக ரூ.8.711 மில்லியன் நட்ட ஈடாகக் கோரியதுடன், இதற்கான நிதிக் கூற்றுக்களில் எவ்வித ஒதுக்கங்களும் மேற்கொள்ளப்படவில்லை

மேலும் 2014 திசெம்பர் 31இல் வங்கிக்கெதிரான பல சட்ட நடவடிக்கைகள் எஞ்சியிருந்தன. குறிப்பிடத்தக்க ஏதேனும் நட்டங்கள் ஏற்படுவது சாத்தியமற்றதென்ற அபிப்பிராயத்தை வங்கி கொண்டுள்ளதால், எவ்வித ஒதுக்குகளும் மேள்கொள்ளப்படவில்லை.

### 47.5 கடப்பாடுகள்

(அ) 2014 திசெம்பர் 31ஆம் திகதியுள்ளவாறு சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்களின் கையேற்புத் தொடர்பில் வங்கி ரூ.488.145 மில்லியன் (2013 - 7.954 மில்லியன் மற்றும் ஐ.அ.டொலர் 1.805 மில்லியன்) இனை மூலதனக் கடப்பாடாகக் கொண்டிருந்தது.

(ஆ) 2014 திசெம்பர் 31ஆம் நாளன்று வெளிநின்ற முன்னோக்கிய செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் பின்வருமாறு காணப்பட்டன.

| | 2014 | 2013 |
|---|---|---|
| **முன்னோக்கிய செலாவணி ஒப்பந்தங்கள்** | **ரூ.000** | **ரூ.000** |
| **முன்னோக்கிய செலாவணி விற்பனை** | | |
| ஸ்ரேலிங் பவுண் | - | 139,000 |
| யூரோ | **50,000** | 141,000 |
| ஐ.அ.டொலர் | **2,239,119** | 2,337,998 |

### 47.6 பிணையிடப்பட்ட சொத்துக்கள்

பிணையங்கள் தீர்ப்பனவு செயன்முறைக்கு வசதியளிக்கும் பொருட்டு அவுத்திரேலிய டொலர் 35 மில்லியன் ஏட்டுப் பெறுமதி, அவுஸ்திரேலியா டொலர் 36.786 மில்லியன் (2013 - இல்லை) வங்கியினால் யூரோ கிளியர் வங்கியினால் பிணையிடப்பட்டதுடன் ஐ.அ.டொலர் 30 மில்லியன் (2013 - ஐ.அ.டொலர் 30 மில்லியன்) கொண்ட கொடுகடன் வசதி பெறப்பட்டது. பிணையிடப்பட்ட பிணையங்கள் யூரோ கிளியரில் தனியான கணக்கில் வைத்திருக்கப்படுகின்றன.

அப்பிணையங்கள் நிதியியல் நிலைமையின் நிதியியல் கூற்றுக்களில் "விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதியியல் சொத்துக்கள்" என காட்டப்பட்டுள்ளன. வங்கி இக்கொடுக்கல்வாங்கல்களை "யூரோ முறைமையில் பங்கேற்கின்றவர்களினால் மேற்கொள்ளப்படும் பிணையிடப்பட்ட கடப்பாடுகளை நிருவகிக்கின்ற பிணைய உடன்படிக்கை" இனையும் "யூரோ கிளியர் முறைமையிலுள்ள பங்கேற்பாளர்களுக்கான கொடுகடன் வழங்கலை நிருவகிக்கின்ற பொது நிபந்தனைகள்" யும் அடிப்படையாகக் கொண்ட நியதிகளின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 47.7 சவறின் றெசிடென்சிக்கு எதிரான எதிர்பாராப் பொறுப்புக்கள்

சவறின் றெசிடென்சியைத் தொழிற்படுத்துதல் தொடர்பிலான இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபைக்கும் எஸ். டபிள்யு. ஆர். டீ. பண்டாரநாயக்கா ஞாபகார்த்த நிதியத்திற்குமிடையிலான குத்தகை உடன்படிக்கையைத் தொடர்ந்து இரண்டு தரப்பினராலும் இணங்கப்பட்ட பணிமனைகளுக்கு குத்தகை பெற்றவர் முதலீடுகளை மேற்கொள்ளுதல் வேண்டும். உடன்படிக்கையை முடிவுறுத்துகின்ற போது குத்தகைக்கு விடுபவர் என்ற வகையில் இ.ம. வங்கி, தொழிற்படு ஆண்டில் முதலீட்டுப் பெறுமதியின் அடிப்படையில் இணங்கப்பட்டதொரு வீதாசாரத்தினை செலுத்த வேண்டியிருந்தது. ஆறாவது தொழிற்பாட்டு ஆண்டின் இறுதியில் 2014ஆம் ஆண்டு திசெம்பர் 31இல் குத்தகைக்கு விடுபவரான, இலங்கை மத்திய வங்கியின் எதிர்பாராப் பொறுப்புகளாக, முதலாவது தொழிற்படு ஆண்டின் இறுதியில் மதிப்பிடப்பட்டிருந்த முதலீட்டுப் பெறுமதியில் 25 சதவீதமான ரூ.10.966 மில்லியன் (2013 - ரூ.13.159 மில்லியன்) கருதப்பட்டது.

### 47.8 முறிக் கடன்பாடுகள்

இவ்வாண்டுக் காலப்பகுதியில் வங்கியானது 30 அடிப்படைப் புள்ளிகளைக் கொண்ட தரகு அடிப்படையில் ஊழியர் சேம

நிதியத்திலிருந்து கடன்பட்டது. வெளிநின்ற முறிகளின் முகப்புப் பெறுமதி ரூ.191,781.425 மில்லியனாகக் காணப்பட்டது.

2014 திசெம்பர் 31இல் இம்முறிகள் மீள்கொள்வனவு வசதிகளுக்காகப் பயன்படுத்தப்பட்டதுடன் இதன் முகப்புப் பெறுமதி பூஜ்யமாகக் காணப்பட்டது (2013 திசெம்பரில் முகப்புப் பெறுமதி - 5,940.023 மில்லியன், சந்தைப் பெறுமதி - ரூ.3,593.676 மில்லியன் மீள்கொள்வனவு வசதிகளுக்காக ஒதுக்கப்படாதிருந்தது).

## 48. நம்பிக்கை மற்றும் கட்டுக்காப்பு நடவடிக்கைகள்

மத்திய வங்கி பொதுவாக நம்பிக்கைப் பொறுப்பாளராகவும் நம்பகத் தகுதிகளிலும் கடமை புரிவதனால் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை அரசாங்கம், நம்பிக்கைப் பொறுப்புக்கள், ஓய்வூதிய நலத் திட்டங்கள் மற்றும் பிற நிறுவனங்களின் சார்பில் வைத்திருக்க அல்லது வழங்க முன்வருகின்றது. வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட முக்கியமான நம்பிக்கைப் பொறுப்பு நடவடிக்கைகள் பின்வருமாறு:

அ) வங்கியானது, இலங்கை அரசாங்கத்தின் சார்பில், வெளிநாட்டு நிதி உதவியின் கீழான அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் கடன் முறைகளின் கீழ் கிடைக்கும் பல்வேறு வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் கொடைகளின் பகிர்வையும் மீள்செலுத்துதலையும் கையாள்கின்றது. மேலும், பல்வேறு வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் கொடைகளின் கீழ் இணைக்கிணை நிதியத்தினை இலங்கை அரசாங்கத்தின் சார்பில் பெற்று அத்தகைய நிதிகளை வழங்கும் முகவராண்மைகளது வேண்டுகோளின்படி திறைசேரி உண்டியல்களில் முதலிடுகின்றது.

ஆ) வங்கியே ஊழியர் சேம நிதியத்தின் கட்டுக்காப்பாளர் ஆகும். இச் சட்டத்தின்படி பங்களிப்புக்கள் மற்றும் மிகைக் கட்டணங்களை சேகரித்தல், முதலீடுகளிலிருந்து வருமானமீட்டல், ஊழியர் சேம நியதித்தில் பதிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களது முறையான கணக்குகளைப் பேணி வருதல், மிகையான நிதிகளை முதலீடு செய்தல், அங்கத்தவர்களுக்கு நலக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல் நாணயச் சபையின் செயற்பாடுகளில் அடங்கும்.

இ) மத்திய வங்கியினால் உரிமம் வழங்கப்பட்ட வங்கியியல் நிறுவனங்களிற்கும், 1972ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ் வங்கித்தொழிலை மேற்கொள்ளும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ஏற்படையதான தன்னார்வ வைப்புக் காப்புறுதித் திட்டமாக விளங்கும் வைப்புக் காப்புறுதித் திட்டத்தினை வங்கியே நிருவகிப்பதுடன் 2010 ஒத்தோபர் 01ஆம் நாள் தொடக்கம் நிதிகள், 2010 செத்தெம்பர் 28ஆம் நாளிடப்பட்ட 1673/11 இலக்க அரச வர்த்தமானியின்படி உருவாக்கப்பட்ட இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்திற்கு மாற்றீடு செய்யப்பட்டுள்ளது.

ஈ) நாணயச் சபையினால் பொறுப்பளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ், பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் விடயத்தில் வங்கியானது ஒழுங்குபடுத்துதல் மற்றும் மேற்பார்வைத் தொழிற்பாடுகள் மற்றும் தொடர்புடைய விடயங்களைக் மேற்கொள்கின்றது. இத் தொழிற்பாடுகளை நிறைவேற்றும் அதேவேளையில் தவறும் நிதிக் கம்பனிகள் சார்பாக வேறுபட்ட நடவடிக்கைகளை எடுத்து வருகின்றதுடன் கடன் தீராற்றலற்ற முறிவு நிலைக்குப் பொறுப்பாகவுள்ள ஆட்களினுடைய சொத்துக்களை கையாளப்படுத்தல் உட்பட பிணையத்தின் ஒரு வடிவமாக நாணயச் சபையைக் கொண்டு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

உ) 2010 செத்தெம்பர் 28ம் நாளிடப்பட்ட 1673/11 இலக்க அரச வர்த்தமானியின்படி வங்கி 2010 ஒத்தோபர் 01 ஆம் நாள் தொடக்கம் இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டம் என்ற பெயரில் வைப்பாளர்களின் நிதியினைப் பாதுகாக்கும் தேசிய நல நடவடிக்கையொன்றாக கட்டாய வைப்புக் காப்புறுதித் திட்டமொன்றினை ஏற்படுத்தியது. அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றும் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் என்பன இத்திட்டத்தின் அங்கத்தவர்களாக இருத்தல் வேண்டும். காப்புறுதி செய்யப்படவுள்ள வைப்புக்கள் மேலே சொல்லப்பட்ட அரச வர்த்தமானி அறிவித்தல் 5.2 இன்படி விசேட விலக்கல்களுடன் காப்புறுதி செய்யப்பட்ட அனைத்துக் கடன்பாட்டுக் கருவிகளும் நீங்கலான அங்கத்துவ நிறுவனங்களின் கேள்வி, தவணை மற்றும் சேமிப்பு வைப்புப் பொறுப்புக்களை உள்ளடக்கும். வைப்புக் காப்புறுதி நிதியமானது, சுய விருப்பு வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் முதலீடான ரூ.350.195 மில்லியன் மாற்றல் மற்றும் கைவிடப்பட்ட சொத்தாக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிலிருந்து சேகரிக்கப்பட்டவற்றிலிருந்து செய்யப்பட்ட ரூ.1,168.306 மில்லியன் மாற்றல்களின் மூலமும் உருவாக்கப்பட்டது. 2014.12.31 வரை வைப்பாளருக்கு செலுத்தப்படவுள்ள இழப்பீட்டுத் தொகை ரூ.0.2 மில்லியனை விஞ்சுமிடத்து ரூ.0.2 மில்லியனிற்கு அல்லது வெளிநாட்டு நாணய வைப்புக்களாக இருக்குமிடத்து அதற்குச் சமனான தொகைக்கு மட்டுப்படுத்தப்படல் வேண்டும். 2015.01.01 இலிருந்து இவ்வரையறையானது வைப்பாளரொருவருக்கு வைப்பொன்றிற்கு ரூ.0.3 மில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டது. இழப்பீட்டுக் கொடுப்பனவிற்கு நாணயச் சபையோ அல்லது இலங்கை மத்திய வங்கியோ பொறுப்பேற்கமாட்டாது என்பதுடன் ஏதேனும் அனுமதிக்கப்பட்ட கடன்பாடுகள் மற்றும் பெறப்பட்ட உதவுதொகைகள் உட்பட வைப்புக் காப்புறுதி நிதியத்தில் கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதியம் அல்லது ஒதுக்கப்பட்ட நிதியத்திற்கு ஏற்றவாறு மட்டுப்படுத்தப்படும்.

வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தில் நிறுவப்பட்டுள்ள வைப்புக் காப்புறுதிப் பிரிவு நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்டவாறான பணிப்புரைகள்/ஒழுங்குவிதிகள் மற்றும் கொள்கைகளின் நியதிகளுக்கிணங்க வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரின் அறிவுறுத்தல்கள் மற்றும் மேற்பார்வையின் கீழ் இப்பிரிவு, இத்திட்டத்தின் தொழிற்பாடுகளுக்கும் முகாமைத்துவத்திற்கும் பொறுப்பாக இருப்பதுடன் வங்கியின் நிதியம் கூற்றுக்களிலிருந்தும் வேறாக தனித்தனியாக ஏடுகளையும், கணக்குகளையும் பேணல் வேண்டும். அத்துடன் கணக்காய்வாளர் நாயகம் கணக்காய்வாளராக இருத்தல் வேண்டும்.

இத்திட்டமானது 2013 நவம்பர் 22ம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் “இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவி நிதியம்” எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

ஊ) வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரினால் விடுக்கப்பட்ட சுற்றறிக்கையின்படி, வேளாண்மைக்கான குறைந்தபட்ச முற்பணமான 10 சதவீதம் வரையறையினைப் பேணாத வங்கிகள், மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்படும் மீள்நிதியிடல் நிதியத்திற்கு அப்பாற்றாக்குறையினை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டன. பிரதேச அபிவிருத்தித் திணைக்களம், இலங்கை வங்கி, மக்கள் வங்கி, பிரதேச சங்வர்த்தன வங்கி மற்றும் லங்கா புத்திர டெவலப்மென்ட் வங்கி என்பனவற்றினூடாகத் திரட்டப்பட்ட அத்தகைய தொகையை விஸ்கம் மீள்நிதியிடல் திட்டத்தின் கீழ் வேளாண்மைக்கு மீள்நிதியிடலாக வழங்கியது. 2014 திசெம்பர் 31இல் வெளிநின்ற மொத்த சேகரிப்பு ரூ.367.776 மில்லியனாக (2013 - 390.686 மில்லியன்) காணப்பட்டது. 2014 திசெம்பர் 31இன் இறுதியில் மீள்நிதியிடல் திட்டத்தின் கீழ் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் ரூ.460.010 மில்லியனைக் கடனாக வழங்கியதுடன், வழங்கப்பட்ட கடன்களுக்கான வட்டியாக ரூ.77.890 மில்லியனைப் பெற்றுக் கொண்டது. பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் அரச பிணையங்களில் ரூ.45.822 மில்லியன் (2013 - பூஜ்யம்) முதலீடுகளை வைத்திருந்தது. மேலும், முதலீட்டிலிருந்து ரூ.188.178 மில்லியனை (2013 - 188.178 மில்லியன்) உழைத்துக் கொண்டது.

## 48. நம்பிக்கை மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் (தொடர்ச்சி)

எ. பிரதேச அபிவிருத்தித் திணைக்களம், வங்கியின் நாணயச் சபையின் சார்பில் இலங்கை அரசாங்கம் மற்றும் வெளிநாட்டுக் கொடையாளர்களின் நிதியிடல் செயற்றிட்டங்கள் தொடர்பாக, இலங்கை அரசாங்கத்தின் பிரத்தியேக முகவராகத் தொழிற்படுகிறது. இலங்கை மத்திய வங்கியினால் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்களையும் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் நடைமுறைப்படுத்துகிறது.

முடிவடைந்த செயற்றிட்டங்கள்

| செயற்றிட்டத்தின் பெயர் | நிதியத்தின் மொத்த ஒதுக்கு (மில்.) | | கடனின் நோக்கம் | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங் களுக்கு வழங்கப் பட்ட மீள் நிதியம் (ரூ. மில்.) | அடிப்படைப் பண்புகள் | உத்தர வாதங்கள் மற்றும் காப்பீடுகள் | பொதுவான நிபந்தனை | சிறப்பு நிபந்தனை |
|---|---|---|---|---|---|---|---|---|
| தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம் | ஐ.அ.டொலர் | 24.50 | தேயிலை சிறு உடமையாளர் வருமானத்தினை அதிகரித்தல் மற்றும் செயற்றிட்டப் பிரதேசங்களில் இயற்கைச் சூழலை மேம்படுத்துதல் | 2,550.90 | திறைசேரி துணைச் செயலாளருக்கு மாற்றல் செய்வதற்காக அட்டவணை யிடப்பட்ட நாளன்று பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களிட மிருந்து அறவீடுகளைச் சேகரித்தல் | | | |
| இரண்டாவது நீண்ட காலப் பயிர் அபிவிருத்திச் செயற்றிட்டம் | சிஎஉ | 11.56 | நீண்ட கால பயிர் துறையினை வர்த்தகப்படுத்தல், உற்பத்தியை அதிகரித்தல், நாற்றுமேடை அபிவிருத்தி, அறுவடைக்குப் பின்னரான கையாளல், பதனிடல் மற்றும் சந்தைப்படுத்தல் | 1,453.11 | | | | |
| பெருந்தோட்டத்துறை சீர்திருத்த செயற்றிட்டம் | ஐ.அ.டொலர் | 40.00 | உற்பத்தித்திறனையும் இலாபத் தன்மையினையும் அதிகரிப்பதற்காக பெருந்தோட்டத் துணைத் துறையில் கொள்கை மற்றும் நிறுவன ரீதியான சீர்திருத்தங்களுக்கு உதவியளித்தல் மற்றும் இலங்கையின் பெருந்தோட்டத் தொழில் துறையில் போட்டி அநுகூலங்களைப் பேணுதல் | 5,200.00 | | | | |
| சுசகன நிதி மற்றும் குத்தகைக் கம்பனி | இல.ரு | 352.69 | சுனாமியினால் பாதிக்கப்பட்ட தொழில் முயற்சிகளை மீளத் தொடங்குவதற்கான கடன் வசதிகள் | 351.06 | | | | |
| சிறிய வியாபாரங்களை மீள எழுச்சிப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் | இல.ரு | 2,656.00 | சுனாமியினால் பாதிக்கப்பட்ட சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளை மீளத் தொடங்குவதற்கான கடன் வசதிகள் | 2,663.40 | | | | |
| சிறிய வியாபாரங்களை மீள் எழுச்சிப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் - சுழலும் நிதியம் | இல.ரு | 150.00 | சுனாமியினால் பாதிக்கப்பட்ட சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளை மீளத் தொடங்குவதற்கான கடன் வசதிகள் | 122.72 | | | | |
| தேர்ச்சி அபிவிருத்தி செயற்றிட்டம் | இல.ரு | 94.31 | உயர்தர தொழிற்படையை உருவாக்குவதற்காகவும் தேர்ச்சி பொருத்தப்பாடின்மையை நீக்குவதற்காகவும் தேர்ச்சிப் பயிற்சியின் தரம் மற்றும் பொருத்தப்பாட்டை மேம்படுத்தல் | 94.59 | | | | |
| நகர சுற்றாடல் உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டம் | ஐ.அ.டொலர் | 4.00 | நகரத்திலும் நகர்ப் புறங்களிலும் வசிக்கும் மக்களின் சூழல் வசதிகள், நலம் மற்றும் சுகாதார நிலைமைகளை மேம்படுத்துதல் | 369.15 | | | | |
| வீடமைப்பு உத்தரவாத குறைந்த வருமான வீடமைப்பு புகலிடச் செயற்றிட்டம் | ஐ.அ.டொலர் | 25.00 | நாட்டிலுள்ள குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு வீடுகளைக் கட்ட, புதுப்பிக்க, வாழிடங்களை விரிவாக்க உதவுதல் | 1,362.00 | | | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நகர அபிவிருத்தி குறைந்த வருமான வீடமைப்புச் செயற்றிட்டம் | சிஎஉ | 15.10 | வீடமைப்பினை முன்னேற்றுவதற்காக குறைந்த வருமான குடியிருப்பாளர்களுக்கு மூலதனத்தினை வழங்குவதற்கு | 1,915.76 | திறைசேரி துணைச் செயலாளருக்கு மாற்றல் செய்வதற்காக அட்டவணை யிடப்பட்ட நாளன்று பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களிட மிருந்து அறவீடுகளைச் சேகரித்தல் | | | |
| வடமேல் மாகாண நீர் மூலவள அபிவிருத்திச் செயற்றிட்டம் | ஐ.அ.டொலர் | 1.80 | செயற்றிட்டப் பிரதேசத்தில் வசிக்கும் மக்களின் பொருளாதார, சமூக, ஊட்டச்சத்து நலனோம்புகைகளை மேம்படுத்துதல் | 102.76 | | | | |
| மாத்தளை பிரதேச பொருளாதார மேம்பாட்டுச் செயற்றிட்டம் | சிஎஉ | 2.00 | சிறிய தொழில் முயற்சியாளர்களின் வருமானத்தினை நிரந்தரமாக உயர்த்துதல் மற்றும் வலுப்படுத்தல் | 249.06 | | | | |
| மத்திய மலைநாட்டு நீண்ட கால பயிர் அபிவிருத்திச் செயற்றிட்டம் | சிஎஉ | 11.56 | மத்திய மலைநாட்டுப் பகுதியில் நீண்ட காலப் பயிர்களின் உற்பத்தியை அதிகரித்தல் | 642.00 | | | | |
| வேளாண்மை புத்தாக்க செயற்றிட்டம் | சிஎஉ | 17.05 | வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் ஐந்து எல்லை மாவட்டங்களிலுமுள்ள சிவில் குழப்பங்களினால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்விற்கும் சொத்துக்களின் புனரமைப்பிற்கும் உதவுதல் | 843.00 | | | | |
| சிறுஉடமையாளர் தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம் | ஐ.அ.டொலர் | 12.60 | சிறு உடமையாளர் தேயிலை துறையினை அபிவிருத்தி செய்யவும் தேயிலைக்கான வசதிகளை புனரமைக்கவும் | 645.93 | | | | |
| வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் | யென் | 1,368.00 | வருமான உருவாக்க நடவடிக்கைகளுக்காக வழமையான கொடுகடன் வழிப்படுத்தல்களை மேற்கொள்வதற்காக காத்திரமான கொடுகடன் வழங்கல் பொறிமுறை யொன்றினை ஏற்படுத்துதல் | 1,402.45 | | | | |
| சிறு வேளாண்மையாளர் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம் | ஐ.அ.டொலர் | 17.40 | குறைந்த வருமானம் பெறும் மக்களிடையே தொழில் உருவாக்கத்தினையும் சேமிப்புப் பழக்கத்தினையும் மேம்படுத்தலும் செலவுச் சிக்கனமானதும் உறுதியானதுமான நுண்பாக கொடுகடன் விநியோக முறைமையை நிறுவுதலும் | 345.69 | | | | |
| கேகாலை ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் | சிஎஉ | 1.50 | வருமானத்தை உருவாக்கும் நடவடிக்கைகளினை மேம்படுத்துவதன் மூலம் செயற்றிட்டப் பிரதேசங்களிலுள்ள மக்களின் வாழக்கை நிலைமைகளைத் தரமுயர்த்துதல் | 148.00 | | | | |
| தென் மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் | சிஎஉ | 27.90 | தென் மாகாணத்திலுள்ள மக்களின் வாழக்கைத் தரத்தினை மேம்படுத்துதல் | 564.00 | | | | |
| ஐரோப்பிய முதலீட்டு வங்கியின் ஒப்பந்தம் பீ | யூரோ | 10.00 | சுனாமியால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளை மீளக் கட்டியெழுப்புதல் | 1,553.27 | | | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| சுசகன | இல.ரூ | 3,000.00 | சுனாமியினால் பாதிக்கப்பட்ட நுண்பாக சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளை மீளத் தொடங்குவதற்கு கொடுகடன் வசதிகளை வழங்குதல் | 2,750.00 | நிதித் திணைக்களத்திற்கு மாற்றல் செய்வதற்காக அட்டவணை யிடப்பட்ட திகதியின்படி பங்கேற்கும் நிதியியல் நிறுவனங் களிடமிருந்து அறவீடுகளைச் சேகரித்தல் | | | |
| சுசகன கட்டம் II | இல.ரூ | 500.00 | சுனாமியினால் பாதிக்கப்பட்ட நுண்பாக சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளை மீளத் தொடங்குவதற்கு கொடுகடன் வசதிகளை வழங்குதல் | 105.54 | | | | |
| வடக்கின் எழுச்சி | இல.ரூ | 2,000.00 | வட மாகாணத்தில் வேளாண்மை, விலங்கு வளர்ப்பு, நுண்பாக மற்றும் சிறிய தொழில்முயற்சிகளுக்கு கொடுகடன் வசதிகளை விரிவாக்குதல் | 2,000.00 | அட்டவணை யிடப்பட்ட திகதியின்படி பங்கேற்கும் நிதியியல் நிறுவனங் களிடமிருந்து அறவீடுகளைச் சேகரித்தல் மற்றும் செயற்றிட்டம் முடிவடைகையில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் தொடர்பான கணக்குகளுக்கு மாற்றல் செய்தல் | | | |
| கிழக்கு மாகாணத்தின் பொருளாதாரச் செயற்பாடுகளை மீளமைத்தல் கடன் திட்டம் | இல.ரூ | 1,000.00 | கிழக்கு மாகாணத்தில் சிறிய மற்றும் நடுத்தரளவு துறைகளின் நடவடிக்கைகளுக்கு கடன்களை வழங்குதல் | 1,000.00 | | | | |
| இரண்டாவது நீண்ட காலப் பயிர் அபிவிருத்திச் செயற்றிட்டம் - சுழலும் நிதியம் | இல.ரூ | 1,200.00 | நாட்டின் நீண்ட காலப் பயிர்த் துறையை அபிவிருத்தி செய்வதற்காக கொடுகடன் வசதிகளை வழங்குதல் | 1,199.82 | | | | |
| மாத்தளை பிரதேச பொருளாதார மேம்பாட்டுச் செயற்றிட்டம் - சுழலும் நிதியம் | இல.ரூ | 77.00 | மாத்தளை மாவட்டத்தில் கிராமிய மற்றும் பண்ணைக் குடும்பங்களின் வருமானத்தினை உயர்த்துவதற்கும் பண்ணையல்லாத தொழில்முயற்சிகளை உருவாக்குவதற்காக நடுத்தரளவு தொழில் முயற்சியாளர்களுக்கு நிதியங்களை வழங்குவதற்கும் அத்துடன் ஏற்கனவேயிருக்கும் செயற்றிட்டங்களை விரிவாக்குவதற்கும் | 77.00 | | | | |
| சப்பிரகமுவா மாகாண ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் - சுழலும் நிதியம் | இல.ரூ | 100.00 | சப்பிரகமுவா மாகாணத்தில் புதிய வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் | 100.00 | | | | |
| கட்டுமானத் துறை அபிவிருத்திச் செயற்றிட்டம் | யூரோ | 9.00 | சுனாமிக்குப் பின்னைய மீள்கட்டுமானங்களில் கட்டுமானம் மற்றும் பொதுப் பணிகளில் வினைத்திறனுடன் பங்கேற்பதற்காக தனியார் உள்நாட்டு வியாபாரங்களின் நிதியியல் மற்றும் தொழில்நுட்ப இயலுமைகளை உறுதிப்படுத்துதல் | 1,399.73 | | | | |
| சப்பிரகமுவா மாகாண ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் கட்டம் II | இல.ரூ | 70.00 | சப்பிரகமுவா மாகாணத்தில் புதிய வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் | 70.00 | | | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| சுனாமிக்குப் பின்னைய கரையோர மூலவள முகாமைத்துவச் செயற்றிட்டம் | இல.ரு | 2.09 | சுனாமி அனர்த்தத்தினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட சமூகங்கள் அவர்களுடைய சொத்துக்களை மீளப்பெறுவதற்கும் அவர்களுடைய வழமையான பொருளாதார நடவடிக்கைகளுக்கான அடித்தளத்தை மீளக்கட்டியெழுப்பும் அதேநேரம் புதிய இலாபமுள்ள வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளுக்கு பன்முகப்படுத்துவதற்கும் உதவி வழங்குதல் | 190.77 | | | | |
| விஸ்கம் (வேளாண்மைத் துறை அபிவிருத்திக்கான சிறப்புக் கடன் திட்டம்) | இல.ரு | 1,325.60 | நாட்டில் வர்த்தக வேளாண் வியாபாரத்தின் முதலீடு, பன்முகப்படுத்தல் மற்றும் முன்னேற்றத்திற்கான கொடுகடனின் கிடைப்பனவினை உறுதிப்படுத்தல் | 881.00 | பங்களிக்கும் வங்கிகளால் சட்டப்படியான தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்படும் போது நிதியங்கள் திருப்பி அளிக்கப்படும் | | | |
| மாகாண அபிவிருத்தி கொடுகடன் திட்டம் | இல.ரு | 2,900.00 | நாட்டில் சிறிய நடுத்தர தொழில்முயற்சியின் துறையில் நடுத்தர மற்றும் நீண்ட கால செயற்றிட்டங்களுக்கு கொடுகடன் வசதிகளை வழங்குதல் | 2,900.00 | நிதித் திணைக்களத்திற்கு மாற்றல் செய்வதற்காக அட்டவணை யிடப்பட்ட திகதியின்படி பங்கேற்கும் நிதியியல் நிறுவனங் களிடமிருந்து அறவீடுகளைச் சேகரித்தல் | | | |
| வரண்ட வலய வாழ்வாதார உதவி மற்றும் பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் | இல.ரு | 252.95 | அநுராதபுரம், மொனராகலை, குருணாகல் மற்றும் பதுளை மாவட்டங்களில் வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளுக்கு வசதிகளை வழங்குதல் | 252.95 | | | | |
| கிழக்கு மாகாணத்தின் பொருளாதாரச் செயற்பாடுகளை மீளமைத்தல் கடன் திட்டம் - கட்டம் II | இல.ரு | 1,078.27 | கிழக்கு மாகாணத்தில் வேளாண்மை, விலங்கு வளர்ப்பு, நுண்பாக மற்றும் சிறிய தொழில்முயற்சிகளுக்கு கொடுகடன் வசதிகளை விரிவாக்குதல் | 1,000.00 | | | | |
| கிழக்கு மாகாணத்தின் பொருளாதாரச் செயற்பாடுகளை மீளமைத்தல் கடன் திட்டம் - கட்டம் III | இல.ரு | 1,000.00 | கிழக்கு மாகாணத்தில் வேளாண்மை, விலங்கு வளர்ப்பு, நுண்பாக மற்றும் சிறிய தொழில்முயற்சிகளுக்கு கொடுகடன் வசதிகளை விரிவாக்குதல் | 1,428.47 | | | | |
| வடக்கு மற்றும் கிழக்கில் சேதடைந்த வீடுகளைத் திருத்துதல் | இல.ரு | 600.00 | வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் போரின் போது சேதமடைந்த வீடுகளைத் திருத்துவதற்கான கொடுகடன் வசதிகளை வழங்குதல் | 600.00 | | | | |
| தேசிய வேளாண் வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | ஐ.அ.டொலர் | 32.9 | சந்தை/ பெறுமதிச் சங்கிலித் தொடர் அபிவிருத்தியில் நன்மைபெறுநர்களின் வருமானத்தினை அதிகரிப்பதன் மூலம் சிறு உடமை உற்பத்தியாளர்கள் மற்றும் நிலமற்றோரின் குறிப்பாக இளைஞர்களுக்கு உதவியளித்தல் மற்றும் நிலமற்றோருக்கு குறிப்பாக இளைஞர்கள் தமது வருமானத்தினை மேம்படுத்தும் விதத்தில் தொழில்பெறும் விதத்தில் நிதியினையும் பயிற்சியையும் வழங்குதல் | 113.13 | | | | |

நடைபெற்று வரும் செயற்றிட்டங்கள்

| செயற்றிட்டத்தின் பெயர் | நிதியத்தின் மொத்த ஒதுக்கு (மில்.) | | கடனின் நோக்கம் | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங் களுக்கு வழங்கப்பட்ட மீள் நிதியம் (ரூ. மில்.) | அடிப்படைப் பண்புகள் | உத்தர வாதங்கள் மற்றும் காப்பீடுகள் | பொதுவான நிபந்தனை | சிறப்பு நிபந்தனை |
|---|---|---|---|---|---|---|---|---|
| தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம் - சுழலும் நிதியம் | இல.ரூ | 1,100.00 | நாட்டின் தேயிலைத் துறையை அபிவிருத்தி செய்வதற்காக கொடுகடன் வசதிகளை வழங்குதல் | 938.71 | | | | |
| சிறிய பெருந்தோட்டத் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி செயற்றிட்டம் | சிஎஉ | 1.75 | மொனராகலை, கண்டி, கேகாலை மற்றும் நுவரெலியா ஆகிய இடங்களிலுள்ள குறைந்த வருமானம் பெறும் சமூகத்தினரின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல் | 339.89 | | | | |
| வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் II (பிரபோதினி) | யென் | 2,305.00 | செயற்றிட்ட அமைவிடத்தில் மாத வருமானம் ரூ.15,000 இற்கும் குறைவாகக் கொண்ட குடியிருப்பாளர் அலகுகளின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல் | 3,126.29 | | | | தொடர்பான அனைத்துத் தரப்பின ரினதும் உடன்படிக் கையில்லா மல் உடன் படிக்கையின் உரிமைகள் மற்றும் கடப்பாடுகள் மாற்றப் படவோ திருத்தப் படவோ இரத்துச் செய்யப் படவோ மாட்டாது |
| வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் II (பிரபோதினி) - சுழலும் நிதி II | இல.ரூ | 2,764.84 | செயற்றிட்ட அமைவிடத்தில் மாத வருமானம் ரூ.15,000 இற்கும் குறைவாகக் கொண்ட குடியிருப்பாளர் அலகுகளின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல் | 2,748.15 | | உத்தர வாதமோ காப்பீடோ இல்லை | நிதியில் கூற்றுக்கள் வெளிக் கணக்காய் வாளரால் கணக்காய்வு செய்யப்பட வேண்டும் | |
| சுய வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு முயற்சிக் கடன் திட்டம் | இல.ரூ | 250.00 | நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட தொழில் பயிற்சி நிறுவனத்தில் சித்தியடைந்து பயிற்சி பெற்ற இளைஞர்களுக்கு சுய வேலை வாய்ப்புச் செயற்றிட்டங்களை தொடங்குவதற்கு நிதியியல் உதவிகளை வழங்குதல் | 202.62 | | | | |
| சிறிய வேளாண்மையாளர்கள், நிலமற்றோர் கொடுகடன் திட்டம் - சுழலும் நிதியம் | இல.ரூ | 345.69 | சிறு வேளாண்மையாளர்கள் மற்றும் சிறு அளவு வேளாண்மையல்லா கிராமிய தொழில்முயற்சி நிறுவனங்களினாலும் வேளாண்மை உற்பத்தியை செறிவுபடுத்துவதற்கு ஊக்குவித்தல் | 1,259.63 | | | | |
| வரண்ட வலய வாழ்வாதார உதவி மற்றும் பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் - சுழலும் நிதியம் | இல.ரூ | 252.95 | அநுராதபுரம், மொனராகலை, குருணாகல் மற்றும் பதுளை மாவட்டங்களில் வருமானமீட்டும் நடவடிக்கைகளுக்கு வசதியளித்தல் | 238.56 | அட்டவணை யிடப்பட்ட திகதியின்படி பங்கேற்கும் நிதியியல் நிறுவனங் களிடமிருந்து அறவீடுகளைச் சேகரித்தல் மற்றும் செயற்றிட்டம் முடிவடைகையில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் தொடர்பான கணக்குகளுக்கு மாற்றல் செய்தல் | | | |
| வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் - சுழலும் நிதியம் | இல.ரூ | 1,031.28 | குறைந்த வருமானக் குடும்பங்களின் பொருளாதார நிலைமைகளை உறுதிப்படுத்துதல் | 2,931.06 | | | | |
| சௌபாக்கிய | இல.ரூ | 11,234.00 | நுண்பாக சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சிகள் மற்றும் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட நுண்பாக சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சிகளுக்கு கொடுகடன் வழங்குதல் | 11,234.65 | | | | |
| வடக்கின் எழுச்சி - கட்டம் II | இல.ரூ | 2,154.5 | வட மாகாணத்தில் வேளாண்மை, விலங்கு வளர்ப்பு, நுண்பாக மற்றும் சிறிய தொழில்முயற்சிகளுக்கு கொடுகடன் வசதிகளை விரிவாக்குதல் | 2,157.28 | | | | |

## 49. ஏனைய நிறுவனங்களிலுள்ள நலவுரித்துக்கள்

பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்பட்ட கடன் திட்டங்களான சுசகன, சுசகன கட்டம் II, மாகாண ரீதியான அபிவிருத்திக் கடன் திட்டம் என்பன வங்கியினால் நிதியிடப்பட்டதுடன் வங்கியின் மீதிச் சொத்துக்களும் வருமானமும் வங்கியின் வருமானத்திற்குக் கொண்டு செல்லப்பட்டன.

வங்கியும் நிருவாச் செலவுகளை ஈடுசெய்வதற்காக, இலங்கை அரசாங்கத்தினால் நிதியிடப்பட்டு பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்படும் செயற்றிட்டங்களிலிருந்து குறிப்பிட்ட சதவீத வருமானத்தினை ஈட்டிக் கொண்டது.

பிரதேச அபிவிருத்தித் திணைக் களத்தினால் தொழிற் படுத்தப்படுகின்ற செயற்றிட்டங்களுக்காக வங்கியினால் வழங்கப்பட்ட கொடுகடன் உத்தரவாதங்களிலிருந்து தோன்றுகின்ற எதிர்பாராத பொறுப்புக்கள் குறிப்பு 47.2இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

## 50. நிதி நிலைமை பற்றிய கூற்றுத் திகதிக்குப் பின்னரான நிகழ்வுகள்

நிதிக் கூற்றுக்களைச் சீர்செய்தல் அல்லது நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டியதாயுள்ள திடமான நிகழ்வுகள் எதுவும் நிதி நிலைமை பற்றிய கூற்றுத் திகதிக்குப் பின்னர் நடைபெறவில்லை.

## 2. வங்கி மேற்பார்வை

வங்கிகளின் மேற்பார்வையினையும் பரீட்சிப்புக்களையும் தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கான குறித்துரைக்கப்பட்ட அதிகாரங்கள் மற்றும் கடமைகளுடன் கூடிய விதத்தில் நாணய விதிச் சட்டத்தின் 28ஆம் பிரிவின் கீழ் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் நிறுவப்பட்டது. மேலும், வங்கி ஒழுங்குவிதிகளும் மேற்பார்வையும் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளின் மூலம் நிருவகிக்கப்படுகின்றன. வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் முக்கிய தொழிற்பாடுகளாக நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட முன்மதியுடைய ஒழுங்குவிதிகள், வழிகாட்டல்கள் மற்றும் ஒப்புதல்களைத் தயாரித்து வழங்குதல், உரிமம் பெற்ற வங்கிகளின் தொடர்ச்சியான மேற்பார்வையினையும் காலாந்தரப் பரீட்சிப்புக்களையும் நடத்துதல் மற்றும் இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவ ஆதரவுத் திட்டம் என்பனவற்றின் நிருவாகம் என்பன காணப்பட்டன. மேலும், வங்கி மேற்பார்வைத் திணைக்களம், வங்கித்தொழில் துறையின் விழிப்புணர்வையும் இயலளவையும் கட்டியெழுப்புவதற்காக பல்வேறு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்தது. 2014 இறுதியிலுள்ளவாறு நாணய விதிச் சட்டம் மற்றும் வங்கித்தொழில் சட்டத்தின் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை வரம்பிற்குள் வருகின்ற வங்கிகள் 25 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளையும் 9 உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளையும் உள்ளடக்குகிறது. இவ்வங்கிகளின் பட்டியல் இணைப்பு II-1 இல் தரப்பட்டுள்ளன. 2014 ஆண்டுக்காலப்பகுதியில் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தினால் ஆற்றப்பட்ட முக்கிய தொழிற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகள் கீழே தொகுத்துத் தரப்பட்டுள்ளன:

### 2.1 முன்மதியுடைய ஒழுங்குவிதிகளையும் வழிகாட்டல்களையும் ஒப்புதல்களையும் வழங்குதல்

#### 2.1.1 முன்மதியுடைய ஒழுங்குவிதிகளையும் வழிகாட்டல்களையும் வழங்கல்

விடுக்கப்பட்ட முன்மதியுடைய ஒழுங்குவிதிகள் இவ்வறிக்கையின் பகுதி III இல் தரப்பட்டுள்ளன. முக்கியமான முன்மதியுடைய ஒழுங்குவிதிகளின் சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது:

அ. **பாசல் II இன் கீழ் தொழிற்பாட்டு இடர்நேர்வுகளுக்காக, நியமப்படுத்தப்பட்ட அணுகுமுறையினை நடமுறைப்படுத்தல்:** தொழிற்பாட்டு இடர்நேர்வுகளுக்காக, இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட தொகையினைக் கணிப்பதற்கான பாசல் II நியமப்படுத்தப்பட்ட அணுகுறை மீது உரிமம் பெற்ற வங்கிகளுக்கு வழிகாட்டல்கள் விடுக்கப்பட்டன. வங்கிகள் வழிகாட்டல்களில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைப் பிரமாணங்களுடன் இணங்கிச் செல்வதற்கு உட்பட்டு, நியமப்படுத்தப்பட்ட அணுகுமுறையினை அல்லது மாற்று நியமப்படுத்தப்பட்ட அணுகுமுறையினைப் பின்பற்றுவதற்கு அனுமதிக்கப்பட்டன.

ஆ. **அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு தொடர்பான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு:** மதிப்பீட்டாளர்களுக்கான தகைமைப் பிரமாணங்கள் உட்பட, அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு தொடர்பாக சபையினால் ஒப்புதளிக்கப்பட்ட பொருத்தமான முன்மதியுடை கொள்கைகளையும் நடைமுறைகளையும் பின்பற்றுமாறு உரிமம் பெற்ற வங்கிகள் கேட்டுக் கொள்ளப்பட்டன.

இ. **உரிமம் பெற்ற வங்கிகளின் தகவல் பாதுகாப்பு முகாமைத்துவம்:** வங்கித்தொழில் பணிகளின் தன்னியக்கப்படுத்தல்களில் காணப்படும் உயர்வடைந்து செல்லும்போக்கு மற்றும் அவற்றுடன் இணைந்த தகவல் தொழில்நுட்ப இடர்நேர்வுகள் என்பனவற்றைக் கருத்திற் கொண்டு, வங்கிகள் 2015 யூலை 1ஆம் நாளிலிருந்து பன்னாட்டு நியமங்களின் நியமங்களுக்கான பன்னாட்டு அமைப்பு 27000 தொடரினை அடிப்படையாகக் கொண்ட அடிப்படைத் தகவல் பாதுகாப்பு நியமத்திற்கு இணங்கியொழுகுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன.

ஈ. **நிதியியல் துறை ஒருங்கிணைப்பினை மேம்படுத்துவதற்கான வரி ஊக்குவிப்புக்கள் மீதான வழிகாட்டல்கள்:** முறையே உள்நாட்டரசிறைச் சட்டம் மற்றும் பெறுமதிசேர் வரிச் சட்டம் என்பனவற்றின் நியதிகளுக்கிணங்க, தகைமை பெறுகின்ற கொடுப்பனவு மற்றும் ஏதேனும் ஈர்க்கப்படாத உள்ளீட்டுக் கொடுகடனின் கோருகின்ற தன்மையொன்றாக கையேற்பு/ இணைப்பின் செலவினைக் கண்டறிவதற்காக நிதி திட்டமிடல் அமைச்சின் சம்மதத்துடன் ஒருங்கிணைப்பு கொள்கையின் கீழ் வங்கி மற்றும் வங்கியல்வாத நிதியியல் நிறுவனங்களின் இணைப்பு மற்றும் கையேற்பினை ஊக்குவிப்பதற்கு 2014 வரவு செலவுத் திட்ட முன்மொழிவினை நடைமுறைப்படுத்துவதற்காக வழிகாட்டல்களை விடுத்தது.

உ. **கடன் வழங்கலின் உயர்ந்தபட்சத் தொகை:** கடன் வழங்கலின் உயர்ந்தபட்சத் தொகை மீதான ஏற்கனவேயுள்ள பணிப்புரை பின்வருமாறு திருத்தப்பட்டது:

- இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டுள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றின் தலைமை அலுவலகத்தினால் அத்துடன்/ அல்லது இலங்கைக்கு வெளியேயுள்ள ஏதேனும் கிளையொன்றினால் திரட்டப்பட்ட நிதியினைப் பயன்படுத்தி வழங்கப்படுகின்ற கடன்கள், கடன் வழங்கல்கள் உயர்ந்தபட்சத் தொகைக்கு ஏற்புடைத்தான வரையறைகளிலிருந்து நீக்கப்படுகிறது.
- நாணயச் சபையின் ஒப்புதலுடன் கடன் வழங்கலின் உயர்ந்தபட்சத் வரையறைக்கு மேலதிகமாக அனைத்து உரிமம் பெற்ற வங்கிகளினாலும் வழங்கப்படுகின்ற கடன்கள் பாரிய கடன் வழங்கலின் கூட்டுத்தொகையின் வரையறையினைக் கணிக்கும் பொழுது நீக்கப்படுகின்றது.

ஊ. **உரிமம் பெற்ற வங்கிகளின் குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகள்:** இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டுள்ள அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளும் 2016 சனவரி 01 தொடக்கம் குறைந்தபட்சம் முறையே ரூ.10 பில்லியன் மற்றும் ரூ.5 பில்லியன் கொண்ட குறைந்தபட்ச மைய மூலதனத்தினைப் பேண வேண்டுமென கேட்டுக்கொள்ளப்பட்டன. வெளிநாட்டு வங்கிகளைப் பொறுத்தவரையில் குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடு முன்னர் அறிவித்தவாறு ரூ.5 பில்லியனாகக் காணப்படும்.

எ. **முதலீட்டு நிதியக் கணக்கு:** குறித்துரைக்கப்பட்ட மூன்றாண்டு காலம் 2014இல் முடிவடைந்தமையால் முதலீட்டு நிதியக் கணக்குகளின் தொழிற்பாடுகளை 2014 ஒத்தோபர் 01 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் நிறுத்துமாறு உரிமம் பெற்ற வங்கிகளுக்கு அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டன.

ஏ. **பாசல் III இன் கீழான திரவத்தன்மை உள்ளடக்க விகிதம்:** உயர்தரமான திரவச் சொத்துக்களின் போதுமானளவு இருப்பினை வங்கிகள் கொண்டிருப்பதனை உறுதிப்படுத்துவதன் மூலம் வங்கிகளின் திரவத்தன்மை இடர்நேர்வுத் தோற்றப்பாட்டின் குறுங்கால தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையினை மேம்படுத்தும் நோக்குடன் திரவத்தன்மை உள்ளடக்க விகிதம் தொடர்பான பாசல் III திரவத்தன்மை நியமங்களின் நடைமுறைப்படுத்தல் தொடர்பான ஒரு ஆலோசனைப் பத்திரம் வங்கிகளுக்கு வழங்கப்பட்டது. திரவத்தன்மை உள்ளடக்க விகிதத்தின் அவதானிப்புக் காலம் 2014 திசெம்பரில் ஆரம்பித்தது.

#### 2.1.2 நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட அனுமதிகள்

அ. **கிளைகள் மற்றும் ஏனைய வங்கித்தொழில் பிரிவுகள்:** 75 புதிய கிளைகளையும் 208 மாணவர் சேமிப்புப் பிரிவுகளையும் 01 நடமாடும் வங்கித்தொழில் பிரிவினையும் திறப்பதற்கும் 90 கிளைகளை

மீள்அமைப்பதற்கும் 167 தன்னியக்கக் கூற்றுப் பொறிகளை நிறுவுவதற்கும் ஒப்புதல் வழங்கப்பட்டது. 2014இன் இறுதியில் 3,508 கிளைகளும் 3,046 மாணவர் சேமிப்புப் பிரிவுகளும் 2,635 தன்னியக்கக் கூற்றுப் பொறிகளும் தொழிற்பாட்டிலிருந்தன.

**ஆ. வங்கித்தொழில் உரிமத்தை வழங்குதல்:** வங்கியின் கிளை வலையமைப்பு கொழும்பு மாநகர சபைக்குள் அதிகபட்சம் மூன்று கிளைகளுக்கு மட்டுப்படுத்தப்பட வேண்டும், நிதியியல் துறை ஒருங்கிணைத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வங்கி மூன்று உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் வரை கையேற்க வேண்டும். கார்கில்ஸ் குழுமத்தின் வங்கி மீதுான பொருண்மிய ஈடுபாடு 30 சதவீதத்தை விஞ்சக்கூடாது அத்துடன் வங்கித்தொழில் வியாபாரத்தை ஆரம்பித்த திகதியிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்குள் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் வங்கி பட்டியலிடப்பட வேண்டும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு, இலங்கையில் வர்த்தக வங்கித்தொழில் வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு கார்கில்ஸ் பாங்க் லிமிடெட்டிற்கு வங்கித்தொழில் உரிமம் வழங்கப்பட்டது.

**இ. ஏனைய தொழிற்பாட்டு ஒப்புதல்கள்:** அமைப்பு அகவிதிகளைத் திருத்துவதற்கான 02 கோரிக்கைகள், அடுக்கு II மூலதனத்தில் துணைத் தொகுதிக் கடன்களை உள்ளடக்குவதற்கான 05 கோரிக்கைகள், உயர்ந்தபட்சத் தொகையினை விஞ்சும் விதத்தில் கடன் வசதிகளை வழங்குவதற்கான 07 கோரிக்கைகள், துணை நிறுவனங்களில் முதலீடு செய்வதற்கான 04 கோரிக்கைகள் மற்றும் வெளிநாடுகளில் வியாபாரங்களை விரிவாக்குவதற்கான 02 கோரிக்கைகள் உள்ளடங்கலாக ஏனைய ஒழுங்குமுறைப்படுத்தல் ஒப்புதல்களுக்காக உரிமம் பெற்ற வங்கிகளிலிருந்தான பெருமளவான கோரிக்கைகளை வங்கி மேற்பார்வைத் திணைக்களம் செய்முறைப்படுத்தியது. நிதியியல் துறை ஒருங்கிணைப்பு செய்முறை தொடர்பாக வங்கிகளால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள் மதிப்பிடப்பட்டதுடன், அமைப்பு அகவிதிக்கான திருத்தங்கள், மேர்ச்சன்ட் பாங்க் ஒவ் சிறிலங்கா பிஎல்சி, எம்சிஎஸ்எல் பினான்சியல் சேர்விஸஸ் லிமிடெட் மற்றும் எம்பிஎஸ்எல் சேவிங்ஸ் பாங்க் லிமிடெட் என்பவற்றின் ஒருங்கிணைப்பு, வங்கிகளினால் மேற்கொள்ளப்படும் சில வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் கையேற்பு மற்றும் மூலதனத்தைப் பலப்படுத்துவதற்கான உபாய முதலீடுகள் போன்றவற்றிற்கு அவசியமான ஒப்புதல்கள் வழங்கப்பட்டன.

### 2.2 தொடர்ச்சியான மேற்பார்வையினை மேற்கொண்டமை

வங்கி மேற்பார்வைத் திணைக்களம், வங்கிகளின் நிதியியல் நிலைமைகளை மதிப்பிடுவதற்காகவும் அவசிமான சரிசெய்யும் நடவடிக்கைகளைத் தொடங்கும் பொருட்டு நேரகாலத்துடன் எச்சரிக்கை விடுக்கும் சமிக்ஞைகளை அடையாளம் காண்பதற்காகவும் தற்பொழுது இடம்பெற்றுவரும் அடிப்படையில் வங்கிகளைத் தொடர்ந்தும் மேற்பார்வை செய்தது. தொடர்ச்சியான மேற்பார்வையானது வங்கிகளால் சமர்ப்பிக்கப்பட்ட காலாந்தர நிதியியல் மற்றும் செயலாற்றத் தகவல் மற்றும் வங்கிகளுடனான ஏனைய தொடர்பூட்டல் என்பவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன. இச்செயன்முறை வங்கிகளுக்கான உள்ளக மேற்பார்வைத் தரமிடலின் இற்றைப்படுத்தலுக்கான உள்ளீடுகளை வழங்கியதுடன், இணங்கிக் கொள்ளப்பட்ட கால இலக்கிற்குள் வங்கிகளின் நியதிச்சட்ட பரீட்சிப்புக்களின் போது அடையாளம் காணப்பட்ட மேற்பார்வைக் கரிசனைகளைத் தீர்ப்பது தொடர்பான முன்னேற்றங்களைக் கண்காணித்தல் மற்றும் பொருத்தமான மேற்பார்வை மற்றும் சரியான நேரத்தில் சரிசெய்யும் நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துகின்றமையினை உறுதிப்படுத்துவதற்காக வங்கியின் பணிப்பாளர் சபை, மூத்த முகாமைத்துவம் மற்றும் வெளிக் கணக்காய்வாளர்கள் ஆகியோருடன் பல கூட்டங்கள் நடத்தப்பட்டன.

ஆண்டுப் பகுதியில், கொள்கைத் தீர்மானங்களுக்கு வசதியளிப்பதற்காக வங்கிகளின் மாதாந்த செயலாற்றம் தொடர்பான 383 அறிக்கைகளும் வங்கித்தொழில் துறையின் காலாண்டு செயலாற்றம் தொடர்பான 4 அறிக்கைகளும் வைப்பு வட்டி வீதங்களின் பகுப்பாய்வு, அடகு முற்பணங்களுக்கான கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் அறிமுகம், வங்கித்தொழில் துறைக்கான பெறுமதி விகிதத்திற்கான கடன்களினை நிர்ணயித்தல், வங்கிகளின் மூத்த பிரசைகளினது வைப்புக்கள் மற்றும் கூனி இறால் வளர்ப்புப் பண்ணைக் கைத்தொழிலுக்கான கடன் வழங்கல் மற்றும் ஆடைத் துறை போன்ற குறித்துரைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பான 6 அறிக்கைகளும் தயாரிக்கப்பட்டன.

பாசல் II இன் தூண் 2 இன் கீழான வங்கிகளின் உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டுச் செயன்முறையின் முதலாவது மீளாய்வானது ஆண்டுக் காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டதுடன் கண்டறியப்பட்டவை முன்னேற்றத்தின் பொருட்டு வங்கிகளுக்கு தொடர்பூட்டப்பட்டன. மேலும், பாசல் III மூலதன மற்றும் திரவத்தன்மை நியமங்களின் தாக்கம் தொடர்பான ஆரம்ப மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது.

### 2.3 காலாந்தர பரீட்சிப்புக்களை நடத்துதல்

முன்னைய ஆண்டின் தொடர்ச்சியாக இடம்பெற்ற 9 பரீட்சிப்புக்கள் உட்பட 2014ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் 42 பரீட்சிப்புக்களை நடாத்தியது. இடர்நேர்வினைக் கவனத்தில் கொண்ட ஒன்றுதிரட்டப்பட்ட மேற்பார்வை அணுகுமுறைகள் இப்பரீட்சிப்புக்களை நடத்துவதற்குப் பின்பற்றப்பட்டன. தொடர்பான வங்கிகளின் முகாமைத்துடன் இடம்பெற்ற வழமையான கலந்துரையாடல்களின் மூலமாக 2014இல் 30 வங்கிகளின் சட்ட ரீதியான பரீட்சிப்புக்கள் நிறைவடைந்ததுடன் நாணயச் சபைக்கான அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்பட்ட வேளையில் 12 பரீட்சிப்புக்கள் நிறைவடையும் செயற்பாட்டில் இருக்கின்றன. மேலும், கணக்கீடு, கணக்கீட்டு நியமங்களை அடிப்படையாகக் கொண்ட நிதியியல் அறிக்கையிடல் மற்றும் கேள்விகிடமான நிதிய மாற்றல் போன்ற விடயங்களில் மட்டுப்படுத்தப்பட்ட செயற்பரப்பினைக் கொண்ட பல பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

### 2.4 இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்தினை நிருவகித்தல்

2014 திசெம்பர் 31இல் உள்ளவாறு, திட்டமானது 82 உறுப்பு நிறுவனங்களையும் ஏறத்தாழ ரூ.18 பில்லியன் பெறுமதியான நிதியையும் உள்ளடக்கியிருந்தது. நிதியத்தின் முதலீடுகள் அரச பிணையங்களில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள், திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்தின் கீழ் ஒரு உறுப்பு நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட ரூ.6 பில்லியன் கடன் உள்ளடங்கலாக கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகளைக் கொண்டிருந்தது. உடனடியாக அடுத்துவரும் நிதியாண்டின் இறுதியில் 14 சதவீதம் அல்லது அதற்கு மேலான மூலதனப் போதுமை விகிதத்தைப் பேணும் உரிமம் பெற்ற வங்கிகள் அனைத்துத் தகுதியான வைப்புக்களின் மொத்தத் தொகையின் மீதும் ஆண்டொன்றிற்கு 0.10 சதவீதமான கட்டுப்பணத்தைச் செலுத்துவதற்குத் வேண்டப்படுத்தப்பட்டதுடன் ஏனைய அனைத்து வங்கிகளுக்கும் ஆண்டொன்றிற்கு 0.125 சதவீதக் கட்டுப்பணம் விதிக்கப்பட்டது. உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளுக்கு ஏற்புடைத்தான கட்டுப்பணம் ஆண்டொன்றிற்கு 0.15 சதவீதமாக இருந்தது. ஆண்டு காலப்பகுதியில் உறுப்பு நிறுவனங்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட கட்டுப்பணம் மற்றும் தண்டப் பணத்தின் பெறுமதி ரூ.4.8 பில்லியனாக இருந்தது.

2015 வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழிவு ஒப்புதலளிக்கப்பட்டதைத் தொடர்ந்து, 2015 சனவரி 01 இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் நிறுவனமொன்றுக்கு வைப்பாளர் ஒருவருக்கான வைப்புக் காப்புறுதிப் பாதுகாப்பின் அளவு ரூ.200,000 இலிருந்து ரூ.300,000 இற்கு அதிகரிக்கப்பட்டது.

### 2.5 வங்கித்தொழில் துறையின் விழிப்புணர்வினையும் இயலளவையும் கட்டியெழுப்புதல்

**அ.** வங்கி மேற்பார்வைத் திணைக்களம் “தொலைநோக்கு 2020: வங்கித்தொழில் துறையினை உண்மையான பொருளாதாரத்துடன்

அணிப்படுத்தல்" என்ற தொனிப்பொருளில் 2014 நவெம்பர் 26 அன்று ஏழாவது தொடர்ச்சியான வங்கிப் பணிப்பாளர்கள் கருத்தரங்கொன்றினை ஒழுங்குசெய்தது. இக்கருத்தரங்கானது வங்கிப் பணிப்பாளர்களின் உபாயத் தலைமைத்துவம் மீதான சிறப்பான முக்கியத்துவத்துடன் உலகளாவிய சூழலில் தோற்றம் பெற்றுவரும் போக்குகள், வங்கிகளின் கொடுகடன் தரமிடலின் முக்கியத்துவம், நிலைமாறலுக்கான உபாயத் திட்டமிடல் மற்றும் டிஜிட்டல் யுகத்தில் வங்கித்தொழில் மீதான சிறப்பான பார்வையுடனான வலுவூட்டல் அத்துடன் தனியாக பிரிந்த அடிப்படையிலான இடர்நேர்வு முகாமைத்துவத்திலிருந்து மாறுவதன் முக்கியத்துவம் தொடர்பான அமர்வுகளைக் கொண்டிருந்தது.

**ஆ.** பாசல் II இன் தூண் 2 இன் கீழ் உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டுச் செயன்முறை தொடர்பான அறிவினையும் இடர்முகாமைத்துவ நடைமுறைகளையும் மேம்படுத்துவதற்கு நோக்குடன் உரிமம் பெற்ற வங்கிகளின் பணிப்பாளர் சபைக்காக தொழில்நுட்பக் கூட்டத் தொடரொன்று நடாத்தப்பட்டது.

**இ.** ஆலோசனைப் பத்திரம் தொடர்பில் வங்கிகளால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்களைக் கலந்துரையாடுவதற்காகவும் வங்கித்தொழில் துறையில் இயலளவைக் கட்டியெழுப்புவதற்காகவும் பாசல் III இன் கீழான திரவத்தன்மை உள்ளடக்க விகிதம் தொடர்பில் வெளியிடப்பட்ட ஆலோசனைப் பத்திரம் தொடர்பான இரண்டு செயலமர்வுகள் முதன்மை இடர்நேர்வு அலுவலர்கள் மற்றும் வங்கித்தொழில் துறை தொழில்சார்ந்தவர்களுக்காக நடாத்தப்பட்டன.

**ஈ.** ஒன்றிணைந்த இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பு மற்றும் பாசல் II இன் தூண் 2 இன் கீழ் அழுத்தப் பரீட்சிப்பு தொடர்பில் முன்னர் வழங்கப்பட்ட மேற்பார்வை வழிகாட்டல்களுக்கு மேலதிகமாக அழுத்தப் பரீட்சிப்புக் கட்டமைப்பை அபிவிருத்தி செய்து நடைமுறைப்படுத்துவதற்கும் அழுத்தப் பரீட்சிப்பு முடிவுகளை வங்கிகளின் இடர்நேர்வு முகாமைத்துவ மற்றும் தீர்மானம் மேற்கொள்ளும் செயன்முறையில் ஒருங்கிணைப்பதற்கும் வங்கிகளைத் தேவைப்படுத்தும் விதத்தில் அழுத்தப் பரீட்சிப்புக்கள் மீதான வழிகாட்டல்கள் வங்கிகளுக்கு வழங்கப்பட்டன.

**உ. வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்கள், தலைர்கள் மற்றும் வங்கிக் கணக்காய்வாளர்களுடனான கூட்டங்கள்**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம் வங்கிகளின் முதன்மையான நிறைவேற்று அலுவலர்களுடனான ஆளுநரின் மாதாந்த கூட்டங்கள் மற்றும் வங்கித் தலைவர்களுடனான காலாண்டு கூட்டங்களுக்கான செயலகமாகத் தொடர்ந்தும் பணியாற்றியதுடன் இது இலங்கைப் பொருளாதாரத்தின் அபிவிருத்திகள், நாணய மற்றும் வங்கித்தொழில் துறையின் அபிவிருத்திகள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை முன்னேற்றங்களுடன் தொடர்புபட்ட விடயங்களில் மத்திய வங்கியும் வங்கித்தொழில் துறையும் கருத்துக்களை பகிர்ந்து கொள்வதற்கான அரங்கமாக தொழிற்படுகின்றது. நிதியியல் அறிக்கையிடல், வங்கிகளின் உள்ளகக் கட்டுப்பாடுகள், கம்பனி ஆளுமை பணிப்புரைகளின் மீளாய்வு, முகாமைத்துவக் கடிதங்களின் சமர்ப்பிப்பு போன்றவற்றுடன் தொடர்புடைய பிரச்சனைகள் பற்றி அபிப்பிராயங்களைப் பகிர்ந்து கொள்வதற்காக ஆளுநரின் தலைமையில் வெளியகக் கணக்காய்வாளர்கள் குழுவுடன் கூட்டமொன்று நடாத்தப்பட்டதுடன் அடுத்த ஆண்டு கணக்காய்வைத் திட்டமிடும் போது கவனிக்க வேண்டிய விடயப்பரப்புகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது. மேலும், மேற்பார்வைப் பொறிமுறையின் ஒரு பகுதியாக வங்கி தொடர்பான குறித்துரைக்கப்பட்ட விடயங்களை கலந்துரையாடுவதற்காக கணக்காய்வாளர்களுடன் பல கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

**ஊ. பொதுமக்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்:**

2014 காலப்பகுதியில் பொதுமக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கு மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்பட்ட நிதியியல் நிறுவனங்கள் தொடர்பிலும் தடைசெய்யப்பட்ட திட்டங்களின் ஆபத்துக்கள் தொடர்பிலும் பொதுமக்களிடையேயான விழிப்புணர்வினை மேம்படுத்தும் பொருட்டு வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்துடன் இணைந்து வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தினால் பொதுமக்களுக்கான விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதன்படி, 2 பொதுமக்களுக்கான அறிவித்தல்கள் அனைத்து மூன்று மொழிகளிலும் பல செய்தித்தாள்களிலும் வெளியிடப்பட்டதுடன் மொத்தமாக 242 வெளியீடுகள் வெளியிடப்பட்டன.

**எ.** நிதியியல் துறை ஒருங்கிணைப்பு செயன்முறையின் மீதான முன்னேற்றம் உட்பட ஒழுங்குமுறைப்படுத்தல் செயற்பரப்பில் இடம்பெற்ற மாற்றங்கள் மற்றும் அபிவிருத்திகள் தொடர்பான தகவல்களைப் பரப்புவதற்காக 51 பத்திரிகை வெளியீடுகள் வெளியிடப்பட்டன.

**ஏ.** மேலும், வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் 16 மூத்த அலுவலர்கள் மத்திய வங்கியின் வங்கித்தொழில் கற்கைகளுக்கான நிலையத்தினாலும் வெளிநாட்டு நிறுவனங்கள் உட்பட வெளியக நிறுவனங்களினாலும் ஒழுங்குசெய்யப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான ஆளணியினராக பணியாற்றினர். இந்நிகழ்ச்சித்திட்டங்களில் முக்கியமாக வங்கி மேற்பார்வை, இடர்நேர்வு முகாமைத்துவம், கம்பனி ஆளுகை, வங்கித்தொழில் மற்றும் நிதியுடன் தொடர்பான சட்டவாக்கங்கள் ஆகியவை காணப்பட்டன.

**ஐ. நிதியியல் துறையின் ஒருங்கிணைப்பு**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம், 2014 வரவு செலவுத்திட்டத்தில் அறிவிக்கப்பட்ட இணைப்புக்கள் மற்றும் கையேற்புக்களினூடாக நிதியியல் துறையை வலுப்படுத்துவதற்காக நிதியியல் துறையின் வீரியத்தையும் தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையினையும் உயர்த்துவதற்காகவும் இவ்வாண்டுப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட நிதியியல் துறை ஒருங்கிணைப்புச் செயன்முறைகளுக்கு வசதியளித்தது. வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளரும் மேலதிகப் பணிப்பாளரும் மத்திய வங்கியில் நிறுவப்பட்டுள்ள நிதியியல் துறை ஒருங்கிணைப்புப் பிரிவின் உறுப்பினர்களாக பணியாற்றிய வேளையில், மூத்த அலுவலரொருவர் தொழில்நுட்ப உதவிக் குழுவில் பணியாற்றினார். நிதியியல் துறை ஒருங்கிணைப்பினை ஊக்குவிப்பதற்காக உள்நாட்டரசிறைச் சட்டம் மற்றும் பெறுமதிசேர் வரிச் சட்டம் என்பனவற்றின் நியதிகளில் வரி ஊக்குவிப்புக்கள் மீதான வழிகாட்டல்கள் வங்கிகளின் கணக்குகளை கணக்காய்வு செய்யத் தகுதிபெற்ற கணக்காய்வாளர்களினதும் உள்நாட்டரசிறைத் திணைக்களத்தினதும் உதவியுடன் வடிவமைக்கப்பட்டன. பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு, வங்கிகளினைக் கணக்காய்வு செய்ய தகைமைபெற்ற கணக்காய்வாளர்கள், ஆலோசனையாளர்கள், நிதியமைச்சின் அலுவலர்கள், உள்நாட்டரசிறைத் திணைக்களம் மற்றும் தொழிற் சங்கங்கள் போன்ற தொடர்புபட்ட ஆர்வலர்களுடனான தொடர்ச்சியான ஈடுபாடுகளுக்குப் பல கூட்டங்களினூடாக வசதியளிக்கப்பட்டது.

**ஒ. கம்பனி ஆளுகைப் பணிப்புரைகளின் மீளாய்வு**

கம்பனி ஆளுகை தொடர்பில் தற்போதுள்ள பணிப்புரைகளை மீளாய்வு செய்வதற்காக வங்கி மேற்பார்வைத் திணைக்களம் இரண்டு குழுக்களுக்கு வசதியளித்தது. குழுக்களில் ஒன்று வங்கிகளின் தலைவர்களை உள்ளடக்கியிருந்த வேளையில் மற்றையது வங்கியின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களை உள்ளடக்கியிருந்தது. இரண்டு குழுக்களுக்கும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டிற்கும் பொறுப்பான துணை ஆளுநர் தலைமை தாங்கினார். இதன்படி, உலகளாவிய நிதியியல் நெருக்கடிகளைத் தொடர்ந்து புதிய

பன்னாட்டு ஒழுங்குமுறைப்படுத்தல் அபிவிருத்திகள் மற்றும் கம்பனி ஆளுகைகளில் காணப்பட்ட சிறந்த நடைமுறைகள் மற்றும் வேறு தேவையான பெறப்பட்ட அவதானிப்புக்கள் என்பன மீளாய்வு செய்யப்பட்டு கலந்துரையாடப்பட்டன. இதன்படி கம்பனி ஆளுகை தொடர்பில் தற்போதுள்ள பணிப்புரைகளின் ஏற்பாடுகளுக்குள் தற்போதைய நடைமுறைகளையும் செயன்முறைகளையும் பலப்படுத்துவதற்கு குழுக்கள் தீர்மானித்தன.

**ஓ. வழக்குகளைக் கையாளல்**

2002இல் தோல்வியடைந்த பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கி லிமிடெட்டின் விடயங்கள், செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள் தொடர்பான விடயங்கள், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எண்ணெய் காப்பிடல் கொடுக்கல்வாங்கல் தகராறுகள் மற்றும் தடைசெய்யப்பட்ட திட்டங்கள் என்பன தொடர்பிலான 16 வழக்குகள் தொடர்பிலான வழக்காடல்கள் சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் ஏனைய சட்டம் நடைமுறைப்படுத்தும் முகவர்கள் என்பனவற்றின் உதவியுடன் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தினால் கையாளப்பட்டன.

**ஔ. உள்ளக ஒழுங்குமுறைப்படுத்தல் நிறுவனங்களின் சபை**

நிதியியல் துறையின் ஒழுங்குமுறைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை வலுப்படுத்துதல் என்பவற்றுக்காக பொருத்தமான கொள்கை நெறிப்படுத்தல்களை உறுதிப்படுத்துகின்ற குறிக்கோளுடன் அனைத்து நிதியியல் துறை ஒழுங்குமுறைப்படுத்துநர்களையும் உள்ளடக்கி 2007இல் உள்ளக ஒழுங்குமுறைப்படுத்தல் நிறுவனங்களின் சபை உருவாக்கப்பட்டது. இதனை வசதிப்படுத்தும் பொருட்டு 'நிதியியல் துறை ஒழுங்குமுறைப்படுத்துநர்களிடையே தகவல்களைப் பகிர்ந்து கொள்ளல்' தொடர்பான சட்டமொன்றினை ஆக்குவதற்கான முன்மொழிவு உள்ளக ஒழுங்குமுறைப்படுத்தல் நிறுவனங்களின் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டதுடன் இது இப்பொழுது சட்ட வரைஞரினால் சட்டவாக்க செயன்முறை வரையப்பட்டு வருகின்றது. பங்குத் தரகர்களுக்கான குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகள், கம்பனிப் படுகடன் சந்தை அபிவிருத்தி, நெருக்கடி தீர்மானங்களில் ஒழுங்குமுறைப்படுத்துநர்களின் பங்கு, உரிமம் பெற்ற நிறுவனங்களின் கம்பனி ஆளுகையினை வலுப்படுத்தல் மற்றும் அனைத்தும் பட்டியலிடப்பட்ட கம்பனிகளிலும் தொழில்சார் ரீதியில் தகைமை வாய்ந்த கணக்காய்வாளர்களை ஈடுபடுத்துதல் என்பன தொடர்பான விடயங்களை கலந்துரையாடுவதற்காக 2014இல் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் உள்ளக ஒழுங்குமுறைப்படுத்தல் நிறுவனங்களின் சபையின் கூட்டங்களுக்கும் வசதியளித்தது.

## இணைப்பு II-1 உரிமம் பெற்ற வங்கிகளின் பட்டியல்

**உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்**

1. அமானா பாங்க் பிஎல்சி
2. அக்சிஸ் பாங்க் லிமிடெட்
3. இலங்கை வங்கி
4. கார்கில்ஸ் பாங் லிமிடெட்
5. சிற்றி பாங்க் என்.ஏ
6. கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி
7. டொயிஷ் பாங்க் ஏஜி
8. டிஎவ்சிசி வர்தன பாங்க் பிஎல்சி
9. ஹபீப் பாங்க் லிமிடெட்
10. ஹற்றன் நஷனல் பாங்க் பிஎல்சி
11. ஐசிஐசிஐ பாங்க் லிமிடெட்
12. இந்தியன் பாங்க்
13. இந்தியன் ஓவசீஸ் பாங்க்
14. எம்சிபி பாங்க் லிமிடெட்
15. நஷனல் டெவலப்மென்ற் பாங்க் பிஎல்சி
16. நேஷன்ஸ் ரஸ்ட் பாங்க் பிஎல்சி
17. பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேசன் பிஎல்சி
18. மக்கள் வங்கி
19. பப்ளிக் பாங்க் பெர்காட்
20. சம்பத் பாங்க் பிஎல்சி
21. செலான் பாங்க் பிஎல்சி
22. ஸ்ரான்டட் சார்ட்டட் பாங்க்
23. ஸ்ரேற் பாங்க் ஒவ் இந்தியா
24. த ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோப்பரேசன் லிமிடெட்
25. யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு பிஎல்சி

**உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்**

26. டிஎவ்சிசி பாங்க்*
27. இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி
28. லங்காபுத்ர டெவலப்மென்ற் பாங்க் லிமிடெட்
29. எம்பீஎஸ்எல் சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்**
30. தேசிய சேமிப்பு வங்கி
31. பிரதேசிய சங்வர்த்தன பாங்க்
32. சணச டெவலப்மென்ற் பாங்க் பிஎல்சி
33. சிறிலங்கா சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
34. அரச ஈட்டு முதலீட்டு வங்கி

* டிஎவ்சிசி வங்கி கம்பனிகள் சட்டத்தின் கீழ் பகிரங்க வரையறுக்கப்பட்ட கம்பனியாக பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் 2015 சனவரி 6 இலிருந்து டிஎவ்சிசி வங்கி பிஎல்சி என்ற பெயரில் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

** நிதியியல் துறை ஒருங்கிணைப்புச் செயன்முறையின் கீழ் எம்பீஎஸ்எல் சேமிப்பு வங்கி லிமிடெட் இலங்கை வணிக வங்கி பிஎல்சி உடனும் எம்சிஎஸ்எல் பினான்சியல் சேர்விஸஸ் லிமிடெட்டுடனும் ஒருங்கிணைக்கப்பட்டு இலங்கை வணிக வங்கி மற்றும் பினான்ஸ் பிஎல்சி என்ற பெயரில் உரிமம் பெற்ற நிதிக் கம்பனியாக 2015 சனவரி 1ம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் தொழிற்பட்டு வருகின்றது.

## 3. வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம்

வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையமானது இலங்கை மத்திய வங்கியின் பயிற்சிக்கான ஒரு மையமாகும். இலங்கை மத்திய வங்கி மற்றும் இலங்கையிலுள்ள நிதியியல் தொழில் துறையின் அறிவுத்திறனை மேம்படுத்தல் மற்றும் மனிதவள மூலதனத்தை அபிவிருத்தி செய்தல் போன்றவற்றிற்கான பொறுப்பு வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இது பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், ஆய்வரங்குகள் மற்றும் செயலமர்வுகளை வடிவமைத்து நடத்துகின்றது. தெற்காசிய பிராந்திய மத்திய வங்கியிலிருந்து பங்குபற்றுநர்கள் இத்தகைய சில நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றுகின்றார்கள். வங்கித்தொழில் ஆய்வுநிலையம், சமகாலத்தில் முக்கியத்துவம் பெறும் விடயங்களில் பொதுமக்களுக்கான ஆய்வரங்குகளையும் நடத்துகின்றது. பொருளாதார ஆசிரியர்கள் மற்றும் உயர்தர மாணவர்கள் அத்துடன் பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் நடைமுறைப் பொருளாதாரம் மீதான அறிவை மேம்படுத்துவதற்காக கல்வி அமைச்சின் ஒத்துழைப்புடன் சிறப்பு நிகழ்ச்சித்திட்டங்களையும் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம் நடாத்துகின்றது.

2014ஆம் ஆண்டில் வங்கித்தொழில் கற்கைகள் ஆய்வுநிலையத்தின் கவனமானது பன்னாட்டு தரங்களுக்கு இணையாக இதன் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வசதிகளின் தரத்தை உயர்த்துவதன் மீது குவிந்திருந்தது. உயர்ந்தளவில் வளர்ந்துவரும் நிதியியல் உலகில் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம், வசதியானதொரு பயிலும் சூழலில் புத்தம் புதிய முறைகளினூடாக இற்றைப்படுத்தப்பட்ட அறிவினை வழங்கும் தேவையினை அடையாளம் கண்டு கொண்டது.

வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம் வங்கித்தொழில் தொழிற்பாடுகள் மற்றும் ஒழுங்குவிதிகள், நிதியியல் முகாமைத்துவம், பொருளாதாரம், கிராமியத் துறை அபிவிருத்தி, மனிதவளம் மற்றும் பொது முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம், மற்றும் தொடர்பூட்டல் தேர்ச்சி ஆகிய துறைகளில் பயிற்சி கற்கைநெறி, செயலமர்வுகள் மற்றும் மாநாடுகளை நடத்தியது. நிதியியல் நிறுவனங்களின் மைய நடவடிக்கைகள் மற்றும் துணைப் பணிகள் ஆகிய இரண்டு நியதிகளிலும் அவற்றின் பயிற்சித் தேவைகளை அனைத்தையுமுள்ளடக்கிய விதத்தில் பூர்த்திசெய்யும் நோக்குடன் வங்கித் தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையம் நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்கியது. வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம் ஏனைய உலகளாவிய மூலவள நிலையங்களுடனான அதன் இணைப்புக்களை விரிவுபடுத்திக் கொண்டதன் மூலம் அதன் பிரசன்னத்தினைத் தொடர்ந்தும் விரிவாக்கிக் கொண்டது. பன்னாட்டு இணங்குவிப்பு அமைப்பினதும் மன்செஸ்டர் பல்கலைக்கழகத்தினதும் ஒத்துழைப்புடன் இணங்கியொழுகும் தன்மையில் பன்னாட்டு டிப்ளோமா தொடங்கப்பட்டமையானது அத்தகைய அபிவிருத்திகளில் தலையாயதாகும்.

2014ஆம் ஆண்டுப் பகுதியில், வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம் 65 கலண்டர் நிகழ்ச்சித்திட்டங்கள், 67 சிறப்பு நிகழ்ச்சித்திட்டங்கள், (நிதியியல் நிறுவனங்களிலிருந்து எழுந்த கேள்வியினதும் ஆய்வுநிலையத்தினால் அடையாளம் காணப்பட்ட அறிவு இடைவெளிகளினதும் அடிப்படையில்) 08 பன்னாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள், 04 டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டங்கள், 03 சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் 01 பயிற்சியாளர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியது. மேலும், ஆண்டுப்பகுதியில் அறிவினைப் பகிர்ந்து கொள்ளும் நிகழ்வுகளாக 12 பகிரங்க விரிவுரைகள், 16 பள்ளிக்கூட நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் 06 பல்கலைக்கழக மாணவர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்கள் என்பனவும் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையத்தில் நடத்தப்பட்டன. இந்நிகழ்வுகளில் 211 வெளிநாட்டுப் பங்கேற்பாளர்கள் உட்பட மொத்தமாக 5,092 பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டனர். இலங்கையிலுள்ள உயர்தர பொருளியல் மாணவர்களுக்காக "ரக்சிலாவ" என்ற தலைப்பிலான தொலைக்காட்சித் தொடரொன்று வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையத்துடன் இணைந்து 2014இல் ஒளிபரப்பப்பட்டது.

வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம் மத்திய வங்கியின் பிரதேச அலுவலகங்கள் கண்காணிப்புத் திணைக்களம் மற்றும் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அலுவலகங்கள் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் தொடர்ச்சியான பிரதேச மட்டத்திலான நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியது. 2014இல் மொத்தமாக 10 அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. விடயப்பரப்புக்கள் கடன் வழங்கல் மற்றும் கொடுகடன் மதிப்பிடல் போன்ற மைய வங்கித்தொழில் நடவடிக்கைகளிலிருந்து அடகுபிடித்தல் போன்ற துணைப் பணிகள் வரையில் பரந்த வீச்சினைக் கொண்டிருந்தது.

2015ஆம் ஆண்டிற்கான பயிற்சி தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யக்கூடிய விதத்திலும் 2020 இற்கான தொலைநோக்கை அடைவதற்கான தேவைப்பாடுகளை வழங்குவதற்காகவும் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம் அதன் கலண்டர் மற்றும் சிறப்பு நிகழ்ச்சித்திட்டங்களை வடிவமைத்தது.

## 4. தொடர்பூட்டல்

தகவல்களைப் பரப்புதல் மற்றும் மக்களின் பொருளாதார விழிப்புணர்வை அதிகரிப்பதற்கு முயற்சித்தல் போன்றவற்றினூடாக ஆய்வுக்குரிய காலப்பகுதியில் தொடர்பூட்டல் திணைக்களம், மத்திய வங்கியின் பணி நோக்கி அதன் தொடர்ச்சியான பங்களிப்பை வழங்கியது.

முழுத் தீவிலிருந்தும் 550 சிங்கள மொழி மூல மற்றும் 263 தமிழ் மொழி மூல பாடசாலைகள் பங்குபற்றிய பாடசாலைகளுக்கிடையிலான வினா விடை போட்டிச் செயற்றிட்டமான "ஈகோன் ஜகோன் கட்டம் 2" இன் வெற்றியின் மூலம் மேம்பட்ட பொருளாதார விழிப்புணர்வுடன் கூடிய சமூகத்தினை கட்டியெழுப்புகின்றமை நோக்கிய திணைக்களத்தின் கடப்பாடு வெளிப்படுத்தப்பட்டது.

### 4.1 வெளிவாரித் தொடர்பூட்டல்

வங்கியின் கம்பனி வெப்தளமான www.cbsl.gov.lk ஆனது 2014ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் 86.9 மில்லியன் பார்வையாளர்களைப் பதிவு செய்தது. இது முன்னைய ஆண்டு காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட 83.6 மில்லியன் பார்வையாளர்களுக்கு மேலாக 3.94 சதவீத அதிகரிப்பாகும். மத்திய வங்கியின் செயற்பாடுகளின் தகவல் மூலமாக வலையமைப்பு பிரசித்தமானது இவ்வளர்ச்சியின் மூலம் சான்றுபடுத்தப்பட்டது. மேலும், முகநூலில் 567 பதிவுகளையும் டுவிட்டரில் 567 டுவிடுகளையும் உருவாக்கியதன் மூலம் சமூக ஊடகங்களில் வங்கியின் பிரபல்ய தன்மையினை இடைவிடாது பிரசன்னப்படுத்தியது. ஆண்டு காலப்பகுதியில் 51 காணொளிகள் யு-ரியூப்பில் பதிவேற்றப்பட்டதுடன் அக்காணொளிகளை 23,239 பார்வையாளர்கள் பார்வையிட்டுள்ளனர்.

ஆண்டுக் காலப்பகுதியில், இத்திணைக்களமானது, ஆளுநரிடமிருந்து பொதுமக்கள் நேரடியாக கேள்விகளைக் கேட்பதற்காக ஒவ்வொன்றும் 1 மணித்தியாலயம் கொண்ட 2 டுவிட்டர் அமர்வுகளை ஒழுங்குபடுத்தியது. ஒவ்வொரு அமர்விலும் 100 டுவிட்டர் பாவனையாளர்களுக்கு மேற்பட்டோர் வினாக்களை கேட்டதுடன் அமர்வுகள் வெற்றிகரமாக இடம்பெற்றன.

திணைக்களத்தால் பேணப்படும் மின்னஞ்சல் அலேட் முறைமை 1,800 வாடிக்கையாளர்களைக் கொண்டிருந்ததுடன் இது திறைசேரி உண்டியல் வீதங்கள், பணவீக்க வீதம், இலங்கை வங்கிகளுக்கிடையேயான கடன் வழங்கல் வீதம் மற்றும் நாணயக் கொள்கை போன்றவற்றைக் கொண்டிருந்து. மேலும், ஆண்டுக் காலப்பகுதியில் இத்தகவல்களை சுற்றோட்டத்தில் விடுவதற்காக 581 மின்னஞ்சல்கள் அனுப்பப்பட்டன.

எஸ் எம் எஸ் அலேட் முறைமைக்கான வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையானது, முன்னைய ஆண்டின் முடிவில் பதிவுசெய்யப்பட்ட 840 இலிருந்து 913 இற்கு அதிகரித்தது. இந்த முறைமையானது பத்திரிகையாளர்கள், நிதியியல் சந்தையுடன் தொடர்புடைய மக்கள் மற்றும் சந்தைத் தகவல்கள் வெளியிடப்படும் போதே எந்தவித நேர தாமதமுமின்றி அவற்றைப் பெறத் தேவையுடைய பெருமளவிலான பொதுமக்கள் போன்றோருக்கு பயனுள்ளதாக இருக்கிறது.

மின்னஞ்சல், எஸ் எம் எஸ் மற்றும் சமூக ஊடகங்கள் போன்ற பாரம்பரியமற்ற தளங்கள் மீதான தொடர்பூட்டலினை மேம்படுத்தும் வேளையில் தொடர்பூட்டல் திணைக்களமானது அதன் ஒழுங்கான பாரம்பரிய தொடர்பூட்டல்களை பராமரிப்பதிலும் வெற்றி கண்டுள்ளது. இதன் கீழ் ஆய்வுக்குரிய ஆண்டுக்காலப் பகுதியில் 1,866 பத்திரிகை வெளியீடுகளையும் 13 வர்த்தமானி அறிவித்தல்களையும் 63 அறிவித்தல்களையும் வெளியிட்டது.

2014ஆம் ஆண்டு காலப்பகுதியில் வங்கியுடன் தொடர்புடைய பல்வேறு விடயங்கள் தொடர்பாக 24 ஊடக ஒழுங்குபடுத்தல்களும் நடத்தப்பட்டன. இதற்கு மேலதிகமாக, தொடர்பூட்டல் திணைக்களமானது இலங்கை மத்திய வங்கி வழிகாட்டலின் அறிவிப்பு, வழிகாட்டலின் குழுமக்கலந்துரையாடல், மத்திய வங்கி குண்டு வெடிப்பின் 18 ஆவது நினைவு, 2013ஆண்டறிக்கையின் காட்சிப்படுத்தலுடனான விரிவுரை, பொருளாதார அபிவிருத்திக்கான நிதியியல் அறிக்கையிடல் தொடர்பான தெற்காசிய மாநாடு, வங்கியின் கணனி பாதுகாப்பு தற்செயல் பதிலுறுத்தல் குழு தொடக்கிவைத்தல், பட்டயக்கணக்காளர் நிறுவனத்தின் இணக்கப்பாட்டு கற்கைநெறி சான்றிதழ் வழங்கும் நிகழ்வு, றிசேர்வ் பாங் ஒவ் இந்தியாவின் ஆளுனரின் காட்சிப்படுத்தலுடனான விரிவுரை, வங்கியின் ஆண்டுச் சொற்பொழிவு, வரவுசெலவுத்திட்ட மேம்பாடுகள் 2015, 25 மாவட்ட நாணயக்குத்திகளின் ஆரம்பநிகழ்வு மற்றும் வங்கிப் பணிப்பாளர்களின் மாநாடு 2014 போன்ற நிகழ்வுகளுக்கு வசதியளித்தது.

தொடர்பூட்டல் திணைக்களமானது குளியாப்பிட்டியில் நடைபெற்ற "தேசத்தின் மகுடம்" கண்காட்சி, பண்டாரநாயக்கா ஞாபகார்த்த பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற கொழும்பு பன்னாட்டு புத்தகக் கண்காட்சி மற்றும் தேசிய நூலகத்தில் நடைபெற்ற புத்தகக் கண்காட்சி போன்ற மூன்று தேசிய நிகழ்ச்சிகளில் வங்கியினை பிரதிநிதித்துவப்படுத்தியது.

### 4.2 உள்ளக தொடர்பூட்டல்

திணைக்களத்தால் தொழிற்படுத்தப்படும் உள்ளக இணையத்தளமான "cbsldaily" ஆனது, வங்கி ஊழியர்களுக்கான தகவல்களை வழங்குகின்ற ஒரு இணைய நுழைவாயிலாக அதன் பிரபல்யத்தினை தொடர்ந்தும் பேணியது. இந்த இணையத்தளமானது ஆண்டுக்காலத்தில் 404 இலங்கை வங்கிகளுக்கிடையிலான கடன் வழங்கல் வீத மற்றும் செலாவணி வீத இற்றைப்படுத்தல்கள், 176 பத்திரிகை வெளியீடுகள் என்பனவற்றைக் கொண்டிருந்தது. இந்த இணையத்தளமானது ஒரு செய்தித்தளமாகவும் அறிவிப்பு பலகையாகவும் அதேபோன்று உள்ளக வலையமைப்புக்கான நுழைவாயிலாகவும் தொழிற்படுகிறது. ஆண்டுக்காலப் பகுதியில் வங்கியின் அலுவல்சார் உள்ளக செய்திமடலான "கவுளுவ" இன் நான்கு தொகுதிகள் வெளியிடப்பட்டன. பொருளாதாரம் தொடர்பான நடப்பு விடயங்கள் மற்றும் வங்கி தொடர்பான விடயங்கள் பற்றி மூத்த முகாமைத்துவத்திற்கு உடனுக்குடன் தெரியப்படுத்தும் நோக்குடன், மும்மொழிகளிலும் வெளியிடப்பட்ட பதினைந்து தேசிய செய்திதாளிலிருந்து சேகரிக்கப்பட்ட 1,600 செய்தி நறுக்குகள், கட்டுரைகள் மற்றும் பொதுமக்களின் கருத்துக்கள் என்பவற்றை ஊடகக் கண்காணிப்பு பிரிவு சமர்ப்பித்தது.

### 4.3 பொதுமக்கள் விழிப்புணர்வு

பொருளாதார மற்றும் நிதியியல் அறிவு தொடர்பாக பொதுமக்களின் விழிப்புணர்வினை பரப்பும் முயற்சிக்கு வசதியளிப்பது தொடர்பூட்டல் திணைக்களத்தின் உயர் முன்னுரிமைப்படுத்தல் விடயங்களில் ஒன்றாகக் காணப்படுகிறது. திருகோணமலை, தெகியத்தகண்டிய, மட்டக்களப்பு மற்றும் ஹம்பாநதோட்டை போன்ற தொலைதூர பிரதேசங்கள் உள்ளடங்கலாக நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தான பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்காக 10 கல்விச் செயல்மலர்வுகளை ஒருங்கிணைத்ததன் மூலம் திணைக்களமானது பொதுமக்கள் விழிப்புணர்வுக்கான தனது கடப்பாட்டினை வெளிப்படுத்தியது.

ஆண்டுக்காலப்பகுதியில் மத்திய வங்கியின் வெளியீடுகளின் விற்பனையானது முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் 5.03 மில்லியனிலிருந்து 6.09 மில்லியனுக்கு 21.07 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேவேளை, ஆண்டுக் காலப்பகுதியில் 22,529 பல்வேறு வெளியீடுகளின் பிரதிகளை பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு இலவசமாக வழங்கியது.

ஆண்டுக் காலப்பகுதியில் திணைக்களத்தினால் இராஜதந்திரிகள், பாடசாலை/பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் இலக்கிடப்பட்ட படைகளின் பயிலுநர்கள், அரச நிறுவனங்களின் உத்தியோக பூர்வ அழைப்புகள் மூலம் இலங்கைக்கு விஜயம் செய்யும் வெளிநாட்டு பிரதிநிதிகள் போன்றவர்களை உள்ளடக்கிய சமூகத்தின் பல்வேறு பிரிவுகளை இலக்காகக் கொண்டு பொதுமக்கள் விழிப்புணர்வு, கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் வசதிப்படுத்தப்பட்டன.

### 4.4 தமிழ் மொழிபெயர்ப்புப் பணிகள்

தகவல்களை மும்மொழியிலும் சமமாக வழங்குவது என்ற திணைக்களத்தின் பணிக்கு தமிழ் மொழிபெயர்ப்பு பிரிவானது தனது பங்கின் பங்களிப்பை தொடர்ச்சியாக வழங்கியது.

### 4.5 அச்சகம்

2014 காலப்பகுதியில் அச்சகத்தினால் 398 எண்ணிக்கையான அச்சிடல் ஒப்படைகள் பொறுப்பேற்கப்பட்டிருந்தன. இவ் ஒப்படைகள், "நியூ சேவை", "சட்டகன", "சென்தேவ","மாகாண செய்திகள்", "கவுளுவ" போன்ற காலாந்தர வெளியீடுகளை உள்ளடக்கியிருந்தன. "64 வது சொற்பொழிவு" "மத்திய வங்கியின் இலக்குகள்", "முதல் கனுடெனு" (5வது மற்றும் 6 வது அச்சு), தரவு தொகுப்பு - 2014 (சிங்களம்/ஆங்கிலம்/தமிழ்), விரிவுரைத் தொகுப்பு இல. 70/71, அலுவலர் கற்கைகள் இல.42 போன்ற மத்திய வங்கியின் வெளியீடுகளும் அச்சிடப்பட்டன. மேலும், ஆய்வுக்குரிய காலப்பகுதியில் அச்சகத்தினால் வங்கியின் பல்வேறு படிவங்கள், காகிதாதிகள் மற்றும் ஏனைய அச்சிடல் தேவைப்பாடுகள் போன்றவற்றையும் அச்சிட்டு வழங்கியது.

### 4.6 வங்கியின் முக்கிய நிகழ்வுகளை புகைப்படமெடுக்கும் வசதிகள்

தொடர்பூட்டல் திணைக்களத்தின் புகைப்படம் எடுக்கும் பிரிவானது நிழற்படம் மற்றும் கட்புலக் காட்சிகளிலான காட்சி ஊடகங்கள் ஊடாக மத்திய வங்கியினை வர்ண மயமாக உலகிற்குக் காட்டுவதில் அளப்பரிய பங்களிப்பினை வழங்கியது. இப்பிரிவானது வங்கியின் 485 நிகழ்வுகளுக்குப் பணி வழங்கியதுடன், புகைப்படங்களை தொகுத்தல் மற்றும் அச்சிடல், கட்புலக்காட்சிகளின் தொகுப்பு, அல்பங்களை தயாரித்தல் மற்றும் இறுவட்டுக்கள் மற்றும் புகைப்படங்களுக்கு சட்டம் இடுதல் போன்ற அனைத்துத் தொடர்பான பணிகளும் உயர் தொழில்சார் நிபுணத்துவத் தரத்தில் வழங்கப்பட்டன.

### 4.7 நூலகமும் தகவல் நிலையமும்

ஆண்டுக் காலப்பகுதியில் 28,930 நூல்கள், 18,681 அறிக்கைகள், 1,813 இறுவட்டுக்கள் மற்றும் 1,570 சஞ்சிகை தலைப்புக்கள் போன்ற சேகரிப்புக்களுடன் நூலகமும் தகவல் நிலையமும் வங்கி அலுவலர்களுக்கும் அதேபோன்று கோரிக்கையின் பேரில் வெளிவாரியான பாவனையாளர்களுக்கும் வசதிகளைத் வழங்கியது. பொருளாதாரம், முகாமைத்துவம் மற்றும் நிதியியல் போன்றவற்றில் பரந்தளவான அறிவு வளத்தினை வழங்கும் இரண்டு இணைய வழி அதேநேர தரவுத் தளங்களான "சயன்ஸ் டிரெக்ட்" மற்றும் "எப்சோகொஸ்ட்" போன்ற நூலகம் மற்றும் தகவல் நிலையத்தினால் சந்தாத் தொகை தொடர்ந்தும் செலுத்தப்பட்டது. மேலும், மத்திய வங்கித்தொழில் நடவடிக்கைகளுடன் தொடர்பான விடயங்களில் தகவல்களைப் பெறுவதற்காக நூலகமும் தகவல் நிலையமும் மேலும் பல இணையவழி அதேநேர தரவுத் தளங்களுக்குச் சந்தாக்களைச் செலுத்தியது.

நூலகம் மற்றும் தகவல் நிலையத்தால் சந்தா செலுத்தப்பட்ட வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சஞ்சிகைகளின் மொத்த எண்ணிக்கையானது முறையே 96 மற்றும் 63 ஆக விளங்கியது. நூலகம் மற்றும் தகவல் நிலையமானது அண்மையில் புதிதாக சேர்க்கப்பட்டவை (அதாவது புதிய நூல்கள்), நடைமுறை விடயங்களின் உள்ளடக்கம், செய்தி

அலேட், பொருளாதாரம், வங்கியியல் மற்றும் நிதியியல் மீதான உள்ளூர் பத்திரிகை அறிக்கைகள் போன்ற இலத்திரனியல் வெளியீடுகளை தொகுப்பதனை தொடர்ந்து மேற்கொண்டதுடன் அவற்றை உள்ளக இணையமூடாக பரப்பியது. தெரிந்தெடுக்கப்பட்ட தகவல் பணிகளை பரப்பும் பணிகளும் பேணப்பட்டன.

நூலகம் மற்றும் தகவல் நிலையமானது இலங்கையின் பொருளாதார மற்றும் வங்கியியல் நூலக வலையமைப்பான "Ebanklibnetsl" இனை மின்னஞ்சல் மூலம் தகவல்களை பரப்புவதன் ஊடாக, நாட்டிலுள்ள 24 அங்கத்துவ நூலகங்களுக்கு பெறுமதி மிக்க பணிகளை வழங்கியது. மேலும், மூலவளங்களையும் அனுபவங்களையும் உலகளாவிய மத்திய வங்கிகளுக்கிடையில் பகிர்ந்து கொண்டதன் ஊடாக, நூலகம் மற்றும் தகவல் நிலையமானது உலகளாவிய மத்திய வங்கி தகவல் தொழில்சார் நிபுணத்துவ வலையமைப்பில் (CBFA பட்டியல்) ஒரு செயற்படும் அங்கத்தவர் என்ற நிலையைப் பெற்றுக் கொண்டது. நூலகத்தின் உள்ளக இணையத்தளத்தினூடாக வங்கி அலுவலர்கள் அணுகுவதற்கான வசதியை வழங்கியதன் மூலம் இலத்திரனியல் நூலக சேவையினை தொடர்ந்தும் பேணியது.

## 5. நாணயம்

நாணய விதிச் சட்டத்தின் 48 இலிருந்து 59அ வரையான நியதிகளில், நாணயச்சபை இலங்கையில் கொடுப்பனவிற்கான கருவியான நாணயத்தினை வெளியிடுவதற்கான அதிகாரசபையாக இருக்கிறது. நாணயச் சபையின் இவ்வதிகாரம் நடைமுறைக்கிடப்படுவதனை வசதிப்படுத்துவதற்காக ஆரம்பத்தில் நாணயத் திணைக்களம் வங்கித்தொழில் மற்றும் நாணயத் திணைக்களமாக 1950 யூலையில் நிறுவப்பட்டது. இதற்கமைய, நாணயத் திணைக்களத்தின் தற்போதைய தொழிற்பாடுகளாக பொதுமக்களின் கேள்வியைப் பூர்த்தி செய்வதற்காக நாணயத் தாள்களையும் குத்திகளையும் வெளியிடுதல், தாள்களை அச்சிடுவதற்கும் நாணயக் குத்திகளை வார்ப்பதற்குமான அனைத்து ஒழுங்குகளையும் மேற்கொள்ளுதல், சட்டத்தின் பிரகாரம் நாணய விதிச் சட்டத்தின் ஏற்பாடுகள் மீறப்படும் சந்தர்ப்பங்களில் அவற்றைக் கையாள்வதற்கு சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளுக்கு உதவுதல் மற்றும் நாணயப் பயன்பாட்டு நடைமுறைகள் மற்றும் தரத்தினை மேம்படுத்துவதற்கு பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களையும் மேற்கொள்ளுதல் என்பன காணப்படுகின்றன.


### 5.1 நாணய வெளியீடு

நாட்டில் நாணயத்திற்கான கேள்வியை ஈடுசெய்யும் பொருட்டு, நாணயத் திணைக்களம் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினூடாகவும் மற்றும் நாணயப் பரிமாற்று கருமபீடங்களினூடாகவும் புதிய நாணயத் தாள்களையும் குத்திகளையும் மற்றும் பொருத்தமான (பயன்படுத்தத்தக்க) நாணயத் தாள்களையும் குத்திகளையும் மீளவழங்குதல் என்பன மூலம் நாணயத்தினை (தாள் மற்றும் குத்திகள்) சுற்றோட்டத்திற்கு வெளியிடுகிறது. 2014.12.31இல் சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் மொத்தம் ரூ.416.2 பில்லியனாகக் காணப்பட்டதுடன், இது 2013.12.31இல் காணப்பட்டதிலும் விட 22.5 சதவீத அதிகரிப்பாகும் (அட்டவணை II-1). 2014 இறுதியில் சுற்றோட்டத்திலுள்ள தலைக்குரிய நாணயப் பெறுமதி மற்றும் அளவுகளில் தொடர்ச்சியாக அதிகரித்து பெறுமதியில் ரூ.20,133 ஆகவும் துண்டுகளில் 421 ஆகவும் காணப்பட்டது.


**அட்டவணை II-1　　சுற்றோட்டத்திலுள்ள நாணயங்கள்**

| வழங்கல்கள் | பெறுமதி | | | சதவீத மாற்றம் | | |
|---|---|---|---|---|---|---|
| | 2011 | 2012 | 2013 | 2011 | 2012 | 2013 |
| தாள்கள் (ரூ. பில்.) | 335.1 | 355.4 | 401.9 | 29.4 | 6.1 | 13.1 |
| குத்திகள் (ரூ. மில்.) | 472.4 | 748.7 | 541.3 | 12.7 | 58.5 | (27.7) |
| **மொத்தம் (ரூ. பில்.)** | **335.6** | **356.1** | **402.4** | **29.4** | **6.1** | **13.0** |

**வரைபடம் II-1　　தலைக்குரிய சுற்றோட்டத்திற்குரிய நாணயம் - பெறுமதி**




**வரைபடம் II-2　　தலைக்குரிய சுற்றோட்டத்திற்குரிய நாணயம் - அளவு**




(அ) உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுடனான நாணயத் தொழிற்பாடுகள்

2014 இறுதியில் நாணயத் திணைக்களத்தினால் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட நாணயங்கள் ரூ.431.8 பில்லியன் நாணயத் தாள்கள் மற்றும் ரூ.763.8 மில்லியன் குத்திகளையும் கொண்டது (அட்டவணை II-2).

**அட்டவணை II-2　　புதிய மற்றும் மீள் வெளியிடப்பட்ட நாணயம்**

| நாணய வெளியீடு | பெறுமதி (ரூ.பில்) | | | சதவீத மாற்றம் | | |
|---|---|---|---|---|---|---|
| | 2012 | 2013 | 2014 | 2012 | 2013 | 2014 |
| தாள்கள் | 355.4 | 401.9 | 431.8 | 6.1 | 13.1 | 7.7 |
| குத்திகள் | 0.7 | 0.5 | 0.8 | 58.5 | (27.7) | 41.1 |
| **மொத்தம்** | **356.1** | **402.4** | **432.6** | **6.1** | **13.0** | **7.5** |

நாணயத் தொழிற்பாட்டில், நாணயத் திணைக்களம் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்து முக்கியமாக வர்த்தக வங்கிகளின் நியதி ஒதுக்குத் தேவைப்பாடுகளைப் பேணுவதற்காகப் பொருத்தமான (பயன்படுத்தத்தக்க) மற்றும் பொருத்தமற்ற (பயன்படுத்த முடியாத) நாணயத் தாள்கள் மற்றும் குத்திகளின் வைப்பினை ஏற்றுக்கொள்கிறது (அட்டவணை II-3). 2014இல் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் வைப்புக்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. அத்தகைய வைப்புக்களில் பொருத்தமான நாணயத் தாள்கள் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கூடாக மீளச் சுற்றோட்டப்படுத்தப்படுகின்ற வேளையில் பொருத்தமற்ற நாணயத் தாள்கள் அழித்துவிடப்படுகின்றன. 2014இல், ரூ.55.5 பில்லியன் பெறுமதியான 178.8 மில்லியன் பொருத்தமற்ற நாணயத் தாள்கள் அழிக்கப்பட்டன.

**அட்டவணை II-3 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் வைப்பு செய்யப்பட்ட நாணயம்**

| விடயங்கள் | பெறுமதி (ரூ.பில்) | | | சதவீத மாற்றம் | | |
|---|---|---|---|---|---|---|
| | 2012 | 2013 | 2014 | 2012 | 2013 | 2014 |
| தாள்கள் | 331.2 | 381.0 | 354.4 | 11.2 | 15.0 | (7.0) |
| குத்திகள் | 0.003 | 0.001 | 0.000 | (78.3) | (53.3) | 0.0 |
| **மொத்தம்** | **331.2** | **381.0** | **354.4** | **11.2** | **15.0** | **(7.0)** |

நாணயத் திணைக்களம் நாணயத்தின் பயனுறு ஆயுளினை அதிகரிப்பதற்காகவும் புதிய நாணயத் தாள்கள் அச்சிடும் செலவினைக் குறைப்பதற்காகவும் அத்துடன் தூய நாணயத் தாள்களை இனங்காண்பதற்கு பாதுகாப்பு பண்புகளினைத் தெளிவாக விளங்கும் தன்மையினை உறுதிப்படுத்துவதற்காகவும் நாணயத் தாள்களின் இலகுவான செயன்முறை மற்றும் நாட்டு மக்களின் சாதகமான பிரதிமையினை உருவாக்குவதற்காகவும் சிறந்த நாணய கையாள்கை நடைமுறைகளை ஊக்குவித்தது. அதற்கமைய, நாணய பிரித்தெடுத்தல் மற்றும் கையாளும் பயிற்சிகள் மற்றும் வினைத்திறன் மிக்க நாணய கையாளருக்கான தடைகள் தொடர்பான பிரச்சனைகளை கலந்துரையாடுவதற்கு அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினதும் நாணய முகாமையாளர்களுடனான 3 சந்திப்புக்கள் இடம்பெற்றன. மேலதிகமாக, நாணயத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வழிகாட்டலிற்கு ஒருங்கிணைந்து செல்கின்றதா என்பதனை பரீட்சிப்பதற்கு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினது நாணயத் தொழிற்பாட்டின் மீது உடன் கண்காணிப்பானது மேற்கொள்ளப்படுகிறது.

**(ஆ) நாணயப் பரிமாற்றல் பீடம்**

நாணயத் திணைக்களம் பொதுமக்கள் விரும்புகின்ற நாணய இனங்களை அவர்களுடன் பரிமாற்றிக் கொள்ளும் நோக்குடன் இலங்கை வங்கியின் புறக்கோட்டைக் கிளையின் பேணும் நாணயப் பரிமாற்றல் பீடங்களினூடாக பொதுமக்களுக்கு நாணயங்களை வழங்கி வருகிறது. 2014 ஆண்டுக் காலப்பகுதியில், இப்பீடத்தினூடாக ரூ.2,851.5 மில்லியன் பெறுமதியான நாணயத் தாள்களும் ரூ.97.8 மில்லியன் பெறுமதியான நாணயக் குத்திகளும் வெளியிடப்பட்டன. மேலும், நாட்டின் கிளை வலையமைப்பினூடாக நாணயப் பரிமாற்றல் பீடங்களை வழங்குவதற்காக மக்கள் வங்கியுடன் ஆரம்ப ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன.

**(இ) நாணயக் குத்திகளின் சேகரிப்பு நிகழ்ச்சித்திட்டம்**

சுற்றோட்டத்திலுள்ள நாணயக் குத்திகளின் பாவனையை அதிகரிக்கும் பொருட்டு, நாணயத் திணைக்களம் ஆண்டுக் காலத்தில் நாட்டின் பல்வேறு சேகரிப்பு நிகழ்ச்சித்திட்டங்களினூடாக சமயத்தலங்கள் மற்றும் வீட்டுத்துறையினரிடமுள்ள உண்டியல்களில் பயன்படுத்தப்படாது தேங்கியுள்ள 19.2 மில்லியன் நாணயக் குத்திகளினை சேகரிக்க இயலுமான இருந்ததுடன் இது இலக்கிடப்பட்ட 18 மில்லியன் நாணயக் குத்திகளை விடவும் விஞ்சியது. மேலும், பிரதேசத்தின் நாணயக் குத்திகளின் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக சுற்றோட்டப்படுத்தப்படாமல் எவ்வித பயனுமின்றி இருக்கின்ற நாணயக் குத்திகளினை உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுடன் ஒருங்கிணைந்து இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அலுவலகங்களுடன் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. இந்நிகழ்ச்சித்திட்டத்தினை வெற்றிகரமாக மேற்கொள்வதற்குத் தேவையான நாணயக் குத்திகளினை கணக்கிடும் எந்திரங்கள் பிரதேச திணைக்களங்களிற்கு நாணயத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டன.

**(ஈ) முறைமை மேம்பாடுகள்**

2014இல் சிநேகபூர்வ சூழல் முறையில் நாணயங்களைச் சரிபார்த்தல், கணக்கிடல், சேமித்தல் மற்றும் அழித்துவிடல் போன்றவற்றில் வினைத்திறனை அதிகரிப்பதற்காக இரண்டு தன்னியக்கப்படுத்தப்பட்ட நாணயத் தாள் செயன்முறைப்படுத்தல் எந்திரங்களை நிறுவும் செயன்முறையினை நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. நாணயங்களை அழிக்கும் செயன்முறையின் போது உருவாகும் கழிவுகளை ஒதுக்குவதற்கான கெட்டிப்படுத்தல் முறைமையினை நிறுவுவதன் மூலம் இந்நாணயங்களை அழிக்கும் செயன்முறையானது மேலும் சூழல் சிநேகபூர்வமாக்கப்படுகின்றது.

### 5.2 நாணயத்தினை அச்சிடுதலும் வார்த்தலும்

**(அ) சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தினை அச்சிடுதலும் வார்த்தலும்**

நாணயத்திற்கான கேள்வியை பூர்த்தி செய்யும் பொருட்டும் சுற்றோட்டத்தில் சிறந்த தரமான நாணயத் தாள்கள் இருப்பதை உறுதிப்படுத்தும் பொருட்டும் 2014ஆம் ஆண்டு காலப்பகுதியில் நாணயத் திணைக்களம் 115 மில்லியன் நாணயத் தாள் துண்டுகளை அச்சிடவும் 295 மில்லியன் துண்டு நாணயக் குத்திகளை வார்ப்பதற்குமான ஒழுங்குகளை மேற்கொண்டது. நாணயத் திணைக்களம் 2014 இலிருந்து 2017 வரையான காலப்பகுதியில் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக நாணயத் தாள்களை அச்சிடுவதற்காக டி லா று லங்கா கரன்சி அன்ட் செக்யுறிற்றி பிறின்ற் (பிறைவேற்) லிமிடெட் நாணயத் தாள் வழங்குநருடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. நாணயக் கடதாசியின் தடிப்பினை அதிகரிப்பதன் மூலம் நாணயத் தாள்களின் தரத்தில் பல்வேறு மேம்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் நாணயத் தாள்களின் பாவனைக் காலத்தினை அதிகரிப்பதற்காக நாணயத் தாள்களின் குறைந்த பெறுமதிகளுக்கு வானிஸ் பூசதலினை அறிமுகப்படுத்தியது.

**(ஆ) 25 நிர்வாக மாவட்டங்களினைப் பிரதிபலிக்கும் புதிய ரூ.10 நாணயக் குத்திகளின் தொடர்கள்**

நாணயத் திணைக்களம் 2014.11.17ஆம் நாளன்று இலங்கையிலுள்ள 25 நிருவாக மாவட்டத்தினதும் ஒவ்வொரு தனித்துவம் வாய்ந்த பண்புகளை/ சிறப்புப் பண்புகளை பிரதிபலிக்கும் விதத்தில் 10 ரூபா இனத்திலான புதிய நாணயக் குத்திகளைக் கொண்ட தொடரினை வெளியிட்டது. இந்நாணயக் குத்திகள் தேசிய ரீதியிலான போட்டியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட இலங்கை வடிவமைப்புக் கலைஞர்களினால் வடிவமைக்கப்பட்டதுடன் வெற்றியாளர்களிற்கு விருதுகளும் வழங்கப்பட்டன. நாணயக் குத்திகளின் பொதி மற்றும் நாணய அட்டைகள் வடிவிலான 25 மாவட்ட நாணயங்களின் சேகரிப்பு விடயங்கள் என்பன தயாரிக்கப்பட்டு இலங்கை மத்திய வங்கியின் நாணய அரும்பொருட்காட்சிச்சாலையினூடாக விற்பனைக்கு விடப்பட்டுள்ளன. புதிய 10 ரூபா நாணயக் குத்தி தொடர்களின் அறிமுகப்படுத்தலுடன் தொடர்புடைய விதத்தில் "எமது மக்கள், எமது எதிர்காலம், எமது புகழ்" எனும் பெயரிடப்பட்ட ஓய்வுநேர புத்தகம் வெளியிடப்பட்டது.

**(இ) ஞாபகார்த்த நாணயங்களின் வெளியீடு**

2014 ஆண்டுக் காலப்பகுதியில், நாணயத் திணைக்களம் மூன்று ஞாபகார்த்த நாணயங்களின் வார்ப்பதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. இவை இலங்கை வங்கியின் 75ஆவது ஆண்டு நிறைவினைக் குறிக்கும் முகமாக வெளியிடப்படுகின்ற சுற்றோட்டத்திற்கு விடப்படுகின்ற ரூ.5 நாணயக் குத்தியையும் சிறிமத் அநகாரிக தர்மபாலவின் 150ஆவது ஆண்டு நிறைவினைக் குறிக்கும் சுற்றோட்டப்படுத்தப்படாத 500 ரூபா நாணயக் குத்தியையும் பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் தந்தையின் பாப்பரசர் விஜயம் - 2015 இலங்கை விஜயத்தைக் குறிக்கும் முகமாக சுற்றோட்டப்படுத்தப்படாத ரூ.500 நாணயக் குத்தியையும் உள்ளடக்கியிருந்தன. மேலும், கொழும்பில் பொருளியல் வரலாற்று அரும்பொருட்காட்சிச்சாலை உள்ளடங்கலான பிராந்திய அலுவலகங்களின் அரும்பொருட்காட்சிச்சாலையினூடாக 11,234

பெறுமதியான ஞாபகார்த்த சேகரிப்பு விடயங்கள் விற்பனை செய்யப்பட்டன.

### 5.3 சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட உதவி

2014இல் போலி நாணயம் தொடர்பாக நாணய விதிச் சட்டம் மீறப்பட்டமை தொடர்பாக சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளுக்கு நாணயத் திணைக்களம் பின்வரும் விதத்தில் பல்வேறு வழிமுறைகளை மேற்கொண்டது;

(அ) நாணயத் திணைக்களம் போலி நாணயத் தாள்களைத் தயாரிக்கும் முயற்சி தொடர்பில் பொலிஸ் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் போலி நாணயப் பணியகத்துடனும் சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளுடனும் நெருங்கி ஒத்துழைப்புடன் செயற்பட்டது. 2014இல் கண்டுபிடிக்கப்பட்ட போலி நாணயத் தாள்கள் 8,266 ஆகக் காணப்பட்டதுடன் இது, சுற்றோட்டத்திலிருந்து ஒவ்வொரு மில்லியன் உண்மையான தாள்களுக்கும் 9.57 தாள்களாகக் காணப்பட்டது.

(ஆ) நீதிமன்றங்களின் வழக்கு விசாரணைகளுக்கு வசதியளிக்கும் விதத்தில் நாணயத் தாள்களின் போலித் தோற்றம் பற்றிய முடிவுச் சான்றுகளாக ஆளுநரின் கையொப்பத்துடன் கூடிய 207 சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

(இ) போலி நாணய வழக்குகளில் சாட்சியமளிப்பதற்காக 22 நீதிமன்ற வழக்குகளில் நாணய திணைக்களம் கலந்து கொண்டது.

### 5.4 பொதுமக்கள் விழிப்புணர்வு

நாணயத் தாள்களின் பாதுகாப்புப் பண்புகள், போலி நாணயத் தாள்களினை இனங்காணல் அத்துடன் நாணயத் தாள்கள் மற்றும் குத்திகளினைக் கவனமாகக் கையாள்தல் போன்ற விடயங்கள் பற்றி பொதுமக்கள் மற்றும் அரச அலுவலர்களிற்கு அறிவூட்டும் பொருட்டு நாணயத் திணைக்களம் கீழே குறிப்பிட்டவாறு பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளினை பல்வேறு மட்டங்களில் தொடர்ச்சியாக நடாத்தியது.

(அ) நாணயத் திணைக்களம் தூய நாணயத் தாள் கொள்கை மற்றும் நாணயத் தாள்களின் பாதுகாப்புப் பண்புகள் மீதான 41 ஆய்வரங்குகள்/ செயலமர்வுகளினை வங்கிக் கற்கைகள் நிலையம், பல்வேறு வர்த்தக வங்கிகள், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, தேசிய போக்குவரத்து ஆணையகம் மற்றும் பல்வேறு தேசிய பாடசாலைகளில் போன்றவற்றில் நடாத்தியது.

(ஆ) எட்டு வேறுபட்ட தொலைக்காட்சி ஊடகங்களினூடாகவும் வீடியோ விளம்பரங்கள் மற்றும் வேறுபட்ட பொது இடங்களில் டிஜிட்டல் எல்சிடி திரைகளினூடாகவும் போலி நாணயத் தாள்களின் கண்டுபிடிப்பு மற்றும் அதன் விளைவுகளினைப் பற்றிய பொதுமக்களுக்கு அறிவூட்டல் வழங்கப்பட்டது. மேலும், தூய நாணயக் கொள்கை மற்றும் போலி நாணயத் தாள்களின் பின்விளைவுகள் பற்றிய முக்கிய விடயங்களைக் கொண்ட தகவல் விடயங்கள் மற்றும் துண்டுப்பிரசுரங்கள் என்பன பொதுமக்களுக்கு அறிவூட்டுவதற்காக வழங்கப்பட்டன.

(இ) நாணயத் திணைக்களம் அதன் நடமாடும் நாணய அரும்பொருள்காட்சிச்சாலையினை கொள்ளுப்பிட்டி, கண்டி, மகன்டுர, தெலியாவில மற்றும் கொழும்பு ஆகிய ஐந்து கண்காட்சிகளில் காட்சிப்படுத்தியது.

(ஈ) இலங்கை மத்திய வங்கியின் மூன்று அரும்பொருட்காட்சிச்சாலைகளுக்கும் பாடசாலை மாணவர்கள், சுற்றுலாப் பயணிகள் மற்றும் பொதுமக்கள் உள்ளடங்கலாக 15,000 பேர் விஜயம் செய்தனர்.

### 5.5 நாணயத் தாளினை மீளத் தயாரிப்பதற்கான ஒப்புதல்

இலங்கை நாணயத் தாள்களின் நகல்களை உருவாக்குவதன் மீதான நாணயச் சபையின் ஒப்புதலளிக்கப்பட்ட கொள்கையின் நியதிகளில் விளம்பரங்களில் அந்நாணயத் தாள்களை மீளத் தயாரிப்பதற்காக மூன்று ஒப்புதல்கள் வழங்கப்பட்டன. இக்கொள்கை இலங்கை மத்திய வங்கியின் இணையத்தளத்தில் கிடைக்கக்கூடியதாகவுள்ளது.

## 6. உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைககளம்

### 6.1 உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் நடவடிக்கைகள்

நாணய விதிச் சட்டத்தில் வழங்கப்பட்ட திறந்த சந்தைத் தொழிற்பாடுகளில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் வைப்புப் பொறுப்புக்களுக்கெதிராக நியதி ஒதுக்குத் தேவைப்பாடுகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் அரசாங்கம் மற்றும் வர்த்தக வங்கிகளுக்கு வங்கித்தொழில் பணிகளினை வழங்கல் ஆகிய தொழிற்பாடுகளை உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் மேற்கொள்கிறது. திணைக்களம், அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் கீழ், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுகளின் சுமூகமான தொழிற்பாடுகளுக்காக, வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்கும் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதிகளை வழங்குவதன் மூலம் வினைத்திறன் மிக்கதும் காத்திரமானதுமான உள்நாட்டுக் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமையைப் பேணுவதற்கும் வசதியளித்தது.

### 6.2 நாணயக் கொள்கையினை நடைமுறைப்படுத்தல்

நாணயக் கொள்கையினை நடாத்துதல் நிலைத்திருக்கக்கூடிய விலை உறுதியினை உறுதிப்படுத்துவதற்கான குறுங்கால வட்டி வீதங்களில் ஏற்படுத்தப்படும் விரும்பத்தக்க மாற்றங்களில் தொடர்ந்தும் தங்கியுள்ளது. உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம் நாணயக் கொள்கைத் தொழிற்பாடுகளை முக்கியமாக திறந்த சந்தை நடவடிக்கைகளினூடாக நடாத்துகிறது. நாணயச் சபையினால் தீர்மானிக்கப்பட்ட கொள்கை வட்டி வீத வீச்சினுள் குறுங்கால வட்டி வீதங்களினை விரும்பிய மட்டத்தில் பேணுவதில் துணைநில் வசதிகள் மற்றும் நியதி ஒதுக்குத் தேவைப்பாடுகள் என்பனவும் முக்கிய பங்காற்றுகின்றன.

நாணயக் கொள்கை தொழிற்பாட்டுக் கட்டமைப்பு அண்மைக் காலங்களில் கணிசமானளவு மாற்றத்திற்குள்ளாகியுள்ளது. 2013 மேயிலிருந்து ஒதுக்க கணிப்பீடு மற்றும் பேணல் காலப்பகுதி ஒரு கிழமை காலப்பகுதியிலிருந்து ஒவ்வொரு மாதத்திற்கும் இரு தடவைகளாக விரிவாக்கப்பட்டமை, வர்த்தக வங்கிகள் தமது நாளாந்த திரவத்தன்மையினை சுமூகமாக முகாமை செய்த வேளையில் வங்கிகளுக்கிடையிலான சந்தை வட்டி வீதங்களின் தளம்பலினைக் குறைத்தது. 2014 தொடக்கத்திலிருந்து, கொள்கை வீத வீச்சு துணைநில் வீத வீச்சு என மீளப் பெயரிடப்பட்டது. ஓரிரவு மீள்கொள்வனவு வீதம் மற்றும் ஓரிரவு நேர்மாற்று மீள்கொள்வனவு வீதங்கள் என்பன முறையே துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் வழங்கல் வசதி வீதங்களாக மீளப் பெயரிடப்பட்டது. 2014 பெப்புருவரி 3 இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் பிணையிடப்படாத தூய வைப்புகளிற்கான துணைநில் வைப்பு வசதி மாற்றப்பட்டது. துணைநில் வழங்கல் வசதி வீதம் 8.50 சதவீதத்திலிருந்து 8.00 சதவீதத்திற்கு கீழ் நோக்கித் திருத்தப்பட்ட வேளையில் துணைநில் வைப்பு வசதி வீதம் 6.50 சதவீதத்தில் நிலையாகப் பேணப்பட்டது. இதன்படி, துணைநில் வீத வீச்சானது அப்போதைய 200 அடிப்படைப் புள்ளிகளிலிருந்து 150 அடிப்படைப் புள்ளிகளிற்குக் குறைக்கப்பட்டது. மேலும், இலங்கை மத்திய வங்கியின் வேண்டுதலில் நிதி அமைச்சு 2014 ஏப்பிறல் 24 இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் துணைநில் வைப்பு வசதியின் கீழ் வட்டி கொடுப்பனவுகளிற்கான பிடித்து வைத்தல் வரி தேவைப்பாட்டிலிருந்து விலக்களிப்பதற்குத் தேவையான திருத்தங்கள் அறிமுகம் செய்யப்பட்டன. இது, கொள்கை வீதங்களின் திரிபுநிலையினை நீக்கியதுடன் குறுங்கால சந்தை வட்டி வீதங்களுடன் சேர்ந்து செயற்றிறன் வாய்ந்த அலுவலக வீதத்திற்கு இணக்கம் செய்தது.

### 6.3 சந்தை அபிவிருத்திகள்

2013 ஓகத்து தொடக்கம் உள்நாட்டுச் சந்தைகள் கணிசமானளவு மேலதிக ஒதுக்கங்களினை சான்றுபடுத்த ஆரம்பித்தது. இது தொடர்ந்துவரும்


காலத்தில் மேலும் அதிகரித்து 2014 ஆண்டு முழுவதும் உள்நாட்டு பணச் சந்தையில் கணிசமானளவு மிகை ஒதுக்கநிலைக்குக் காரணமாகியது. மேலதிக ஒதுக்கங்களின் வளர்ச்சியானது முக்கியமாக பன்னாட்டு நாட்டிற்கான முறி வழங்கல்களின் வருவாய்களின் பயன்பாட்டினால் கிடைக்கப்பெற்றது. இவ்வபிவிருத்திக்கான ஏனைய பங்களிப்புக் காரணிகளாவன இலங்கை மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட திறைசேரி உண்டியல்களின் கொள்வனவு மற்றும் வெளிநாட்டுக் கடன் பெறுவனவுகளிலிருந்து தோன்றிய இலங்கை மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு நாணயக் கொள்வனவுகள், வெளிநாட்டு பரஸ்பர பரிமாற்றல் ஒப்பந்தக் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் செலாவணி வீத தளம்பல்களை சுமூகப்படுத்துவதற்கு வெளிநாட்டு பரிமாற்றச் சந்தையின் தலையீடு என்பனவாகும்.

2013 இறுதியில் ரூ.71.7 பில்லியனாகக் காணப்பட்ட ஒட்டுமொத்த மேலதிக ஒதுக்கங்கள் 2014 திசெம்பர் முற்பகுதியில் உயர்வாக ரூ.378.8 பில்லியனுக்கு அதிகரித்து 2014 இறுதியில் ரூ.325.6 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. 2014 காலப்பகுதியில் வெளிநின்ற மேலதிக ஒதுக்கங்கள் ரூ.266.0 பில்லியன் சராசரியுடன் ரூ.89.0 பில்லியன் மற்றும் ரூ.378.8 பில்லியன் வீச்சினுள் வேறுபட்டுள்ளது. மேலதிக ஒதுக்குகள் சந்தையில் முன்னொருபோதும் இல்லாத மட்டத்தில் காணப்பட்டமையினால் நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தல் பல்வேறு சவால்களை எதிர்நோக்கியது. தனியார் துறைக்கான கொடுகடன் பாய்ச்சலினை அதிகரிப்பதற்கு வங்கிகளுக்கிடையேயான சந்தையில் திரவத்தன்மை கிடைப்பனவை உறுதிப்படுத்துகின்ற வேளையில் தொடர்ந்திருக்கும் உயர் மேலதிக ஒதுக்கங்களிலிருந்தான பாதகமான தாக்கத்தினைக் கட்டுப்படுத்துவது அவசியமானதாகும். இதன்படி, குறுங்கால வட்டி வீதங்களினை விரும்பிய மட்டத்தில் பேணுவதினை வசதிப்படுத்துவதற்கு ஓரிரவு மீள்கொள்வனவு, குறுங்கால மீள்கொள்வனவு மற்றும் மீள்கொள்வனவு ஏலங்கள் என்பன பல்வேறு இடைவெளிகளில் நடாத்தப்பட்டன. இச்செயற்பாட்டில் சந்தையில் நிலவும் அதிக மேலதிக ஒதுக்கங்களினால் நீண்ட கால மீள்கொள்வனவு ஏலங்களினூடாக மேலதிக ஒதுக்கங்களை உள்ளீர்த்தல் அதிகமாக வலியுறுத்தப்பட்டது. நாளாந்த அடிப்படையில் துணைநில் வசதிகளும் வழங்கப்பட்டு திறந்த சந்தை நடவடிக்கைகளுக்கான கீழ்மட்டம் மற்றும் உச்சவரம்பு உருவாக்கப்பட்டது. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் வைப்புப் பொறுப்புக்களிற்கு ஏற்புடைத்தான நியதி ஒதுக்குத் தேவைப்பாடு ஆண்டு பூராகவும் 6 சதவீதத்தில் பேணப்பட்டது.

அத்தகைய செயற்றிறன்மிக்க உள்ளீர்ப்பு நடவடிக்கைகளில் இலங்கை மத்திய வங்கி ஓரிரவு மிகை ஒதுக்குகளினை ரூ.29.1 பில்லியன் நாளாந்த சராசரி மட்டத்தில் சாதகமாகப் பேணியது. 2014 சனவரி இறுதி வரை 7.00 சதவீதத்திற்கும் மேலாகக் காணப்பட்ட ஓரிரவு சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புச் சந்தை வீதம், அதன் பின்னர் படிப்படியாகக் குறைவடைந்து கொள்கை வீத வீச்சுடன் வலுவாகக் காணப்பட்டது. 2014 செத்தெம்பர் 23 இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் துணைநில் வைப்பு வசதி வீதம் கொடுகடன் உருவாக்கத்தினை மேலும் தூண்டுவதற்கு இலங்கை மத்திய வங்கியின் 6.50 சதவீத துணைநில் வைப்பு வசதியின் கிடைப்பனவு கலண்டர் மாதம் ஒன்றிற்கு அதிகபட்சம் மூன்று தடவைகளாக மட்டுப்படுத்தப்பட்ட வேளையில் மூன்று தடவைகளினை விஞ்சும் ஏதேனும் வைப்புக்கள் ஆண்டிற்கு 5.00 சதவீதத்தில் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். இதன் விளைவாக, சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதம் குறைவடைந்து சென்று ஆண்டின் எஞ்சிய காலப்பகுதியில் 6.00 சதவீதத்தினை அடைந்தது. சில சந்தர்ப்பங்களில் ஓரிரவுவிற்கிடையிலான சந்தை ஒதுக்கப் பற்றாக்குறையினை அனுபவித்த போது துணைநில் வழங்கல் வசதியும் சந்தைக்கு ஒதுக்கங்களை நிரம்பல் செய்வதற்காக வழங்கப்பட்டது.

அதேவேளை, பணச் சந்தையின் மேலதிக ஒதுக்கங்கள் தொடர்ச்சியான அடிப்படையில் இலங்கை மத்திய வங்கியின் அரச பிணையங்களின் பிடித்துவைத்தல்களினை விஞ்சியது. இதன் விளைவாக, அரச பிணையங்கள் கடன்பெறுதல் திட்டத்தின் கீழ் கடன்பெற்ற பிணையங்கள் சந்தையில் மேலதிக ஒதுக்கங்களை உள்ளீர்ப்பதற்கான மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களிற்கு போதுமற்றவையாகக் காணப்பட்டன. உள்ளீர்த்தல் பெறுகைகளினை சுமூகமாக நடைமுறைப்படுத்துவதற்கு அரச பிணையங்களின் கடன்பாடுகளிற்கான வரையறை தற்போதைய வரையறையான ரூ.150 பில்லியனிற்கும் மேலாக சந்தையில் அதிகரித்த மட்டத்திலுள்ள மேலதிக ஒதுக்குகளை உள்ளீர்ப்பதற்கு உயர்த்தப்பட்டது.

**வரைபடம் II-3 ஒட்டுமொத்த திரவத்தன்மை மற்றும் கொள்கை வட்டி வீத வீச்சு**




### 6.3.1 திறந்த சந்தைத் தொழிற்பாடுகள்

#### அ) ஓரிரவு ஏலங்கள்

#### (i) மீள்கொள்வனவு ஏலங்கள்

2014இல் குறுங்கால தவணை மீள்கொள்வனவு ஏலங்கள் மற்றும் நீண்டகால தவணை மீள்கொள்வனவு ஏலங்களிற்கு அதிக முக்கியத்துவமளித்த போதிலும் 2013இல் மிகை ஒதுக்குகள் அதிகளவில் ஓரிரவு மீள்கொள்வனவு ஏலங்கள் மூலம் ஈர்க்கப்பட்டன. 2014இல் ஓரிரவு மீள்கொள்வனவு ஏலங்கள் 22 சந்தர்ப்பங்களில் மட்டுமே மேற்கொள்ளப்பட்டன. சராசரியாக, ஓரிரவு ஏலங்களிற்காக நாளொன்றிற்கு ரூ.19.6 பில்லியன் வழங்கப்பட்டதுடன் மிகையான நாட்களின் உண்மையான மிகைத் திரவத்தன்மையின் 3.3 சதவீதத்தினை ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகையானது பிரதிபலித்திருந்தது. ஓரிரவு மீள்கொள்வனவு ஏலத்தின் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவுவீதம் 5.6 சதவீதத்திற்கும் 6.6 சதவீதத்திற்குமிடையில் வேறுபட்டன.

#### (ii) நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள்

உள்நாட்டுச் சந்தையின் ஒதுக்கநிலை ஆண்டு பூராகவும் மிகையான நிலைகளினைக் கொண்டிருந்தது. இதனால், உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தினால் ஓரிரவு வட்டி வீதங்கள் மீதான மேல் நோக்கிய அழுத்தத்தினைத் தளர்த்துவதற்காக நேர்மாற்று மீள்கொள்கிய... மீள்கொள்வனவு ஏலங்கள் ஒருமுறை மட்டுமே நடாத்தப்பட்டது. மேற்கூறப்பட்ட ஏலத்தில், 6.72 நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதத்தில் ரூ.4.0 பில்லியன் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

#### ஆ) கிரமமான ஏலங்கள்

#### (i) குறுங்கால மீள்கொள்வனவு ஏலங்கள்

2014இல் குறுங்கால ஏலங்கள் பொதுவான ஏலமாகக் காணப்பட்டது. இது அதேநாள் தீர்ப்பனவு அடிப்படையில் ஏலமாகத் திரவத்தன்மையினை ஈர்த்துக் கொள்வதற்கானதொரு உபாயமாக மீளகொள்வனவு உடன்படிக்கையினை விற்பதற்காக 2013 ஓகத்தில்

அறிமுகப்படுத்தப்பட்டது. 2014 முதல் காலாண்டுப் பகுதியில் குறுங்கால ஏலங்களின் ஒட்டுமொத்த மாதாந்த ஈர்ப்புக்கள் ஏறத்தாழ 20 சதவீதமாகக் காணப்பட்டதுடன் படிப்படியாகக் குறைந்துசென்று ஆண்டிறுதியில் 10 சதவீதத்திற்கும் குறைவானதாகக் காணப்பட்டது. சராசரியாக குறுங்கால மீள்கொள்வனவு ஏலத்திலிருந்து நாளொன்றிற்கு சராசரியாக ரூ.23.5 பில்லியன் வழங்கப்பட்டு ரூ.15.4 பில்லியன் ஈர்க்கப்பட்ட வேளையில் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் 5.59 சதவீதத்திலிருந்து 7.09 சதவீத வீச்சில் வேறுபட்டது.

**(ii) குறுங்கால நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள்**

சந்தை தொடர்ச்சியான அடிப்படையில் மிகை நிலையினைக் கொண்டிருந்தமையினால், 2014 ஆண்டு காலப்பகுதியில் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் குறுங்கால நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களை நடாத்தவில்லை.

**இ) நீண்ட கால ஏலங்கள்**

**(i) நீண்ட கால மீள்கொள்வனவு ஏலங்கள்**

கடந்த பல ஆண்டுகளாக மேலதிகமாகக் காணப்பட்ட ஒதுக்கங்கள் படிப்படியான அதிகரிப்பைக் காட்டியுள்ளன. 2013 திசெம்பரில் குறிப்பிடத்தக்க கட்டுப்பாடுகளின் பின்னர் ஆரம்பித்த நீண்ட கால மீள்கொள்வனவு ஏலங்கள் 2014இல் சந்தையில் மேலதிக திரவத்தன்மையினை ஈர்ப்பதற்குப் பரந்தளவில் பயன்படுத்தப்பட்டது. அநேக நேரங்களில் தவணை மீள்கொள்வனவு மூலம் ஒட்டுமொத்த மாதாந்த மேலதிக ஒதுக்குகள் ஈர்க்கப்பட்டு 80 சதவீதத்திற்கும் மேலாக 2014 நவெம்பரில் 90 சதவீதத்தினை விஞ்சியது. ஆண்டுக் காலத்தில் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்கள் 5.88 சதவீதம் மற்றும் 6.85 சதவீதத்திற்கிடையில் காணப்பட்டது. 2014 ஆண்டுப் பகுதியில் நீண்டகால மீள்கொள்வனவு ஏலங்களின் காலம் 11 நாட்களிற்கும் 78 நாட்களிற்குமிடையில் வேறுபட்ட போதிலும், வியாபார நடவடிக்கைகள் 35, 56 மற்றும் 77 நாட்கள் போன்ற குறுகிய திரவத்தன்மை காலங்களிற்கு பெரும்பாலும் மட்டுப்படுத்தப்பட்டன.

**(ii) நீண்ட கால நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள்**

2014ஆம் ஆண்டு காலப்பகுதியில், உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் நீண்ட கால நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள் எதனையும் நடத்தவில்லை.

**ஈ) துணைநில் வசதிகள்**

வங்கிகளுக்கிடையிலான பணச் சந்தை மற்றும் நாளாந்த திறந்த சந்தைத் தொழிற்பாட்டு ஏலங்களூடாக தமது குறுங்கால திரவத்தன்மை தேவைப்பாடுகளை முகாமைப்படுத்த முடியாத பங்கேற்கும் நிறுவனங்களுக்கு துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் வழங்கல் வசதி வீதங்களூடாக ஆண்டு முழுவதும் துணைநில் வசதிகள் வழங்கப்பட்டன. துணைநில் வசதியின் கீழ் 2014ஆம் ஆண்டிற்கான துணைநில் வைப்பு வசதி கொடுக்கல்வாங்கல்கள் நாளொன்றிற்கு ஏறத்தாழ ரூ.21.4 பில்லியன் கொண்ட நாளாந்த சராசரியினைப் பதிவு செய்ததுடன் இவ்வாண்டுப் பகுதியின் மொத்தத் தொகை ரூ.5,181.6 பில்லியனாகக் காணப்பட்டது. துணைநில் வழங்கல் வசதியின் கீழான மொத்த வழங்கல்கள் 2014இல் ரூ.9.8 பில்லியனாக காணப்பட்டது

**உ) உடனடிக் கொடுக்கல்வாங்கல்கள்**

மிகையான ஒதுக்குகளினை நிரந்தர அடிப்படையில் ஈர்த்துக் கொள்ளும் பொருட்டு, இலங்கை மத்திய வங்கி அதன் சொந்த சொத்துப்பட்டியலிலுள்ள திறைசேரி உண்டியல்களை விற்பனை செய்வதற்காக உடனடி விற்பனை ஏலங்களை நடாத்தியது. எனினும், கோரப்பட்ட சந்தை வீதங்கள் தற்போது காணப்படும் சந்தை வீதங்களுடன் ஒத்திருக்காமையினால் 2014இல் எந்தவொரு கோரல்களும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை அத்துடன் அத்தகைய கோரல்களினை ஏற்றுக்கொள்ளல் சந்தை வீதங்களினைத் திரிபுபடுத்தலிற்கு வழிவகுக்கும்.

### 6.3.2 நியதி ஒதுக்குத் தேவைப்பாடு

நியதி ஒதுக்குத் தேவைப்பாடு என்பது, இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்குவிதிகளின் நியதிகளுக்கிணங்க, ஒவ்வொரு வர்த்தக வங்கியும் அவற்றின் மொத்த வைப்புப் பொறுப்புக்களில் ஒரு பகுதியினை மத்திய வங்கியுடனான ஒதுக்குக் கணக்கில் பேணுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்ற குறைந்தபட்ச ஒதுக்கொன்றாகும். உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டின் நிருவாகம் மற்றும் பேணல் அத்துடன் வர்த்தக வங்கிகளின் இணங்குவிப்பைக் கண்காணித்தல் ஆகிய இரண்டிற்கும் பொறுப்பாக இருக்கின்றது. நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டின் ஏற்புடைத்தான வீதமானது 2013 யூலை 01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் ஒவ்வொரு வர்த்தக வங்கியினதும் ரூபா வைப்புப் பொறுப்புக்களின் 8 சதவீதத்திலிருந்து 6 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டது.

### 6.3.3 வங்கி வீதம்

நாணய விதிச் சட்டத்தின் 87ஆம் பிரிவின் கீழ் குறித்துரைக்கப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான குறுங்கால முற்பணங்கள் மீதான மத்திய வங்கியின் வட்டி வீதம் (வங்கி வீதம்) 15 சதவீதத்தில் மாற்றமின்றிக் காணப்பட்டது. எனினும், வங்கி வீதத்தில் இலங்கை மத்திய வங்கியிலிருந்து கடன்பாடுகளை வங்கிகள் எதுவும் நாடாமையினால், இவ்வட்டி வீதமானது கருத்துப்படியான வீதமாக மாத்திரமே இருந்தது.

## 6.4 வர்த்தக வங்கிகள் மற்றும் அரசிற்கான வங்கியாளர்

### 6.4.1 நிதியியல் நிறுவனங்களின் கணக்குகள்

வினைத்திறன் மிக்க வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவுகளையும் தீர்ப்பனவு முறைகளையும் உறுதிப்படுத்துவதற்காக, வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்கும் நடைமுறைக் கணக்கு வசதிகளை உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் வழங்கியதன் மூலம் வர்த்தக வங்கிகளுக்கான வங்கியாளர் என்ற மத்திய வங்கியின் வகிபாகத்திற்கு வசதியளித்தது. 2014 இறுதியில் இலங்கை மத்திய வங்கி 25 வர்த்தக வங்கிகளுக்கும் 8 முதனிலை வணிகர்களுக்குமான கணக்குகளைப் பேணியது. இக்கணக்குகள் வங்கியின் தன்னியக்கப்படுத்தப்பட்ட பொதுப் பேரேட்டு முறைமைக்குள் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு அடிப்படையில் தொழிற்படுத்தப்பட்டன.

### 6.4.2 அரச கணக்குகள்


உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் அரச திணைக்களங்கள், அரச முகவர்கள் மற்றும் நிறுவனங்கள் மற்றும் குறிப்பிட்ட நியதிச் சபைகள் என்பனவற்றின் கணக்குகளைப் பேணியதுடன், தேவையான வங்கித்தொழில் வசதிகளையும் வழங்கி அரசிற்கான வங்கியாளராக அதன் தொழிற்பாடுகளை ஆற்றியது. இலங்கை மத்திய வங்கியினால் பேணப்படுகின்ற கணக்குகளின் மொத்த எண்ணிக்கை 2014 இறுதியில் 60ஆகக் காணப்பட்டது. ஆண்டு காலப்பகுதியில், அரசாங்கத்தின் கோரிக்கையின்படி 3 புதிய கணக்குகள் திறக்கப்பட்ட வேளையில் ஒரு கணக்கு மூடப்பட்டது. நாணய விதிச் சட்டத்தின் 89ஆம் பிரிவின் நியதிகளுக்கிணங்க, இலங்கை மத்திய வங்கி, குறிப்பிட்ட இறையாண்டில் மதிப்பிடப்பட்ட அரச அரசிறையில் 10 சதவீதம் என்ற உச்சமட்ட வரையறைக்குட்பட்டு கட்டணங்களெதுவுமின்றி அரசாங்கத்திற்கு தற்காலிக முற்பணங்களை வழங்குகிறது. 2014ஆம் ஆண்டிற்காக மதிப்பிடப்பட்ட உயர்ந்த அரச அரசிறையின் காரணமாக 2014இல் தற்காலிக முற்பணங்களின் உச்ச எல்லை ரூ.18.0 பில்லியனால் ரூ.146.3 பில்லியனுக்கு அதிகரித்ததுடன் 2014 இறுதியில் தற்காலிக முற்பணங்கள் 2013 இறுதியின் ரூ.109.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.143.9 பில்லியனாகக் காணப்பட்டது.

## 6.5 ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி ஏற்பாடு

பங்கேற்கும் நிறுவனங்களுக்கு ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி ஏற்பாட்டினை வழங்குவதன் மூலம் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின்

சுமூகமானதும் வினைத்திறன் மிக்கதுமான தொழிற்பாட்டினை உறுதிப்படுத்தியது. இவ்வசதியானது திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளின் பிணையங்களுக்கெதிராகக் கட்டணமெதுவுமின்றி வழங்கப்பட்டதுடன் அவை அதேநாளில் சந்தை விலைகளில் ஏற்படக்கூடிய ஏதேனும் வேறுபாடுகளை ஈர்த்துக் கொள்வதற்கேதுவாக போதுமான இலாபமொன்றுடன் அவற்றின் நடைமுறைச் சந்தை விலைகளில் மதிப்பிடப்பட்டன.

வரைபடம் II-4 2014இல் வரையப்பட்ட ஒரு நாளிற்குரிய வசதி ஏற்பாடுகள்




இவ்வாண்டுப் பகுதியில், எடுப்பனவு செய்யப்பட்ட ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியின் மொத்தப் பெறுமதியும் சராசரி நாளாந்தப் பெறுமதியும் முறையே ரூ.5,144 பில்லியனாகவும் ரூ.21.3 பில்லியனாகவும் காணப்பட்டது. இது ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதிப் பயன்பாடு முன்னைய ஆண்டின் முறையே மொத்தத் தொகையான ரூ.4,674.1 பில்லியன் மற்றும் சராசரியான ரூ.19.2 பில்லியனை விட அதிகரித்துள்ளமையைக் காட்டியது.

### 6.6 பணத் தரகர்களின் மேற்பார்வை

பொருளாதாரத்தில் தொழிற்படுகின்ற நிதியியல் நிறுவனங்களின் வேறுபட்ட வகைகளின் அடிப்படையில் கண்காணிப்பு நடவடிக்கைகளின் செயற்பரப்பினை அதிகரிக்கும் பொருட்டு 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 10(இ) இன் கீழ் 2013ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க பணத் தரகு ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டதுடன் அவை 2013 பெப்புருவரி 15 இலிருந்து நடைமுறைக்கு வந்தன. 2013இல் இவ்வொழுங்குவிதியின் கீழ் மொத்தம் ஒன்பது கம்பனிகளுக்கு "அதிகாரச் சான்றிதழ்" வழங்கப்பட்டு "அங்கீகாரமளிக்கப்பட்ட பணத் தரகர்கள்" களாக குறித்துரைக்கப்பட்டன. 2014இல் அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகர்களின் எண்ணிக்கை மாற்றமடையாது காணப்பட்டது. உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம் ஆண்டுக் காலத்தில் ஆறு பணத் தரகர் கம்பனிகளிற்கு ஆறு தலத்திலான மேற்பார்வையினை நடாத்தியதுடன் இக்கம்பனிகளின் பணிப்பாளர்கள் சபையுடன் நான்கு கூட்டங்களினையும் நடாத்தியிருந்தது.

## 7. பொருளாதார ஆராய்ச்சி

1949ஆம் ஆண்டின் நாணய விதிச் சட்டத்தின் 25ஆம் பிரிவுக்கமைய 1950இல் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் பணம் மற்றும் வங்கித்தொழில் மற்றும் பொதுவான ஈடுபாடு மிக்க ஏனைய பொருளாதார விடயங்களின் கொள்கைகள் மற்றும் வழிமுறைகளை வடிவமைத்தல் நடைமுறைப்படுத்தல் மற்றும் நிறைவேற்றுதல் என்பவற்றில் நாணயச் சபைக்கும் ஆளுநருக்கும் வழிகாட்டுவதற்காகவும் பொதுமக்களுக்கு தகவல்களை வழங்குவதற்காகவும் பொருளாதார ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் நோக்கத்திற்காகவும் நிறுவப்பட்டுள்ளது. மத்திய வங்கியின் தொழிற்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றும் நோக்கத்திற்காக அவசியமானது எனப் பணிப்பாளரினால் கருதப்படுகின்ற ஏதேனும் தகவல்களை எவரேனும் ஆளிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கான அதிகாரத்தை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் பொறுப்புக்களை நிறைவேற்றுவதனை எளிதாக்க உதவும் வகையில் நாணய விதிச் சட்டம் பொருளாதார ஆராய்ச்சிப் பணிப்பாளரிடம் அல்லது பொருளாதார ஆராய்ச்சிப் பணிப்பாளரால் அதிகாரமளிக்கப்பட்ட ஏனைய அலுவலரிடம் வழங்கியுள்ளது.

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் நிலைத்திருக்கக்கூடிய உயர் பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கு பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டினைப் பேணல் மற்றும் வெளிநாட்டு அதிர்வுகளுக்குத் தாக்குப்பிடிக்கக் கூடிய தன்மையினை மேம்படுத்தும் விதத்தில் வெளிநாட்டுத் துறை உறுதிப்பாட்டினைப் பேணல் போன்ற தனது முக்கிய பொறுப்புக்களை அடைவதனை நிறைவேற்றியுள்ளது. 2014இல் முகாமைத்துவம் மற்றும் நாணயச் சபைக்கு முன்மதியுடைய கொள்கை மற்றும் ஏற்பாடுகளை உரிய நேரத்தில் பரிந்துரைப்பதில் சாதகமான சாதனைகளை அடைந்துள்ளது. 2014 காலப்பகுதியில் சமகாலத்திற்குரிய முக்கியமாக உள்நாட்டு, பிராந்திய மற்றும் உலகளாவிய பிரச்சனைகளுக்கான அனைத்தையுமுள்ளடக்கிய ஆராய்ச்சிகளை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தொடர்ந்தும் நடாத்தியது. அரசாங்கத்திற்குப் பொருளாதார மதியுரையாளராக தனது பொறுப்புக்களை நிறைவேற்றுதலில் ஒரு பகுதியாக பொருளாதார ஆராய்ச்சி திணைக்களமானது பொருளாதாரத்தின் உறுதியினைப் பேணுதல் மற்றும் வலுப்படுத்தலுக்காக அரசாங்கத்திற்கு முன்கூட்டிய கொள்கை மதியுரைகளை வழங்கியது. மேலும், இவ்வாண்டு காலத்தில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம், ஆர்வலர்களின் தேவைக்கேற்ப தரவுகளைச் சேகரித்தல், பரப்புதல் அறிவைப் பகிர்தல் மற்றும் ஆர்வலர்களின் இயலளவை விருத்திசெய்தல் போன்றவற்றில் செயற்திறனுடன் ஈடுபட்டது.

### 7.1 பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டினைப் பேணல்

ஆண்டின் தொடக்கத்தில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது நாணய விரிவாக்கத்திற்கான விரும்பிய பாதையினை அறிவித்ததுடன் பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டினைப் பேணுவதற்கு ஆண்டு முழுவதும் பொருளாதாரத்தின் உண்மை, வெளிநாட்டு, இறை மற்றும் நாணயத் துறைகளின் போக்கு மற்றும் அபிவிருத்திகளினை நெருக்கமாகக் கண்காணித்தது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது பேரண்ட பொருளாதாரத்தின் புள்ளிவிபரத்தினை தொகுத்துப் பகுப்பாய்வு செய்ததுடன் தொழில்நுட்ப உள்ளீடுகளை நாணயக் கொள்கைக் குழுவிற்கு வழங்கியது. இது தோற்றும் பெற்றுவரும் நாணய மற்றும் பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகளை மீளாய்வு செய்து நாணயச் சபையின் கவனத்திற்கு நாணயக் கொள்கை நிலைப்பாட்டின் எதிர்கால வழிகாட்டல் மீதான பரிந்துரைகளை மேற்கொண்டது. இச்செயற்பாட்டின் போது, பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது வெளியீட்டு இடைவெளி அளவீடுகளைக் கணிக்கும் வேளையில் முதன்மை மற்றும் மையப் பணவீக்கங்களை சாத்திய அடர்த்தி தொழிற்பாட்டின் (இயக்க வரைபுகள்) அடிப்படையில் தொடர்ச்சியாக எதிர்வுகூறியது. இதற்கு மேலதிகமாக, இவ்வாண்டுப் பகுதியில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது அதனுடைய மாதிரிப்படுத்தல் மற்றும் எதிர்வுகூறும் திறன்களை வலுப்படுத்துவதினைத் தொடர்ந்தது. இதனுடன் தொடர்புபடும் வகையில் பன்னாட்டு நாணய நிதியத்தின் தொழில்நுட்ப உதவியைப் பெற்று இலங்கைக்கான இயங்கியல் எழுமாற்று பொதுச் சமநிலை மாதிரியை உருவாக்குவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. நாணய மற்றும் நிதியியல் புள்ளிவிபரத்தினை தொகுப்பதற்கான செயன்முறையை மேம்படுத்துவதற்கு பன்னாட்டு நாணய நிதியத்தின் தொழில்நுட்ப உதவி தூதுக்குழுவானது 2015 சனவரியில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்திற்கு வருகை தந்திருந்தது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தனியார் துறையின் கருத்துக்களை பெற்றுக்கொள்வதன் மூலம் நாணயக் கொள்கை சார்ந்த தீர்மானம் மேற்கொள்ளும் செயற்பாட்டுக்கு உதவும் வகையில் மாதந்தோறும் நாணயக் கொள்கை ஆலோசனைக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

பொதுமக்களின் பணவீக்க எதிர்பார்ப்புக்களை நிறுத்தி வைப்பதற்கு தொடர்பூட்டல் நாணயக் கொள்கையின் இன்றியமையாததும் மிக

முக்கியமானதுமான கூறாகக் கருதப்படுவதனால், முக்கியமான பேரண்டப் பொருளாதார மாறிகள் தொடர்பான பொதுமக்கள் மற்றும் சந்தைப் பங்கேற்பாளர்களின் விழிப்புணர்வினை மேம்படுத்துவதற்கான அதன் முயற்சிகளை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தொடர்ந்தும் மேற்கொண்டது. பொதுமக்கள் மற்றும் சந்தைப் பங்கேற்பாளர்களுக்கு நீண்ட கால நோக்குடன் மேற்கொள்ளும் தீர்மானங்களைத் தெரிவிப்பதற்காக 2014 மற்றும் அதற்கு அப்பாலான காலப்பகுதிக்கான தனது நாணயக் கொள்கை உபாயத்தினை மத்திய வங்கி ஆண்டின் தொடக்கத்தில் வெளியிட்டது. நாணயச் சபையினால் மேற்கொள்ளப்படும் நாணயக் கொள்கைத் தீர்மானங்கள் மாதாந்த நாணயக் கொள்கை பத்திரிகை வெளியீடுகளினூடாக பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டன. மத்திய வங்கியின் நாணயக் கொள்கை நெறிப்படுத்தல்கள் சார்ந்த சந்தை எதிர்பார்ப்புக்களை முகாமை செய்வதற்கும் தேவையற்ற ஊகங்களைத் தவிர்ப்பதற்குமான கருவிகளாக இவை பயன்படுத்தப்படுகின்றன. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் கொள்கை விதந்துரைப்புக்களும் அத்தகைய கொள்கைகள் சரியான நேரத்தில் நடைமுறைக்கிடப்பட்டமையும் ஐந்தாண்டுகளுக்கு மேலாக பணவீக்கத்தினை ஒற்றை இலக்கங்களில் வைத்திருப்பதற்கு மத்திய வங்கிக்கு உதவியதுடன் வரலாற்றிலேயே மிகக் குறைந்த வட்டி வீதங்கள் தனியார் துறைக்கான கொடுகடன் பாய்ச்சல் போதுமானளவில் இடம்பெறத் தூண்டியதன் மூலம் உயர் வளர்ச்சிக்குத் தேவையான தூண்டுதலையும் வழங்கியது.

### 7.2 வெளிநாட்டுத் துறை உறுதியினைப் பேணுதல்

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தொடர்ந்தும் வெளிநாட்டுத்துறை அபிவிருத்திகளை கண்காணித்து மதிப்பீட்டினை மேற்கொண்டிருந்ததுடன் வெளிநாட்டுத் துறை உறுதிப்பாட்டை பேணும் நோக்கில் பொருத்தமான கொள்கை வழிமுறைகளை முன்மொழிந்திருந்தது. வெளிநாட்டுத்துறை அபிவிருத்திகள் மாதாந்த பத்திரிகை வெளியீடுகளினூடாக பொதுமக்களுக்கு தெரிவிக்கப்பட்டது. மேலும், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் வெளிநாட்டுத் துறை புள்ளிவிபரங்களினை தொகுத்தல் மற்றும் பரப்புதல் தொடர்பில் 2014 ஆண்டு காலப்பகுதியில் தொடர்ச்சியாக முன்னேற்றம் கண்டது. அத்தகைய முக்கிய முன்னேற்றங்கள் சென்மதி நிலுவை கைநூல் 6 வடிவமைப்பின் கீழ் சென்மதி நிலுவை புள்ளிவிபரங்களை காலாண்டு ரீதியில் வெளியிடுதல், காலாண்டு அடிப்படையில் பன்னாட்டு முதலீட்டு நிலைமை புள்ளிவிபரங்களை வெளியிடுதல், உலக வங்கிக்கு சென்மதி நிலுவை கைநூல் 6 வடிவமைப்பின் கீழ் காலாண்டு வெளிநாட்டுப் படுகடன் புள்ளிவிபரங்களை வழங்குதல், பன்னாட்டு நாணய நிதியத்தினால் முன்னெடுக்கப்பட்ட ஒருங்கிணைக்கப்பட்ட நேரடி முதலீட்டு அளவீடுகளில் பங்குபற்றுதல் மற்றும் மாதாந்த அடிப்படையில் பன்னாட்டு ஒதுக்குத் தரவு முன்வரவை வெளியிடுதல் என்பவற்றை உள்ளடக்கியுள்ளன. மேலும், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தனியார் துறையில் 2,000 இற்கும் மேற்பட்ட கம்பனிகளை உள்ளடக்கி பல்வேறுபட்ட புதிய அளவீடாக முன்னெடுத்திருக்கிறது. இவற்றில் முக்கிய அளவீடாக தனியார் துறைக் கம்பனிகளின் வெளிநாட்டுச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் போன்ற தகவல்களை சேகரிக்கின்ற வருடாந்த பன்னாட்டு முதலீட்டு அளவீடு காணப்பட்டது. இதற்கு மேலதிகமாக பணிகள், வர்த்தகம் தொடர்பில் எட்டு மேலதிக வருடாந்த அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டன. நாணயக் கொள்கை குழு மற்றும் சந்தை நடவடிக்கை குழு போன்ற வேறுபட்ட உள்ளக குழுமங்களுக்கு உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை அபிவிருத்தி தொடர்பில் பகுப்பாய்வு உள்ளீடுகளை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தொடர்ச்சியாக வழங்கியது. வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை நிலைமைகளை கூர்மையாக கண்காணிப்பதற்கும் உள்நாட்டு நாணயத்தின் மீதான அழுத்தத்தை மதிப்பிடுவதற்கும் செலாவணி வீதம், வட்டி வீதம் மற்றும் பன்னாட்டு ஒதுக்குகள் என்பவற்றில் ஏற்படும் மாற்றங்களை கருத்திற் கொண்டு புதிய செலாவணிச் சந்தை அழுத்தச் சுட்டெண் ஒன்று அபிவிருத்தி செய்யப்பட்டது.

இலங்கை தற்போது பின்பற்றி வருகின்ற பொதுத் தரவு பரப்புதல் முறைமையிலிருந்து பன்னாட்டு நாணய நிதியத்தின் சிறப்புத் தரவு பரப்புதல் நியமத்திற்கு முன்னேறிச் செல்வதில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தொடர்ச்சியாக ஈடுபட்டிருந்தது. சிறப்பு தரவு பரப்புதல் நியமத்திற்கான அங்கத்துவமானது தரவு தொகுத்தல் மற்றும் பரவலாக்கல் தொடர்பில் நிலையானதன்மை மற்றும் வெளிப்படைத்தன்மை என்பவற்றை உறுதிப்படுத்தும். மேலும், பன்னாட்டு நாணய நிதியத்தின் தொழில்நுட்ப உதவி தூதுக்குழுவும் 2015 சனவரியில் சிறப்பு தரவு பரப்புதல் நியமத்திற்கு மாறுவது தொடர்பில் இலங்கையின் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்வதற்காக இலங்கைக்கு வருகை தந்திருந்ததுடன் செயன்முறை தொடர்பில் சாதகமான மதிப்பீடுகளையும் வழங்கியிருந்தது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் இலங்கைக்கான சுற்றுலா சென்மதிக் கணக்கு முறைமையின் நடைமுறைப்படுத்தலை ஒருங்கிணைத்திருந்ததுடன் ஆண்டு காலப்பகுதியில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் என்பவற்றின் பங்குபற்றுதலுடன் பல்வேறு கூட்டங்கள் நடைபெற்றன.

### 7.3 நியதிச்சட்ட மற்றும் ஏனைய அறிக்கைகளை வெளியீடுவதனூடாகத் தகவல்களைப் பரப்புதல்

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் மத்திய வங்கியின் கொள்கைகள் தொடர்பான ஊகிக்கும்தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மை என்பவற்றை மேம்படுத்தும் நோக்கில் மத்திய வங்கியின் கொள்கை அறிக்கையான "வழிகாட்டல் 2014: 2014 இற்கும் அதற்கு அப்பாலுக்குமான நாணய மற்றும் நிதியியல் துறை கொள்கைகளை" தொடர்ச்சியாக எட்டாவது ஆண்டாக தயாரித்திருந்ததுடன் இது 2014 சனவரி 2இல் அறிவிக்கப்பட்டது.

நாணய விதிச் சட்டத்தின் 35ஆவது பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டவாறு 2013இற்கான மத்திய வங்கியின் ஆண்டறிக்கையை மூன்று மொழிகளிலும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தயாரித்திருந்ததுடன் இதனைக் குறிப்பிடப்பட்ட காலப்பகுதிக்குள் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சரிற்கு வழங்கியிருந்தது. ஆண்டறிக்கையின் முக்கிய பிரிவுகள் நாணயக் கொள்கை நிலை மற்றும் பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகள் என்பவற்றின் ஆழமான விபரிப்பை உள்ளடக்கியிருந்த அதேவேளை மத்திய வங்கியின் கணக்குகள் மற்றும் நடவடிக்கைகள் மற்றும் புள்ளிவிபரவியல் பின்னிணைப்புக்கள் என்பவற்றையும் உள்ளடக்கியிருந்தது. மேலும், நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 116(1) இன் தேவைப்பாட்டிற்கேற்ப பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் செத்தெம்பர் 15 அறிக்கையை தயாரித்ததுடன் 2015ஆம் ஆண்டிற்கான அரசாங்க வரவு செலவுத்திட்டத் தயாரிப்பை வசதிப்படுத்துவதற்கு நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சரிற்கு சமர்ப்பித்திருந்தது. இவ்விரகசிய அறிக்கையானது ஆண்டின் முதலரைப் பகுதியில் பொருளாதார அபிவிருத்தி தொடர்பான பகுப்பாய்வு, 2015 இற்கான நடுத்தர கால எதிர்கால வாய்ப்புக்கள் மற்றும் எறிவுகள் என்பவற்றுடனான 2014 இற்கான பொருளாதார தோற்றப்பாடு, மத்திய வங்கி அதனது குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கான அதனது ஆற்றல் மீதான இறைக் கொள்கையின் தாக்கம் மற்றும் 2015 வரவு செலவுத் திட்டத்திற்கான சில கொள்கை முன்மொழிவுகள் என்பவற்றை உள்ளடக்கியிருந்தது. மேலும், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் அண்மைக்கால பொருளாதார அபிவிருத்திகள்: 2014இன் முக்கிய பண்புகள் மற்றும் 2015 இற்கான வாய்ப்புக்கள் என்ற வெளியீட்டினை 2014 நவெம்பரில் வெளியிட்டிருந்தது.

பொதுமக்களின் நன்மை கருதி பொருளாதாரத்தின் வேறுபட்ட தோற்றப்பாடுகளின் முக்கிய பொருளாதார தரவுகள் மற்றும் தகவல்களைப் பரப்பும் பொறுப்பை நிறைவேற்றும் நோக்கில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் நாணயக் கொள்கை, வெளிநாட்டுத் துறை செயலாற்றம் மற்றும் ஏனைய தோற்றம் பெற்றுவரும் பொருளாதார விடயங்கள் தொடர்பில் கிரமமான அடிப்படையில் பத்திரிகை வெளியீடுகளை வெளியிட்டதுடன் மாதாந்த குறிப்பு அதேபோன்று ஏனைய பொருளாதார மற்றும் நிதியியல் குறிகாட்டிகள் என்பவற்றை நாளாந்த, வாராந்த மற்றும் மாதாந்த அடிப்படையில் மத்திய வங்கியின் இணையத் தளத்தில் வெளியிட்டது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தகவல் பரப்பும் செயன்முறையை மேலும் வலுப்படுத்துவதற்காக ஆண்டு

காலப்பகுதியில் பயன்தரு பொருளாதார மற்றும் நிதியியல் தரவுகளை உள்ளடக்கிய பேரண்டப் பொருளாதார வரைபடத் தொகுப்பை மத்திய வங்கியின் இணையத் தளத்தில் வெளியிடுவதனை ஆரம்பித்திருந்தது.

### 7.4 முன்கூட்டியே கொள்கை மதியுரைகளை வழங்குதல்

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் பல்வேறுபட்ட பொருளாதார விடயங்கள் மீதான முன்கூட்டிய கொள்கை மதியுரைகளை அரசாங்கத்திற்கும் மற்றும் ஏனைய ஆர்வலர்களுக்கும் 2014இல் தொடர்ந்து வழங்கியது. இதன்படி, பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் நாட்டின் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டைப் பாதுகாப்பதற்காக எடுக்கப்பட வேண்டிய தேவையான கொள்கை வழிமுறைகளைக் கொண்ட பல கொள்கைப் பத்திரங்களை நாணயச் சபைக்கு சமர்ப்பித்தது. செத்தெம்பர் 15 அறிக்கையில் சமர்ப்பிக்கப்பட்ட கொள்கை முன்மொழிவுகளுக்கு மேலதிகமாக, பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் 112 அமைச்சரவைப் பத்திரங்கள் மீது பேரண்டப் பொருளாதாரத் தாக்கங்கள் மீதான தனித்துவமான அவதானிப்புக்களை இவ்வாண்டுக் காலப்பகுதியில் வழங்கியது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் அரசாங்கத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட 23 வெளிநாட்டு கடன்கள் மற்றும் துணைநில் அமைச்சரவையினால் சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைக்கப்படாத 48 கடன் முன்மொழிவுகளின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளையும் மதிப்பிட்டது.

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் மூத்த அலுவலர்கள் ஆண்டுக் காலப்பகுதியில் பல்வேறு உள்ளக மற்றும் வெளியகக் கொள்கை மதியுரை குழுமங்களில் பணியாற்றினர். வெளியே பிரதிநிதித்துவப்படுத்திய குழுமங்கள் முதலீட்டுக் குழுமம், தேசிய தரவு குழுமம், வர்த்தக மையம் மீதான குழுமம், ஓய்வுபெற்ற சுயாதீன வலு உற்பத்தியாளர்களின் செல்லுபடியான காலப்பகுதியின் விரிவாக்கத்தின் மீதான தொழில்நுட்ப பொருளாதார பகுப்பாய்வின் துணைக் குழுமம், வீடமைப்பு மற்றும் நிலைத்திருக்கக்கூடிய நகர அபிவிருத்தியின் மூன்றாவது ஐக்கிய நாடுகள் சம்மேளனத்தின் மீதான தேசிய நடவடிக்கை குழு மற்றும் சுற்றுலா செய்திமதிக் கணக்கு அபிவிருத்தி மீதான குழுமம் என்பனவற்றை உள்ளடக்கியுள்ளன. மேலும், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் மூத்த அலுவலர்கள் வேறுபட்ட அமைச்சுக்கள், ஏனைய அரசாங்க நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களால் நடாத்தப்பட்ட கூட்டங்களில் மத்திய வங்கியை பிரதிநிதித்துவப்படுத்தினர்.

நாணயக் கொள்கைக் குழு மற்றும் நாணயக் கொள்கை ஆலோசனைக் குழு என்பனவற்றின் கூட்டங்களை ஒருங்கிணைப்பதற்கு மேலதிகமாக, திணைக்களத்தின் மூத்த அலுவலர்கள் நிதியியல் துறை உறுதிப்பாட்டுக் குழுமம், சந்தை நடவடிக்கைகள் குழுமம், உள்நாட்டுப் படுகடன் முகாமைத்துவக் குழுமம், வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவக் குழுமம் மற்றும் இடர்முகாமைத்துவ குழுமம் மற்றும் 2014இல் பணம் தூய்மையாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடல் என்பவற்றின் மீதான தேசிய இடர் மதிப்பீட்டுக்கான செயற்குழுமம் போன்ற பிரதான உள்ளக குழுமங்களிலும் பங்குபற்றியிருந்தனர்.

### 7.5 கொள்கை ஆய்வு மற்றும் அறிவாற்றலைப் பகிர்ந்து கொள்ளும் நடவடிக்கைகளில் ஈடுபடுதல்

நாட்டின் பரந்த பேரண்டப் பொருளாதார குறிக்கோள்களுடன் இசைந்து செல்லும் விதத்தில் நாணயக் கொள்கைகளை வடிவமைத்து நடைமுறைப்படுத்தும் கொள்கை ஆய்வுகளை மேற்கொள்ளுதல் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் முதன்மை நோக்கமாகும். முன்னைய ஆண்டுகளினைப் போன்று, மாதாந்த நாணயக் கொள்கை குழு கூட்டத்தில் நாணயச் சபைக்கு நாணயக் கொள்கை பரிந்துரைகளை வசதிப்படுத்துவதற்காக உலகளாவிய மற்றும் உள்ளக அபிவிருத்திகள் இரண்டையும் உள்ளடக்கிய பொருளாதார மற்றும் நாணய பகுப்பாய்வு பற்றிய அனைத்தையுமுள்ளடக்கிய அறிக்கையினை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தயாரித்தது.

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தினுள் ஆராய்ச்சி மற்றும் அறிவாற்றலைப் பகிர்ந்து கொள்ளும் நடவடிக்கைகளை வசதிப்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட ஆராய்ச்சி மதியுரை குழுமம் அலுவலர் ஆய்வுகளை வெளியிடல், திணைக்கள பொருளாதார செயலமர்வுகளை நடத்துதல், பன்னாட்டு ஆராய்ச்சி மாநாடுகளை நடத்துதல் போன்ற நடவடிக்கைகளை ஆண்டுக் காலப்பகுதியில் தொடர்ந்தும் மேற்கொண்டது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் பேரண்டப் பொருளாதார மாதிரிப்பிரிவு அலுவலர்களுக்கு சமகால முக்கியம் வாய்ந்த விடயங்களில் ஆய்வுகளை மேற்கொள்வதற்கு வாய்ப்பினை வழங்கியது. இம்முயற்சியின் உதவியினால் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் அலுவலர்கள் ஆண்டுக் காலத்தில் ஆறு ஆராய்ச்சிக் கட்டுரைகளை தயாரிக்கக்கூடியதாக இருந்தது.

ஆண்டு காலப்பகுதியில் மத்திய வங்கியின் ஆராய்ச்சி சஞ்சிகையான உயர் அலுவலர் ஆய்வின் 43ஆவது தொகுதியில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் அலுவலர்களினால் நிறைவு செய்யப்பட்ட மூன்று அனைத்தையுமுள்ளடக்கிய ஆய்வுக் கட்டுரைகள் வெளியிடப்பட்டிருந்தன. மேலும், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் அலுவலர்களினால் நிறைவு செய்யப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகள் பன்னாட்டு வெளியீடுகளான பன்னாட்டு நிதியியல் சந்தை நிறுவனங்கள் மற்றும் பண வெளியீடு மற்றும் வர்த்தக மற்றும் சமூக விஞ்ஞான வெளியீடுகளில் 2014இல் வெளியிடப்பட்டது. அதேவேளையில், 2015 பெப்புருவரியில் துருக்கியில் நடைபெற்ற பன்னாட்டு ஆராய்ச்சி மாநாட்டில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் அலுவலரினால் ஆராய்ச்சிக் கட்டுரை சமர்ப்பிக்கப்பட்டது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் அலுவலர்களினால் எழுதப்பட்ட கட்டுரைகள் மத்திய வங்கியின் வெளியீடுகளான "நியுஸ் சேர்வே", "குறிப்பேடு" போன்றவற்றிலும் வெளிவாரி நிறுவனங்களின் வெளியீடுகளிலும் வெளியிடப்பட்டன. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் மூத்த அலுவலர்கள் பட்டப்படிப்பிற்குச் செல்கின்றவர்களின் 39 ஆராய்ச்சிக் கட்டுரைகள் மற்றும் 19 ஆராய்ச்சி முன்மொழிவுகளை ஆண்டுக் காலப்பகுதியில் மதிப்பீடு செய்தனர். ஆராய்ச்சி மதியுரை குழுமமும் இலங்கை மத்திய வங்கியின் அலுவலர்களின் ஆராய்ச்சித் திறன்களை அதிகரிப்பதற்காக ஆராய்ச்சி முறையியல் செயலமர்வினை நடத்துவதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொண்டது. முக்கியமாக பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் அலுவலர்களை கருத்தில் கொண்டு முதலாவது செயலமர்வுத் தொடர் 2015 பெப்புருவரியில் அதன் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

தோற்றம் பெற்றுவரும் முக்கிய விடயங்கள் தொடர்பிலான அறிவாற்றலை அதிகரிக்கும் நோக்குடனும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் ஆர்வலர்களுக்கிடையில் அறிவாற்றலை பகிர்ந்து கொள்ள வாய்ப்பளிப்பதற்காகவும் 20 திணைக்களச் செயலமர்வுகள் நடாத்தப்பட்டன. இச்செயலமர்வுகளில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்திலுள்ள அலுவலர்கள் மற்றும் "பட்டதாரி பயிலுனர்கள்" தங்கள் ஆராய்ச்சி முடிவுகள் மற்றும் உலகளாவிய மற்றும் உள்நாட்டுப் பொருளாதாரம் தொடர்பான சிறப்பு விடயங்களையும் சமர்ப்பித்தனர். மேலும், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் மனிதவளத் திணைக்களத்துடன் இணைந்து பல்வேறு துறைகளின் நிபுணர்களை அழைத்து தங்கள் அறிவாற்றலையும் அனுபவத்தினையும் வங்கி அலுவலர்களிடம் பகிர்ந்து கொள்வதற்கு "மாதாந்த பொருளாதார அரங்கத்தினை" ஒழுங்கு செய்தது.

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் அலுவலர்கள் நாணயக் கொள்கை மற்றும் மத்திய வங்கித்தொழில் போன்றவற்றில் இலங்கை மத்திய வங்கிக்கு உள்ளேயும் வெளியேயுமுள்ள ஆர்வலர்களின் அறிவாற்றலை வளர்த்துக் கொள்வதற்கு பெரும் பங்களித்தனர். இதற்கமைய, பல அலுவலர்கள் வங்கித்தொழில் கற்கைக்கான ஆய்வுநிலையம், பல்கலைக்கழகங்கள், பள்ளிக்கூடங்கள் போன்ற கல்வி நிறுவனங்கள் மற்றும் பல்வேறு அரச மற்றும் தனியார் நிறுவனங்களினால் ஒழுங்கு செய்யப்பட்ட பல்வேறு கல்விசார்ந்த நிகழ்ச்சித்திட்டங்களில் வள ஆளணியினராக தொடர்ந்தும் பணியாற்றினர். "தக்சிலாவ" தொலைக்காட்சி கல்வி நிகழ்ச்சித்திட்டம், "ஈகோன் ஐகோன்" நிகழ்ச்சித்திட்டம், "தூரநோக்கு 2020"

நிகழ்ச்சித்திட்டம், "வங்கிகளுக்கிடையிலான வினாடி வினா", வருடாந்த ஏற்றுமதி விருது வழங்கல்கள் நிகழ்ச்சித்திட்டம் போன்ற அறிவாற்றலை விருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டங்கள் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் அலுவலர்களது பணிகளை பல்வேறு இயலளவில் 2014இல் கவர்ந்து கொண்டன. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள அலுவலர்கள் இலங்கை மத்திய வங்கிக்கு வருகைதரும் உள்நாட்டு மற்றும் பன்னாட்டு பிரதிநிதிகள் மற்றும் முதலீட்டாளர்களுக்கு மத்திய வங்கித்தொழில் மற்றும் பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகள் பற்றிய காட்சிப்படுத்தலுடன் கூடிய விரிவுரைகளை இவ்வாண்டுக் காலப்பகுதியில் நடத்தினர். மேலும், பொருளாதார ஆராய்ச்சி திணைக்கள அலுவலர்கள் வேறுபட்ட கைத்தொழில்களின் செயலாற்றம் மற்றும் பிரச்சனைகள் தொடர்பான நல்ல புரிந்துணர்வை பெற்றுக்கொள்வதற்காக பல்வேறுபட்ட கைத்தொழில் விஜயங்களை மேற்கொண்டனர்.

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் மத்திய வங்கிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய ஆராய்ச்சித் திணைக்களங்களின் ஆய்வாளர்கள் தமக்கிடையே கருத்துக்களை பகிர்வதற்கும் அண்மைய ஆராய்ச்சி முடிவுகளை சமர்ப்பிப்பதற்கும் சிறந்த அடித்தளத்தை வழங்குவதற்காக தொடர்ச்சியாக ஏழாவது ஆண்டாக பன்னாட்டு ஆராய்ச்சி மாநாட்டை 2014இல் வெற்றிகரமாக நடாத்தியது. 27 ஆராய்ச்சி கட்டுரைகளிலிருந்து எட்டு ஆராய்ச்சிக் கட்டுரைகள் கடுமையான தெரிவுப் பொறிமுறையினூடாக தெரிவு செய்யப்பட்டு மாநாட்டில் "சவால்மிக்க உலகளாவிய மற்றும் உள்நாட்டுச் சூழலில் வளர்ச்சியும் உறுதிப்பாடும்" என்ற தொனிப்பொருளின் கீழ் சமர்ப்பிக்கப்பட்டன. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் இரண்டு அலுவலர்கள் பன்னாட்டு ஆராய்ச்சி மாநாடு 2014இல் தமது கட்டுரைகளை சமர்ப்பித்திருந்தனர். அதேவேளை, பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் பன்னாட்டு ஆராய்ச்சி மாநாடு 2013இற்கான மாநாட்டு நடைமுறைகளை பிரசுரித்து வெளியிட்டது.

### 7.6 பன்னாட்டு அமைப்புக்களுடனான தொடர்புகளை வலுப்படுத்தல்

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் இலங்கையின் சார்பாக பன்னாட்டு நாணய நிதியம், தென்கிழக்காசிய மத்திய வங்கிகளின் நிலையம், சியென்ஸா குழுமம் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்கள் மற்றும் நிதிச் செயலாளர்களின் சார்க் நிதியம் என்பவற்றுடன் அதன் உறவுகளை தொடர்ந்ததுடன் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஏனைய பல்புடை மற்றும் இருபுடை முகவர்களுடன் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்கு நிதி திட்டமிடல் அமைச்சிற்கு உதவியது. பன்னாட்டு கூட்டங்கள், அரங்குகள் மற்றும் மாநாடுகளில் கொள்கை உரையாடல்களில் கலந்து கொண்டதன் மூலம் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள அலுவலர்கள் மத்திய வங்கியினை பிரதிநிதித்துவம் செய்தனர். பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் 28ஆவது சார்க் நிதிய குழுக் கூட்டத்தையும் சார்க் நிதிய ஆளுநர்களின் மாநாட்டையும் 2014 யூலை 24இல் இலங்கை மத்திய வங்கியில் நடத்துவதை வசதிப்படுத்தியது. சார்க் நிதியத்தின் 28ஆவது குழு கூட்டத்தில் சார்க் பிரதேசத்தின் ஆளுநர்கள் மற்றும் நிதிச் செயலாளர்கள் மற்றும் ஏனைய மத்திய வங்கியின் பிரதிநிதிகள் மற்றும் நிதி அமைச்சுக்கள் போன்றவர்கள் கலந்து கொண்டனர். மேலும், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் அலுவலர்கள் இலங்கை வெளிவிவகார அமைச்சினால் அபுதாபி வெளிவிவகார அமைச்சுடன் ஒழுங்குபடுத்தப்பட்ட இருபுடை கலந்துரையாடல்களில் இலங்கை மத்திய வங்கியை பிரதிநிதித்துவப்படுத்தியதுடன் ரோமில் நடத்தப்பட்ட "வோர்க்சொப் யூரோஏசியா" என்ற தலைப்பிலான முதலீட்டாளர் கூட்டத்திலும் சூரிச்சில் நடைபெற்ற மூன்றாவது சுவிஸ் இலங்கை வியாபார மன்றத்திலும் ஏனைய முதலீட்டு மேற்பார்வைக் குழுக்களிலும் பிரதிநிதித்துவப்படுத்தினர்.

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தொடர்ச்சியாக கிரமமான அடிப்படையில் பொருளாதார இற்றைப்படுத்தல்களை பன்னாட்டு நிறுவனங்களான பன்னாட்டு நாணய நிதியம், உலக வங்கி, பன்னாட்டு முதலீட்டாளர்கள், தரமிடல் முகவர்கள் மற்றும் ஆலோசகர்கள், தூதுவர்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய ஆர்வலர்களுக்கு வழங்கியது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் மூன்று நாட்டிற்கான பன்னாட்டுத் தரமிடல் முகவர்கள் முறையே பிட்ஜ் றேட்டிங், ஸ்டான்டட் அன்ட் புவர் றேட்டிங்ஸ் மற்றும் மூடிஸ் றேட்டிங் என்பனவற்றுடனும் தரமிடல் ஆலோசகர்களுடனும் நெருக்கமாகப் பணியாற்றிய வேளையில், ஏழு தரமிடல் அறிக்கைகள் மீதான அவதானிப்புக்களையும் வழங்கியது. மேலும், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் கொள்கை தொடர்பான விசாரணைகளுக்கு பதிலிறுத்ததுடன், நாட்டிற்கான பன்னாட்டு முறி வழங்கலுக்கான நடைமுறைப் பேரண்டப் பொருளாதார நிலைமைகள் தொடர்பில் காட்சிப்படுத்தலுடன் கூடிய விரிவுரைகளையும் தயாரித்தது. மேலும், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் 2014 மேயில் பன்னாட்டு நாணய நிதிய உறுப்புரை IV நோக்கு மற்றும் 2015 பெப்புருவரியில் நிகழ்ச்சித்திட்டத்திற்கு பின்னைய கண்காணிப்புக் குழு என்பவற்றை உள்ளடக்கிய பன்னாட்டு நாணய நிதியத்தின் பிரதிநிதிகளின் வருகைக்கு வசதியளித்தது.

## 8. ஊழியர் சேம நிதியம்

அரசுசார் மற்றும் தனியார்துறை ஊழியர்களுக்கு ஓய்வூதிய நன்மைகளை வழங்கும் பொருட்டு இலங்கையின் மிகப்பெரிய ஓய்வூதிய நிதியமான ஊழியர் சேம நிதியம் 1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊழியர் சேம நிதியச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது. சட்டத்தின் ஏற்பாட்டு நிதியங்களுக்கிணங்க, நிதியத்தின் அனைத்து நிர்வாக அதிகாரங்களும் செயற்பாடுகளும் தொழில் ஆணையாளர் நாயகத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் அதேவேளையில் நிதிய முகாமைத்துவத்தின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் என்பன நிதியத்தின் கட்டுக்காப்பாளர் என்ற முறையில் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. நாணயச்சபை அதன் தொழிற்பாட்டினை ஆற்றுவதில் ஒரு தொழிற்பாட்டு சக்தியாக தொழிற்படுவதற்காக ஊழியர் சேம நிதியத் திணைக்களத்திற்கு அதிகாரங்களை வழங்கியுள்ளது.

### 8.1 திணைக்களத்தின் தொழிற்பாடுகள்

ஊழியர் சேம நிதியத் திணைக்களத்திடம் உறுப்பினர் பங்களிப்புக்களையும் மேலதிகக் கட்டணங்களையும் சேகரித்தல், பொதுக் கணக்குகளையும் உறுப்பினர் கணக்குகளைப் பேணுதல், உறுப்பினர் கணக்குகளுக்கு வட்டியை வரவு வைத்தல், நிதியத்தின் பயனாளிகளுக்கு நன்மைகளைக் கொடுப்பனவு செய்தல், மிகையான நிதியங்களை முதலீடு செய்தல் மற்றும் நாணயச்சபையும் தொழில் ஆணையாளரும் தமது கடமைகளையும் தொழிற்பாடுகளையும் மேற்கொள்ளும் வேளையில் ஏற்படும் செலவினங்களை விதித்தல் ஆகிய பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஊழியர் சேம நிதியத் திணைக்களம், நாணயச்சபையின் ஒப்புதலளிக்கப்பட்ட பணிப்புரைகள் மற்றும் கொள்கைகளின்படி 2014ஆம் ஆண்டுப்பகுதியில் மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதுடன் தொழில் ஆணையாளருடன் நெருங்கிய விதத்தில் ஒத்துழைத்தது.

### 8.2 நடவடிக்கைகளின் செயலாற்றம்

**அ) உறுப்புரிமை, உறுப்பினர் நிலுவைகள் மற்றும் மீளளிப்புக்கள்**

2014 இறுதியில் உறுப்பினர் கணக்குகளின் மொத்த எண்ணிக்கை ஏறத்தாழ 15.4 மில்லியனாக மதிப்பிடப்பட்டிருந்தது. இது, 2013ஆம் ஆண்டின் இறுதியில் பதிவு செய்யப்பட்ட 15.2 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 1.3 சதவீத அதிகரிப்பாகும் (அட்டவணை II -4).

முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வருமானம் மற்றும் பெறப்பட்ட தேறிய பங்களிப்பு (மீளளிப்புக்கள் பங்களிப்புக்களிலிருந்து கழித்ததன் பின்பு) போன்றவற்றின் காரணமாக நிதியத்தின் மொத்தப் பெறுமதியானது 2013 இறுதியின் ரூ.1,300 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2014 இறுதியில் ரூ.1,486.9 பில்லியனாக விளங்கியதுடன் இது 14.4 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாகும். உறுப்பினர்களின் வட்டி உட்பட உறுப்பினர்களுக்கான மொத்தப்

பொறுப்பு 2014இன் இறுதியில் ரூ.1,445.5 பில்லியன்களாக விளங்கியதுடன், 2013 இறுதியின் ரூ.1,281.9பில்லியன்களிலிருந்து 12.8 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தது (அட்டவணை II-4). தேறிய பங்களிப்பு முன்னைய ஆண்டின் ரூ.30.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.24.9 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்த வேளையில், உறுப்பினர்களுக்கும் அவர்களது சட்டரீதியான வாரிசுகளுக்கும் செய்யப்பட்ட மீளளிப்புக்களின் மொத்தத் தொகை 2014இல் ரூ.65.1 பில்லியனாகக் காணப்பட்டது. இது 2013இனைவிட 29.7 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாகும். 2014இற்கான நிதியத்தின் தேறிய வருமானம் முன்னைய ஆண்டின் தேறிய வருமானமான ரூ.125.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.150.7 பில்லியனுக்கு அதிகரித்து 19.9 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவு செய்தது.

**அட்டவணை II-4 நிதியத்தின் தெரிந்தெடுக்கப்பட்ட முக்கிய குறிகாட்டிகள்**

| விடயம் | 2013 | 2014(அ) | மாற்றம் (%) |
|---|---|---|---|
| உறுப்பினர் கணக்குகளின் மொத்த எண்ணிக்கை (மில்) | 15.2 | 15.4 | 1.3 |
| பங்களிப்புச் செலுத்தும் உறுப்பினர் கணக்குகள் (மில்) | 2.4 | 2.4 | - |
| பங்களிப்புச் செலுத்தாத உறுப்பினர் கணக்குகள் (மில்) | 12.8 | 13.0 | 1.6 |
| பங்களிப்புச் செலுத்தும் தொழில்தருநர்கள் | 69,148 | 71,000 | 2.7 |
| மொத்தப் பங்களிப்புக்கள் (ரூ.பில்.) | 80.2 | 90.0 | 12.2 |
| மொத்த மீளளிப்புக்கள் (ரூ.பில்.) | 50.2 | 65.1 | 29.7 |
| மீளளிப்புக்களின் எண்ணிக்கை | 114,114 | 127,492 | 11.7 |
| தேறிய வருமானம் (ரூ.பில்.) | 125.6 | 150.7 | 19.9 |
| உறுப்பினர்களுக்கான மொத்த பொறுப்பு (ரூ.பில்.) | 1,281.9 | 1,445.5 | 12.8 |
| நிதியின் மொத்தப் பெறுமதி (ரூ.பில்.) | 1,300.0 | 1,486.9 | 14.4 |

(அ) தற்காலிகமானவை மூலம்:ஊழியர் சேமலாப நிதி திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

### ஆ) நிதியங்களின் முதலீடும் வருமானமும்

**(i) முதலீட்டுச் சொத்துப்பட்டியல்:**

நிதியத்தின் மொத்த முதலீட்டுச் சொத்துப்பட்டியல் (ஏட்டுப்பெறுமதி) 2013இன் ரூ.1,257.3 பில்லியனிலிருந்து 2014இல் ரூ.1,437.7 பில்லியனுக்கு 14.3 சதவீதத்தினால் அதிகரித்தது (அட்டவணை II-5). நிதியத்தின் முதலீட்டுக் கொள்கையானது உறுப்பினர்களுக்கு நீண்டகால நேர்க்கணிய உண்மைவீத வருமானத்தினை வழங்குவது தொடர்பில் தொடர்ந்தும் கவனம் செலுத்தியவேளையில் நிதியத்தின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டதுடன் மீளளிப்புக் கொடுப்பனவுகள் மற்றும் நிதியத்தின் ஏனைய செலவுகளைப் பூர்த்தி செய்யும் விதத்தில் போதுமான மட்டத்தில் திரவத்தன்மை பேணப்பட்டது.

முதலீட்டுச் சொத்துப்பட்டியல் 91.2 சதவீதமான அரச பிணையங்களையும் 6.7 சதவீதமான உரிமை மூலதனத்தினையும் 1.5 சதவீதமான கம்பனி படுகடன், வரத்தக பத்திரங்கள் மற்றும் நம்பிக்கைச் சான்றிதழ்களையும் உள்ளடக்கியிருந்தது. மீதியான 0.6 சதவீதமும் நாளாந்தத் திரவத் தன்மை தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்காக அரச பிணையங்கள் மீதான நேர்மாற்று மீள்கொள்வனவு போன்ற உயர் திரவச் சொத்துக்களிலிருந்தது. விளைவு வீதத்துடன் சேர்த்து அரச பிணையங்கள் சொத்துப்பட்டியலின் முதிர்ச்சித் தோற்றப்பாடு அட்டவணை II-6 இல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை II-5 முதலீட்டுச் சொத்துப்பட்டியல்**

| முதலீட்டின் வகை | 2013 | | 2014(அ) | |
|---|---|---|---|---|
| | தொகை ரூ. பில் | பங்கு (%) | தொகை ரூ. பில் | பங்கு (%) |
| திறைசேரி முறிகள் மற்றும் உண்டியல்கள் | 1,140.5 | 90.7 | 1,287.5 | 89.6 |
| அரசிற்கான ரூபாக் கடன்கள் | 23.1 | 1.8 | 23.1 | 1.6 |
| உரிமை மூலதனம் | 72.8 | 5.8 | 96.6 | 6.7 |
| கம்பனிப் படுகடன்கள் | 14.3 | 1.2 | 22.4 | 1.5 |
| நேர்மாற்று மீள்கொள்வனவுகள் | 6.6 | 0.5 | 8.1 | 0.6 |
| **மொத்தம்** | **1,257.3** | **100.0** | **1,437.7** | **100.0** |

(அ) தற்காலிகமானவை மூலம்: ஊசேநி திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை II-6 அரச பிணையங்கள் சொத்துப்பட்டியலின் முதிர்ச்சித் தோற்றப்பாடு (2014 இறுதியிலுள்ளவாறு)**

| முதிர்ச்சிக் காலம் | முதிர்ச்சிப் பெறுமதி ரூ. பில் (அ) | பங்கு (%) | நிறையேற்றப் பட்ட சராசரி விளைவு (%) |
|---|---|---|---|
| 1 ஆண்டுக்குக் குறைந்தது | 102.3 | 6.9 | 9.8 |
| 1 - 2 ஆண்டுகள் | 157.3 | 10.7 | 9.9 |
| 3 - 4 ஆண்டுகள் | 199.9 | 13.6 | 10.7 |
| 5 ஆண்டுகளுக்கும் கூடியது | 1,014.7 | 68.8 | 11.6 |
| **மொத்தம்** | **1,474.2** | **100.0** | **11.1** |

(அ) தற்காலிகமானவை மூலம்: ஊசேநி திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

**(ii) முதலீட்டு வருமானம்:**

2014இல் நிதியம் உழைத்த மொத்த வருமானம் ரூ.163.9 பில்லியனாக விளங்கி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 19.7 சதவீதங்கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தது (அட்டவணை II-7). வட்டி வருமானம் நிதியத்திற்கான வருமானத்தின் முக்கிய மூலமாக (வருமானத்தின் 78.1 சதவீதம்) காணப்பட்டது. வட்டி வருமானம் 2013இன் ரூ.105 பில்லியனிலிருந்து 2014இல் ரூ.127.5 பில்லியனுக்கு 21.4 சதவீதத்தினால் அதிகரித்தது. மேலும், மூலதன இலாபம் மற்றும் பங்கிலாபம் என்பனவற்றை உள்ளடக்கிய உரிமை மூலதனச் சொத்துப்பட்டியல் 2013இல் உழைத்த ரூ.3,339 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2014இல் ரூ.5,598 மில்லியன் கொண்ட வருமானத்தினை உருவாக்கி 67.7 சதவீதம் கொண்ட அதிகரிப்பினை எடுத்துக்காட்டியது. எனினும், 2014இல் கழிவிடப்பட்ட திறைசேரி முறிகளிலிருந்தான கடன் தீர்ப்பனவு இலாபம் 2013இன் ரூ.27.0 பில்லியனிலிருந்து ரூ.25.9 பில்லியனுக்கு 3.9 சதவீதத்தினால் குறைவடைந்தது (அட்டவணை II-7).

**அட்டவணை II-7 முதலீடு மீதான வருமானம்**

| வருமானத்தின் மூலம் | 2013 | | 2014(அ) | |
|---|---|---|---|---|
| | தொகை ரூ. மில் | பங்கு (%) | தொகை ரூ. மில் | பங்கு (%) |
| வட்டி | 105,038 | 76.9 | 127,499 | 77.8 |
| கடன் தீர்ப்பனவு இலாபம் | 26,956 | 19.7 | 25,897 | 15.8 |
| அரச பிணையங்களிலிருந்தான மூலதன இலாபம் | 1,019 | 0.7 | 4,082 | 2.5 |
| சந்தைப்படியான இலாபம் இழப்புக்கள் | (45) | - | 89 | 0.1 |
| பங்குகளிலிருந்தான மூலதன இலாபம் | 113 | 0.1 | 2,277 | 1.4 |
| பங்கு இலாபங்கள் | 3,226 | 2.4 | 3,321 | 2.0 |
| கட்டுப்பணம் - ஈடுமீட்கப்படும் போது கழிவிடல் | (4) | - | - | - |
| வேறு | 354 | 0.2 | 708 | 0.4 |
| **மொத்தம்** | **136,657** | **100.0** | **163,873** | **100.0** |

(அ) தற்காலிகமானவை மூலம்: ஊசேநி திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

**(iii) செலவினம்:**

2013இல் நிதியத்தின் மொத்தத் தொழிற்பாட்டு செலவினம் 2013இன் ரூ.979 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.1,043 மில்லியனாக விளங்கி 6.5 சதவீத அதிகரிப்பினைக் கொண்டிருந்த போதும் 2014இல் மொத்த வருமானத்தின் விகிதம் 2013இன் 0.72 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 0.64 சதவீதமாகப் பேணப்பட்டது. (அட்டவணை II-8). கடந்த ஆண்டுகளில், நிதியமானது அதன் தொழிற்பாட்டுச் செலவினத்தினை மொத்த வருமானத்தில் 1 சதவீதத்திற்குக் குறைவானதொரு அளவில் பேணியது.

**அட்டவணை II-8 தொழிற்பாட்டுச் செலவினங்கள்**

| விடயம் | தொகை (ரூ.மில்.) | | மாற்றம் (%) |
|---|---|---|---|
| | 2013 | 2014(அ) | |
| ஆளணிச் செலவினங்கள் | 569 | 579 | 1.8 |
| நிர்வாகச் செலவினங்கள் | 364 | 421 | 15.7 |
| ஏனைய செலவினங்கள் | 46 | 43 | (6.5) |
| **மொத்தம்** | **979** | **1,043** | **6.5** |
| **மொத்த வருமானத்தின் % ஆக மொத்தச் செலவினங்கள்** | **0.72** | **0.64** | |

(அ) தற்காலிகமானவை மூலம்: ஊசேநி திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

**இ) உறுப்பினர் நிலுவைகள் மீதான வட்டிக் கொடுப்பனவு**

2014ஆம் ஆண்டின் இறுதியில் உறுப்பினர்களுக்கான வட்டிக் கொடுப்பனவாக பகிர்ந்தளிப்பதற்கு கிடைக்கத்தக்கதாக இருந்த தொகை 2013இன் ரூ.123.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.141.6 பில்லியனாகக் காணப்பட்டது (அட்டவணை II-9). ஒதுக்கங்களுக்கு ரூ.4.0 பில்லியன் மாற்றல் செய்யப்பட்ட பின்னர் 2014இல் உறுப்பினர் நிலுவைகளின் மீது 10.5 சதவீதங்கொண்ட வட்டியை செலுத்தக் கூடியதாக வருமானம் இருந்தது (அட்டவணை II-10).

**அட்டவணை II-9 உறுப்பினர்களுக்கான வட்டிக் கொடுப்பனவு**

| விடயம் | தொகை (ரூ.மில்.) | | மாற்றம் |
|---|---|---|---|
| | 2013 | 2014(அ) | (%) |
| மொத்த வருமானம் | 136,657 | 163,873 | 19.9 |
| மொத்த தொழிற்பாட்டுச் செலவினங்கள் | (979) | (1,043) | 6.5 |
| வருமான வரி | (10,069) | (12,169) | 20.9 |
| ஆண்டுக்கான தேறிய வருமானம் | 125,610 | 150,662 | 19.9 |
| முன்னைய ஆண்டுக்கான திருத்தம் | 28 | - | (100.0) |
| முன்னைய ஆண்டு பிடித்துவைத்தல் இலாபம் | 28 | 141 | 403.6 |
| நடைமுறை மீளளிப்புக்கள் மீதான வட்டிக் கொடுப்பனவு | (2,233) | (3,201) | 43.4 |
| பங்கிலாப ஏற்பாடுகள் | - | (6,000) | - |
| பகிர்ந்தளிப்புக்காக கிடைக்கத்தக்கதாகவுள்ள தேறிய வருமானம் (நடைமுறை மீளளிப்புக்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகளுக்குப் பின்) | 123,433 | 141,602 | 14.7 |
| ஒதுக்குகளில் இருந்து/(இற்கு) மாற்றல்கள் | 3,700 | (4,000) | (208.1) |
| ஒதுக்குகளிலிருந்து(இற்கு)மாற்றல்களுக்குப் பின் பகிர்ந்தளிப்புக்காகக் கிடைக்கத்தக்க தாகவுள்ள தேறிய வருமானம் | 127,133 | 137,602 | 8.2 |
| உறுப்பினர் நிலுவைகள் மீதான செலுத்தப்பட்ட வட்டி | (126,992) | (137,291) | 8.1 |
| பிடித்து வைத்தல் இலாபம் | 141 | 311 | 120.6 |
| உறுப்பினர் நிலுவைகள் மீது செலுத்தப்பட்ட வட்டி வீதம் % | 11.0 | 10.5 | |

(அ) தற்காலிகமானவை மூலம்: ஊசேநி திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை II-10 உறுப்பினர் நிலுவைகள் மீது செலுத்தப்பட்ட வட்டி வீதம்**

| ஆண்டு | வழங்கப்பட்ட வட்டிவீதம் (%) | பயனுறு வட்டிவீதம் (%)[1] |
|---|---|---|
| 2005 | 9.00 | 9.13 |
| 2006 | 10.10 | 10.30 |
| 2007 | 11.20 | 11.40 |
| 2008 | 13.20 | 13.44 |
| 2009 | 13.75 | 13.92 |
| 2010 | 12.50 | 12.65 |
| 2011 | 11.50 | 11.58 |
| 2012 | 11.50 | 11.62 |
| 2013 | 11.00 | 11.40 |
| 2014 (அ) | 10.50 | 10.60 |

(அ) தற்காலிகமானவை மூலம்: ஊசேநி திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

**8.3 உறுப்பினர் பணிகள்**

**அ) உறுப்பினர் கணக்குக் கூற்றுக்கள்**

2014ஆம் ஆண்டின் முதலரைப் பகுதிக்கான உறுப்பினர் கணக்குக் கூற்றுக்கள் அவர்களின் தொழில்தருநர்களூடாக வழங்கும் பணி 2014 திசெம்பரில் தொடங்கியது. 2014இன் பின்னரைப் பகுதிக்கான கணக்குக் கூற்றுக்களை 2015 யூலை இறுதியளவில் வழங்குவதற்கும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும். மேலும், மேலதிக தகவல்களை உள்ளடக்கி கணக்குக் கூற்றுக்கள் மீளமைக்கப்பட்டதுடன், தகவல்களின் இரகசியத்தன்மையை உறுதிப்படுத்தும் பொருட்டு முத்திரை அழுத்தப்பட்ட தபாலுறைகளில் அனுப்பிவைக்கப்பட்டன.

**ஆ) வீடமைப்புக் கடன் வசதி**

வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி, அரச ஈட்டு முதலீட்டு வங்கி, இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும்

கூட்டுறவு கிராமிய வங்கிகள் ஆகிய பங்கேற்கும் கடன் வழங்கும் நிறுவனங்களிடமிருந்து வீடமைப்புக் கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கு உறுப்பினர்களுக்கு வசதியளிக்கும் குறிக்கோளுடன் வீடமைப்புக் கடன் திட்டம் 1988இல் அறிமுகப்படுத்தப்பட்டது. ஊழியர் சேம நிதியமானது ரூ.8,021 மில்லியன் தொகை கொண்ட வீடமைப்புக் கடன்களின் ஒப்புதலுக்காக பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுக்கு 17,786 உறுதிச்சான்றிதழ்களை உறுப்பினர்களுக்கு அவர்களது ஊசேநி நிலுவைக்கெதிராக வழங்கியது (அட்டவணை II-11). மேலும் 2013ஆண்டுகாலப் பகுதியில் நிலுவையிலிருந்த கடன்களைத் தீர்ப்பனவு செய்வதற்காக 2014இல் தொடர்பான உறுப்பினர் கணக்குகளிலிருந்து ஏறத்தாழ ரூ.2,394 மில்லியன்கள் கழிக்கப்பட்டு பங்கேற்கும் கடன் வழங்கல் நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

**அட்டவணை II-11** வீடமைப்புக் கடன் வசதி

| ஆண்டு | வழங்கப்பட்ட சான்றிதழ்கள் (எண்ணிக்கை) | ஒப்புதலளிக்கப்பட்ட கொடுகடன் (ரூ.மில்) | கடன் வழங்கல் நிறுவனங்களுக்கு செலுத்திய தொகை (ரூ.மில்) |
|---|---|---|---|
| 2005 | 14,600 | 2,766 | 900 |
| 2006 | 15,136 | 3,049 | 1,078 |
| 2007 | 12,969 | 2,872 | 1,240 |
| 2008 | 12,519 | 3,008 | 1,192 |
| 2009 | 10,383 | 2,680 | 1,552 |
| 2010 | 13,848 | 4,512 | 2,093 |
| 2011 | 20,041 | 6,355 | 1,896 |
| 2012 | 11,234 | 3,973 | 2,019 |
| 2013 | 16,268 | 6,914 | 2,178 |
| 2014 (அ) | 17,786 | 8,021 | 2,394 |
| **மொத்தம்** | **144,784** | **44,150** | **16,542** |

(அ) தற்காலிகமானவை

மூலம்: ஊசேநி திணைக்களம் இலங்கை மத்திய வங்கி

**இ) பொதுமக்கள் விழிப்புணர்வு**

ஆர்வலர்களுக்கிடையில் ஊ.சே.நிதியச் செயற்பாடுகள் மீதான விழிப்புணர்வை மேம்படுத்தலானது பத்திரங்களற்ற சூழ்நிலையில் முழுமையான தன்னியக்கம் நோக்கி நகர்விற்கு வசதிப்படுத்தக்கூடிய முற்தேவைப்பாடானதொன்றாக உருவாகியது.

ஊ.சே. நிதியப் பணிகள் தொடர்பாக உறுப்பினர்கள் மற்றும் ஏனைய ஆர்வலர்களின் விழிப்புணர்வை மேம்படுத்தலானது நடமாடும் பணிகள், வீட்டுக் கடன் முகாமைத்துவம் மீது வங்கி அலுவலர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம், தேசிய மட்டக் கூட்டு நிகழ்வுகள் மற்றும் கண்காட்சிகளில் பங்குபற்றுதல் மற்றும் சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்கள், காணொளி நறுக்குகள் மற்றும் காட்சிப்படுத்தலுடன் கூடிய விரிவுரைகள் போன்ற தொடர்பூட்டல் ஊடகங்களின் இணைந்த கலவையைப் பயன்படுத்துதல் போன்றவற்றினூடாக மேற்கொள்ளப்பட்டது.

2014 காலப்பகுதியில், பெல்மதுல்ல பெருந்தோட்டம், ஹனுவெல்ல பெருந்தோட்டம், ரில்ஹன பெருந்தோட்டம், பொறநுனுவ பெருந்தோட்டம், ஒபத பெருந்தோட்டம், வெல்லதுர பெருந்தோட்டம், கௌபி பெருந்தோட்டம் மற்றும் அந்தன பெருந்தோட்டம் போன்றவற்றை உள்ளடக்கிய கஹவத்த பிளாண்டேஷன் பிஎல்சி யின் பெருந்தோட்டங்களை உள்ளடக்கி நான்கு நடமாடும் பணிகளும் சிறிஜெயவர்த்தனபுர லயன்ஸ் கழகத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்ட பல்பணி முகாம் திருகோணமலை சிங்கள மகா வித்தியாலத்திலும் மொறட்டுவ மருத்துவ சனசமூக விருந்தோபல் தினம் போன்ற இரு நடமாடும் பணிகளும் நடத்தப்பட்டன.

1 பயனுறு வட்டி வீதம் = (உறுப்பினர்களுக்கு செலுத்தப்பட்ட வட்டி)/[(ஆண்டுத் தொடக்கத்தில் உறுப்பினர் நிலுவைகள் + வட்டியினை வரவு வைக்கமுன் ஆண்டு இறுதி உறுப்பினர் நிலுவைகள்)/2]

நடமாடும் பணிகள் தொழில் திணைக்களம் மற்றும் ஆட்பதிவுத் திணைக்களம், பதிவாளர் நாயகத் திணைக்களம், பொலிஸ் திணைக்களம் மற்றும் உரிய மாவட்ட/ பிரதேச செயலகங்கள் போன்ற ஏனைய அரச நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் நடத்தப்பட்டன. ஊ.சே.நிதிய உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களுக்கு நடமாடும் பணி மூலம் பின்வரும் பணிகள் வழங்கப்பட்டன.

i. ஊழியர் சேம நிதிய நிலுவைக் கூற்றுக்களை வழங்குதல்.
ii. ஊழியர் சேம நிதிய உறுப்பினர்களின் விபரங்கள் மற்றும் கணக்குகளைத் திருத்துதல்.
iii. உறுப்பினர்களின் விபரங்களை மீளப் பதிவு செய்தல்.
iv. குறுஞ்செய்தி மற்றும் இணையத்தள விசாரணை வசதி போன்றவற்றினூடாக அதேநேர உறுப்பினர் பணிகளை ஊக்குவித்தல்.
v. ஆட்பதிவுத் திணைக்கள அலுவலர்களினால் தேசிய அடையாள அட்டைகள் மற்றும் அது தொடர்பான பணிகளை வழங்குதல்.
vi. பதிவாளர் நாயகத் திணைக்களத்தினால் பிறப்புச் சான்றிதழ்/ வயது ஊகச் சான்றிதழ்கள்/ வெற்று அறிக்கைகளை மற்றும் அது தொடர்பான பணிகளை வழங்குதல்
vii. ஊழியர் சேம நிதியத்தின் ஒட்டுமொத்த செயற்பாடுகள் தொடர்பில் ஆலோசனைகளை வழங்குதல்

நடமாடும் பணிகளின் வினைத்திறனை அதிகரிக்கும் நோக்கில் ஒவ்வொரு நடமாடும் பணிகளுக்கு முன்னர், தொடர்பான தொழில்தருநர்கள், முகாமையாளர்கள் மற்றும் தொடர்புடைய தொழில்தருநர்களின் ஏனைய நிர்வாக அலுவலர் உறுப்பினர்கள் போன்றோருக்காக விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் நடத்தப்பட்டது.

திணைக்களமானது தேசத்தின் மகுடம் பொருட்காட்சிச்சாலை - 2014 குளியாப்பிட்டிய, ஆளணி முகாமைத்துவத் நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட தேசிய மனித வளப் பணி வழங்குநர் பொருட்சாட்சிச்சாலை - 2014 மற்றும் இலங்கை ஒருங்கிணைக்கப்பட்ட பொறியியலாளர்கள் நிலையத்தினால் நடத்தப்பட்ட கைத்தொழில்கள் பொருட்காட்சிச்சாலை மற்றும் வர்த்தக கண்காட்சி - 2014 ஆகிய 03 தேசிய மட்ட பொருட்காட்சிச்சாலை மற்றும் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சிகளில் பங்குபற்றியது.

2014 காலப்பகுதியில் கொழும்பிலுள்ள ஊ.சே.நிதிய அலுவலகத்திற்கு வருகைதருவோரில் பெரும்பான்மையானவர்கள் பெருந்தோட்டம் துறை நிறுவனங்களைச் சார்ந்ததாக இருப்பதால், பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் பிரதானமாக இத்துறைகளை நோக்கியதாகவிருந்தன. ஆண்டுக் காலப்பகுதியில் பணியாற்றிய ஊ.சே.நிதிய உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை 12,000 அதிகமாக இருந்தது.

**ஈ) ஊ.சே. நிதியக் கொடுப்பனவுகளுக்கான இ-கூற்று முறைமை**

ஆண்டு காலப்பகுதியில், கைகளினால் செய்யப்படும் கொடுப்பனவு முறைமைகளுக்கு (சி மற்றும் சி3) பதிலாக உறுப்பினர் பங்களிப்பு விபரங்களை இலத்திரனியல் முறையில் (இ-கூற்று) சமர்ப்பிப்பதற்கு தொழில்தருநர்களை ஊக்குவிப்பதற்காக இ-கூற்று முறைமைகள் தொடர்பில் ஊ.சே. நிதியத் திணைக்களம் பல்வேறு செயல்முறைகளை மேற்கொண்டது. உறுப்பினர்களுக்குச் சிறந்த பணிகளை வழங்கும் பொருட்டு மொத்தமாக பத்திரங்களற்ற தீர்வொன்றான இ-கூற்றுக்களைச் சமர்ப்பிப்பது செலவினையும் தாமதங்களையும் குறைத்து தொழிற்பாட்டின் வினைத்திறனை அதிகரிக்கும். மேலும், பங்களிப்புக்களின் விபரங்களுடன் சேர்த்து ஊ.சே. நிதிய பங்களிப்புக்களை மேற்கொள்வதற்கான கணனி வழி உடனடி முறைமையின் கிடைப்பனவானது வியாபாரத்தினைச் செய்யுங்கள் சுட்டெண்ணின் கீழான இலக்கிடலை எய்துவதற்கு

முற்தேவைப்பாடான ஒன்றாகும். இது வெளிநாட்டு முதலீட்டாளர்களை நாட்டிற்குள் கவர்வதற்கு மிக இன்றியமையாததாகும்.

இ-கூற்று முறைமை 2012 இறுதிவரை சுயவிருப்பு அடிப்படையில் தொழிற்பட்டு வந்தது. 2012இல் இம்முறைமையினை 50 இற்கும் குறைவான தொழிலாளர்களையுடைய தொழில்தருநர்களுக்கு கட்டாயமாக்கும் விதத்தில் 2012ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க சட்டத்திற்கான திருத்தமொன்றாக ஊ.சே.நிதிய சட்டத்திற்கு சட்ட ஏற்பாடுகள் கூட்டிணைக்கப்பட்டன. திருத்தங்கள் மீதான ஒழுங்குவிதிகள் 2013 மேயில் வர்த்தமானப்படுத்தப்பட்டன.

இம்முறைமையின் கீழ், ஊ.சே. நிதியமானது இத்திட்டத்தின் கீழ் சேகரிக்கும் முகவர்களாக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளை நியமிப்பதன் மூலம் அவற்றின் சேவைகளைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கைகளை எடுத்தது. இதற்கமைய, கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சியும் இலங்கை வங்கியும் முறையே 2011 ஒத்தோபரிலிருந்தும் 2012 செத்தெம்பரிலிருந்தும் நடைமுறைக்குவரும் விதத்தில் தமது வாடிக்கையாளர்களுக்கு இலத்திரனியல் கொடுப்பனவு வசதிகளை அறிமுகப்படுத்தின. 2013இல், மக்கள் வங்கி, சம்பத் வங்கி பிஎல்சி மற்றும் ஹற்றன் நஷனல் வங்கி பிஎல்சி என்பன தமது முறைமைகளை அறிமுகப்படுத்தியதுடன் ஊ.சே. நிதியத்திற்குப் பங்களிக்கின்ற தொழில்தருநர்களை அவற்றின் வாடிக்கையாளர்களாகக் கொண்டவர்களுக்கு பெறுமதிகூட்டப்பட்ட பணிகளை வழங்குவதற்காக ஊ.சே. நிதியத் திணைக்களத்துடன் சேகரிப்பு முகவர்களாக இணைந்து கொண்டன.

மேலும், நடைமுறையிலுள்ள இ-கூற்று முறைமையின் வினைத்திறனை மேம்படுத்தும் நோக்கில், இலங்கை மத்திய வங்கியின் தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தின் உதவியுடன் உறுப்பினர் விபரங்களின் அதேநேர வேறுபாடுகளுக்கான புதிய மாதிரியொன்று 2014இல் அறிமுகப்படுத்தப்பட்டது. பெறுமதிமிக்க உறுப்பினர் விபரங்களை தன்னியக்கப்படுத்தல் மற்றும் உறுப்பினர் கணக்குகளின் இற்றைப்படுத்தல் செய்முறைகளை விரைவுபடுத்தல் போன்றவற்றின் மூலம் புதிய மாதிரியானது இ-கூற்றுச் செய்முறையின் கைகளினால் செய்யப்படும் தலையீட்டினைக் குறைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும், பங்குபற்றுகின்ற வர்த்தக வங்கிகள், புதிய வசதிகளை வழங்குவதற்குத் தேவைப்படுகின்ற தகவல் தொழில்நுட்ப முறைமைகளை மாற்றியமைக்கும் செயல்முறையிலிருந்த வேளையில், வேறு இரண்டு வர்த்தக வங்கிகள் (தேசிய அபிவிருத்தி வங்கி மற்றும் செலான் வங்கி) அவர்களது வாடிக்கையாளர்களுக்குப் பணிகளை வழங்குவதற்கு அவர்களின் தகவல் தொழில்நுட்ப முறைமைகளை அபிவிருத்தி செய்யும் செயல்முறையில் இருந்தன. இப்புதிய மாதிரி 2015இன் முதலாம் காலாண்டுப் பகுதியில் நடைமுறைக்கிடப்படும்.

தொழில்தருநர்கள் மாதாந்த பங்களிப்புக்களை அவர்களின் வங்கியிலிருந்து நேரடியாக ஊ.சே.நிதியத்தின் வங்கிக் கணக்கிற்கு மாற்றல் செய்வதற்கு இயலச் செய்கின்ற நேரடி பற்று கொடுப்பனவு திட்டமானது தொடர்ந்த வேளையில் பங்களிப்பு விபரங்களை மின்னஞ்சலூடாக நேரடியாக ஊ.சே.நிதியத்திற்கு அனுப்புவதனையும் இயலச் செய்தது.

2014 இறுதியில், இத்திட்டத்தின் கீழ் 3,706 தொழில்தருநர்கள் உறுப்பினர்களின் பங்களிப்பு விபரங்களையும் கொடுப்பனவுகளையும் கணனி வழியூடாக உடனடியாக அனுப்புவதற்காக பதிவு செய்திருக்கின்றனர். மொத்த 2.4 மில்லியன் செயற்படும் உறுப்பினர்களில் தற்பொழுது 44 சதவீதத்தினரை உள்ளடக்கியுள்ள இவ்வசதியானது உறுப்பினர் கணக்குகளை உடனடியாகவும் துல்லியமாகவும் இற்றைப்படுத்துவதற்கு ஊ.சே. நிதியத்தினை இயலச் செய்கிறது.

2014ஆம் ஆண்டுப் பகுதியில் தொழில் திணைக்களம் ஊழியர்களுக்கும் அலுவலர்களுக்கும் இ-கூற்று முறைமை பற்றி ஊ.சே. நிதியத் திணைக்களம் 27 விழிப்புணர்வு பிரச்சார நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்தரங்குகளை நடாத்தியது. இதன் விளைவாக, முறைமைகளுடன் பதிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை 2013 இறுதியில் 1,868 இலிருந்து 2014 இறுதியில் 3,706 இற்கு அதிகரித்தது.

**உ) ஊழியர் சேமநிதிய உறுப்பினர்களின் மீள்பதிவு**

2009இல், ஊழியர் சேம நிதிய உறுப்பினர்களுக்கு வினைத்திறன் மிக்க பணியினை வழங்கும் நோக்குடன் அவர்களின் பெயரினை அவர்களது தேசிய அடையாள அட்டையில் காணப்படுகின்றவாறு மீள்பதிவு செய்து கொள்வதற்காகவும் தேசிய அடையாள அட்டை இலக்கத்தினை தனித்துவ அடையாள இலக்கமாக அவர்களுக்கு வழங்குவதற்காகவும் மேற்கொள்ளப்பட்டுவரும் ஊ.சே. நிதிய உறுப்பினர்களின் மீள்பதிவு, ஊ.சே. நிதியத் திணைக்களத்தினாலும் தொழில் திணைக்களத்தினாலும் கூட்டாக மேற்கொள்ளப்பட்டுவரும் சிறப்புச் செயற்றிட்டமாகும். இது, இரண்டு நிறுவனங்களும் பொதுவான உறுப்பினர் மையத் தரவுத் தளத்தினைப் பயன்படுத்துவதனை இயலச் செய்யும்.

2014 இறுதியில் ஏறத்தாழ 1.6 மில்லியன் செயற்படும் ஊ.சே. நிதிய உறுப்பினர்களின் (பங்களிக்கும் உறுப்பினர்) தேசிய அடையாள அட்டை விபரங்கள் சேகரிக்கப்பட்டன. இதில் 75 சதவீதமான உறுப்பினர் கணக்குகளுக்கு (1.2 மில்லியன் கணக்குகள்) தனித்துவமான அடையாள அட்டை இலக்கங்கள் வழங்கப்பட்ட வேளையில் மீதி உறுப்பினர்கள் தொடர்பில் சேகரிக்கப்பட்ட தகவல்களுக்கும் ஏற்கனவேயிருந்த தகவல்களுக்குமிடையில் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையின் காரணமாக அவர்களின் தொழில்தருநர்களிடமிருந்து சரிபார்ப்புக்கள் பெறப்பட்டவுடன் செயன்முறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

புதிதாக இணைந்த ஊ.சே.நிதிய அங்கத்தவர்களை அதேநேர அடிப்படையில் தேசிய அடையாள அட்டை விபரங்களின் கீழ் பதிவு செய்வது 2010 நவம்பரில் ஆரம்பிக்கப்பட்டது. இதன்படி, ஒவ்வொரு மாதமும் புதிதாக இணைந்த ஊ.சே.நிதியத்திற்கு பங்களிப்பு வழங்கும் உறுப்பினர்களின் தேசிய அடையாள அட்டை விபரங்கள் மாதாந்த கண்காணிப்பு முறைமையிலிடப்பட்டன.

2014இல், 139,266 ஏற்கனவே இருக்கின்ற மற்றும் புதிய அங்கத்தவர்கள் பதிவு செய்யப்பட்டதுடன் 129,891 புதிய உறுப்பினர் பதிவகத்திற்கு சேர்த்துக்கொள்ளப்பட்டனா.

செயற்படும் உறுப்பினர்களின் முன்னைய உறுப்பினர் கணக்குகளை தனித்துவ அடையாள அட்டையுடன் இணைக்கும் வேலைகள் 2014ஆம் ஆண்டுப் பகுதியிலும் மேற்கொள்ளப்பட்டன. இதன்படி, இவ்வாண்டுப் பகுதியில் 38,694 முன்னைய உறுப்பினர் கணக்குகள் தனித்துவ அடையாள அட்டையுடன் இணைக்கப்பட்டன. இவ்வசதியானது உறுப்பினர்கள் தமது தேசிய அடையாள அட்டை இலக்கத்தினை வழங்குவதன் மூலம் இணையத்தளம் அல்லது குறுந்தகவல் செய்தியூடாக அவர்களது பல்வேறு கணக்குகளினதும் நிலுவைகளை அணுகுவதனையும் பார்வையிடுவதனையும் இயலச் செய்தது.

**ஊ) பிரதிமை ஸ்கான் செய்யும் செயற்றிட்டம்**

திணைக்களத்தில் காகிதங்களற்ற செயற்பாட்டு முறைமையை நிறுவுவதன் மூலம் பணிகளின் வினைத்திறனை மேம்படுத்தும் நோக்குடன் பிரதிமை ஸ்கான் செய்யும் செயற்றிட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

இச்செயற்றிட்டத்தின் நான்கு கட்டங்கள் வருமாறு:

I. ஏற்கனவேயுள்ள ஆவணங்களை இலத்திரனியல் வடிவமைப்பிற்கு மாற்றுதல்

II. அதேநேரத்தில் ஆவணங்களை ஸ்கான் செய்தல்

III. இ-பதிவேட்டு அறையினை நிறுவுதல் மற்றும்

IV. ஆவண முகாமைத்துவ முறைமையினை ஏற்கனவேயுள்ள ஊ.சே.நிதிய கணனி முறைமையுடன் இணைத்தல்

2014ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறு, ஊ.சே. நிதியமானது 2012 வரையான முதன்மைக் கோவைகளின் 90 சதவீதம், படிவம் ஆர்ஆர்1 இன் 100 சதவீதம், ஆர்ஆர்6 இன் 90 சதவீதம் மற்றும் படிவம் டி யின் 100 சதவீதம் போன்றவற்றை பிரதிமை செய்துள்ளது.

ஆண்டுக் காலப்பகுதியில், குறித்துரைக்கப்பட்ட விலைக்கோரல் நடைமுறைகளினூடாக பிரதிமை செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் இது தொடர்பான தரவுத்தளங்கள் போன்றவற்றைக் கணக்காய்வு செய்வதற்கான பணிவழங்குநர் (கே.பி.எம்.ஜி.) ஒருவர் தெரிவு செய்யப்பட்டார். ஆண்டின் இறுதியில் முதன்மைக் கோவைகளின் 40 சதவீதமானது கணக்காய்வு செய்து முடிவுறுத்தப்பட்டது.

இ-பதிவேட்டு அறையினை நிறுவுதலில், தேவையான எல்லா வன்பொருட்களின் கொள்வனவுகளும் இறுதிப்படுத்தப்பட்டு இ-பதிவேட்டு தீர்விற்கான (ஐபிஎம் பைல் நெற்) அணுகுமுறை ஒழுங்குபடுத்தப்பட்டதுடன் முதன்மைக் கோவையின் 80 சதவீதமான பிரதிமைகள் தொடர்புடைய பயன்படுத்துனர்களுக்கு கிடைக்கக்கூடியதாக உருவாக்கப்பட்டது. இதன் விளைவாக, பதிவுகள் திருத்தப் பிரிவின் உறுப்பினர் விபரத் திருத்தங்களின் செயற்பாடுகள் லொயிட்ஸ் கட்டடத்திற்கு வெற்றிகரமாக நகர்த்தப்பட்டது. ஐபிஎம் பைல் நெற் மீதான பயிற்சியின் பயன்படுத்துனர்களுக்கு வழங்கப்பட்டது.

ஆண்டுக் காலப்பகுதியில், விசேட கற்கை மற்றும் தற்போதுள்ள செயற்பாட்டு முறைமை மற்றும் பயன்படுத்துனர்கள் தேவைப்பாடுகள் போன்றவற்றின் விபரமான ஆய்வு போன்றவை மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் அதேநேர அடிப்படையிலான பிரதிமை செய்யப்பட்ட ஆவணங்களுக்கான முறைமை தேவைப்பாட்டு விசேட அறிக்கை மற்றும் சாதாரணத் தொழிற்பாடுகளில் காகிதாதிகள் பயன்படுத்தலைக் குறைத்தல் போன்ற வரைபு வரையப்பட்டது. தொடர்பான பயன்படுத்துனர்கள், முகாமைத்துவக் குழு மற்றும் பணி வழங்குனர்களின் பங்குபற்றுதலின் மூலம் இது தொடர்பான கலந்துரையாடல் தொடரொன்று நடத்தப்பட்டது. அறிக்கை இறுதிப்படுத்தப்பட்டு முகாமைத்துவத்தின் ஒப்புதலைப் பெற்றுக் கொள்வதற்கு முன்னர் பல எண்ணிக்கையிலான காட்சிப்படுத்தலுடன் கூடிய விரிவுரை மற்றும் செய்முறை விளக்கம் என்பன தயாரிக்கப்பட்டன. ஆண்டு இறுதியில் பணி வழங்குனர் மற்றும் செயற்றிட்டக் குழு என்பன அதேநேர அடிப்படையில் பிரதிமை செய்யப்பட்ட ஆவணங்களுக்கான ஒரு பரீட்சை இயகத்தினை ஆரம்பித்திருந்தனர்.

2015இன் முதலாம் காலாண்டின் இறுதியில், ஏஎஸ்400 முறைமைக்கு ஆவண முகாமைத்துவ முறைமையை ஒருங்கிணைக்கும் செயற்பாடு ஆரம்பிக்கப்படும்.

## 9. செலாவணிக் கட்டுப்பாடு

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம், 1953ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளின் கீழ் அதன் கடமைகளையும் நியதிப் பொறுப்புக்களையும் 2014 ஆண்டுக் காலத்தில் தொடர்ந்தும் ஆற்றியது. இவை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகளை விடுத்தல், அரச வர்த்தமானி அறிவித்தல்களை விடுத்தல், குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களின் மீது அனுமதிகளையும் உரிமங்களையும் வழங்குதல், பல்வேறுபட்ட வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்ல்களின் மீது கண்காணிப்புக்களை மேற்கொள்ளுதல் மற்றும் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளை மீறுவது தொடர்பிலான புலனாய்வுகள் என்பனவற்றினூடாக நாட்டின் பொருளாதாரத்தின் நலன்கருதி வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களின் மீது செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் கொள்கைகளை வடிவமைத்தல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. 2014இல் நடைமுறைப்படுத்தப்பட்ட கொள்கைகளின் தொகுப்பு கீழே தரப்பட்டுள்ளது.

### 9.1 பணிப்புரைகளை விடுத்தல்

2014இல் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் கீழே தொகுத்துத் தரப்பட்டுள்ளவாறு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு பன்னிரண்டு பணிப்புரைகளை விடுத்தது. இப்பணிப்புரைகள் இவ்வறிக்கையின் பகுதி III இல் காணப்படுகின்றன.

(அ) **வெளிநாட்டுப் பயண அட்டைகள்:** இலங்கையில் வதியும் தனிநபர்கள் வெளிநாட்டிற்கு பயண நோக்கத்திற்காக வெளிநாட்டுச் செலாவணியைப் பெற்றுக் கொள்வதற்கு வெளிநாட்டுப் பிரயாண அட்டைகளை வழங்க அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

(ஆ) **சிறப்பு வெளிநாட்டு முதலீட்டு வைப்புக் கணக்குகள்:** சிறப்பு வெளிநாட்டு முதலீட்டு வைப்புக் கணக்குகளில் பேண வேண்டிய ஆகக் குறைந்த மீதி ஐ.அ.டொலர் 10,000 என்கின்ற தேவைப்பாடு அகற்றப்படுகிறது.

(இ) **மாணவர் விசாவினைப் பெற்றுக் கொள்வதற்கு முன்கூட்டியே நிதிகளை அனுப்புதல்:** வெளிநாடுகளில் மாணவர் விசாவினைப் பெறுவதற்கு விண்ணப்பிக்கும் இலங்கையில் வதியும் மாணவர்கள் மீது விசா வழங்கும் அதிகாரசபை அம்மாணவர்களது வாழ்க்கைச் செலவினங்களைப் பூர்த்தி செய்வதற்கான நிதியினை முன்கூட்டியே மாற்றல் செய்ய வேண்டுமென்ற தேவைப்பாட்டினை விதித்திருப்பின் வெளிமுகப் பணவனுப்பல்களை மேற்கொள்ள அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

(ஈ) **வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள்:** இலங்கையில் வதியும் மாணவரினால் மாணவர் விசாவினைப் பெற்றுக்கொள்வதற்கு வதியும் வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்து இலங்கைக்கு வெளியே பேணப்படும் கணக்கிற்கு நிதிகளை மாற்றல் செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

(உ) **வதியும் இலங்கையரல்லாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள்:** இலங்கையில் வதியும் மாணவரினால் மாணவர் விசாவினை பெற்றுக்கொள்வதற்கு வதியும் இலங்கையரல்லாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்து இலங்கைக்கு வெளியே பேணப்படும் கணக்கிற்கு நிதிகளை மாற்றல் செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

(ஊ) **பன்னாட்டு பணி வழங்குவோர் மற்றும் அவர்களது ஊழியர்களுக்கான வெளிநாட்டு நாணயக் கணக்குகள்:** இலங்கையில் வதியும் மாணவரினால் மாணவர் விசாவினைப் பெற்றுக்கொள்வதற்கு வதியும் இலங்கையரல்லாதோர் பன்னாட்டு பணி வழங்குவோர் மற்றும் அவர்களது ஊழியர்களுக்கான வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்து இலங்கைக்கு வெளியே பேணப்படும் கணக்கிற்கு நிதிகளை மாற்றல் செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களிற்கு அனுமதி வழங்கப்படுகிறது.

(எ) **வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்குகள்:** வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்கினை வைத்திருப்பவரால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு ஒப்பந்தம் சார்பாக கணக்கிலுள்ள நிதியினைப் பயன்படுத்தி இலங்கைக்கு வெளியிலுள்ள நபருக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்ள அனுமதியளிக்கப்படுகிறது.

(ஏ) **இலங்கைக்கு வெளியே வதியும் வழங்குநர்களினால் இலங்கையில் வதியும் இறக்குமதியாளர்களுக்கான கடன் வசதிகள்:** பொருட்களின்

வழங்கலினால் அத்தகைய பொருட்கள் தொடர்பாக இலங்கையில் வதியும் இறக்குமதியாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்கான வட்டி தொடர்பான கொடுப்பனவுகளை மேற்கொள்ள அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

(ஐ) **நாணயக் கடிதங்கள்:** நாணயக் கடிதங்களை வழங்கவும் செல்லுபடியாகும் காலத்தினை நீடிக்கவும் நாணயக் கடிதத்தின் கிளை வாசகங்களைத் திருத்தவும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

(ஒ) **வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்கினை வைத்திருப்போருக்கு கடன் வசதிகள்:** வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்கினை வைத்திருப்போருக்கு எந்தவொரு நோக்கத்திற்காகவும் கடன் வழங்க அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

(ஓ) **சீன றென்மின்பி இல் கணக்குகளைத் திறந்து பேணுதல்:** அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் சீன றென்மின்பி இல் வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் அனுமதி வழங்கப்படுகிறது.

(ஔ) **பயண நோக்கங்களுக்காக வெளிநாட்டு நாணயத் தாள்களை வழங்குதல்:** இலங்கையில் வதியும் நபர்களுக்கான பயணப் படியின் ஒரு பகுதியாக ஐ.அ.டொலர் 10,000 வரையிலான அல்லது அதற்குச் சமமான வேறு ஏதேனும் மாற்றத்தக்க வெளிநாட்டு நாணயத் தாள்களை வழங்குவதற்கு அதிகாரளிக்கப்பட்ட வணிகர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

### 9.2 வர்த்தமானி அறிவித்தல்களின் வெளியீடு

2014இல் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் கீழே சுருக்கித் தரப்பட்டுள்ளவாறு ஐந்து புதிய அரச வர்த்தமானி அறிவித்தல்களை வெளியிட்டது. வர்த்தமானி அறிவுறுத்தல்கள் இவ்வறிக்கையின் பகுதி III இல் தரப்பட்டுள்ளது.

(அ) 2010, 2011 மற்றும் 2012ஆம் ஆண்டுகளில் இலங்கை அரசாங்கத்தினால் இலங்கைக்கு வெளியே வழங்கப்பட்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளை, இரண்டாந்தரச் சந்தையிலிருந்து கொள்வனவு செய்யவும் வைத்திருக்கவும் மாற்றல் செய்வதற்குமென அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு அனுமதியளிக்கப்படுகிறது (2014ஆம் ஆண்டு மாச்சு மாதம் 17ஆம் திகதியிடப்பட்ட வர்த்தமானி இலக்கம் 1854/3).

(ஆ) கல்வி நோக்கங்களுக்காக இலங்கைக்கு வெளியே தற்காலிகமாகச் சென்றிருக்கும் இலங்கையில் வதியும் ஆளொருவர் இலங்கைக்கு வெளியேயுள்ள வங்கிகளில் கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் அனுமதி வழங்கப்படுகிறது (2014ஆம் ஆண்டு மே மாதம் 28ஆம் திகதியிடப்பட்ட வர்த்தமானி இலக்கம் 1864/38).

(இ) வெளிநாட்டு முதலீட்டாளர்களிற்குப் பிணையங்கள் முதலீட்டு கணக்கினூடாக ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட பட்டியலிடப்படாத தொகுதிக் கடன்களில் முதலிடுவதற்கு அனுமதியளிக்கப்படுகிறது (2014ஆம் ஆண்டு மே மாதம் 28ஆம் திகதியிடப்பட்ட வர்த்தமானி இலக்கம் 1864/39).

(ஈ) 2012 திசெம்பர் 20ஆம் திகதி வெளியிடப்பட்ட இல. 1789/34ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் குறிப்பிட்ட வகைக் கணக்கு வைத்திருப்போர் அதிகாரமளிக்கப்பட்ட வணிகரிடம் இலத்திரனியல் நிதி மாற்றல் அட்டைகளைப் பெறுவதற்கு அனுமதியளித்தமை மூலம் திருத்தப்பட்டுள்ளது (2014ஆம் ஆண்டு மே மாதம் 28ஆம் திகதியிடப்பட்ட வர்த்தமானி இலக்கம் 1864/40).

(உ) சரக்கு அனுப்புதல் பணிகளை மேற்கொள்கின்ற இலங்கையிலுள்ள அல்லது வசிக்கின்ற நபர்கள் மீதான நிபந்தனைகள் மற்றும் தேவைப்பாடுகளை விதிக்கின்ற விதத்தில், 1990ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 20ஆம் திகதியிடப்பட்ட 641/15ஆம் இலக்கம் கொண்ட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் இரத்துச் செய்யப்பட்டது (2014ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31ஆம் திகதியிடப்பட்ட வர்த்தமானி இலக்கம் 1895/15).

### 9.3 ஒப்புதல்கள்/ அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்

(அ) **ஒப்புதல்கள்:** ஐ.அ.டொலர் 105.2 மில்லியன் முதலீடுகளை மேற்கொள்வதற்கு ஒன்பது கம்பனிகளிற்கும் வெளிநாட்டிலிருந்து ஐ.அ.டொலர் 248.5 மில்லியனை கடன் பெறுவதற்காக பதினெட்டு கம்பனிகளிற்கும் ஒப்புதல்கள் வழங்கப்பட்டன.

(ஆ) **அனுமதிப்பத்திரங்கள்/ உரிமங்கள்**

(i) 4 பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனிகளிற்கும் ஒரு சுற்றுலாப் பயண விடுதிக்கும் என ஐந்து புதிய நாணய மாற்று அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன. இதன்படி, அதிகாரமளிக்கப்பட்ட நாணய மாற்றுநர்களின் மொத்த எண்ணிக்கை 84 ஆகக் காணப்பட்டது. இது 10 உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள், 2 உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள், ஒரு சிறப்பு அங்காடி, ஒரு சுற்றுலாப் பயண விடுதி மற்றும் 70 ஏனைய பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனிகளை உள்ளடக்கியிருந்தது. மேலும், 2014 முடிவில் வெளிநாட்டு நாணயங்களை விற்பதற்கு அனுமதியளிக்கப்பட்ட நாணய மாற்றுநர்களின் மொத்த எண்ணிக்கை 5 பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனிகள், 10 உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள், 2 உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றும் ஒரு சிறப்பு அங்காடி உள்ளடங்கலாக 18 ஆகக் காணப்பட்டது.

(ii) பதினேழு புதிய கம்பனிகள் சரக்கு அனுப்பும் கம்பனிகளாக பதிவு செய்யப்பட்டதுடன் சரக்கு அனுப்புவோர்களின் மொத்த எண்ணிக்கை 555 இற்கு அதிகரித்தது.

### 9.4 புலம்பெயர்ந்தோர் நிதியின் மாற்றல்

2014ஆம் ஆண்டுக் காலப்பகுதியில், 2013 யூன் 12ஆம் நாளிற்குப் பின்னர் ஏதேனும் நாட்டில் நிரந்தர வதிவுரிமையினைப் பெற்றுள்ள இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்தோருக்கு படியினை வழங்கும் பொருட்டு 257 புலம்பெயர் தடுத்துவைத்தல் கணக்குகளைத் திறப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களிற்கு அனுமதியளிக்கப்பட்டது. மேலும், 2013 யூன் 12 இற்கு முன்னர் ஏதேனும் நாட்டில் நிரந்தர வதிவுரிமையினைப் பெற்றுள்ள இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்த 330 நபர்கள் வதிவற்றோர் தடுத்துவைத்தல் கணக்குகளினூடாக இலங்கைக்கு வெளியே நிதிகளை அனுப்புவதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

### 9.5 கண்காணிப்பு/ புலனாய்வுகள்

2014ஆம் ஆண்டுப் பகுதியில் செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளுடன் இணங்கியொழுகாத சந்தர்ப்பங்கள் தொடர்பில் 138 புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அத்தகைய மீறல்கள் தொடர்பில் தண்டப் பணமாக சேகரிக்கப்பட்ட ரூ.15.3 மில்லியன் கொண்ட தொகை திரட்டிய நிதியத்திற்கு மாற்றல் செய்யப்பட்டது. பெரும்பாலானவை வதிவோரினால் வதிவற்றோருக்குச் செய்யப்பட்ட அதிகாரமளிக்கப்படாத கொடுப்பனவுகள் தொடர்பானதாகவும், கட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களினால் அனுமதிப்பத்திரங்களின் நிபந்தனைகள் மீறப்பட்டவை தொடர்பானதாகவும் பொதுவான அனுமதிகளில் எடுத்துக்காட்டப்பட்ட நடைமுறைகளுக்கு மாறான பிணையங்கள் வழங்கப்பட்டமை மற்றும் மாற்றல் செய்யப்பட்டமை தொடர்பாகவும் காணப்பட்டன.

### 9.6 பொதுமக்கள் விழிப்புணர்வு

2014 சனவரி 01ஆம் நாளன்று வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்குவிதிகள் மீதான பொதுமக்கள் விழிப்புணர்வை அதிகரிப்பதற்காக செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் உத்தியோகபூர்வ இணையத்தளத்தினை

அறிமுகப்படுத்தியது. வங்கிகள், நிதியியல் நிறுவனங்கள், இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் உறுப்பினர்கள், கம்பனிப் பணிப்பாளர்கள், முதலீட்டாளர்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய தரப்பினர்களை இலக்கிட்டு பத்து செலாவணிக் கட்டுப்பாட்டு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் இலங்கை மத்திய வங்கியின் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையத்துடன் இணைந்து நடாத்தப்பட்டன. மேலும், நாடளாவிய ரீதியில் பல்வேறு ஆர்வலர்கள் மத்தியில் தற்போதைய வெளிநாட்டுச் செலாவணிக் கொள்கைகள் மற்றும் மூலதனக் கணக்கு கொடுக்கல்வாங்கல்களின் அண்மைய தளர்த்தல்கள் மீதான அறிவினை அதிகரிப்பதற்கு 14 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

## 10. வசதிகள் முகாமைத்துவத் திணைக்களம்

2014 ஆண்டு காலப்பகுதியில் வசதிகள் முகாமைத்துவத் திணைக்களம் இன்றியமையாத பணிகளின் தொழிற்பாட்டு நம்பகத்தன்மையை உறுதிப்படுத்திய வேளையில், இலங்கை மத்திய வங்கியின் குறிக்கோளை அடையும் விதத்தில் அலுவலர்கள் பணியாற்றக்கூடிய வசதியும் அமைதியும் நிறைந்த வேலைச் சூழலையும் பேணியது.

2014இற்கான உபாயத் திட்டத்துடன் இணங்கிச்செல்லும் விதத்தில் வசதிகள் முகாமைத்துவத் திணைக்களம் அதன் இலக்குகளை அடையும் நோக்குடன், வங்கிப் பணிமனையைப் பேணுதல் மற்றும் சுத்தமாக வைத்திருத்தல் மற்றும் ஏற்பாட்டு வசதிகளின் வழங்கல், மின்வலு, குளிரூட்டல், நீர் வழங்கல், போக்குவரத்து மற்றும் தொடர்பூட்டல் போன்ற அனைத்து இன்றியமையாத பணிகளிலும் தொழிற்பாட்டு நம்பகத்தன்மையினை உயர்ந்த தரத்தில் பேணுவது உட்பட அதனது முக்கிய தொழிற்பாடுகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. திணைக்களம் அத்தகைய வசதிகளை வழங்குவதில் பெரும்பாலும் 100 சதவீத நம்பகத்தன்மையினை அடையக்கூடியதாக இருந்தமையின் மூலம் வங்கியின் தடங்கலற்ற தொழிற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்கும் பங்களித்தது.

வசதிகள் முகாமைத்துவ திணைக்களம் செயற்றிட்டங்களின் தொழில்சார் நிபுணத்துவம் மிக்க மதிப்பீட்டுப் பொறிமுறை, செலவுச் சிக்கனமானதும் உயர்ந்த தரமானதுமான ஒப்பந்தக்காரர்களின் தெரிவு மற்றும் தேவைப்படுத்தப்பட்ட தரங்களைப் பூர்த்தி செய்யும் அதேவேளை உடன்பட்ட திகதிகளில் நிறைவு செய்யப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக செயற்றிட்டங்களின் முன்னேற்றத்தை நெருக்கமாகக் கண்காணித்தல் என்பவற்றினூடாக வினைத்திறன், செலவு சிக்கனம் மற்றும் உரிய காலத்திலான விநியோகம் என்பவற்றின் மூலம் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பணிகளுக்கு "பணத்திற்கான பெறுமதி" யை உயர்த்தக் கூடியதாகவிருந்தது.

ஆண்டுக் காலப்பகுதியில், வங்கியானது வளாகத்தினை மேம்படுத்துதல் மற்றும் அழகுபடுத்துதல் செயற்றிட்டத்தினை பூர்த்திசெய்ததன் மூலம் பல்வேறு நோக்கங்களுக்காக வங்கிக்கு விஜயம் செய்யும் பொதுமக்களுக்காக விசாலமானதும் அதிக வசதிகளுடன் கூடிய காத்திருப்போர் பகுதியை வழங்கியது.

இலங்கை மத்திய வங்கியால் கொள்வனவு செய்யப்பட்டு புதுப்பிக்கப்பட்ட 100 ஆண்டு பழமைவாய்ந்த காலனித்துவ கட்டடமான தேசிய சமவாயக் கட்டடம் என முன்னர் அழைக்கப்பட்ட சென்றல் பொயின்ட் கட்டடத்தில் நாணய அரும்பொருட்காட்சிச்சாலை மற்றும் பொருளாதார வரலாற்று அரும்பொருட்காட்சிச்சாலை அமைக்கப்பட்டது.

இலங்கை மத்திய வங்கியானது அபிவிருத்தி நிதி, வங்கித்தொழில் மற்றும் நிதியியல் நடவடிக்கைகள் மற்றும் தொடர்பான நடவடிக்கைகளிலான பொதுமக்களின் விழிப்புணர்வு என்பவற்றை மேம்படுத்துவதன் மூலம் மாகாணங்களில் அபிவிருத்தி நடவடிக்கைகளை துரிதப்படுத்துகின்ற முதன்மை நோக்கத்துடன், அதன் யாழ்ப்பாண பிரதேச அலுவலகத்தை அமைப்பதற்காக கிளிநொச்சியில் ஏறத்தாழ 18,000 சதுர அடி தளபரப்புடன் கூடிய கட்டடத் தொகுதியின் நிர்மாண வேலைகளை கணிசமானளவிற்குப் பூர்த்திசெய்தது. கிளிநொச்சியில் பிரதேச அலுவலகத்தினை அமைப்பதன் மூலம் மாகாணத்திலுள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் அதன் சேவைகளை வழங்குவதற்கு வசதியளிக்கும்.

மேலும், வங்கியானது அதன் பயிற்சி நிறுவனத்தின் நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கு இராஜகிரியவிலுள்ள வங்கித்தொழில் கற்கைகள் நிலையத்தில் புதிய கட்டடத்தொகுதியின் நிர்மாண வேலைகளை ஆரம்பித்தது.

இலங்கை மத்திய வங்கியானது அதன் தலைமையலுவலக வளாகத்தில் பல்மாடி ஊர்தி தரிப்பிடத்தின் கட்டட நிர்மாண வேலைகளை கணிசமானளவு பூர்த்திசெய்ததுடன் 2014 ஒகத்து 28 இலிருந்து வாகனங்களின் தரிப்பிற்காக இது திறக்கப்பட்டது. இது வங்கி ஊழியர்களின் நீண்ட கால தேவைப்பாட்டினை பூர்த்தி செய்வதற்கு உதவியது.

ஆண்டுக் காலப்பகுதியில், இலங்கை அரசாங்கத்திடமிருந்து இலங்கை மத்திய வங்கியால் கொள்வனவு செய்யப்பட்ட, வரலாற்று சிறப்புமிக்க கட்டடமான "வைட்வேய்ஸ் கட்டடத்தின்" உண்மைப் பெருமையை மீட்டெடுக்கும் விதத்தில் திருத்த வேலைகள் தொடர்ந்தன.

மேலும், 2014ஆம் ஆண்டில் செயற்பாட்டு இடநேர்வைக் குறைப்பதற்காக நவீன நுழைவுமுறைக் கட்டுப்பாட்டு முறைமையை நிறுவுதல், நீர் கசிவுகளைத் தடுத்தல் மற்றும் பிரதான காற்றுக் கையாளல் அலகுகளின் திருத்தங்கள் மற்றும் வாகனங்களின் தரத்தினை மேம்படுத்துவதன் மூலம் வாகனங்களின் விரைந்து செல்கின்ற தன்மையினை வலுப்படுத்துதல் போன்றவை உள்ளடங்கலாக பல செயற்றிட்டங்களை வசதிகள் முகாமைத்துவத் திணைக்களம் நிறைவு செய்திருந்தது. வங்கியின் வழமையான தொழிற்பாடுகளுக்கு மேலதிகமாக, இலங்கை மத்திய வங்கியின் அனுசரணையுடன் நடாத்தப்பட்ட பல்வேறு பன்னாட்டு மாநாடுகளுக்கும் தடங்கலற்ற போக்குவரத்துப் பணியை திணைக்களம் வழங்கியது.

## 11. நிதித் திணைக்களம்

நிதித் திணைக்களம் பன்னாட்டு கணக்கியல் நியமங்கள்/ பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமங்கள், மற்றும் நாணய விதிச் சட்டத்தின் பொருத்தமான ஏற்பாடுகளின் நியதிகளில் இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் அறிக்கையிடல் தொழிற்பாடுகளை மேற்கொள்கிறது. நிதித் திணைக்களத்தின் தொழிற்பாடுகள் இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் கூற்றுக்களைத் தயாரித்தல், மத்திய வங்கியின் வருடாந்த வரவு செலவுத்திட்டத்தினை தயாரித்தல் மற்றும் கண்காணித்தல், மத்திய வங்கியின் உள்ளக மற்றும் வெளிவாரி நிதியியல் கொடுக்கல் வாங்கல்களுக்காக ஓர் கொடுப்பனவு முறைமையைப் பேணுதல், நிதியியல் கொடுக்கல்வாங்கல்களின் உள்ளக அறிக்கையிடலுக்கான முறைமைகளைப் பேணல், 12 உள்ளக நிதியங்களின் முகாமைத்துவம், மத்திய வங்கிக்கான நிலையான சொத்துக்களின் பதிவேட்டைப் பேணுதல் மற்றும் ஊழியர் கடன்களின் தரவுத்தளத்தை பேணுதல் என்பவற்றை உள்ளடக்கியுள்ளன.

### 11.1 நிதியியல் கூற்றுக்களின் தயாரிப்பு

i) **மாதாந்த ஐந்தொகை:** 2014 ஆண்டுக் காலப்பகுதியில் நாணய விதிச்சட்ட தேவைப்பாடுகளின்படி 2013 திசெம்பர் மற்றும் 2014 இன் சனவரி தொடக்கம் நவம்பர் வரையான மாதாந்த ஐந்தொகைகள் தயாரிக்கப்பட்டு அரச வர்த்தகமானியில் வெளியிடப்பட்டன.

ii) **வருடாந்த நிதியியல் கூற்றுக்கள்:** 2002 இலிருந்து இந்நோக்கத்திற்காக பன்னாட்டு கணக்கீட்டு நியமங்களும் பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமங்களும் பின்பற்றப்பட்டு வருகின்றன. இக்கூற்றுக்கள் இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கையில் வெளியிடப்படுகின்றன. 2014 ஆண்டுக் காலப்பகுதியில் தொடர்பான கணக்கீட்டு நியமங்கள் மற்றும் தேவைப்பாடுகளுடன் இணங்கிச் செல்வதற்கு நிதித் திணைக்களம் கணக்கீட்டு முறைமை மற்றும் செயன்முறைகளை தொடர்ச்சியான

அடிப்படையில் இற்றைப்படுத்தியது. 2014ஆம் ஆண்டிற்கான மத்திய வங்கியின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் ஆண்டறிக்கையின் பகுதி II தொடக்கத்தில் தரப்பட்டுள்ளன.

**11.2 வருடாந்த வரவு செலவுத்திட்டம் மற்றும் நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்ட வரவு செலவுத்திட்டத்தினைத் தயாரித்தல்**

இலங்கை மத்திய வங்கியின் 2015ஆம் ஆண்டிற்கான வருமான மற்றும் செலவின் வரவு செலவுத்திட்டம் மற்றும் மூலதன வரவு செலவுத்திட்டம் என்பன மத்திய வங்கியின் ஒவ்வொரு திணைக்களத்தினதும் உபாயத் திட்டத்தின் கீழான செயல் நடவடிக்கைத் திட்டங்களுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் தயாரிக்கப்பட்டன. இவ்வரவு செலவுத்திட்டத்துடன் இலங்கை மத்திய வங்கியின் நடவடிக்கை ரீதியான செலவினையும் தொழிற்பாட்டு ரீதியான செலவினையும் காட்டுவதற்காக நடவடிக்கையை அடிப்படையாகக் கொண்ட மற்றும் தொழிற்பாட்டு ரீதியான வரவு செலவுத்திட்டமும் தயாரிக்கப்பட்டது. இச்செயற்பாடு 2014 ஓகத்தில் ஆரம்பிக்கப்பட்டதுடன் 2014 திசம்பரில் இறுதிப்படுத்தப்பட்டது. நாணயச் சபையின் ஒப்புதல் 2014 திசம்பரில் பெறப்பட்டதுடன் 2015 முதலாம் நாளன்று வரவு செலவுத்திட்டமானது திணைக்களங்களுக்குக் கிடைக்கக்கூடியதாகவிருந்தது. வரவு செலவுத்திட்டக் கட்டுப்பாட்டின் செயல்திறன்மிக்க கண்காணிப்பினைக் கருத்திற்கொண்டு 2014ஆம் ஆண்டிற்கான காலாண்டு வரவு செலவுத்திட்டச் செயலாற்றக் கூற்றுக்கள் திணைக்களங்களுக்கும் நாணயச் சபைக்கும் சமர்ப்பிக்கப்பட்டன.

**11.3 உள்ளக மற்றும் வெளிவாரி நிதியியல் கொடுக்கல்வாங்கல்களுக்கான கொடுப்பனவு முறைமை**

i) ஊழியர் ஊதியங்கள், அலுவலர் கடன்கள், தொழிற்பாட்டுச் செலவினங்கள் போன்றவற்றுக்கான அனைத்துக் கொடுப்பனவுகளும் 2014இல் நேர இலக்குகளுக்குள் மேற்கொள்ளப்பட்டன.

ii) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வழங்குநர்களுக்கான அனைத்து வெளிவாரிக் கொடுப்பனவுகளும் மத்திய வங்கியின் துணைநில் ஒழுங்குகள் நடைமுறைகளுக்கேற்ப மேற்கொள்ளப்பட்டன. 2014ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் 5,225 உள்நாட்டு வழங்குநர்களையும் 361 வெளிநாட்டு வழங்குநர்களையும் உள்ளடக்கிய மொத்த கொடுப்பனவுகள் 5,586 ஆகக் காணப்பட்டது.

iii) பொது திறைசேரி மற்றும் தொடர்பான செயற்றிட்டங்களுக்கான ஏறத்தாழ 2,915 பகிர்ந்தளிப்புக்கள் மற்றும் வெளிநாட்டுக் கடன்களின் மீள்கொடுப்பனவுகளின் 558 தவணைக் கொடுப்பனவுகள் என்பன 2014 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டன.

**11.4 உள்ளக நிதியங்களின் முகாமைத்துவம்**

நிதித் திணைக்களம், அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியம் பெற்றவர்களின் 6 ஓய்வூதிய நிதியங்கள், 3 மருத்துவ நன்மை நிதியங்கள் மற்றும் 3 சிறப்பு நிதியங்கள் என்பவற்றை உள்ளடக்கி 12 உள்ளக நிதியங்களை முகாமை செய்தது. காசுப் பாய்ச்சலை முகாமைப்படுத்தல், நிதியங்களின் முதலீடுகள், கொடுப்பனவுகளை மேற்கொள்ளல், கணக்குகளின் பதிவேடுகளைப் பேணுதல் மற்றும் வருடாந்த நிதியியல் கூற்றுக்களைத் தயாரித்தல் என்பன இது தொடர்பான முக்கிய தொழிற்பாடுகளாகக் காணப்பட்டன. நிதியங்கள் முக்கியமாக அரச பிணையங்கள், வங்கி வைப்புக்கள் மற்றும் உயர் வீதம் கொண்ட கம்பனித் தொகுதிக் கடன்களில் முதலீடு செய்யப்பட்டதுடன் 2014ஆம் ஆண்டிற்கான முதலீடுகள் மீதான சராசரி விளைவு வீதம் 7.31 சதவீதமாகக் காணப்பட்டது. அந்நிதியங்களின் விதிகளின் படி 2013 இற்கான இந்நிதியங்களின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் நாணயச் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டன

**அட்டவணை II-12 நிதிய முகாமைத்துவத்தின் செயலாற்றம் - 2014**

தொகை ரூ. மில்லியனில்

| நிதியங்கள் | உட் பாய்ச்சல் | வெளிப் பாய்ச்சல் | முதலீடுகள் | முதலீடுகள் (ஆண்டு இறுதி) | சராசரி விளைவு (ஆண்டுக்கு %) |
|---|---|---|---|---|---|
| ஓய்வூதிய நிதியங்கள் | 21,836.3 | 3,249.8 | 18,594.1 | 37,794.3 | 7.33 |
| மருத்துவ நிதியங்கள் | 75.0 | 0.9 | 73.1 | 112.9 | 7.73 |
| சிறப்பு நிதியங்கள் | 1,342.1 | 22.5 | 1,319.7 | 2,071.6 | 7.04 |
| **மொத்தம்** | **23,253.4** | **3,273.2** | **19,986.9** | **39,978.8** | **7.31** |

**11.5 நிலையான சொத்துக்களின் பதிவேடுகளைப் பேணுதல்**

நிதித் திணைக்களம் நிலையான சொத்துக்களின் பதிவேட்டினை இலங்கை மத்திய வங்கி பேரேட்டு முறைமையின் நிலையான சொத்துக்கள் நிரலில் பேணுகின்றது. அமைவிடங்களின் புதிய கொள்வனவுகள், அமைவிடங்களின் மாற்றங்கள், மீள்மதிப்பீடுகள், தேய்மானம் மற்றும் அகற்றல்கள் போன்ற அனைத்து மாற்றங்களும் இப் பதிவேட்டில் 2014 காலப்பகுதியில் பதியப்பட்டன. 2014 ஆண்டுக் காலப்பகுதியில் இப்பதிவேடு 1,396 பொருட்களின் கொள்வனவுடனும் 944 பொருட்களின் அகற்றல்களுடனும் இற்றைப்படுத்தப்பட்டது.

**11.6 அலுவலர் கடன்களின் தரவுத் தளத்தைப் பேணுதல்**

2014 காலப்பகுதியில் நிதித் திணைக்களம் கடன்களின் அறவிடல் செயன்முறையை வசதிப்படுத்துவதற்காகவும் ஊழியர்களுக்கும் முகாமைத்துவத்திற்கும் தகவல்களை வழங்குவதற்காகவும் தகவல் தொழிநுட்பத் திணைக்களத்தின் உதவியுடன் இலங்கை மத்திய வங்கி ஊழியர்களின் கடன் தரவுத் தளத்தை தொடர்ச்சியாகப் பேணியது.

**11.7 ஏனைய தொழிற்பாடுகள்**

**i) கொள்வனவுச் செயன்முறை**

இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்குவிதிகளின்படி, நிதித் திணைக்களத்தின் அலுவலர்கள் பொருட்கள் மற்றும் பணிகளின் கொள்வனவிற்கான அனைத்து தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள் மற்றும் விலைக்கோரல் சபைகளிலும் அளவீட்டுச் சபைகளிலும் கலந்து கொள்வதற்கு தேவைப்படுத்தப்பட்டுள்ளனர். 2014 காலப்பகுதியில் அக்கொள்வனவுகள் தொடர்பாக ஏறத்தாழ 400 விலைக்கோரல் சபைகளிலும் அனைத்து தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களிலும் கலந்து கொண்டனர்.

**ii) அறிக்கையிடல் மேம்பாடுகள்**

நிதித் திணைக்களத்தின் அறிக்கையிடல் தேவைப்பாடுகள் தொடர்பான உதவிகளுடன் கணக்கீட்டு நியமங்களுடன் இசைந்து செல்லும் விதத்தில் 2003இலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட ஓரக்கிள் பொதுப் பேரேட்டு முறைமையினை நீக்கி, தகவல் தொழில்நுட்பத்தினை அடிப்படையாகக் கொண்ட ஓர் புதிய ஒருங்கிணைகப்பட்ட பொதுப் பேரேட்டு கணக்கு முறைமையொன்று இலங்கை மத்திய வங்கியின் தகவல் தொழில்நுட்ப திணைக்களத்தினால் உள்ளக ரீதியாக விருத்தி செய்யப்பட்டதுடன் இது 2014 சனவரி 01இல் நடைமுறைக்கிடப்பட்டது. 1996 இலிருந்து வெளியாட்களுக்கு வழங்கப்பட்டிருந்த இலத்திரனியல் மனித வள முகாமைத்துவம் நீக்கப்பட்டு நிதித் திணைக்களத்தின் உதவியுடன் மத்திய வங்கியின் அலுவலர்களுக்கான புதிய சம்பளப்பட்டியல் மாதிரி மற்றும் புதிய கடன் மாதிரி போன்றவை மத்திய

வங்கியின் தகவல் தொழில்நுட்ப திணைக்களத்தினால் உள்ளக ரீதியாக விருத்தி செய்யப்பட்டது. புதிய சம்பளப்பட்டியல் மாதிரி 2015 சனவரி மாதத்திலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் மேற்கொள்ளப்பட்டது.

iii) முதலீட்டு மேற்பார்வைக் குழு

முதலீட்டு மேற்பார்வைக் குழு 2014ஆம் ஆண்டுக் காலப்பகுதியிலும் அதன் பங்களிப்பினை நிதி முகாமைத்துவ யெற்பாடுகளுக்கு தொடர்ந்து வழங்கியது. இக்குழு, மத்திய வங்கியின் நான்கு திணைக்களங்களால் முகாமை செய்யப்படும் பதினாறு நிதியங்கள் மற்றும் முதலீட்டைக் கண்காணிப்பதும் மதியுரை வழங்குவதற்கும் நாணயச் சபையால் நிறுவப்பட்டது. இம்முதலீட்டுக் குழுமம் நிதித் திணைக்களத்திற்குப் பொறுப்பான உதவி ஆளுநரினால் தலைமை தாங்கப்படுவதுடன் மாதாந்தம் சந்திப்புக்களை மேற்கொள்வதுடன் தொடர்பான திணைக்களங்களின் தலைவர்கள் மற்றும் ஏனைய அலுவலர்களுடன் இக்குழுவின் மாதாந்தக் கூட்டங்களுக்கு நிதித் திணைக்களம் செயலகப் பணிகளை வழங்குகின்றது. 2014ஆம் ஆண்டு காலப்பகுதியில் குழு 12 கூட்டங்கள் கூடியதுடன் முதலீடுகளின் சரிபார்ப்புக்களுக்காக நாணயச் சபைக்கு காலாண்டு ரீதியில் அறிக்கைகளையும் சமர்ப்பித்தது. 2014இன் இறுதியில் நிதியங்களின் மொத்தப் பெறுமதி ரூ.52.2 பில்லியனாக விளங்கியது.

## 12. நிதியியல் உளவறிதல் பிரிவு

நிதியியல் உளவறிதல் பிரிவு 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளின் கீழ் நிறுவப்பட்டுள்ளதுடன் 2007ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கை மத்திய வங்கியில் தொழிற்பட்டும் வருகிறது. நிதியியல் உளவறிதல் பிரிவின் முக்கிய தொழிற்பாடுகள் பணம் தூயதாக்கல், பயங்கரவாதத்திற்கு நிதியிடல் மற்றும் நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தில் வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ள ஏனைய சட்டத்திற்கு மாறான நடவடிக்கைகள் என்பனவற்றுடனான சாத்தியமான தொடர்புகளைக் கண்டறியும் நோக்கத்தின் பொருட்டு நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் மீதான தகவல்களைச் சேகரித்தல் மற்றும் பெற்றுக் கொள்ளுதல், மேற்குறிப்பிட்டவற்றுடன் தொடர்பான சந்தேகத்திற்குரிய நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய புலனாய்வுகள் மற்றும் அத்தகைய புலனாய்வுகளின் தகவல்களையும் விபரங்களையும் பொருத்தமான நடவடிக்கைகளுக்காக தொடர்பான சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் அத்துடன்/ அல்லது ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகாரிகளிடம் பரப்புதல் மற்றும் அறிக்கையிடும் நிறுவனங்களின் பரீட்சிப்புக்களை மேற்கொள்ளல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது. நிதிசார் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டவாறான, 2014ஆம் ஆண்டுப் பகுதியில் நிதியியல் உளவறிதல் பிரிவின் முக்கிய தொழிற்பாடுகளினதும் ஏனைய நடவடிக்கைகளினதும் முக்கிய பண்புகள் பின்வருமாறு:

### 12.1 தேசிய இடர்நேர்வு மதிப்பீட்டை நடத்துதல்

பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடல் இடர்நேர்வுகளை அடையாளம் காணவும், மதிப்பிடவும் மற்றும் புரிந்துகொள்ளவும் அத்துடன் பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடல் இடர்நேர்வைத் தடுப்பதற்கு/ தணிப்பதற்கான வழிமுறைகள் அடையாளம் காணப்பட்ட இடர்நேர்வுகளுக்கீடானவை என்பதனை உறுதி செய்வதற்காக இடர்நேர்வு அடிப்படையான அணுகுமுறையொன்றை பிரயோகிப்பதற்கும் நிதியியல் நடவடிக்கைகள் செயலணிக் குழுவின் விதந்துரைப்பு - 1 நாடுகளை கேட்டுக் கொள்கிறது. இதன்படி, இடர்நேர்வு ஒன்றின் அடிப்படையிலான பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலுக்கெதிரான கட்டமைப்பை அபிவிருத்தி செய்தல், அடையாளம் காணப்பட்ட இடர்நேர்வுகளைக் கட்டுப்படுத்த, தணிக்க மற்றும் நீக்குவதற்கு அதிக வினைத்திறனுள்ள வழிகளில் கிடைக்கக்கூடிய வளங்களை ஒதுக்குவதற்கு வசதியளித்தல் போன்ற நோக்கங்களுக்காக உலக வங்கியின் தொழில்நுட்ப உதவியுடன் பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியிடல் தொடர்பான தேசிய இடர்நேர்வு மதிப்பீடு நடத்தப்பட்டது. நிதியியல் உளவறிதல் பிரிவிற்கான ஆலோசனை சபையின் வழிகாட்டுதலின் கீழ், 23 முக்கிய அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் 80 இற்கும் மேற்பட்ட அலுவலர்களின் பங்கேற்புடன் நாட்டின் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலுக்கெதிரான ஒழுங்குபடுத்துநர் என்ற வகையில் 2014 காலப்பகுதியில் இலங்கையின் நிதியியல் உளவறிதல் பிரிவு நாட்டினுடைய தேசிய இடர்நேர்வு மதிப்பீட்டினை நடத்துவதில் முக்கிய பங்காற்றியது.

### 12.2 பரஸ்பர மதிப்பீட்டை நடத்துதல்

இலங்கை மீதான முதலாவது பரஸ்பர மதிப்பீடு 2006இல் பணம் தூயதாக்கல் மீதான ஆசிய பசுபிக் குழுமத்தினால் நடத்தப்பட்டது. பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலைத் தடுத்தல் மீதான 2012இன் புதிய நிதியியல் நடவடிக்கைகள் செயலணிக் குழுவின் நியமங்களுக் கெதிரான இலங்கையின் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலுக்கெதிரான கட்டமைப்பினை மதிப்பிடும் நோக்கத்துடன் ஆசிய பசுபிக் குழுமத்தினால் 2014இல் இலங்கை மீதான இரண்டாவது பரஸ்பர மதிப்பீடு நடத்தப்பட்டது. இலங்கையின் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கெதிரான சட்ட மற்றும் நிறுவனக் கட்டமைப்பு அத்துடன் நடைமுறைப்படுத்தலின் வினைத்திறன் என்பன ஆசிய பசுபிக் குழுமத்தின் உறுப்பு நாடுகள் மற்றும் ஆசிய பசுபிக் குழுமத்தின் செயலகத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 8 நிபுணர்களைக் கொண்ட குழுவினால் மதிப்பிடப்பட்டன. பரஸ்பர மதிப்பீட்டு செய்முறையின் இறுதிக் கட்டத்தில், மேற்கூறப்பட்ட நிபுணர்கள் குழு இலங்கைக்கு விஜயம் செய்து அரச மற்றும் தனியார் துறை ஆகிய இரண்டினையும் பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கையின் 50இற்கும் மேற்பட்ட நிறுவனங்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொள்வதன் மூலம் தலத்திலான மீளாய்வுகளை நடத்துவதனை இலங்கையின் நிதி உளவறிதல் பிரிவு வசதிப்படுத்தியது.

### 12.3 தகவல்களை திரட்டுதல், புலனாய்வு செய்தல் மற்றும் பரப்புதல்

உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள், உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள், பங்குத்தரகர் நிறுவனங்கள் மற்றும் காப்புறுதிக் கம்பனிகள் என்பன ரூ.1.0 மில்லியன் மற்றும் அதற்குக் கூடுதலான அல்லது அதற்குச் சமமான வெளிநாட்டு நாணயங்களிலான காசுக் கொடுக்கல் வாங்கல்களையும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு இலத்திரனியல் நிதிய மாற்றல்களையும் நிதியியல் உளவறிதல் பிரிவின் அதேநேர கணனி வழியூடான தகவல் முகாமைத்துவ முறைமையான “லங்கா பின்” இனூடாக நிதியியல் உளவறிதல் பிரிவிற்குத் தொடர்ந்தும் அறிக்கையிட்டன. அதிகாரமளிக்கப்பட்ட நாணய மாற்றுநர்கள், தமது ரூ.1.0 மில்லியன் மற்றும் அதற்குக் கூடுதலான அல்லது அதற்குச் சமமான வெளிநாட்டு நாணயங்களிலான காசுக் கொடுக்கல்வாங்கல்களை அதிகாரமளிக்கப்பட்ட நாணய மாற்றுநர் துறையைக் கண்காணித்து ஒழுங்குமுறைப்படுத்துகின்ற செலாவணிக் கட்டுப்பாட்டாளருக்கூடாக அறிக்கையிட்டன. அதற்கமைய, 2014ஆம் ஆண்டுப்பகுதியில் ரூ.5.5 மில்லியனுக்கு மேற்பட்ட காசு/ நிதிய மாற்றல்களும் 718 ஐயத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்களும் அறிக்கையிடப்பட்டன. பூர்வாங்கப் புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் 189 ஐயத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்கள், மேலதிகப் புலனாய்வுகளுக்காக சட்ட நடைமுறைப்படுத்தல் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட புலனாய்வுகளின் அடிப்படையில் 2014 இறுதியில் சட்டமா அதிபர் திணைக்களம் பணம் தூயதாக்கலுக்கெதிராக 7 குற்றச்சாட்டுக்களையும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலுக்கெதிரான 3 குற்றச்சாட்டுக்களையும் தாக்கல் செய்துள்ளது.

### 12.4 அறிக்கையிடும் நிறுவனங்களின் பரீட்சிப்புக்கள்

2014ஆம் ஆண்டுப் பகுதியில் நிதியியல் உளவறிதல் பிரிவானது, வங்கித்தொழில் மற்றும் நிதியியல் கம்பனித்துறை நிறுவனங்கள்

பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியிடல் என்பனவற்றின் இடர்நேர்வுகளுக்குள்ளாகும் தன்மை மற்றும் நிதிசார் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டம் மற்றும் நிதியியல் உளவறிதல் பிரிவினால் விடுக்கப்பட்ட ஏனைய விதிகள் மற்றும் பணிப்புரைகளுடன் இணங்கியொழுகாமை என்பனவற்றை மதிப்பிடுவதற்காக அவற்றின் மீது 4 பரீட்சிப்புக்களை நடத்தியது. மேலும், நிதியியல் உளவறிதல் பிரிவானது 2014 காலப்பகுதியில் அறிக்கையிடும் நிறுவனங்களுடன் 5 தனித்தனி சந்திப்புக்களை நடத்தியது.

### 12.5 ஏனைய நடவடிக்கைகள்

**(i) புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையொப்பமிடல்:**

நிதிசார் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளுக்கிணங்க, ஐயத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக புலனாய்வு செய்வதற்கும் வழக்குத் தொடுப்பதற்குமான நோக்கங்களின் பொருட்டு தகவல்களையும், புலனாய்வினையும் பகிர்ந்து கொள்வதற்கு வசதியளிக்கும் ஒரு பொறிமுறையாக நிதியியல் உளவறிதல் பிரிவு இவ்வாண்டுப் பகுதியில் அல்பானியா, பெரு மற்றும் மியன்மார் போன்ற நாடுகளின் நிதியியல் உளவறிதல் பிரிவுகளுடன் 3 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டது. இதற்கமைய, அத்தகைய கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் மொத்த எண்ணிக்கை 2014 இறுதியில் 27 இற்கு அதிகரித்தது.

**(ii) நிறுவன ரீதியாக இயலாற்றலைக் கட்டியெழுப்புதல் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்:**

பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடல் தொடர்பான கொடுக்கல்வாங்கல்கள் என்பனவற்றைக் கண்டுபிடித்தல், அறிக்கையிடல் மற்றும் பகுப்பாய்வு செய்தல் என்பன தொடர்பான விழிப்புணர்வினை அதிகரிக்கும் தொடர்ச்சியான முயற்சியாக இவ்வாண்டுப் பகுதியில் நிதியியல் உளவறிதல் பிரிவானது 22 விழிப்புணர்வு/ பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியதுடன் இவற்றில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் போன்றவற்றிலிருந்து 1,200 இற்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டனர். இவ்வாண்டுப் பகுதியில் நிதியியல் உளவறிதல் பிரிவு, உயர் நீதிமன்றங்களின் மாண்புமிகு நீதிபதிகள், மாவட்ட நீதிமன்றங்களின் மாண்புமிகு நீதிபதிகள் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் நீதவான்கள் மற்றும் அலுவலர்கள் போன்றோருக்காக 3 சிறப்பு நிகழ்ச்சித்திட்டங்களையும் நடத்தியது.

**(iii) பன்னாட்டு உறவுகள்:**

(அ) எக்மன்ட் குழுமம்: நிதியியல் உளவறிதல் பிரிவு புலனாய்வுகளை மேற்கொள்ளவும், உறுப்பு நாடுகளின் புலனாய்வு மீதான சான்றுகளைத் திரட்டிக் கொள்வதற்காக உறுப்பு நாடுகளை ஒன்றிணைப்பதற்குமாக உலகளாவிய ரீதியில் 139 நிதியியல் உளவறிதல் பிரிவுகளைக் கொண்ட சங்கமான எக்மன்ட் குழுவின் உறுப்பினர்களிடமிருந்து நிதியியல் உளவறிதல் பிரிவு உதவிகளைப் பெற்றுக் கொண்டது.

2014ஆம் ஆண்டில் வெளிநாட்டு எக்மன்ட் குழுவின் உறுப்பினர்களுடனான நிதியியல் உளவறிதல் பிரிவின் தகவல் பரிமாற்ற நிகழ்வுகளின் மொத்த எண்ணிக்கை 18 ஆக விளங்கியது.

(ஆ) பணம் தூயதாக்கல் தொடர்பான ஆசிய பசுபிக் குழுமம்: பணம் தூயதாக்கல் தொடர்பாக, ஆசிய பசுபிக் குழுமத்தின் நிறுவன உறுப்பினரென்ற முறையில் ஆசிய பசுபிக் குழுமத்தில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி நிதியியல் உளவறிதல் பிரிவின் அலுவலர்கள் 2014 யூலையில் சீனாவில் மக்கோவா எஸ்ஏஆர் இல் நடைபெற்ற 17ஆவது ஆண்டுக் கூட்டத்திலும் மற்றும் 2014 நவெம்பரில் தாய்லாந்தில் நடைபெற்ற 17ஆவது ஆண்டு மரபுரிமைகள் மற்றும் தொழிநுட்ப செயலமர்விலும் கலந்து கொண்டனர்.

## 13. நிதியியல் துறை ஆராய்ச்சித் திணைக்களம்

நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுத் திணைக்களம், தனிப்பட்ட நிதியியல் நிறுவன மட்டத்தில் முழுமையான மேற்பார்வை மற்றும் உள்நாட்டு நிதியியல் முறையின் உறுதிப்பாட்டின் மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தைக் கொண்டுள்ள பரந்த சந்தை மற்றும் பொருளாதாரக் காரணிகள் போன்றவற்றின் மீது கவனத்தினைச் செலுத்துகின்ற அனைத்தையுமுள்ளடக்கிய பேரண்ட முன்மதியுடைய அணுகுமுறையினை நடைமுறைப்படுத்தும் நோக்கில் 2007இல் நிறுவப்பட்டது. நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினைப் பேணிப் பாதுகாப்பது நாணய விதிச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி மத்திய வங்கியின் சட்ட ரீதியான குறிக்கோள்களில் ஒன்றாகும்.

திணைக்களத்தின் தொழிற்பரப்பானது, உள்நாட்டு நிதியியல் துறையின் அதிகரித்த விரைவான அபிவிருத்திகளைக் கருத்தில் கொண்டு விரிவாக்கப்பட்டது. இதன்படி, அனைத்தையுமுள்ளடக்கிய பகுப்பாய்வை நடத்துதல் மற்றும் நிதியியல் துறை தொடர்பான ஆராய்ச்சிகள் போன்றவையும் திணைக்களத்தின் தொழிற்பரப்புக்குள் சேர்த்துக் கொள்ளப்பட்டதுடன் இதன் காரணமாக 2014 நவெம்பர் 07ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் இத்திணைக்களம் ‘ நிதியியல் துறை ஆராய்ச்சித் திணைக்களம்’ என மீளப் பெயரிடப்பட்டது.

2014இல் நிதியியல் துறை ஆராய்ச்சித் திணைக்களம் அதன் கடமைகளுடன் இணங்கிச் செல்லும் விதத்தில், நிதியியல் துறை அபிவிருத்திகள் தொடர்பான தலைப்புக்களில் ஆராய்ச்சிகளை நடத்தியதுடன், நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை வலுப்படுத்தியமை, உள்நாட்டு நிதியியல் முறைமையின் இடர்நேர்வுகள் மற்றும் பாதிக்கக்கூடிய தன்மை போன்றவற்றை மதிப்பீடு செய்வதற்கான பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்பினை செயற்படுத்துதலைத் தொடர்ந்து மேற்கொண்டதுடன் அத்தகைய ஆராய்வுகள் மற்றும் கண்காணிப்புக்கள் மூலமான முடிவுகளின் அடிப்படையில் பொருத்தமான கொள்கை வழிமுறைகளை முன்மொழிதல் போன்றவையும் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் கொள்கை வகுப்போர் மற்றும் ஏனைய ஆர்வலர்கள் மத்தியில் நிதியியல் துறை அதேபோல் நிதியியல் முறைமை உறுதிப்பாடு தொடர்பான அபிவிருத்திகள் பற்றிய விழிப்புணர்வை அதிகரிக்கும் நடவடிக்கைகளும் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டன.

### 13.1 இவ்வாண்டின் நடவடிக்கைகள்

**(அ) ஆராய்ச்சி**

2014ஆம் ஆண்டு காலப்பகுதியில் 04 ஆராய்ச்சி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த ஆய்வுகள்: (i) நிதியியல் துறையின் ஒருங்கிணைப்பு - நாட்டின் அனுபவம், (ii) இலங்கை ரூபாவின் மீதான அழுத்தத்தை மதிப்பிடுவதற்கான ஒரு முன் எச்சரிக்கை முறைமை மாதிரி (iii) இலங்கையின் வங்கித்துறையில் பரவக்கூடிய இடர்நேர்வை பகுப்பாய்வு செய்வதற்கான வலையமைப்பு பகுப்பாய்வு அணுகுமுறை மற்றும் (iv) நிதியியல் சாதனமொன்றாக வீட்டுத்திட்டக்கடன் ஆகிய தலைப்புக்களில் காணப்பட்டன.

**(ஆ) பேரண்ட - முன்மதியுடைய கண்காணிப்பு**

திணைக்களமானது 2014இல் உள்நாட்டு நிதியியல் முறைமை மீது பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்பைத் தொடர்ந்தும் செயற்படுத்திய வேளையில் அத்தகைய கண்காணிப்புப் பொறிமுறையை வலுப்படுத்தியது. அத்தகைய கண்காணிப்புக்களின் முதன்மைக் குறிக்கோள் யாதெனில் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினைப் பேணுதல் மற்றும் உண்மைப் பொருளாதாரத்தில் மறைமுக தாக்கத்தைக் கொண்டுள்ள பிரதான நிதியியல் சாதனங்கள் மற்றும் பணிகளின் ஏற்பாடுகளின் தடைகளின் தாக்கம் மற்றும் நிகழ்வு குறைத்தல் போன்ற இலக்குகளின் மூலம் முறைமைசார் இடர்நேர்வுகளை மட்டுப்படுத்துவதாகும். 2014இல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்பானது பிரதானமாக மூன்று தூண்களை

அடிப்படையாகக் கொண்டிருந்தது. அவையாவன முறைமையைப் பாதிக்கக்கூடியதன்மையை மதிப்பிடல் மற்றும் ஆரம்பத்திலிருந்து நிதியியல் முறைமைக்கான அச்சுறுத்தல்களை அடையாளம் காணுதல், பேரண்ட நிதியியல் அதிர்வுகளுக்குள்ளாகக்கூடிய தன்மையினை மதிப்பீடு செய்தல் மற்றும் தனிப்பட்ட நிறுவனங்கள் மற்றும் சந்தைகள் என்பனவற்றிற்கிடையிலான தொடர்பின் காரணமாக நிதியியல் முறைமைக்குள் கசியக்கூடிய சாத்தியமான விளைவுகளின் தாக்கத்தினை மதிப்பிடுதல் என்பனவாகும்.

இதன்படி, நிதியியல் துறை ஆராய்ச்சித் திணைக்களமானது இலங்கை மத்திய வங்கியின் தொடர்பான திணைக்களங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கிக்கு வெளியேயுள்ள ஏனைய நிறுவனங்கள் போன்றவற்றிடமிருந்து தேவையான மற்றும் கிடைக்கக்கூடிய தரவுகளைத் திரட்டியது. இத்தரவுகளானது பிரதானமாக, வங்கிகள் மற்றும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள், கம்பனித் துறை, கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள், பேரண்டப் பொருளாதாரச் செயலாற்றம் மற்றும் பணம் மற்றும் மூலதனச் சந்தைகள் என்பவற்றின் ஆற்றல்வாய்ந்ததன்மை மற்றும் இடர்நேர்விற்கு உள்ளாகும்தன்மையுடன் தொடர்புபட்டிருந்தது. இந்தத் தரவுகளைப் பயன்படுத்தி நிதியியல் துறை ஆராய்ச்சித் திணைக்களமானது வங்கித்தொழில் ஆற்றல்தன்மைச் சுட்டெண், நிதியியல் சந்தை உறுதிப்பாட்டு குறிகாட்டி, பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டுக் குறிகாட்டி உட்பட பல்வேறு குறிகாட்டிகளை இற்றைப்படுத்தியதுடன் நிதியியல் முறைமையின் முறைமை அடிப்படையிலான அறிகுறிகள் மற்றும் பாதிக்கக்கூடியதன்மை மற்றும் நிதியியல் முறைமைக்கு ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்கள், குறிப்பிட்ட பேரண்ட நிதியியல் அதிர்வுகளுக்குள்ளாகக் கூடியதன்மை போன்றவற்றை அடையாளம் காண்பதற்காக நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக் குறிகாட்டியையும் தொகுத்தது. இலங்கையிலுள்ள கம்பனித் துறைகளின் கொடுகடன் நம்பகத்தன்மையை மதிப்பிடுவதற்காக திணைக்களமானது காலாண்டு அடிப்படையில் கம்பனிக் கொடுகடன் நம்பகத்தன்மை குறிகாட்டியைத் தொகுத்தலையும் தொடர்ந்தது.

ஆண்டுக் காலப்பகுதியில் தனிப்பட்ட வங்கிகளிலிருந்து நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டின் மீது ஏற்படக்கூடிய சாத்தியமான கசிவுகளினது விளைவுகளின் தாக்கத்தினை மதிப்பிடும் நோக்குடன், திணைக்களமானது, கொடுகடன் இடர்நேர்வு, சந்தை இடர்நேர்வு மற்றும் திரவத்தன்மை இடர்நேர்வு போன்ற வங்கித்தொழில் துறைக்கான நுண்பாக அழுத்தப் பரீட்சிப்புக்களை மேற்கொண்டது. ஒட்டுமொத்த முறைமை உறுதிப்பாட்டின் மீது வங்கித்தொழில் துறையின் கொடுகடன் இடர்நேர்வின் குறிப்பிட்ட தாக்கத்தை மதிப்பிடுவதற்காக பேரண்ட அழுத்தப் பரீட்சிப்புகளும் மேற்கொள்ளப்பட்டன.

**(இ) வெளியீடுகள்**

2013 இற்கான நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு மீளாய்வு, 2014 யூனில் வெளியிடப்பட்டது. நிதியியல் முறைமை ஆராய்ச்சி திணைக்களமானது ஆண்டறிக்கை - 2013இல் உள்ள “நிதியியல் துறை செயலாற்றம் மற்றும் முறைமை உறுதிப்பாடு” எனும் அத்தியாயத்தையும், அண்மைக்கால பொருளாதார அபிவிருத்திகள் - 2014இல் உள்ள “நிதியியல் துறை அபிவிருத்திகள் மற்றும் உறுதித்தன்மை” எனும் அத்தியாயத்தையும் தொகுத்திருந்தது.

**(ஈ) நிதியியல் முறைமை உறுதிப்பாடு மீதான குழுக்களை ஒருங்கிணைத்தல்**

நிதியியல் உறுதிப்பாட்டு ஆராய்ச்சித் திணைக்களம் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக்குழு மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு ஆலோசனைக்குழு போன்றவற்றின் செயலகமாக தொடர்ந்தும் பணியாற்றியது.

**(உ) ஏனைய செயற்பாடுகள்**

நிதியியல் உறுதிப்பாட்டு ஆராய்ச்சித் திணைக்களம், ஏனைய திணைக்களங்கள் மற்றும் முகவர்களுக்கு அவர்களின் கிரமமான அறிக்கைகள், வெளியீடுகள் மற்றும் அவர்களின் வினைத்திறனான செயற்பாடுகளுக்கு பங்களித்ததனூடாக தொடர்பான இடர்நேர்வு அறிக்கைகள் மற்றும் தகவல்களையும் தொடர்ந்து வழங்கியது. மேலும், தேவையான கொள்கை வழிமுறைகளை மத்திய வங்கி எடுப்பதனை இயலச் செய்வதற்காக தனியார் துறை கொடுகடனின் மெதுவான வளர்ச்சி தொடர்பில் விசேட கற்கையொன்றை நிதியியல் உறுதிப்பாட்டு ஆராய்ச்சித் திணைக்களம் நடத்தியது.

## 14. ஆளுநர் செயலகம்

ஆண்டுக் காலப்பகுதியில் ஆளுநர் செயலகத் திணைக்களம் ஆளுநரின் தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் செயலாற்றத்தினை வசதிப்படுத்துவதற்கு செயலக மற்றும் உபசரணை உதவிகளை வழங்கியது. வழங்கப்பட்ட செயலக உதவிகள் சந்திப்புக்கள் மற்றும் கூட்டங்களினை அட்டவணைப்படுத்தல், காட்சிப்படுத்தலுடன் கூடிய விரிவுரைகள் உரைகள், குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள் போன்றவற்றைத் தயாரித்தல் மற்றும் தொகுத்தல் அத்துடன் நிதியியல் சந்தைத் தகவல், ஊடகச் செய்திகள் மற்றும் ஏனைய அறிக்கைகளினை வழங்குதல் என்பவற்றை உள்ளடக்குகின்றது. உபசரணைப் பணிகள், ஆளுநரின் உள்ளக மற்றும் வெளிநாட்டுப் பயணங்களை ஒழுங்குபடுத்தல், ஆளுநர் மற்றும் பிரதி ஆளுநர்களினால் மேற்கொள்ளப்படும் தொழிற்பாடுகள், ஆளுநர் மற்றும் வங்கியின் மிக முக்கிய விருந்தினர்களுக்குப் பணிகளை வழங்குதல் போன்றவற்றினை உள்ளடக்குகின்றது.

2009ஆம் ஆண்டு யூன் 29ஆம் நாளன்று நிறுவப்பட்ட ஆளுநர் செயலகத் திணைக்களம் 2015ஆம் ஆண்டு பெப்புருவரி 9ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் மூடப்பட்டது. இதன் தொழிற்பாடுகள் செயலகத் திணைக்களத்திடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## 15. மனித வளங்கள் முகாமைத்துவம்


மனிதவளத் திணைக்களத்தின் உபாயக் குறிக்கோளானது தோற்றம் பெற்றுவருகின்ற சவால்களுக்கு மத்தியிலும் இலங்கை மத்திய வங்கியின் ஒட்டுமொத்த குறிக்கோள்களை எய்துவதற்குப் பங்களிக்கக்கூடிய உயர்ந்த உற்பத்திறனும் செயலூக்கமும் கொண்ட முயற்சியுடன் கூடிய குழுவாகச் செயற்படும் ஊழியர்களின் கிடைப்பனவினை உறுதிப்படுத்துவதாகும். 2014இலும், மனிதவளத் திணைக்களம் உபாய மற்றும் செயற்பாட்டு மனிதவள முகாமைத்துவ செயற்பாடுகளை தொடர்ந்து மேற்கொண்ட வேளையில் சந்தையின் சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றியது. ஆண்டுக்காலப்பகுதியில் ஊழியர்களின் அறிவு, திறன் மற்றும் போட்டித்தன்மை என்பவற்றை அதிகரித்து அதிக உற்பத்தித்திறன் மற்றும் வினைத்திறனுடன் அவர்களின் கடமைகளை மேற்கொள்ளச் செய்வதில் மனித வள திணைக்களம் முக்கிய கவனம் செலுத்தியது. இதன்படி, இலங்கை மத்திய வங்கியின் உபாயத் திட்டமிடலில் அடையாளம் காணப்பட்ட உபாயங்களுடன் இசைந்து செல்லும் விதத்தில் மனித வளத் திணைக்களத்தின் முக்கிய தொழிற்பாடுகளாக பயிற்சியளித்தல் மற்றும் அபிவிருத்தி, செயலாற்ற முகாமைத்துவம், தொடர்ச்சியான திட்டமிடல் மற்றும் பதவி உயர்வுகள், ஆட்சேர்ப்பு, வேலைச் சுழற்சி அனைத்து உள்ளக ஆர்வலர்களுடனும் நெருக்கமான உறவு முறைகளைப் பேணுதல் மற்றும் ஏனைய பொது நிர்வாக நடவடிக்கைகள் என்பன காணப்பட்டன.

### 15.1 மனித வளங்கள் அமைப்பு

2014 இறுதியில் இலங்கை மத்திய வங்கியின் ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை 1,483 ஆக இருந்தது. ஊழியர்கள் 675 உயர் வகுப்பு அலுவலர்களையும் 645 உயர் வகுப்பு அல்லாத அலுவலர்களையும் 161 சிற்றூழியர்களையும் 02 நிலையான கால ஒப்பந்த அடிப்படையின் கீழ் பணிகளை வழங்குகின்ற அலுவலர்களையும் உள்ளடக்கியிருந்தது. ஆண்டுப் பகுதியில் 38 உயர் வகுப்பு அலுவலர்களும் 20 உயர் வகுப்பு

அல்லாத ஊழியர்களும் 01 சிற்றூழியரும் ஓய்வு பெற்ற வேளையில் 06 உயர் வகுப்பு அலுவலர்களும் 10 உயர் வகுப்பு அல்லாத அலுவலர்களும் வங்கிப் பணியிலிருந்து இராஜினாமாச் செய்தனர்.

**வரைபடம் II-5** 2014.12.31 இல் உள்ளவாறு அலுவலர்களின் உள்ளமைப்பு




### 15.2 இலங்கை மத்திய வங்கி ஊழியர்களின் கல்வி மற்றும் தொழில்சார் நிபுணத்துவம்

இலங்கை மத்திய வங்கி தகைமை வாய்ந்த மற்றும் திறமையான அலுவலர்களைக் கொண்டதொரு குழுவைக் கொண்டுள்ளது. 2014 திசெம்பர் இறுதியில், 10 அலுவலர்கள் கலாநிதி பட்டம் பெற்றிருந்ததுடன், 554 உயர் வகுப்பு அலுவலர்கள் தமது முதற்பட்டம், பட்டப்பின் படிப்பு அல்லது தொழில்சார் நிபுணத்துவ தகைமைகளை பெற்றிருந்தனர். 2014 இன் இறுதியில் முதற்பட்டம், பட்டப்பின் படிப்பு அல்லது தொழில்சார் நிபுணத்துவ தகைமைகளை பெற்ற உயர் வகுப்பு அலுவலர்கள் மற்றும் உயர் வகுப்பு அல்லாத அலுவலர்கள் ஆகிய இரண்டு பிரிவிலுமான அலுவலர்களின் மொத்த எண்ணிக்கை 636 ஆகக் காணப்பட்டது. 2014இன் இறுதியில் இலங்கை மத்திய வங்கியின் உயர் வகுப்பு அலுவலர்களின் கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளின் விபரம் அட்டவணை II-13 இல் காட்டப்பட்டுள்ளது.

இவ்வூழியர்கள், ஒவ்வொரு திணைக்களமும் பிரதேச அலுவலகமும் அவற்றின் செயற்பாடுகளை வினைத்திறனாகவும் உற்பத்தித்திறனுடைய விதத்திலும் செயற்படுவதனை இயலச் செய்வதற்காக ஊழியர்களின் தகைமை, திறன், தகுதி மற்றும் அனுபவம் என்பனவற்றை கவனத்திலெடுத்து இலங்கை மத்திய வங்கியின் 27 திணைக்களங்கள் மற்றும் 5 பிரதேச அலுவலகங்களுக்கு நியமிக்கப்பட்டனர்.

### 15.3 மனித வளத் திணைக்களத்தின் தொழிற்பாடுகள்

#### (அ) பயிற்சி மற்றும் அபிவிருத்திகள்

பொருளியல், வங்கித்தொழில், புள்ளிவிபரவியல் மற்றும் ஏனைய தொடர்பான பாடங்களின் பரப்புக்களில், வெளிநாட்டில் அல்லது இலங்கையில் இலங்கை மத்திய வங்கியின் அலுவலர்களின் கற்றல் மற்றும் பயிற்சிகளுக்கான செலவுகளை ஏற்றுக்கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கிக்கு 1949இன் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 27ஆம் பிரிவு அதிகாரம் வழங்குகிறது. இதன்படி, 2014இல் மனித வளத் திணைக்களம், உலகளாவிய அடிப்படையிலான பொருளாதார மற்றும் நிதியியல் சூழலில் இடம்பெறுகின்ற மாற்றங்களின் மூலமான தாக்கங்களை சமாளிப்பதற்கு அலுவலர்களின் தகைமை மற்றும் திறன்களை உயர்த்திக் கொள்வதற்காக குறுகிய கால வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு பயிற்சிச் சந்தர்ப்பங்கள் வழங்குதலைத் தொடர்ந்தது. அத்துடன், அலுவலர்களின் அறிவுத்திறன் இயலளவை உயர்த்துவதற்காக நீண்ட கால வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு பயிற்சி வாய்ப்புக்களும் வழங்கப்பட்டன.

#### (i) குறுங்காலப் பயிற்சி

வழமை போன்று, 2014இன் பயிற்சித் திட்டத்தில் அட்டவணைப்படுத்தப்பட்டதனைப் போன்று, 2013இன் இறுதியில் மேற்கொள்ளப்பட்ட வருடாந்த தகைமைகாண் திட்டமிடல் செயன்முறையினூடாக அடையாளம் காணப்பட்ட வங்கி அலுவலர்களின் தகைமை இடைவெளிகளைக் குறைக்கும் நோக்குடன், 2014ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் மனித வளத் திணைக்களம் 3,046 பொருத்தமான குறுங்கால வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு பயிற்சி வாய்ப்புக்களை வழங்கியது.

#### (ii) குறுங்கால வெளிநாட்டுப் பயிற்சி

2014இல் மனித வளத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட குறுங்கால வெளிநாட்டுச் பயிற்சி வாய்ப்புக்கள், புகழ்பெற்ற வெளிநாட்டு பயிற்சி நிறுவனங்கள், இங்கிலாந்து வங்கி, டியூச் புண்டஸ் வங்கி, இந்திய றிசேர்வ் வங்கி, மலேசிய நெகரா வங்கி மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் பெடரல் றிசேர்வ் வங்கி போன்ற மத்திய வங்கிகள், பன்னாட்டு நாணய நிதியம் (ப.நா.நி), உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, தென்கிழக்காசிய மத்திய வங்கிகள், பன்னாட்டு தீர்ப்பனவிற்கான வங்கி, இந்தியாவிலுள்ள வியாபார முகாமைத்துவ தேசிய நிறுவகம், ஆசிய மற்றும் பசுபிக் பிராந்திய வேளாண்மைக் கடன் அமைப்பு வேளாண்மை

**அட்டவணை II-13** 2014.12.31இல் உள்ளவாறு மத்திய வங்கியின் உயர் வகுப்பு அலுவலர்களின் கல்வி/ தொழில்சார் நிபுணத்துவத் தகைமைகள்

| வகைகள் | ஊழியர்களின் எண்ணிக்கை | | | சராசரி வயது (ஆண்டு) | கல்வி/ தொழில்சார்நிபுணத்துவ தகைமைகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | | பட்டப்பின் படிப்பு, முதற்பட்டம் மற்றும் தொழில்சார் நிபுணத்துவ தகைமைகள் | பட்டப்பின் படிப்பு மற்றும் முதற் பட்டம் | பட்டப்பின் படிப்பு மற்றும் தொழில்சார் நிபுணத்துவ தகைமைகள் | முதற்பட்டம் மற்றும் தொழில்சார் நிபுணத்துவ தகைமைகள் | முதற் பட்டம் | தொழில்சார் நிபுணத்துவ தகைமைகள் |
| (i) உயர் அலுவலர் வகுப்பு (உ.அ.வ) தரம் IV உம் அதற்கு மேலும் | 59 | 19 | 78 | 56 | 15 | 53 | 3 | 3 | 4 | ... |
| (ii) உ.அ.வ தரம் III.2 | 42 | 14 | 56 | 52 | 8 | 32 | 1 | 1 | 14 | ... |
| (iii) உ.அ.வ தரம் III.1 | 17 | 25 | 42 | 48 | 2 | 16 | 1 | 4 | 17 | ... |
| (iv) உ.அ.வ தரம் II | 91 | 115 | 206 | 42 | 28 | 41 | 3 | 26 | 80 | 5 |
| (v) உ.அ.வ தரம் I | 136 | 157 | 293 | 40 | 10 | 19 | 2 | 54 | 87 | 25 |
| மொத்தம் | 345 | 330 | 675 | - | 63 | 161 | 10 | 88 | 202 | 30 |

மூலம்: மனிதவள அபிவிருத்தி

வங்கித்தொழிலுக்கான பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் போன்ற பன்னாட்டு நிதியிடல் முகவர்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் போன்றவற்றினால் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், செயலமர்வுகள், ஆய்வரங்குகள் மற்றும் கற்றல் விஜயங்கள் போன்றவற்றை உள்ளடக்கியிருந்தன. 2014இல் இலங்கை மத்திய வங்கியின் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட குறுங்கால வெளிநாட்டு பயிற்சி வாய்ப்புக்களின் விபரம் கீழே அட்டவணை II-14 இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை II-14** குறுகிய வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புக்கள் - 2014

| துறை | பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை |
|---|---|
| பொருளாதாரம் | 77 |
| நிதியியல் உறுதிப்பாடு | 67 |
| ஒதுக்கு முகாமைத்துவம் | 24 |
| பொதுப்படுகடன் முகாமைத்துவம்/ சொத்துப்பட்டியல் முகாமைத்துவம் | 33 |
| நாணய முகாமைத்துவம் | 3 |
| தகவல் தொழில்நுட்பம் மற்றும் கொடுப்பனவு முறைமை | 21 |
| மத்திய வங்கித்தொழில் | 24 |
| நுண்பாக நிதி | 17 |
| மனித வள முகாமைத்துவம் | 26 |
| ஏனையவை | 23 |
| **மொத்தம்** | **315** |

இலங்கை மத்திய வங்கியின் பயிற்சிக்கான துணைக் குழு, பயிற்சித் திட்டங்களினூடாக பெறப்பட்ட அறிவினையும் வெளிப்படுத்தல்களையும் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட பல்வேறு வகையான ஒப்படைகளின் மூலம் தொடர்பான அலுவலர்களினால் பெறப்பட்ட குறுங்கால வெளிநாட்டுப் பயிற்சியின் செயல்திறனை தொடர்ந்து மதிப்பிட்டது. இதன்படி, 2014ஆம் ஆண்டு காலப்பகுதியில், குறுங்கால வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றிய அலுவலர்களினால் 146 அத்தகைய ஒப்படைகள் நிறைவு செய்யப்பட்டன. நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைக்கான மேம்படுத்தப்பட்ட வழிகாட்டல்களை தயாரித்தல், அறிவைப் பகிருதல் மற்றும் பொதுமக்கள் விழிப்புணர்வு போன்ற நோக்கங்களுக்காக பயிற்சியினூடாக பெறப்பட்ட அறிவினைப் பயன்படுத்தி கருத்தரங்குகளை மேற்கொள்ளுதல் மற்றும் தற்போதுள்ள முறைமை மற்றும் செயல்முறைகளை மேம்படுத்துவதற்கான பிரேரணைகளை வரைதல் ஆகியன குறுங்கால வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் பங்குபற்றுநர்களால் தயாரிக்கப்பட்ட பிரதான பெறுமதிகூட்டல்களாகக் காணப்பட்டன. ஏறத்தாழ 30 சதவீதமான பூர்த்தி செய்யப்பட்ட ஒப்படைகள் தற்போதுள்ள முறைமை, செயற்பாடுகள் மற்றும் வழிமுறைகளை முன்னேற்றுவதுடன் தொடர்புபட்டிருந்ததுடன் இது இலங்கை மத்திய வங்கியின் ஒட்டுமொத்தச் செயலாற்றத்தை மேம்படுத்த உதவியது. 2014ஆம் ஆண்டு காலப்பகுதியில் பெறுமதிகூட்டல்கள் மற்றும் நிறைவு செய்யப்பட்ட ஒப்படைகளின் விபரம் கீழேயுள்ள அட்டவணை II-15இல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை II-15** 2013இல் குறுங்கால வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்றவர்களினால் நிறைவு செய்யப்பட்ட ஒப்படைகளும் பெறுதிகூட்டல்களும்

| வகை | ஒப்படைகளின் எண்ணிக்கை |
|---|---|
| நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைக்கான வழிகாட்டல்கள் | 4 |
| அறிவினைப் பகிர்ந்து கொள்ளுதல் மற்றும் பொதுமக்கள் விழிப்புணர்வு | 100 |
| முறைமைகள் மற்றும் செய்முறைகளை மேம்படுத்துவதற்கான முன்மொழிவுகள் | 42 |
| **மொத்தம்** | **146** |

**(iii) குறுங்கால உள்நாட்டுப் பயிற்சி**

2014 காலப்பகுதியில், மனித வளத் திணைக்களம், பிரதானமாக, இலங்கை மத்திய வங்கியின் பயிற்சி மையமாகிய வங்கித்தொழில் கற்கைகளுக்கான நிலையம் மற்றும் ஏனைய புகழ்மிக்க உள்நாட்டு நிறுவனங்கள் போன்றவற்றில் வங்கி ஊழியர்களுக்கு 1,523 குறுங்கால உள்நாட்டு பயிற்சி வாய்ப்புக்களை வழங்கியது. வங்கித்தொழில் கற்கைகள் ஆய்வுநிலையம் மற்றும் ஏனைய நிறுவனங்களால் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றிய அலுவலர்களின் எண்ணிக்கை முறையே 668 ஆகவும் 855 ஆகவும் காணப்பட்டது. உள்நாட்டு பயிற்சி வாய்ப்புக்களை வழங்கும் போது, பங்குபற்றுநர்களின் அறிவை அதிகரிப்பதனையும் செயலாற்றத்தை மேம்படுத்துதனையும் இயலச்செய்யும் விதத்தில் பொருளாதாரம், வங்கி மேற்பார்வை, நிதியியல் மற்றும் மூலதனச் சந்தை, நுண்பாக நிதி, தகவல் தொழில்நுட்பம், தொடர்பூட்டல், உள்ளகக் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவம் போன்ற துறைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது.

**(iv) செயலமர்வுகள் மற்றும் மொழிப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்**

வங்கி ஊழியர்களின் தெரிவு செய்யப்பட்ட குழுக்களின் விசேட தேவைப்பாடுகளை அங்கீகரிக்கும் வகையில், 2014இல் மனித வளத் திணைக்களம் வங்கித்தொழில் கற்கைகள் நிலையத்தின் ஒத்துழைப்புடன் தலைமைத்துவம், ஊழியர் ஈடுபாடு, ஊக்குவிப்பு, தனிநபர் வளர்ச்சி, காட்சிப்படுத்தலுடன் கூடிய விரிவுரைத் திறன் மற்றும் அறிக்கை எழுதுதல் போன்ற விடயங்கள் உள்ளடங்குகின்ற 09 செயலமர்வுகளை ஒழுங்கமைத்தது. இது 2014இல் உயர் வகுப்பல்லாத அலுவலரிலிருந்து உயர் வகுப்பு அலுவலராக பதவியுயர்த்தப்பட்ட 27 அலுவலர்களுக்காக விசேடமாக ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு மாத கால அனைத்தையுமுள்ளடக்கிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை உள்ளடக்குகிறது. தமிழ் பேசும் சமூகத்திற்கு சிறந்த பணியை வழங்கும் நோக்குடன், அரச கரும மொழிகள் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் மனித வளத் திணைக்களம் வங்கி ஊழியர்கள் தமிழ் மொழியில் சிறப்புத் தேர்ச்சியைப் பெறுவதற்கு வசதியளிப்பதற்கு தமிழ் மொழிப் பயிற்சிகளைத் தொடர்ந்தும் வழங்கியது.

மேலும், ஆண்டு காலப்பகுதியில் இலங்கை மத்திய வங்கி அலுவலர்களின் அறிவை அதிகரிப்பதனை வசதிப்படுத்துவதற்காக பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் மனித வள அபிவிருத்தித் திணைக்களத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்ட மாதாந்தப் பொருளாதார அரங்கின் கீழ் பொருளாதாரம், வங்கித்தொழில் மற்றும் நிதியியல் போன்ற காலத்திற்கேற்ற தலைப்புக்களில் தொழில்துறை நிபுணர்களினால் 09 விரிவுரைகள் வழங்கப்பட்டன.

**(v) நீண்ட காலப் பயிற்சி**

மனித வளத் திணைக்களம், உயர் வகுப்பு அலுவலர்கள் தங்களின் புலமை இயலுமையை மேம்படுத்துதலை இலக்காகக் கொண்ட அவர்களின் பட்டப்பின் கற்கைகளுக்கு அனுசரணை வழங்குதலுக்குத் தொடர்ந்தும் வசதியளித்தது. 2014 ஆண்டுக் காலப்பகுதியில், மனித வளத் திணைக்களம் ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா மற்றும் அவுத்திரேலியா போன்ற நாடுகளிலுள்ள புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களில் முனைவர் நிகழ்ச்சித்திட்டத்தினையும் முதுமானிப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களையும் தொடர்வதற்கு முறையே 05 அலுவலர்களுக்கும் 24 அலுவலர்களுக்கும் அனுசரணை வழங்கியது. அதேவேளை, 2014இல் 02 அலுவலர்கள் மற்றும் 11

அலுவலர்கள் முறையே தமது முனைவர் நிகழ்ச்சித்திட்டங்களையும் முதுமானிப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தினையும் வெற்றிகரமாக நிறைவு செய்த பின்னர் வங்கிப் பணிக்கு திரும்பினர். இலங்கை மத்திய வங்கியின் புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2010 இலிருந்து 2014 வரையான காலப்பகுதியில் பட்டபின் படிப்பைத் தொடங்கிய மற்றும் நிறைவு செய்த அலுவலர்களின் எண்ணிக்கையை கீழேயுள்ள அட்டவணை II-16 காட்டுகிறது.

**(ஆ) செயலாற்ற முகாமைத்துவம்**

இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் செயலாற்ற முகாமைத்துவ முறைமையானது ஊழியர்களின் வேலை தொடர்பான விபரணங்களைத் தயாரித்தல், உபாயத் திட்டமிடலுடன் இசைந்து செல்லும் விதத்தில் இலக்கினை நிர்ணயித்தல், தொடர்ச்சியான அடிப்படையில் செயலாற்றத்தினை கண்காணித்தல் மற்றும் செயலாற்றத்தினை மதிப்பிடுதல் போன்ற 4 படிமுறைகளைக் கொண்டுள்ளது. செயலாற்ற மதிப்பீட்டுச் செய்முறையில் ஒவ்வொரு ஊழியரதும் செயலாற்ற மட்டமானது மதிப்பீட்டு மாதிரியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செயலாற்றம், பொதுவான தகுதி மற்றும் தொழில்நுட்பத் தகுதி என்பவற்றிற்கு தரமிடல்களைக் குறித்தளிப்பதன் மூலம் மதிப்பிடப்படுகிறது. இறுதிச் செயலாற்ற தரமிடல்கள் பதவி உயர்வினை வழங்குவதற்கான பிரமாணக் கூறுகளிலொன்றாக பயன்படுத்தப்படுகின்றது.

2014இல், மனித வளத் திணைக்களம் உபாயத் திட்டமிடலில் குறித்துரைக்கப்பட்டபடி 2013ஆம் ஆண்டுக்கான அனைத்து ஊழியர்களினதும் செயலாற்ற மதிப்பீட்டினை நிறைவு செய்துள்ளது. 2014ஆம் ஆண்டிற்கான தனிப்பட்ட மற்றும் திணைக்கள ரீதியான இலக்கினை நிர்ணயிக்கின்ற செயன்முறைகள் உபாயத் திட்டமிடலில் குறித்துரைக்கப்பட்ட கால நிர்ணயத்தின்படி நிறைவு செய்யப்பட்டது. மேலும், மனித வளத் திணைக்களம் ஆண்டின் முன்னரைக் காலப்பகுதியில், ஊழியர்களின் செயலாற்ற மட்டத்தினை மதிப்பிடுவதற்கு நடைமுறைக்கிடப்பட்ட திணைக்களத்தின் நடுவாண்டுச் செயலாற்ற மீளாய்வுச் செயன்முறையை கண்காணித்தது.

**(இ) தொடர்ச்சியான திட்டமிடல் மற்றும் பதவி உயர்வுகள்**

இலங்கை மத்திய வங்கியின் செயல்திறனான தொடர்ச்சியான திட்டமிடலை உறுதிசெய்யும் விதத்தில், 2014இல் மனித வளத் திணைக்களம் 4 திணைக்களத் தலைவர்களை உதவி ஆளுநர் பதவிக்கும் 11 பிரதி திணைக்களத் தலைவர்களை மேலதிக திணைக்களத் தலைவர் பதவிக்கும் பதவி உயர்த்துவதற்கு வசதியளித்தது.

2014இல் உயர் வகுப்பல்லா அலுவலர்களை உயர் வகுப்பு அலுவலர்களாக பதவியுர்வு வழங்குவதற்கான பதவியுர்வு திட்டத்தின் கீழ், உயர் வகுப்பல்லாத அலுவலர்கள் தரம் IV மற்றும் V உள்ள 27 அலுவலர்கள் உயர் வகுப்பு அலுவலர் தரம் I இற்கு பதவி உயத்தப்பட்டனர். மேலும், பொருத்தமான பதவியுர்வு வகைகளுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் 66 உயர் வகுப்பு அலுவலர்களுக்குப் பொருத்தமான தர பதவியுர்வுகள் வழங்கப்பட்டன.

**(ஈ) ஆட்சேர்ப்பு**

2014இல் இலங்கை மத்திய வங்கியின் வசதிகள் முகாமைத்துவத் திணைக்களம், நாணயத் திணைக்களம் மற்றும் தொடர்பூட்டல் திணைக்களம் ஆகியவற்றால் வழங்கப்படும் பணிகளின் வினைத்திறனை உயர்த்துவதற்கு மனித வளத் திணைக்களம், மத்திய வங்கியின் ஆட்சேர்ப்புக் கொள்கையின் கீழ் 4 தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் 1 லிதோ மெசின் தொழிற்படுத்துநர் ஆகியோரை ஆட்சேர்ப்புச் செய்தது. மேலும், ஆண்டுக் காலப்பகுதியில், மனித வளத் திணைக்களமானது வசதிகள் முகாமைத்துவத் திணைக்களம், பாதுகாப்புப் பணிகள் திணைக்களம், அலுவலர் பணிகள் முகாமைத்துவத் திணைக்களம் மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் ஆகியவற்றுக்காக வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்ளும் அடிப்படையில் சில பணிகளைப் பெற்றுக்கொள்ள வசதிப்படுத்தியது.

**(உ) வேலைச் சுழற்சி**

பல்தேர்ச்சி தொழிற்படையினை அபிவிருத்தி செய்வதனையும் வங்கியின் ஒட்டுமொத்த உற்பத்தித்திறனை உயர்த்துவதனையும் குறிக்கோளாக் கொண்டு இலங்கை மத்திய வங்கி வருடாந்த வேலைச் சுழற்சி முறையினை நடைமுறைப்படுத்தியது. இதன்படி, 2014இல் மனிதவளத் திணைக்களம் 2014 யூலை 01 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 29 உயர் வகுப்பு அலுவலர்கள், 52 உயர் வகுப்பல்லா அலுவலர்கள் மற்றும் 14 சிற்றூழியர்களின் மாற்றலை நடைமுறைப்படுத்தியது.

**(ஊ) தொழில்தருநர் - ஊழியர் உறவுகள்**

2014இல் இலங்கை மத்திய வங்கியில் தொழில் சௌகன்யத்தினைப் பேணுகின்ற வசதி ஏற்பாட்டாளர் என்ற ரீதியில், மனித வளத் திணைக்களம் தொழிற் சங்கங்களுக்கும் முகாமைத்துவத்திற்குமிடையில் காலாந்தரக் கூட்டங்களை ஒழுங்குபடுத்தியதன் மூலம் அதனது பங்கினைத் தொடர்ந்தும் ஆற்றியது. இதன்படி, அத்தகைய 7 கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டதுடன் இது இலங்கை மத்திய வங்கியின் ஊதியம், பதவி உயர்வுகள், பயிற்சி, நலப் பிரிவு, ஆட்சேர்ப்பு மற்றும் பொதுவான நிருவாகம் தொடர்பிலான பல பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு உதவியது.

**(எ) ஏனைய பொது நிருவாகச் செயற்பாடுகள்**

2014 காலப்பகுதியில், மூத்த முகாமைத்துவம் இலங்கை மத்திய வங்கியின் பல்வேறு நிருவாக விடயங்கள் மீது முடிவுகளை கலந்தாலோசிப்பதையும் முடிவுக்கு வருதலையும் வசதிப்படுத்துவதற்காக மனித வளத் திணைக்களம் 20 பொது முகாமைத்துவக் கூட்டங்களை ஒழுங்குபடுத்தியது. ஆண்டு காலப்பகுதியில், திணைக்களத் தலைவர்கள் அவர்களின் தொடர்பான திணைக்களங்களின் நோக்கெல்லைக்குள் வரும் வேறுபட்ட விடயங்களை முகாமைத்துவத்துடன் கலந்தாலோசித்து ஒன்றுசேர்ந்த தீர்மானங்களை மேற்கொள்வதற்காக மனித வளத் திணைக்களம் திணைக்களத் தலைவர்களுக்கான பொதுத் தளத்தினை உருவாக்கும் நோக்கில் 12 திணைக்களத் தலைவர்கள் கூட்டங்களை ஒழுங்குபடுத்தியது. இந்த அரங்கு,

**அட்டவணை II-16** இலங்கை மத்திய வங்கியின் புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பட்டப்பின் படிப்பைத் தொடங்கிய மற்றும் நிறைவுசெய்த அலுவலர்களின் எண்ணிக்கை

| தகுதி | 2010 | | 2011 | | 2012 | | 2013 | | 2014 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தொடங்கியவர்கள் | நிறைவு செய்தவர்கள் | தொடங்கியவர்கள் | நிறைவு செய்தவர்கள் | தொடங்கியவர்கள் | நிறைவு செய்தவர்கள் | தொடங்கியவர்கள் | நிறைவு செய்தவர்கள் | தொடங்கியவர்கள் | நிறைவு செய்தவர்கள் |
| முதுமாணிப் பட்டம் | 15 | 6 | 17 | 10 | 18 | 17 | 11 | 19 | 24 | 11 |
| முனைவர் பட்டம் | 1 | 1 | 2 | 2 | 4 | 2 | 6 | 0 | 5 | 2 |

திணைக்களத் தலைவர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை நடைமுறைக்கிடும் செயன்முறையைக் கண்காணிப்பதற்கும் முகாமைத்துவத்திற்கு உதவியது.

**15.4 பட்டதாரிகள், பட்டதாரி மாணவர்கள் மற்றும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் மாணவர்கள் ஆகியோருக்கான பயிற்சிகள்**

இலங்கை மத்திய வங்கியின் மனித மூலதனத்தை வளப்படுத்துவதற்கு மேலாக, பட்டதாரிகளுக்கான ஆறு மாத பயிற்சி நிகழ்ச்சித்திட்டம், பட்டதாரி மாணவர்களுக்கான மூன்று மாத உள்ளகப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் இலங்கை பட்டயக் கணக்காளர் மாணவர்களுக்கான ஒரு ஆண்டு கணக்கியல் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் போன்ற இலங்கை மத்திய வங்கியின் பயிற்சிகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் பொது சமூகப் பொறுப்பு நிகழ்ச்சித்திட்டத்தினை மேற்கொள்ளுதலைத் தொடர்ந்தது. இந்த நிகழ்ச்சித்திட்டங்களின் குறிக்கோள், இலங்கை பட்டயக் கணக்காளர் பல்கலைக்கழகங்களில் கோட்பாட்டு ரீதியில் கற்ற பாடங்களின் நடைமுறை அனுபவத்தினைப் பெற்றுக் கொள்ள இளைய மற்றும் திறன்மிக்க மாணவர்களுக்கான வாய்ப்பினை வழங்குவதாகும்.

**(அ) பட்டதாரிகளுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்**

உயர் கல்வி அமைச்சின் கோரிக்கைக்கு பதிலிறுத்தும் விதத்தில், இலங்கை மத்திய வங்கியில் வேலை அனுபவத்தினை புதிய பட்டதாரிகள் பெற்றுக் கொள்வதனை வசதிப்படுத்துவதற்காக இலங்கை மத்திய வங்கி 2013இல் பட்டதாரிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களைத் தொடங்கியது. தொழில் சந்தையில் தங்களின் வேலை வாய்ப்பினை மேம்படுத்துவதற்கு பட்டதாரிகளை இயலச் செய்வதற்காக 03 உள்நாட்டுப் பல்கலைக்கழகங்களிலிருந்து 05 பட்டதாரிகள், இலங்கை மத்திய வங்கியில் 6 மாத கால வேலை அனுபவத்தினை பெற்றுக் கொள்வதற்கு வசதியளித்து 2014இல் மனித வளத் திணைக்களம் பட்டதாரிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தைத் தொடர்ந்தது.

**(ஆ) பட்டதாரி மாணவர்களுக்கான உள்ளகப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்**

பல்கலைக்கழகங்களில் பயின்ற கொள்கை ரீதியிலான கோட்பாடுகளுடன் தொடர்பானவற்றின் நடைமுறை அறிவினைப் பெறல் மற்றும் தொடர்புடைய திணைக்களங்களில் அனுபவங்களை நேரடியாக பெற்றுக்கொள்ளல் போன்றவற்றை பட்டதாரி மாணவர்கள் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பினை வழங்கும் இலக்குடன் 2011 இலிருந்து இலங்கை மத்திய வங்கி மூன்று மாத கால உள்ளகப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை நடத்துகிறது. இந்நிகழ்ச்சித்திட்டமானது தொழில் சந்தையில் பட்டதாரிமாணவர்களின் தொழில் வாய்ப்பிற்கான கேள்வியை உயர்த்துவதற்கு முதற் தேவையாக விளங்கும் அவர்களின் ஆளுமையினையும் தொழில் நிபுணத்துவத்தினையும் மேம்படுத்துவதற்கான வாய்ப்புக்களையும் வழங்குகிறது. 2014இல், 12 உள்நாட்டு பல்கலைக்கழகங்கள், 03 வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள், இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் இலங்கை சட்டக் கல்லூரி போன்றவற்றிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 116 மாணவர்களுக்கு 04 உள்ளகப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஏனைய திணைக்களங்களின் ஒத்துழைப்புடன் மனித வளத் திணைக்களத்தினால் வெற்றிகரமாக நடத்தப்பட்டன. 2011 - 2014 காலப்பகுதியில் மனித வளத் திணைக்களம் உள்ளகப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பயிற்சியைப் பெறுவதற்கு 355 மாணவர்களுக்கு வசதிப்படுத்தியுள்ளது.

**(இ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் மாணவர்களுக்கான கணக்கீட்டுப் பயிற்சி**

2014இல் மனித வளத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கியின் அனுபவம் கொண்ட பட்டயக் கணக்காளர்களின் மேற்பார்வையின் கீழ் பட்டயக் கணக்காளர் கற்கைநெறியின் சான்றிதழ் மட்டத்திற்கு பணியாற்ற வேண்டுமென்ற ஒரு ஆண்டு கட்டாயக் கல்வித் தேவைப்பாட்டினை நிறைவேற்றும் விதத்தில் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவன மாணவர்களுக்குத் தொடர்ந்தும் வசதியளித்தது. இதன்படி, ஆண்டு காலப்பகுதியில் 25 மாணவர்கள் இலங்கை மத்திய வங்கியில் கணக்கியல் பயிற்சியாளர்களாக வேலையாற்றுவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டது.

**15.5 2014ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் ஆளுநர் வெளிநாட்டில் பங்குபற்றிய கூட்டங்கள்**

1. சனவரியில் சிங்கப்பூரில் நடைபெற்ற “இலங்கையில் முதலிடுங்கள்” எனும் முதலீட்டாளர் அரங்கம் மற்றும் வாசிங்டனின் முதலீட்டாளர்கள் கூட்டத்திலும் சனவரியில் கலந்து கொண்டார்.
2. ஏப்பிறலில், லண்டன் மற்றும் வாசிங்டனின் முதலீட்டாளர் கூட்டங்கள், வாசிங்டன் டிசி இல் இடம்பெற்ற ப.நா.நிதியம்/ உலக வங்கியின் இளவேனில் கால கூட்டங்கள் மற்றும் பாங்கொங் மற்றும் லொஸ் ஏஞ்சல்ஸ் இல் நடைபெற்ற முதலீட்டாளர் கூட்டங்களிலும் கலந்துகொண்டார்.
3. மேயில், லண்டனில் நடைபெற்ற “இலங்கையில் முதலிடுங்கள்” என்ற முதலீட்டாளர் அரங்கின் பிரதான உரையை வழங்கினார்.
4. யூனிஸ், ரோமில் நடைபெற்ற “யூரேசியா” செயலமர்வின் ஆரம்ப அமர்வில் பிரதான உரையை வழங்குதல், சூரிச்சில் நடைபெற்ற 3ஆவது சுவிஸ் - இலங்கை வியாபார அரங்கில் பிரதான உரையை வழங்கல், மொங்கோலியாவுக்கான பேரண்டப் பொருளாதார வெளிப்பாடுகள் மீதான உயர்மட்ட அலுவலர்களுக்கான மாநாட்டில் உரை வழங்கல் மற்றும் சிங்கப்பூரில் முதலீட்டாளர்களுடான கூட்டங்கள்.
5. ஓகத்தில், சீனாவில் சீன மக்கள் வங்கியின் ஆளுநர் திரு. சூ சிசூசன் உடனான கூட்டம்.
6. செத்தெம்பரில், குவைத்தில் ஆசிய ஒலிம்பிக் சபை விளையாட்டு காங்கிரசின் தலைவரும் ஆசிய ஒலிம்பிக் சபையின் தலைவருமான திரு. ஷேக் அகமட் அல்-பகாட் அல்-சபாக் உடனான சந்திப்பு, நியூயோர்க்கில் நடைபெற்ற “இலங்கையில் முதலிடுங்கள்” முதலீட்டாளர் அரங்கில் முதன்மை உரை வழங்குதல், வாசிங்டனில் முதலீட்டாளர் கூட்டம் மற்றும் கொரியாவின் இன்ச்சியோன் இன் ஆசிய ஒலிம்பிக் சபையின் 33ஆவது பொதுக் கூட்டம் போன்றவற்றில் கலந்துகொண்டார்.
7. ஒத்தோபரில், இலங்கைக்கான பழமைவாத நண்பர்களின் நிகழ்ச்சியில் உரையை வழங்குதல், லண்டனில் நடைபெற்ற பழமைவாத கட்சி மாநாட்டில் “சமாதானம் மற்றும் நல்லிணக்கத்திலிருந்து சுபீட்சத்திற்கு - இலங்கை” மற்றும் அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற கம்பனி மீளாக்கல் மாநாட்டில் முதன்மை உரை வழங்கல்.
8. நவெம்பரில், இந்தியாவில் நடைபெற்ற உலகப் பொருளாதார அரங்கின் இந்திய பொருளாதார உச்சி மாநாட்டில் “நிதியியல் உள்ளடக்கம்” தொடர்பில் உரை வழங்கல்.

**15.6 பதவி உயர்வுகள்/ நியமனங்கள்**

1. திரு. பி. சமரசிறி, உதவி ஆளுநர், 2014 யூன் 01ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் பிரதி ஆளுநராக நியமிக்கப்பட்டார்.
2. உயர் வகுப்பு சிறப்புத்தர அலுவலர்களுக்கான கீழ்வரும் பதவி உயர்வுகளும் நியமனங்களும் 2014 ஓகத்து 28ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் தயாரிக்கப்பட்டது.

i. நிதி அமைச்சுக்கு விடுவிக்கப்பட்டுள்ள திரு. எஸ். ஆர் ஆட்டிகல உதவி ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

ii. திரு. எச். ஏ. கருணாரத்ன உதவி ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

iii. திரு. சி. பி. ஏ. கருணாதிலக உதவி ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

iv. திரு. டி. வசந்த உதவி ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

3. உயர் வகுப்பு அலுவலர் தரம் - IV இற்கான கீழ்வரும் பதவி உயர்வுகளும் நியமனங்களும் 2014 ஓகத்து 28ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் தயாரிக்கப்பட்டது.

i. முனைவர் எம். இசட். எம். ஆசிம் பொதுப்படுகடன் திணைக்களத்தின் பதில் மேலதிகக் கண்காணிப்பாளராக பதவி உயர்த்தப்பட்டு நியமிக்கப்பட்டார்.

ii. திரு. கே. எம். அபயகோன் மனித வளத் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக பதவி உயர்த்தப்பட்டு நியமிக்கப்பட்டார்.

iii. திரு. கே. வி. கே. அல்விஸ் தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக பதவி உயர்த்தப்பட்டு நியமிக்கப்பட்டார்

iv. திரு. கே. எச். ஏ. எஸ். ஆரியரத்ன வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக பதவி உயர்த்தப்பட்டு நியமிக்கப்பட்டார்.

v. திருமதி. கே. என். என். எம். பண்டார பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக பதவி உயர்த்தப்பட்டு நியமிக்கப்பட்டார்.

vi. திருமதி. டி. வி. எஸ். டயாவன்ச செயலகத் திணைக்களத்தின் பதில் மேலதிகச் செயலாளராக பதவி உயர்த்தப்பட்டு நியமிக்கப்பட்டார்.

vii. திரு. ஆர். எம். ஜயவர்த்தன வசதிகள் முகாமைத்துவத் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக பதவி உயர்த்தப்பட்டு நியமிக்கப்பட்டார்.

viii. முனைவர் ஆர். ஏ. பெரேரா கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக பதவி உயர்த்தப்பட்டு நியமிக்கப்பட்டார்.

ix. திரு. கே. டி. ஆர். பியதிலக பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக பதவி உயர்த்தப்பட்டு நியமிக்கப்பட்டார்.

x. திரு. ஏ. ஜி. யு. திலகரத்ன ஊழியர் சேம நிதியத் திணைக்களத்தின் பதில் மேலதிகக் கண்காணிப்பாளராக பதவி உயர்த்தப்பட்டு நியமிக்கப்பட்டார்.

xi. திரு. பி. ஏ. விஜயரத்ன நிதித் திணைக்களத்தின் பதில் மேலதிக பிரதம கணக்காளராக பதவி உயர்த்தப்பட்டு நியமிக்கப்பட்டார்

4. திரு. ஜே. பி. ஆர். கருணாரத்ன, கண்காணிப்பாளர், நாணயத் திணைக்களம், 2014 பெப்புருவரி 06ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டு, அதனைத் தொடர்ந்து 2014 ஏப்பிறல் 29ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் அதே திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

5. திரு. எச். எம். ஏக்கநாயக்க, பணிப்பாளர், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம், 2014 ஏப்பிறல் 29ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் நிதியியல் துறை ஆராய்ச்சித் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

6. திருமதி. சி. எம். டி. என். கே. செனவிரத்ன, மேலதிகக் கண்காணிப்பாளர், ஊழியர் சேம நிதியத் திணைக்களம், 2014 ஏப்பிறல் 29ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் நாணயத் திணைக்களத்தின் பதில் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டதுடன், அதனைத் தொடர்ந்து 2014 ஒத்தோபர் 29ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் அதே திணைக்களத்தின் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

7. திரு. எம். எஸ். கே. தர்மவர்த்தன, மேலதிகப் பணிப்பாளர், பிரதேச அபிவிருத்தித் திணைக்களம், 2014 ஏப்பிறல் 29ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் ஊழியர் சேம நிதியத் திணைக்களத்தின் மேலதிகக் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

8. திரு. ரி. டி. எச். கருணாரத்ன, மேலதிகப் பணிப்பாளர், மனித வளத் திணைக்களம், 2014 ஏப்பிறல் 29ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் ஊழியர் சேம நிதியத் திணைக்களத்தின் மேலதிகக் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

9. திரு. டி. எம். ரூபசிங்க, பணிப்பாளர், நிதியியல் உளவறிதல் பிரிவு, 2014 யூன் 11ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளராக நியமிக்கப்பட்டார்.

10. திரு. எச். அமரதுங்க, பணிப்பாளர், பிரதேச அலுவலகங்கள் கண்காணிப்புத் திணைக்களம், 2014 யூன் 17ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் நிதியியல் உளவறிதல் பிரிவின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

11. திரு. டி. ஏ. ஜி. கே. விஜயதுங்க, மேலதிகப் பணிப்பாளர், உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம், 2014 யூன் 17ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டதுடன் அதனைத் தொடர்ந்து 2014 திசெம்பர் 17ஆம் நாளிலிருந்து அதே திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

12. திரு. சி. என். விஜேயசேகர, மேலதிகப் பணிப்பாளர், பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம், 2014 யூன் 17ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளராக நியமிக்கப்பட்டதுடன் அதனைத் தொடர்ந்து 2014 ஓகத்து 29ஆம் நாளிலிருந்து வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையத்தின் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

13. திரு. எம். ஐ. சுபியான், பிரதம கணக்காளர், நிதித் திணைக்களம், 2014 ஓகத்து 29ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் மத்திய வங்கியின் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

14. திரு. பி. வி. எல். நந்தசிறி, மேலதிகப் பிரதமக் கணக்காளர், நிதித் திணைக்களம், 2014 ஓகத்து 29ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் அதே திணைக்களத்தின் பதில் பிரதம கணக்காளராக நியமிக்கப்பட்டார்.

15. திரு. ஏ. ஏ. எம். தாசிம், மேலதிகப் பணிப்பாளர், பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம், 2014 ஓகத்து 29ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் அதே திணைக்களத்தின் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

16. திரு. ரி. எச். பி. சரத்சந்திர, மேலதிகப் பணிப்பாளர், புள்ளிவிபரத் திணைக்களம், 2014 செத்தெம்பர் 15ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

17. திரு. கே. எச். ஏ. எஸ். ஆரியரத்ன, பதில் மேலதிகப் பணிப்பாளர், வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம், 2014 செத்தெம்பர் 15ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் புள்ளிவிபரத் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

18. திருமதி. டி. வி. எஸ். டயாவன்ச, பதில் மேலதிகச் செயலாளர், மத்திய வங்கி, 2014 செத்தெம்பர் 15ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

19. திரு. ஆர். எம். ஜயவர்த்தன, பதில் மேலதிகப் பணிப்பாளர், வசதிகள் முகாமைத்துவத் திணைக்களம், 2014 செத்தெம்பர் 15ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

20. திரு. கே. டி. ஆர். பியதிலக, பதில் மேலதிகப் பணிப்பாளர், பிரதேச அபிவிருத்தித் திணைக்களம், 2014 செத்தெம்பர் 15ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் வசதிகள் முகாமைத்துவத் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

21. திரு. எச். பீ. டி. கருணாரத்ன, மேலதிகப் பணிப்பாளர், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம், 2014 திசெம்பர் 31ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

### 15.7 ஓய்வுபெறல்கள்

1. திரு. ஏ. கமலசிறி, உதவி ஆளுநர், 2014 யூலை 21ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

2. திரு. டபிள்யு. ஆர். ஏ. தர்மரத்ன, பணிப்பாளர், நிதியியல் துறை ஆராய்ச்சித் திணைக்களம், 2014 யூலை 29ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

3. திரு. பி. எச். ஓ. சந்திரவன்ச, கட்டுப்பாட்டாளர், செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம், 2014 செத்தெம்பர் 11ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

### 15.8 விடுவிப்பிலுள்ள அலுவலர்கள்

1. திரு. கே. டி. ரணசிங்க, உதவி ஆளுநர், பன்னாட்டு நாணய நிதியத்திற்கு மாற்று நிறைவேற்றுப் பணிப்பாளராக.

2. திரு. எஸ்.ஆர். ஆட்டிகல, உதவி ஆளுநர்இ நிதி அமைச்சிற்கு.

3. திருமதி கே. எம். ஏ. என். டவுலகல, உயர் பதவி அலுவலர் தரம் IVஇ நிதி அமைச்சிற்கு

4. திரு. கே.எம்.எம். சிறிவர்தன, உயர் பதவி அலுவலர் தரம் IV, நிதி அமைச்சிற்கு.

5. திரு. எம். மகிந்த சாலிய, உயர் பதவி அலுவலர் தரம் II, நிதி அமைச்சிற்கு.

6. திரு. எஸ். ஜி. எஸ். டி. ஜயசேகர, உயர் பதவி அலுவலர் தரம் II, பாதுகாப்பு அமைச்சிற்கு.

7. திரு. எஸ். ஜே. கே. குருகே, உயர் பதவி அலுவலர் தரம் II, பாதுகாப்பு அமைச்சிற்கு.

8. திரு. ஜே. ஏ. ஏ. பிரியந்த, உயர் பதவி அலுவலர் தரம் II, சனாதிபதி செயலகத்திற்கு.

9. திருமதி. எஸ். ரணசிங்க, உயர் பதவி அலுவலர் தரம் II, நீதி அமைச்சிற்கு.

10. திருமதி. எச். எஸ். எஸ். சில்வா, உயர் பதவி அலுவலர் தரம் I, பன்னாட்டு நாணய நிதியத்திற்கு.

11. திருமதி. ஜே. என். டன்தனநாராயன, உயர் பதவி அலுவலர் தரம் I, பாதுகாப்பு அமைச்சிற்கு.

12. திரு. எஸ். பி. சேடாரா, உயர் பதவி அலுவலர், தரம் I, பாதுகாப்பு அமைச்சிற்கு.

13. திருமதி. எச். எம். என். எஸ். குணவர்த்தன, சட்ட அலுவலர் (ஒப்பந்தம்), நிதி அமைச்சிற்கு.

### 15.9 சம்பளமற்ற கல்வி விடுப்பிலுள்ள அலுவலர்

1. திரு. யு. பி. அலவத்தஹே, உயர் பதவி அலுவலர் தரம் IV, 2012 செத்தெம்பர் 4ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் சம்பளமற்ற கல்வி விடுப்பில் உள்ளார்.

## 16. தகவல் தொழில்நுட்பம்

நடுத்தர வருமானப் பொறியை தவிர்ப்பதை நோக்கிய இலங்கை மத்திய வங்கியின் பயணத்தை இயலுமைப்படுத்திய நவீன, புதுமையான, நிறுவன அளவிலான பிரயோகங்களை வழங்கியமையின் காரணமாக தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்திற்கு 2014 குறிப்பிடத்தக்க ஆண்டாக அமைந்தது. இலங்கை மத்திய வங்கியின் தகவல் மற்றும் தொலைத்தொடர்பூட்டல் தொழில்நுட்பத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பணிக்கான பொறுப்பை தன்னகத்தே கொண்ட தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது கீழே கொடுக்கப்பட்ட ஐந்து (5) பரந்துபட்ட துறைகளின் கீழ் செயன்முறைகளின் உற்பத்தித்திறன் மற்றும் வினைத்திறனை மேம்படுத்த பங்களிப்புச் செய்தது.

i. புதுமையான தயாரிப்புக்கள் மற்றும் பணிகளின் அறிமுகம்
ii. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பின் தொடர்ச்சியான மேம்படுத்தல்கள்
iii. தேசிய நலன்சார்ந்த செயற்றிட்டங்களில் பங்களிப்பு
iv. தகவல் தொழில்நுட்ப இடர்நேர்வு முகாமைத்துவம்
v. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத் திறன்களை மேம்படுத்தல்

### 16.1 புதுமையான தயாரிப்புக்கள் மற்றும் பணிகளின் அறிமுகம்

தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது புதுமையான மற்றும் செலவு குறைந்த தயாரிப்புக்கள் மற்றும் பணிகளைத் தொடர்ச்சியாக வழங்கியதன் மூலம் வியாபாரச் செயன்முறைகளின் தரம், உற்பத்தித்திறன், வினைத்திறன் மற்றும் உயர் கிடைப்பனவு ஆகியவற்றின் மேம்பாட்டை இயலச்செய்த அதேவேளை நடைமுறையிலுள்ள தானியங்கி பிரயோகங்களிற்கு உதவியையும் பேணுதலையும் வழங்கியது. ஆண்டு காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட பிரதான அபிவிருத்தித் திட்டங்களில் சில பின்வருமாறு:

- பரந்துபட்ட மற்றும் தனித்துவமான மத்திய வங்கி கணக்கீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அதேவேளை, தொழிற்துறையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சிறந்த நடைமுறைகள் மற்றும் நியமங்களிற்கு இணங்கிய ஒருங்கிணைந்த பொதுப் பேரேடு மற்றும் கணக்கீட்டு முறைமை. ஒருங்கிணைந்த பொதுப் பேரேடு மற்றும் கணக்கீட்டு முறைமையின் தரமானது பிரிட்டிஷ் கொம்பியூட்டர் சொசைட்டியினால் ஒழுங்கு செய்யப்பட்ட தேசிய சிறந்த தர மென்பொருள் விருதுகளிலும் தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழில்நுட்ப முகவரினால் ஒழுங்கு செய்யப்பட்ட இ-சுவாபிகிமானி விருதுகளிலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

- உயர் பெறுமதி கொடுப்பனவு அமைப்பான "லங்கா செட்டில்" இன் பிரயோக மென்பொருளை சீ.ஏ.எஸ்/சீ.எஸ்.எஸ். பதிப்பு 3.6 இலிருந்து சீ.ஏ.எஸ்/சீ.எஸ்.எஸ் பதிப்பு 3.7 இற்கு மேம்படுத்தியமை.
- கடன் கருவிகளின் இடவமைவு மற்றும் முதன்மை வழங்கல்கள் தொடர்பான நடவடிக்கைகளை மையப்படுத்தல் மற்றும் கடன் கருவிகள் தொடர்பான தகவல்களின் களஞ்சியம் ஆகியவற்றை வசதிப்படுத்த பொதுப் படுகடன் திணைக்களத்திற்கான பொதுப் படுகடன் தரவுத்தளம்.
- பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமங்களுடன் இணங்கிச் செல்வதற்காக மேலதிக ஒழுங்குமுறைப்படுத்தல் கூற்றுக்களுடன் (அறிக்கைகள்) ஒழுங்குமுறைப்படுத்தல் நிதியியல் அறிக்கையிடல் முறைமை (வின்நெற்) மேம்படுத்தப்பட்டது. இது வங்கி மேற்பார்வை, பொருளாதார ஆராய்ச்சி மற்றும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும்.
- ஊழியர் சேம நிதிய உறுப்பினர் பங்களிப்பு சேகரிப்புச் செயன்முறையினை விரைவுபடுத்துவதற்காகவும் வினைத்திறனை அதிகரிப்பதற்காகவும் அதன் நிகழ்நேரத் தரவு சரிபார்த்தலுடன் கூடிய புதிய இணைய பணிகள்.
- கைமுறைச் செயற்பாடுகளைக் குறைப்பதற்காகவும் பணிகளை பரவலாக்குவதற்காகவும் வேலை இரட்டிப்பை நீக்குவதற்காகவும் மனித வள முகாமைத்துவ முறைமைக்கான (இ-எச்ஆர்நெற்) ஊழியர் சம்பளப்பட்டியல் மற்றும் கடன் மீட்பு தொகுதிகள்
- எந்நேரத்திலும் எந்த நாணய மதிப்பினதும் இருப்பினை வழங்குவதற்காகவும் வைப்பறைகளுக்கிடையிலான நாணய நகர்வைத் தடங்கலின்றி முகாமைப்படுத்துவதற்காகவும் நாணய இருப்பு முகாமைத்துவ முறைமை (சி.ஐ.எம்.எஸ்)
- தனிப்பட்ட தகவல்களைச் சுயமாகப் பெறுவதற்காக பெறுமதிகூட்டப்பட்ட அம்சங்களை அறிமுகப்படுத்தியதன் மூலம் இலங்கை மத்திய வங்கியின் இ-சந்திப்பு இடமான "மன்சல" வை மேம்படுத்தல் மற்றும் சிறந்த பணி வழங்கல்களுக்காக, தகவல் தொழில்நுட்ப மற்றும் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களங்களுக்கான உதவிபீடப் பணிகள்

### 16.2 தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பின் தொடர்ச்சியான மேம்படுத்தல்கள்

இலங்கை மத்திய வங்கியின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பானது உயர் பணிக் கிடைப்பனவை வழங்கும் நோக்குடன் பேணப்பட்டதுடன் தோற்றம் பெற்றுவரும் வியாபார மற்றும் தொழில்நுட்பக் கேள்விகளைப் பூர்த்தி செய்வதற்காகவும் மற்றும் தொழிற்துறை நியமங்களுக்கிணங்கவும் மேம்படுத்தல்கள் தொடர்ச்சியாக அறிமுகப்படுத்தப்பட்டன. இதன்படி,

- தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் முறையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறையை மற்றும் ஏனைய முக்கிய முறைமைகளின் 99.8 சதவீத முறைமைக் கிடைப்பனவினை அடைந்தது.
- சுவிப்ற் தகவல்களின் அளவில் எதிர்பார்க்கப்பட்ட வளர்ச்சியைக் கையாள்வதற்காகவும் மேம்பட்ட செயலாற்றத்தை வழங்குவதற்காகவும் சுவிப்ற் தொடர்பாடலில் பயன்படுத்தப்பட்ட பணியகங்கள், வேகமான மற்றும் அதிகமான பதிலளிக்கும் திறன் கொண்ட பணியகங்களினால் மாற்றீடு செய்யப்பட்டது.
- மேம்பட்ட பணிக் கிடைப்பனவு, நம்பகத்தன்மை மற்றும் அளவிடலை வழங்குவதற்காக நிறுவனத் தகவல் தொழில்நுட்ப வலையமைப்பானது மேம்படுத்தப்பட்டு தரப்படுத்தப்பட்டது.
- பிரதேச அலுவலகங்கள் காத்திரமான வகையில் வணிகச் செயற்பாடுகளை வழங்குவதற்காகவும் நிறுவனத் தகவல் தொழில்நுட்பப் பணிகளையடைவதற்காகவும் காணொளி கலந்துரையாடல் வசதி மூலம் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுவதற்காகவும் வேர்ச்சுவல் பிறைவேற் நெட்வேர்க் எனப்படும் தோற்றநிலை தனிப்பட்ட வலையமைப்பூடாக பிரதேச அலுவலகங்கள் நிறுவன வலையமைப்புடன் இணைக்கப்பட்டன. மேலும், ஏற்கனவேயிருக்கும் கம்பியுள்ள வலையமைப்புக்களை மீளஒழுங்குபடுத்தியதன் மூலமோ அல்லது கம்பியல்லா வை-பை வலையமைப்பை நிறுவியதன் மூலமோ பிரதேச அலுவலகங்களிலுள்ள உள்ளகக் கணனி வலையமைப்புக்கள் மேம்படுத்தப்பட்டன.
- கணனி வழி அதேநேர ஒத்துழைப்பு, டிஜிட்டல் உரிமை முகாமைத்துவம், இலத்திரனியல் தொடர்பூட்டல் மற்றும் மக்றோ சொவ்ட் சாதனங்களைப் பயன்படுத்தி மேசைக் கணனி முகாமைத்துவம் என்பனவற்றில் புத்தம் புதிய தன்மைகளின் அதிகரித்தளவு பண்புகளை நடைமுறைப்படுத்துவதற்காக, தற்போதைய தொழில்முயற்சி உடன்படிக்கையினைப் புதுப்பிப்பதற்காக கொள்வனவுச் செயன்முறைகள் இறுதிப்படுத்தப்பட்டன.

### 16.3 தேசிய நலன் சார்ந்த செயற்றிட்டங்களில் பங்களிப்பு

தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது தேசியக் கொடுப்பனவு சபையின் வழிகாட்டலின்படி தேசிய நலன் சார்ந்த செயற்றிட்டங்களுக்கு தொழில்நுட்ப நிபுணத்துவத்தை வழங்கியதன் மூலம் நாட்டின் கொடுப்பனவு அமைப்பின் சீர்திருத்தத்தில் ஓர் பயனுள்ள ஊக்கியாகச் செயற்பட்டது. தகவல் தொழில்நுட்பத் திணைக்கள அலுவலர்கள் ஆண்டு காலப்பகுதியில் பின்வரும் தேசிய செயற்றிட்டங்களுக்கு தங்களது தொழில்நுட்ப நிபுணத்துவத்தை வழங்கினர்:

- லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்டினால் நடைமுறைப்படுத்தப்பட்ட பொதுவான அட்டை மற்றும் கொடுப்பனவு ஆழிச் செயற்றிட்டத்தின் கீழ் பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி, பொதுவான இலத்திரனியல் நிதியப் பரிமாற்றல் ஆழி, பொதுவான கைத்தொலைபேசி கொடுப்பனவு ஆழி மற்றும் பொதுவான விற்பனைப் புள்ளி ஆழி.
- உள்நாட்டு அரசிறைத் திணைக்களத்தின் செயற்பாடுகளை தன்னியக்கமாக்கல்.
- பொது திறைசேரிக்கான "ஒருங்கிணைக்கப்பட்ட திறைசேரி முகாமைத்துவ முறைமை" இனைக் கொள்வனவு செய்தமை மற்றும் அதற்கும் இலங்கை மத்திய வங்கி தகவல் முறைமை இடைமுகத்தை உருவாக்கியமை.
- கொடுகடன் தகவல் பணியகத்திற்காக மேம்படுத்தப்பட்ட அம்சங்களுடன் கூடிய புதிய தன்னியக்க முறைமையைக் கொள்வனவு செய்தமை.

### 16.4 தகவல் தொழில்நுட்ப இடர்நேர்வு முகாமைத்துவம்

இடர்நேர்வு பற்றிய உணர்வுள்ள கலாச்சாரத்தினை நிறுவுவதில் காத்திரமான தகவல் தொழில்நுட்ப இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பின் முக்கியத்துவத்தைக் கவனத்திற் கொண்டு, நிதியியல் துறையினுள் தகவல் தொழில்நுட்பப் பாதுகாப்பைப் பலப்படுத்தவும் இடர்நேர்வை முன்கூட்டியே குறைப்பதற்கும் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன:

- தகவல் பாதுகாப்பின் குறைந்தபட்ச ஏற்றுக்கொள்ளத்தக்க மட்டத்தைக் குறித்துரைக்கும் தகவல் பாதுகாப்பு முகாமைத்துவத்திற்கான பன்னாட்டு நியமங்களின் ஐஎஸ்ஓ/ஐஈசி 27000 தொடரினை அடிப்படையாகக் கொண்ட அடிப்படைப் பாதுகாப்பு நியமங்கள் உரிமம் பெற்ற வங்கிகளினுள் அறிமுகப்படுத்தப்பட்டன.
- தகவல் பாதுகாப்பு முயற்சிகளை ஒருங்கிணைப்பதற்காக "வங்கி கணனி பாதுகாப்பு நிகழ்வு பதிலளிக்கும் குழு" ஆனது "லங்கா கிளியர் (பிறைவேற்) லிமிடெட்டின் கீழ் மையப்படுத்தப்பட்ட

அமைப்பாக நிறுவப்பட்டது. இலங்கை மத்திய வங்கி, இலங்கை கணனி அவசரநிலை பதிலளிக்கும் குழு, லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட் மற்றும் இலங்கை வங்கிகளின் கூட்டமைப்பு ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வழிகாட்டுதல் குழுவினால் வங்கி கணனி பாதுகாப்பு நிகழ்வு பதிலளிக்கும் குழு ஆளுகைப்படுத்தப்படுகிறது.

- சாத்தியமான இணைய அச்சுறுத்தல்களுக்கெதிராக, இலங்கை மத்திய வங்கியின் தகவல் முறைமைகளின் பாதுகாப்பை பலப்படுத்தும் நோக்குடன் தகவல் பாதுகாப்பு முகாமைத்துவமானது தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தின் புதிய மையச் செயற்பாடாக அறிமுகப்படுத்தப்பட்டது. இலங்கை மத்திய வங்கியின் தகவல் முறைமைகள் மீதான பாதுகாப்புச் சோதனைகள் திணைக்கள ஊழியர்களின் கிடைக்கக்கூடிய நிபுணத்துவத்தை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டதுடன் அவதானிப்புக்கள் பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்காக பயன்படுத்தப்பட்டன.
- இலங்கை மத்திய வங்கியின் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பில் அண்மையில் செய்யப்பட்ட மாற்றங்கள் மற்றும் தகவல் பாதுகாப்பு முகாமைத்துவச் செயற்பாட்டைச் சரியான முறையில் பிரதிபலிக்கும் வகையில் நாணய சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தகவல் பாதுகாப்புக் கொள்கை பதிப்பு 2.3 மற்றும் ஏனைய தொடர்புடைய கொள்கை ஆவணங்கள் மீளாய்வு செய்யப்பட்டதுடன் மாற்றங்களும் மேம்படுத்தல்களும் தகவல் பாதுகாப்புக் கொள்கைப் பதிப்பு 3.0 இல் உள்வாங்கப்பட்டன.

### 16.5 தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத் திறன்களை உயர்த்துதல்

தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் முதுமாணி கற்கைகள் மற்றும் குறுகிய காலப் பயிற்சிகளுக்கான வாய்ப்புக்களை வழங்கியதன் மூலம் தகவல் தொழில்நுட்பத் திணைக்கள ஊழியர்களின் அறிவைத் தொடர்ந்தும் மேம்படுத்தியது. இதற்கமைவாக, 35 அலுவலர்கள் குறுகிய கால உள்நாட்டு பயிற்சிகளிலும் 6 அலுவலர்கள் குறுகிய கால வெளிநாட்டு பயிற்சிகளிலும் பங்குபற்றினர். ஒரு அலுவலர் முதுமாணி கற்கை நெறியை வெளிநாட்டில் ஆரம்பித்தார்.

தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் அலுவலர்களை வங்கித்தொழில் கற்கைகளுக்கான மத்திய நிலையத்திற்கு வரி ஆளணியினராக விடுவித்ததுடன் தேவைப்படும் வேளைகளில் திணைக்களங்களிற்கு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்தினர்.

மத்திய வங்கிகளுக்கிடையிலான பிராந்திய ஒத்துழைப்பை வலுப்படுத்தும் ஒரு வழிமுறையாக, வங்காளதேச வங்கி, நேபால் ராஸ்திரா வங்கி மற்றும் பூட்டானின் றோயல் நாணய அதிகாரசபை ஆகியவற்றிலிருந்து விஜயம் செய்த குழுக்களுடன் தமது அறிவு மற்றும் நிபுணத்துவத்தை தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் பகிர்ந்து கொண்டது.

இலங்கை மத்திய வங்கியின் அனைத்து ஊழியர்களின் தொழில்நுட்ப அறிவை உயரித்தும் பொருட்டு, தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது தொழில்நுட்பக் குறிப்புக்கள் மற்றும் காணொளிகளை மின்னஞ்சல் மற்றும் “மன்சல” (இ-சந்திப்பு இடம்) ஊடாக தொகுத்து வெளியிட்டது.

## 17. உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம்

வங்கியில் உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடுகள் 1951ஆம் ஆண்டு தொடக்கம் தொழிற்பாட்டிலிருந்து வருகின்றன. உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் பணி மற்றும் வேலையின் செயற்பரப்பு, பொறுப்புக்கூறும் தன்மை, சுதந்திரம் மற்றும் பணிப்பாளர் மற்றும் அலுவலர்களின் பொறுப்பாண்மை மற்றும் அதிகாரம் என்பனவும் உள்ளகக் கணக்காய்வுச் சாசனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. கணக்காய்வுகள் உலகளாவிய நியமங்கள் மற்றும் கைத்தொழில் துறையின் மிகச் சிறந்த நடைமுறைகள் என்பவற்றுடன் இசைந்து செல்லும் விதத்தில் மேற்கொள்ளப்பட்டன.

2014 ஆண்டுக் காலத்தில் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் தொகுப்பு கீழே தரப்பட்டுள்ளது.

### 17.1 கணக்காய்வு ஒப்படைகளை மேற்கொள்ளுதல்

#### அ. 2014ஆம் ஆண்டிற்கான வருடாந்த கணக்காய்வுத் திட்டம்

வருடாந்த கணக்காய்வுத் திட்டமானது இலங்கை மத்திய வங்கியின் அனைத்தையுமுள்ளடக்கிய கணக்காய்வின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது. இது தொடர்பில், நடவடிக்கை அடிப்படையிலான செலவிடல் முறையில் உள்ளடக்கப்பட்ட நடவடிக்கைகள் மீளாய்வு செய்யப்பட்டன. இதன்படி, வருடாந்த கணக்காய்வுத் திட்டத்திற்காக இலங்கை மத்திய வங்கியின் அனைத்துக் கொத்தணிகளையும் உள்ளடக்கும் முக்கிய நடவடிக்கைகள் தெரிவு செய்யப்பட்டன. தகவல் முறைமை கணக்காய்வுகளும் வருடாந்த கணக்காய்வுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. வருடாந்த கணக்காய்வுத் திட்டமானது நாணயச் சபையின் மதியுரைக் கணக்காய்வுக் குழுவின் ஒப்புதலுடன் நடைமுறைப்படுத்தப்பட்டது.

#### ஆ. உள்ளகக் கணக்காய்வு நடைமுறை

ஒவ்வொரு கணக்காய்வு ஒப்படைகளும் திட்டமிடல், செயற்படுத்தல், தொடர்பூட்டல் மற்றும் தீர்மானம் எடுத்தல் நடவடிக்கைகள் போன்ற நான்கு தொடர்ச்சியான படிமுறைகள் மூலம் மேற்கொள்ளப்பட்டன. செயற்படுத்தல் நிலையில், கணக்காய்வுச் சான்றுகள் சேகரிக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டன. உலகளாவிய நியமங்களுடன் இணங்கிச்செல்லும் விதத்தில், கணக்காய்வு பெறுபேறுகளைத் தொடர்பூட்டுவதற்காக கணக்காய்வு அவதானிப்புக்களினை செல்லுபடியாக்குவதற்கான இறுதி மாநாடுகளினை நடாத்துதல், கணக்காய்வு அவதானிப்புக்களினை எழுத்து வடிவில் தொடர்பூட்டல், வரைபு கணக்காய்வு அறிக்கையினை வழங்கல் மற்றும் இறுதி அறிக்கையினை வழங்கல் போன்ற நான்கு படிமுறைச் செய்முறைகள் பின்பற்றப்பட்டன. செய்முறை உரிமையாளரினால் ஒப்புக்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என்பதை உறுதிப்படுத்துவதற்காக கிரமமான அடிப்படையில் பின்தொடர்தல் கணக்காய்வுகளும் மேற்கொள்ளப்பட்டன.

#### இ. கணக்காய்வுகளை மேற்கொள்வதில் அடையப்பட்ட முன்னேற்றங்களை அறிக்கையிடல்

கணக்காய்வு ஒப்படைகளை மேற்கொள்வதில் காணப்படும் முன்னேற்றம் மதியுரைக் கணக்காய்வுக் குழு மற்றும் நாணயச் சபைக்கு காலாண்டு அடிப்படையில் அறிக்கையிடப்பட்டது. நடவடிக்கை அறிக்கைகள் அரையாண்டு அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டன.

### 17.2 விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பயிற்சியளித்தல் ஏற்பாடுகள்

உள்ளக கணக்காய்வுத் திணைக்கள அலுவலர்களிற்கு ‘மேகக் கணிமை’ மீதான தகவல்களைக் கொண்ட ஆய்வரங்கினை வெளிநிபுணர்களின் ஒத்துழைப்புடன் ஒழுங்குபடுத்தியது. மேலும், உள்ளகக் கணக்காய்வு திணைக்கள அலுவலர்களின் நன்மைக்காக உள்ளகக் காட்சிப்படுத்தலுடன் கூடிய விரிவுரைகள் மற்றும் அறிவு பகிரும் கூட்டத்தொடர்கள் கிரமமாக மேற்கொள்ளப்பட்டன. மனித வளத் திணைக்களத்தினால் கோரப்பட்டமைக்கமைவாக 2014இல் உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம் உள்ளகக் கணக்காய்வு மற்றும் தொடர்புடைய விடயங்களில் பட்டதாரிகள், பட்டதாரி மாணவர்கள் மற்றும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் மாணவர்களுக்கு பயிற்சிகளை வழங்கியது.

### 17.3 நாணயச் சபை மதியுரை கணக்காய்வுக் குழு

மதியுரைக் கணக்காய்வுக் குழுவானது நாணயச் சபையின் ஒரு உறுப்பினரையும் இரண்டு வெளிவாரி தொழில்சார் கணக்காய்வு நிபுணர்களையும் உள்ளடக்கியிருக்கிறது. நாணயச் சபைக்கான செயலாளர் மதியுரைக் கணக்காய்வுக் குழுவிற்கு செயலாளராகவும் உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் மதியுரைக் கணக்காய்வுக் குழுவின் உதவிச் செயலாளராகவும் இருப்பார். உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம் மதியுரை கணக்காய்வுக் குழுவிற்கான செயலகப் பணி வசதிப்படுத்தல்களை வழங்கியது.

விஞ்ஞாபனத்திலுள்ளவாறு ஆண்டுக் காலத்தில் ஆறு (06) மதியுரைக் கணக்காய்வுக்குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. உள்ளகக் கணக்காய்வின் முன்னேற்றம் மற்றும் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைக்கான முகாமைத்துவ பதிலுறுப்புக்கள் என்பன மதியுரைக் கணக்காய்வுக் குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டன.

### 17.4 வெளிவாரிக் கணக்காய்விற்கு வசதியளித்தல்

கணக்காய்வாளர் நாயகம் வெளிவாரிக் கணக்காய்வினை மேற்கொள்வதுடன் வெளிவாரிக் கணக்காய்விற்கான வசதிப்படுத்துனராக நாணயச் சபையின் செயலாளரூடாக உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம் தொழிற்படுகிறது. பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமங்களின் நியதிகளுக்கிணங்க, நிதியியல் கூற்றுக்களின் கணக்காய்வு நோக்கத்திற்காக கணக்காளர் நாயகத்தினால் பட்டயக் கணக்காளர்களான ஏர்னஸ்ட் அன்ட் யங் கணக்காய்வில் ஈடுபடுத்தப்பட்டது. இதற்கிணங்க உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம் தேவையான தகவல்களைச் சேகரிப்பதற்கும் கண்டறியப்பட்ட விடயங்களைப் பகுப்பாய்வு செய்வதற்கும் கடிதத் தொடர்புகளைக் கையாள்வதற்கும் நாணயச் சபையின் செயலாளருக்கு தொழில்நுட்ப உள்ளீடுகளை வழங்கியது.

## 18. பன்னாட்டுத் தொழிற்பாடுகள்

நாணயச் சபை, பன்னாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவத்தினையும் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையைக் கண்காணிக்கின்ற பொறுப்புக்களையும் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்திடம் ஒப்படைத்திருக்கிறது. இச்சட்டம் பன்னாட்டு ஒதுக்குகளின் உள்ளமைப்பு மற்றும் அவற்றின் பேணல், ரூபாவின் வெளிநாட்டு உறுதிப்பாட்டினைப் பேணிப் பாதுகாப்பதற்கான விபரமான வழிமுறைகள், இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகளினது செயற்பரப்பின் மேலோட்டமான தன்மைகள் மற்றும் நாட்டின் பன்னாட்டு ஒதுக்குகளின் முகாமைத்துவம் தொடர்பில் நாணயச் சபைக்கு கையளிக்கப்பட்ட அதிகாரங்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிக் குறிப்பிடும் நாணய விதிச் சட்டத்தில் இலங்கையின் பன்னாட்டு ஒதுக்குகளின் முகாமைத்துவத்திற்கான சட்டக் கட்டமைப்பு குறித்துரைக்கப்பட்டிருக்கிறது. சொத்து வகைகள், இணைத்தரப்புக்கள், சாதனங்கள் மற்றும் வழங்குநர்கள் மீதான கட்டுப்பாடுகள் நாணயவிதிச் சட்டத்தின் 67ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவ்வேற்பாடுகளுக்குப் புறம்பாக, நாணயச் சபை ஒதுக்கு முகாமைத்துவக் குறிக்கோள்களை இன்னமும் சிறந்த முறையில் எய்துவதற்காக ஒதுக்கு முகாமைத்துவ செயற்பரப்பினை விரிவாக்கும் விதத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியும்.

### 18.1 பன்னாட்டு ஒதுக்கு முகாமைத்துவம்

பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம், நாணயச் சபையின் வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவ வழிகாட்டல்களுக்கிணங்க, வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவக் குழுவின் மேற்பார்வையின் கீழ் பாதுகாப்பு, திரவத்தன்மை மற்றும் வருமானக் குறிக்கோள்கள் என்பனவற்றை கருத்திற் கொண்டு பன்னாட்டு ஒதுக்குகளின் முதலீட்டினை முகாமைப்படுத்தி வருகின்றது. பல முக்கிய நாணயங்களில் குறித்துரைக்கப்படுகின்ற பன்னாட்டு ஒதுக்குகள் நிலையான வருமானம் தரும் பிணையங்கள், பணச் சந்தைக் கருவிகள் மற்றும் தங்கத்தில் பிரதானமாக முதலீடு செய்யப்பட்டன. நிலையான வருமானப் பிணையங்கள் சொத்துப்பட்டியல் உயர்ந்த வீதத்தைக் கொண்ட அரச பிணையங்கள், அரச உத்தரவாதப் பிணையங்கள், அரச முகவர்களின் பிணையங்கள் மற்றும் பல்தேசிய நிறுவனங்கள் என்பனவற்றில் முதலீடு செய்யப்பட்டன. மேலும் நிலையான வருமானப் பிணையங்கள் மற்றும் நாணயச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் என்பன இணைத்தரப்பினரின் பலம் மற்றும் அவர்களின் கொடுகடன் நாணயத் தகைமை என்பனவற்றைப் பரிசீலனையில் கொண்டு முகாமைத்துவத்தினால் ஒப்புதலளிக்கப்பட்ட இணைத்தரப்பினர்களாகவுள்ள உயர்ந்த வீதங்களைக் கொண்ட மத்திய வங்கிகள், வர்த்தக வங்கிகள் மற்றும் முதலீட்டகங்கள் என்பனவற்றுடன் மேற்கொள்ளப்பட்டன. திரவத்தன்மைத் தேவைப்பாடுகள், படுகடன் பணிகள் கொடுப்பனவுகள், இடர்நேர்வு முகாமைத்துவ அளவுகள், வருமான உருவாக்க இயலாற்றல் மற்றும் நாணயச் சபையின் குறித்துரைக்கப்பட்ட பணிப்புரைகள் என்பன வெளிநாட்டுச் ஒதுக்குச் சொத்துப்பட்டியலின் சொத்து மற்றும் நாணய உள்ளமைப்பினை நிர்ணயிப்பதில் முக்கிய காரணிகளாகக் கருதப்படுகின்றன.

உலகளாவிய நிதியியல் நெருக்கடிகளைத் தொடர்ந்து முக்கியமான மத்திய வங்கிகளிடையே கொள்கை வேறுபாடுகள் காணப்பட்ட முதலாவது முழுமையானதொரு ஆண்டாக 2014 குறிக்கப்படுகிறது. பெடரல் றிசேர்வ் வங்கி பொருளாதார அடிப்படைகளில் ஏற்பட்ட மேம்பாட்டினைத் தொடர்ந்து 2014ஆம் ஆண்டுப் பகுதியில் அதன் படிப்படியாகக் குறைந்து செல்லும் சுற்றுவட்டத்தினை நிறைவேற்றியது. 2014இன் முதலரைப் பகுதியில் ஒதுக்கு முகாமைத்துவம், பெடரல் றிசேர்வ் வங்கியினாலும் இங்கிலாந்து வங்கியினாலும் வழங்கப்படும் சாத்தியமான வட்டி வீத உயர்வு தொடர்பான எதிர்பார்ப்புக்களிலேயே மையப்படுத்தியிருந்தது. இவ்வபிவிருத்திகளுடன் தங்கத்தின் விலைகள் இவ்வாண்டுப் பகுதியில் மிகக் கடுமையாக வீழ்ச்சியடைந்தன. எனினும், 2014 யூனில் வீழ்ச்சியடையத் தொடங்கிய எண்ணெய் விலைகள் எஞ்சிய ஆண்டுப் பகுதிக்கும் தொடர்ந்தமையானது, ஆண்டின் இறுதிப் பகுதியில் தங்க விலைகளில் மேல் நோக்கிய அழுத்தத்தினைத் தோற்றுவித்தது. எண்ணெய் மற்றும் பண்ட விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி உலகம் முழுவதிலும் பணச்சுருக்க அழுத்தங்களை உந்தியது. இவ்வபிவிருத்திகளைத் தொடர்ந்து, யப்பான் வங்கி அதன் நாணயத் தளர்த்தல் நிகழ்ச்சி நிரலைத் விரிவுபடுத்திய வேளையில் ஐரோப்பிய மத்திய வங்கி பாதுகாப்பளிக்கப்பட்ட முறிகள் மற்றும் உத்தரவாதமளிக்கப்பட்ட பிணையங்கள் என்பனவற்றின் கொள்வனவூடாக அதன் சொந்த வடிவமைப்பான கணியம்சார் தளர்த்தல்களை ஆரம்பித்தது. மேலும், ஐரோப்பிய மத்திய வங்கி 2015 மார்ச்சிலிருந்து அரச முறிகளைக் கொள்வனவு செய்யும் திட்டத்தினை அறிவித்தது. சீன மக்கள் வங்கியும் 2014இன் பிற்பகுதியில் விரிவாக்கப்பட்ட தூண்டுதல்களுடன் தளர்த்தல் வட்டத்திற்குள் நுழைந்தது. இத்தகைய சவாலுக்குரிய சூழ்நிலையில், இலங்கை மத்திய வங்கியின் பன்னாட்டுத் தொழிற்பாடுகள், வெளிநாட்டு நாணய வர்த்தகம், பணச் சந்தை முதலீடுகள் மற்றும் நிலையான வருமானப் பிணையங்களிலிருந்தும் பெறப்பட்ட மூலதன இலாபம் மற்றும் நறுக்கு என்பனவற்றினூடாக 2014ஆம் ஆண்டுப் பகுதியில் ஐ.அ.டொலர் 173.3 மில்லியன் (ஏறத்தாழ ரூ.22.9 பில்லியன்) கொண்ட தேறிய வெளிநாட்டு வருமானத்தினை உருவாக்கியது.

முன்னேற்றம் கண்ட பொருளாதாரங்கள் மந்தமான பொருளாதாரங்களைத் தூண்டுகின்ற தமது கடினமான பயணத்தினைத் தொடர்ந்தமையினால், பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் ஆசியப் பிராந்தியத்தினிலுள்ள மத்திய வங்கிகளுக்கிடையேயான தொடர்புகளைக் கட்டியெழுப்பும் செயற்பாடுகளைத் தொடங்கியது. அதற்கேற்ப, இலங்கை மத்திய வங்கி, ஒதுக்கு முகாமைத்துவ நடவடிக்கைகளை மேலும் பன்முகப்படுத்துவதனை இயலுமைப்படுத்துவதற்காக சீனமக்கள் வங்கியுடனும் இந்திய ஒதுக்கு வங்கியுடனும் முதலீட்டு ஒப்பந்தங்களை மேற்கொண்டது. விரைந்து வளர்ந்துவரும் இருபுடை வர்த்தகத்திற்கும் முதலீட்டிற்கும் வசதியளிப்பதற்காக இலங்கை மத்திய வங்கி சீன மக்கள் வங்கியுடன் இருபுடை நாணய பரஸ்பர பரிமாற்றல் உடன்படிக்கையொன்றையும் செய்து கொண்டது.

### 18.2 இடர்நேர்வு முகாமைத்துவம்

பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் நடு அலுவலகம், நிறுவப்பட்ட சொத்துப்பட்டியல் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கைகள் மற்றும் வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவ வழிகாட்டல்களில் குறித்துரைக்கப்பட்டுள்ள அளவீடுகள் என்பனவற்றுடன் இணங்கிச் செல்வதனை உறுதிப்படுத்துவதற்காக பன்னாட்டு ஒதுக்கு சொத்துப்பட்டியல் முகாமைத்துவத்திலிருந்து தோன்றுகின்ற இடர்நேர்வுகளை மதிப்பிடுவதில் ஈடுபட்டிருந்தது. எச்சரிக்கையுடன் கூடியதும், விரும்பத்தக்கதும் உரிய நேரத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குமாக இடர்நேர்வு தோற்றப்பாடுகளைக் கொண்ட சேதங்களை விளைவிக்கக்கூடிய சாத்தியங்களையுடைய பன்முகத்தன்மை கொண்ட இடர்நேர்வுகள் கிரமமான அடிப்படையில் திரட்டப்பட்டன. ஒதுக்கு முகாமைத்துவ உபாயங்களின் காத்திரமான தன்மையைக் கண்டறிவதற்காக தீவிரமான வர்த்தக நடவடிக்கைகளினூடாக உருவாக்கப்பட்ட வருமானங்கள் உபாய இலக்குகளுக்கெதிராகவும் செயற்பாடு சராத விதத்தில் முகாமைப்படுத்தப்பட்ட அடிப்படை அளவுக்குறியீட்டு சொத்துப்பட்டியலுக்கெதிராகவும் அளவிடப்பட்டது.

இவ்வாண்டுப் பகுதியில் நிலவிய உயர்ந்த மட்ட நிச்சயமற்றதன்மை, பெடரல் றிசேர்வ் வங்கியினால் கணியம்சார் தளர்த்தல் 3 படிப்படியாக முடிவிற்குக் கொண்டுவரப்பட்டமை மற்றும் யப்பானிய வங்கியினாலும் ஐரோப்பிய மத்திய வங்கியினாலும் மரபு வழியற்ற நாணயக் கொள்கைகள் பின்பற்றப்பட்டமை என்பனவற்றின் பின்னணியில் பன்னாட்டுச் சந்தைகள் தளம்பல்களைக் கொண்டனவாகக் காணப்பட்டன. இது 2014ஆம் ஆண்டிற்காக விருத்தி செய்யப்பட்ட முதலீட்டு உபாயத்தினை நிறைவு செய்கையில் பாரிய அச்சுறுத்தல்களைத் தோற்றுவித்தன. முதலீட்டு உபாயத்தின் ஒரு சில மூலங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த வேளையில், மற்றையவை உலகளாவிய பொருளாதார மாற்றங்கள் மற்றும் நிதியியல் அபிவிருத்திகள் என்பனவற்றுடன் இசைந்து செல்லும் விதத்தில் நடுவாண்டுப் பகுதியில் திருத்தியமைக்கப்பட்டன. சீன யுவானில் உள்ள பன்னாட்டு தீர்ப்பனவு முதலீட்டிற்கான வங்கியின் சாதனம், அதேபோன்று இடர்நேர்வு தணிப்பு நோக்கங்களுக்கான முன்பேரங்கள் மற்றும் தெரிவுகளுக்கான உற்பத்திகள் உட்பட பல புதிய திறைசேரி முகாமைத்துவக் கருவிகள் பின்பற்றப்பட்டன.

இந்தியா மற்றும் தென் கொரியா என்பன உட்பட தோற்றம் பெற்றுவரும் சந்தைகளில் சாத்தியமான செலாவணி வீத அல்லது நாணய இடர்நேர்வுகள் அடையாளம் காணப்பட்டதுடன் நாணயங்களும் பன்முகப்படுத்தப்பட்டன. வட்டி வீதங்களில் ஏற்படும் மாற்றங்களுக்கு நிலையான வருமான பிணையங்களின் சொத்துப்பட்டியல் இடர்நேர்வுகளுக்குள்ளாகும் தன்மையினை அளவிடுவதற்கு உணர்திறன் பகுப்பாய்வு பயன்படுத்தப்பட்டது. நிலையான வருமான பிணையங்கள் சொத்துப்பட்டியலில் பெறுமதியில் ஏற்படும் குறுங்கால குறைப்புக்களினால் ஏற்படும் இடர்நேர்விற்குள்ளாகும் தன்மைகள் திருத்தியமைக்கப்பட்ட காலக் கணிப்புக்களைப் பயன்படுத்தி மதிப்பிடப்பட்ட வேளையில், இடர்நேர்வில் பெறுமதி கணிப்பீடுகள், இடர்நேர்வுகள் முகாமைப்படுத்தப்படக்கூடிய மட்டங்களுக்குள் வைத்திருக்கப்பட்டுள்ளமையினை உறுதிப்படுத்துவதற்காக பயன்படுத்தப்பட்டன.

ஐக்கிய அமெரிக்காவில் வருமானம் உயர்வடைந்து வருவதனைக் கருத்திற் கொண்டு வட்டி வீதங்கள் இடர்நேர்வுகளுக்குள்ளாகும் தன்மை நிலையான வருமானம் மற்றும் பணச்சந்தை முதலீடுகளின் காலங்களுக்குச் செய்யப்பட்ட நடுவாண்டுத் திருத்தங்களின் மூலமாக குறைக்கப்பட்டன. பணம் மற்றும் மூலதனச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்களுக்கு வசதியளிக்கும் பொருட்டு பன்னாட்டு பரஸ்பர பரிமாற்றல் மற்றும் பெறுதிச்சங்க உடன்படிக்கைகள் பன்னாட்டுத் தீர்ப்பனவு வங்கி மற்றும் பார்க்கிளேஸ் வங்கி பிஎல்சி என்பனவற்றுடன் மேற்கொள்ளப்பட்டதுடன், மற்றைய பல இணைத்தரப்பினருடனும் பன்னாட்டு பரஸ்பர பரிமாற்றல் மற்றும் பெறுமதிச் சங்கத்துடன் ஒப்பந்தங்களைச் செய்ய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன.

இணைத்தரப்பினருடனான வர்த்தகப்படுத்தல் நடவடிக்கைகள் மீதான எல்லையை நிர்ணயிக்கும் பொருட்டு நிதியியல் குறிகாட்டிகள், கொடுகடன் தரமிடல் மற்றும் அவற்றின் சந்தை வெளிப்படுத்துகை என்பனவற்றைப் பயன்படுத்துகின்ற "இணைத்தரப்புக் கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவ முறைமை" யின் உதவியுடன் இணைத்தரப்புக் கொடுகடன் இடர்நேர்விற்குள்ளாகும் தன்மை கிரமமான அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டு முகாமைப்படுத்தப்பட்டது. 2003இல் ஏற்படுத்தப்பட்ட இம்முறைமையானது இவ்வாண்டுப் பகுதியில் பூரணமான திருத்தங்களுக்கு உட்படுத்தப்பட்டதுடன் இதன் மூலம் கொடுகடன் இடர்நேர்வுகளின் மிகச் சிறந்த முகாமைத்துவத்திற்கு இடமளிக்கும் பொருட்டு இணைத்தரப்பு மதிப்பீடு மற்றும் தெரிவுப் பிரமாணங்கள் உற்பத்தித் தகைமைகள் மற்றும் வரையறைக் கட்டமைப்பு என்பன தரமுயர்த்தப்பட்டன. ஏற்படக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்ற சாத்தியமான இடர்நேர்வுகளும் கொடுகடன் செலுத்தத் தவறும் பரஸ்பர பரிமாற்றல் வீச்சுக்களையும் பங்குச் சந்தை விலைகளையும் கண்காணிப்பதன் மூலம் கட்டுப்படுத்தப்பட்டன.

அனைத்துக் கொடுப்பனவுகளையும் உரிய நேரத்தில் கௌரவிப்பதனை இயலச்செய்யும் விதத்தில் தொடர்பான நாணயங்களிலான சொத்துக்களின் போதுமான விகிதத்தினை ஆண்டு முழுவதும் திரவ நிலைமையில் வைத்திருப்பதனை உறுதிப்படுத்தியதன் மூலம் திரவத்தன்மை இடர்நேர்வு தணிக்கப்பட்டது. சரிபார்ப்புச் செயன்முறைகளை வலுப்படுத்தியமை மற்றும் முதலீட்டு வழிகாட்டல்களை மீள மேற்பார்வை செய்தமை என்பன புதிய வர்த்தக முறைமையின் நேரடித் தொழிற்பாடுகளிலிருந்து தோன்றுகின்ற தொழிற்பாட்டு இடர்நேர்வுகள், பன்னாட்டு ஒதுக்குகளின் முகாமைத்துவத்திற்கு ஆதரவளிப்பதற்கான நடைமுறைப்படுத்தப்பட்ட ஊழியர்கள் மற்றும் செயன்முறைப்படுத்தல் என்பன இடர்நேர்விற்குள்ளாகும் தன்மையினைத் தணிக்க உதவியது.

### 18.3 உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை அபிவிருத்திகள்

2014 காலப்பகுதியில் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் சுமூகமான தொழிற்பாடுகளை உறுதிப்படுத்திய வேளையில், அதன் நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாக கண்காணித்ததன் மூலம் செலாவணி வீதங்களில் ஏற்பட்ட மிகையான தளம்பல்களையும் கட்டுப்படுத்தியது. மேலும், உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் பின்பற்றப்பட்ட நாளாந்த தேறிய வெளிநாட்டுச் செலாவணி நிலைமைகள் மீதான குறித்துரைக்கப்பட்ட வரையறைகளும் கண்காணிக்கப்பட்டன.

உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் நாளாந்த தேறிய வெளிநாட்டுச் செலாவணித் திறந்த நிலைமை 2014 யூலை 1ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் ஐ.அ.டொலர் 120 மில்லியனிலிருந்து 189 மில்லியனுக்கு மேல் நோக்கித் திருத்தப்பட்டது. முன்னேற்றம்கண்ட பொருளாதார செயற்பாடுகளின் காரணமாக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் அவற்றின் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களை முகாமைப்படுத்துவதில் கூடியளவு நெகிழ்ச்சித்தன்மையினை வழங்குவதற்காக இது மேற்கொள்ளப்பட்டது. அதேநேரம், உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் அவற்றின் நாளாந்த தேறிய வெளிநாட்டுச் செலாவணி திறந்த நிலைமையினை அறிக்கையிடுவதற்காக வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் புதிய அறிக்கையிடல் படிவமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இது, அவற்றின் நாளாந்த தேறிய வெளிநாட்டுச் செலாவணி திறந்த நிலைமை மீதான துல்லியமானதும் இற்றைப்படுத்தப்பட்டதுமான தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் அறிமுகப்படுத்தப்பட்டதாகும். இது முகாமைத்துவத் தகவல் அறிக்கையிடல் நோக்கங்களுக்கு இன்றியமையாததாகும். இது தொழிற்பாட்டு வினைத்திறனை அதிகரித்துள்ளதுடன் அறிக்கையிடல் நடவடிக்கைகளுடன் தொடர்பான செலவுகளையும் குறைத்துள்ளது. இவ்வாண்டுப் பகுதியில் மொத்த வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் 2013இன் ஐ.அ.டொலர் 13.7 பில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 15.5 பில்லியனுக்கு அதிகரித்துள்ளன (அட்டவணை II -17). எனினும், உடன் மற்றும் நாளைய அடிப்படை மீதான தீர்ப்பனவிற்கான கொடுக்கல்வாங்கல்கள் சிறிதளவு

வீழ்ச்சியடைந்த வேளையில் காசு மற்றும் முன்னோக்கிய தீர்ப்பனவுகள் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தன. மேலும், வர்த்தக வங்கிகளுடனான இலங்கை மத்திய வங்கியின் கொடுக்கல்வாங்கல்கள் ஐ.அ.டொலர் 545 மில்லியன் (அட்டவணை II -18) கொண்ட தேறிய கொள்வனவு நிலைமையை எடுத்துக்காட்டின.

**அட்டவணை II-17 வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களின் அளவு - 2014**

ஐ.அ.டொலர்

| மாதம் | உடன் | நாளை | காசு | முன்னோக்கிய | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| சனவரி | 249.20 | 230.75 | 182.25 | 524.41 | 1,186.60 |
| பெப்புருவரி | 213.35 | 176.85 | 198.58 | 521.36 | 1,110.14 |
| மாச்சு | 266.28 | 243.14 | 292.13 | 465.62 | 1,267.16 |
| ஏப்பிறல் | 319.80 | 219.50 | 194.52 | 453.40 | 1,187.22 |
| மே | 389.28 | 275.20 | 269.10 | 593.73 | 1,527.30 |
| யூன் | 339.78 | 279.10 | 259.45 | 531.39 | 1,409.71 |
| யூலை | 629.44 | 299.38 | 263.38 | 780.14 | 1,972.33 |
| ஓகத்து | 320.25 | 214.20 | 259.30 | 533.89 | 1,327.64 |
| செத்தெம்பர் | 181.90 | 272.18 | 288.05 | 534.91 | 1,277.04 |
| ஒத்தோபர் | 215.15 | 178.68 | 221.30 | 548.08 | 1,163.21 |
| நவெம்பர் | 166.80 | 121.55 | 148.03 | 561.38 | 997.75 |
| திசெம்பர் | 188.06 | 148.25 | 89.00 | 626.33 | 1,051.64 |
| **மொத்தம்** | **3,479.27** | **2,658.77** | **2,665.07** | **6,674.63** | **15,477.74** |

மூலம்: பன்னாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை II-18 மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணியின் கொள்வனவு மற்றும் விற்பனை - 2014**

ஐ.அ. டொலர்

| மாதம் | கொள்வனவு | விற்பனை | தேறிய கொள்வனவு/ (விற்பனை) |
|---|---|---|---|
| சனவரி | 73.75 | 50.45 | 23.30 |
| பெப்புருவரி | 40.95 | 19.30 | 21.65 |
| மாச்சு | 81.90 | 74.25 | 7.65 |
| ஏப்பிறல் | 257.60 | 11.75 | 248.85 |
| மே | 131.50 | - | 131.50 |
| யூன் | 124.20 | 3.00 | 121.20 |
| யூலை | 250.00 | 10.00 | 240.00 |
| ஓகத்து | 315.20 | 44.50 | 270.70 |
| செத்தெம்பர் | 96.60 | 173.90 | (77.30) |
| ஒத்தோபர் | 1.50 | 200.15 | (198.65) |
| நவெம்பர் | 30.00 | 79.85 | (49.85) |
| திசெம்பர் | 4.00 | 195.10 | (191.10) |
| **மொத்தம்** | **1407.20** | **862.25** | **544.95** |

மூலம்: பன்னாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

## 19. கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்

நாணய விதிச் சட்டத்தின் 62அ பிரிவின் நியதிகளின்படி, நிதிய மாற்றல்களுக்கான தொழிற்பாட்டு முறைமைகளை நிறுவுதல், கொடுப்பனவு கடப்பாடுகளின் தீர்ப்பனவு மற்றும் பங்குபற்றும் நிறுவனங்களுக்கு முறைமை ஒழுங்குமுறை விதிகளை வழங்கல் போன்ற பொறுப்புக்கள் மத்திய வங்கிக்கு வழங்கப்பட்டுள்ளன. மேலும், மத்திய வங்கியானது, 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைக்கிடுவதற்கான பொறுப்பையும் கொண்டுள்ளது. கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களமானது, நாணய விதிச் சட்டம் மற்றும் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் சட்டத்தின் கீழ் மத்திய வங்கியின் பொறுப்புக்களை மேற்கொள்வதற்காக 2002இல் உருவாக்கப்பட்டது. கொடுப்பனவு தீர்ப்பனவுகள் திணைக்களத்தின் பிரதான தொழிற்பாடுகளாக, அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் தொழிற்பாடுகள், நிதியியல் கொடுக்கல்வாங்கல்களுக்கான பின்னரங்கத் தொழிற்பாடுகளை வழங்குதல், சுவிப்ற் தொடர்பூட்டல் முறைமைகளின் முகாமைத்துவம், ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்தின் கீழான கொடுக்கல்வாங்கல்களுக்கு வசதியளித்தல், கொள்கை வடிவமைப்பு மற்றும் கொடுப்பனவு தீர்ப்பனவு முறைமைகளின் மேற்பார்வை ஆகியன காணப்படுகின்றன. 2014ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்தினால் செயலாற்றப்பட்ட பிரதான தொழிற்பாடுகளின் சுருக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

### 19.1 அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் தொழிற்பாடுகள்

அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையானது அதேநேர மொத்த அடிப்படையில் நேரமுக்கியத்துவம் வாய்ந்த பாரிய பெறுமதியினைக் கொண்ட பங்குபற்றுநர்களுக்குள்ளேயான கொடுப்பனவுகளைத் தீர்ப்பதுடன், அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறையின் சுமூகமான செயற்பாடுகளை உறுதி செய்வதற்காக பங்குபற்றும் நிறுவனங்களுக்கு ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதிகளின் ஏற்பாடுகளுக்கும் வசதியளிக்கிறது. மத்திய வங்கி, உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், வங்கியல்லா முதனிலை வணிகர் கம்பனிகள், ஊழியர் சேம நிதியம் மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் மத்திய வைப்பக முறைமை ஆகியன அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையில் பங்குபற்றும் நிறுவனங்களாகும். 2014 இறுதியிலுள்ளவாறு பங்குபற்றும் நிறுவனங்களின் எண்ணிக்கை 36ஆகக் காணப்பட்டது. ஆண்டுக் காலப்பகுதியில், அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையினால் தீர்ப்பனவு செய்யப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் அளவு 317,940 ஆகவும் மொத்தப் பெறுமதி ரூ.59,551 பில்லியனாகவும் காணப்பட்டது. அரச பிணையங்களின் உத்தரவாதங்களுக்கெதிராக வழங்கப்பட்ட ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதியின் பெறுமதி ரூ.5,144 பில்லியனாகக் காணப்பட்டது. பன்னாட்டுச் சிறந்த நடைமுறையினைப் பின்பற்றியதன் மூலம் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமைக் கிடைப்பனவு 99.79 சதவீதமாகப் பேணப்பட்டது.

### 19.2 நிதியியல் கொடுக்கல்வாங்கல்களுக்கான பின்னரங்க அலுவலகப் பணியை வழங்குதல்

#### அ) வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களுக்கான பின்னரங்க அலுவலகப் பணிகள்

2014ஆம் ஆண்டுக் காலப்பகுதியில், மத்திய வங்கியின் பன்னாட்டு ஒதுக்கு முகாமைத்துவத்திற்கு வசதியளிப்பதற்காக வழங்கப்பட்ட பின்னரங்க அலுவலகப் பணிகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருந்தது:

(i) வெளிநாட்டுச் செலாவணி வர்த்தகப்படுத்தல் மற்றும் நிதியிடல், பணச் சந்தை நடவடிக்கைகள், நிலையான வருமானப் பிணையங்கள், தங்க வர்த்தகக் கொடுக்கல்வாங்கல்கள், ஆசியத் தீர்ப்பனவுக் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் மீள்கொள்வனவு/ நேர்மாற்று மீள்கொள்வனவு தொடர்பாக ஐ.அ.டொலர் 466 பில்லியன் கொண்ட 22,229 கொடுக்கல்வாங்கல்களைத் தீர்ப்பனவு செய்தது.

(ii) வட்டி வீத சுவப்ற், எதிர்காலக் கொள்வனவுகள், கருமபீடங்களூடான நாணயத் தெரிவுகள், கூறு நம்பிக்கை உற்பத்திகள் மற்றும் மிதக்கும் வீத முறிகள் போன்ற புதிய உற்பத்திகளுக்கான பணிகளையும் வழங்கியது.

#### ஆ) திறந்த சந்தைத் தொழிற்பாடுகளுக்கான பின்னரங்க அலுவலகப் பணிகள்

திறந்த சந்தை தொழிற்பாடுகளுக்கான பின்னரங்க அலுவலகத்தின் தொழிற்பாடுகள், லங்கா செட்டில் பங்கேற்பாளர்களின் திரவத்தன்மை தேவைப்பாடுகளின் முகாமைத்துவத்தை வசதிப்படுத்தின. 2014ஆம்

ஆண்டுக்காலப்பகுதியில் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் ரூ.4,279 பில்லியன் தொகை கொண்ட 2,832 மீள்கொடுப்பனவுக் கொடுக்கல்வாங்கல்களையும் ரூ.4,340 பில்லியன் தொகை கொண்ட 3,451 துணைநில் வைப்பு வசதி கொடுக்கல்வாங்கல்களையும் ரூ.13.75 பில்லியன் தொகை கொண்ட 17 துணைநில் கடன் வசதி கொடுக்கல்வாங்கல்களையும் மேற்கொண்டது.

### 19.3 சுவிப்ற் தொடர்பூட்டல் முறைமையின் முகாமைத்துவம்

சுவிப்ற் என்பது பாதுகாப்பானதும் பத்திரத்தன்மையானதுமான சூழ்நிலையில் நிதியியல் கொடுக்கல்வாங்கல்களின் கொடுப்பனவு அறிவுறுத்தல்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய தகவல்களைப் பரிமாற்றுவதற்கான தொடர்பூட்டல் தளமாகும். 2014ஆம் ஆண்டுக் காலப்பகுதியில், இலங்கை மத்திய வங்கியின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களை வசதிப்படுத்துவதற்காக அனுப்பப்பட்ட மற்றும் பெறப்பட்ட மொத்த சுவிப்ற் செய்திகள் முறையே 1,641,947 ஆகவும் 866,570 ஆகவும் காணப்பட்டன. சுவிப்ற் முறைமைக்காக பயன்படுத்தப்பட்ட சேவையகம் பதிலிடப்பட்டதுடன் பன்னாட்டு நியமங்களுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் வினைத்திறனை மேம்படுத்துவதற்காக பிரயோகங்களின் புதிய பதிப்பு அறிமுகப்படுத்தப்பட்டது.

### 19.4 ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் கீழான கொடுக்கல்வாங்கல்களை வசதிப்படுத்தல்

ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம் என்பது ஒன்பது ஆசிய உறுப்பினர் நாடுகளுக்கிடையில் பன்னாட்டு வியாபாரக் கொடுக்கல்வாங்கல்களின் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகளுக்கானதொரு பரஸ்பர ஒழுங்காகும். 2014ஆம் ஆண்டுப் பகுதியில் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய பொறிமுறையினூடாக ரூ.343.8 பில்லியன் தொகை கொண்ட 6,222 கொடுக்கல்வாங்கல்களுக்கு வசதியளித்தது. ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய பொறிமுறையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட தேறிய தீர்ப்பனவுகளின் பெறுமதி ரூ.287.4 பில்லியனாகக் காணப்பட்டது. ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய பணிப்பாளர் சபையின் 43ஆவது கூட்டம் 2014 மேயில் ஈரானில் நடைபெற்றதுடன் இக்கூட்டத்தில் துணை ஆளுநரும் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களப் பணிப்பாளரும் முறையே பணிப்பாளர் சபையின் பணிப்பாளராகவும் மாற்றுப் பணிப்பாளராகவும் பங்கேற்றனர்.

### 19.5 கொள்கை உருவாக்கம் மற்றும் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளின் மேற்பார்வை

கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களமானது இலத்திரனியல் சில்லறைக் கொடுப்பனவு முறைமைகளின் பாதுகாப்பு மற்றும் வினைத்திறனை உறுதிப்படுத்துவதற்காக அதன் ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகளைத் தொடர்ந்த வேளையில் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளின் சுமூகமான தொழிற்பாட்டினை உறுதி செய்வதற்கான தடங்கலற்ற வியாபார ஒழுங்குபடுத்தல்களையும் பலப்படுத்தியது. இதன்படி 2014ஆம் ஆண்டுக் காலப்பகுதியில், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களத்தினால் பின்வரும் பிரதான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) ஆறு நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் மதிப்பிடப்பட்டதுடன் 2013ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க கொடுப்பனவு அட்டைகள் மற்றும் செல்லிடக் கொடுப்பனவு முறைமைகள் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளின்படி கொடுப்பனவு அட்டைகளின் பணி வழங்குநர்களாக அவர்கள் செயற்படுவதற்கு உரிமமளிக்கப்பட்டது.

(ii) இ-பண அடிப்படையில் செல்லிடக் கொடுப்பனவு முறைமையை வழங்குவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்த செல்லிடத் தொலைபேசி வலையமைப்பு தொழிற்பாட்டாளர் ஒருவருக்கு ஏனைய செல்லிடத் தொலைபேசி வலையமைப்பு தொழிற்பாட்டாளர்களின் வாடிக்கையாளர்களுக்கும் பொருத்தமான பணிகளை வழங்குவதற்கான ஒப்புதல் அளிக்கப்பட்டது.

(iii) மேல் மாகாணத்தின் செல்லிடத் தொலைபேசி வலையமைப்பு தொழிற்பாட்டாளரால் தொழிற்படுத்தப்படும் தனியொரு நோக்கத்திற்கான பெறுமதி சேமிக்கப்பட்ட போக்குவரத்து அட்டை மற்றும் கட்டணச் சேகரிப்பு முறைமையை ஏனைய போக்குவரத்து பணித் துறையினருக்கும் விரிவாக்குவதற்கான ஒப்புதல் வழங்கப்பட்டது. இதன்படி, தொடர்பான பணிகள் இலங்கை போக்குவரத்துச் சபை, வட மத்திய மாகாணப் போக்குவரத்து அதிகாரசபை, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் மாகாணங்களுக்கிடையிலான தனியார் போக்குவரத்துப் பணிகள் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் தொழிற்படுத்தப்படும் விரைவு பாதைகளின் கட்டண அறவீடு போன்றவற்றிற்கு வழங்கப்படும்.

(iv) எல்லா நிதியியல் கையேற்பாளர்களும் (கொடுப்பனவு ஊடகமாக கொடுப்பனவு அட்டைகளை ஏற்றுக்கொள்வதற்கு வியாபாரிகளுடன் ஒழுங்குகளை மேற்கொள்ளும் நிலையங்கள்) வியாபாரிகள் கொடுப்பனவு அட்டைகளை இருமுறை தேய்ப்பதை நிறுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அறிவுறுத்தப்பட்டன. தொடர்பான நிதியியல் கையேற்பாளர்களின் விற்பனை மைய எந்திரங்களிலுள்ள இணைப்புக் கணக்குகளுக்குப் புறம்பாக, வணிக இணைப்புக் கொடுப்பனவு அட்டைகளை நடைமுறைப்படுத்துவது அவற்றின் சொந்தச் சாதனங்களில் இடம்பெறுவதனால், அது, கொடுப்பனவு அட்டைகளில் சேமிக்கப்பட்ட அட்டை உடமையாளரின் தரவுகளை அங்கீகாரமின்றிப் பயன்படுத்த வழிவகுக்குமாகையால், இவ்வறிவித்தல் வாடிக்கையாளர்களின் பாதுகாப்பினை நோக்கமாகக் கொண்டதாகும்.

(v) இலத்திரனியல் சில்லறைக் கொடுப்பனவு முறைமைகளுக்கான தேசிய அளவிலான பொது தளத்தினை நடைமுறைப்படுத்துகின்ற நோக்குடன் லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்டினால் பொதுவான அட்டை மற்றும் கொடுப்பனவு ஆழியின் துணை ஆழிகளை நிறுவுவதற்கான உதவிகள் வழங்கப்பட்டன. இதன்படி, தன்னியக்கக் கூற்றுப் பொறி, இணைய வங்கித்தொழில், செல்லிடத் தொலைபேசி வங்கித்தொழில் மற்றும் கியோக்ஸ்க்கள் போன்ற பல தரப்பட்ட இலத்திரனியல் கொடுப்பனவு வழிமுறைகளினூடாக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளைத் தீர்ப்பனவு செய்வதற்கு பொதுவானதொரு உட்கட்டமைப்பை வழங்குவதற்கு பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழியினை நிறுவுவதற்கு கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம் வசதியளித்தது. இது தொடர்பில், பின்வரும் பணிப்புரைகள் வழங்கப்பட்டன.

(அ) பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழியூடாக மேற்கொள்ளப்படுகின்ற கொடுக்கல்வாங்கல்கள் மீதான விதிக்கத்தக்க கட்டணம் தொடர்பான 2013ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க பொதுவான பணிப்புரையை நீக்கி அதற்குப் பதிலாக பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழியினூடாக மேற்கொள்ளப்படுகின்ற கொடுக்கல்வாங்கல்கள் மீது விதிக்கத்தக்க கட்டணம் தொடர்பான 2014ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பொதுவான பணிப்புரை வழங்கப்பட்டது.

(ஆ) லங்கா கிளியர் (பிறைவேற்) லிமிடெட்டிற்கும் அதேபோன்று பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழியின் உறுப்பு வங்கிகளுக்குமாக முன்மதியுடைய கடன்பாட்டுத் தேவைப்பாடுகளைக் குறித்துரைக்கின்ற பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழியின் தொழிற்பாடுகள் தொடர்பான 2014ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க பொதுவான பணிப்புரை.

(vi) நாளாந்த சில்லறைக் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு பத்திரத்தன்மை மற்றும் நம்பகக் கொடுப்பனவு முறைமையை வழங்குதல் மூலம் வாடிக்கையாளர்களைப் பாதுகாக்கும் நோக்குடன் கடனட்டை மற்றும் செல்லிடக் கொடுப்பனவு வழிகாட்டல்களின்

மூலம் பணி வழங்குநர்களின் இணக்கப்பாட்டினை உறுதி செய்வதற்காக வெளிவாரிக் கண்காணிப்பு மேற்கொள்ளப்படுகிறது.

(vii) அவசரமானதொரு நிலைமையில் வியாபாரத் தொழிற்பாடுகளைத் தொடர்வதற்கான நிலைமையை உறுதிசெய்யும் நோக்கில் லங்கா செட்டிலின் பங்கேற்பாளர்கள் மற்றும் லங்கா கிளியர் (பிறைவேற்) லிமிடெட் ஆகியவற்றின் வியாபாரத் திட்டமிடல்கள் மதிப்பிடப்பட்டன.

### 19.6 பொதுமக்கள் விழிப்புணர்வு

நாட்டின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் தொடர்பான தகவல்களைப் பரப்புவதற்காக கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் “கொடுப்பனவுச் செய்தித்திரட்டு” என்ற காலாண்டு வெளியீட்டினை இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் வெளியிட்டது. மேலும், கொடுப்பனவு முறைகள் மற்றும் ஏனைய தொடர்பான பிரச்சனைகள் பற்றி பிராந்திய மத்திய வங்கியின் அலுவலர்கள், பொதுமக்கள் மற்றும் வங்கித்தொழில் சமூகம் போன்றவற்றிற்கு அறிவூட்டுவதற்காக தேவைகளின் அடிப்படையில் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் 11 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொண்டது.

## 20. கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்பு திணைக்களம்

கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களம் உபாயத் திட்டமிடல் தயாரித்தலினை ஒருங்கிணைத்தல், உபாயத் திட்ட நடைமுறைக்கிடல் செயற்பாட்டினைக் கண்காணித்தல், கொள்கை மீளாய்வுகள் மற்றும் மத்திய வங்கியினால் பின்பற்றப்பட்ட கொள்கை வழிமுறைகள் மீதான கற்கைகளினை நடாத்துதல் ஆகிய பொறுப்புக்களைக் கொண்டுள்ளது.

### 20.1 உபாயத் திட்டமிடல் மற்றும் கண்காணிப்புச் செயற்பாட்டினை ஒருங்கிணைத்தல்

2014 சனவரி 01 ஆம் நாளன்று வேலை தொடக்கி வைத்தல் நிகழ்வில் “பொறிக்குள் சிக்குவதைத் தவிர்ப்போம்” எனும் தொனிப்பொருளின் கீழ் 2014 - 2018ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான உபாயத் திட்டம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. அதன் பின்னர், வங்கி அலுவலர்கள் மத்தியில் விழிப்புணர்வினை உருவாக்குவதற்காக திணைக்களங்களின் இலக்குகள் மற்றும் உபாயங்கள், உபாய நோக்கங்களை அடைவதற்குப் பின்பற்ற வேண்டிய பொறிமுறைகள் அத்துடன் உபாயத் திட்டத்தின் நடைமுறைக்கிடலினை அளவிடப் பயன்படுத்தப்படும் முக்கிய செயலாற்றக் குறிகாட்டிகள் மீதான செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.

உபாயத் திட்டத்தின் செயற்பாட்டினைக் கண்காணிப்பதற்கு ஒவ்வொரு காலாண்டும் திணைக்களங்களுடன் மீளாய்வுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டு அதன் முன்னேற்றம் உபாயத் திட்ட மீளாய்வுக் குழுவிற்கு அறிக்கையிடப்பட்டது. உபாயத் திட்ட மீளாய்வுக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட விதந்துரைப்புக்களும் கருத்துக்களும் திணைக்களங்களிற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தொடர்பூட்டப்பட்டன. 2014இல், திணைக்களங்கள் மற்றும் மாகாண அலுவலகங்கள் 2014 - 2018 இற்கான உபாயத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட வேலைகளில் 97.6 சதவீத அடைவினை பதிவு செய்தன.

### 20.2 உபாயத் திட்டமிடல் நிகழ்ச்சித்திட்டத்தினை ஒழுங்குபடுத்தல்

கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தினால் 2014 ஒத்தோபரில் ஒன்பதாவது உபாயத் திட்டமிடல் நிகழ்ச்சித் திட்டம் ஒழுங்குபடுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் நாணயச் சபையின் உறுப்பினர்கள், பொது முகாமைத்துவக் குழு, திணைக்களத் தலைவர்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட அலுவலர் உறுப்பினர்கள் மற்றும் ஆலோசனைக் குழுவின் அங்கத்தவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். 2014 - 2018 இற்கான உபாயத் திட்டத்தின் முதல் மூன்று காலாண்டுப் பகுதியின் செயலாற்றம் மீளாய்வு செய்யப்பட்டதுடன் அடுத்த ஆறு ஆண்டு காலப்பகுதியான 2015 - 2020 இற்கான உபாயத் திட்டம் “2020இல் இலங்கை 7 ஆயிரத்திற்கும் கூடுதலாக” எனும் தொனிப்பொருளின் கீழ் உருவாக்கப்பட்டது. உபாயத் திட்டம் 2015 - 2020 ஆனது 2020 அளவில் தலைக்குரிய வருமானம் ஐ.அ.டொலர் 7,000 இற்கும் மேலாக அடைதலினை எதிர்பார்க்கிறது.

### 20.3 கொள்கை மீளாய்வுகளையும் கற்கைகளையும் நடத்துதல்

ஆண்டுக் காலப்பகுதியில், கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களம் இலங்கை மத்திய வங்கியின் “நோக்கங்கள், தொழிற்பாடுகள் மற்றும் ஒழுங்கமைப்பு” எனும் தலைப்பில் சிறுபுத்தகமொன்றினை தயாரித்தது. மேலும், கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களம் ‘கொடுகடன் உத்தரவாத ஒத்துழைப்பு மற்றும் கொடுகடன் உத்தரவாதத் திட்டத்திற்கான முன்மொழிவு’ என்பனவற்றிற்கான முன்மொழிவுகள் ‘ஏற்றுமதிச் செயலாற்றத்தினைத் தீர்மானிக்கும் காரணிகள்’, ‘நிதியியல் துறை சட்டங்கள்’ மற்றும் ‘இலங்கையில் ஏற்றுமதித் துறை அபிவிருத்திகள்: போக்குகளும் சவால்களும்’ போன்ற பல்வேறு கொள்கை தொடர்பான ஆய்வுகளில் ஈடுபட்டுள்ளது. கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்பு திணைக்களத்தின் அலுவலர்களும் காட்சிப்படுத்தலுடன் கூடிய விரிவுரைகள் மற்றும் ‘பங்குலாபக் கொள்கை’, ‘உலக வயது அவதானிப்புச் சுட்டி’, ‘நிதியியல் உள்ளடக்கம்’ மற்றும் ‘இலங்கை வழங்கல் சங்கிலிகள்’ போன்ற தலைப்புக்கள் மீதான கலந்துரையாடுதல்கள் மூலம் அறிவினைப் பகிர்ந்து கொள்ளும் பணிகளில் ஈடுபட்டனர்.

கொள்கை தொடர்பான ஆவணங்களின் சேர்க்கைகளினை வழங்கும் இலத்திரனியல் கொள்கை மற்றும் நடைமுறை நூலகம் தொடர்ச்சியாக இற்றைப்படுத்தப்படுவதுடன் நூலகத்தில் தற்போது 776 ஆவணங்கள் காணப்படுகின்றன.

## 21. பொதுப்படுகடன்

1950 ஓகத்து 28ஆம் திகதி இலங்கை மத்திய வங்கி ஆரம்பிக்கப்பட்ட பொது நாணய விதிச் சட்டத்தின் 113ஆவது பிரிவின் நியதிகளுக்கிணங்க பொதுப்படுகடன் முகாமைத்துவத்திற்கான அரசின் முகவராக மத்திய வங்கியின் சட்ட ரீதியான பொறுப்புக்களை வழங்குவதற்கு பொதுப்படுகடன் திணைக்களம் நிறுவப்பட்டது. ஒதுக்கீட்டுச் சட்டத்தில் கூறப்பட்டிருக்கும் அரச மொத்தக் கடன்பாட்டு தேவைப்பாட்டினை பூர்த்தி செய்வதற்காக நிதியினைத் திரட்டுதல், படுகடன் தீர்ப்பனவுக் கடப்பாடுகளின் உரிய நேரத்திலான கொடுப்பனவுகள், லங்கா செக்குயர் முறைமையினூடாக அரச பிணையங்களின் தீர்ப்பனவுகளின் சுமூகமான தொழிற்பாட்டினை வசதிப்படுத்தல் மற்றும் மத்திய வைப்பக முறைமையில் அரச பிணையங்களின் உரித்துப் பதிவினை அதேநேர அடிப்படையில் பேணுதல் பொதுப்படுகடன் திணைக்களத்தின் முக்கிய தொழிற்பாடுகளாகும். மேலும் உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டம் மற்றும் பதிவு செய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் என்பனவற்றின் நியதிகளின்படி அரச பிணையங்களில் முதலீடு செய்பவர்களின் பாதுகாப்பு மற்றும் முதனிலை வணிகர் முறைமையின் உறுதிப்பாட்டினை உறுதி செய்வதற்காக பொதுப்படுகடன் திணைக்களமானது முதனிலை வணிகர்களை ஒழுங்குமுறைப்படுத்தலிலும் மேற்பார்வை செய்தலிலும் படுகடன் சந்தைகளின் அபிவிருத்திகளிலும் ஈடுபட்டது.

### 21.1 ஒதுக்கீட்டுச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறு அரசின் மொத்தக் கடன்பாட்டுத் தேவையினைப் பூர்த்தி செய்வதற்கு நிதிகளினைத் திரட்டுதல்

2014இல் அரசின் மொத்த கடன்பாட்டுத் தேவைக்கு நிதியிடுவதற்காக பொதுப்படுகடன் திணைக்களம் முக்கியமாக திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள், இலங்கை அபிவிருத்தி முறிகள் மற்றும் நாட்டுக்கான பன்னாட்டு முறிகள் என்பனவற்றின் வழங்களினூடாக உள்நாட்டு மற்றும்

பன்னாட்டு மூலங்களிலிருந்து நிதிகளைத் திரட்டியது. அத்தகைய சாதனங்களின் கீழான அத்தகைய நிதியிடல் நடவடிக்கைகளின் சுருக்கம் கீழே தரப்படுகிறது.

(அ) **திறைசேரி உண்டியல்கள்:** 2014இல் வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களின் மொத்த முகப்புப் பெறுமதி ரூ.1,121.7 பில்லியனாக விளங்கியது. இவ்வழங்கல்கள் முக்கியமாக வாராந்த முதலாந்தர ஏலங்களினூடாக கிடைக்கச் செய்யப்பட்டன. மீள்முதலீடுகள் உட்பட திறைசேரி உண்டியலில் செய்யப்பட்ட மொத்த வெளிநாட்டு முதலீடு 2014இல் ரூ.55.4 பில்லியனாகக் காணப்பட்டது. 2014ஆம் ஆண்டுக்கான மொத்த திறைசேரி உண்டியல் முதிர்ச்சிகளின் மொத்தப் பெறுமதி ரூ.1,145.5 பில்லியனாக விளங்கியது. இதன்படி, நடுத்தர காலத்திலிருந்து நீண்ட கால திறைசேரி முறிகளை வழங்குதலினூடாக திரட்டப்பட்ட நிதியின் மூலம் ரூ.23.8 பில்லியனான திறைசேரி உண்டியல்கள் இளைப்பாற்றப்பட்டன.

(ஆ) **திறைசேரி முறிகள்:** 2014இல் வழங்கப்பட்ட திறைசேரி முறிகளின் மொத்த முகப்புப் பெறுமதி ரூ.860.7 பில்லியனாக விளங்கியது. இவ் வழங்கல்கள் 15 முதனிலை ஏலங்களினூடாகவும் நேரடியான வைப்பு அடிப்படையிலும் கிடைக்கச் செய்யப்பட்டன. ஆண்டுக்காலப்பகுதியில் ரூ.470.8 பில்லியன் பெறுமதியான திறைசேறி முறிகள் முதிர்ச்சியடைந்தன. 30 ஆண்டு திறைசேரி முறிகளின் வழங்கல் ஆய்வின்கீழ் ஆண்டிலும் தொடர்ந்தன. 2014இல் வெளிநாட்டவர்களினால் திறைசேரி முறிகளில் செய்யப்பட்ட மொத்த வெளிநாட்டு முதலீடு ரூ.401.7 பில்லியனாக விளங்கியது.

(இ) **இலங்கை அபிவிருத்தி முறிகள்:** 2014இல் மொத்தமாக ஐ.அ.டொலர் 731.5 மில்லியன் பெறுமதியான இலங்கை அபிவிருத்தி முறிகள் வழங்கப்பட்டன. ஆண்டுக்காலப்பகுதியில் மொத்தமாக ஐ.அ.டொலர் 571.0 மில்லியன் பெறுமதியான இலங்கை அபிவிருத்தி முறிகள் முதிர்ச்சியடைந்தன.

(ஈ) **நாட்டிற்கான பன்னாட்டு முறிகள்:** 2014இல் முழுமொத்த அரச கடன்பாடுகள் செயற்றிட்டத்திற்கு இசைந்து செல்லும் விதத்தில், ஐ.அ.டொலர் 1,500 மில்லியன் பெறுமதியான நாட்டுக்கான பன்னாட்டு முறிகள் இரண்டு ஏலங்களின் மூலம் வழங்கப்பட்டன. இதில் ஐ.அ.டொலர் 1,000 மில்லியன் பெறுமதியான ஏலம் ஒன்று 2014 சனவரியிலும் மற்றையது ஐ.அ.டொலர் 500 மில்லியன் பெறுமதியான ஏலம் 2014 ஏப்பிறலிலும் வழங்கப்பட்டது.

2014இல் நிலவிய குறைந்த மற்றும் உறுதியான வட்டிவீதச் சூழ்நிலை நோக்கியல் நிதியிடல் உபாயங்கள் வெளிநின்ற உள்நாட்டுப் படுகடன் இருப்புக்களின் வீழ்ச்சிக்கான சராசரிக் காலத்தை 2013இன் இறுதியில் 4.82 ஆண்டுகளிலிருந்து 2014 இறுதியில் 5.75 ஆண்டுகளுக்கு விரிவாக்குவதற்கு நீண்ட காலப் படுகடன் சாதனங்களைத் தீவிரமாக வழங்குவதற்கு பொதுப்படுகடன் திணைக்களத்தினை இயலச்செய்தது. 2014 காலப்பகுதியில், கூடிய கழிவில் வெளிநிற்கும் முறி வழங்கலின் எதிர்மறையான சுமைகளை ஈடுசெய்வதற்காக, திறைசேரி முறிகளின் வழங்கல் உபாய வட்டத்துடன் கூடிய முறி என தலைப்பிடப்பட்டது. அத்துடன் முதலாந்தரச் சந்தையில் நீண்ட காலத் திறைசேரி முறிகளை வெற்றிகரமாக கிரமமாக வழங்கியமையின் மூலம் விளைவு வளையியின் நீண்ட காலம் செயற்படுத்தப்பட்டது மட்டுமன்றி நீட்டவும்பட்டது. இது, அரச பிணையங்களுக்கான முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தை விளைவு வளையிகளுக்கிடையேயான முரண்பாடுகளை நீக்குவதன் மீது செல்வாக்கினைச் செலுத்தியதுடன் 2014 காலப்பகுதியில் காத்திரமான அடிப்படை அளவுக் குறியீட்டினை நிர்ணயிப்பதனையும் இயலவும் செய்தது.

### 21.2 பொதுப்படுகடனை தீர்ப்பனவு செய்தல்

இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட மொத்தப் படுகடன் தீர்ப்பனவுகளினது பெறுமதி ரூ.1,076.3 பில்லியனாகும். இது அரசிற்கான ரூ.777.5 பில்லியன் பெறுமதியினைக் கொண்ட உள்நாட்டுப் படுகடனையும் ரூ.298.8 பில்லியன் பெறுமதியினைக் கொண்ட வெளிநாட்டுப் படுகடனையும் கொண்டுள்ளது.

### 21.3 அரச பிணையங்களின் தீர்ப்பனவிற்கு வசதியளித்தல்

லங்கா செகுயர் முறைமையின் தடங்கலற்ற அதேநேர தொழிற்பாடுகளை உறுதிப்படுத்துவதன் மூலம் அரச பிணையங்களின் முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல் வாங்கல்களின் தீர்ப்பனவிற்கு பொதுப்படுகடன் திணைக்களம் தொடர்ந்தும் வசதியளித்தது. 2014 திசெம்பர் இறுதியிலுள்ளவாறு, லங்கா செகுயரின் பத்திரங்களற்ற பிணையங்களின் மொத்தப் பெறுமதி ரூ.4,092.0 பில்லியனாகக் காணப்பட்டது.

2014 காலப்பகுதியில் காகில்ஸ் பாங்க் லிமிடெட் மற்றும் பேப்பச்சுவல் ரெஷரீஸ் லிமிடெட் ஆகிய இரண்டு புதிய பங்குபற்றுனர்கள் லங்கா செகுயரின் முகவர் நேரடி பங்குபற்றுனர்களாக நியமிக்கப்பட்டனர். இதன்மூலம் முகவர் நேரடி பங்குபற்றுனர்களின் எண்ணிக்கை 33ற்கு அதிகரித்தது.

### 21.4 அரச பிணையங்களில் உரித்துப் பதிவினைப் பேணுதல்

பொதுப்படுகடன் திணைக்களத்தில் பேணப்படும் மத்திய வைப்பக முறைமையை அரச பிணையங்களின் உரித்துப் பதிவினை அதேநேர அடிப்படையில் இற்றைப்படுத்தும் வசதி, அரச பிணையங்களுக்கான இரண்டாந்தரச் சந்தை நடவடிக்கைகளையும் திரவத்தன்மையும் அதிகரிக்க உதவியுள்ளது. கணக்குகளை வைத்திருப்பவர்களுக்கு அச்சடிக்கப்பட்ட கூற்றுகளுக்கு பதிலாக இலத்திரனியல் கூற்றுக்களை மின்னஞ்சலூடாக பெற்றுக்கொள்வதற்கான வசதியினை தேர்வு செய்தவர்களுக்குஇலத்திரனியல் வடிவத்தில் காலாந்தரக்கூற்றுக்களை அனுப்புதல் முறைமை ஆரம்பிக்கப்பட்டதன் மூலம் அரச பிணையங்களின் உரித்தில் ஏற்படும் மாற்றங்களை வினைத்திறன் மற்றும் துல்லியமாக பதிவு செய்கின்றமை, மத்திய வைப்பக முறைமையில் கணக்குகளை வைத்திருப்பவர்களது உடமைகள், கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் கொடுப்பனவுகள் மிதமான காலாந்தர கூற்றுக்களை அனுப்பும் செயன்முறையினை 2014இல் மேலும் மேம்படுத்தியது. 2014 ஏப்றலிலிருந்து திசெம்பர் வரை பொதுப்படுகடன் திணைக்களம் 1,786 இ-கூற்றுக்களை அனுப்பி வைத்ததுடன் மத்திய வைப்பக முறைமையில் கணக்கு வைத்திருப்போருக்கு 25,740 அரையாண்டு உடமைக் கூற்றுக்களையும், கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் 70,126 மாதாந்தக் கூற்றுக்களையும் 52,620 கொடுப்பனவுக் கூற்றுக்களையும் அஞ்சல் மூலம் அனுப்பி வைத்தது. மேலும், அரச பிணையங்களின் முதலீட்டாளர்கள் "லங்காசெக்குயர்நெட்" இன் இணைய கணக்கு வேற்றுமைப்படுத்தல் வசதி மூலம் தங்களின் இற்றைப்படுத்தப்பட்ட பிணையக்கணக்குகளை பார்வையிட வசதியளிக்கப்பட்டுள்ளனர். 2014 திசெம்பர் இறுதியில் உள்ளவாறு மத்திய வைப்பக முறைமையில் பதிவசெய்யப்பட்ட கணக்கு வைத்திருப்பவர்களின் மொத்த எண்ணிக்கை 86,944 ஆக விளங்கியது.

### 21.5 படுகடன் சந்தை அபிவிருத்தி

அபிவிருத்தியடைந்த படுகடன் சந்தையானது அரசாங்கத்தின் மீள்நிதியிடல் இடர்நேர்வு மற்றும் கடன்பாடுகளின் கிரயம் போன்றவற்றைக் குறைப்பதற்கான முக்கியமான தொரு கூறாகும். எனவே, 2014இல் பொதுப்படுகடன் திணைக்களமானது பின்வரும் அளவீடுகளினால் படுகடன் பிணையங்கள் சந்தையின் அபிவிருத்தியில் தொடர்ந்தும் ஈடுபடுகின்றது.

(அ) முதலீட்டாளர்கள் மற்றும் முதலாந்தர வணிகர்களைப் பாதுகாக்கும் நோக்குடன் முதலாந்தர வணிகர்கள் சங்கம், சட்ட ஆலோசகர்கள் மற்றும் ஏனைய ஆர்வலர்களின் ஆலோசனையுடன் முதன்மை மீள்கொள்வனவு உடன்படிக்கைகள் மற்றும் வாடிக்கையாளர் உடன்படிக்கைகள் போன்ற சந்தை மீள்கொள்வனவு/ நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களுக்கான ஆவணப்படுத்தல்கள் தரப்படுத்தப்பட்டது.

(ஆ) அரச பிணையங்களில் முதலீட்டாளர்களின் கேள்விகளையும் எதிர்பார்ப்புக்களையும் பூர்த்தி செய்யப்படுவதனை உறுதிசெய்யும் விதத்தில் வாடிக்கையாளர் பணிகள் தரத்துடனும் திருப்திகரமான முறையிலும் வழங்கப்படுவதனை மேலும் மேம்படுத்தும் நோக்கத்துடன் வாடிக்கையாளர் சாசனமொன்று நடைமுறைக்கிடல்.

(இ) அரச பிணையங்களை வியாபாரம் செய்வதற்கான மத்திய இணைத்தரப்பு மற்றும் இ-வியாபாரத் தளம் போன்றவற்றை அறிமுகம் செய்வதற்கான படிமுறைகள் மேலும் மேற்கொள்ளப்பட்டன. பொதுப்படுகடன் திணைக்களமானது அரச பிணையங்களை வியாபாரம் செய்வதற்காக கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் இ-வியாபாரத் தளத்திற்கான தரமுயர்த்தல்களை அறிமுகப்படுத்துவதற்கு பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு, கொழும்பு பங்குப் பரிவர்த்தனை மற்றும் முதலாந்தர வணிகர்கள் போன்றோருடன் நெருக்கமாகப் பணியாற்றுகிறது. செயற்றிட்டத்தை மேற்கொள்வதில் முதன்மை வகிபாகராக கொழும்பு பங்குப் பரிவர்த்தனையுடன் ஆலோசனை மற்றும் செயற்றிட்ட முகாமையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டதுடன் சந்தை ஆய்வுக் கட்டம் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டது.

## 21.6 அரச பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களின் ஒழுங்கு விதிகள்

முதனிலை வணிகர் முறைமையின் உறுதிப்பாட்டினையும் அரச பிணையங்களிலுள்ள முதலீட்டாளர்களினது பாதுகாப்பினையும் உறுதிப்படுத்தும் நோக்குடன், பொதுப்படுகடன் திணைக்களம், உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டம், பதிவு செய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் என்பனவற்றின் நியதிகளில், 2014இல் அரச பிணையங்களின் முதனிலை வணிகர்களுக்கு மேற்பார்வை செய்வதிலும் ஒழுங்குவிதிகளைப் பேணுவதிலும் தொடர்ந்தும் ஈடுபட்டிருந்தது. 2014இல் பொதுப்படுகடன் திணைக்களம் மேற்கொண்ட ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகளின் சுருக்கம் கீழே தரப்படுகிறது.

### (அ) முன்மதியுடைய ஒழுங்குவிதிகள்

முதனிலை வணிகர் முறைமையின் உறுதிப்பாட்டினையும் அரச பிணையங்களிலுள்ள முதலீட்டாளர்களின் பாதுகாப்பினையும் மேலும் பலப்படுத்தும் நோக்குடன் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் பணிப்புரைகளினூடான ஒவ்வொரு முதனிலை வணிகர்களினது இணங்குவிப்பினை மதிப்பிடுவதற்கு மிகவும் முக்கியத்துவம் வழங்கப்பட்டன. அத்தகைய ஒழுங்குவிதிகள் மற்றும் பணிப்புரைகள் மற்றும் அவற்றின் முறைமைகளுக்கிடையிலான அடையாளம் காணப்பட்ட இடைவெளிகளை நிவர்த்திசெய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

### (ஆ) முதனிலை வணிகர்களைப் பரீட்சித்தல்

சந்தை இடநேர்வு, திரவ இடநேர்வு மற்றும் தொழிற்பாட்டு இடநேர்வு போன்ற பல வகை இடர்நேர்வுகள் மற்றும் இறுதி இடர்நேர்வுகளைத் தணிப்பதற்கான போதுமான மூலவளங்களுடன் சேர்ந்த பல்வேறு இடர்நேர்வுகளுக்கு முதனிலை வணிகர்கள் உள்ளாகும் தன்மை என்பன பற்றி தலத்திலான பரீட்சிப்புக்களின் போது மதிப்பிடப்பட்டது. அதன்படி, 2014இல், பதினைந்து இடநேர்வு அடிப்படையிலான தலத்திலான பரீட்சிப்புக்கள் நிறைவு செய்யப்பட்டன. அத்தகைய பரீட்சிப்பு அறிக்கைகளில் எடுத்துக்காட்டப்பட்ட எஞ்சியுள்ள மேற்பார்வைக்குரிய கரிசனைகளை சரிசெய்வதற்கான கால நிர்ணயத்துடன் கூடிய நடவடிக்கைத் திட்டங்கள் நடைமுறைக்கிடப்பட்டன. கரிசனைக்குரிய ஒழுங்குமுறைப்படுத்தல் விடயங்களை சரி செய்வது தொடர்பான முன்னேற்றங்களானது முதனிலை வணிகர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற காலாண்டு அறிக்கைகளினூடாக கண்காணிக்கப்பட்டன.

### (இ) தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பு

தனிப்பட்ட முதனிலை வணிகர்கள் அதேபோன்று முழுக் கைத்தொழிலினதும் நிதியியல் ஆற்றல் மற்றும் தொழிற்பாட்டுச் செயலாற்றம் என்பனவற்றைக் கொண்ட தற்பொழுது இடம்பெற்றுவரும் கண்காணிப்பு பொறிமுறையொன்றான தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பில் ஃபின்வலையமைப்பு ஊடாக பொதுப்படுகடன் திணைக்களம் தொடர்ந்தும் ஈடுபட்டது. அத்தகைய கண்காணிப்பு செயற்பாடுகளின் முடிவுகளின் அடிப்படையில் தேவையானவிடத்து பொதுப்படுகடன் திணைக்களம் பொருத்தமான சரிசெய்யும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டது. முதனிலை வணிகர்களின் நிதியியல் அறிக்கைகளின் வினைத்திறனை மேம்படுத்தும் நோக்கில், ஃபின்வலையமைப்புக்கு பல முன்னேற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

### (ஈ) ஒழுங்குமுறைப்படுத்தல் ஒப்புதல்கள்

2014 காலப்பகுதியில், யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பிஎல்சியானது அரச பிணையங்களுக்கான முதனிலை வணிகர்களாக நியமிக்கப்பட்டது. இதன் மூலம் முதனிலை வணிகர்களின் மொத்த எண்ணிக்கை 2014இன் இறுதியில் 16 இற்கு அதிகரித்தது.

### (உ) முதனிலை வணிகர்களின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுடனான மாதாந்தக் கூட்டங்கள்

2014இல் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/ பதிவாளருடனான முதனிலை வணிகர்களின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களின் 12 மாதாந்தக் கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன. இக்கூட்டங்கள் பொருளாதார மற்றும் நாணய அபிவிருத்திகள், பொதுப்படுகடன் தொழில் துறையின் செயலாற்றம் மற்றும் அரச பிணையங்களின் முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தை நடவடிக்கைகளின் செயலாற்றத்தில் தாக்கங்களை ஏற்படுத்தக்கூடிய ஏனைய பல்வேறு துறைகள் தொடர்பாகவும், சந்தை அபிவிருத்தி பற்றியும் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளும் அரங்கமாகவும் பணியாற்றியது.

## 21.7 நாட்டிற்கான பன்னாட்டுத் தரமிடலின் கிடைப்பனவினை உறுதிப்படுத்தல்

அரசாங்கத்தின் இறை முகவராகத் தொழிற்படும் இலங்கை மத்திய வங்கியிடம் பன்னாட்டு தரமிடல் முகவர்களிலிருந்தான நாட்டிற்கான பன்னாட்டு தரமிடலின் கிடைப்பனவினை உறுதிப்படுத்துவதற்கும் அத்தகைய தரமிடல் மத்திய வங்கியின் பொதுப்படுகடன் முகாமைத்துவத் தொழிற்பாடுகளுடன் நேரடியாக இணைக்கப்பட்டுள்ளமையினால் பிட்ஜ் றேட்டிங் லிமிடெட், ஸ்டான்டட் அன்ட் புவர் மற்றும் மூடிஸ் இன்வெஸ்டர் சேர்விஸ் என்பனற்றினால் ஆண்டுதோறும் வழங்கப்பட்ட தரமிடல் பணிகளை மதிப்பீடு செய்வதற்குமான பொறுப்பும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதற்கமைய, பொதுப்படுகடன் திணைக்களம் மூன்று தரமிடல் முகவர்களினாலும் வழங்கப்பட்ட பணிகளைத் தொடர்ந்தும் மதிப்பிட்ட வேளையில் 2014இல் அவற்றின் இலங்கை தொடர்பான ஆண்டு தரமிடல் மீளாய்விற்கும் வசதியளித்தது.

**இணைப்பு II-2** அரச பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்கள் (ஆங்கில அகர வரிசைப்படி)

| | |
|---|---|
| 1. | அக்குயிட்டி செக்குறிட்டீஸ் லிமிடெட் |
| 2. | இலங்கை வங்கி |
| 3. | கப்பிட்டல் அலையின்ஸ் லிமிடெட் |
| 4. | கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி |
| 5. | என்ட்ரஸ்ட் செக்குறிட்டீஸ் பிஎல்சி |
| 6. | பெர்ஸ்ட் கப்பிட்டல் ரெசறீஸ் லிமிடெட் |
| 7. | நற்வெல்த் செக்குறிட்டீஸ் லிமிடெட் |
| 8. | என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ட் கம்பனி லிமிடெட் |
| 9. | மக்கள் வங்கி |
| 10. | சம்பத் வங்கி பிஎல்சி |
| 11. | செலான் வங்கி பிஎல்சி |
| 12. | வெல்த் ட்ரஸ்ட் செக்குறிட்டீஸ் லிமிடெட் |
| 13. | பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேசன் பிஎல்சி |
| 14. | த கொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோப்பிரேசன் லிமிடெட் |
| 15. | பேப்பற்சுல்ஸ் ரெஷறீஸ் லிமிடெட் |
| 16. | யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு பிஎல்சி |

## 22. பிரதேச அபிவிருத்தி

பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் 2002 சனவரியில் அப்போதைய கிராமியக் கொடுகடன் திணைக்களம் மற்றும் அபிவிருத்தி நிதித் திணைக்களம் ஆகிய இரு திணைக்களங்களினையும் ஒருங்கிணைத்து பங்குபற்றும் நிதியியல் நிறுவனங்களினூடாக மீள்நிதியத் திட்டங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களினை நிருவகித்தல் என்பவற்றினால் நாட்டின் சமநிலையான வளர்ச்சியினை அடைவதற்கான கொள்கைகளிற்கு உதவுதல் மற்றும் நிதியியல் வசதிகளை வழங்குவதை மேம்படுத்துதல் ஆகிய முக்கிய நோக்கங்களுடன் உருவாக்கப்பட்டது. பங்குபற்றும் நிதியியல் நிறுவனங்களிற்கு மீள்நிதிய வசதிகள் அல்லது வட்டி உதவுதொகையினை வழங்கும் கடன் திட்டங்கள் என்பன வேளாண்மை மற்றும் விலங்கு வளர்ப்பு, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் மற்றும் நுண்பாக நிதியிடல் மற்றும் ஏனைய துறைகளுக்கு வழங்கப்பட்டன.

ஆண்டுக் காலப்பகுதியில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் பல்வேறு கடன் திட்டங்களின் கீழ் வழங்கப்படக்கூடிய வட்டி வீதங்கள் மற்றும் உயர்ந்தபட்சக் கடன் தொகை என்பனவற்றைத் திருத்துவதற்கான கொள்கைத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. கடன்களைப் பெற்ற பயனாளிகள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வை அதிகரித்தல் மற்றும் திறன்களை மேம்படுத்தல் செயலின் கீழ் திணைக்களம் தொடர்ந்து விழிப்புணர்வைக் கட்டியெழுப்பும் திட்டங்களினை அச்சிடல், இலத்திரனியல் மற்றும் ஒலிபரப்பு ஊடகங்களினைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டன.

2014 காலப்பகுதியில், பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தால் பதினான்கு கொடுகடன் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது (அட்டவணை II-19). இவற்றில், மூன்று திட்டங்கள் வேளாண்மை மற்றும் விலங்கு வளர்ப்புத் துறையினை இலக்கிட்ட வேளையில் ஆறு கொடுகடன்கள் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் துறைக்கானவையாகும். எஞ்சிய ஐந்து திட்டங்களும் நுண்பாகம் மற்றும் ஏனைய துறைக்காகத் திட்டமிடப்பட்டிருந்தன. இக்கொடுகடன் திட்டங்கள் மற்றும் கொடுகடன் துணைப் பணிகள் என்பவற்றிற்கான நிதி இலங்கை அரசாங்கம், இலங்கை மத்திய வங்கி, கொடை முகவர்கள் மற்றும் பங்குபற்றும் நிதி நிறுவனங்கள் என்பனவற்றின் மூலம் நிதியிடப்பட்டது. பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட கடன் திட்ட செயற்பாடுகளின் கணக்கு விபரங்கள் கீழே சுருக்கமாக தரப்பட்டுள்ளன

### 22.1 வேளாண்மை மற்றும் விலங்கு வளர்ப்புத் துறை

“சறுசற” அல்லது புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம் மற்றும் பாரியளவு பால் உற்பத்தி அபிவிருத்தி கடன் திட்டம் என்பன தொடர்ச்சியாக இத்துறைக்கு கொடுகடன் வழங்குவதற்காக தொழிற்படுத்தப்படும் முக்கிய திட்டங்களாக விளங்குகின்றன.

- புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தினூடான கொடுகடன் வசதிகளின் வழங்கல் சந்தைக்கு வேளாண்மை உற்பத்திகளின் கிடைப்பனவு அதிகரித்தமைக்கு காரணமாகியதுடன், இது உணவு விலைகளினை ஏற்றுக்கொள்ளக்கூடிய மட்டங்களில் பேண உதவியது. பாரியளவு பால் உற்பத்தி அபிவிருத்திக் கடன் திட்டம், பண்ணை அபிவிருத்தி, பதனிடல், போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் உள்ளங்கலான அனைத்துப் பால் உற்பத்தி தொடர்பான நடவடிக்கைகளிற்கும் தொடர்ச்சியான நிதியியல் உதவிகளை வழங்கியது. இத்திட்டமானது இலங்கையில் பால் நுகர்வில் தன்னிறைவு அடைகின்ற இலக்கினைப் பூர்த்தி செய்வதற்கு உதவுமென திட்டமிடப்பட்டது
- இவ்விரு திட்டங்களின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் கடன்கள் ரூ.7,700 மில்லியன் பெறுமதியானது திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்பட்ட அனைத்துக் கொடுகடன் திட்டங்களின் கீழ் விடுவிக்கப்பட்ட மொத்தப் பகிர்ந்தளிப்புக்களில் 48.3 சதவீதத்திற்கு வகைகூறியது.
- 2014இல் ஆண்டுக் காலப்பகுதியில் 86,143 வேளாண்மையாளர்களுக்குத் தேவையான தொழிற்படும் மூலதனத் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ் ரூ.6,749 மில்லியன் மொத்தப் பெறுமதியான கடன்களைப் பகிர்ந்தளித்தது. எனினும், 2014இல் நிலவிய பாதகமான காலநிலையின அனுபவித்ததன் காரணமாக நிலையினால் புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம் கடன்களின் பெறுமதி நியதிகளில் 17 சதவீத வீழ்ச்சியினையும் கடன்களின் எண்ணிக்கை நியதிகளில் 11 சதவீதத்தினையும் பதிவு செய்தது. இத்தொகையில், 2013/2014 பெரும்போக காலப்பகுதியில் 54,527 வேளாண்மையாளர்களிற்கிடையே ரூ.4,338 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்ட வேளையில் எஞ்சிய ரூ.2,411 மில்லியன் சிறுபோக காலப்பகுதியில் 31,616 வேளாண்மையாளர்களிற்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்டது.
- புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட வேளாண்மைக் கடன்களின் அதியுயர் தொகை யாழ் மாவட்டத்திற்கும் (19 சதவீதம்) பெற்றதினை தொடர்ந்து, அநுராதபுரம் (14 சதவீதம்), அம்பாந்தோட்டை (10 சதவீதம்) மற்றும் அம்பாறை (10 சதவீதம்) ஆகிய மாவட்டங்கள் பெற்றுள்ளன.
- ஏதேனும் தடைகளின்றி பயிர்ச்செய்கையினை மேற்கொள்ளும் பொருட்டு பாதகமான காலநிலை நிலைமையினால் பெரிதும் பாதிக்கப்பட்ட வேளாண்மையாளர்கள் பெற்றுக்கொண்ட கடன்கள் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் மீள்திட்டமிடப்பட்டது.
- 2014 யூனிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில், புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களிற்கு ஏற்புடைத்தான வட்டி வீதம் சந்தைப் போக்குகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் 9 சதவீதத்திலிருந்து 7 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டதுடன் அதிகரித்த பயிர்ச்செய்கை செலவினைப் பூர்த்தி செய்வதற்காக அதிகூடிய கடன் தொகை அதிகரிக்கப்பட்டது.
- ஆண்டுக் காலத்தில் பாரியளவு பால் உற்பத்தி அபிவிருத்திக் கடன் திட்டத்தின் கீழ் ரூ.951 மில்லியன் பெறுமதியான தொகை 604 பால் உற்பத்தியாளர்கள் மற்றும் பால் பண்ணையாளர்களுக்கு வழங்கப்பட்டது. 2014 தொடக்கத்திலிருந்து பல்வேறு மாவட்டங்களில் கால்நடைகளிற்கிடையே பாத மற்றும் வாய் நோய்

பரவியமை மற்றும் உரிய அதிகாரிகளினால் பால் பண்ணை உற்பத்தி நடவடிக்கைகளுக்கான கட்டுப்பாடுகள் தொடர்ந்தும் விதிக்கப்பட்டமை என்பனவற்றினால் பாரியளவு பால் உற்பத்தி அபிவிருத்திக் கடன் திட்டம் பாதகமான தாக்கத்தினைக் கொண்டிருந்தது.

**22.2 சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித் துறையின் அபிவிருத்தி**

பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் 2014 ஆண்டுக் காலப்பகுதியில் ஆறு கொடுகடன் திட்டங்களினூடாக ரூ.5,254 மில்லியன் பெறுமதியான கடன் தொகையினை 27,675 கடன் பெறும் பயனாளிகளுக்கு வழங்குவதன் மூலம் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிக்கு நிதியியல் உதவியினைத் தொடர்ந்தும் வழங்கியது.

- பங்கேற்றும் நிதியியல் நிறுவனங்களினூடாக நாடு முழுவதையும் உள்ளடக்கிய சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித் துறைக்கு கடன்களை வழங்கும் முக்கிய கொடுகடன் திட்டமான "சௌபாக்கிய" மூலம் 13,590 தொழில்முயற்சியாளர்களுக்கு ரூ.3,280 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டது. சௌபாக்கியா கொடுகடன் திட்டத்தின் கீழ் கடன்களை வழங்கும் போது புதிய மற்றும் புத்துருவாக்க வியாபாரம், பெண்கள் மற்றும் பட்டதாரி தொழில்முயற்சியாளர்களுக்கு விசேட கவனம் செலுத்தப்பட்டது.
- சந்தையில் நிலவும் குறைந்த வட்டி வீதங்களினைக் கருத்தில் கொள்கையில், சௌபாக்கியா திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களிற்கான வட்டி வீதம் 2014 திசெம்பர் 5 இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் 9 சதவீதத்திலிருந்து 8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.
- பிரசித்த பெற்ற தொழில்நுட்ப நிறுவனங்களிலிருந்து சிறியளவிலான தொழில்முயற்சிகளை ஆரம்பிப்பதற்கான தொழிற்பயிற்சித் தகைமைகளைப் பெற்றுக்கொண்ட இளையவர்களுக்கு சுயதொழில் வாய்ப்பு ஊக்குவிப்பு முயற்சிக் கடன் திட்டம் ஆண்டுக் காலத்தில் ரூ.49 மில்லியனைப் பகிர்ந்தளித்தது.
- 2014 ஆண்டுக் காலப்பகுதியில் வடக்கின் எழுச்சிக் கடன் திட்டம் - கட்டம் II மற்றும் கிழக்கு மாகாணத்தின் பொருளாதாரச் செயற்பாடுகளை மீளமைத்தலுக்கான கடன் திட்டம் - கட்டம் III என்பன ரூ.1,719 மில்லியன் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர் கடன்களை 11,546 கடன் பெறும் பயனாளிகளிற்குப் பகிர்ந்தளித்தன. கிழக்கு மாகாணத்தின் பொருளாதாரச் செயற்பாடுகளை மீளமைத்தலுக்கான கடன் திட்டம் - கட்டம் III ஐந்தரை ஆண்டுகளாக வெற்றிகரமான அமுலாக்கத்தின் பின்னர் 2014 ஒத்தோபர் 16ஆம் நாளன்று முடிவுறுத்தப்பட்டது.

**அட்டவணை II-19**

**2014 இல் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட கடன் வழங்கல் நிகழ்ச்சித்திட்டங்கள்**

பெறுமதி ரூ. மில்லியன் இல்

| | செயற்றிட்டத்தின் பெயர் | நிதியிடல் மூலம் | பணித் திட்டங்கள் | மொத்த நிதி ஒதுக்கீடு | 2014இல் நிதி வழங்கல் | வழங்கப் படவுள்ள மீதி நிதியம் | கடன் பெற்றோருக்கான ஆண்டு வட்டி வீதம் (ஆண்டின் இறுதியில்) |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | **வேளாண்மை மற்றும் விலங்கு வளர்ப்புத்துறை** | | | | | | |
| 1.1 | தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம் - சுழலும் நிதியம் | இலங்கை அரசாங்கம் | தீங்குப் பகுப்பாய்வு மற்றும் மிக முக்கிய கட்டுப்பாட்டு அளவு சான்றிதழைப் பெறும் விதத்தில் தேயிலைத் தொழிற்சாலைகளை நவீன மயப்படுத்துவதன் மூலம் ஏற்றுமதிச் சந்தையின் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு தேவையான உட்கட்டமைப்பினை அபிவிருத்தி செய்தல் மற்றும் தேயிலை சிறு உடைமையாளர்களின் வருமானத்தை நிலைத்து நிற்கும் அடிப்படையில் அதிகரித்தல். | 1,100 | 13 | **161** | 9% |
| 1.2 | புதிய அனைத்தையு முள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம் | நிதியியல் நிறுவனங்களின் சொந்த நிதியம் மற்றும் அரச வட்டி உதவு தொகை | நெல் மற்றும் குறுங்காலப் பயிர்களின் பயிர்செய்கையில் ஈடுபடுகின்ற நுண்பாக மற்றும் சிறியளவு வேளாண்மையாளர்களின் சமூக பொருளாதார நிலைமைகளை உயர்த்துதல் | நிதிக்கான கேள்வி அடிப்படையில் | 6,749 | **வி.கி.*** | 7% |
| 1.3 | வர்த்தக அளவிலான பாற்பண்ணை அபிவிருத்திக் கொடுகடன் திட்டம் | நிதியியல் நிறுவனங்களின் சொந்த நிதியம் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் வட்டி உதவு தொகை | பால் நுகர்வில் தன்னிறைவை அடைவதற்கு உதவுதல் மற்றும் வர்த்தக அளவிலான பாற்பண்ணைகளை மேம்படுத்துவதினூடாக பாலினை உற்பத்தி செய்தல் | நிதிக்கான கேள்வி அடிப்படையில் | 951 | **வி.கி.** | 6% |
| 2. | **நுண்பாக,சிறிய மற்றும் நடுத்தர தொழில் துறைகள்** | | | | | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 2.1 | சுயதொழில் வாய்ப்பு ஊக்குவிப்பு முயற்சிக் கடன் திட்டம் | இலங்கை அரசாங்கம் | அங்கீகரிக்கப்பட்ட தொழில் பயிற்சி நிறுவனங்களில் பயிற்றப்பட்ட இளைஞருக்கு நிதியியல் உதவி வழங்குதல் | 250 | 49 | **48** | 9% |
| 2.2 | "வடக்கின் எழுச்சி" கடன் திட்டம் - கட்டம் II | இலங்கை மத்திய வங்கி | வட மாகாணத்தில் கடன் பெறுவதற்கு வாய்ப்புள்ள நன்மைபெறுநர்களுக்கு அவர்களின் பொருளாதார நடவடிக்கைகளை வலுப்படுத்துவதற்கு உதவி வழங்கல் | 2,157 | 719 | **81** | 9% |
| 2.3 | கிழக்கு மாகாணத்தின் பொருளாதார செயற்பாடுகளை மீளமைத்தல் கடன் திட்டம் - கட்டம் II | இலங்கை மத்திய வங்கி | புதிய மற்றும் இருக்கின்ற வருமானம் உருவாக்கும் செயற்பாடுகளிற்கு நிதியளிப்பதன் மூலம் கிழக்கு மாகாண சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் | 1,000 | 1,000 | **முடிவுறுத்தப் பட்டது** | 9% |
| 2.4 | சுபீட்சக் கடன் திட்டம் (சௌபாக்கியா) | இலங்கை மத்திய வங்கி | எந்தவொரு நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில் முயற்சிகளை அல்லது விரிவாக்குவதற்கு அல்லது அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட எந்தவொரு நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை ஆரம்பித்தல் அல்லது விரிவாக்குதல் | 11,234 | 3,280 | **முழுமையாகப் பயன்படுத்தப் பட்டது** | 8% |
| 2.5 | சிறு உடைமையாளர் பெருந்தோட்ட தொழில் முயற்சியாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | வே.அ.ப.நி* | மத்திய நாட்டுப் பிரதேசத்தில் தேயிலை மற்றும் ஏனைய நிரந்தர பயிர்களைப் பயிரிடுகின்ற வசதி குறைந்த சிறு உடைமையாளர்களினதும் இறப்பரை பயிரிட விரும்புகின்ற மொனராகலை மாவட்டத்தின் இடைநிலை வலயத்திலுள்ள உயர்நிலத்தில் உணவுப்பயிர் செய்யும் வறிய வேளாண்மையாளர்களிற்கும் ஜீவனோபாயத்தை மேம்படுத்தல் | 474 | 90 | **130** | 9% |
| 2.6 | வரண்ட வலய ஜீவனோபாய உதவி மற்றும் பங்குடைமை நிகழ்ச்சித் திட்டம் - சுழலும் நிதியம் | இலங்கை மத்திய வங்கி | மொனராகலை, குருணாகல், பதுளை மற்றும் அநுராதபுரம் போன்ற மாவட்டங்களில் வறிய வேளாண்மையாளர்களிற்கிடையிலான வறுமை ஒழிப்பும், வருமான உருவாக்கத்திற்கு உதவுதலும் | 253 | 115 | **14** | 10% |
| **3.** | **நுண்பாக நிதி மற்றும் ஏனைய துறைகள்** | | | | | | |
| 3.1 | சிறு வேளாண்மையாளர் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம் - சுழலும் நிதியம் | இலங்கை அரசாங்கம் | நன்மைபெறுவோரின் பொருளாதார நிலைமைகளையும் பொது நலன்புரிகளையும் மேம்படுத்துவதற்கு வறிய கிராம மக்களுக்கான வருமானத்தை ஈட்டும் செயற்பாடுகளுக்கு முறைசார் கொடுகடனை வழிமுறைப்படுத்தல் | 346 | 234 | **அறவிடப்படும் பணம் மீள சுழற்சிப்படுத்தப் படும்** | 12% - 14% |
| 3.2 | வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் - சுழலும் நிதியம் | இலங்கை அரசாங்கம் | முறைசார் வங்கித்தொழில் முறைமையுடன் குறைந்த வருமானமுடைய குழுக்களை இணைப்பதற்கு ஏற்பாடு செய்தல் மற்றும் வருமான உருவாக்க நடவடிக்கைகளை மேம்படுத்துவதனூடாக வறுமையை ஒழித்தல் | 1,031 | 401 | **அறவிடப்படும் பணம் மீள சுழற்சிப்படுத்தப் படும்** | 12% |
| 3.3 | வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் II | இலங்கை அரசாங்கம் ய.ப.ஒ.மு* | | 2,000 | 246 | **-** | 12% |
| 3.4 | வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் II - சுழலும் நிதியம் | இலங்கை அரசாங்கம் | | 2,764 | 1,792 | **அறவிடப்படும் பணம் மீள சுழற்சிப்படுத்தப் படும்** | 12% - ப.நி.நி. இடமிருந்து கடன் பெறுநருக்கு 14% - க.வ.ப.மு. இடமிருந்து கடன் பெறுநருக்கு* |
| 3.5 | வடக்கு கிழக்கில் சேதமடைந்த வீடுகளைத் திருத்துதல் | மத்திய வங்கி | வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மோதல்களின் போது சேதமடைந்த வீடுகளை திருத்துவதற்கான கொடுகடன் வசதிகளை வழங்குதல் | 600 | 304 | **முடிவுறுத்தப் பட்டது** | 8% |

* வி.கி. - விபரம் கிடைக்கவில்லை
வே.அ.ப.நி - வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியம்
ய.ப.ஒ.மு - யப்பானிய பன்னாட்டு ஒத்துழைப்பு முகவராண்மை
க.வ.ப.மு.க. - கடன் வழங்கும் பங்கேற்பாளர்

- மேலும், ஆண்டுக் காலப்பகுதியில் சிறுஉடமையாளர் பெருந்தோட்டத் தொழில்முயற்சியாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் வரண்ட வலய ஜீவனோபாய உதவி மற்றும் பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் என்பன ஒன்றுசேர்ந்து 2,317 கடன்பெறும் பயனாளிகளிடையே ரூ.205 மில்லியனை பகிர்ந்தளித்தது.

### 22.3 நுண்பாக நிதியியல் மற்றும் ஏனைய துறைகள்

2014ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் மக்களிடையே நிதியியல் செயல்விளைவுகளை விரிவாக்குதல் மற்றும் வறுமை ஒழிப்பு நோக்கத்துடன் இலங்கை மத்திய வங்கி நுண்பாகத் துறைக்கான வறுமை ஒழிப்பு நுண்பாக - நிதிச் செயற்றிட்டம் II, நுண்பாக நிதி திட்டம் II - சுழலும் நிதியம், வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் - சுழலும் நிதியம் மற்றும் சிறுவேளாண்மையாளர் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம் - சுழலும் நிதியம் போன்ற நான்கு கொடுகடன் திட்டங்களை நடைமுறைப்படுத்துதலின் மூலம் குறைந்த வருமானம் உழைக்கும் பிரிவினருக்கு தொடர்ந்தும் பணியாற்றியது.

- ஆண்டுக் காலத்தில் இந்நான்கு திட்டங்களும் 44,744 பயனாளிகளிடையே ரூ.2,674 மில்லியன் பெறுமதியான கடன்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. மொத்தப் பகிர்ந்தளிப்புக்களில், சிறுகைத்தொழில்களுக்கு 33 சதவீதமும் வேளாண்மைத்துறைக்கு 30 சதவீதமும் அதனைத் தொடர்ந்து வர்த்தகம் (17 சதவீதம்) மற்றும் பணிகள் (14 சதவீதம்), கால்நடை மற்றும் மீன்பிடித்துறைகளிற்கு (5 சதவீதம்) கடன்கள் வழங்கப்பட்டது.
- வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சேதமடைந்த வீடுகளைத் திருத்துதல் விசேடக் கடன் திட்டத்தின் கீழ் 2,988 பயனாளிகளிற்கு ரூ.304 மில்லியன் பெறுமதியான கடன்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. 2014 ஒத்தோபர் 27ஆம் நாளன்று இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதி முழுமையாகப் பயன்படுத்திய பின்னர் நிறைவு செய்யப்பட்டது.

### 22.4 கொடுகடன் உத்தரவாதத் திட்டம்

- பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் 2014 யூன் 17ஆம் நாளன்று அடகு முற்பணங்களிற்கான கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தினை அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின் நோக்கம் வேளாண்மை மற்றும் சிறிய நடுத்தர தொழில்முயற்சியாண்மைத் துறைகளின் கொடுகடன் வளர்ச்சியினை அதிகரித்தலும் தங்க விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக பங்குபற்றும் நிதியியல் நிறுவனங்களின் இடர்நேர்வு குறைத்தலுமாகும். 2014 இறுதியளவில் அடகு முற்பணங்களுக்கான கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் கீழ் உரிமமளிக்கப்பட்ட வங்கிகளினால் ரூ.11,290 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டது.
- அடகு முற்பணங்கள் மீதான ஆரம்பத்தில் தீர்மானித்த ஆண்டிற்கு 15 சதவீத வட்டி வீதம் 2014 ஒத்தோபர் 09ஆம் நாளன்று ஆண்டிற்கு 12 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. 2015 சனவரியிலிருந்து, திட்டத்தின் தொழிற்பாட்டுக் காலம் 2015 யூன் இறுதி வரை விரிவாக்கப்பட்டதுடன் உரிமமளிக்கப்பட்ட நிதிக் கம்பனிகளிற்கும் செல்லுபடியானதாக்கப்பட்டது.

### 22.5 விழிப்புணர்வினை கட்டியெழுப்புதல்

நிதியியலைப் பெறுவதனை ஊக்கப்படுத்துவதற்காக திணைக்களத்தினால் சுயஉதவிக் குழுக்களினை அமைத்தல், அவர்களை நிதியியல் முகாமைத்துவம் பற்றி அறிவூட்டல், தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி, அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்பம் மற்றும் தொழில்முயற்சியாளர்களிற்கான செயலமர்வுகள் மற்றும் பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் என்பன நடாத்தப்பட்டது. பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் விபரங்கள் அட்டவணை II-20இல் தரப்பட்டுள்ளன.

**இணைப்பு II-20** 2014 ஆண்டுக் காலப்பகுதியில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தால் நடாத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்

| நிகழ்ச்சித்திட்டத்தின் வகை | நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| நிதியியல் அறிவூட்டல் | 81 |
| தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி | 57 |
| பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சி | 31 |
| செயற்றிட்ட மதிப்பீட்டுச் செயலமர்வு | 106 |
| அறுவடையின் பின்னரான தொழில்நுட்பம் | 13 |
| வானொலி நிகழ்ச்சித்திட்டங்கள் | 35 |
| தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 8 |
| பத்திரிகை விளம்பரங்கள் | 27 |

## 23. பிரதேச அலுவலகங்கள் கண்காணிப்புத் திணைக்களம்

இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அலுவலகங்களினால் மேற்கொள்ளப்பட வேண்டிய கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குதல், அத்துடன் பிரதேச அலுவலகங்களின் செயற்பாடுகள் மற்றும் செயற்றிறன்களைக் கண்காணித்தல் போன்ற நோக்கங்களிற்காக நாணய விதிச் சட்டத்தின் 33ஆவது பிரிவின் நியதிகளுக்கிணங்க 2009இல் பிரதேச அலுவலகங்கள் கண்காணிப்புத் திணைக்களமானது நிறுவப்பட்டது. 2014இல், நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 7 இற்கமைய உருவாக்கப்பட்ட மாத்தறை, அநுராதபுரம், மாத்தளை, யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலை ஆகிய ஐந்து பிரதேச அலுவலகங்களும் செயற்பாட்டிலிருந்தன. தொடர்பான பிரதேசங்களில் நிதியினைப் பெறுவதற்கான வழிவகைகளை மேம்படுத்துவதற்கான செயற்பாடுகள் தொடர்பில் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைத்தல், வேளாண்மையாளர்கள், முயற்சியாண்மையாளர்கள் மற்றும் பொதுமக்களிடையே விழிப்புணர்வு மற்றும் நிதியியல் அறிவு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல், இலங்கை மத்திய வங்கியினுடைய தொடர்பான திணைக்களங்களுக்கு நிறுவனம் சார்ந்த உதவிகளை வழங்குதல் மற்றும் பொருளியல், வங்கித்தொழில் மற்றும் நிதியியல் பாடங்கள் தொடர்பாக பாடசாலைகளில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு கல்விசார் கருத்தரங்குகளை மேற்கொள்ளுதல் போன்றன பிரதேச அலுவலகங்களின் பிரதான தொழிற்பாடுகளில் உள்ளடங்கியிருந்தன. 2014இல் பிரதேச அலுவலகங்கள் கண்காணிப்புத் திணைக்களம் மற்றும் பிரதேச அலுவலகங்கள் ஆகியவற்றின் தொழிற்பாடுகள் கீழே சுருக்கித் தரப்பட்டுள்ளன.

### 23.1 பிரதேச அலுவலகங்களிற்கான கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குதல்

(i) உபாயத் திட்டம் 2014 - 2018 அனைத்துப் பிரதேச அலுவலகங்களுக்குமான நிகழ்ச்சித்திட்டக் கலண்டர் தயாரிக்கப்பட்டதுடன் பிரதேச அலுவலகங்கள் முகாமைத்துவத் திணைக்களம் மற்றும் அனைத்துப் பிரதேச அலுவலகங்களுக்குமான உபாயத் திட்டம் 2015 - 2020 உருவாக்கப்பட்டது.

(ii) சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்கள் தொடர்பான அளவீட்டினை மேற்கொள்வதற்கு வினாக்கொத்தொன்று வடிவமைக்கப்பட்டதுடன் மாகாண புள்ளிவிபரவியல் கையேட்டிற்கான மாதிரியொன்றும் வடிவமைக்கப்பட்டதுடன் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களிடையேயுள்ள இறுதியான நிபுணர் குழு அடையாளம் காணப்பட்டது மற்றும் ஆர்வலர்களுக்கு நிதியியல் அறிவு நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பில் பயிற்சி மாதிரி உருவாக்கப்பட்டது.

(iii) புதிய கிளைகளைத் திறத்தல் மற்றும் தற்பொழுதுள்ள பிரதேச அலுவலகங்களை மீளமைத்தல் - நாடு முழுவதும் பிரதேச

அலுவலகங்களின் செயற்பாடுகளை விரிவுபடுத்தும் நோக்கத்துடன் கிளிநொச்சி, கேகாலை மற்றும் மொனராகலை ஆகிய இடங்களில் புதிய மூன்று பிரதேச அலுவலகங்களை உருவாக்குவதற்கு கொள்கை முடிவொன்று எடுக்கப்பட்டதுடன் 2015இல் புதிய பிரதேச அலுவலகங்களை திறப்பதற்கான செயற்பாடுகள் செயன்முறையிலிருந்தன. இதற்கமைய, பிரதேச அலுவலகங்களின் தொழிற்பாட்டு மாவட்டங்கள் பின்வருமாறு:

அ) பிரதேச அலுவலகம், மாத்தறை - காலி, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை

ஆ) பிரதேச அலுவலகம், அநுராதபுரம் - அநுராதபுரம், புத்தளம் மற்றும் குருநாகல்

இ) பிரதேச அலுவலகம், மாத்தளை - மாத்தளை, கண்டி மற்றும் நுவரெலியா

ஈ) பிரதேச அலுவலகம், யாழ்ப்பாணம் - யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு

உ) பிரதேச அலுவலகம், திருகோணமலை - திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் பொலநறுவை

ஊ) பிரதேச அலுவலகம், கிளிநொச்சி - கிளிநொச்சி, வவுனியா மற்றும் மன்னார்

எ) பிரதேச அலுவலகம், கேகாலை - கேகாலை, இரத்தினபுரி, கம்பஹா, கொழும்பு மற்றும் களுத்துறை

ஏ) பிரதேச அலுவலகம், மொனராகலை - மொனராகலை, பதுளை மற்றும் அம்பாறை

### 23.2 பிரதேச அலுவலகங்களின் செயற்றிறனினைக் கண்காணித்தல்

கண்காணிப்பானது பிரதேச அலுவலகங்களினால் சமர்ப்பிக்கப்படும் நாளாந்த செயற்பாட்டறிக்கை, வாராந்த முன்கூட்டிய அறிக்கை மற்றும் வாராந்த மற்றும் மாதாந்த முன்னேற்ற அறிக்கை, பிரதேச முகாமையாளர்களுடனான கூட்டம் மற்றும் பிரதேச அலுவலக கண்காணிப்புத் திணைக்களத்தின் அலுவலர்கள் மற்றும் மூத்த முகாமைத்துவத்தினரின் பிரதேச அலுவலகத்திற்கான வருகை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

### 23.3 பிரதேச அபிவிருத்திச் செயற்பாடுகளை மேம்படுத்தல்

2014ஆம் ஆண்டுக் காலப்பகுதியில், நிதியினை அணுகுவதை மேம்படுத்தல், புதிய தொழில்நுட்பத்தினை மாற்றல், தொழில்நுட்ப மற்றும் முயற்சியாண்மை திறன்களை அபிவிருத்தி செய்தல், சிறந்த நடைமுறைகளை அறிமுகப்படுத்தல், நிதியியல் அறிவினை மேம்படுத்தல், சந்தை இணைப்புக்கள் மற்றும் வர்த்தகக் கண்காட்சியினை ஒழுங்குபடுத்தல், அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்பம் தொடர்பான பயிற்சிகள் மற்றும் முன்மாதிரியான தொழில்முயற்சியாளர்களைச் சந்திப்பதற்கு வெளிப்பாடான விஜயங்களை ஒழுங்குசெய்தல் போன்ற பல முன்னெடுப்புக்களினூடாக நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறைகளினை மேம்படுத்தும் செயற்பாடுகளில் பிரதேச அலுவலகம் தீவிரமாக ஈடுபட்டது. 1,389 தொழில்முயற்சியாளர்களுக்கான 17 நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில் துறைகளுக்கான செயலமர்வு, 3,677 வேளாண் வியாபார தொழில்துறையினர் மற்றும் வேளாண்மையாளர்களுக்கான 80 வேளாண்மையிலான சிறந்த நடைமுறைகள் நிகழ்ச்சித்திட்டங்கள், 2,030 நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறையினர் மற்றும் வேளாண்மையாளர்களுக்கான 43 திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள், 11,385 பங்குபற்றுநர்களுக்கான இலங்கை மத்திய வங்கியின் கொடுகடன் திட்டத்தின் மீதான 90 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள், 11,588 பங்குபற்றுநர்களுக்கான 91 நிதியியல் அறிவு நிகழ்ச்சித்திட்டங்கள், 1,823 பங்குபற்றுநர்களுக்கான நிபுணர் குழுவினருடனான 11 நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் 423 சிறிய மற்றும் நடுத்தர தொழில் துறை தொழில்முயற்சியாளர்கள் மற்றும் வேளாண்மையாளர்களுக்கான 12 வெளிப்பாடான விஜயங்கள் என்பன இந்நோக்கத்திற்காக நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களில் உள்ளடங்கும்.

### 23.4 இலங்கை மத்திய வங்கியின் ஏனைய திணைக்களங்களுக்கான நிறுவன ரீதியான உதவி

தூய நாணயத் தாள் கொள்கை, போலி நாணயத் தாள்களை அடையாளம் காணுதல், அதிகாரமளிக்கப்படாத நிதியியல் நிறுவனங்கள் மற்றும் முதலீட்டுத் திட்டங்களை அடையாளம் காணுதல் போன்றவை தொடர்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல், ஊ.சே. நிதியம் தொடர்பான விசாரணைகள், செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள் மற்றும் க.பொ.த. உ/த மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான கல்விசார் செயலமர்வுகள் போன்றவற்றின் மூலம் பிரதேச அலுவலகமானது, இலங்கை மத்திய வங்கியின் பல திணைக்களங்களது தொழிற்பாட்டினை பிரதேச மட்டங்களில் கொண்டு செல்ல உதவியது. இவ்வாறான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருந்தது.

(i) நாணயத் தாள்கள், தூய நாணயத் தாள் கொள்கை மற்றும் போலி நாணயத் தாள்களை அடையாளம் காணுதல் என்பவற்றுடன் தொடர்பான 84 நிகழ்ச்சித்திட்டங்களில் 7,765 பங்குபற்றுநர்கள் பங்குபற்றியிருந்தார்கள்.

(ii) அதிகாரமளிக்கப்படாத நிதி நிறுவனங்களுடனான வணிகம் மற்றும் தடைசெய்யப்பட்ட திட்டங்கள் போன்றவற்றின் இடர்நேர்வு தொடர்பில் நடாத்தப்பட்ட 151 நிகழ்ச்சித்திட்டங்களில் 16,396 தனிநபர்கள் பங்குபற்றியிருந்தார்கள்.

(iii) அரச பிணையங்கள் மீதான 10 நிகழ்ச்சித்திட்டங்களில் 952 பங்குபற்றுநர்கள் பங்கேற்றார்கள்.

(iv) 5,722 க.பொ.த (உ/த) மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கும் பொருளாதாரம், வங்கித்தொழில் மற்றும் நிதி பாடங்கள் தொடர்பில் 49 கருத்தரங்குகள் நடாத்தப்பட்டது.

## 24. செயலகத் திணைக்களம்

செயலகத் திணைக்களமானது மத்திய வங்கி ஆரம்பிக்கப்பட்ட நேரத்தில் முதலில் நிறுவப்பட்ட திணைக்களங்களில் ஒன்றாகும். செயலகத் திணைக்களத்தின் முக்கிய தொழிற்பாடுகளாவன பொருட்கள் மற்றும் பணிகளின் கொள்வனவு, விடுப்புத் தொடர்பாக கொள்கைகளை வடிவமைத்மல் மற்றும் நடைமுறைப்படுத்தல், ஓய்வூதிய நிதியங்களை நிருவகித்தல், பயணம் மற்றும் ஏனைய பொதுவான பணிகளையும் சட்ட ரீதியான பணிகளையும் வழங்குதல்.

**அ) பொருட்கள் மற்றும் பணிகளின் கொள்வனவு:** 2014இல் செயலகத் திணைக்களம் சரியான நேரத்தில் பொருட்கள் மற்றும் பணிகளைக் கொள்வனவு செய்தலினூடாக இலங்கை மத்திய வங்கியின் வினைத்திறன் மிக்க தொழிற்பாட்டை வசதிப்படுத்தியது. இவ்வாண்டுப் பகுதியில் செயலகத் திணைக்களம் தரம், சரியான நேரம் மற்றும் போட்டி விலைகள் என்பவற்றினை உறுதிப்படுத்துவதன் மூலம் முக்கியமாக விலைக்கோரல்களினூடாக ரூ.173.9 மில்லியன் பெறுமதியான மூலதனம் மற்றும் மூலதனமல்லாப் பொருட்கள் மற்றும் பணிகளைக் கொள்வனவு செய்தது. கடந்த காலங்களினைப் போன்றே, பயன்படுத்துநர் திணைக்களங்களுக்கான பொருட்கள் மற்றும் பணிகளின் நேரம் பிந்தாத வழங்கலை ஒழுங்குமுறைப்படுத்தும் பொருட்டு, இலங்கை மத்திய வங்கியின் கொள்வனவு முகாமைத்துவச் செயன்முறையினைக் கண்காணிப்பதற்காகக் கொள்வனவுத் திட்டமிடல் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது. இதன் விளைவாக, செயலகத் திணைக்களம் ஆண்டிற்கு திட்டமிடப்பட்ட மொத்தக் கொள்வனவுத் தேவைப்பாடுகளில் 89 சதவீதத்தினை நிறைவு செய்யக்கூடியதாக இருந்தது. மேலும், செயலகத் திணைக்களம் பகிரங்கப் பொறுப்புக் காப்புறுதி உள்ளடங்கலான மத்திய வங்கியின்

அனைத்துச் சொத்துக்களுக்கும் செலவுச் சிக்கனமானதும் அனைத்தையுமுள்ளடக்கியதுமான காப்புறுதியினைப் பெற்றுக் கொண்டது.

**ஆ) ஓய்வூதிய நிதியங்களை நிருவகித்தல்:** செயலகத் திணைக்களம் மத்திய வங்கியின் ஓய்வூதியத் திட்டம், விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம், விதுரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் என்பனவற்றை நிருவகிக்கிறது. இத்திட்டத்தின் கீழ் 2014 ஆண்டுக் காலப்பகுதியில் 82 ஊழியர்கள் ஓய்வுபெற்றதுடன் ஆண்டிறுதியில் ஓய்வூதியக்காரர்களின் மொத்த எண்ணிக்கை 2,108 ஆகக் காணப்பட்டது.

**இ) பொதுப் பணிகளை வழங்கல் மற்றும் விடுப்புத் தொடர்பான கொள்கைகளினை நடைமுறைப்படுத்தல்:** 2014இல் செயலகத் திணைக்களம் ஊழியர்களின் வெளிநாட்டுப் பயணங்கள் மற்றும் பயிற்சிகளுக்கான 481 பயிற்சிப் படிகளை வழங்கியதுடன் அங்கீகரிக்கப்பட்ட நிபுணத்துவ அமைப்புக்களிற்கு ஊழியர்களினால் மேற்கொள்ளப்பட்ட 175 அங்கத்துவப் பணங்களை மீளளித்தது. மேலும், ஊழியர்களின் தனியார் மற்றும் அலுவலக வெளிநாட்டுப் பயணங்களுக்காக 465 அனுமதிகளை வழங்கியுள்ளது.

**ஈ) அளவீட்டுச் சபைக் கூட்டங்களினை நடாத்துதலும் நிகழ்ச்சிகளை ஒழுங்குமுறைப்படுத்துதலும்:** ஆண்டுக் காலத்தில், வழக்கற்றுப்போன மற்றும் பாவனைக்குதவாத அலுவலக உபகரணங்களை அகற்றுவதற்காக இலங்கை மத்திய வங்கியின் தலைமைக் காரியாலயத்தில் அளவீட்டுச் சபைக் கூட்டம் நடாத்தப்பட்டதுடன் இச்செயற்பாட்டின் மூலம் ரூ.0.7 மில்லியன் பெறுமதியான வருமானம் உருவாக்கப்பட்டிருந்தது. 2014இல் செயலகத் திணைக்களம் புதுவருட ஆரம்ப வைபவம் மற்றும் நீண்ட காலப் பணிக்கான விருது வழங்கும் வைபவம், சுதந்திர தின வைபம் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் 64ஆம் ஆண்டு நிறைவு கொண்டாட்ட வைபவம் போன்ற பல்வேறு ஞாபகார்த்த நிகழ்ச்சிகளினை ஒருங்கிணைத்து ஒழுங்குமுறைப்படுத்தியது.

**உ) சட்டப் பணிகளை வழங்குதல்:** சட்டப் பணிகள் வங்கியின் செயற்பாடுகளுக்கு ஊக்கியாகச் செயற்படும் வகையில் வழமையான சட்டப் பிரச்சனைகளிலிருந்து கொள்கைகளை உருவாக்குவது வரையிலான பரந்தளவிலான நடவடிக்கைகளில் கிடைக்கத்தக்கதாக ஆக்கப்பட்டன. நீதிமன்ற வழக்குகளைக் கையாள்வதில் வங்கியின் உரிமைகளை வலியுறுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் செயற்பாடுமிக்க பங்காற்றியது. வங்கிக்கு முன்னாலுள்ள பல்வேறு வகையான சவால்களையும் சுமூகமாகக் கையாள்வதனை வசதிப்படுத்துவதற்காக வங்கித்தொழில் மற்றும் நிதியியல் துறை தொடர்பாகப் பொருத்தமான சட்டங்களைத் தயாரிப்பதன் மூலம் தேவையான உதவிகள் வழங்கப்பட்டன.

## 25. பாதுகாப்புப் பணிகள்

பாதுகாப்பு பணிகள் திணைக்களமானது, பாதுகாப்புப் படைகள் மற்றும் பொலிஸ் என்பனவற்றின் ஒத்துழைப்புடன் இலங்கை மத்திய வங்கியின் ஊழியர்கள், கட்டடங்கள், சொத்துக்கள், நாணயச் சரக்குகளை கொண்டு செல்லல் மற்றும் இவ்வாண்டுக்காலப்பகுதியில் நாணயக் குத்திகள் சேகரிப்புக்களுக்கான பாதுகாப்பினை உறுதிப்படுத்தியது. பாதுகாப்புப் பணிகளின் வலுப்படுத்தலானது அடிப்படையாக இரண்டு முக்கிய துறைகளில் தங்கியுள்ளது. அதாவது கீழே சுருக்கிக் கூறப்பட்டவாறான முறைமைகளின் மேம்பாடு மற்றும் பயிற்சி முறைகள்.

### 25.1 முறைமைகளின் மேம்பாடு

**(அ) மையப்படுத்தப்பட்ட ஒருங்கிணைக்கப்பட்ட நுழைவு வழி கட்டுப்பாட்டு முறைமைகள்**

2013இன் பிற்பகுதியில் வசதிகள் முகாமைத்துவ திணைக்களம் மற்றும் தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் ஆகியவற்றின் உதவியுடன் நவீனத்துவம் வாய்ந்த மையப்படுத்தப்பட்டு ஒருங்கிணைக்கப்பட்ட நுழைவு வழி கட்டுப்பாட்டு முறைமையினை நிறுவும் வேலைகள் அதன் நிறைவை எட்டியுள்ளது.

**(ஆ) புதிய வாகனத்தரிப்பிடம்: தீ கட்டுப்பாட்டு முறைமைகள் மற்றும் பொருட்களை ஸ்கான் செய்தல்**

இலங்கை மத்திய வங்கியின் புதிய வாகனத் தரிப்பிடத்திற்கான தீ கட்டுப்பாட்டு முறைமைகளின் நிறுவலானது ஆரம்பிக்கப்பட்டு மற்றும் அது 2015ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் நிறைவுபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கை மத்திய வங்கியின் தலைமை அலுவலகத்தின் புதிய வாகனத் தரிப்பிடத்தில் பொருட்களை ஸ்கான் செய்யும் இயந்திரமானது இடமாற்றப்பட்டது. தலைமை அலுவலகத்தில் மற்றும் வேறு வெளிவளாகத்தில் அமைந்திருக்கும் அனைத்து தீ அணைப்பு உபகரணங்களும் ஒழுங்குமுறையில் சோதனை செய்யப்பட்டு திருத்தப்பட்டு மற்றும் மீண்டும் அதே இடத்தில் வைக்கப்பட்டது.

**(இ) வானொலி தொடர்பூட்டல் முறைமைகள்**

அலுவலகங்களுக்கிடையிலான தொடர்பூட்டல்கள் மற்றும் கொழும்புக்குள்ளேயான நாணயப் போக்குவரத்திற்காக பயன்படுத்தப்படும் வானொலி தொடர்பூட்டல் முறைமையானது தரமுயர்த்தப்பட்டதுடன் தடங்கலில்லா தொடர்பூட்டலை உறுதிப்படுத்துவதற்காக பழைய வானொலி இணைப்புக்களுக்குப் பதிலாக புதிய வானொலி இணைப்புக்கள் பொருத்தப்பட்டன.

**(ஈ) உதவிப்பீடம் வரவேற்பிடம்**

சாதாரண வேலை நேரங்களில் வரவேற்று கடமைகளை உறுதிப்படுத்தி வசதிகள் முகாமைத்துவம் மற்றும் தொடர்பூட்டல் திணைக்களங்களின் உதவியுடன் தலைமை அலுவலகத்திலுள்ள முதன்மை நுழைவாயிலுள்ள உதவிப்பீடம்/ வரவேற்பிடம் என்பவற்றின் தரத்தினை உயர்த்துவதற்காக நடவடிக்கைகள் வழங்கப்பட்டன.

**(உ) தடங்கலற்ற வியாபாரத் திட்டம்**

கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் மற்றும் தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் என்பவற்றினால் நடாத்தப்பட்ட தடங்கலற்ற வியாபாரத் திட்டப் பயிற்சிகளில் பாதுகாப்புப் பணிகள் திணைக்களமானது பங்குபற்றி ஒத்துழைப்பினை வழங்கியது.

### 25.2 பயிற்சிகள்

**(அ) தீ தடுப்பு, தீ எதிர்ப்பு மற்றும் முதல் உதவி நிகழ்ச்சித்திட்டங்கள்**

அனர்த்த முகாமைத்துவ மையம், சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் மற்றும் தீ அணைப்புப் பணிகள் திணைக்களங்களின் உதவியுடன் இலங்கை மத்திய வங்கியிலுள்ள அனைத்துத் திணைக்களங்களிலுமிருந்து 90 தீ அணைப்பு மேற்பார்வையாளர்களை தெரிந்தெடுத்து அவர்களுக்கு 90 நாட்கள் தீ தடுப்பு, தீ எதிர்ப்பு, முதல் உதவி மற்றும் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான இரண்டு நாள் பரந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது.

**(ஆ) திறன்கள் மற்றும் தகுதிகளைக் கட்டியெழுப்புதல்**

முக்கியமான தளங்களில் முக்கிய பிரமுகர்களைக் கையாளுதல், மெய்க்காவலர் கடமைகள் மற்றும் பொதுமக்களுடனான தொடர்புகள் போன்றவற்றில் பாதுகாப்பு அலுவலர்களின் திறன்கள் மற்றும் தகுதிகளை மேம்படுத்தும் பொருட்டு இரண்டு நாட்கள் வதிவிட நிகழ்ச்சித்திட்டமானது 30 பாதுகாப்பு அலுவலர்களுக்கு பெருந்தோட்ட முகாமைத்துவத்திற்கான தேசிய நிறுவனத்தில் நடாத்தப்பட்டது. மேலும், பல தொழில்நுட்ப மற்றும் கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயலமர்வுகளில் 07 அலுவலர் தர அலுவலர்கள் மற்றும் 71 அலுவலர் தரம் அல்லாத அலுவலர்கள் பங்குபற்றியிருந்தார்கள். மலேசியாவில் தடங்கலற்ற

வியாபாரத் திட்டம் மற்றும் அபாய முகாமைத்துவம் இரண்டு நாள் நிகழ்ச்சித்திட்டங்களில் ஒரு அலுவலர் தர அலுவலர் பங்குபற்றியிருந்தார்.

**(இ) ஆயுதங்களைக் கையாளுதல் மற்றும் நேரடித் தீயணைப்பு**

ஆண்டின் இறுதி காலாண்டுப் பகுதியில் இலங்கை தரைப்படையுடன் இணைந்து அனைத்து பாதுகாப்பு அலுவலர்களுக்கும் ஆயுதங்களைக் கையாளுதல் மற்றும் நேரடி தீயணைப்புப் பயிற்சிகள் நடாத்தப்பட்டன.

## 26. அலுவலர் பணிகள் முகாமைத்துவத் திணைக்களம்

அலுவலர் பணிகள் முகாமைத்துவத் திணைக்களம் ஆண்டு முழுவதும் அனைத்து பயன்பெறுநர்களுக்கும் வினைத்திறனுடனும் பயனுறும் விதத்திலும் நலன்புரி வசதிகளைத் தொடர்ந்தும் வழங்கியது. அலுவலர் பணிகள் முகாமைத்துவ திணைக்களத்தின் தொழிற்பாடுகள் அலுவலர் வீடமைப்பு (ஈட்டு) கடன் திட்டம், சேம நிதியக் கடன் திட்டம் மற்றும் அலுவலர் நன்மைகள் திட்டம் என்பவற்றின் கீழ் கடன்களை வழங்குதல், தொழில்தருநர் பங்களிப்பு மருத்துவ நன்மைகள் திட்டத்தின் கீழ் செலவுகளை மீளளித்தல் மற்றும் உணவக வசதிகளை வழங்குதல் என்பவற்றை உள்ளடக்கியிருந்தன. ஊழியர்கள், ஓய்வூதியம் பெறுவோர், விதவைகள்/ விதுரர்கள் மற்றும் அவர்களின் பதிவு செய்யப்பட்ட தங்கியிருப்போர் ஆகியோரை உள்ளடக்கி ஏறத்தாழ 10,200 இற்கும் மேற்பட்ட பதிவு செய்யப்பட்ட நன்மைபெறுநர்கள் மருத்துவ நன்மைகள் திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தனர்.

2014ம் ஆண்டு காலப்பகுதியில் அலுவலர் பணிகள் முகாமைத்துவத் திணைக்களம் வீடமைப்புக் கடன்கள், சேம நிதியக் கடன்கள், ஊர்திக் கடன்கள், கணனிக் கடன்கள் மற்றும் அலுவலர் நன்மைகள் திட்டத்தின் கீழான ஏனைய கடன்களை உள்ளடக்கி 1,595 கடன்களை வழங்கியது. இக்கடன்கள், தொடர்பான அனைத்து ஆவணங்களுடனும் விண்ணப்பங்கள் விண்ணப்பதாரரால் சமர்பிக்கப்பட்ட பின்னர் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றினுள் வழங்கப்பட்டன. கடன் கண்காணிப்பு முறைமை ஊழியர்களுக்கான கடன்களின் பகிர்ந்தளிப்பினை வினைத்திறனுடன் மேற்பார்வை செய்வதனை இயலச்செய்தது.

இலங்கை மத்திய வங்கியின் உணவகம் மத்திய வங்கி அலுவலர்களுக்கு காலை உணவையும் மதிய உணவையும் தொடர்ந்தும் வழங்கியது. காலை உணவு, மதிய உணவு மற்றும் மாலை நேர சிற்றுண்டிகளுக்கான புதிய உணவு வகைகள் உணவகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டன. மேலும் அலுவலர் பணிகள் திணைக்களத்தின் தேநீர் வழங்கல்/ மூலிகை பானம் வழங்கல் என்பவற்றுடன் இணைத்து காலை மற்றும் மாலை நேரங்களில் உடன் பால் வழங்கப்பட்டது. உடன் பால் மற்றும் மூலிகை பானம் போன்றவற்றின் தேவையை அறிந்துகொள்வதற்கான அளவீடொன்று மேற்கொள்ளப்பட்டது. 2015ஆம் ஆண்டுப் பகுதியில் உணவகச் சூழலை மேம்படுத்துவதற்கும் உணவக வசதிகளை மேம்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

அலுவலர் பணிகள் முகாமைத்துவத் திணைக்களம் மருத்துவ நலன்புரித் திட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட அனைத்து நன்மைபெறுநர்களினாலும் உறப்பட்ட மருத்துவச் செலவினங்களைத் தொடர்ந்தும் மீளளித்தது. மருத்துவச் செலவின மொத்த மீளளிப்புத் தொகை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் எட்டு சதவீதத்தினால் அதிகரித்தது. மருத்துவ நிலையத்தில் கிடைக்கத்தக்கதாகவுள்ள மருத்துவ வசதிகள் பிரபல்யமான தனியார் வைத்தியசாலையிலிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்ளுதல் போன்ற வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்வதன் மூலம் பணி நேரங்களில் மத்திய வங்கி அலுவலர்களுக்கு கிடைக்கச் செய்யப்பட்டன. மேலும் ஆய்வுகூட வசதிகளும் நியாயமான விலைகளில் மருத்துவ நிலையத்தில் வழங்கப்பட்டன. வைத்திய அலுவலரின் கோரிக்கைக்கிணங்க மருத்துவ நிலையத்திற்கு புதிய உபகரணங்கள் வழங்கப்பட்டன. ஆண்டு காலப்பகுதியில் அலுவலர் பணிகள் முகாமைத்துவத் திணைக்களம் மத்திய வங்கி அலுவலர்களின் நலம் தொடர்பான அறிவினை அதிகரிப்பதற்காக ஐந்து விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியது.

## 27. புள்ளிவிபரவியல்

புள்ளிவிபரவியல் திணைக்களம் 2014இல் மிக நுணுக்கமான பொருளாதார மாதிரி தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி முக்கிய பேரண்டப் பொருளாதார மாறிகளை எதிர்வுகூறுதல் மற்றும் மதிப்பீடு செய்தல், விலை மற்றும் கூலிச் சுட்டெண்களையும் இலங்கைச் சுபீட்சச் சுட்டெண்களைத் தொகுத்தல் ஆகியன அதன் முக்கிய தொழிற்பாடுகளை நிறைவேற்றியது. மாகாண மொத்த உள்நாட்டு உற்பத்திகளை மதிப்பிடுதல், நாணயக் கொள்கைத் தீர்மானங்களை மேற்கொள்கின்ற செயன்முறைக்கு வசதியளிப்பதற்காக முன்னோக்கிய தரவுகளைச் சேகரித்தல், நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமையினூடாக சேகரிக்கப்பட்ட தரவுகளைச் செயன்முறைப்படுத்தல், வெளியீடுகளூடாகவும் பத்திரிகை வெளியீடுகளூடாகவும் புள்ளிவிபரங்களையும் தகவல்களையும் உரிய நேரத்தில் பரப்புதல் மற்றும் உலகளாவிய தரமிடலில் முக்கிய குறிகாட்டிகள் தொடர்பில் இலங்கையின் நிலைமையினை முன்னேற்றுவதற்குப் பங்களித்தல் ஆகியனவும் ஆண்டு காலத்தில் பூர்த்தி செய்யப்பட்டன.

### 27.1 முக்கிய பேரண்டப் பொருளாதார மாறிகளை எதிர்வுகூறல்

நாணயக் கொள்கை வடிவமைப்பிற்கு வசதியளிக்கும் பொருட்டு திணைக்களம் குறுங்கால அடிப்படையில் நுகர்வோர் விலைப் பணவீக்கத்தினையும் பொருளாதார வளர்ச்சியையும் எதிர்வுகூறுவதுடன் அவற்றை நாணயக் கொள்கைக் குழுவிற்கும் நாணயச் சபைக்கும் சமர்ப்பிக்கிறது. பணவீக்க எறிவுகள் பணவீக்கத்தின் மீதான அவற்றின் பெறப்பட்ட மற்றும் உணரப்பட்ட மாற்றங்களைப் பிரதிபலிக்கும் விதத்தில் அடிக்கடி இற்றைப்படுத்தப்படுகின்றன. இதன்படி, திணைக்களம் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தொகுக்கப்பட்ட கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணிலுள்ள பொருட்கள் மற்றும் பணிகளின் நுகர்வோர் விலைகளின் அசைவுகளை கிரமமாகவும் நெருக்கமாகவும் கண்காணித்ததுடன் விலை அசைவுகளை பகுப்பாய்வு செய்கின்ற மாதாந்த பத்திரிகை வெளியீடுகளையும் வெளியிட்டது.

பணவீக்க எதிர்வுகூறல் முறையினைக் கொண்ட தொகுப்பொன்று வேறுபட்ட நேரக் கட்டமைப்பில் திணைக்களத்தில் பயன்படுத்தப்பட்டது. குறுங்காலப் பணவீக்க எதிர்வுகூறல்கள் முக்கியமாக அண்மைக்கால விலைப் போக்குகளினையும் எதிர்பார்க்கப்பட்ட சந்தை அபிவிருத்திகளுடன் தொடர்புபட்ட குறுங்கால விலை அசைவுகளினையும் அடிப்படையாகக் கொண்டிருந்தது. நடுத்தர காலத்திலிருந்து நீண்ட காலம் வரையிலான எதிர்வுகூறல்கள் அளவுசார் பொருளாதார நுணுக்கங்களுடன் பெறப்பட்டன. பணவீக்கத்தின் மீது தாக்கத்தினைக் கொண்டுள்ள நிரம்பல் மற்றும் கேள்விப் பக்கங்கள் இரண்டினையும் பிரதிபலிக்கின்ற புதிய மாறிகளை கூட்டிணைப்பதன் மூலம் இவ்வெதிர்வுகூறும் முறைகளை மேம்படுத்துகின்ற செயன்முறைகள் 2014இலும் தொடர்ந்தன.

பொருளாதாரத்தின் ஒவ்வொரு துணைத் துறைகளுடனும் தொடர்புபட்ட முதலாந்தர மற்றும் இரண்டாந்தரத் தரவுகளைப் பயன்படுத்தி, காலாண்டு மற்றும் வருடாந்த அடிப்படையில், துறை வாரியான உள்ளமைப்புடன் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கான எதிர்வுகூறல் தயாரிக்கப்பட்டது. பொருளாதாரத்தின் துணைத் துறைகளுடன் தொடர்பான குறிகாட்டிகள், குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்ட எதிர்வுகூறல்களைத் தொகுப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட வேளையில் எறிவுகளின் துல்லியமான தன்மையினை மேம்படுத்துவதற்காக மாதிரிகளை அடிப்படையாகக் கொண்ட எறிவுகூறல்களுக்காக அளவுசார் பொருளாதார நுணுக்கங்கள் பயன்படுத்தப்பட்டன.

### 27.2 விலை மற்றும் கூலிச் சுட்டெண்களைத் தொகுத்தல்

ஒன்பது மாகாணங்களுக்குமான மாகாண ரீதியான நுகர்வோர் விலைச் சுட்டெண்களும் தீவு முழுவதனையும் உள்ளடக்கிய கூட்டு நுகர்வோர் விலைச்சுட்டெண்களும் திணைக்களத்தினால் தொகுக்கப்பட்டு மாதாந்த அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டன. இந்நுகர்வோர் விலைச்சுட்டெண்கள் தொகுக்கப்பட்டதன் முக்கிய நோக்கம் மாகாண

மட்டத்தில் விலை அசைவுகளை கண்காணிப்பதேயாகும். மாகாண ரீதியான விலைச் சுட்டெண்களைத் தொகுப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட விலைத் தரவுகள் திணைக்களத்தினால் பேணப்பட்ட நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமையிலிருந்தும் ஏனைய நம்பத்தகுந்த இரண்டாந்தர மூலங்களிலிருந்தும் சேகரிக்கப்பட்டன.

பொருளாதாரத்திலுள்ள சம்பளங்கள் மற்றும் கூலிகளின் அசைவுகளை மதிப்பிடுவதற்கான கூலி வீதச் சுட்டெண்களைத் தொகுத்தல் இரண்டு புதிய சுட்டெண்களை அறிமுகப்படுத்தியதுடன் தொடர்ந்தும் இடம்பெற்றது. முன்னைய ஆண்டுகளைப் போன்றே, திணைக்களம் அரச துறை ஊழியர்களுக்காக பெயரளவு மற்றும் உண்மைக் கூலி வீதச் சுட்டெண்களையும் முறைசார்ந்த தனியார் துறை ஊழியர்களுக்காக உண்மைக் கூலி வீதச் சுட்டெண்களையும் கணித்தது. வேளாண்மை மற்றும் கட்டட நிருமாணத் துணைத் துறைகளிலுள்ள முறைசாரா தனியார் துறைக் கூலி அசைவுகள் நாடளாவிய தரவுச் சேகரிப்பு முறைமையினூடாக சேகரிக்கப்பட்ட நாளாந்தக் கூலி தகவல்களின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டன. கூலி வீத அசைவுகளின் பகுப்பாய்வினை மேம்படுத்துவதற்கான அவசியத்தினை பரிசீலனையில் கொண்டு, திணைக்களம், அரச துறைத் தொழில்நிலை மற்றும் கூலி அதிகரிப்பின் பெருமளவு பிரசன்னத்துடன் புதிய அரச துறை கூலி வீதச் சுட்டெண்ணினை அறிமுகப்படுத்தியது. மேலும், கூலி அசைவுகளை மதிப்பிடுவதற்காக முறைசாரா தனியார் துறைக் கூலி அசைவுகளை அளவிடுவதற்கான சுட்டெண்ணொன்றும் அறிமுகப்படுத்தப்பட்டது.

### 27.3 இலங்கை சுபீட்சச் சுட்டெண்ணினைத் தொகுத்தல்

நாடு முழுவதற்கும் அதேபோன்று ஒவ்வொரு மாகாணங்களுக்குமான சுபீட்சத்தின் ஒட்டுமொத்த நிலைமையினை மதிப்பிடுவதற்காக கூட்டுக் குறிகாட்டியொன்றிற்கான தேவையினை பூர்த்தி செய்யும் பொருட்டு 2008இல் மத்திய வங்கியினால் இலங்கை சுபீட்சச் சுட்டெண் முதற்றடவையாக அறிமுகப்படுத்தப்பட்டது. இலங்கை சுபீட்சச் சுட்டெண்ணானது பொருளாதாரம் மற்றும் சமூக அபிவிருத்திகளைப் பிரதிபலிக்கின்ற பல்-பரிமாணத்தன்மை கொண்டதொரு குறிகாட்டியாகும். இலங்கைச் சுபீட்சச் சுட்டெண், பொருளாதார மற்றும் வியாபாரச் சூழல், மக்கள் நலனோம்புகை மற்றும் சமூக உட்கட்டமைப்பு ஆகிய மூன்று துணைச் சுட்டெண்களை உள்ளடக்கியுள்ளது. இலங்கை சுபீட்சச் சுட்டெண் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் வருடாந்த அடிப்படையில் திரட்டப்படுகிறது. இறுதித் தொகுப்பு 2013இல் கணிக்கப்பட்டது.

### 27.4 மாகாண ரீதியாக மொத்த உள்நாட்டு உற்பத்தியை மதிப்பிடல்

பெயரளவு நியதிகளில், 2013ஆம் ஆண்டிற்கான மாகாண ரீதியான மொத்த உள்நாட்டு உற்பத்தி தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியை பிரித்ததன் மூலம் மதிப்பிடப்பட்டது. மாகாணங்களுக்கிடையேயான வருமான ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்குப் பொருத்தமான உபாயங்களை அறிமுகப்படுத்தி நடைமுறைக்கிடுவதற்கு மாகாண ரீதியான மொத்த உள்நாட்டு உற்பத்தி மீதான தகவல்கள் மாகாண அதிகாரிகளுக்கும் அதேபோன்று மத்திய அரசாங்கத்தின் தேசிய ரீதியாக திட்டமிடுவோருக்கும் பயன்மிக்கதாகும்.

### 27.5 புள்ளிவிபரவியல் அளவீடுகள்

தற்போதைய பொருளாதார நிலைமைகளைக் கண்காணிப்பதற்கும் எதிர்காலப் போக்குகளை எதிர்வுகூறுவதற்குப் பயன்மிக்கதாக விளங்கும் எதிர்கால வியாபார நிலைமைகளை மதிப்பிடுவதற்கும் தகைமைசார் குறிகாட்டிகளினூடாக குறுங்கால சந்தை அபிவிருத்திகளைப் பெற்றுக் கொள்வதற்குமென புள்ளிவிபரவியல் திணைக்களம் 2014ஆம் ஆண்டின் 2ஆம் காலாண்டிலிருந்து காலாண்டு வியாபாரத் தோற்றப்பாட்டு அளவீடு ஒன்றைத் தொடங்கியது. இதன்படி, இவ்வளவீடானது நேரகாலத்துடன் எச்சரிக்கை விடுக்கின்ற குறிகாட்டியாகவும் விளங்குகிறது. இவ்வளவீட்டின் இலக்கிடப்பட்ட குடித்தொகையாக, வேளாண்மை, கைத்தொழில் மற்றும் பணிகள் ஆகிய அனைத்து மூன்று துறைகளையும் உள்ளடக்குகின்ற பாரிய அளவு தொழில்முயற்சிகள் காணப்பட்டன. மாதிரிகள், மொ.உ.உற்பத்திக்கான துறைவாரியான பங்களிப்புக்களின் அடிப்படையில் அடுக்கடுக்கான முறையுடன் கூடிய பகுத்துணர்வு மாதிரி முறையினைப் பயன்படுத்தி தெரிவு செய்யப்பட்டன. தரவுகள் பதிலிறுப்பாளர்களின் முன்னுரிமையினைப் பொறுத்து நேருக்கு நேர் பேட்டிகள் மற்றும் தொலைபேசியூடான பேட்டிகளினூடாக நியம வினாக்கொத்தொன்றினை அடிப்படையாகக் கொண்டு திரட்டப்பட்டன. அளவீடானது ஒவ்வொரு காலாண்டினதும் இறுதி வாரத்திலும் அடுத்துவரும் காலாண்டின் முதல் வாரத்திலும் நடத்தப்பட்டன. இவ்வாண்டுப் பகுதியில் மூன்று சுற்று அளவீடுகள் தொடர்ச்சியாக நடத்தப்பட்டதுடன் வியாபார நிலைமை, இலாபத்தன்மை, தேர்ச்சிபெற்ற தொழிலாளர்களின் கிடைப்பனவு, விற்பனை மற்றும் கேள்வி ஆகிய வியாபார அளவீட்டுச் சுட்டெண்கள் அளவீட்டினது பெறுபேற்றின் அடிப்படையில் கணிக்கப்பட்டதுடன் இப்பெறுபேறுகள் நாணயக் கொள்கை குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டன.

முன்னேற்றங்கள் தேவைப்படுகின்ற துறைகளை அடையாளம் காணுவதனை அல்லது உலகளாவிய போட்டித்தன்மைச் சுட்டெண் புள்ளியை மேம்படுத்துவதற்கான கொள்கையை மாற்றுவதன் முக்கியத்துவத்தினை அங்கீகரிக்கின்ற விதத்தில் திணைக்களம், உலகப் பொருளாதார மன்றத்தில் நிறைவேற்று அபிப்பிராய அளவீடு போன்ற சுதந்திரமான ஆராய்ச்சி நிறுவனமொன்றிடம் அளவீட்டுப் பணிகளைக் கையளித்தது. இவ்வளவீடானது, மேல் மாகாணத்திலுள்ள அனைத்து மூன்று துறைகளையும் உள்ளடக்கிய 150 நிறுவனங்களில் ஓகத்திலிருந்து ஒத்தோபர் வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டது. சீர்திருத்தங்கள் தேவைப்படும் துறைகளை அடையாளம் காண்பதற்காக இவ்வளவீட்டின் பெறுபேறுகள் முகாமைத்துவத்திடம் சமர்ப்பிக்கப்பட்டன.

கொடுகடன் சந்தையின் அபிவிருத்திகள் தொடர்பான தகவல்களைத் திரட்டிக் கொள்வதற்காக ஆண்டின் பின்னரைப் பகுதியில் தனியார் துறைக் கொடுகடன் நிலைமைகள் பற்றிய அளவீடொன்று தொடங்கப்பட்டது. இதற்கமைய, கொடுகடன் கேள்வி அளவீடு மற்றும் கொடுகடன் நிரம்பல் அளவீடு என்ற இரண்டு அளவீடுகள் முறையே கேள்விப்பக்க மற்றும் நிரம்பல்பக்க அபிவிருத்திகளைக் கண்டறியும் பொருட்டு வடிவமைக்கப்பட்டன. கொடுகடன் கேள்வி அளவீட்டினைப் பொறுத்தவரையில் இலக்கிடப்பட்ட குடித்தொகையாக பொருளாதாரத்தின் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் காணப்பட்டன. தொடர்பான மாதிரிக் கட்டமைப்பு ஊழியர் நம்பிக்கை நிதியத்திலிருந்து பெறப்பட்ட நிறுவனங்களின் பட்டியலூடாக விருத்தி செய்யப்பட்டதுடன் அடுக்கடுக்கான எழுமாறான மாதிரியானது சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை அடுக்கடுக்கான மாதிரிக் கட்டமைப்பாக்கி தெரிவு செய்யப்பட்டது. நியம வினாக்கொத்தினை அடிப்படையாகக் கொண்ட தரவுகளை நேருக்கு நேரான தொலைபேசிப் பேட்டிகள் அல்லது மின்னஞ்சலினூடாகச் சேகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. கொடுகடன் நிரம்பல் அளவீட்டினைப் பரிசீலனையில் கொள்கையில் கொடுகடன் கேள்வி அளவீட்டினைப் போன்ற அதே நுணுக்கங்களினூடாக நாட்டிலுள்ள அனைத்து வங்கித்தொழில் நிறுவனங்களை இலக்கிடல் குடித்தொகையாகக் கொண்டு அவர்களது முழுமையான விபரங்களைப் பயன்படுத்தி தகவல்களைச் சேகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. புள்ளிவிபரத் திணைக்களம் 2015 இலிருந்து அரையாண்டு இடைவெளியில் இவ்வளவீட்டினை மேற்கொள்ள எதிர்பார்க்கிறது.

வீழ்ச்சியடைந்து செல்கின்ற வங்கி வட்டி வீதங்கள் மற்றும் 2014இல் தங்க விலைகளில் அவதானிக்கப்பட்ட தளம்பல்கள் என்பனவற்றின் பின்னணியில், அடகுபிடித்தல் தொழில்துறை அனுபவித்த அண்மைய வியாபார நிலைமைகளை விளங்கிக்கொள்ளும் பொருட்டு திணைக்களம் அஞ்சல் மூலமான அளவீடொன்றினை ஆரம்பித்தது.

பணவீக்க எதிர்பார்ப்பு அளவீடு 2006இல் அது அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து மாதாந்த அடிப்படையில் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வளவீடானது நிதியியல் நிறுவனங்கள், அரச துறை நிறுவனங்கள், பள்ளிக்கூடங்கள் மற்றும் சில்லறை விற்பனை நிலையங்கள் என்பனவற்றிலிருந்தான

ஏறத்தாழ 300 பதிலிறுப்பாளர்களை உள்ளடக்கியிருந்தது. பதிலிறுப்புக்கள் மின்னஞ்சலூடாகவும் பேட்டிகளினூடாகவும் சேகரிக்கப்பட்டன. பதிலிறுப்பாளர்கள் நடைமுறைப் பணவீக்க உள்ளுணர்வுகள் மற்றும் எதிர்கால 12 மாதங்களுக்காக எதிர்பார்க்கப்படும் பணவீக்கம் என்பன மீதான கணியம்சார் மற்றும் தகைமைசார், தகவல்கள் இரண்டையும் வழங்கினர். மாதாந்த அடிப்படையிலான அளவீட்டின் பெறுபேறு நாணயக் கொள்கை குழுவிற்கும் நாணயச் சபைக்கும் அறிக்கையிடப்பட்டன.

நாட்டின் அரச துறை தொழில்நிலையின் மட்டம் மற்றும் போக்குகளின் தற்போதைய அபிவிருத்திகளைக் கண்டறிவதற்காக வருடாந்த அரச துறை தொழில்நிலை அளவீடு மேற்கொள்ளப்படுகின்றது. 2013இன் வருடாந்த அரச துறை தொழில்நிலை அளவீட்டில் அறிக்கையிடப்பட்டவாறு மாகாண சபைகள் நீங்கலாக (கொழும்பு, தெகிவளை மற்றும் கண்டி மாநகர சபைகள் தவிர்ந்தவை) அரசாங்கமும் அரசுசார் நிறுவனங்களும் உள்ளடக்கியிருந்த 1,000 இற்குச் சமமான அல்லது அதற்கும் கூடுதலான ஊழியர்கள் காலாண்டு அரச துறை தொழில்நிலை அளவீட்டின் மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். வருடாந்த அரச துறை தொழில்நிலை அளவீட்டினூடாக சேகரிக்கப்பட்ட தகவல்கள், மொ.உ.உற்பத்திச் செயற்றிட்டங்களிலுள்ள அரச பணிகள் துணைத் துறையின் பெறுமதி கூட்டங்களை மதிப்பிடுவதற்காக முன்னணிக் குறிகாட்டிகளாக திணைக்களத்தினால் பயன்படுத்தப்படுகின்றன. அளவீட்டில் கண்டறியப்பட்ட விடயங்களின் அடிப்படையில் 2014இல் ஆண்டு மற்றும் காலாண்டுப் பகுப்பாய்வு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன.

மேலும், தொழிற்படை மற்றும் தொழிற்சந்தை தொடர்பாக சேகரிக்கப்பட்ட தகவல்கள் தொழில்நிலை, தொழிலின்மை, வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பு, தொழில் உறவுகள், தொழிற்சந்தை சீர்திருத்தம் மற்றும் தொழிலாளர் உற்பத்தித்திறன் ஆகிய துறைகளின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

### 27.6 நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமை

நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமையானது புள்ளிவிபரச் சேகரிப்பாளர்களாக தொழிற்படுகின்ற பள்ளிக்கூட ஆசிரியர்களின் நாடளாவிய வலையமைப்பினூடாகத் தொழிற்படுகின்றது. இப்புள்ளிவிபரச் சேகரிப்பாளர்கள் நுகர்வுப் பொருட்களின் சில்லறை விலைகள், வேளாண்மை மற்றும் மீன்பிடிப் பண்டங்களின் உற்பத்தியாளர் விலைகள், முறைசாரா தனியார் துறையினருடன் தொடர்பான நாளாந்தக் கூலிகள் மற்றும் வேளாண்மை மற்றும் மீன்பிடிப் பண்டங்களின் எதிர்கால உற்பத்தி மட்டங்கள் என்பனவற்றை வாராந்த, மாதாந்த மற்றும் காலாண்டு அடிப்படையில் புள்ளிவிபரத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கின்றனர். புள்ளிவிபரச் சேகரிப்பாளர்களாகத் தொழிற்படுகின்ற ஆசிரியர்களின் வலையமைப்பிற்குப் புறம்பாக, நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமையானது, புறக்கோட்டைச் சந்தை, மரடகமுல்ல அரிசிச் சந்தை மற்றும் தம்புள்ள மற்றும் நாராகென்பிட்டியிலுள்ள சிறப்பு பொருளாதார மையங்கள் என்பனவற்றிலிருந்து மொத்த விற்பனை மற்றும் சில்லறை விலைகளை நாளாந்த மற்றும் வாராந்த அடிப்படையில் அறிக்கையிடுவதற்காக நான்கு ஆசிரியர்கள் அல்லாதவர்களின் பணிகளைப் பயன்படுத்திக் கொண்டது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பொருளாதார நடவடிக்கைகளின் விரிவாக்கத்தினைப் பரிசீலனையில் கொண்டு 2014இல் இப்பிரதேசங்களில் நான்கு புதிய தரவு சேகரிப்பு மையங்கள் உருவாக்கப்பட்டன. இம்மேம்பாடுகளின் காரணமாக முறைமை தற்பொழுது 106 தரவு சேகரிப்பு நிலையங்களை உள்ளடக்கியிருக்கிறது.

நாடளாவிய தரவுச் சேகரிப்பு முறைமையின் கீழ் சேகரிக்கப்பட்ட தரவுகளை விலைச்சுட்டெண்களைத் தொகுத்தல், விலை அசைவுகளை எதிர்வுகூறல், விலைகள் மீதான கொள்கை மாற்றங்களின் தாக்கத்தினை மதிப்பிடல் மற்றும் தேசிய செலவினம் மற்றும் வருமானத்தினை மதிப்பிடல் போன்ற பரந்த கொள்கை நோக்கங்களுக்காகப் பயன்படுத்தியது. தரவுகளின் துல்லியமான தன்மையினையும் சரியான நேரத்தினையும் பேணும் பொருட்டு திணைக்களம் புள்ளிவிபரச் சேகரிப்பாளர்களினால் அறிவிக்கப்பட்ட தரவுகள் தொடர்பில் தலத்திலான மற்றும் தலத்திற்கு வெளியேயான மேற்பார்வைகளை கிரமமாக மேற்கொள்கிறது. இதனைத்தவிர, இத்தரவின் துல்லியமானது, திணைக்களத்தின் அலுவலர்களினால் கொழும்பு மாவட்டத்திலுள்ள தெரிவு செய்யப்பட்ட சந்தைகளிலிருந்து நேரடியாக சேகரிக்கப்பட்ட விலைத் தரவுகளைப் பயன்படுத்தி மேலும் சரிபார்க்கப்பட்டன. வேறுபட்ட மாகாணங்களிலுள்ள தெரிவு செய்யப்பட்ட தரவு சேகரிப்பு நிலையங்களின் மேற்பார்வை நடவடிக்கைகள் மத்திய வங்கியின் தொடர்பான மாகாண அலுவலகங்களினூடாக மேற்கொள்ளப்பட்டன.

வழமையான நடைமுறைகளைத் தொடர்ந்து பொருளாதாரத்தில் அண்மையில் தோற்றம் பெற்றிருக்கின்ற அண்மைய சந்தை அபிவிருத்திகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளுக்கு இடமளிப்பதற்காக தரவுச் சேகரிப்புக்களுக்காக இற்றைப்படுத்தப்பட்ட படிவங்களை அறிமுகப்படுத்தியதன் மூலம் இவ்வாண்டுப் பகுதியில் தரவு சேகரிப்புச் செயன்முறை மேம்பாடடைந்தது. நேரகாலத்துடன் எச்சரிக்கைப்படுத்தும் முறைமைக்காக பயன்படுத்தப்பட்ட தரவுப் படிவமும் கூடுதலான தகவல்களையும் பயன்படுத்துநர் சிநேகபூர்வதன்மையினையும் உருவாக்கும் விதத்தில் இவ்வாண்டுப் பகுதியில் திருத்தியமைக்கப்பட்டன. வழமையான நடைமுறைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் அடையாளம் காணப்பட்ட பிரதேசங்கள் முழுவதிலும் விலை அபிவிருத்திகளில் காணப்பட்ட வேறுபாடுகள் தொடர்பான அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கும் கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்கும் நிகழ்ச்சித்திட்டங்களில் தொழிற்பாடுகள் தொடர்பான பிரச்சனைகளைக் கலந்துரையாடுவதற்காகவும் 2014இல் கொழும்பு, மாத்தறை மற்றும் அநுராதபுரம் ஆகிய இடங்களில் நாடளாவிய தரவுச் சேகரிப்பு முறைமையின் பிராந்திய ஆய்வரங்குகள் நடத்தப்பட்டன. இவ்வாய்வரங்குகள் பொருளாதாரத்தின் தற்போதைய அபிவிருத்திகள் மீதான அறிவூட்டலை புள்ளிவிபரங்களைச் சேகரிப்போருக்கு வழங்கின.

### 27.7 உலகளாவிய தரமிடல்களில் இலங்கையின் நிலைமை முன்னேற்றம் கண்டு வருகின்றது

*“வியாபாரம் செய்தலை இலகுபடுத்தும்” தரமிடல்*

2014ஆம் ஆண்டில் புள்ளிவிபரத் திணைக்களம் இலங்கையின் “வியாபாரம் செய்தலை இலகுபடுத்தும்” தரமிடலை மேம்படுத்தும் நோக்குடன் பல முக்கிய நடவடிக்கைகளை மேற்கொண்டது. இந்நடவடிக்கைகள் அடுத்த ஐந்தாண்டுகளில் “வியாபாரம் செய்தலை இலகுபடுத்தும்” தரமிடலை மேம்படுத்துவதற்காக சீர்திருத்த இலக்குகளை இணைப்பதற்காக முக்கியமான ஆர்வலர்களின் பங்கேற்புடன் உயர்மட்டக் கூட்டங்களை ஒழுங்குசெய்வதை உள்ளடக்கியிருந்தது. இது, வியாபாரம் செய்தல் குறிகாட்டிகளுடன் தொடர்புபட்ட துறைகளில் பணியாற்றும் அரச மற்றும் தனியார் துறை அலுவலர்களுடன் கலந்துரையாடுவதற்கு உலக வங்கியின் வியாபாரம் செய்தல் தொடர்பான வருகைதரும் தூதுக்குழுவிற்கு வசதியளிப்பதற்கு எதிர்பார்க்கிறது. இலக்கிடப்பட்ட சீர்திருத்தங்களின் அடைவின் முன்னேற்றம் மற்றும் இலங்கையின் “வியாபாரம் செய்தலை இலகுபடுத்தல்” தரப்படுத்தலின் தொகுப்பில் கண்டறியப்பட்ட மாறிகளை முக்கிய கருத்திற் கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட சீர்திருத்தங்கள் தொடர்பில் உலக வங்கி குழுமத்திற்கு நேரகாலத்துடன் தகவலைப் பரப்புதல் என்பவற்றைக் கண்காணிக்கும் நோக்குடன் 50 இற்கும் மேற்பட்ட ஆர்வலர்களுடன் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன. 2013/2014 காலப்பகுதியில் மின்வலுவைப் பெறுதல், வரிகளைச் செலுத்துதல், எல்லை கடந்து வர்த்தகங்களை மேற்கொள்ளுதல், சிறுபான்மை முதலீட்டாளர்களைப் பாதுகாத்தல் ஆகிய துறைகளில் ஒழுங்குமுறைப்படுத்தல் சீர்திருத்தங்களை இலங்கை நடைமுறைப்படுத்தியுள்ளமையினை உலக வங்கி ஏற்றுக்கொண்டிருக்கிறது. இதன் விளைவாக இலங்கையின் “வியாபாரம் செய்தலை இலகுபடுத்தல்” தரமிடல் 189 நாடுகளிடையே இலங்கையின் தரத்தினை முன்னைய ஆண்டின் தரமிடலான 105 இலிருந்து 99 நிலைக்கு 2015இல் மேம்படுத்தியிருக்கிறது.

*ஏனைய உலகளாவிய தரமிடல்*

உலக அடிப்படையிலான ஆளுகைக் குறிகாட்டிகள், உலகளாவிய போட்டித்தன்மைக் குறிகாட்டிகள், பொருளாதார சுயாதீனச் சுட்டெண், மனித அபிவிருத்திச் சுட்டெண், உலகச் சுட்டெண்ணின் பொருளாதாரச் சுயாதீனம் மற்றும் ஊழல் மற்றும் பூந்துணர்வுச் சுட்டெண் என்பன தொடர்ச்சியாகக் கண்காணிக்கப்பட்டதுடன், இலங்கையின் தற்போதைய நிலைமை தொடர்பிலான தகவல்கள் முகாமைத்துவத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. மேற்குறிப்பிட்ட சுட்டெண்களின் தொகுப்பாளர்களுக்கு பேரண்டப் பொருளாதாரத் தகவல்களும் தரவுகளும் வாராந்த மற்றும் மாதாந்த அடிப்படையில் வழங்கப்பட்டன.

### 27.8 புள்ளிவிபரங்களைப் பரப்புதல்

புள்ளிவிபரத் திணைக்களம் கொள்கை வகுப்போர், ஆராய்ச்சியாளர், கல்வியாளர்கள், தொழில்சார்நிபுணர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு தற்போதைய அபிவிருத்திகள் தொடர்பான சமூகப் பொருளாதாரத் தரவுகளைப் பரந்தளவில் பரப்புவதற்குப் பொறுப்பாக இருக்கின்றது. இவ்வாண்டுப் பகுதியில் திணைக்களம் தொடர்ந்து மூன்றாவது தடவையாக அனைத்து மூன்று மொழிகளிலும் அதன் இரண்டு முக்கிய ஆண்டு வெளியீடுகளான “இலங்கையின் பொருளாதார மற்றும் சமூகப் புள்ளிவிபரங்கள் - 2014 தொகுதி XXXVI” இனை 2014 ஏப்பிறலிலும், “இலங்கை சமூகப் பொருளாதார தரவு மடிப்பு - 2014 - தொகுதி XXXVII” இனை 2014 யூனிலும் வெளியிட்டது. இதற்குப் புறம்பாக, இது 2014இல் வாராந்த மற்றும் மாதாந்த பொருளாதாரக் குறிகாட்டிகளையும் வெளியிட்டது. திணைக்களம் மத்திய வங்கி ஆண்டறிக்கை 2013 மற்றும் அண்மைக் காலப் பொருளாதார அபிவிருத்திகளின் இரண்டு அத்தியாயங்களுக்குப் பங்களிப்பதுடன் மாதாந்த செய்தித்திரட்டிற்குக் கிரமமாக பங்களிக்கின்றது. மேலும், தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட தெரிந்தெடுக்கப்பட்ட உணவுப் பண்டங்களின் விலைகளும் கொள்கை நோக்கங்களுக்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சிற்கு வாராந்தம் அறிக்கையிடப்பட்டன.

திணைக்களத்தின் வெப்தளமான உள்ளக வலையமைப்பிலுள்ள ஸ்ராநெற் வலையமைப்பும் மத்திய வங்கியின் வெப்தளமும் திணைக்களத்தினால் கிரமமான அடிப்படையில் இற்றைப்படுத்தப்பட்டன. 2014இல் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட தகவல்களை உருவாக்குவதற்காக, பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டுக் கொத்தணியிலிருந்து பெறப்பட்ட தகவல்களைச் சேமிப்பதற்காக இலத்திரனியல் தரவுத்தள முகாமைத்துவ முறைமையொன்றினை உருவாக்குவதற்காகப் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இச்செயற்றிட்டம் நிறைவடைந்ததும் உள்ளக வலையமைப்பினூடாக மற்றைய திணைக்களங்களுக்கும் இத்தகவல் முறைமைகள் கிடைக்கச் செய்யப்படும்.

## 28. வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்

வங்கியல்லா நிதியியல் மேற்பார்வைத் திணைக்களம், உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளை ஒழுங்குமுறைப்படுத்தி மேற்பார்வை செய்வதற்காக 1979ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் கட்டுப்பாட்டுச் சட்டத்திற்குப் பதிலாக 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டம் இயற்றப்பட்டதன் மூலம் 1988ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. வங்கியல்லா நிதியியல் மேற்பார்வைத் திணைக்களத்தின் தொழிற்பாடுகள் 2011.11.09 இலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் நிதிக் கம்பனிகள் கட்டுப்பாட்டுச் சட்டத்திற்குப் பதிலாக 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டத்தின் மூலம் தற்போது ஆளுகை செய்யப்படுகிறது. 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் சட்டம் இயற்றப்பட்டதுடன் நிதிக் குத்தகைக்குவிடும் வியாபாரத்தின் ஒழுங்குமுறைப்படுத்தலும் மேற்பார்வை செய்தல் என்பன வங்கியல்லா நிதியியல் மேற்பார்வைத் திணைக்களத்தின் அதிகாரவரம்பின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. வங்கியல்லா நிதியியல் மேற்பார்வைத் திணைக்களத்தின் முதன்மை செயற்பாடுகள் காலாந்தர தலத்திலான பரீட்சிப்புக்கள் மற்றும் தொடர்ச்சியாக வெளித்தல மேற்பார்வை போன்றவற்றின் மூலமான உரிமம் பெற்ற கம்பனிகளின் மேற்பார்வை, ஒழுங்குமுறைப்படுத்தல் ஒப்புதல்களை வழங்குதல், ஒழுங்குமுறைப்படுத்தல் தொடர்பான முன்மதியுடைய தேவைப்பாடுகளை வடிவமைத்து நடைமுறைப்படுத்தல், அதிகாரமின்றி நிதி வியாபாரங்களை நடத்தும் நிறுவனங்களின் மீது புலனாய்வுகளை மேற்கொண்டு சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், அதிகாரமளிக்கப்படாத நிதியியல் நிறுவனங்களில் வைப்புக்களை மேற்கொள்ளுவதனால் ஏற்படும் இடர்நேர்வுகள் பற்றி பொதுமக்களுக்கு அறிவூட்டுவதற்காக பகிரங்க விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்துதல், பொதுமக்களின் முறைப்பாடுகளை கவனித்தல் மற்றும் வங்கியல்லா நிதியியல் துறை மற்றும் அதிகாரமளிக்கப்படாத நிதியியல் நிறுவனங்கள் தொடர்பான நீதிமன்ற வழக்கு விசாரணைகளுக்கு வசதியளித்தல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. 2014 இறுதியில் 13 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், 7 உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் 47 உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் 8 சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் உள்ளடங்கலாக 75 பதிவு செய்யப்பட்ட நிதிக் குத்தகைக்குவிடும் நிறுவனங்களும் தொழிற்பாட்டிலிருந்தன. உரிமம் பெற்ற நிதிக் கம்பனகளினதும் பதிவு செய்யப்பட்ட நிதிக் குத்தகைக்குவிடும் கம்பனிகளினதும் பெயர்கள் இவ்வறிக்கையின் இறுதியில் தரப்பட்டுள்ளன. 2014 இல் வெளியிடப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் தொடர்பான முன்மதியுடைய தேவைப்பாடுகள் இவ்வறிக்கையின் பகுதி III இல் தரப்பட்டுள்ளன.

### 28.1 உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் மேற்பார்வை

**i. தலத்திலான பரீட்சிப்பு**

இடர்நேர்வுகளை அடையாளம் காணுதல், இடர்நேர்வுகளின் முகாமைத்துவம் மற்றும் சாத்தியமான இடர்நேர்வுகளைத் தணிப்பதற்கு மூலவளங்களை மதிப்பீடு செய்தல் என்பன மீது கவனத்தினைச் செலுத்தும் காலாந்தர தலத்திலான இப்பரீட்சிப்புக்களை மேற்கொள்ளும் பொழுது இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறை பின்பற்றப்பட்டது. 2014ஆம் ஆண்டு காலப் பகுதியில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களம் 43 உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளின் பரீட்சிப்புக்களை மேற்கொண்டது. நாணயச் சபையால் ஒப்புதலளிக்கப்பட்ட பரீட்சிப்பு அறிக்கைகள் மற்றும் விதந்துரைப்புக்கள் குறித்த கால எல்லைக்குள் மேற்கொள்ள வேண்டிய திருத்த நடவடிக்கைகளும் சேர்த்து தொடர்பான பணிப்பாளர் சபைகளுக்கு வழங்கப்பட்டன. மேலும், பலயீனமான துறைகளை முக்கிய கவனத்திற் கொண்டு மட்டுப்படுத்தப்பட்ட செயற்பரப்பு அடிப்படையில் 9 உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் பரீட்சிக்கப்பட்டன.

**ii. தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பு**

உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட காலாந்தர விளைவுகளினூடாகப் பெறப்பட்ட நிதியியல் தகவல்களை பரீட்சிப்புச் செய்வதன் மூலமாக அனைத்து உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளின்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கான தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பு தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டது. ‘நேரகாலத்துடன் எச்சரிக்கும் முறை மற்றும் பின்தொடர் முறைமை’ இனூடாக வங்கியல்லா நிதியியல் மேற்பார்வைத் திணைக்களம் இடர்நேர்வு ஏற்படக்கூடிய சாத்தியமான பரப்புக்களை அடையாளம் கண்டதுடன் அத்தகைய இடர்நேர்வுகளைத் தணிப்பதற்கு மீட்பு நடவடிக்கைகளை விதந்துரைத்தது. உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளை அவற்றின் மேற்பார்வை கண்காணிப்பின் நிதியியல்

பலத்தின் அடிப்படையில் தரமிடுவதற்காக உள்ளக மேற்பார்வைத் தரமிடல் முறைமையொன்று நடைமுறைக்கிடப்பட்டிருக்கிறது. மேலும், தலத்திலான இப்பரீட்சிப்புக்களில் ஒன்றிணைக்கப்பட்ட காலந்தர நிர்ணயத்துடன் கூடிய நேரத்திற்குட்பட்ட நடவடிக்கைத் திட்டங்களின் நடைமுறைக்கிடல் செயற்பாடானது உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் ஏற்றுக்கொண்ட காலநேரத்திற்குள் தொடர்பான கருத்துக்களை நிவர்த்தி செய்கின்ற வழிமுறைகளை மேற்கொள்கின்றனவா என்பதனை உறுதி செய்வதற்காக காலாண்டு அடிப்படையில் மதிப்பிடப்படுகின்றன.

**iii. நிதியியல் துறை ஒருங்கிணைப்பு நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்தல்**

2014இன் வரவு செலவுத்திட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்ட பிரேரணைகளின் நியதிகளின்படி, நாணயச் சபையானது முறிவு நிலைக்குள்ளான சிறிய நிறுவனங்களை நீக்குவதன் மூலம் நிதியியல் துறையின் ஒருங்கிணைப்பிற்கு உரிமம் பெற்ற நிதியியல் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் மற்றும் உரிமம் பெற்ற வங்கிகளின் இணைப்புக்கள் மற்றும் கையேற்புகளுக்கான ஒழுங்கான தொடர்புடைய நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பித்தது. இதன்படி, மத்திய வங்கியால் அறிவிக்கப்பட்ட திட்டமானது உரிமம் பெற்ற நிதியியல் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த கம்பனிகளின் எண்ணிக்கையை 58 இலிருந்து ஏறத்தாழ 20 ஆகக் குறைப்பதற்காக காணப்பட்டது. தன்னார்வ அடிப்படையில் இணைப்புக்கள் மற்றும் கையேற்புக்களுக்கு உதவும் நோக்கில், மத்திய வங்கியால் ஒப்புதலளிக்கப்பட்ட கணக்காய்வு நிறுவனங்களினால் நிறுவனங்களின் நெருக்கமான மற்றும் மதிப்பீடுகளுடன் தொடர்புடைய செலவுகளைப் பூர்த்தி செய்வதற்காக இலங்கை மத்திய வங்கியினால் ரூ.163 மில்லியன் ஒதுக்கப்பட்டது. 2014இன் இறுதியில் மத்திய வங்கியானது 39 நிறுவனங்கள் தொடர்பில் 09 கணக்காய்வு நிறுவனங்களின் அத்தகைய பணிக்காக ரூ.105 மில்லியனை வழங்கியிருந்தது. இணைப்புக்கள் மற்றும் கையேற்புக்களுடன் தொடர்புடைய நிறுவனங்களுக்கு அரசாங்கம் வரி ஊக்குவிப்பை வழங்கியிருந்தது. 2014 காலப்பகுதியில், உரிமம் பெற்ற நிதியியல் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுடன் தொடர்புடைய 10 இணைப்புக்கள் மற்றும் கையேற்புக்கள் பூர்த்தி செய்யப்பட்ட வேளையில் 2014இன் இறுதியில் 22 உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் இணைப்பு/ கையேற்பு செயல்முறையிலிருந்தன. எனினும், அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட ஒரு குழுவினால் இந்த ஒருங்கிணைப்பு நிகழ்ச்சித்திட்டம் மீளாய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளது.

**iv. பலயீனமான கம்பனிகள் மீதான தீர்மான நடவடிக்கைகள்**

குழும/ பிடித்துவைத்திருக்கும் கம்பனிகள் மீது பொதுமக்களின் கரிசனையின் காரணமாக 2008இன் பிற்பகுதியில் திரவத்தன்மை நெருக்கடியை எதிர்கொண்ட பல்வேறு கம்பனிகள் வைப்புப் பொறுப்புக்களைத் தீர்க்கும் நோக்குடன் அத்தகைய கம்பனிகளை மீள்கட்டமைப்பு நெருக்கமான கண்காணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. ஆண்டுக் காலப்பகுதியில், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களமானது பணிப்பாளர் சபைகள், மூத்த முகாமைத்துவம், முகாமைத்துவ முகவர்கள் மற்றும் எதிர்கால முதலீட்டாளர்கள் போன்றோருடனான கிரமமான சந்திப்புக்களினூடாக பலயீனமான கம்பனிகளின் செயலாற்றத்தினை நெருக்கமாகக் கண்காணித்தது. மத்திய வங்கியானது மீள்கட்டமைக்கப்பட்ட உரிமம் பெற்ற நிதியியல் கம்பனிக்கு இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டம் போன்றவற்றினூடாக ரூ.6 பில்லியன் நிதிய ஆதரவை வழங்கியதுடன் இந்தக் கம்பனிகளின் பணிப்பாளர் சபையினரையும் மாற்றியமைத்தது. மேலும், மற்றுமொரு பலயீனமான உரிமம் பெற்ற நிதிக் கம்பனி அதன் தாய் கம்பனியால் முதலிடப்பட்டதுடன் அதனைத் தொடர்ந்து அதன் பணிப்பாளர் சபையினரும் மாற்றியமைக்கப்பட்டனர்.

**28.2 ஒழுங்குமுறைப்படுத்தல் ஒப்புதல்களை வழங்குதல்**

உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கு கம்பனி அகவிதி, கிளை கம்பனிகளில் முதலிடுதல், தொகுதிக் கடன்களை வழங்கல், பங்கு மூலதனத்தினை அதிகரித்தல் மற்றும் வெளியக வணிகத் தொழிற்பாடுகள் போன்றவற்றைத் திருத்துவதற்கு ஒழுங்குமுறைப்படுத்தல் ஒப்புதல்கள் வழங்கப்பட்டன. மேலும், நிறைவேற்று தொழிற்பாடுகளை செயலாற்றும் பணிப்பாளர்கள் மற்றும் அலுவலர்களின் புதிய நியமனத்திற்கான ஒப்புதல் அவர்களது பொருத்தப்பாடு மற்றும் சொத்துக்கள் போன்றவற்றின் மதிப்பீடுகளின் பின்னர் வழங்கப்பட்டன. 2014 காலப்பகுதியில், 75 புதிய கிளைகள் ஆரம்பிப்பதற்கான ஒப்புதல்கள் வழங்கப்பட்டதுடன் பிறைம் கிராமின் மைக்றோ பினான்ஸ் லிமிடெட் ஆனது நிதிக் குத்தகைக்குவிடும் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது. லிஸ்வின் இன்வெஸ்ட்மென்ற் லிமிடெட் மற்றும் கோசிபா லீசிங் கம்பனி லிமிடெட் போன்றவற்றின் நிதிக் குத்தகைக்குவிடும் அனுமதிப்பத்திரம் நிதிக் குத்தகைக்குவிடும் சட்டத்தின் கீழ் இரத்துச் செய்யப்பட்டது. நிதித் தொழில் சட்டத்தின் கீழ் புதிய அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படவில்லை.

**28.3 பணிப்புரைகளையும் முன்மதியுடைய தேவைப்பாடுகளையும் வழங்குதல்**

கால வைப்புக்கள், மாற்றத்தகாத வைப்புச் சான்றிதழ்கள் மற்றும் படுகடன் கருவிகள் போன்றவற்றின் மீது உரிமம் பெற்ற நிதியியல் கம்பனிகளால் வழங்கப்படக்கூடிய வட்டி வீதங்களின் உயர்ந்தமட்ட எல்லை திருத்தப்பட்டது. இத்திருத்தங்களின் விபரங்கள் முக்கிய பொருளாதாரக் கொள்கை மாற்றங்களும் வழிமுறைகளும் எனும் தலைப்பின் கீழ் பகுதி - I இல் தரப்பட்டுள்ளன.

**28.4 அதிகாரமின்றி நிதித் தொழிலை நடாத்துவதன் மீதான புலனாய்வுகள்**

2014ஆம் ஆண்டுக் காலப்பகுதியில், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் அதிகாரமின்றி நிதித் தொழிலை நடத்துகின்ற நபர்கள்/ நிறுவனங்கள் மீது நிதித் தொழில் சட்டத்தின் 42ஆம் பிரிவின் கீழ் 24 புலனாய்வுகளை தொடர்ந்தது. அதில் ஒரு நிறுவனம் அதிகாரமின்றி நிதித் தொழிலை மேற்கொள்வதாக நாணயச் சபை தீர்மானித்ததுடன் ஏனைய நிறுவனங்கள் மீது தேவையான சட்ட நடவடிக்கையை மேற்கொள்ள சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு குறித்துரைக்கப்பட்டது. மேலும், நான்கு நிறுவனங்கள் அதிகாரமற்ற நிதித் தொழிலில் ஈடுபடவில்லை என அறியப்பட்டதானல் அப்புலனாய்வு விசாரணைகள் முடிவுறுத்தப்பட்டன.

**28.5 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்**

மேற்பார்வை மற்றும் முன்மதியுடைய கரிசனைகள் தொடர்பான எண்ணங்களை பரிமாறும் நோக்குடன் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் தலைமைதாங்கிய உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுடனான கூட்டங்கள் காலாண்டு அடிப்படையில் நடாத்தப்பட்டன. எதிர்கால ஒழுங்குபடுத்தல் வெளிப்பாடு, புதிய நிதித் தொழில் மாதிரிக்கான தேவை, கம்பனி ஆளுகையின் முக்கியத்துவம் மற்றும் தகவல் முறைமைகள் முகாமைத்துவம் போன்றவற்றின் மீது பிரதான கவனத்தைச் செலுத்தி, வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத்

## இணைப்பு II-3 உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சட்டத்திற்கிணங்க மத்திய வங்கியுடன் பதிவு செய்யப்பட்ட நிதிக் குத்தகைக்குவிடும் நிறுவனங்கள் (2014 இறுதியிலுள்ளவாறு)

### உரிமம் பெற்ற நிறுவனங்கள்

### உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்

1. அபான்ஸ் பினான்ஸ் பிஎல்சி
2. அலயன்ஸ் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
3. ஏஎம்டபிள்யு கபிட்டல் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
4. ஆர்பிகோ பினான்ஸ் கம்பனி பிஎல்சி
5. ஏசியா அசெற் பினான்ஸ் பிஎல்சி
6. ஏசியன் பினான்ஸ் லிமிடெட்
7. அசோசியேட்டட் மோட்டார் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
8. பார்ட்லீட் பினான்ஸ் பிஎல்சி
9. பிம்புத் பினான்ஸ் பிஎல்சி
10 பிராக் லங்கா பினான்ஸ் பிஎல்சி
11 கப்பிட்டல் எலையின்ஸ் பினான்ஸ் பிஎல்சி
12. சென்றல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
13. சென்றல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி*
14. சிலோவ் பினான்ஸ் பிஎல்சி
15. சிற்றிசன்ஸ் டெவலொப்மன்ட் பிசினஸ் பினான்ஸ் பிஎல்சி
16. சிட்டி பினான்ஸ் கோப்பிரேசன் லிமிடெட்
17. கொமர்ஷல் கிறடிட் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
18. கொமர்ஷல் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
19. தேஷோடய டெவலொப்மன்ட் பினான்ஸ் கம்பனி லிமிடெட்
20. ஈரிஜ பினான்ஸ் லிமிடெட்
21. ஜோர்ஜ் ஸ்ருவோர்ட் பினான்ஸ் பிஎல்சி
22. ஐடியல் பினான்ஸ் லிமிடெட்
23. இந்திரா பினான்ஸ் லிமிடெட்
24. கன்றிச் பினான்ஸ் லிமிடெட்
25. எல்பீ பினான்ஸ் பிஎல்சி
26. லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ் பிஎல்சி
27. எம்சிஎஸ்எல் பினான்சியல் சேர்விசஸ் லிமிடெட்
28. மெல்ஸ்ரா றீகல் பினான்ஸ் லிமிடெட்
29. மர்க்கன்டைல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
30. மல்ரி பினான்ஸ் பிஎல்சி
31. நேஷன் லங்கா பினான்ஸ் பிஎல்சி
32. ஒறியன்ட் பினான்ஸ் பிஎல்சி
33. பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
34. பீப்பிள்ஸ் மேர்ச்சன்ட் பினான்ஸ் பிஎல்சி
35. பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் லிமிடெட்
36. றிச்சேர்ட் பீரிஸ் பினான்ஸ் லிமிடெட் (முன்னர் றிச்சேர்ட் பீரிஸ் ஆர்பிகோ பினான்ஸ் லிமிடெட்)
37. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி
38. சிங்கர் பினான்ஸ் (லங்கா) பிஎல்சி
39. சிங்கபுத்ர பினான்ஸ் பிஎல்சி
40 சியப்பதா பினான்ஸ் பிஎல்சி
41. சொவ்ற்லொஜிக் பினான்ஸ் பிஎல்சி
42. ஸ்வர்ணமகால் பினான்ஷியல் சேர்விசஸ் பிஎல்சி
43. த பினான்ஸ் கம்பனி பிஎல்சி
44. த ஸ்டான்டட் கிறடிற் பினான்ஸ் லிமிடெட்
45. ரிகேஎஸ் பினான்ஸ் லிமிடெட்
46. ட்ரேட் பினான்ஸ் அன்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் பிஎல்சி
47. யு பீ பினான்ஸ் கம்பனி லிமிடெட்
48. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி

* இலங்கை மத்திய வங்கியினால் நியமிக்கப்பட்ட முகாமைத்துவ முகவரினால் முகாமைத்துவம் செய்யப்பட்டதுடன் மீள்கட்டமைப்பு உள்ளாக்கப்படுகிறது. அதேவேளை, வைப்புக்களைத் திரட்டுதல் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

### பதிவு செய்யப்பட்ட நிதிக் குத்தகைக்குவிடும் நிறுவனங்கள்

**(அ) உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்**

1. அமானா வங்கி பிஎல்சி
2. இலங்கை வங்கி
3. கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி
4. டிஎவ்சிசி வர்தன பாங்க் பிஎல்சி
5. ஹற்றன் நஷனல் பாங்க் பிஎல்சி
6. எம்சிபி பாங்க் லிமிடெட்
7. நஷனல் டெவலப்மென்ட் பாங்க் பிஎல்சி
8. நேஷன்ஸ் ட்ரஸ்ட் பாங்க் பிஎல்சி
9. பான் ஏசியா பாங்கிங் கோப்பரேசன் பிஎல்சி
10. மக்கள் வங்கி
11. சம்பத் பாங்க் பிஎல்சி
12. செலான் பாங்க் பிஎல்சி
13. யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு பிஎல்சி

**(ஆ) உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்**

1. டிஎவ்சிசி பாங்க்
2. இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி
3. லங்காபுத்ர டெவலப்மென்ட் பாங்க் லிமிடெட்
4. எம்பீஎஸ்எல் சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
5. பிரதேசிய சன்வர்தன பாங்க்
6. சணச டெவலப்மென்ட் பாங்க் பிஎல்சி
7. சிறிலங்கா சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்

**(இ) சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள்**

1. அசட்லைன் லீசிங் கம்பனி லிமிடெட்
2. கோபரேடிவ் லீசிங் கம்பனி லிமிடெட்
3. இசுறு லீசிங் கம்பனி லிமிடெட்
4. லாப்ஸ் கப்பிட்டல் லிமிடெட்
5. எல்ஓஎல்சி மைக்ரோ கிரடிட் லிமிடெட்
6. மர்ச்சன்ட் பாங்க் ஒவ் சிறிலங்கா பிஎல்சி
7. நியூவெஸ்ட் கப்பிட்டல் லிமிடெட்
8. எஸ்எம்பீ லீசிங் பிஎல்சி

**(ஈ) டெஷோடய டெவெலப்மென்ட் பினான்ஸ் கம்பனி லிமிடெட் தவிர்ந்த மேலே பட்டியலிடப்பட்டுள்ள உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்**

திணைக்களம் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் பணிப்பாளர்கள் மற்றும் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கான ஆண்டுக் கூட்டத்தினை நடாத்தியது.

அதிகாரமற்ற நிதி நிறுவனங்களில் முதலிடுவதன் இடர்நேர்வு பற்றி பொதுமக்களுக்கு அறிவூட்டும் நோக்குடன் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் 20 பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொண்டதுடன் 18 வானொலி விளம்பரங்களையும் ஒலிபரப்பியது. ஏனைய பயன்மிக்க தகவல்களுடன் உரிமம் பெற்ற வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளின் பட்டியல்களை உள்ளடக்கி ஏறத்தாழ 28,000 துண்டுப் பிரசுரங்கள் பொதுமக்களிடையே விநியோகிக்கப்பட்டன. மேலும், பொதுமக்களிடையே நிதியியல் அறிவை அதிகரிப்பதற்காக வைப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனங்களின் பட்டியல்கள் பத்திரிகைகளில் மும்மொழியிலும் பிரசுரிக்கப்பட்டது.

### 28.6 பொதுமக்களின் முறைப்பாடுகளைக் கவனித்தல்

உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்வு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் தொடர்பாக பொதுமக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை விசாரிப்பதற்கு வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் நடுநிலை வகித்தது.

### 28.7 முறிவடைந்த நிதியியல் நிறுவனங்கள் மீதான நீதிமன்ற வழக்குகளுக்கு வசதியளித்தல்

#### (i) கோல்டன் கீ கிறடிற் காா்ட் கம்பனி லிமிடெட்டிற்கான செயற்பாட்டு திட்டம்

உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் நியதிகளில், மத்திய வங்கியானது கோல்டன் கீ கிறடிற் காா்ட்டினால் வைப்புக்கள் மீளளிப்புக்களின் மேற்பார்வையில் ஈடுபட்டிருந்தது. கோல்டன் கீ கிறடிற் காா்ட்டின் பாதுகாப்பு வைப்பாளர்களுக்குத் தீர்ப்பனவு செய்வதற்காக மத்திய வங்கியால் தயாரிக்கப்பட்ட செயற்பாட்டுத் திட்டம் 2013.04.04 அன்று உச்ச நீதிமன்றத்தால் ஒப்புதலளிக்கப்பட்டது. மேலும், மத்திய வங்கி கோல்டன் கீ கிறடிற் காா்ட் கம்பனியின் பணிப்பாளர் சபையினருக்கு வழிகாட்டலை வழங்கியதுடன், அவர்களினால் நடைமுறைக்கிடப்படும் செயற்பாட்டுத் திட்டத்தின் செயன்முறையை கண்காணித்து, காலாண்டு அடிப்படையில் அத்தகைய செயற்பாடுகள் தொடர்பில் நாணயச் சபைக்கு அறிக்கையிட்டது. கோல்டன் கீ கிறடிற் காா்ட் கம்பனியின் முன்னைய பணிப்பாளர்களின் சொத்துக்களை அடையாளம் காண்பதற்காக வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்திலிருந்து ஒரு உறுப்பினர் உச்ச நீதிமன்ற நியம இலக்குப்படைக்கு நியமிக்கப்பட்டிருந்தனர். மேலும், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் கோல்டன் கீ கிறடிற் காா்ட் கம்பனியுடன் செயற்பாட்டு மீளாய்வுக் கூட்டத்தினை காலாண்டு அடிப்படையில் மேற்கொண்டதுடன், நாணயச் சபைக்கு கோல்டன் கீ கிறடிற் காா்ட் கம்பனியின் செயற்பாட்டு திட்ட நடைமுறைக்கிடல் செயன்முறை தொடர்பில் அறிக்கையிட்டது. 2014 இறுதியில், கோல்டன் கீ கிறடிற் காா்ட் கம்பனி மீளளிப்புத் திட்டத்தின் கட்டம் I, II மற்றும் III இனைப் பூர்த்தி செய்திருந்ததுடன், 6,500 பிணைய வைப்பாளர்களுக்கிடையே ஏறத்தாழ ரூ.2,066.8 மில்லியனை வழங்கியிருந்தது.

#### (ii) ஏனைய அதிகாரமற்ற நிதியியல் நிறுவனங்கள்

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களமானது பினான்ஸ் அன்ட் கரண்டி புறப்பட்டீ டெவலப்பர்ஸ் பிறைவேற் லிமிடெட் மற்றும் எவ் அன்ட் ஜி றியல் எஸ்ரேற் கம்பனி லிமிடெட் போன்றவற்றின் வைப்பாளகளுக்கான மீளளிப்பை வசதிப்படுத்துவதற்காக உச்ச நீதிமன்றத்தில் செயற்பாட்டுத் திட்டத்தினை சமா்ப்பித்தது.

**(iii)** மேலும், ஆண்டுக் காலப்பகுதியில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் வேலை தொடர்பில் 14 நீதிமன்ற வழக்கில் 02 இனை பூர்த்தி செய்தது.